தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு
# 2021



"... விரைவில் உனக்கு
நலமான வாழ்வு துளிர்க்கும்..." எசா 58:8

தென்னிந்தியத் திருச்சபை

## கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2021

கருப்பொருள்

**அமைதியின் இறைவா, காயமுற்ற உலகை நலமாக்குவீராக!**

**God of Shalom, Heal the Wounded World.**

*வெளியீடு :*
*தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்*

# ஆசியுரை

***"கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்." (பிலி 2:5)***

ஆண்டவரின் வார்த்தைகளை ஜெபத்தோடு போதிக்கும்படி அவர் தந்த தூய அழைப்பிற்காய் அவரைப் போற்றுவோம். கிறிஸ்து இயேசுவின் சிந்தையோடு அவரது வார்த்தைகளை அதிகாரத்தோடும், கண்டிப்போடும், கட்டளையோடும் மற்றும் மனந்திரும்புதற்கேற்ற எதிர்பார்ப்போடும் கற்பிக்க ஆண்டவர் அருள்செய்வாராக.

தென்னிந்தியத் திருச்சபையின் ஐக்கியத்திலுள்ள இருபத்திநான்கு பேராயங்களும் இணைந்து பயன்படுத்த உதவியாக உள்ள Almanac 2021-ஐப் பின்பற்றி நமது அருளுரைகளை ஆயத்தம் செய்வோம். அருளுரை ஆரம்பத்தில் அந்தந்த நாளுக்குரிய சிறப்பு நோக்கத்தினை அறிவிப்போம். அருளுரையாற்றுவது எழுத்தில் அல்ல; பேச்சில் அல்ல; சிந்தனையில் அல்ல; ஆலயம் வரும் மக்கள் படும் வேதனைகள், அவர்களின் கேள்விகள், சவால்கள் போன்றவற்றுக்குப் பதில்கூறும் வகையில் அருளுரை அமைய ஜெபத்தோடு செயல்படுவோம்.

2021ஆம் ஆண்டின் பேராயக் கருப்பொருளான, **"அமைதியின் இறைவா, காயமுற்ற உலகை நலமாக்குவீராக"** என்பதை இவ்வாண்டில் நாம் ஆற்றும் அனைத்து அருளுரைகளிலும், திருப்பணிகளிலும் பிரதிபலிப்போம். அருளுரை ஆயத்தத்தை அனுபவத்தோடு, ஆக்கப்பூர்வமாக, முற்போக்கான சாட்சியோடு அமைத்திடுவோம். ஒப்பிட்டு பிறரோடு நமது செய்திகளை அல்ல, ஆண்டவர் ஆறுதலாக நம்மோடு பேசும் வார்த்தைகளோடு நாம் சந்திக்கும் மக்களின் தேவைகளைப் பிரதிபலிப்பதாக அமைய ஆண்டவர் அருள் செய்வாராக.

அருளுரைக் கைந்நூலுக்கான அருளுரைகளை ஆயத்தம் செய்த அனைத்துக் குருவானவர்கள், திருப்பணியாளர்கள் என அனைவரையும் வாழ்த்துகிறேன். இந்தப் பணியை ஒருங்கிணைத்த தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. **C. கில்டன் தயானந்த்**, தொகுப்பாசிரியராகப் பணிபுரிந்த அருள்திரு. **J. நேசபிரின்ஸ்** மற்றும் அவருடன் இணைந்து இப்பணிகளை நிறைவேற்றியோரையும், நூல் வடிவம் பெற உழைத்த மார்த்தாண்டம் சி.எஸ்.ஐ. அச்சகத்தார், அதன் கண்காணிப்பாளர் அருள்திரு. **N. விபின் ஜாண்** ஆகியோரையும் பாராட்டுகிறேன்.

காலத்தால் அழியாத கடவுளின் வார்த்தை கடைநிலை மக்களுக்கும் போய்ச் சேர, இவ்அருளுரைக் கையேடு, ஊடகமாக விளங்கட்டும் என தந்தை, மைந்தர், தூய ஆவியார் திருப்பெயரில் ஜெபத்தோடு ஆசி வழங்குகிறேன்.

***இறையாசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக.***

பேரருள்திரு. அறிவர். A.R. ***செல்லையா,*** M.A.,B.D.,M.Th.,D.Min.
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

# இயக்குநரிடமிருந்து...

***கிறிஸ்துவில் அன்பானவர்களே!***

தாம் செய்ததுபோல நாமும் செய்யுமாறு நமக்கு முன்மாதிரி காட்டின ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துகள்!

“Don’t Condemn if you see a person has a dirty glass of water, ...just show them the clean glass of water that you have. When they inspect it, you won’t have to say that yours is better.” -Elijah

அருளுரைஞர் திருமறையின் உண்மைகளைப் பகுத்து, தொகுத்து, பகிர்ந்தளிப்பவர். இறைமக்களின் வாழ்வியல் சூழலுக்கு அதன் பொருத்தப்பாட்டைப் போதிப்பவர். அவர் ஓர் இசைக் கலைஞரைப் போன்றவர். அவர் இறைமக்களின் கண்காண உயிரோவியங்களைப் படைப்பவர். ஆனால் சுரம் தவறினால் அல்லது கருத்துப் பிழை ஏற்பட்டுவிட்டால் அவர்தம் முயற்சி முழுவதும் வீண் போகக்கூடும். இவ்வுண்மையை உணர்ந்தவர், தகுந்த ஆயத்தத்தோடே அருளுரை மேடையை அலங்கரிப்பார். C.H. ஸபர்ஜன் அருளுரைக்குத் தகுந்த ஆயத்தம் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறும் கூற்று, “வெளிச்சம் மிகுந்தால்தான் பிரகாசமாகும். நெருப்புத் தான் சுடரைப் பிறப்பிக்கும். அப்படியே நாம் மற்றவர்களைப் பிரகாசிப்பிக்க விரும்பினால், நாமே பிரகாசமுள்ளவர்களாயிருக்க வேண்டும்” என்கிறார். அருளுரையாளர் ஒரு மாணவராக இறைவனின் பாடசாலையில் தினமும் கற்று, கருத்தாய் போதிப்பவராவார்.

முதலாவது, நீ உன்னையே அலங்கரித்துக் கொண்டு, பிற்பாடு உன் சகோதர சகோதரியை அலங்கரி. வேறொருவரைச் சுத்திகரிக்கப் போகிற கை, தானே சுத்தமாயிருக்க வேண்டும் என்று கிரகரி கூறுகிறார். நம்முடைய உப்பே சாரமற்றதாயிருந்தால் நாம் மற்றவர்களைச் சாரமேற்றுவது எப்படி? ஆகையால் அருளுரைக்குத் தகுந்த ஆயத்தம் அவசியம்.

இறைவார்த்தையை அறிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டுமென்ற தேடலோடு எத்தியோப்பிய அரசியின் நிதியமைச்சர் ஆண்டவருடைய வார்த்தையை வாசிக்கிறார். ஆனாலும் அவர் வாசிப்பதன் பொருளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பிலிப்புவின்

கேள்விக்கு அவர் கூறும் பதில், “யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு தெரிந்துகொள்ள முடியும?” என்பது நம்மையும் சிந்திக்கத் தூண்டுகிறது. இன்றும் இறைவார்த்தைகளை அறிந்துகொள்ள வேண்டும், யாராவது விளக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு வரும் இறைமக்கள் மீதான நம் பொறுப்பு மிக அதிகம்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் திரித்துவத் திருக்கோவிலின் அருளுரை மேடையில், “ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அருளுரைஞர்கள் தங்கள் அருளுரையின் வாயிலாக இயேசு கிறிஸ்துவை வெளிக்கொணர வேண்டும்.

இறையாற்றல் நிரம்பிய அருளுரைகள் நம் வாழ்விலிருந்து புறப்படுகின்றன, இறைமக்களின் உள்ளங்களில் ஊடுருவிச் சென்று மாற்றங்களை உருவாக்குகின்றன, மனங்களைக் கலங்கச் செய்கின்றன, உள்ளங்களைத் தெளிவாக்குகின்றன, மன ஊக்கத்தை வரவழைக்கின்றன, இத்தகைய மாற்றங்களை, நாம் ஆற்றும் அருளுரைகள் உருவாக்க வேண்டும். 2021-ஆம் ஆண்டின் பேராயக் கருப்பொருளான, **“அமைதியின் இறைவா, காயமுற்ற உலகை நலமாக்குவீராக”** என்பது நாம் வழங்குகின்ற எல்லா அருளுரைகளிலும் பிரதிபலிக்கட்டும்.

2021-ஆம் ஆண்டிற்கான அருளுரைக் கைந்நூலை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த மாண்பமை பேராயர் பேரருள்திரு. அறிவர். **A.R. செல்லையா** அவர்களுக்கு நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்நூலைத் தொகுக்கும் பணியில் முனைப்போடும் ஈடுபாட்டோடும் உழைத்த அருள்திரு. **J. நேசபிரின்ஸ்** அவர்களைப் பாராட்டுகிறேன். மேலும் உதவி செய்த திரு. **B. சாம் ஜெபசிங்** அவர்களுக்கும், உடன் பணியாற்றியோர்க்கும், அருளுரைகளை எழுதிய ஆயர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்களுக்கும், அச்சுப் பணிகளைக் கருத்தாய் நிறைவேற்றிய மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தார்க்கும், அதன் கண்காணிப்பாளர் அருள்திரு. **N. விபின் ஜாண்** அவர்களுக்கும். அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த அருள்திரு. இம்மானுவோல் பால் விவேகானந்த் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளின் திருப்பெயர் போற்றப்பெறுக!

கிறிஸ்துவின் பணியில்,
அருள்திரு. C. ***கில்டன் தயானந்த்*** M.A.,B.D.,M.Th.,
இயக்குநர்,
தொடர்புத்துறை, C.S.I. கன்னியாகுமரிப் பேராயம்
email: csikkd.communication@gmail.com

# தொகுப்பாசிரியரிடமிருந்து...

**"என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!"** (திபா 119:105)

"நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்"- எனத் திருவாய் மலர்ந்தருளிய இறையவர் திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்!

காலத்துக்கு ஏற்ப கடவுளின் செய்தியை உலகுக்கு விளக்கும் ஓர் அற்புதமான நூல் திருமறை. நாம் வாழும் காலத்திற்குப் பொருத்தமாகக் கடவுளின் வார்த்தையை அறிவிக்க வேண்டியது அருளுரையாளர்களின் கடமை. எனவே தான் பேராயர் சாமுவேல் அமிர்தம் "அருளுரையாளர் ஒரு கையில் திருமறையையும் மறு கையில் அன்றைய செய்தித் தாள்களையும் வைத்திருக்க வேண்டும்" என்று அடிக்கடிக் கூறுவார். இதுபற்றி புகழ் பெற்ற அருளுரைஞரான ஜேம்ஸ் ஸ்டுவர்ட், "மக்கள் கண்களில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்கவும், அவர்கள் ஆத்துமாக்களை மரணத்தினின்று மீட்கவும் ஏற்ற செய்தியின் பேரில் தனிக்கவனம் செலுத்தாமல், பல நல்ல செயல்களில் ஈடுபடுவதாகச் செல்லுவதில் யாது பலன்" என்கிறார்.

இந்த ஆண்டில் **"அமைதியின் இறைவா, காயமுற்ற உலகை நலமாக்குவீராக"** என்ற பேராயச் கருப்பொருளின் அடிப்படையில் அருளுரைக்கையேட்டைத் தொகுக்கும் பேற்றை எனக்குத் தந்த மதிப்பிற்குரிய நம் பேராயர் பேரருள்திரு. அறிவர் A.R. **செல்லையா** அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இப்பணியைச் சிறப்புடன் நிறைவேற்ற பல உதவிகளையும், ஊக்கத்தையும் தந்த நம் பேராயத் தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. C. **கில்டன் தயானந்த்** அவர்களுக்கும், என்னோடு மிகக் கடினமாக உழைத்த அன்புச் சகோதரர் இறைப்பணியாளர் B. **சாம் ஜெபசிங்** அவர்களுக்கும் நன்றி சொல்லுகிறேன். ஆயத்தப் பணிகளில் உதவிய அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்,** அருள்திரு. T.P. **சலீம் தங்ககுமார்** ஆகியோருக்கும், பிழைதிருத்தப்பணிகளில் உதவிய திரு. A. **கால்வின் தேவநேசன்,** திரு. J. **தேவராஜ ஜெபஸ்டின்,** திரு. M. **ஜெஸ்லின் ஸ்டீபன்,** திரு. M. **பிரிஸ்டன் வினோ,** திரு. M.R. **மில்ட்டன் மார்க்** மற்றும் திரு. A. **கிளாட்சன் ரூபராஜ்** ஆகியோருக்கும், தகுந்த ஆயத்தத்தோடும்

இறைவேண்டலோடும் அருளுரைகளை எழுதியுள்ள பேராயர், பேராயரம்மா, சேகர ஆயர்கள், ஆயர்கள் மற்றும் இறைப்பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். அருளுரைக் கையேடு சிறப்புடன் வெளிவர உதவிய நம் பேராய அச்சகக் கண்காணிப்பாளர் அருள்திரு. N. **விபின் ஜாண்** மற்றும் மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

*"அருளுரை ஒரு நங்கூரம், ஏன்? சில வேளைகளில் அது மூழ்கிப் போகாது காக்கும் உயிர்ப் பாதுகாப்புக் கயிறு. வழி விலகி அங்குமிங்கும் அலைந்து திரியாதபடி செய்யும் அருள்விளக்கு. அது ஓர் எக்காள தொனி. புதிய ஊக்கம் பெறச் செய்யும் உரத்த அழைப்பு. ஆழ்ந்து நினைப்பவருக்கும் கேட்பவருக்கும் திசை காட்டும் வடமீன்"*

- அறிஞர் ம. வாட் .

***இறையருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!***

இறைப்பணியில்

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்** B.Sc.,B.D.,M.B.A.,M.C.S,

தொகுப்பாசிரியர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | 01-01-2021 கடவுளின் தொடரும் அருட்செயல் | 1 |
| 2. | 03-01-2021 விடுதலைக்கான திருவெளிப்பாடு | 6 |
| | **வார இறைவேண்டல்** | |
| 3. | நாள் 1 - கடவுளால் அழைக்கப்பெற்றிருக்கிறோம் | 11 |
| 4. | நாள் 2 - உள்ளான மனிதரில் முதிர்ச்சியடைதல் | 14 |
| 5. | நாள் 3 - ஒருடலாக உருவாதல் | 17 |
| 6. | நாள் 4 - இணைந்து மன்றாடுதல் | 19 |
| 7. | நாள் 5 - இறைவார்த்தையால் மாற்றுருவாக்கம்பெற ஒப்படைத்தல் | 21 |
| 8. | நாள் 6 - பிறரை வரவேற்றல் | 25 |
| 9. | நாள் 7 - ஒன்றிப்பில் வளருதல் | 31 |
| 10. | நாள் 8 - அனைத்துப் படைப்புகளோடும் ஒப்புரவாகுதல் | 34 |
| 11. | 10-01-2021 அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள் | 37 |
| 12. | 17-01-2021 ஒரே ஆண்டவர், ஒரே திருமுழுக்கு | 42 |
| 13. | 24-01-2021 நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு | 46 |
| 14. | 26-01-2021 பொறுப்புள்ள குடியுரிமை | 49 |
| 15. | 31-01-2021 படைப்பின் நன்னலம் | 53 |
| 16. | 07-02-2021 படைபபின் வீழ்ச்சிநிலை | 59 |
| 17. | 07-02-2021 இளையோர் : அமைதியின் கருவிகள் | 62 |
| 18. | 14-02-2021 தவக்காலம் : ஓர் ஒப்புரவின் காலம் | 69 |
| 19. | 14-02-2021 நலமருள்தலும் முழுமையும் | 74 |
| 20. | 17-02-2021 சிலுவை: தன்னல மறுப்புக்கு ஓர் அழைப்பு | 81 |
| 21. | 21-02-2021 தொடக்கூடாதவரைத் தொடுதல் | 85 |
| 22. | 28-02-2021 வாழ்வைக் காக்கும் நம்பிக்கை | 90 |
| 23. | 07-03-2021 இறைவேண்டலில் நிலைத்திருத்தல் | 95 |
| 24. | 14-03-2021 விடுவிக்கும் உண்மையான வழிபாடு | 101 |
| 25. | 21-03-2021 சிலுவை: மெசியா காலத்தின் ஒரு புதிய திருக்காட்சி | 108 |
| 26. | 28-02-2021 ஓசன்னா : கோவிலில் புதிய அரசர் | 114 |

| | | | |
|---|---|---|---|
| 27. | 29-03-2021 | அத்திமரம் தரும் பாடம் | 119 |
| 28. | 30-03-2021 | எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்? | 123 |
| 29. | 31-03-2021 | அவர் எனக்குச் செய்தது முறையான செயலே | 126 |
| 30. | 01-04-2021 | நன்றித்திருவிருந்து: இயேசுவை நினைவுகூர்தல் | 130 |
| 31. | 02-04-2021 | சிலுவை : இறப்பின் இறப்பு | 133 |
| 32. | 03-04-2021 | புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு | 136 |
| 33. | 04-04-2021 | உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல் | 139 |
| 34. | 11-04-2021 | உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு | 142 |
| 35. | 18-04-2021 | உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல் | 146 |
| 36. | 25-04-2021 | உயிர்ப்பின் அனுபவப் பின்னணியத்தில் சமூக உருவாக்கம் | 150 |
| 37. | 02-05-2021 | கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உயிர்ப்பு | 154 |
| 38. | 09-05-2021 | அருள்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பு | 160 |
| 39. | 16-05-2021 | தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல் | 164 |
| 40. | 23-05-2021 | வாரும் தூய ஆவியாரே, எம்மைப் புத்தாக்கம் செய்தருளும் | 168 |
| 41. | 30-05-2021 | நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம் | 174 |
| 42. | 06-06-2021 | விண்ணிலிருந்து வரும் ஞானம் | 177 |
| 43. | 13-06-2021 | இறைமாட்சியைப் பறைசாற்றும் படைப்பு | 181 |
| 44. | 20-06-2021 | உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுங்கள் | 186 |
| 45. | 27-06-2021 | சீடத்துவத்தின் மதிப்பு | 191 |
| 46. | 04-07-2021 | பொறுப்பாண்மை: வெளிப்படைத்தன்மையும், கணக்கொப்புவித்தலும் | 196 |
| 47. | 11-07-2021 | இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும் | 201 |
| 48. | 18-07-2021 | இறைமக்கள்: உப்பும், ஒளியும் | 206 |
| 49. | 25-07-2021 | அருள்பொழிவுத் திருப்பணி: கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பெற்றது | 211 |
| 50. | 01-08-2021 | அருள்பணி : கிறிஸ்துவின் வேதனையைப் பகிர்தல் | 215 |

| | | | |
|---|---|---|---|
| 51. | 08-08-2021 | திருமணத்தை மதியுங்கள் | 219 |
| 52. | 15-08-2021 | திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும் | 222 |
| 53. | 22-08-2021 | தூய ஒப்படைப்புப் பலி என்னும் திருவருள்சாதனம் | 228 |
| 54. | 29-08-2021 | பன்மைத்துவம் : பொதுவான மானிடமும் நம்பிக்கையைப் பகிர்தலும் | 233 |
| 55. | 05-09-2021 | இயேசுவே குரு | 236 |
| 56. | 12-09-2021 | கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பெண் பங்காளர்கள் | 242 |
| 57. | 19-09-2021 | என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன் | 247 |
| 58. | 26-09-2021 | முதியோரின் ஞானம் | 250 |
| 59. | 27-09-2021 | வழிபாட்டில் ஒன்றிப்பு | 252 |
| 60. | 27-09-2021 | விடுதலையின் விருட்சம் : தென்னிந்தியத் திருச்சபை | 257 |
| 61. | 03-10-2021 | இறைமக்களின் திருப்பணி | 260 |
| 62. | 10-10-2021 | மாற்றுத்திறனுடையோர் : மாண்பும் சார்பும் | 263 |
| 63. | 17-10-2021 | பொருளுள்ள வாழ்வுத் தேடலில் இளையோர் | 267 |
| 64. | 24-10-2021 | வறுமைக்குக் கிறிஸ்தவ மறுமொழி | 270 |
| 65. | 31-10-2021 | சீர்திருத்தப்பெற்ற சீர்திருந்தும் திருச்சபை | 274 |
| 66. | 07-11-2021 | திருச்சபையில் சிறார் | 279 |
| 67. | 14-11-2021 | விளக்குத் தண்டுகளின் மீதுள்ள விளக்கு | 282 |
| 68. | 21-11-2021 | பெண் குழந்தையைப் பாதுகாத்தல் | 286 |
| 69. | 28-11-2021 | தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல் | 290 |
| 70. | 05-12-2021 | இறைவாக்கு: தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே | 294 |
| 71. | 12-12-2021 | பாவக் கட்டிலிருந்து விடுதலை | 299 |
| 72. | 19-12-2021 | மாரனாத்தா - ஆண்டவரே வாரும் | 303 |
| 73. | 24-12-2021 | உலகில் அமைதி | 306 |
| 74. | 25-12-2021 | கிறிஸ்துப்பிறப்பு : ஒரு புதிய விடியல் | 310 |
| 75. | 26-12-2021 | குடும்பம் என்னும் நலமருளும் இடம் | 314 |
| 76. | 31-12-2021 | ஆண்டவரிடம் வாருங்கள், பேருவகை கொள்ளுங்கள் | 319 |

**புதிய மாத நன்றித்தொழுகை**

| | | | |
|---|---|---|---|
| 77. | 01-02-2021 | நிந்தயை நீக்கும் ஆண்டவர் | 323 |
| 78. | 01-03-2021 | உயர்த்தும் உன்னதர் | 328 |
| 79. | 01-04-2021 | மகிழ்விக்கும் மகிபர் | 331 |
| 80. | 01-05-2021 | வலிமை தரும் வல்லவர் | 334 |
| 81. | 01-06-2021 | பேரன்பு காட்டும் பரமன் | 336 |
| 82. | 01-07-2021 | துன்பத்தை அகற்றும் தூயவர் | 339 |
| 83. | 01-08-2021 | அதிகாலையும் ஆசியும் | 342 |
| 84. | 01-09-2021 | விடுவிக்கும் விடுதலையாளர் | 344 |
| 85. | 01-10-2021 | வலக்கரத்தால் தாங்கும் வல்லவர் | 346 |
| 86. | 01-11-2021 | இருமடங்கு நன்மைகள் தரும் ஆண்டவர் | 349 |
| 87. | 01-12-2021 | இருளை ஒளியாக்கும் ஆண்டவர் | 352 |

**தவக்காலம் புதன் & வெள்ளி அருளுரைகள்**

| | | | |
|---|---|---|---|
| 88. | 19-02-2021 | எபேசுத் திருச்சபை | 355 |
| 89. | 24-02-2021 | விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் | 357 |
| 90. | 26-02-2021 | பெர்காம் திருச்சபை | 361 |
| 91. | 03-03-2021 | ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள் | 365 |
| 92. | 05-03-2021 | தியத்திரா திருச்சபை | 368 |
| 93. | 10-03-2021 | என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா | 372 |
| 94. | 12-03-2021 | சர்தைத் திருச்சபை | 376 |
| 95. | 17-03-2021 | உண்மையை எடுத்துரைப்பதே என் பணி | 378 |
| 96. | 19-03-2021 | இலவோதிக்கேயா திருச்சபை | 381 |
| 96. | 24-03-2021 | இறைவிருப்பப்படியே நிகழட்டும் | 383 |
| 98. | 26-03-2021 | சிமிர்னா & பிலதெல்பியா | 388 |

**சிலுவைத் திருமொழிகள்**

| | | |
|---|---|---|
| 99. | 1 - விடுதலையின் தொடக்கம் | 391 |
| 100. | 2 - விண்ணக வாழ்வை நோக்கிய பயணம் | 394 |
| 101. | 3 - வேற்றுமைகளைக் கடந்த புதுஉறவு | 396 |
| 102. | 4 - விடுதலைக்கான முழக்கம் | 400 |
| 103. | 5 - விடுதலைக்கான வேட்கை | 403 |
| 104. | 6 - விடிவுகாண ஒரு முடிவு | 405 |
| 105. | 7 - விண்ணக வாழ்வுக்கான நுழைவாயில் | 407 |

**விழாக்கால அருளுரைகள்**


| | | |
|---|---|---|
| 106. | குழந்தைகள் : இறையாட்சியின் முன்னுதாரணங்கள் | 411 |
| 107. | முன்மாதிரியாய் விளங்கும் இளையோர் | 416 |
| 108. | பெயிபா | 421 |
| 109. | கடவுள் தேடும் மனிதர் | 424 |
| 110. | ஒன்றித்த இறைவேண்டல் | 429 |
| 111. | தூய்மையாக்கும் வார்த்தை | 432 |
| 112. | நினைந்து, நிலைத்து வாழுங்கள் | 434 |
| 113. | பணிதலும் பகிர்தலும் | 438 |
| 114. | ஆண்டவரின் அருள்கொடை | 444 |
| | **சிறப்புநாள் அருளுரைகள்** | |
| 115 | 25-04-2021 சுவிசேஷகர் | 449 |
| 116 | 01-05-2021 கடவுளின் பணிவிடையில் பங்கேற்றல் | 457 |
| 117 | அருட்பணி : ஆத்தும அறுவடைப்பணி | 461 |
| 118 | உண்மையான செல்வத்தைத் தேடுங்கள் | 464 |
| 119 | கலங்க வேண்டாம் | 469 |
| 120 | அருள்பணிக்கான இறையனுப்புதல் | 473 |

## அட்டைப்பட விளக்கம்

இவ்வுலகில் மனிதர் உட்பட அனைத்துப் படைப்புகளும் அனுபவிக்கின்ற வலிகள் இந்தப் பூமி காயமுற்றுள்ளது என்பதன் வெளிப்பாடாகும். காயமுற்ற உலகை நல்மருந்தாம் இறைவார்த்தை நலமாக்குகிறது. காயமுற்ற நலமருளுபவராகிய (Wounded Healer) இயேசு கிறிஸ்துவில் நலமான நிறைவாழ்வு துளிர்க்கட்டும்.

# LITURGICAL COLOURS - 2021

| | |
|---|---|
| **January 1 to January 6** | **White** |
| **(Christmas Season)** | |
| **January 7 to February 16** | **Green** |
| **(Epiphany Season)** | |
| **February 17 to April 3** | **Purple** |
| **(Lenten Season)** | |
| **April 4 to May 22** | **White** |
| **(Easter Season)** | |
| **May 23 to May 29** | **Red** |
| **(Pentecost Season)** | |
| **May 30** | **White** |
| **(Trinity Sunday)** | |
| **May 31 to November 27** | **Green** |
| **(Pentecost Season)** | |
| **November 28 to December 24 Morning** | **Purple** |
| **(Advent Season)** | |
| **December 24 Eve to December 31** | **White** |
| **(Christmas Season)** | |

01-01-2021

**புத்தாண்டு & உடன்படிக்கை நாள்**

# கடவுளின் தொடரும் அருள்செயல்

**GOD'S CONTINUING ACT OF GRACE**

செப் 3:14-20 உரோ 5:1-11
திபா 136 லூக் 13:1-9

**"ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்; இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்; இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்"** (செப் 3:15).

உடன்படிக்கை என்பது இரு நபர்களுக்கிடையில், இரு குழுவினருக்கிடையில் உண்டான ஏற்பாட்டைக் குறிப்பதாகும். இப்புத்தாண்டில் கடவுளோடு நாம் ஏற்படுத்திக் கொள்ளும் அல்லது புதுப்பித்துக்கொள்ளும் உடன்படிக்கையானது, நமது வாழ்வு, முன்னேற்றம், பாதுகாப்பு, நலம், நன்மை போன்றவற்றை மையப்படுத்தியிருந்தாலும், இது சபை, சமூகம் என அனைத்தையும் உள்ளடக்கியதாகும். எனவே உடன்படிக்கை என்பது நாம் சுயமாக எடுக்கும் முடிவு அன்று; மாறாகக் கடவுளில் ஒன்றித்து அவருடன் இணைந்து நாம் எடுக்கும் தீர்மானமாகும். இதுவே கடவுள் நம்முடன் செய்துகொள்ளும் உடன்படிக்கை எனலாம்.

திருமறையில், உடன்படிக்கையின்போது சில அடையாளங்களை ஏற்படுத்திக்கொள்வது வழக்கம். அவை, தூண் நடுவார்கள் அல்லது கற்களைக் குவிப்பார்கள் (தொநூ 31:44-53), இரத்தம் தெளிப்பார்கள் (விப 24:8). கடவுள் மனுக்குலத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கை முற்றுப்பெறவில்லை. அது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. கடவுள் தம் உடன்படிக்கையை என்றும் நினைவுகூர்ந்து அதனை நிறைவேற்றுபவராக இருக்கிறார். ஏனெனில், அவர் நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்.

கடவுளோடு உடன்படிக்கை செய்துகொள்ளும் நாம் அவரது வார்த்தையை மனதிற்கொண்டு வாழவேண்டும். கடவுளின் வார்த்தை அவருடைய இயல்பை, ஆற்றலை வெளிப்படுத்துகிறது. 2021ஆம் ஆண்டில் பல்வகை எதிர்பார்ப்புகளோடும், எதிர்நோக்கோடும் நாம் நுழைந்திருக்கின்றோம். பெருந்தொற்று, இயற்கைப் பேரிடர்கள், பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை இவைகளுக்கு நடுவில், 2021ஆம் ஆண்டு நமக்குப் புதிய விடியலாய் அமையும் எனும் நம்பிக்கையோடு கடவுளின் திருமுன் அமர்ந்திருக்கிற நமக்குக் கடவுள்

அளுரும் வாக்குறுதி, ...ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்; இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய் (செப் 3:15) என்பதாகும். இப்புதிய ஆண்டில் கடவுள் எவ்வாறு நம்மிலே செயல்படப் போகிறார், ஆசி வழங்குகிறார் என்பதைத் தியானிப்போம்.

### *1. இருக்கின்றவராகவே இருக்கின்றார்:*

". . . இப்போதே போ; இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்" (விப 3:10) என்றார்

மோசே இதுவரையிலும் சென்றிராத ஒரு பாதை: அது எகிப்தின் மன்னன் பார்வோனைச் சந்திக்கச் செல்லும் பாதை. கடவுள் மோசேயைத் தெரிந்துகொண்டு ". . . இப்போதே போ; இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்" என்றார் (விப 3:10). மோசே கடவுளிடம் உம்முடைய பெயர் என்னவென்று கேட்டால் நான் என்ன பதில் சொல்ல வேண்டும்? என்று வினவியபோது, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என மோசேக்குப் பதிலளித்து, "இருக்கின்றவர் நானே" என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல் என்றார் (விப 3:14).

"இருக்கின்றவராக இருக்கின்றவர்" அனைத்து ஆற்றலும் தூய்மையும் மிக்கவர். எனவே அந்நம்பிக்கையில் ஒவ்வொரு நாளும் இறை உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாக வாழ்வோம்.

கடவுளின் தன்மையினை உணர்ந்த மக்கள் அனுபவப்பூர்வமாக அனுபவித்த நிகழ்வுகளை இஸ்ரயேல் மக்களின் வரலாற்றிலே அறிந்துகொள்ள முடிகின்றது.

நெருக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களை வாக்குப்பண்ணப்பட்ட நாட்டிற்கு அழைத்து வந்தார்.

இறைமக்கள் மனம் மாறவும், நீதியை நிலைநாட்டவும் இறைவாக்கினர்கள் வாயிலாக இறைவாக்குரைக்கச் செய்து, அவர்களைக் கொண்டு ஆற்றல்மிக்கச் செயல்களை நிறைவேற்றினார்.

அரசர்களின் நெறிகெட்ட வாழ்வினால் நாடு வீழ்ச்சியைச் சந்தித்த போது கடவுள் தம் மக்களோடு இருந்து தம்மை வெளிப்படுத்தினார்.

மெசியாவைக் குறித்த எதிர்பார்ப்புகளோடு இறைமக்கள் இருந்த நேரத்தில் மெசியாவின் தன்மைகளை (துன்புறும் ஊழியர்) இறைவாக்குகள் வழியாகக் கற்பித்தார்.

தம் ஒரே மகனை உலகின் மீட்புக்காகக் கையளித்து "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" எனத் தம்மை வெளிப்படுத்தினார்.

காலங்கள் மாறலாம், நம்பினோர் கைவிடலாம், ஆனால் கடவுள் என்றென்றும் மாறாதவர்; துன்புறும் மக்களோடு தம்மை அடையாளப்படுத்துகிறவர். மலா 3:6 இல், கடவுள் "யாக்கோபின் பிள்ளைகளே, ஆண்டவராகிய நான் மாறாதவர். அதனால் தான் நீங்கள் இன்னும் அழியாதிருக்கிறீர்கள்" என்கிறார். என்றென்றும் மாறாதவராக, இருக்கின்ற கடவுளிடம் நம்மை ஒப்படைப்போம் (திபா 46:1)

## 2. நம் நடுவில் இருக்கின்றவர்:

கடவுளை எங்கே காணலாம் என்ற தேடல் மனிதர்களிடம் இருந்து கொண்டே இருக்கின்றது. கடவுள் குறிப்பிட்ட இடங்களில் தான் இருக்கின்றார் எனப் புனிதத் தலங்களை நோக்கி எதிர்பார்ப்புகளோடு பயணம் மேற்கொள்ளும் மனிதர்களை அன்று மட்டுமல்ல, இன்றும் காண முடிகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், உடன்படிக்கைப் பேழை இருக்குமிடத்தில் கடவுளின் உடனிருப்பு இருப்பதாக இஸ்ரயேலர் நம்பினார்கள் (1 சாமு 4:1; 2 சாமு 6:10; 1 அர 8:1). யோசுவா தலைமையில் அவர்கள் கானானுக்குள் நுழையும்போது உடன்படிக்கைப் பேழையை உடன் வைத்திருந்ததைக் காணலாம் (யோசு 3:3; 6:6). இஸ்ரயேலர் கடவுளின் பிரசன்னம் தங்கள் முன் செல்வதற்கு (விப 33:14) அடையாளமாக உடன்படிக்கைப் பேழையை உடன் வைத்திருந்தனர். இது எப்போதும் கடவுளின் பிரசன்னம் அவர்களோடு இருக்கின்றது என்னும் நம்பிக்கையில் பலப்பட காரணமாய் அமைந்தது.

கடவுள் நம்மோடு இருக்கின்றவர் என்பதைத் தம்முடைய மகனை உலகிற்கு ஈவாக அளித்ததன் வாயிலாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. ". . . இம்மானுவேல் எனப் பெயரிடுவர். . . இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள் (மத் 1:23) என்னும் திருவசனத்தின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

இருக்கின்றவராக இருக்கின்ற கடவுளைக் கண்டுகொள்ள இரு அணுகுமுறைகள் உள்ளன. பழைய ஏற்பாட்டின் அணுகுமுறை 'Centripetal' என்பதாகும். அதாவது கடவுளின் இருப்பிடத்தைத் தேடி மக்கள் சென்றனர். புதிய ஏற்பாட்டின் அணுகுமுறை 'Centrifugal', அதாவது கடவுள் மைய நிலையிலிருந்து விளிம்புநிலையிருந்த மனிதரைத்

தேடி வந்தார். கடவுளைத் தேடிச் சென்ற சமூகம் பழைய ஏற்பாட்டுச் சமூகம். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வாயிலாகக் கடவுள் தம் மக்களைத் தேடி வந்தார். இதைத்தான் "இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" என்று ஆண்டவர் உரைத்தார் (லூக் 19:10).

நாம் கடவுளின் திருவுளம் அறிந்து அதை நிறைவேற்றுவதே உடன்படிக்கையின் சிறப்பு. அதுவே நம் இறைவேண்டலாகவும் இருக்க வேண்டும்.

பகைவர்கள் (செப் 3:15), துன்பம் (வ 8), அவமானம் (வ.19) இவையே இஸ்ரயேலருக்கும் பெரும் சவாலாய் விளங்கின. அவர்கள் நடுவே பகைவர்கள் குடியிருந்து, அவர்களைத் துன்புறுத்தி அவமானப்படுத்தி வந்தனர். இச்சூழலில் செப்பனியா இறைவாக்கினர் வழியாக கடவுள் உரைக்கின்றார், "ஆண்டவர். . . உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்: இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் (செப் 3:15). கடந்த ஆண்டு, பெருந்தொற்று, பேரிடர்கள், வேலைவாய்ப்பின்மை, பொருளாதார நெருக்கடி இவைகளின் நடுவே நாம் வாழ்வை நடத்தி வந்திருக்கின்றோம். இப்புதிய ஆண்டில் கடவுள் நமக்கு வழங்கும் வாக்குறுதி, நம் நடுவில் அவர் இருக்கின்றார் என்பதாகும்.

## 3. தீமைக்கு விலக்குகிறவராக இருக்கின்றார்:

தீயினைப் போலத் தீமையின் செயல்பாடுகள் வேகமாகப் பரவக் கூடியவை. எடுத்துக்காட்டாக, நிலங்களில் விவசாயம் செய்யும்போது உண்மையான பயிரைக் காட்டிலும் களைகள் தாம் வேகமாக வளருவதைக் காணமுடியும். ஆனால் களைகளைத் தொடக்கத்திலேயே கிள்ளி எறிந்து விட்டோமெனில் விளையும் பயிருக்குச் சேதம் குறைவு. தீமையானவைகளை நாம் விரும்புவதில்லை ஆனால் நன்மைக்குப் பதில் தீமையினை நாடுவதற்குக் காரணம் நமக்குள் வாசமாயிருக்கிற பாவம் என்று பவுலடிகளார் உரோ 7:19,20 இல், "ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். நான் விரும்பாததைச் செய்கிறேன் என்றால், அதை நானாகச் செய்யவில்லை; என்னில் குடிகொண்டிருக்கும் பாவமே செய்கிறது" என்கிறார்.

ஆகையால், நன்மைக்குக் காரணராயிருக்கின்ற கடவுளின் உடன்படிக்கைக்கு நம்மை உட்படுத்துவோம். தீமையான செயல்களுக்கு உடன் படாமல் இறைவேண்டலோடு தினமும் பயணிப்போம். நன்மையானதைச் செய்யும் விருப்பத்தையும், தருணத்தையும் கடவுளே அளிக்கின்றார். அவர் அருளும் நன்மைகளை ஒருவரும் ஒருக்காலும்

தடைசெய்ய இயலாது. யாக் 1:17இல் “நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை; அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே திருமறை சார்ந்து நன்மை என்றால் என்ன என்பதே நாம் புரிந்து கொள்ள வேண்டும்,

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளபடி, “ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்துகொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்.” என்னும் இவ்வசனத்தில் நன்மையைக் குறித்து மிகத் தெளிவாக விளக்குகின்றார்.

அன்றாட வாழ்வில் நன்மைக்கும் தீமைக்கும் ஓயாத போட்டி உள்ளது. சில வேளைகளில் தீமையானது வெற்றியடைவது போலத் தோன்றலாம் ஆனால், நன்மையின் செயல்கள் நிலைத்து நிற்கும். நோபல் பரிசுபெற்ற பேராயர் டெஸ்மாண்ட் டுட்டு, “தீமையைக் காட்டிலும் நன்மை ஆற்றல் உடையது; இருளைக் காட்டிலும் ஒளி ஆற்றல் உடையது; மரணத்தைக் காட்டிலும் வாழ்வு ஆற்றல் உடையது” என்கிறார்.

23 ஆம் திருப்பாடல் 6 ஆம் வசனத்தில், “உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள்நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்துவரும்; நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்” என்கிறார் திருப்பாடலாசிரியர். இப்புதிய ஆண்டின் அனைத்து நாள்களிலும் அருள்நலமும் பேரன்பும் நம்மைப் பின்தொடர்வதற்குக் கடவுளின் கரத்தில் நம்மை ஒப்படைப்போம்.

இறையாசி என்றும் உங்களில் தங்குவதாக!
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

பேரருள்திரு. அறிவர். **A.R. செல்லையா**
பேராயர்

03-01-2021

**கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

# விடுதலைக்கான திருவெளிப்பாடு

**REVELATION FOR LIBERATION**

எசா 61:1-11 திவெ 5:1-10
திபா 76 லூக் 4:16-21

**"... நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று"** (லூக் 4:21).

விடுதலைக்காக ஏங்கி நிற்கும் மானுடம், தங்களுக்கு விடுதலை அருளுபவரை அறிய இயலாத சூழலில், விடுதலையாளரை மக்கள் அறியச் செய்தல் அவசியம். 'வெளிப்பாடு'என்பது மறைந்திருப்பதை வெளிக்கொண்டுவருதல், அறிய இயலாதிருப்பதை அறியச் செய்தல் எனலாம். திருவெளிப்பாடு என்பது கடவுள் தம்மை வெளிப்படுத்தியதைக் குறிக்கும். கடவுளைப் பற்றிய அறிவுக்கும் கடவுள் மீதான நம்பிக்கைக்கும் கடவுளின் திருவெளிப்பாடு மிகவும் இன்றியமையாததாகும். மனுக்குல மீட்புக்காகக் கடவுள் மானிடர் மத்தியில் மனிதராகத் தம்மை வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், திருப்பணியும், பாடுமரணமும், உயிர்த்தெழுதலும் மானுட விடுதலைக்கான (மீட்புக்கான) கடவுளின் செயல்பாடுகளாகவே அறியப்படுகின்றன. கிறிஸ்துவின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு தனி நபர்கள், இயக்கங்கள், நாடுகள் விடுதலைக்கான போராட்டங்களை முன்னிறுத்தி வெற்றி கண்டுள்ளன. மானுட விடுதலைக்காக மானிடராகத் தம்மை வெளிப்படுத்திய, கடவுளின் மனுஉருவேற்பைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கும் சூழலில், திருமறை வழியே கடவுளின் திருத்திட்ட நிறைவேறுதலாகிய "விடுதலைக்கான" கிறிஸ்துவின் (மேசியா: அபிஷேகம் பண்ணப்பட்டவர்) வெளிப்பாடு குறித்து சிந்திக்க முற்படுவோம்.

## *1. ஆவியாரை வெளிப்படுத்தும் கிறிஸ்துவால் விடுதலை*:

(எசா 61:1-11)

எசாயா இறைவாக்கு நூலின் நிறைவுப் பகுதியாகிய 56 முதல் 66 அதிகாரங்கள் உள்ளடங்கிய பகுதி, 3-ஆம் எசாயாவால் கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டது எனக் கருதப்படுகிறது. இப்பகுதியில் வரும் 61-ஆம் அதிகாரத்தில் இறைவாக்கின் நிறைவேறுதலாய், இயேசு கிறிஸ்து தம்மை முன்நிறுத்தியதை லூக் 4:16 முதல் உள்ள வசனங்களில் நாம் அறிய முடிகிறது. தரித்திரர், இருதயம் நொறுங்குண்டவர்கள், சிறைப்பட்டவர்கள் முதலிய சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்களும் வாழ்வின் துன்பச் சூழலில்

அகப்பட்டிருந்தாலும் விடுதலை உண்டு என்பதனை இப்பகுதி கூறுகிறது. இப்பகுதியில் ஆவியாரின் செயல்பாடுகள் விடுதலையை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் ஆவியார் தம்மில் உறைந்திருப்பதையும், விடுதலைப் பணிக்கு என தாம் அருள்பொழிவு செய்யப்பட்டுள்ளேன் என்றும் இறைவாக்கினரின் வார்த்தைகள் தம்மில் நிறைவேறியது என்றும், இயேசு கிறிஸ்து கூறுவதன் மூலம் ஆவியாரை வெளிப்படுத்தி, தூய ஆவியாரின் செயல்பாட்டைத் தம்முடைய செயல்பாடாகவும் அறிக்கையிடுவதை உணர முடிகிறது. “குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்” (யோவா 8:36) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளும் “ஆண்டவரின் ஆவியார் எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு” (2கொரி 3:17) என்னும் பவுலடியாரின் வார்த்தைகளும் ஆவியாரை வெளிப்படுத்தும் கிறிஸ்துவால் விடுதலை என்பதனைத் தெளிவுப்படுத்துகிறது.

## 2. *ஆட்டுக்குட்டியானவராய் வெளிப்படும் கிறிஸ்துவினால் விடுதலை* : (திவெ 5:1-10)

திருவெளிப்பாட்டில் யோவானுக்கு இயேசு கிறிஸ்து ஆட்டுக்குட்டியானவராய் வெளிப்படுத்தப்படுகிறார். மூடப்பட்டிருக்கிற புத்தகம்: இந்தப் புத்தகம் திவெ 3:5; 3:8; 20:12; 21:27 முதலிய இடங்களில் கூறப்பட்டுள்ள புத்தகத்திற்கு இணையானது அல்ல. ஆனால் மனித வரலாற்றை முழுமையாக அறிந்துகொள்ள இப்புத்தகம் பயன்படும். ஆனால் இது மூடி முத்திரையிடப்பட்டிருக்கிறது. இதிலுள்ள செய்தி மற்றவர்கள் அறிய முடியாதபடிக்கு அடைபட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்திற்கு விடுதலை உண்டோ? எனத் திறக்கவோ, பார்க்கவோ, படிக்கவோ முடியாத நிலையில் யோவான் கதறி அழுகின்றார். ஏனெனில் இப்புத்தகத்தில் மனிதக்குலத்திற்கான கடவுளின் வாக்குறுதிகளும், அவருடைய நோக்கங்களும், அவரது மீட்பின் திட்டங்களும் அடங்கியிருக்கின்றன. இதனை எவராலும் திறக்க இயலாது, இதன் உள்ளடக்கத்தை அறிவிக்க எவரும் இல்லை, இறைவனின் திட்டம் வெளிப்படுத்தப்படாமல் மூடி மறைக்கப்பட்டிருந்தால் உலகின் கொடுமைகள் அதிகரித்து, அழிக்க இயலாததாகி விடுமே. துன்பங்கள் மாறும் என்னும் நம்பிக்கையை மனுக்குலம் பெற இயலாமல் போய் விடுமே என யோவான் தேம்பி அழுகிறார். அப்பொழுது மூப்பர்களில் ஒருவர், அழாதே என யோவானைத் தேற்றி, “யூதகுலச் சிங்கமும், வேருமானவர் வெற்றி பெற்றார்” (வ. 5), மேசியா வெற்றி கொண்டு விட்டார் என்ற செய்தியைக் கூறுகிறார். மூப்பரால் அறிவிக்கப்பட்ட வல்லமையுள்ள, மகிமையுள்ள மேசியாவின் சாயலைக் காணும்படி முழுஎதிர்பார்ப்புடன்

யோவான் இருந்தபோது, அடிக்கப்பட்டிருந்த ஆட்டுக்குட்டியைக் காணுகிறார். அதாவது பாடுபடும் மக்களின் பிரதிநிதியாய் அடிக்கப்படத்தக்கவராயிருந்தும் புத்தகத்தைத் திறக்கும், புத்தகத்தின் செய்தியை விடுவிக்கும் ஆற்றல் மிக்கவராய் கிறிஸ்து வெளிப்படுகிறார். வாழ்வின் துன்ப துயரங்களில் என்ன நடக்கும்? எப்படி ஆகும்? என்னும் கேள்விகளோடு நாம் அங்கலாய்க்கும் போது கிறிஸ்து நமது கேள்விகள், துக்கங்களிலிருந்து நம்மை விடுவிக்க அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியாய் வெளிப்படுகிறார்.

### *3. ஆண்டவராய் வெளிப்பட்ட கிறிஸ்துவினால் விடுதலை:*

(லூக் 4:16-21)

பொதுவாக யூதத் தொழுகைக் கூடங்களில் வழிபாட்டு வேளையின்போது, இச 6:4-இல் காணப்படும் 'ஷெமா' வை ஓதுவர். பின்னர் குறிப்பிட்ட திருச்சட்ட நூலின் பகுதி (பாராஷா) வாசிக்கப்படும். அதன் பின்னர் ஏதாவது ஒரு இறைவாக்கினர் நூலின் பகுதி (ஹப்தாரா) வாசிக்கப்படும். தொழுகைக்கூடத்தலைவர் வாசிக்கப்பட்ட இரண்டு பகுதிகளுக்கும் அல்லது ஏதாவது ஒரு பகுதிக்கு விளக்கம் அளிப்பார். குருவினுடைய ஜெபத்துடனும், ஆசீர்வாதத்துடனும் தொழுகை நிறைவு பெறும். இப்பகுதியை வாசிக்கும் பணியை ஒரு குறிப்பிட்ட நபரே செய்ய வேண்டியதில்லை. தொழுகைக்கூடத்தலைவர் தெரிந்தெடுக்கும் எவரும் இப்பணிவிடையை நிறைவேற்றலாம். இச்சமயத்தில் தொழுகைக்கூடத் தலைவர் இயேசு கிறிஸ்துவை இப்பணிவிடையை நிறைவேற்றும்படி தெரிந்தெடுத்திருக்கலாம். எனவே இயேசு எழுந்து நின்றார் (வ.16). அப்பொழுது எசாயா இறைவாக்கு நூல் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து எசாயா 61-ஐ வாசித்து விட்டு, உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறியது (வ.21) என்றார். 'நாசரேத்தூர் சாசனம்' எனத் திருமறை அறிஞர்களால் அழைக்கப்படும் இப்பகுதி "இயேசுவே ஆண்டவர்" என்பதையும் ஆண்டவராய் வெளிப்பட்ட கிறிஸ்துவினால் விடுதலை உண்டு என்பதையும் தெளிவாக உணர்த்துகிறது. அனைத்துத் தரப்பினரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் விடுதலை/மீட்பு பெறுவர் என்பதனை இப்பகுதியில் தெளிவாக அறிய முடியும். இயேசுவை யோசேப்பின் குமாரன் (வ. 22) என மட்டுமே அறிந்து வைத்திருந்த மக்கள், அவரே ஆண்டவர் என அறியவும் இந்நிகழ்வு உதவியது. ஆண்டவர் (LORD) என்னும் வார்த்தைக்குக் கிரேக்க மொழியில் 'Kyrios' என்னும் வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இது "ஆண்டு கொள்ளுகிறவர்", "எல்லாவற்றிற்கும் அதிபதி", "உரிமையாளர்" என்னும் பொருள்படும். திருமறையில் ஆண்டவர் என்னும் அடைமொழி

பலருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாராள் ஆபிரகாமை ஆண்டவர் என அழைத்தார் (1பேது 3:6). எனினும் இயேசு கிறிஸ்துவுக்கு இப்பெயர் மிக அழுத்தமாக உபயோகப்படுத்தப்படுகிறது. திப 2:26; 1திமொ 6:15; பிலி 2:10,11; உரோ 10:9 முதலிய பகுதிகளில் இதனை உணர முடியும்.

மக்களின் மீட்புக்காக, விடுதலைக்காக உலகில் வந்த இயேசுவைக் கிறிஸ்து என மக்கள் அறியாத சூழலில் அவரே விடுதலை அருள்பவர் என்னும் செய்தி வெளிப்படுத்தப்படுகிறது. ஆவியாரை வெளிப்படுத்தும் கிறிஸ்துவால், ஆட்டுக்குட்டியானவராய் வெளிப்படும் கிறிஸ்துவால், ஆண்டவராய் வெளிப்பட்ட கிறிஸ்துவால் அருளப்படும் விடுதலையை, இவ்வாண்டிலும் வாழ்வின் எல்லாக் காலங்களிலும் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அனுபவிக்க இறைவன் அருள்புரிவாராக. கிறிஸ்துவை விடுதலை அருளுபவராய்க் காட்டுவோம். நாமும் விடுதலையின் கருவிகளாய் வாழ்வோம். இறைவனின் திருப்பெயர் நம்மால் மாட்சி பெறட்டும்.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன்பெல்**

# என்னுடைய அன்பில் நிலைத்திருங்கள்; மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்

**(ABIDE IN MY LOVE AND YOU SHALL BEAR MUCH FRUIT)**

**யோவா 15:1-17**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் மற்ற எல்லாரையும் விட நீண்ட காலம் வாழ்ந்தவர் தூய யோவான் ஆவார். தனது முதிர்வயதிலும் கூட எப்போதும் அருளுரையாற்றிக்கொண்டே இருந்தார். அவ்வருளுரைகளில் அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டே இருந்தது, "குழந்தைகளே, ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள்" (Little children, love one another) என்பதாகும். விசுவாசிகள் பல முறை தூய யோவானிடம் வந்து, நீங்கள் ஆண்டவரோடு இருந்திருக்கிறீர்கள் அல்லவா! எனவே அவர் சொன்னவற்றையும் செய்தவற்றையும் குறித்து இன்னும் விளக்கமாக எங்களுக்குச் சொல்லுங்கள் எனக் கேட்டபோது, தூய யோவான் மீண்டும் மீண்டும் அவர்களுக்குச் சொன்னது: "குழந்தைகளே, ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள். அதைவிட மேலானது ஒன்றுமில்லை" (Little children, love one another. There is nothing more) என்பதாகும். யோவான் 3:16ஐ அடிப்படையாக வைத்து, ஆண்டவர் செய்த எல்லாவற்றையும் ஒற்றை வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் "அன்புகூர்ந்தார்" எனலாம்.

ஆண்டவரோடிருந்து இறையன்பைச் சுவைத்த யோவான், நற்செய்தி நூலிலும், திருமுகங்களிலும் இறையன்பையும், நாம் ஒருவர் மற்றவரிடம் கொண்டிருக்க வேண்டிய அன்பையும் குறித்து விளக்கமாகப் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, யோவான் நற்செய்தி நூல் 15 ஆம் அத்தியாயத்தில், இயேசு கிறிஸ்து தம்மை உண்மையான திராட்சை செடியாய் உருவகப்படுத்திக் கற்பித்ததை எடுத்துரைக்கின்றார். உண்மையான திராட்சைச் செடியாகிய இயேசு கிறிஸ்துவில், கிளைகளாகிய நாம் நிலைத்திருந்து மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டும். ஆண்டவரின் அன்பில் நிலைத்திருப்பதே மிகுந்த கனிகளைக் கொடுப்பதற்கான வழிமுறையாகும்.

கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான வார இறைவேண்டல் 2021, "என்னுடைய அன்பில் நிலைத்திருங்கள்; மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்" (யோவா. 15:1-17) (Abide in my love and you shall bear much fruit) என்னும் கருப்பொருளில் கொண்டாடப்படுகின்றது. அனைத்து அன்புக்கும் ஆதாரமாகத் திகழும் கிறிஸ்துவில் நிலைத்திருந்து இப்புதிய ஆண்டில் மிகுந்த கனிகளைக் கொடுக்க வார இறைவேண்டல்கள் வாயிலாகக் கடவுள் நமக்கு அருள்செய்வாராக!

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

# கடவுளால் அழைக்கப்பெற்றிருக்கிறோம்

**CALLED BY GOD**

தொநூ 12:1-4 யோவா 1:35-51

**“நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை; நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்”** (யோவா 15:16).

“கடவுளின் அழைப்பு என்பது தேர்ந்தெடுக்கப்பெற்ற சிலருக்கானது மட்டுமன்று; அது ஒவ்வொருவருக்குமானது. மேலும் கடவுளின் அழைப்புக்கு நான் செவிசாய்க்கிறேனா? இல்லையா? என்பது எனது செவிகளின் கேட்கும் திறனைப் பொறுத்தது அன்று; மாறாக எனது ஆன்மிக மனப்பாங்கைப் பொறுத்தாகும்” என்கிறார் ஆஸ்வால்ட் சேம்பர்ஸ். சீடத்துவ வாழ்வு என்பது ஆண்டவரின் அழைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இயேசு கிறிஸ்து தம் பணிவாழ்வின் தொடக்கத்தில் தம் சீடர்களுக்கு விடுத்த அழைப்பு, “என்னைப் பின்பற்றுங்கள்” என்பதாகும். இவ்வழைப்பு சீடர்களின் விருப்பத்தின் பேரிலோ அல்லது அவர்களின் தகுதியை அடிப்படையாகக் கொண்டோ தரப்பட்டதன்று; இது இறையருளால் வழங்கப்படுகின்ற ஒன்றாகும். பணிவிடை புரிவதற்கான கடவுளின் அழைப்பு, நம் வாழ்வை மட்டும் மையப்படுத்தியதோ, முதன்மைப்படுத்தியதோ அல்ல; பிற மனிதர்களின், அனைத்துப் படைப்புகளின் நலம் நாடும் நோக்கத்தில் அவ்வழைப்பு நமக்கு அருளப்பட்டுள்ளது. கடவுள் ஆபிராமுக்கும், இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்கும் தந்த அழைப்பு, அத்தகையை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். அவற்றின் சிறப்பைத் தியானிப்போமாக.

## *1. ஆசியாகத் திகழ்வதற்கான அழைப்பு* :

நம் வாழ்வின் பயணத்தில் பல்வகை சூழல்கள் மற்றும் மானிடரைச் சந்திக்கும். சில சந்திப்புகள் நமைச் சிந்திக்க வைக்கும், சில சந்திப்புகள் நமை வருந்தச் செய்யும், சில சந்திப்புகள் நமைத் திருந்தச் செய்யும். தொடக்க நூலின் 12-ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமின் பற்றுறுதிப் பயணம், இறைவரோடுள்ள சந்திப்பில் தொடங்குகின்றது. இப்பயணம் ஆபிரகாமின் வாழ்வில் புதிய பாதையில் பயணிக்க வழிகாட்டுகின்றது. புதிய காட்சியோடு, ஆசிகளைப் பகிர்ந்து வாழ இறைவரால் அறைகூவல் கொடுக்கப்பட்ட பற்றுறுதி வாழ்வின் பயணம். இறைவரின் அழைப்பிற்கு ஆபிரகாம் கீழ்படிந்து இறைவரோடு பயணிக்கும் இனிய பயணம்.

ஆபிரகாம் பயணம் ‘செல்’ (12:1) என்ற இறைச் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, ‘உன் நாடு’, ‘உன் தந்தை வீடு’, ‘உன் இனம்’, ‘உன் செல்வம்’ என அனைத்தையும் துறந்து பயணிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் தொடங்குகின்றது. ஆபிராம் தன் சுய விருப்பங்களைக் களைந்து, இறைவிருப்பம் நிறைவேற்ற தன்னை இறைவர் கரத்தில் அர்ப்பணிக்கின்றார்.

ஆபிராமிற்கு தரப்படும் அழைப்பு ‘கூட்டை விட்டு வெளியே வா’ என்ற அறைகூவல். ஆகும் (God calls Abram to move out from comfort zone). அமைதியின் உறைவிடத்திலிருந்துதொடங்கிய அவரது பயணம், அலைகள் நிறைந்த பாதையினூடே முட்கள் நிறைந்த சாலைகளினுடே பயணித்தது. இறைவர் அவரை ஆழங்களுக்கு அழைத்துச் செல்கிறார். ‘தாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாதிருந்தும் அவர் புறப்பட்டுச் சென்றார்’ (எபி 11:8). ஆபிராம் இறைவர் மீது கொண்ட ஆழமான பற்றுறுதி அவரைப் பிறருக்கு ஆசியைப் பகிரும் கருவியாக மாற்றுகின்றது. பரிச்சயமான, பழக்கமான இடத்தை விட்டு வெளியே அழைத்து ‘உலகின் மக்களினங்கள் அனைத்தும் உன் வழியாக ஆசி பெறும்’ என்பது (தொநூ 12:3) பகிர்வின் உயர் பண்பிற்கு அவர் வாழ்வு மாற்றப்படுகின்றது என்பதைக் காட்டுகிறது. ஆபிராம் தன்னை அழைத்தவரை முற்றிலும் அறிந்தபடியால், அவர் தாமே தஞ்சமென்று தன்னை அர்ப்பணிக்கின்றார். உலகனைத்திற்கும் ஆசியாகத் திகழ்கின்றார்.

ஆபிராம் தன் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்திற்கும் இறைவரே ஆதாரம் என்பதைப் புரிந்து, இறைவரிடம் தன்னைத் தருகின்றார். நம்பிக்கை கொண்ட ஆபிராம் பெற்ற அதே ஆசியில், நம்பிக்கை கொள்வோரும் பங்கு பெறுவர் (கலா 3:9). நாமும் அத்தகைய ஆசிகளின் பங்காளிகளாகி பிறருக்கு ஆசியாக வாழ வேண்டுமென்பதே இறைவிருப்பம். (உரோ 4:5) நாமும் நம் வாழ்வின் பயணத்தில் இறைவனை அண்டிக் கொள்ளும் போது, நம் வாழ்வும் பணிகளும் நம் உடன் வாழும் அனைவருக்கும் ஆசியாக மாறும்.

### *2. ஆண்டவரைப் பின்பற்றுவதற்கான அழைப்பு* :

காற்று அடிக்கும் திசையில் படகைச் செலுத்தி பயணம் மேற்கொள்வது மனிதப் பண்பு. ஆனால் இறைவர் எதிர் காற்றினுடேயும், எதிர்பாராத திருப்பங்களையும் ஏற்படுத்தி வாழ்வின் பயணத்தை மாற்ற வல்லவர். யோவான் நற்செய்தி நூல் இறைமகன் இயேசு கிறிஸ்து சீடர்களை அழைத்து அருள்பணியில் பங்காளிகளாக இணைத்ததைச் சுட்டிக் காட்டுகின்றது. இறைப்பணியில் சீடர்கள் எவ்வித மறுப்பும்,

நிபந்தனையுமின்றி உண்மையை அறிந்து உணர்ந்தவுடன் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல அர்ப்பணித்த நிகழ்வு அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

யோவான் 1:35-51 வரை உள்ள பகுதியில், தேடலோடு நின்றவர்கள் மேசியாவைக் கண்டு கொண்டார்கள். சீடர்களின் தேடலைப் புரிந்து கொண்டவர் "என்ன தேடுகிறீர்கள்?" என வினவுகிறார் (யோவா 1:38). வினவியதோடு விடவில்லை, "வந்து பாருங்கள்" என அறைகூவல் கொடுத்து உடன் அழைத்துச் செல்கிறார். வந்தவர், பார்த்தவர் 'மெசியாவைக் கண்டோம்' என்று பறைசாற்றுகின்றனர் (யோவா 1:41). "என்னைப் பின்பற்றி வா" என (யோவா 1:43) என பிலிப்புவிற்கு அறைகூவல் கொடுத்து அழைத்தவர், அவரைக் கருவியாக்கி எதிர்பார்த்த மேசியா வந்து விட்டார், "வந்து பாரும்" என்று நத்தனியேலுக்கு அறைகூவல் கொடுத்து அவரையும் இயேசுவின் அடிச்சுவட்டில் நடைபயிலச் செய்தார்.

தேடலோடு நின்றவர்களின், மேசியாவைக் கண்ணார கண்டவர்களின், இறை சத்தத்திற்குக் கீழ்படிந்தவர்களின் வாழ்வின் பயணம் மாறுகின்றது. புதிய திசை நோக்கிப் பயணிப்போம் என்று தீர்மானம் செய்கின்றார்கள். இயேசுவோடு பயணிப்போமென்று உறுதி ஏற்கின்றார்கள். இறைவனின் அருள்பணியில் பங்காளிகளாக இணைகின்றார்கள். இறைவனின் விருப்பம் நிறைவேற்றும் போது, இறைவரே நம் வாழ்வின் பயணத்தை மாற்றுகின்றார். சாதாரணமானவர்களையும், அசாதாரண மனிதர்களாக மாற்றுகின்றார். வாழ்வின் இறுதிவரை நாம் அனைவரும் பயணிகள், வழிப் போக்காகள், விண்ணகம் நோக்கிப் பயணிக்கும் பயணிகள் (எபி 11:13-16, 1பேது 1:17; 2:11). இப்பயணத்தில் ஆபிராம் போன்று இறைவழியில் நடப்போம், சீடர்களைப் போன்று இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம். இறைவன் நம் வாழ்வின் பயணத்தில் உலகிற்கு ஆசியாக, அசாதாரண செயல்களை நிறைவேற்றுபவர்களாக நம்மை மாற்றுவார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

# உள்ளான மனிதரில் முதிர்ச்சியடைதல்

**MATURING INTERNALLY**

எபே 3:14-21 லூக் 2:41-52

**"நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்"** (யோவா 15:4).

முதிர்ச்சியின் பாதையில் நம் உள்ளங்கள் கிறிஸ்துவில் பண்படும்போது அன்பு வாழ்வின் ஆதாரமாக மாறுகிறது. கிறிஸ்து காட்டிய முதிர்ச்சி வாழ்வின் உயர் பண்புகள் நம்மில் வெளிப்படும். முதிர்ச்சிக்கு நேரான பாதையில் ஒரு குழந்தை சமூக (Social), உடல் சார்ந்த (Physichal), அறிவார்ந்த (inteltectual), அழகுணர்ச்சி சார்ந்த (Aesthetic), உளவியல் ரீதியாக (Psychological) எனப் பல பரிமாணங்களில் வளர வேண்டும். அதுவே முதிர்ச்சியை நோக்கிய முழுமையான வளர்ச்சி எனலாம். எபே 3:18,19இல் கடவுளின் முழுநிறைவை நாம் பெற்றுக்கொள்வதற்கான வழியை, தூய பவுலார் கற்றுத் தருகின்றார். அதைக் குறித்துத் தியானிப்போம். நமது உள்ளில் கிறிஸ்து குடிக்கொண்ட உள்ளம் வலுப்பெறும் போது, அன்பென்னும் ஆணி வேர் வாழ்வில் அடித்தளமாக மாறுகிறது.

### *1. அன்பே முதிர்ச்சிக்கு ஆதாரம்* : (எபே 3:16,17)

விண்ணகத்திலும் மண்ணகத்திலும் உள்ள முழுக் குடும்பத்திற்கும் தந்தையாகிய இறைவரிடம் தூய பவுலார் ஏறெடுக்கும் மன்றாட்டில், முதிர்ச்சிக்கு நேரான பாதையில் 'உள்ளத்திற்கு வல்லமையும், ஆற்றலும் தம் தூய ஆவி வழியாகத் தந்தருள்வாராக' (எபே 3:16) என்கிறார். நம் உள்ளம் வலுப்பெற்று இறை நம்பிக்கையில் வேர்கொண்டு வளர ஆண்டவரை வேண்டுகிறார். இவ்வேண்டுதலில் நம் உள்ளம் கிறிஸ்துவில் வலுப்பெறும் போது, கிறிஸ்து நம் உள்ளங்களில் குடிகொள்ளும்போது அன்பு நம் வாழ்வின் ஆதாரமாக மாறும். இவ்வன்பின் பிரமாணம் நம் உள்ளத்தில் பிரவாகித்து வரும்போது, உள்ளான இயல்பு புதிதாக்கப்படும் (2கொரி 4:16) என்கிறார்.

முதிர்ச்சியை நோக்கிய முயற்சியில் உள்ளான மனிதன் பண்பட கிறிஸ்துவே நம் உள்ளத்தில் வாழ வேண்டும். அவ்வாறு அவர் நம் உள்ளில் வாழும் போது அன்பே வாழ்வின் ஆதாரமாகத் திகழும். உறவு நிலைகளில் பகைமை, பொறாமை, பிரிவினை போன்றவை மறைந்து ஒப்புரவும் அமைதியும், நலவாழ்வும் உருவாகும். நம் உள்ளில் குடிக்கொண்டிருக்கும் அன்பு விட்டுக்கொடுக்கும், ஏற்றுக்கொள்ளும், உறவு நிலைகளின் தேக்க நிலையைச் சரிசெய்யும்.

திருமறையில் ஆண்டவர் அன்புள்ளவர், இரக்கம், பரிவு, நம்பிக்கை, மன்னிப்பு, எல்லாம் காட்டி பேரன்பு செய்பவர், சினம்கொள்ளத் தயங்குபவர், அவர் கொடுமையையும், குற்றத்தையும் மன்னிப்பவர் (விப 34:8). எனப் படிக்கிறோம். தூய பவுலார் ‘அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன்’ என்கிறார். இறையன்பு நம்மை மீட்கும் அன்பு. அது சிலுவையில் வெளிப்பட்டது (லூக் 1:4; 1திமொ 1;2:3, தீத்து 1:3; 3:4; யூதா 1:25). அத்தகைய இறையன்பு பிறரன்பில் வெளிப்பட வேண்டும். இறையன்பு (divine love) இறையருளால் (Grace) நம்முள் ஊற்றப்படுகிறது. அந்த இறையன்பு நம்மில் தன்னலமற்ற அன்பாக (agape), வாழ்வாக மாற்றம் பெறுகின்றது. நம் வாழ்வில் அன்பு என்பது இறையன்பு பிறரன்பு என்கிற சமன்நிலையில் வெளிப்பட வேண்டும்.

முதிர்ச்சிக்குரிய பண்புகள் நம்மில் வெளிப்பட கிறிஸ்துவுக்கு நாம் உள்ளத்தில் இடம் கொடுத்து நம் வாழ்வுக்கு அன்பே ஆணிவேராகவும், அடித்தளமாகவும் மாற வேண்டும். நாம் வாழும் சூழல்களில் மனிதனின் முதிர்ச்சியற்ற செயல்களால் உறவுவில் விரிசல்கள், குழு மனப்பான்மை, பிளவுகள், சாதி சமயச் சண்டைகள், கணவன்-மனைவி உரசல்கள் பெருகின்றன. இவைகளை நாம் கூர்ந்து நோக்கினால் உணர்வுகள் (Feelings) மற்றும் உணர்ச்சிகளை (emotions) மையமாக வைத்தே இச்செயல்கள் சமூகத்தில் வெளிப்படுகின்றன. இது முதிர்ச்சியற்ற நிலையின் வெளிப்பாடு. நாம் செய்கிற செயல்களில் பெரும்பான்மையானவை உணர்வை மையமாக வைத்தே இருக்கின்றன. ஜான் பி. வாட்ஸன் என்கிற உளவியலாளர் உணர்வுகளை அன்பு, கோபம், பயம் என்று மூன்று முதன்மை உணர்வுகளாகப் பிரித்துக் காண்பிக்கிறார். அன்பு என்கிற முதன்மை உணர்விலிருந்து எல்லாவித நேர்மறை மற்றும் ஆக்கப்பூர்வ உணர்வுகள் வருவதாகவும், கோபம் பயம் என்கிற முதன்மை உணர்வுகளிலிருந்து பெரும்பாலும் அழிவுக்குரிய உணர்வுகள் தோன்றுவதாகவும் கூறுகிறார்.

அறிவுக்கு எட்டாத இந்த இறையன்பு நம் உள்ளத்திலும், செயல்களிலும் குடிகொண்டு பிறரன்பில் அது வெளிப்படட்டும்.

### ***2. ஆண்டவரே முதிர்ச்சிக்கு மாதிரி*** : (லூக் 2:52)

இயேசுகிறிஸ்துவின் முதிர்ச்சிக்கு நேரான பாதையில் அவரது இல்லம், இறைஇல்லம், இறைப்பணியாளர்கள், அவரது பெற்றோர், இறைத்தேட்டம், கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நாட்டம், அவர் வாழ்ந்த காலத்தின் வாழ்வியல் சூழல்கள் அவரைப் பண்படுத்தின. அவரின் முதிர்ச்சின் வளர்ச்சியை லூக்கா குறிப்பிடும் போது குழந்தையும் வளர்ந்து

வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது (லூக் 2:40), இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் (லூக் 2:52) என்கிறார். அவரின் முதிர்ச்சிக்கு நேரான பாதையில் பெற்றோரின் ஈடுபாடு, குறிப்பாக விசுவாச வாழ்வையும், திருச்சட்டங்களின் உண்மைகளையும் கற்றுக் கொடுத்தனர். அவரை 12 வயது நிரம்பிய நிலையில் யூத ஒழுங்கின்படி பாஸ்காவிழாயின் போது இறைஇல்லம் அழைத்துச் சென்றனர். போதகர்களுடன் அவர் விவாதிப்பதைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர்.

அடுத்து அவரின் முதிர்ச்சிக்கு நேரான பாதையில் இறைப்பணியாளர்களின் பங்கு. போதகர்கள் நடுவில் அமர்ந்து...கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தார் (லூக் 2:46). இறைப்பணியாளர்கள் சிறுவனென்று அதட்டவில்லை, பேச அனுமதித்தனர், இருவழி தொடர்பு நிலையைத் தொடர ஊக்கம் தந்தனர்.

அடுத்து அவரின் முதிர்ச்சிக்கு நேரான பாதையில் இறைத்தேட்டமும், கற்றுக்கொள்ள வேண்டிய நாட்டமும் அவரைப் பண்படுத்தின எனலாம். ...எருசலேம் சென்றார் "...எருசலேமில் தங்கிவிட்டார்,...கோவிலில் அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார். நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா?" (லூக் 2:41,42,46). அவரின் இறை இல்லத்தை குறித்த தேட்டம், இறைத் தேட்டம், கற்றுக்கொள்ள வேண்டிய நாட்டமும் அவரை முதிர்ச்சிக்கு நடத்தியது.

இவையெல்லாவற்றிக்கும் மேலாக இறையளும் கடவுளுக்கு உகந்த வாழ்வும் அவரை முதிர்ச்சிப் பாதையில் நடத்தியது. இறைமகன் இயேசு நம் விசுவாச வாழ்வின் முதிர்ச்சிக்கு மாதிரியாகி நிற்கிறார். அவரது முதிர்ச்சிக்கு இறையருள், அவரது இல்லம், இறைப்பணியாளர்கள், இறைத்தேட்டம், கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நாட்டம் ஆகியவை காரணமாயிற்று.

நம் விசுவாச வாழ்வில் அநேக தருணங்களில் முதிர்ச்சியற்ற பண்புகளையே வெளிப்படுத்துகின்றோம். தூய பவுலார் "சிந்திப்பதில் நீங்கள் சிறுபிள்ளைகள் போல் இராதீர்கள். தீங்கு செய்வதில் குழந்தைகள் போலவும் சிந்திப்பதில் முதிர்ச்சி அடைந்தவர்கள் போலவும் இருங்கள்" (1கொரி 14:20) என்கிறார். நம் ஆண்டவர் காட்டிய முதிர்ச்சியின் பாதையில் பயணிப்போம், உள்ளான மனிதரில் முதிர்வடைவோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

# ஓருடலாக உருவாதல்

## FORMING ONE BODY

கொலோ 3:12-17 யோவா 13:1-15; 34-35

**"நான் உங்களிடம் அன்புகொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும்"** (யோவா 15:12)

கொலோசை நகரத்திற்கு பவுல் எப்பப்பிரா மூலம் நற்செய்தி அறிவிக்கின்றார் பல்வேறுபட்ட போதனைகளின் தாக்கத்தால் சீர்குலைந்து வாழ்ந்த கொலோசை நகர மக்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்த தெளிவைப் பெற எப்பப்பிரா நற்செய்தியைப் போதிக்கின்றார். இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அவருடைய அன்பிற்குரியவர்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வழிமுறைகள் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. மானிட வாழ்வில் கிறிஸ்துவோடு ஒன்றித்து ஓர் உடலாய் வாழ சிலவற்றை நம் வாழ்வில் நிலைநாட்ட வேண்டியது அவசியமானது. அவைகள் பொறுமை மன்னித்தல், அன்பு கொண்டிருத்தல் கிறிஸ்துவின் அருளாலும் அமைதியாலும் உள்ளங்களை நெறிப்படுத்துதல், நன்றியுள்ளவர்களாய் இருத்தல், கிறிஸ்துவாகிய நற்செய்தியை உள்ளத்தில் குடிகொள்ளச் செய்தல், முழு உளத்தோடு ஒருவரை ஒருவர் கற்பித்து. அறிவுரை கூறுதல், திருப்பாடல்களையும் புகழ்ப்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப்பாடி கடவுளைப் புகழ்தல் அனைத்தையும் ஆண்டவரின் பெயரால் செய்தல், இவை அனைத்தும் ஒருடலாய் வாழ நமக்கு உதவுகின்றன. இத்தனை தன்மைகளையும் தன்னகத்தே எடுத்துக்கொண்டு இவ்வுலக வாழ்வில் வெளிப்படுத்த வேண்டியது கட்டாயமானது. ஓருடலாக உருவாக நாம் என்ன செய்யவேண்டும் என்பதைத் திருமறை வழி தியானிப்போம்.

### ***1. உன்னதருடன் இணைதல்*** : (யோவா 6:56)

இணைதல் என்பது ஒன்றித்தல் என்ற பொருளாக்கத்தைத் தருகிறது. எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன் என்று ஆண்டவர் கூறுகிறார். யோவா 15:4இல் நான் உங்களோடு இணைந்திருப்பதுபோல நீங்கள் என்னோடு இணைந்திருங்கள் என்கிறார். இணைந்திருந்தால் மிகுந்த கனியுள்ள வாழ்வை வெளிப்படுத்த முடியும் என்பதை இயேசு கிறிஸ்துவின் கூற்று நமக்கு உணர்த்துகிறது. இக்காலச் சூழலில் கிறிஸ்துவில் ஒன்றித்து ஒருடலாக உருவாக நம்மைச் அர்ப்பணிப்போம்.

**2. *உன்னத அறத்தை காத்தல்*:** (கொலோ 3:14)

அனைத்துக்கும் மேலாக அன்பைக்கொண்டிருங்கள். கிறிஸ்தவ வாழ்வில் அன்பில் நிலைகொண்டு வாழ்வது, இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையரசின் தகவுகளான வாழ்வாகும். ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்பது, தன்னைபோல் பிறரை நேசிப்பதாகும். இப்படிப்பட்ட உன்னதமான அறம் சார்ந்த வாழ்வுதான் மேன்மையின் வாழ்வாகும். உரோ 13:10இல் அன்பு திருச்சட்டத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. வேற்றுமையில்லாத வாழ்க்கை வாழவும் கிறிஸ்துவில் வேர்கொண்டு நம்மைக் காத்து வாழவும் நம்மை இறைக்கரங்களில் ஒப்படைப்போம்.

பரிவு, இரக்கம், நல்லுள்ளம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் அணி செய்வோம். ஒருடலாக உருவாக்கம்பெற இயேசுகிறிஸ்துவோடு ஒன்றித்து நம்மை அர்ப்பணிப்போம்.

சுவி. J. **பிரபின் செல்வமணி**

# இணைந்து மன்றாடுதல்

## PRAYING TOGETHER

உரோ 8:26,27 லூக் 11:1-4

**"என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்."** (யோவா 15:15b).

மன்றாட்டு அல்லது இறைவேண்டல் என்றால் என்ன? என்று கேட்டுப் பார்ப்போமென்றால் பல அனுபவம் சார்ந்த பதில்கள் வெளிப்படுகின்றன. பிரபலமான அறிஞர் ஒருவர் இவ்விதமாக சொன்னார். "Prayer is the secret communication between man and God" இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் தொடர்புதான் இறைவேண்டல். மகிழ்ச்சியோடு இருக்க மருந்து ஜெபமே என்றார் மற்றொருவர். முழங்கால் நடுங்குகையில் முழந்தாளிடு என்று இறைவேண்டலின் தேவையை உணர்த்துகிறார் இன்னொருவர். மேற்கூறியவை அனைத்தும் இறை மன்றாட்டைக் குறித்த பல பற்றுறுதியாளர்களின் அனுபவம். மன்றாட்டை இரண்டு பேருக்கு மேற்பட்டோர் இணைந்து மன்றாடுதல் அதிக பெலனுள்ளதாக இருக்கிறது. எனவே தான் உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்றுபேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் (மத் 18:19,20) என இறைவன் உறுதி கூறுவதாகத் திருமறை கற்பிக்கிறது. இங்கு இணைந்து மன்றாடுவதினால் உண்டாகும் நன்மைகளை நாம் காணுவோம்.

### *1. கடவுளுக்கு உகந்த முறையில் மன்றாடுதல்* :

(உரோ 3:26,27)

மனிதர்களாகிய நமக்கு எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்பது தெரியாது. இரண்டு பேருக்கு மேற்பட்டோர் இணைந்து சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காக பரிந்து பேசுகிறார். இணைந்து மன்றாடுதலில் தூய ஆவியாரும் இணைகிறார் என்பது திருமறை நமக்கு கற்றுத்தரும் பாடம். மேலும் இணைந்து மன்றாடும்போது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள்

முன்னிலைப்படுத்தப்படாமல் ஒரு குழுவின், சமூகத்தின், நாட்டின், அல்லது கூட்டமைப்பின் தேவைகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. இது கடவுளுக்கு உகந்த ஒரு செயல். திருத்தூதுவர் பவுலும் திமொத்திக்கு கற்றுக் கொடுக்கும்போது அனைவருக்காகவும் மன்றாடுங்கள். ஏனென்றால் கடவுள் ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளராகிய இயேசு கிறிஸ்து அனைவரின் மீட்புக்காகத் தம்மையே ஈடாகத் தந்தார். எனவே சினமும் சொற்பூசலும் இன்றி எவ்விடத்திலும் தூய உள்ளத்தோடு கைகளை உயர்த்தி இறை வேண்டல் செய்ய வேண்டும் (1திமொ 2:1-3) என்று கூறுகிறார். ஆக இணைந்து மன்றாடுவதே கடவுளுக்கு உகந்த மன்றாட்டாகும்.

## *2. கடவுளின் கூட்டொருமையை உணர்தல்* :

நாம் நம்பும் கடவுள் தந்தை, மைந்தன், தூய ஆவியாரின் மூன்று நிலைகளில் உள்ளார். இதனைத் திரித்துவம் என அழைக்கிறோம். மைந்தனாகிய இயேசு கிறிஸ்து தம் தந்தையிடமிருந்து கேட்டவை அனைத்தையும் தம் நண்பர்களென அழைக்கும் தன் பணியாளருக்கு தெரிவிக்கிறார் (யோவா 15:15). இங்கு தந்தைக்கும், மைந்தருக்கும் இயேசு கிறிஸ்துவுக்குமுள்ள கூட்டொருமையை உணரலாம். நமக்கு வேண்டிக்கொள்ளும் விதத்தை லூக்கா 11:1-4-இல் கற்றுத்தரும் ஆண்டவர் கடவுளைத் தந்தையே என அழைக்கக் கற்றுத் தருகிறார். இதன் வழி இணைந்து மன்றாடுவோர் அனைவரும் ஏற்றத் தாழ்வற்ற உடன்பிறப்புகள் என்ற சமநிலை மற்றும் கூட்டொருமை வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் எப்படி வேண்டுதல் செய்வது எனத் தெரியாத இறைமக்கள் வேண்டும்போது தூய ஆவியாரும் அவர்களோடு இணைந்து அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறார் (உரோ 8:26). சொல் வடிவம் பெறாத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார். எனவே நாம் இணைந்து மன்றாடுவோம். அனைவருக்காக மன்றாடுவோம். நன்மைகளை சுதந்தரிப்போம்.

அருள்திரு. G. **சாம் ரிச்சர்ட் நெல்சன்**

# இறைவார்த்தையால் மாற்றுருவாக்கம்பெற ஒப்படைத்தல்

**LETTING ONESELF BE TRANSFORMED BY THE WORD**

இச 30:11-20 மத் 5:1-12

**"நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்."** (யோவா 15:3)

மகாத்மா காந்தி தகவல் பரிமாற்றத்திற்காகத் தன் நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவதை வழக்கமாக வைத்திருந்தார். தன் நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ள செய்திகளை சில நேரங்களில் துண்டுத் தாள்களிலும், ஒரு பக்கம் பயன்படுத்தப்பட்ட காகிதங்களிலும் எழுதிக் கொடுத்தனுப்புவார். ஒருமுறை அவருடைய நண்பர்கள் அவரை அணுகி, நீங்கள் நம் நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் தலைவர். நாட்டின் விடுதலைக்காக எந்நேரமும் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். அகிம்சை வழியில் நீங்கள் போராடுவதை உலகமே வியந்தோதுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆளுமையான உங்களிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வருகிறதென்றால் அது எங்களின் நற்பேறு. ஆனால், உங்களைக் குறித்து ஒரு வருத்தம் எங்களுக்கு உண்டு. நீங்கள் எங்களுக்குக் கடிதம் எழுதும்போது துண்டுத் தாள்களிலோ அல்லது ஒருபக்கம் பயன்படுத்தப்பட்ட காகிதங்களிலோ எழுதி அனுப்புவதை வழக்கமாக வைத்திருக்கிறீர்கள். அதற்குப் பதிலாக நல்ல தாளில் எழுதி அனுப்பினால் அக்கடிதத்தைப் பெருமிதத்தோடு பொக்கிஷமாக வைத்திருப்போம் அல்லவா என்று கேட்டனர்.

காந்தி சொன்னார், காகிதம் முக்கியமன்று; அக்காகிதத்தின் வழியாக நான் உங்களுக்குச் சொல்லும் செய்தியே முதன்மையானது. காகிதத்திற்குத் தரும் முதன்மையை, மதிப்பை அதன் கருத்திற்கு, அதில் சொல்லப்பட்டிருக்கும் செய்திக்குத் தாருங்கள். அதுவே என் பார்வையில் சிறந்தது எனப் பதிலளித்தார்.

கடவுள் தமது இயல்பை, பெருநோக்கை, திருவிருப்பத்தை, காலத்தால் அழியாத தமது வார்த்தையின் வாயிலாக மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தும் ஊடகமாகத் திருமறையைத் தந்துள்ளார். தலைமுறைத் தலைமுறையாகக் கடவுள் தமது வார்த்தையின் வழியாக மனுக்குலத்தோடு உரையாடிக் கொண்டே இருக்கின்றார். அவரது வார்த்தையின் வாயிலாகத் தூய்மையாக்குகின்றார் (யோவா 15:3). ஆகவே, இறைவார்த்தை நம்மைத்

தூய்மையாக்கவும் நல்ல மாற்றங்களை நம்மிலே உருவாக்கவும் நம்மை ஒப்படைக்க வேண்டும். இறைவார்த்தை நம்மிலே உருவாக்கும் மாற்றங்கள் என்ன என்பதைக் குறித்துத் தியானிப்போமாக.

***1. மாசகற்றும் இறைவார்த்தை***: (இச 30:11-20)

திருமறையில் இறைவார்த்தையைப் பற்றியும், அதைக் கடைபிடித்தொழுகுவதன் முதன்மையைக் குறித்தும், அதுவே இவ்வுலகில் நம்மை மாசற்றவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் திகழச் செய்யும் என்பதைப்பற்றியும் அதிகமாக வலியுறுத்தும் ஒரு புத்தகம் இணைச்சட்ட நூலாகும் (உபாகமம்). இஸ்ரயேலரின் பாலைநிலப் பயணத்திற்குப் பின்னும், கடவுளால் உறுதிமொழியைப் பெற்று கானான் நாட்டிற்குள் நுழைவதற்கு முன்னும் அவர்களுடைய அன்றாட வாழ்வின் வழித்தடமாக இருப்பதற்காகக் கடவுள் மோசேயின் வாயிலாக அவர்களுக்கருளிய இறைவார்த்தைகளின் தொகுப்பே இப்புத்தகமாகும். குறிப்பாக, இச 30:11-20 வரையுள்ள பகுதியில், இறைமக்கள் தடுமாறி இடறி விழுகிற கேட்டுக்கான வழியை அன்று; என்றும் நிலைத்திருப்பதற்கான வாழ்வின் வழியைத் தேர்ந்துகொள்ள தமது வார்த்தையின் வாயிலாக விளக்குகின்றார்.

இறைவார்த்தை உங்களுக்குப் புரியாததாகவோ, வெகுதொலைவிலோ, விண்ணிலோ இல்லை. நீங்கள் அதை நிறைவேற்றுமாறு வார்த்தை உங்களுக்கு மிக அருகில் உள்ளது; உங்கள் வாயில், உங்கள் இதயத்தில் உள்ளது (இச 30:11-15) என அவரது வார்த்தையைப் பின்பற்றி வாழ்வின் மாசுகளை அகற்ற அழைப்பு விடுக்கிறார்.

இன்று மனிதர்கள் வாழ்வில் குற்றங்களுக்கு ஆட்படுவதற்கும், வழியில் தடுமாறி விழுவதற்கும், திசைகெட்டு அலைவதற்கும் காரணம் இறைவார்த்தையை அணுகாததும், அதை வாழ்வின் அடித்தளமாகக் கொள்ளாததுமாகும். இவ்வளவு நுணுக்கமாக, நெஞ்சுக்கு நெருக்கமாக இறைவார்த்தை நமக்கு அருளப்பட்டிருந்தும் அதற்குச் செவிகொடாமற்போகிறோம். ஏனெனில், நம்மில் பலர் திருமறை காட்டும் திசையில் பயணிப்பதைவிட, தாங்கள் விரும்பும் திசையில் பயணிக்க திருமறை வழிகாட்ட வேண்டும் என்று விரும்புகிறார்கள் (Many people want the Bible to point the direction. they want to go rather than the direction the Bible wants them to go). இதுவே நாம் பாவத்தில் விழுவதற்கும், பாதையில் இடறுவதற்கும் காரணமாகிவிடுகிறது. மாறாக, இறைவார்த்தையின் அடியொற்றி நாம் நடந்தால் மாசு நம்மை அணுகாது; தூய்மை நம்மைவிட்டு அகலாது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து உரைத்த திராட்சைச்செடி உவமையில், கனிதரும் அனைத்துக் கிளைகளையும், தந்தையானவர், மிகுந்த கனி தருமாறு கழித்து (தூய்மையாக்குவது, சீர்செய்வது, பழுது நீக்குவது) விடுவதுபோல, அவரது வார்த்தை மாசுமறுவகற்றி தம் அடியவர்களைத் தூய்மையாக்குகிறது எனக் கற்பிக்கிறார் (யோவா 15:2,3). தன்னில் தானே தூய்மையானதும், பிறரையும் மற்ற எல்லாவற்றையும் தூய்மையாக்கக் கூடியதுமான ஒன்று இறைவார்த்தை என்பதை உணர்ந்து மாசுநீங்ககி, தூய்மையாக வாழ இறைவார்த்தைக்குச் செவிகொடுப்போம்.

***2. மாற்றுருவாக்கும் இறைவார்த்தை*:** (மத் 5:1-12)

இயேசுகிறிஸ்து மலைப்பொழிவின் வாயிலாக நாம் பயணிக்க வேண்டிய பாதையை அடைய வேண்டிய இலக்கை, நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் பொருளை, உண்மையை நமக்குத் தெரிவித்திருக்கிறார். அவரது மலைப் பொழிவின் வார்த்தைகள் காலந்தோறும் நமது பெலவீனங்களை நமக்கு அடையாளம் காட்டுகிறது; வாழ்வின் இருண்ட பக்கங்களை வெளிச்சமாக்குகிறது; மறைக்கப்பட்ட இரகசியங்களை வெளிக்கொணருகின்றது. கிறிஸ்து அவருடைய மலைப்பொழிவில் ஒழுக்க நெறிகளை மட்டுமல்ல; நமது நம்பிக்கையைக் கிளர்ந்தெழச் செய்யும் பண்புநலன்களைப் பட்டியலிட்டுள்ளார் எனக் கிறிஸ்துவின் மலைப்பொழிவைக் குறித்து மகாத்மா காந்தி கூறியுள்ளார்.

அநீதிகளும், அடக்குமுறைகளும், ஏகாதிபத்தியமும், அதிகாரவெறியும் கொண்ட உரோமை அரசாட்சிக்கு எதிராக நல்லுறவை, தியாகத்தை, அறத்தை, அன்பை மையப்படுத்தி, தமது வாயிலாக மாற்றுருவாக்கம் பெற்று மீள்உருவாகும் புதிய சமூகத்தின், மானிடத்தின் தகவுகளாக இயேசு கிறிஸ்து மலைப்பொழிவில் கூறியதை மத்தேயு 5,6,7 ஆகிய அத்தியாயங்களில் பட்டியவிட்டுள்ளார்.

சிறப்பாக மத் 5:1-12 வரையுள்ள பேறுபெற்றோர் திருமொழிகளில் (பாக்கிய வசனங்கள் - Beatitudes) தனிமனிதரை, சமூகத்தை, திருச்சபையை, நாட்டை மாற்றுருவாக்கும் ஆற்றல்படைத்த வாழ்வுநெறிகளை ஆண்டவர் கற்பிக்கின்றார்.

மத் 5:1இல், இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர்ந்து கற்பித்தது, மோசே சீனாய் மலையில் பத்துக்கட்டளைகளைப் பெற்றதையும் (விப 19:3). ....“புறப்படுங்கள், ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்; யாக்கோபின் கடவுளது கோவிலுக்குப் போவோம்; அவர்தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்; நாமும் அவர் நெறிகளில் நடப்போம்” என்ற மீக்கா மற்றும் எசாயாவின் இறைவாக்கையும் நினைவுப்படுத்துவதாய் உள்ளது (மீக் 4:2; எசா 2:3).

மேலும், மத்தேயு 5:2இல், அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை (He began to speak and taught them) என்னும் சொற்றொடர் ஆழ்ந்த பொருளுடையது. இச்சொற்றொடர் கடவுளின் பதிலாளாக, அவருடைய வார்த்தையை உரைக்கும், கற்பிக்கும் செயல்பாட்டைக் குறிக்கின்றது. குரு ஒருவர் தன் இதயத்தின் ஆழத்திலிருந்து, தாம் வாழ்வில் கடைப்பிடிப்பவற்றை மக்களுக்குக் கரிசனையுடன் கருத்தாய்க் கற்பிப்பதையும் இச்சொற்றொடர் குறிக்கின்றது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து இவ்வுலகை மாற்றுருவாக்கம் செய்ய வந்த கடவுளின் வாக்கு. அவர் தமது மலைப்பொழிவின் வாயிலாக மானிடத்தை மாற்றுருவாக்கும் வார்த்தைகளைக் கற்பிக்கின்றார். அநீதியான உலக அரசாட்சிக்கு, எதிராக நீதியையும், அமைதியையும், இரக்கத்தையும், சாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்ட, அனைவரையும், அனைத்தையும் மாற்றுருவாக்க வல்ல இறையாட்சியின் விழுமியங்களை விளக்குகின்றார். தம்மில் உருவாகும் புதிய மானிடத்தில் பங்கேற்க மலைப்பொழிவின் வாயிலாக நமக்கு அழைப்பு விடுக்கின்றார். அவ்வழைப்புக்குச் செவிகொடுக்க வேண்டியது நமது கடமை.

புதிய ஆண்டில் நுழைந்திருக்கின்றோம். இப்புதிய ஆண்டில் நம் வாழ்வு, குடும்பம், திருச்சபை இறைவார்த்தையால் புனரமைக்கப்படவும், மாற்றுருவாக்கம் செய்யப்படவும் நம்மை ஒப்படைப்போம். சோரன் கிர்ககார்ட் சொல்வதைப்போல, "நீங்கள் இறைவார்த்தையைப் படிக்கும்போது, இறைவார்த்தை என்னிடம் பேசுகிறது; என்னைப் பற்றிப் பேசுகிறது என உங்களுக்கு நீங்களே தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்" (When you read God's word, you must constantly be sayin to yourself, "It is talking to me and abougt me"). என்பதை நினைவில் கொள்வோம். கடவுள் அவரது வார்த்தையால் நம் வாழ்வின் மாசுகளை அகற்றி, நம்மை மாற்றுருவாக்கம் செய்ய அவர் கையில் நம்மை ஒப்படைப்போம். தூய ஆவியார் அதற்குத் துணை செய்வாராக!

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

நாள் 6 வார இறைவேண்டல்

# பிறரை வரவேற்றல்
## WELCOMING OTHERS

தொநூ 18:1-5 மாற் 6:30-44

**"நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்."** (யோவா 15: 16b)

யூத ரபி ஒருவர் தன் மாணவர்களிடம் எப்போது இரவு(இருள்) முடிந்து பகல்(ஒளி) தொடங்குகிறது என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்வது? என்று கேட்டார்.

ரபி, நான் துயிலெழுந்ததும் விளைநிலங்களை உற்றுநோக்குவேன். எப்போது என்னுடைய விளைநிலத்திற்கும், பிறருடைய விளைநிலத்திற்குமான வேறுபாட்டை நான் உணருகின்றேனோ, அப்போது இரவு முடிந்து பகல் தொடங்குகின்றது என முதலாவது மாணவர் கூறினார். இப்பதில் ரபிக்குத் திருப்தியளிக்கவில்லை.

இரண்டாமவர் சொன்னார், நான் வைகறையில் எழுந்ததும் எனது வீட்டுக்கும், எனக்கு அடுத்திருப்பவரின் வீட்டுக்கும் இடையேயான வேறுபாட்டை நான் எப்போது காண்கிறேனோ அப்போது இரவு முடிந்து பகல் தொடங்குகிறது என்றார்.

இது பொருத்தமான பதிலில்லை எனத் தலையசைத்தார் ரபி.

மூன்றாமவரோ, ரபி, நான் தொலைவிலிருந்து ஒரு விலங்கைப் பார்க்கும்போது, அது என்ன வகையான விலங்கு? அதாவது அது குதிரையா? அல்லது கழுதையா? அல்லது ஆடா என்பதை என்னால் வேறுபடுத்திக் கண்டறிய முடியுமானால் அப்போது இரவு முடிந்து பகல் தொடங்குகிறது எனப் பதிலளித்தார்.

தன் மாணவர்கள் சரியாகப் பதிலளிக்கவில்லை என்கிற வருத்தத்தோடு ரபி இப்போது பேசத் தொடங்கினார். உங்களில் ஒருவரும் வாழ்வைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. நீங்கள் வேறுபடுத்தி மட்டுமே பார்க்கிறீர்கள். உங்கள் விளைநிலங்கள் பிறருடைய விளைநிலங்ளை விட சிறந்தது என, உங்கள் வீடு மற்றவர்களின் வீடுகளை விட மேலானது என, ஒரு விலங்கை மற்ற விலங்குகளிடமிருந்து என எல்லாவற்றையும் வேறுபடுத்தி, பிரித்துப் பார்க்கிறீர்கள். வேறுபாடுகளைக் காணுதல், அந்நியப்படுத்தல், உலகைத் துண்டாக்குதல் என இவை மட்டும்தான் உங்களால் செய்ய முடிந்தவையா? இவ்வளவு மட்டும் உலகை உடைத்துப்

போட்டது போதாதா? இதுவரைக்கும் உலகைத் துண்டு துண்டுகளாகச் சிதைத்தது போதாதா? இதைத்தான் இறைவாக்கு உங்களுக்கு கற்பிக்கின்றதா? கடவுள் உங்களுக்குக் காட்டிய வழி இதுதானா?

மாணவர்கள் ரபியின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்டு வருந்தினர். பின்னர் ரபியிடம், இரவு முடிந்து பகல் தொடங்கிவிட்டது என்பதை நாங்கள் எவ்வாறு அறிந்து கொள்வது? என்று கேட்டனர்.

இப்போது ரபி சாந்தத்தோடு மென்மையாகப் பதிலளித்தார். உங்கள் அடுத்திருப்பவரின் முகத்தைக் காணும் போது உங்கள் சகோதர சகோதரிகளின் முகத்தை அவர்களிடம் பார்க்க முடிகிறதென்றால், அவர்களை உங்கள் உடன் சகோதர சகோதரிகளாகக் கருதி அன்பு செய்ய முடிகிறதென்றால் அப்போது இரவு முடிந்து பகல் தொடங்குகிறது என்றார்.

சமயப் பிரிவினைகளும், சமூகப் பாகுபாடுகளும், திருச்சபைகளுக்கிடையேயான கோட்பாட்டுப் பிளவுகளும் உலகை, நாட்டை, சமூகத்தை, திருச்சபையை என அனைத்தின் நோக்கத்தையும் சிதைத்து வருகின்றன. இதன் வாயிலாக வன்முறைக் கலாச்சாரமும், விரோத மனப்பாங்கும் பெருகிவிட்டன. இச்சூழலில், "பிறரை வரவேற்பதன்" வாயிலாக இணக்கமான, சமத்துவமான, சமாதானமான சமூகத்தை உருவாக்க ஆண்டவர் நம்மை அழைக்கிறார். யோவா 15:16இல் "... நீங்கள் கனி தரவும், நிலைத்திருக்கவும், உங்களை ஏற்படுத்தினேன்" என்று ஆண்டவர் சீடர்களிடம் உரைத்ததன் வாயிலாக, நம்மையும் பிறரோடு நல்லுறவை ஏற்படுத்தி கனிதரக் கற்பிக்கின்றார்.

நாம் எவ்வாறு பிறரை வரவேற்று நல்லுறவை ஏற்படுத்துவது? என்பது குறித்து ஆண்டவர் நமக்குக் கற்றுத்தருவனவற்றைத் தியானிப்போம்.

### *1. விருந்தோம்பலால் கனியும் மகிழுறவு:* (தொநூ 18: 1-5)

தொநூ 18ஆம் அத்தியாயத்தில் ஆபிரகாம் மற்றும் சாரா ஆகியோரின் விருந்தோம்பலைக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் நிலையான ஓரிடத்தில் வாழ்ந்தவர் அல்லர். நாடோடியாக வாழ்ந்தவர். தாம் அலைந்து திரிந்த இடங்களிலெல்லாம் அந்நியராக (Stranger) அவர் அடைந்த அவலங்களை நன்கு அறிவார்.

அத்தகைய அனுபவத்தோடு மம்ரே என்ற இடத்தில், பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில் மூன்று பேர் அண்மையில் நிற்பதைக் காண்கிறார். ஓடிச் சென்று தம் விருந்தோம்பலில் பங்கேற்க அவர்களை அழைக்கிறார். உண்மையில் அவர்கள் யாரென்று ஆபிரகாமுக்குத் தெரியாது.

முன்பின் அறிமுகமில்லாதவர்களை, அறியாதவர்களை விருந்துண்ண அழைக்கிறார், இளைப்பாறிச் செல்ல இடமளிக்கின்றார். அவர்களைக் குறித்து விசாரித்து அறியவும் ஆபிரகாமும், சாராவும் முற்படவில்லை. பொதுவாக முன்பின் அறிமுகமில்லாதவர்கள் நம் வீடுகளுக்கு வந்தால், நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? உங்கள் பெயர் என்ன? எதற்காக வந்திருக்கிறீர்கள்? எனக் கேட்பது வழக்கம். ஏனென்றால் அவர்களுடைய சமூக, சமய அடையாளத்தையும், வருகை புரிந்திருப்பதன் நோக்கத்தையும் அடிப்படையாக வைத்து அவர்களை நாம் நடத்துவோம்.

ஆனால் ஆபிரகாம் அப்படியல்ல, எவ்விதமான கேள்விகளுமின்றி அவர்களை இல்லத்தில் ஏற்று விருந்தோம்பினார். "இது விருந்தோம்பலின் தூய்மையையும் புனிதத்தையும் காக்கின்ற கேள்வி கேட்காத வரவேற்பு" (It is the unquestioning welcome of the guests that preserves the sanctity and sacredness of hospitality) என ஆபிரகாமின் விருந்தோம்பலைக் குறித்து ழாக் தெரிதா (Jacques Derrida) குறிப்பிடுகின்றார். பாரசீகச் சொலவடை ஒன்று ஆபிரகாமின் விருந்தோம்பலை இவ்வாறு குறிப்பிடுகிறது, "ஆபிரகாம் விருந்தினர் இன்றி உண்டதே இல்லை" (Abraham never ate without a guest). ஆபிரகாமின் விருந்தோம்பலால் அங்கு மகிழுறவு ஏற்பட்டது. அந்நியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு (எபி 13:12) என்னும் வசனம் எழுதப்படுவதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் ஆபிரகாமும் சாராவும்.

விருந்தோம்பலால் கனிந்த மகிழுறவின் வாயிலாகக் கடவுளின் வாக்குறுதியையும் பெற்றுக்கொண்டனர் (தொநூ 18:10). உனக்கு ஒருமகன் பிறப்பான் என்ற ஆண்டவரின் வாக்குறுதியை முதலில் நம்பாமல் தன் முதுமையினிமித்தம் சாரா சிரித்தார். தங்களுக்கு ஒரு குழந்தை இல்லையே என்ற விரக்தியில் வெளிப்பட்ட சிரிப்பாகக் கூட அது இருக்கலாம் ஆனால் ஆண்டவர் அந்த அவநம்பிக்கையின் சிரிப்பை மகிழ்ச்சியின் புன்னகையாக மாற்றும்படி அவர்களுக்கு ஈசாக்கைத் தந்தருளினார் (The laughter of disbelief is transformed into laughter of Joy).

கூடாரத்தின் திறவுகோல் வேண்டுமானால் ஆபிரகாமிடம் இருந்திருக்கலாம். ஆனால் ஆபிரகாம் மற்றும் சாராவுக்கான மகிழ்ச்சியின் திறவுகோல் ஆண்டவரின் கரத்திலிருந்தது. ஆகவே ஆண்டவர் ஈசாக்கை அவர்களுக்கு அருளி அவர்கள் வாழ்வின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தார். இதற்கு முக்கியக் காரணம், ஆபிரகாம் மற்றும் சாராவின் கூடாரம் அந்நியருக்காக எப்போதும் திறந்தே இருந்தது. அது அந்நியரை வரவேற்று விருந்தோம்பு இடமாகத் திகழ்ந்தது. இதனால் அங்கு உருவான மகிழுறவின் வாயிலாக இறையாசியைப் பெற்றுக் கொண்டனர்.

திருமறையில், கடவுள் விண்தூதர் வாயிலாகவும், அதே வேளையில் உதவியற்ற அந்நியராகவும் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். பிறரை வரவேற்று விருந்தோம்புவதன் வாயிலாக ஆண்டவரை நாம் வரவேற்கிறோம், விருந்தோம்புகிறாம் என்பதை நினைவில் கொள்வோம். நம் உள்ளமும், இல்லமும், திருச்சபையும், விருந்தோம்பலின் நடுவமாகவும், அதனால் உருவாகும் மகிழுறவின் மையமாகவும் திகழட்டும்.

***2. மனதுருக்கத்தால் மலரும் புதுஉறவு:*** மாற் 6:30-44

மாற் 6:30-44 வரையுள்ள பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மனதுருக்கத்தைக் குறித்தும், அவர் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கும் அதிகமானோர்க்கு உணவளித்ததைப் பற்றியும் தூய மாற்கு எடுத்துரைக்கின்றார்.

இயேசு கிறிஸ்து செல்லுமிடங்களிலெல்லாம் மக்கள் கால்நடையாகவே கூட்டம் கூட்டமாக அவரை நாடி வந்தனர், உணவின்றி, ஓய்வெடுப்பதற்குக் கூட நேரமும் இடமுமின்றி ஆண்டவரும் சீடர்களும் பணிவிடை புரிந்தனர். பெருந்திரளான மக்கள் தம்மை நாடி வருவதைக் கண்ட ஆண்டவர், அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது மனதுருக்கம் கொண்டு, வாழ்வின் போதனைகளை அவர்களுக்குக் கற்பித்தார் (மாற் 6:34).

இங்கே ஆண்டவர் தம்மை மனதுருக்கமுள்ள ஆயராக, ஆடுகளை பரிவுடன் காப்பவராக அறிமுகம் செய்கின்றார். இதன் வாயிலாக வரலாற்றிலும் அன்றைய காலகட்டத்திலும் சமூக, சமயத் தலைவர்களின் சுயநலப் போக்கை வெளிப்படுத்தி, பொறுப்பற்ற செயலைப் பகிரங்கப்படுத்தி, மந்தையைச் சுரண்டி தங்கள் வாழ்வைச் செழிக்கச் செய்த தன்னலம் மிகுந்த தலைவர்களைக் கண்டித்து (எசே 34:4,5; செக் 11:5) தம்மை மனதுருக்கமுள்ளள ஆயராக முன்னிறுத்துகின்றார். யோவான் நற்செய்தி நூலின் 10ஆம் அத்தியாயத்தில் ஆடுகள் மீது பரிவுகாட்டும், ஆடுகள் நிறைவாழ்வு பெறுவதற்காகத் தம் உயிரையே கையளிக்கும் நல்ல ஆயராகத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இதன் வாயிலாக ஆயர்-மந்தை என்னும் புதிய உறவுக்குள் நம்மை பங்கேற்கச் செய்திருக்கின்றார். (யோவா 10:16). ஆண்டவர் எத்தகைய மனதுருக்கமுள்ள ஆயர் என்பதை எசே 34:11; யோவா 10 ஆகிய திருமறைப்பகுதிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன

மனதுருக்கம் என்பது மனதளவில் மட்டுமல்ல, அது செயல்களிலும் வெளிப்பட வேண்டும் என்பதைத் தான் மக்களுக்கு உணவளித்ததன் வாயிலாக ஆண்டவர் காட்டியிருக்கின்றார் (மாற் 6:30-44). சீடர்கள் கூட உலகப்போக்கிலான முறையிலேயே அவர்கள் உணவைப் பெற்றுக்கொள்ள விழைந்தனர். ஆண்டவர் அவர்களின் நிலையை அறிந்து, தேவைகளை அறிந்து அவர்களுக்கு உணவளித்தார் (மாற் 6:36,37).

சீடர்களின் இச்செயலை செட் மேயர்ஸ் (Ched Myers) இவ்வாறு கூறுகிறார்: சீடர்கள் சந்தைப் பொருளாதாரத்தின் வாயிலாக மக்களின் பசியைப் போக்க முயன்றனர். அதாவது மக்களை ஊர்களுக்கு அனுப்பி, உண்பதற்கு அவர்களே ஏதாவது வாங்கி கொள்ள அவர்களை அனுப்புமாறு ஆண்டவரிடம் கூறினர். ஆனால் ஆண்டவரோ அவர்களிடம் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி, அவற்றைப் பகிர்ந்து, தன்னிறைவு அடையும் வழியைக் கற்பித்தார் (மாற் 6:36-38) (The disciples try to solve the problem of hungry masses through market economics: Sending the people to village stores or Counting their Change. Jesus on the other hand, teaches self-sufficiency through a practice of sharing available resources).

ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு பல்லாயிரக்கணக்கானோர்க்கு உணவளித்தது நமக்கு வியப்பைத் தருகின்றது. ஆனால் இந்த அருஞ்செயலை ஆண்டவர் நிறைவேற்றுவதற்கு ஒரு சிறுபையனும் அவனிடமிருந்த சிறிய அளவிலான உணவு ஒரு முக்கியக் காரணமாய் இருந்தனர். அங்கிருந்த மக்கள் தொகையின் முன்னால் இந்தச் சிறுபையனும், உணவும் அற்பமாகவே காணப்பட்டிருப்பர். ஆனால் மனிதருடைய பார்வையில் சிறியவைகளாக அற்பமானவைகளாக கருதப்படுவற்றை நாம் ஆண்டவரிடம் தரும்போது அவர், அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் அவற்றைப் பயன்படுத்துகிறார் என்பதற்கு இந்நிகழ்வு சான்றாகும்.

ஆண்டவர் உணவளித்த இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபெற்றனர். இவ்விருந்தின் வாயிலாக நல்ல ஆயர்-மந்தை என்னும் புதிய உறவு உருவாயிற்று. இவ்வுறவு கிறிஸ்துவின் மனதுருக்கத்தால் விளைந்த ஒன்றாகும். இவ்வுறவு முற்றுப்பெற்ற ஒன்றன்று; தொடர்ந்து விரிவடைந்து கொண்டே இருக்க வேண்டும் (யோவா 10:16).

கிறிஸ்துவின் மனதுருக்கம், புண்பட்ட மக்களை நோக்கிச் செல்லவும், வலிமிகுந்த மக்களைக் கண்டடையவும், அவர்களின் உடைவிலும், அச்சத்திலும், குழப்பத்திலும் பங்கேற்கவும் நம்மைத் தூண்டுகிறது. கிறிஸ்துவின் மனதுருக்கம் துயரப்படுவோரின் துயர் துடைக்கவும், தனிமைப்படுத்தப்பட்டவரோடு நாம் புலம்பவும், கண்ணீரோடு இருப்பவரோடு இணைந்து அழவும் அறைகூவல் விடுக்கின்றது. கிறிஸ்துவின் மனதுருக்கம் பலவீனரோடு பலவீனராகவும், வலிமையிழந்தோரோடு வலிமைகுன்றியவராகவும், ஆற்றலற்றவரோடு ஆற்றலற்றவராகவும், திராணியற்றவர்களோடு திராணியற்றோராகவும் இருக்க நமக்கு உந்துதல் தருகிறது என்கிறார் ஹென்றி J.M. நௌமேன். கிறிஸ்துவின் மனதுருக்கத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்தி எல்லோரையும் வரவேற்று, கிறிஸ்துவில் உண்டான புதிய உறவில் பங்கடையச் செய்வோம்.

ஆபிரகாமும், சாராவும் அந்நியரை வரவேற்று விருந்தோம்பல் செய்ததால் மகிழுறவு ஏற்பட்டது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து பல்லாயிரக்கணக்கான மக்களை வரவேற்று அவர்களுக்குக் கற்பித்து தமது மனதுருக்கத்தின் வாயிலாக ஆயர்-மந்தை என்னும் புதிய உறவை உருவாக்கினார். இத்தகைய விருந்தோம்பலின், பிறரை வரவேற்றலின் மாதிரியை இப்புதிய ஆண்டில் நாம் பின்பற்றுவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து அந்நியராக இவ்வுலகில் வந்தார், விருந்தினராகவும் தம்மை வெளிப்படுத்தினார், விருந்தைத் தருபவராகவும், நமக்கு வாழ்வருளும் விருந்தாகவும் அமைந்தார். இதை உணர்ந்து கிறிஸ்துவின் அடியவர்களாக எல்லைகளைக் கடந்து எல்லோரையும் வரவேற்று நம் கூட்டுறவில் இணைத்துக் கொள்வோம். அதற்கு ஆண்டவர் இப்புதிய ஆண்டில் அருள் செய்வாராக!

திரு. **B. சாம் ஜெபசிங்**

# ஒன்றிப்பில் வளருதல்
## GROWING IN UNITY

1கொரி 1:101; 3:21-23 யோவா 17:20-23

**"...ஒருவர் என்னுடன் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்"** (யோவா15:5).

உங்கள் ஒன்றிப்பில் பலம் இருக்கிறது; உங்கள் பிரிவினையில் ஆபத்து இருக்கிறது (All your strength is in your union and all your danger is in discord) என்று லாங்ஃபெல்லோ என்பவர் குறிப்பிடுகிறார். கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில், டெல்லியில் இந்திய நாட்டின் பல மாநிலங்களிலிருந்தும் விவசாயிகள் ஒன்றிணைந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். புதிய விவசாயச் சட்டம், கார்ப்பொரேட் கம்பெனிகளுக்குச் சாதகமாக இருப்பதால் அதை எதிர்த்து போராட்டம் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டது. அவர்கள் முன்னெடுத்த போராட்டத்தில் அவர்கள் ஒன்றித்துச் செயல்படுவதை இந்த உலகமே வியந்து பார்த்தது. நூற்றுக்கணக்கான டிராக்டர்கள் சாலையில் வரிசையாக நிறுத்தப்பட்டு, இணைந்து சமையல் செய்து, பல நாட்களாக வெயில் மற்றும் குளிரைப் பொருட்படுத்தாமல் போராட்டம் நடத்தினர். அதில் வியப்பு என்னவெனில் விவசாயிகள் மீது தண்ணீர் மற்றும் கண்ணீர்ப் புகையைச் செலுத்திய காவல்துறையினருக்கு விவசாயிகள் தாங்கள் சமைத்த உணவை கொடுத்தனர். இந்தச் செயலைப் பாராட்டி டிவிட்டரில் அலெக்ஸ் டிஃபின் என்பவர் இவ்வாறு எழுதியிருந்தார் "Despite the police charging, beating and using tear gas and water canons on them, they insist on feeding these very same officers dinner." விவசாயிகள் ஒற்றுமைக்கு அடையாளமாக மட்டுமல்லாமல் அவர்களது ஒற்றுமை மனித நேயச் செயல்பாட்டிற்கு முன்மாதிரியாகவும் உள்ளது.

படைப்பின் வரலாற்றில் ஒன்றிப்பின் செயலால் ஓர் அதிசயமான படைப்பு படைக்கப்பட்டது. அவன்தான் மனிதன். ஆதி 1:26இல் "நமது சாயலாகவும் நமது உருவிலும் மானிடரை உண்டாக்குவோமாக" என்ற வரிகளில் "நாம்" என்ற வார்த்தை திரித்துவக் கடவுளின் ஒன்றிணைந்த செயல்பாட்டைக் குறிக்கின்றது. சிறப்புமிக்க படைப்பொன்றை உருவாக்குவதின் பின்னணியத்தில் ஒன்றிப்பின் ஆற்றலை நாம் காண

இயலும். அதைப்போன்று இவ்வுலகம் ஒரு அமைதியின் சமூகமாக, நீதியின் சமூகமாக, உண்மையின் சமூகமாக உருவாக வேண்டுமெனில் ஒன்றிப்பு மிகவும் அவசியம். இத்தகைய ஒன்றிப்பில் வளர்தல் திருச்சபையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்பதைச் சிந்திப்போம்.

## *1. பிரிவினைகளைக் களைதல் :* (யோவா 17:20-23)

இயேசுவின் சீடர்களுக்கிடையே பல கருத்துவேறுபாடுகளும், பிரச்சனையின் அனுபவங்களும் காணப்பட்டன (லூக் 22:24). இதை நன்றாய் அறிந்த இயேசு அவர்களின் ஒன்றிப்பிற்காகக் கடவுளிடம் மன்றாடினார் (யோவா 17:21,22). மைந்தனாம் இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளுடன் இணைந்து செயல்பட்டு இந்த உலகில் கடவுளின் திருவுளத்தையும், அதிசயமான செயல்களையும் செய்து நிறைவேற்றினார். சீடர்களும் ஒன்றித்துச் செயல்பட்டால் அசாதாரணமான செயல்களைச் செய்ய இயலும் என்பதை வலியுறுத்தி இறைவேண்டல் செய்கின்றார். பிரிவினை எங்கு உள்ளதோ அங்கு நிலையற்ற தன்மையைக் காணமுடியும் என்பதை இயேசு இரண்டு ஒப்புமைகளைச் சொல்லி சீடர்களுக்கு விளக்குகின்றார் (மாற்கு 3:24,25). இங்கு "அரசு" மற்றும் "வீடு" ஆகிய இரண்டு பதங்களைப் பயன்படுத்துகின்றார். பழைய ஏற்பாட்டின் காலத்திலும் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் அரசர்கள் தங்கள் அரசைத் தக்கவைத்துக்கொள்ள போர் செய்வது இயல்பு. ஒரு அரசன் மற்றொரு நாட்டைப் பிடிக்க வேண்டுமானால் அவனது அரசாட்சிக்கு உட்பட்டவர்களின் ஒன்றிப்பு மிகவும் அவசியம். போரின்போது அவனது வீரர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால் அவர்கள் வெற்றி பெறுவர், அவரது அரசும் நிலை நிற்கும். எனவே ஒன்றிணைந்து செயல்படுதலின் முக்கியத்துவத்தை அரசு தனக்குள்ளே பிரிந்திருந்தால் நிலைக்காது என்று குறிப்பிடுகின்றார்.

"வீடு" என்ற ஒப்புமையில் இயேசு நாதர் ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் தங்களுக்குள்ளே பிரிந்து காணப்பட்டால் அந்த வீடு நிலைக்காது, அந்த வீட்டில் எந்த உயர்வும் இருக்காது என்பதையும் ஒன்றிப்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார். யோவான் 17:21ஆம் வசனத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த திருச்சபையாக செயல்படுவதுதான் தென்னிந்திய திருச்சபை (C.S.I.). ஒன்றிப்பிற்கு தென்னிந்தியத் திருச்சபை உலகம் போற்றும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

**2. *கிறிஸ்துவில் ஒன்றித்தல் :*** (1 கொரி 1:10-13, 3:21-23)

கிறிஸ்துவோடு நமது ஒன்றிப்பு தான், கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கியமான நிலையாகும். ஏனெனில் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதே நற்செய்தியின் மையக்கருத்தாகும் (our union with Christ is the highest degree of importance, because being joined to Jesus is the whole point of the Gospel.) என்று John Calwin கூறுகின்றார்.

கொரிந்துத் திருச்சபையில் பிரிவினைகள் இருப்பதைக் கேள்விப்பட்ட பவுல் கிறிஸ்துவை அவர்களுக்கு எடுத்துக்காட்டாக முன் வைக்கிறார் (1 கொரி 1:13). கிறிஸ்து கடவுளோடு இணைந்து இருக்கின்றார். அதைப்போன்று எல்லோரும் கிறிஸ்துவில் மட்டுமே இணைந்திருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் (1கொரி 3:23) என்று பவுல் கூறுவது, கிறிஸ்துவோடு அனைவரும் ஒன்றித்திருந்தால் அவர்களுக்குள் பிரிவினைகள் வர வாய்ப்புகள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

பவுலின் போதனைகளில் மிகவும் முக்கியம் வாய்ந்த போதனை “கிறிஸ்துவில் ஒன்றித்தல்” (en Cristos) என்பதாகும் இரண்டு விதமான ஒன்றிப்பு குறித்து அவர் குறிப்பிடுகின்றார் 1. கிறிஸ்துவுடன் தனி நபரின் ஒன்றிப்பு (Personal union with Christ) (கலா 2:20), 2. கிறிஸ்துவில் அனைவரின் ஒன்றிப்பு (Everyone’s union with Christ) (கலா 3:21). இவ்விரண்டு ஒன்றிப்பும் நம் திருச்சபை வாழ்விற்குத் தேவையானதாகும்.

திருச்சபை வாழ்வில் ஒன்றிப்பில் வளர்தல் மிகவும் தேவையான ஒன்று. அத்தகைய வாழ்வு வாழ, பிரிவினைகளைக் களைந்து, கிறிஸ்துவில் ஒன்றிக்க கடவுள் நம்மை அழைக்கின்றார். இந்தப் புதிய ஆண்டில் நாம் அனைவரும் ஒன்றிப்பில் வளர கடவுளிடம் மன்றாடுவோம்.

I cannot do what You can Do
You cannot do what I can Do
But together We can Do Something Beautiful for God

- Mother Teresa

திரு. **Y. சுஜின் ராஜ்**

நாள் 8 வார இறைவேண்டல்

# அனைத்துப் படைப்புகளோடும் ஒப்புரவாகுதல்

## RECONCILING WITH ALL CREATION

கொலோ 1:15-20 மாற்கு 4:30-32

**“என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்”** (யோவா 15:11)

One of the first condition of happiness is that the link between man and nature shall not be broken (Leo Tolsfoy) மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள இணைப்பு துண்டிக்கப்படலாகாது என்பதுதான் மகிழ்ச்சிக்கு தரப்படும் கட்டுப்பாடுகளில் முதன்மையான ஒன்று. கோவிட்-19 முழுஅடைப்பு இந்தப் பூமியை ஒருவகையில் குணப்படுத்தியது என்று இயற்கை நல ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியா டுடே பத்திரிக்கை இதைக்குறித்து ஒரு கட்டுரையில் இந்தியாவில் முழுஅடைப்பின் போது நடைபெற்ற நம்பமுடியாத சில சுற்றுச்சூழல் மாற்றங்களைப் பதிவு செய்துள்ளது. அவையாவன:

(1) காற்றின் தூய்மைத்தன்மை அதிகரிப்பு
(Improvement in air quality)

(2) கொல்கொத்தாவில் ஆறுகளில் டால்பின்கள் தென்பட்டன
(Dolphins spotted near Kolkotta ghats)

(3) மும்பையில் ஃபிளமிங்கோஸ் என்ற பறவை வகை அதிகரிப்பு
(The number of flamingos increased in Mumbai)

(4) கங்கை நதி தண்ணீர் ஹரித்வார் பகுதியில் குடிநீருக்கு ஏற்றதாக மாற்றம் பெற்றது.
(Ganga fit for drinking in Haridwar)

இவை இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்களில் சில. உலக அளவில் பெரிய மாற்றங்கள் ஏற்ப்பட்டுள்ளதை மறுக்க இயலாது. அதேநேரத்தில் இயற்கையை அழிப்பதன் விளைவுதான் கொரோனா போன்ற பெரும் நோய்த் தொற்றிற்குக் காரணம் (Pandemic such as Corona virus one the result of humanity’s destruction of nature) என்று (WHO) உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது என்று The guardian என்ற பத்திரிக்கை கூறுகிறது. (Corona Virus is a warning to us to mend and broken relationship with nature. Macro Lambertini. இயற்கையோடுள்ள உறவை நாம் சரிசெய்ய வேண்டும் என்பதற்கு ஒரு எச்சரிப்பு மணி தான் கொரோனா வைரஸ் என்று மார்கோ லாம்பெர்டினி குறிப்பிடுகின்றார்.

நாம் வாழும் இந்தக் காலம் முழுப்படைப்புகளோடும் ஒப்புரவாவதற்கு ஏற்ற காலமாக அமைந்துள்ளது. திருமறை வெளிச்சத்தில் நாம் எவ்வாறு அனைத்துப் படைப்புகளோடும் ஒப்புரவாக இயலும் என்பதனைச் சிந்திப்போம்.

***1. எல்லைகளைக் கடந்த கூட்டுறவு*** : (மாற்கு 4:30-32)

இயேசு இறையரசை குறித்து மக்களுக்குப் பல உவமைகள் வழியாக விளக்குகின்றார். அதில் கடுகு விதையை இறையரசுக்கு ஒப்பிடுகின்றார். கடுகுவிதை சிறிதாக இருந்தாலும் அது வளர்ந்து பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதன் நிழலில் வந்தடையும் என்று மக்களிடம் கூறினார். இதில் ஆகாயத்துப் பறவைகள் என்ற சொற்றொடரில் 'பறவைகள்' (32) என்ற வார்த்தை பன்மையில் உள்ளது. இதில் ஆண்டவர் இயேசு ஒரு குறிப்பிட்ட பறவையை மட்டும் குறிப்பிடாமல் ஒட்டுமொத்த பறவைகளையும் பன்மையில் குறிப்பிடுகின்றார். இங்கு ஒரு குறிப்பிட்ட வரையறை இல்லை. எல்லா பறவைகளும் வந்தடையும் என்பது எல்லா மக்களும் வாழும் இடமாக இறையரசு காணப்படும் என்பதைக் குறிப்பிடுகின்றார். அதைப் போன்று எந்த எல்லைகளும் இல்லாதபடி எல்லா உயிரினங்களும் ஒன்றாக வாழுகின்ற வகையில் நமது கூட்டுறவு அமைய வேண்டும். இன்று மனிதனின் சுயநலத்தினால் பல உயிரினங்கள் (Endangered Species) அழியப்போகும் நிலையில் இருக்கும் உயிரினங்களாக மாறிவிடுகின்றது. எனவே மனிதர்களுடைய செயல்கள் எல்லா உயிரினங்களோடும் உயர்ந்த செயல்களாக அமைய வேண்டும் என்பதே கடவுளின் விருப்பமாகும். "பெரிய கிளைகளை விடும்" (32) என்ற சொற்றொடர் எல்லாப் பறவைகளும் வந்து தங்க கிளைகளைக் கடுகுச் செடி பெரிதாக்கிக் கொண்டே இருக்கும் என்று குறிப்பிடுகின்றார். அதைப் போன்று இந்தப் பூமியும் எல்லா உயிரினங்களும் வாழ்வதற்கு இடமளிக்கும் ஓரிடமாக வேண்டும். அதற்கு மனிதர்கள் உழைக்க வேண்டும். அப்போது எல்லைகள் கடந்த ஐக்கியம் எல்லா உயிரினங்களுக்கும் உண்டாகும்.

***2. எல்லாப் படைப்புகளுடனும் ஒப்புரவு*** : (கொலோ 1:15-20)

இந்தப் பகுதியில் பவுல் இயேசு கிறிஸ்துவின் தனித்தன்மையை விளக்குகின்றார். "படைப்பனைத்திலும் தலைப்பேறு அனைத்தும் அவர் வழியாய் அவருக்காகப் படைக்கப்பட்டன" (16) போன்ற வாக்கியங்கள் படைப்பின் தொடக்கத்திலிருந்தே இயேசு கிறிஸ்துவின் இருப்பு நிலையைக் குறிப்பிடுகின்றன. ஆனால் ஆதாம் ஏவாள் கடவுளுக்கு கீழ்ப்படியாமல் ஒருவரை ஒருவர் குற்றப்படுத்தினது மட்டுமல்லாமல் கடவுளின் படைப்புகளையும் குற்றம் சாட்டினர். எனவே கடவுளுக்கும்

மனிதருக்குமிடையே, மனிதருக்கும் படைப்புகளுக்குமிடையே பிரிவினை உண்டானது. இந்தப் பிரிவினை தொடர்ந்து வளர்ந்து கொண்டே சென்றது. இதனால் கிறிஸ்து இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி பூலோகத்திலுள்ளவைகள் மற்றும் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாகத் தமக்கு ஒப்புரவாக்கினார் (20). கிறிஸ்து இயேசு அருளும் மீட்பு ஒட்டுமொத்த உயிரினங்களுக்கும் உரியது என்பதனைப் பவுல் சுட்டிக் காட்டுகின்றார். எனவே இயேசு கிறிஸ்துவின் விருப்பம் மனிதர்கள் அனைவரும் எல்லாப் படைப்புகளுடனும் ஒப்புரவுடன் வாழ வேண்டும் என்பதே. திருச்சபையாகிய நம்மை அனைத்துப் படைப்புகளுடனும் ஒப்புரவுடன் வாழ கடவுள் அழைக்கின்றார்.

நான் காணாதவைகளுக்காகக் கடவுளை நம்ப, நான் கண்ட அனைத்தும் எனக்குக் கற்பிக்கின்றது (All I have seen teaches me to trust the creator for all I have not seen) என்று ரால்ஃப் வால்டோ எமர்சன் கூறுகின்றார். படைப்புகள் அனைத்தும் நாம் கடவுளை மேலும் நம்பி வாழக் கற்றுத்தருகின்றன. இத்தகைய மேன்மையான படைப்புகளோடு எல்லை கடந்த கூட்டுறவுடனும், எல்லா படைப்புகளோடும் ஒப்புரவுடனும் வாழ புதிய ஆண்டில் தீர்மானம் செய்வோம்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

10-01-2021

திருத்தோற்றத்திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

# அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்

**LIVE WORTHY OF YOUR CALLING**

நீமொ 20:1-11 உரோ 6:12-23
திபா 14 மத் 7:15-23

**"......விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்."** (மத். 7:21)

திருமறையில் நம்மைக் கவர்ந்திழுக்கும் முட்புதர் மூலம் மோசேக்கு வரும் அழைப்பு (விப 3:1-). ஆலயத்தில் எசாயாவுக்கு வரும் அழைப்பு (எசா 2:1-). இளைஞர் எரேமியாவுக்கு வரும் அழைப்பு (எரே 1:1-10), இவர்களிடையே கடவுள் நடத்தும் உரையாடல் இறைமாட்சியை விளக்குகிறதாக அமைகின்றன. மோசேயை, இஸ்ரயேலரை எகிப்திலிருந்து நடத்திச் செல்லவும் (விப 3:4-10), சாமுவேலை, கடவுளின் பணியாளராக இருக்கவும் (1சாமு 3:1-14), இறைவாக்கினரை, அவருடைய செய்தியை மக்களுக்கு எடுத்துரைக்கவும் (ஆமோ 7:15, எரே 1:4-19), இஸ்ரயேலரை ஓய்வுநாளை ஆசரிக்கவும், தூய கூட்டமாக வாழவும் (லேவி 23:2-3). அழைப்பதைத் திருமறையில் பார்க்கிறோம். கடவுளின் ஒவ்வொரு அழைப்பும், ஒவ்வொருவரின் அழைப்பும் ஒரு தூது கலந்த திருப்பணியை உள்ளடக்கியதாக இருப்பதை நாம் பார்க்க முடியும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மைப் பின் தொடரும்படி பற்பல அழைப்புகளை விடுக்கின்றார். அழைப்பு ஒன்றின் மூலமே ஆண்டவர் பன்னிருவரைத் தம் சீடர்களாகத் தம்மருகே கொள்கின்றார். ஆண்டவரின் போதனைகள் அனைத்தும் அழைப்பின் கருத்தை மையப்படுத்தியே எழுகின்றன. என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து.... (மத் 16:24) என்று கூறி அவர் மட்டுமே அளித்த புதிய பாதை ஒன்றின் வழியாக அவரைப் பின்தொடர அழைக்கின்றார்.

கிறிஸ்தவர் அழைப்பு பெற்றவர் என்பதைத் தொடக்கக் காலத் திருச்சபை கண்டுணர்ந்தது. பேதுரு அடிகளார் ஆற்றும் பேருரையில் "நெறிகெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" (திப 2:40) என்கிறார். "சகோதரர்களே! நீங்கள் அழைக்கப்பட்டபோது என்ன நிகழ்ந்தது என்பதை எண்ணிப்பாருங்கள்; மனிதர் மதிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனை பேர்" (1கொரி 1:26)

என்று சொல்லி அவர்களின் அழைப்பை நினைப்பூட்டுகிறார் பவுலார். ஆம், திருச்சபை அழைப்புப் பெற்றவர்களைக் கொண்ட, அழைப்புப் பெற்றதும், தேர்ந்தெடுக்கப்பட்டதுமான சமூகமாகும் (2யோவா 1).

இன்றைய திருச்சபை இதை உணர்ந்து அழைப்புக்கு ஏற்ப வாழ அழைக்கப்படுகின்றது. அழைப்புக்கு ஏற்ப வாழும் வாழ்க்கை என்பது தூய வாழ்க்கை முறையால் இறை அழைப்புக்குப் பதில் அளிக்கின்ற வாழ்வு (உரோ 1:7, 1கொரி 1:2), (1தீமொ 1:9) ஆகும். அழைப்புக்கு ஏற்ப வாழும் வாழ்வை திருமறை சார்ந்து புரிந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

### *1. விளம்பரப்படுத்துவோராய் அல்ல; வியர்வை சிந்துவோராய்* : (நீமொ 20:6)

அழைப்பையும், உழைப்பையும் எப்போதுமே பிரித்துப் பார்க்க முடியாது. கடவுளாகிய ஆண்டவர் தொடக்கப் பெற்றோரை அழைத்து உழைக்கத்தான் சொல்லுகிறார் (தொநூ 2:15).

மூதாதையரில் ஒருவரான ஈசாக்கு கடவுளால் அழைப்புப் பெற்றவர். ஈசாக்கின் கடின உழைப்பை கடவுள் ஆசீர்வதித்ததால் அவருக்கு நூறுமடங்கு பலன் கிடைத்தது. அவர் செல்வந்தராகி வர வர விருத்தி அடைந்தார்; மாபெரும் செல்வரானார் (தொநூ 26:13). கடவுளால் அழைத்துப் பயன்படுத்தப்பட்ட தலைவர்கள் இறைவாக்கினர்கள் அனைவரும் கடினமாக உழைத்தவர்கள்தாம். குறிப்பாக, இறைவாக்கினர் எரேமியாவைக் கடினமான பணிக்கு அழைக்கிறார். ஆண்டவர் தம் கையை நீட்டி, என் வாயைத் தொட்டு என்னிடம் கூறியது, “இதோ பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளராக ஏற்படுத்தியுள்ளேன்” (எரே. 1:9-10) என்கிறார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் அடியவர்களை அழைக்கும்போது, கடினமாக உழைத்து, சோர்ந்திருந்த சீமோன் பேதுருவிடம், “ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்கிறார்” (லூக் 5:4). ஆம் அழைப்பு வியர்வைச் சிந்தி உழைப்பதற்குத் தான்; விளம்பரப்படுத்துவதற்கு அல்ல. “உழைப்பினால் கிடைக்கும் நித்திரை சுகம் தரும்; பிழைப்பினால் கிடைக்கும் நித்திரை பிணியைத்தான் தரும்.” எனவே நீமொ 20:6 கூறுவதுபோல, ஒருவர் தன்னை வாக்குப் பிறழாதவர் எனக் கூறுவதில் அல்ல; வியர்வை சிந்தி உழைப்பதன் வழியாக அதை மெய்ப்பிக்க வேண்டும்.

## 2. இறந்துவிடுகிறவர்களாக அல்ல; இறந்தும் வாழ்வோராய் : (உரோ 6:13)

"....நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள்; மாறாக, இறந்தும் வாழ்வோராய் உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள்; கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள்."

கடவுள் நமக்குத் தந்துள்ள இந்த உலக வாழ்க்கை நாம் வாழ்ந்து இறந்து போவதற்காக அல்ல, இறந்தும் வாழ்வோராய் விளங்குவதற்கு. அத்தகைய வாழ்வு வாழ நாம் நம்மைக் கடவுளிடம் கையளித்து வாழ வேண்டும். அதுதான் அழைப்புக்கு ஏற்ப வாழும் வாழ்க்கை என்று பவுலார் குறிப்பிடுகின்றார். பவுலார் இங்குக் குறிப்பிடும் தெளிவான செய்தி என்னவென்றால், கடவுளின் அழைப்புக்கு ஏற்புடையவர்களாய் வாழும் வாழ்க்கை என்பது, பாவத்துக்கு விலகி கடவுளின் பாசத்திற்குட்பட்டு வாழும் வாழ்க்கை (உரோ 6:14). அதாவது,

- உடல் இச்சையின்படி வாழாமல்
- உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாக்காமல்
- அக்கிரமத்துக்கும், அசுத்தத்திற்கும் அடிமைகளாயிராமல்
- நீதிக்கு நீங்காமலிருந்து
- ஒழுக்க நெறிகளை உளமாரக் கடைப்பிடித்து
- கடவுளின் அருளுக்கு உட்பட்டவர்களாய்
- கடவுளுக்கு ஏற்புடையவைகளைச் செய்யும் கருவியாய்

பாவ வாழ்வுக்குக் கிடைக்கும் கூலியாகிய சாவை வென்று, பாச வாழ்வுக்கு அல்லது இறை அழைப்புக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து கடவுள் கொடுக்கும் அருள் கொடையாகிய, நாம் ஆண்டவரோடு இணைந்து வாழும் நிறைவாழ்வைச் சொந்தமாக்கிக் கொள்ள பவுலார் வழி ஆண்டவர் அழைக்கிறார்.

இத்தகைய வாழ்வுதான் இறந்தும் வாழ்வோராய் வாழும் வாழ்வு. அந்நியநாட்டில் அடிமைகளாய் வாழ்ந்தாலும் தான் சேவித்து வந்த கடவுளைத் தவிர வேறு எதையும் வணங்கமாட்டோம் என்று நிமிர்ந்து நின்ற அனனியா, மிசாவேல், அசரியா (தானி 3:1-19) முதலிய பற்றுறுதி வீரர்களும், இத்தாலியா படைப்பிரிவின் நூற்றுவர் தலைவராக இருந்த கொர்நேலியு தானும் தன் வீட்டார் அனைவரோடும் கடவுளுக்குப் பயந்தவருமாயிருந்து நற்செயல்கள் பல செய்து செயல்பட்ட, புற இனத்தவர் என்று யூதர்களால் அடையாளப்படுத்தப்படும் இம்மாமனிதரும் இறந்தவர்களாக அல்ல, இறந்தும் வாழ்வோராக இன்றும் பேசப்படுகிறார்கள் என்று புரிந்துகொள்ளலாம்.

நாம் வாழும் உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் தங்கள் அறநெறி வாழ்வால் மறைந்தும் நம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று துணிந்து சொல்லலாம்.

கடவுளின் அழைப்பைப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய நாம் மலர்ந்து, மடிந்து போவதற்காக அல்ல, இறந்தும் வாழ்வோராய் நிறை வாழ்வைச் சொந்தமாக்கிக் கொள்வோம்.

### *3. வாய்ச்சொல்லில் அல்ல; வாழ்ந்து காட்டுவோராய்* :

(மத் 7:21)

மத்தேயு 7:15-23 வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொல்லுக்கும், செயலுக்குமுள்ள வேறுபாட்டை அழகாகப் படம்பிடித்துக் காட்டி, “என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே அங்குச் செல்வர்” (மத் 7:21) என்று கூறி, செயல்படுங்கள், வாழ்ந்து காட்டுங்கள் என அழைப்பு கொடுக்கிறார். போலிகளை இனம்கண்டு கொள்வது அவர்களது செயலின் மூலமாகத்தான் என்கிறார் (மத் 7:21). நல்ல மரம் அதன் கனிகளால் அறியப்படுகிறது போல, நல்ல மனிதர் தன்னுடைய நற்செயல்களால் அறியப்படுவார் என்கிறார்.

ஈரான் நாட்டை ஆண்ட மன்னன் நௌஷர்கான் என்கிற பாதுஷா வேட்டையாட காட்டிற்குள் சென்றார். அவரோடு சென்ற சமையல்காரர் அவரிடம், “மன்னா, சமையலுக்கு உப்பில்லை என்றார். பாதுஷா, பக்கத்து ஊருக்குள் போய் விலை கொடுத்து வாங்கி வா! இல்லாவிட்டால் ஊர் முழுவதுமே பாழாகிவிடும்” என்று சொன்னார். மன்னா, ஒருபிடி உப்பை விலை கொடுக்காமல் வாங்கினால், ஊர் முழுவதும் எப்படிப் பாழாகும்? என்று சமையல்காரர் வினவ, அரசர், “தன் குடிமக்களிடம், அரசர் ஒருபிடி உப்பை இனாமாக வாங்கினால், அவர் கீழே உள்ள அதிகாரிகள் மறுநாள் ஊரையே விழுங்கி விடுவார்கள் என்று விளக்கம் சொன்னார்.”

எல்லாக் கற்பிதங்களைக் காட்டிலும் வலிமையான கற்பிதம் வாழ்ந்து காட்டுவதாகும். யார், தான் சொன்னவற்றிற்கு எல்லாம், தாமே உதாரணமாக இருக்கிறார்களோ, அவர்கள் போகிற பாதையில் முட்கள் கூட விலகி வழிவிடுமாம். நாம் சொல்வதைக் காட்டிலும் செய்வதைத்தான் உலகம் உன்னிப்பாக கவனித்து வருகிறது. “நாம் மறைவில் செய்கின்ற செயல்கள் மற்றவர்களுக்குத் தெரியவா போகிறது?” என்று நினைக்கிறோம். ஆனால் அதுவரை தூங்கிக் கொண்டிருந்த விதையாய் இருந்து விட்டு ஒரு நொடியில் அது முளைத்து எழும் முள்மரமாகும். அதை வெட்ட நினைத்தாலும் முடியாது; வேரறுக்கவும் இயலாது.

ஆம் ஆண்டவரால் அழைப்புப் பெற்றவர்களாகிய நம்மில் வெளிப்பட வேண்டியது நல்ல கனியாகிய நற்செயல்கள். அதுவே நம்மை இறையரசுக்கு அழைத்துச் செல்லும். மட்டுமல்லாமல் நீங்கள் உலகுக்கு உப்பாகச் சுவை கொடுங்கள், ஒளியாக வழிகாட்டுங்கள். அப்பொழுது மற்றவர்கள் உங்கள் விண்ணகத்தந்தையைப் போற்றிப் புகழுவர் (மத் 5:16) என்கிறார்.

நம் வாயின் வார்த்தைகள் அல்ல, நம் வாழ்க்கையே நாம் கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் எனச் சான்று அளிக்கிறது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து, வார்த்தையே வாழ்க்கை; வாழ்க்கையே வார்த்தை என வாழ்ந்து காட்டியவர். அப்படியே நீங்களும் வாழ்ந்து காட்டுங்கள் என்றார் (யோவா 13:14-15). பவுலார் குறிப்பிடும்போது “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிடம் இருக்க கடவது என்கிறார்” (பிலி 2:5). ஆகவே வாய்ச் சொல் வீரராய் வாழ்வதைவிட, இந்த வையகம் பயனுற செயல் வீரராய் வாழ்வோம். அழைப்புக்கு ஏற்ப வாழும் வாழ்வு, திருமறை எங்கும் விரவிக் கிடக்கும் வாழ்வு. அத்தகைய வாழ்வுக்கு நம்மைத் தயாரித்து விளம்பரப்படுத்துவோராய் அல்ல; வியர்வை சிந்துவோராய் என்பதைப் புரிந்து, இறந்து விடுகிறவர்களாய் அல்ல; இறந்தும் வாழ்வோராய் என்பதை உணர்ந்து, வாய்ச் சொல்லில் அல்ல; வாழ்ந்து காட்டுவோராய் என வாழ்ந்து அழைப்புக்கு உகந்தோராய் இறையரசை நமதாக்குவோம், விரிவாக்குவோம்.

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**

17-01-2021

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும்
இரண்டாம் ஞாயிறு

# ஒரே ஆண்டவர், ஒரே திருமுழுக்கு

## ONE LORD, ONE BAPTISM

எண் 11:23-30 | 1கொரி 10:1-4
திபா 23 | யோவா 10:7-18

**“தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன்....”**
(யோவா 10:14).

இறையருளாலும் அவ்வருள் மனிதரில் தோற்றுவிக்கும் நம்பிக்கை வழியாகவும் இயேசு கிறிஸ்துவுடன் ஒருவர் இணைவதற்கு உதவிபுரிவது திருவருள்சாதனமே ஆகும். திருமறையின் அடிப்படையில் நாம் ஏற்றுக்கொண்டுள்ள திருவருள்சாதனங்களில் (Sacrament) திருமுழுக்கும் ஒன்று. இன்று திருமுழுக்கு பற்றிய புரட்டு உபதேசங்கள் மக்களை குழப்பிவிடுகின்றன. கிறிஸ்தவத் திருச்சபைகளில் இறைமக்களிடம் மிக முக்கிய நம்பிக்கையின் ஆதாரமாக விளங்குவது, ஒரே ஆண்டவர் மீதுள்ள நம்பிக்கையும் திருமுழுக்கின் அவசியமுமாகும். தென்னிந்தியத் திருச்சபை ஒரே திருமுழுக்கைக் கடைப்பிடிக்கிறது.

கி.பி. 325 முதல் திருச்சபைகளில் பின்பற்றப்பட்டு வரும் நிசேயா பற்றுறுதி அறிக்கை நமது நம்பிக்கையை வலுப்படுத்துகிறது. எல்லாம் படைத்த தந்தையாம் ஒரே கடவுளை நம்புகிறோம்; ஒரே ஆண்டவராய் கடவுளின் ஒரே மைந்தராம் இயேசு கிறிஸ்துவையும் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில் நாம் பெற்றுக்கொள்ளும் திருமுழுக்கு ஓர் அடையாளச் செயலாகக் கருதப்பட்டாலும் பாவம் மன்னிக்கப்படுதல், புது வாழ்வுக்கு உட்படுதல் என்னும் சிந்தனைகள் திருமுழுக்கின் ஆன்மிகத்தை வலுப்படுத்துகின்றன.

ஒரே ஆண்டவரில் நாம் வைக்கும் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையில் நாம் பெறும் திருமுழுக்கும் என்னென்ன நிலைகளில் நம்மை ஒன்றுபடுத்துகிறது எனச் சிந்திப்போம்.

### *1. கடவுளுடன் ஒன்றுபடுத்துகிறது:*

திருமுழுக்கு ஒருவரைக் கடவுளுடன் இணைக்கிறது. இயேசு கிறிஸ்து திருமுழுக்கு பெற்ற பொழுது ஒலித்த குரல், “என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” (மத் 3:17) என்று கூறியது, திருமுழுக்கின் வழி கடவுளின் மகன் என்கிற

பிரகடனம் மட்டுமல்ல, கடவுளுடன் இணைக்கப்படுதலையும், அவருடனான உறவையும் குறிக்கிறது. அது போன்று ஒருவர் திருமுழுக்கு பெறும்போது கடவுளுடன் இணைகிறார். கடவுளின் பிள்ளை என்கிற உரிமைப் பேற்றினைப் பெறுகிறார். கடவுளின் முழு ஆளுகைக்கு உட்படுகிறார்.

மோசே இறையழைப்பைப் பெற்று விடுதலைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தபோது, ஆண்டவருடைய எல்லை கடந்த ஆள் தத்துவத்தைப் புரிந்து கொள்கிறார். மோசே மட்டுமல்ல அவரோடு இருந்தவர்களும் ஆண்டவருடைய ஆவியால் நிரப்பப்படுகிறார்கள் (எண் 11:25-29). இந்நிகழ்வு அனைவரும் ஆண்டவரின் உரிமைப் பேற்றினைப் பெற்றவர்கள் என்ற அங்கீகாரத்தினைத் தந்தது.

தூய யோவான் நற்செய்தியாளர்க் உண்மைக் கடவுளை அறிக்கையிடும்போது, இயேசுவே நல்ல ஆயர் என்று சொல்லி அவர் அருளும் மீட்பைப் பதிவு செய்கிறார். ஏனெனில் தந்தை அவரை அறிந்திருக்கிறார்; அவரும் தந்தையை அறிந்திருக்கிறார் (யோவா 10:14,15). இவ்வாறே திருமுழுக்கு வழி இறைமக்களும் இறைவனின் திட்டத்தை அறிந்து கொள்கிறார்கள். இறை உறவில் இணைகிறார்கள்.

## *2. கிறிஸ்துவுடன் ஒன்றுபடுத்துகிறது:*

திருத்தூதுவர் பவுல், திருமுழுக்கு அனைவரையும் கிறிஸ்துவுடன் இணைக்கிறது என்பதனை அதிகமாக வலியுறுத்துகிறார் (உரோ 6:1-11, கலா 3:27). திருமுழுக்கை இயேசு கிறிஸ்துவின் பாடு, மரண, உயிர்த்தெழுதலுடன் இணைத்துச் சொல்கிறார். கிறிஸ்துவோடு இணைந்திருத்தல் என்பது அவர் போல வாழ்வதும், அதன் வழி வரும் பாடுகளையும், துன்பங்களையும் சகித்தலும், இறுதி வரை பற்றுறுதியில் நிலைநிற்பதுமே என்கிறார். சுருங்கக் கூறின், கிறிஸ்துவோடு இணைதல் என்பது கிறிஸ்துவில் நாம் பெறும் புது வாழ்வு தான். பழைய மனிதனின் தன்மை சிலுவையில் அறையப்படுகிறது; பாவத்தின் முழு ஆற்றலும் முறியடிக்கப்படுகிறது. எனவே திருமுழுக்கு பெற்றவர்கள் பாவத்துக்கு, அடிமையல்ல. விடுதலை பெற்றவராக மாற்றம் பெறுகின்றார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அருளும் புதிய வாழ்வு மற்றும் புதிய சக்திக்குள் உயிராற்றல் பெறுகின்றார்கள். இனி நான் அல்ல; கிறிஸ்துவே பெலத்தில் வாழ்கிறார் (உரோ 14:8) என்ற பற்றுறுதி உறுதி செய்யப்படுகிறது.

### *3. இறைமக்களுடன் ஒன்றுபடுத்துகிறது:*

திருமுழுக்கு நம்மை இறைமக்களுடன் ஒன்றிணைக்கிறது. சமுதாயத்திலுள்ள வேறுபாடுகளைக் களைந்து ஒருமைப்பாட்டிற்குள் கொண்டுவரும் ஆற்றல் திருமுழுக்கிற்கு உள்ளது. பவுல் இந்த ஒருமைப்பாட்டைக் கூறும்போது (கலா 3:26-29) கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும், உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; திருமுழுக்கின் வழி கிறிஸ்துவாடு இணைந்திருக்கும் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் எனக் குறிப்பிடுகிறார். திருமுழுக்கு ஒருவரை விசுவாசிகளின் கூட்டத்தில் இணைக்கிறது.

இந்த ஒன்றிப்பு சாதி, சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார, பண்பாடுகளைக் கடந்து கிறிஸ்துவுக்குள் அனைத்துலக மக்களும் ஒன்று என்ற ஒன்றிப்பின் அடையாளமாகிறது. ஆனால் எதிர்பாராதவிதமாக திருமுழுக்கு பெற்றவர்கள் தங்களைப் பிறரைக் காட்டிலும் வேறுபட்டவர்களாகக் காட்டும் நிலை உள்ளது. இயேசு கிறிஸ்து தாம் பாவமற்றவர் என்று தம்மை வேறுபடுத்திக் கொள்ளாமல் பாவிகளோடு தம்மை அடையாளபபடுத்தும்விதமாகத் திருமுழுக்கை ஏற்றுக்கொண்டார் (மத் 3:15); மீட்கவும், மன்னிக்கவும், ஒப்புரவாக்கவுமே வந்தேன் என்றார்.

தூய பவுலடியார் எபேசு நகரில் நற்செய்திப் பணியாற்றியபோது குலோயி வீட்டினர் வழி கொரிந்து திருச்சபையில் இருந்த பிளவுகள் பற்றி கேள்விப்பட்டார் (1கொரி 1:11). எனவே அவர்களிடையே இருந்த பிளவுகளை அகற்றி, இணைந்து வாழ விரும்பிய பவுலடியார், அவர்களுக்கு எழுதிய திருமுகத்தில் (1கொரி1:10-17) இயேசு கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கு பெற்றுள்ள நீங்கள் பிளவுகளை விடுத்து பாசமுடன் வாழுங்கள் என்று கூறினார். எனவே திருமுழுக்கு மனிதர்களோடு இணைந்து வாழ்தல் என்னும் புதுப் படிப்பினையைத் தருகிறது.

கடவுள் குழப்பத்தை ஏற்படுத்துபவரல்லர்; அமைதியை ஏற்படுத்துபவர் (1கொரி 14:33). நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்து எங்கள் மீட்பர் எனும் நம்பிக்கையில் திருமுழுக்கு பெற்று அவருக்குள் இணைந்துள்ளோம். ஆனால் சிறிய அளவிலான கொள்கை குழப்பங்களால் பிளவுபட்ட நிலைகளைச் சந்திக்கிறோம். காரணம், திருமறையின் முழு உண்மைகளைச்

சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையே. கிறிஸ்து ஒரே அடையாளத்தையே முன்வைத்தார் (எபே 4:5).

"ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன" (1கொரி 5:17) என்ற தூய பவுலடியாரின் சிந்தனைக்கு ஏற்ப திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவோடு இணைந்துள்ள நாம் அனைவரும் பழமையான தீய குணங்களைக் களைந்து புது வாழ்வை அமைப்போம். இந்தப் புதிய வாழ்வு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு வெளிக் காட்டுவதாயும், இறையரசை நிலைநாட்டுவதாயும் அமையட்டும்.

அருள்திரு. V. **ஜாண்சன் கில்பர்ட்**

24-01-2021

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு**

# நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு

**UNITY FOR JUSTICE AND PEACE**

எசே 37:15-28 பிலி 4:8-20

திபா 4 மத் 5:21-26

**"அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி அவற்றை ஒன்றாகச் சேர்"** (எசே 37:17).

கிறிஸ்தவ ஒன்றிப்பு (Ecumenism) என்பது கிறிஸ்தவத் திருச்சபைகள் தமக்குள்ளே அதிக ஒற்றுமை நிலையை அடையவும், ஒன்று சேர்ந்து செயல்படவும் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளைக் குறிப்பதாகும். கொள்கை, வரலாறு, நடைமுறை போன்றவற்றில் பிளவுபட்டிருக்கின்ற திருச்சபைகள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை, கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் மேற்கொண்டு வருகின்றது. ஒன்றிப்பு இயக்கத்தின் முயற்சியினால் 1947ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபத்தேழாம் நாள் தென்னிந்தியாவில் உருவான திருச்சபை ஐக்கியமே, தென்னிந்தியத் திருச்சபையாகும். இவ்வாறு திருச்சபையில் ஏற்பட்டு வரும் திருச்சபை ஐக்கியத்தைக் கொண்டாடவும், இன்னமும் பிரிந்திருக்கும் திருச்சபைகளும் இறைமக்களும் ஒன்றித்துச் செயல்படுவதற்கான முயற்சிகளைச் சிந்திக்கவும் இந்த ஞாயிற்றை, திருச்சபை நமக்கு ஒருமைப்பாட்டு ஞாயிறாகத் (Unity Sunday) தந்துள்ளது. எசே 37:15 முதலுள்ள பகுதியில் கடவுள் எசேக்கியேல் இறைவாக்கினரிடம் இரண்டு கோல்களை எடுக்கக் கூறுகின்றார். முதல் கோலை யூதாவுக்கும், அதைச் சார்ந்த இஸ்ரயேல் மக்களுக்கும் உரியது என்றும், இரண்டாவது கோலை, யோசேப்புக்கும் அவரோடு சேர்ந்த இஸ்ரயேல் வீட்டார் அனைவருக்கும் உரிய எப்ராயிமின் கோல் என்றும் எழுதி அவற்றை ஒரே கோலாயிருக்கும்படி, ஒன்றாகச் சேர்க்கும்படிக் கூறினார். அப்படிச் சேர்க்கையில் அவை இறைவாக்கினரின் கையில் ஒன்றாகும் என்றார். இந்த அடையாளச் செயல் மூலம் பிரிந்து நிற்கும் மனிதரை, நிறுவனங்களை ஒன்றிணைக்க ஆண்டவர் மூன்று உண்மைகளைச் சொல்கிறார்.

### *1. ஆண்டவரின் கையில் தருதல்* : (எசே 37:19)

இரண்டு கோல்கள் ஆண்டவரின் கையில் வரும்போது ஒன்றாகின்றன. ஆண்டவர் தொடக்கத்தில் இஸ்ரயேலருக்கு அரசராக இருந்தார். சாலமோனுக்குப் பின்பு ரெகபெயாம் காலத்தில் அதிகாரம்

அதிகமாகியது. அரசும் பிளவுற்றது. இதனால் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டன. எதிரிகளின் தாக்குதல்களும் அதிகரித்தன. இரண்டு நாடுகளும் வளங்கள் பலவற்றை இழக்கத் தொடங்கின. இந்நிலையில் இரு நாடுகளும் ஒன்றிணைய வேண்டும் என்று ஆண்டவர் அழைப்பு விடுக்கின்றார். பிரிந்து இருக்கும் மனிதர் அல்லது நாடுகள் ஒரு கட்டத்திற்கு மேல் தாமாக இணைவது கடினமானது. ஆனால் ஆண்டவரின் கையில் இருவரும் வருகிற பொழுது இணைப்பு சாத்தியமாகிறது. 2 கொரிந்தியர் 5:17இல் ஒருவர் கிறித்துவுக்குள் வருகிற பொழுது, பழைய பகைகள் ஒழிந்து புதிய மனிதராக மாறுகின்றார். கிறித்துவை ஏற்றுக்கொண்ட ஒநேசிமுவால் அவருடைய எஜமானாகிய பிலமோனுடன் இணைய முடிந்தது. மத் 5:23,24இல் ஆலயத்திற்குக் காணிக்கை செலுத்த வருகையில் சகோதர, சகோதரிகளுடன் ஏதாவது மனத்தாங்கல் அல்லது குறைபாடு உண்டென்று கண்டால், முன்பு போய் ஒப்புரவாகி விட்டு, பின்பு வந்து காணிக்கை செலுத்தும்படி ஆண்டவர் ஆலோசனை தருகிறார். ஜான் ஸ்டாட் என்பவர் புகழ்பெற்ற புதிய ஏற்பாட்டு அறிஞர். இங்கிலாந்தைச் சார்ந்த இவர், ஆசியாவுக்கு வரும்போதெல்லாம் அடிக்கடி புத்தர் சிலைகளைப் பார்த்திருக்கிறார். புத்தர் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பது துன்பம் களைந்து வாழ நம்மை அழைப்பதாய் உள்ளது என்றும், ஆனால் என்னைக் கடவுளுடன் ஒப்புரவாக்குவதற்கு இயேசு அடைந்த சிலுவைக் காயங்கள், மனிதருடனும் ஒப்புரவாக அழைக்கின்றன என்றும் ஜான் ஸ்டாட் கூறுகின்றார்.

### *2. அடுத்தவர் நலம் பேணுதல்* : (எசே 37:21,22)

கி.மு. 722 இல் வடநாடாகிய இஸ்ரயேல் அசீரியரால் சிறைபிடிக்கப்பட்டது. அப்பொழுது தென் நாடான யூதா, தான் நல்லவள் என்று பெருமைப்பட்டுக் கொண்டது. ஆனால், யூதாவும் உடனேயே சிறைப்பட்டதோடு எருசலேம் ஆலயமும் தரைமட்டமாக்கப்பட்டது. இந்நிலையில் இரு நாட்டினரையும் சுய தேசத்துக்கு வரப்பண்ணுவேன், அவர்களுக்கு ஒரே அரசர் இருப்பார் என்று எசேக்கியேல் இறைவாக்குரைத்தார். வ. 22 இல் சொந்த நாட்டிற்கு வந்தவர்கள் ஒரே எண்ணம் உடையவராயிருப்பதால், ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்வர். பிறர் நலனில் அக்கறை கொள்வர் என எசேக்கியேல் கூறுகின்றார். பொதுவாக மனிதருடைய சுயநலமே பிரிவினைகளுக்குக் காரணமாக அமைகின்றது. கர்னல் ஹென்றி கரிபி என்பவர் ஓய்வு பெற்ற இரட்சண்ய சேனை அதிகாரி ஆவார். இவர், "நாம் ஆலயம் வரும் போது கூட தனிப்பட்ட விருப்புடன் வருகிறோம். சிலர் சமயக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் எனும் உணர்வுடனும், வேறு சிலர் தங்களுடைய மதிப்பைக் காட்டவும், பக்தியை வெளிப்படுத்தவும் ஆலயம் வருகின்றனர்" என்கிறார். உரோமையர் 12:16 ஆம் வசனத்தில் "நீங்கள் ஒருமனத்தவராயிருங்கள்.

உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். நீங்கள் உங்களையே அறிவாளிகளெனக் கருதிப் பெருமிதம் கொள்ள வேண்டாம்.'' என்று பவுல் உரோமையருக்கு ஆலோசனை கூறுகின்றார். பிலிப்பியர் 2:3 இல் ''கட்சி மனப்பான்மைக்கும் வீண்பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்வாகக் கருதுங்கள்'' என்று பவுல் கூறுகின்றார். சுயநலனை வலியுறுத்துகையில் குடும்பங்களிலும் பிரச்சனைகள் எழுகின்றன.

### *3. ஆண்டவரின் வார்த்தையில் நிலைத்திருத்தல்* :

(எசே 37:26)

கடவுள் இஸ்ரயேலரோடு உடன்படிக்கை செய்வதாக எசே 26 ஆம் வசனத்தில் கூறுகின்றார். ஏன் உடன்படிக்கை செய்கிறாரெனில், 23 ஆம் வசனத்தில் அவர்கள் அருவருப்புகளை அகற்றி ஆண்டவரின் வழிகளில் நடப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. உடன்பாடு என்பது இருவரிடையே ஏற்படுவது. பழைய ஏற்பாட்டில் கடவுள் ஆபிரகாம், நோவா, இஸ்ரயேலர், தாவீது போன்றோரோடு உடன்படிக்கை செய்தார். ஆனால் இவ்வாறு செய்யப்பட்ட உடன்படிக்கைகளில் பெரும்பாலானவற்றை மனிதர் மீறியபடியால் அவை பாதியிலேயே முறிந்து விட்டன. கடவுள் ஒருபோதும் உடன்படிக்கையை மீறுகிறவரல்லர். மனிதரே கடவுள் செய்த உடன்படிக்கையிலிருந்து தாமாக விலகுகின்றனர். கடவுளோடும் மனிதரோடும் உறவில் நிலைத்திருக்க கடவுளுடைய உடன்பாட்டில் நிலைத்திருத்தல் மிகவும் அவசியமாகும். உடன்பாட்டில் முக்கியமானது அவ்வுடன்பாட்டில் சொல்லப்பட்ட கடவுளுடைய வார்த்தைகளாகும். எனவே, உடன்பாட்டில் நிலைத்திருத்தல் கடவுளின் வார்த்தைகளில் நிலைத்திருத்தலாகும். எ.கா. இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஒப்பந்தம் மீறப்படுகையில் இரு நாடுகளுக்கிடையேயான உறவு சிதைகிறது. கணவன்-மனைவியிடையேயான திருமண ஒப்பந்தம் மீறப்படுகையில் குடும்ப வாழ்வு சிதைகிறது. இத்தகைய உடன்படிக்கைகள் நிலைத்திருக்க உடன்பாட்டின் அம்சங்களில் அல்லது வார்த்தைகளில் நிலைத்திருப்பது மிகவும் இன்றியமையாதது. நாம் ஆண்டவரின் வார்த்தையில் நிலைத்திருக்கும்படி இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையை, கிறித்து நமக்காக ஏற்படுத்தினார் (1கொரி 11:25).

பிரிந்து நிற்கும் மனிதரை, நிறுவனங்களை ஒன்றிணைக்க ஆண்டவர், 'இரண்டு கோல்கள்' என்னும் அடையாளச் செயல் வழியாக மூன்று உண்மைகளைக் கற்றுத் தருகிறார். நம்மை ஆண்டவரின் கரத்தில் தந்து, அடுத்தவர் நலனைப் பேணி, ஆண்டவரின் வார்த்தையில் அல்லது அவரோடு கொண்டுள்ள உடன்பாட்டில் நிலைத்திருந்து ஒருமைப்பாட்டை வளர்க்க ஆண்டவர் உதவி செய்வாராக!

அருள்திரு. முனைவர் A. **இராயப்பன் ஐசக்**

# பொறுப்புள்ள குடியுரிமை

## RESPONSIBLE CITIZENSHIP

ஆமோ 5:7-15 உரோ 13:1-10
திபா 146 மாற் 12:13-17

**“நன்மையை நாடுங்கள், தீமையைத் தேடாதீர்கள்; அப்பொழுது நீங்கள் சொல்வதுபோல படைகளின் கடவுளாகிய ஆண்டவர் உங்களோடு இருப்பார்”**

(ஆமோ 5:14).

நமது நாடு விடுதலை பெற்றபின், நமக்கான சட்டங்களை நாமே வரையறுத்து மக்களாட்சியை மலரச் செய்ததைப் போற்றும் வகையில் இந்நாளைக் (26/01) குடியரசு நாளாக 1950-ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடுகிறோம்.

குடியரசு என்பதன் பொருள் மக்களாட்சி என்பதாகும். வாரிசு உரிமை கொண்ட மன்னராட்சி இல்லாததும், மக்களே தேர்தல் வாயிலாக ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதும், அரசு நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பு இருப்பதுமான ஓர் அமைப்பு என்கிற வரைவிலக்கணம் இதற்குத் தரப்பட்டிருக்கின்றது. “மக்களால், மக்களுக்காக, மக்களே (of the people, for the people and by the people) நடத்தும் ஆட்சி மக்களாட்சி” என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறையைக் கூறியுள்ளார்.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் முன்னுரை, “நாம் இந்திய மக்கள்” (We, the Indian People) என்று தொடங்குகிறது. நமது நாட்டை நமக்காகவும், வரும் தலைமுறையினருக்காகவும் மேலும் சிறப்பாகக் கட்டமைக்க இந்திய மக்களாகிய நாம் பொறுப்புள்ள குடிமக்களாக நம்முடைய பங்களிப்பைத் தருவது தேவையான ஒன்றாகும்.

மக்களாட்சியின் மிக முக்கியமான கூறுகள் சமத்துவம், நீதி, அமைதி, தன்செயலுரிமை, உடன்பிறப்புணர்வு, சகிப்புத் தன்மை ஆகியனவாகும். ஆனால் இன்று இவைகளெல்லாம் மேடைகளில் பேச்சு வடிவிலும், கட்டுரைகளில் எழுத்து வடிவிலும் மட்டுமே இடம் பெறுகின்றனவே தவிர, எந்த ஒரு தனி மனிதருடைய வாழ்விலும் வெளிப்படவில்லை. இதன் காரணமாக நாடும் நாட்டு மக்களும் பெரும் சவால்களையும், கடினங்களையும் எதிர்கொள்ளும் நிலை இருக்கின்றது.

ஆகவே இந்நிலை அகன்று சிறப்பான மக்களாட்சி மலர பொறுப்புள்ள குடிமக்களாக நாம் என்ன செய்ய வேண்டும்? என்பவைகளைத் திருவிவிலியம் சார்ந்து சிந்திப்போம்.

## *1. நீதியை நிலைநாட்டுங்கள்* : (ஆமோ 5:15)

கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களின் வாழ்வு சீரானதாகவும் சமத்துவமானதாகவும் இல்லை. வளமும், வாழ்வும் செல்வந்தருக்கும், வலியோருக்கும் மட்டுமானதாய் இருந்தன. ஏழை எளியவர்கள் நசுக்கப்பட்டுத் தாழ்வுற்றுக் கிடந்தனர். இப்படி வலியோரை வாழ்த்தி எளியோரை வீழ்த்தும் அநீதி நிறைந்த சமுதாயத்தை ஆமோஸ் இறைவாக்கினர் கடுமையாகக் கண்டிக்கிறார். நீதியையும், நேர்மையையும் வளர்த்துக் கொள்ளாத எந்த மக்களினமும் கடவுளின் கடும் தண்டனைக்கு உள்ளாவர் (விப 23:1-3; 6-8) என்று எச்சரிக்கின்றார்.

எளியவர்களை அடிமைகளாக விற்பது, வழக்குகளில் நீதியைப் புரட்டுவது, பாலியல் குற்றங்களில் ஈடுபடுவது, வட்டி மற்றும் அபராதம் பெறுவது, பிற தெய்வ வழிபாடு போன்றவைகளே இஸ்ரயேலர் மீதான கடவுளுடைய கோபத்திற்குக் காரணமாக ஆமோஸ் இறைவாக்கினர் கூறுகிறார் (2:6-8). சிறப்பாக, நகர்வாயிலில் இழைக்கப்படும் அநீதிகளை அதிகமாகக் கண்டிக்கிறார். நகர்வாயில் (Gate) என்பது நீதிக்காக மக்கள் நம்பிக்கையோடு கூடிவரும் இடம். (Site of most public activity and, the place where one would expect to find the elders of the community, who acted as Judges). ஆனால் இங்கும் மக்களுடைய நம்பிக்கைக்கு, எதிர்பார்ப்பிற்கு மாறாக, எளியவர்களின் நீதி செல்வந்தர்களால் புரட்டப்பட்டது. உண்மையை உரக்கச் சொன்னவர்கள் மண்ணில் தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள் (5:10).

பல்வேறு நிலைகளில் மக்களைக் கண்டித்தும், எச்சரித்தும் வந்தவர், அவர்கள் வாழ்வு பெற விரும்பி மனம் மாறவும் அழைக்கின்றார் (A call for action and not merely attitude). “தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள்; நகர் வாயிலில் நீதியை நிலை நாட்டுங்கள்” (5:15a) என்கிறார்.

நாமும் இன்று வலியோரை வாழ்த்தி, எளியோரை வீழ்த்தும் அநீதி நிறைந்த சமுதாயமாகத்தான் வாழ்ந்து வருகிறோம். இன்றைய நகர்வாயில்களான நீதிமன்றங்களிலும் அதிகார வர்க்கத்தினரால், செல்வந்தர்களால் எளியவர்கள் பலரின் நீதி கேள்விக்குறியாகத்தான் உள்ளது. நீதி மறுக்கப்பட்ட பலரின் அவலக்குரல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. இச்சூழலில் பொறுப்புள்ள குடிமக்களாக நம்முடைய பங்களிப்பு என்ன? என்பதை நாம் உணர வேண்டும். “பேசத் தெரியாதவர் சார்பாகப் பேசு; திக்கற்றவர்கள் எல்லாருடைய உரிமைகளுக்காகவும் போராடு” (நீமொ 31:8) என்று நீதிமொழிகளின் ஆசிரியர் குறிப்பிடுகிறார். நாம் அநீதிகளை விடுத்து, அனைத்துத் தரப்பு மக்களோடும் நின்று, நீதிக்கான பாதையை உருவாக்கி அதில் பயணிக்க வேண்டும். ஏழை எளிய மக்களுக்காக நீதி மறுக்கப்பட்டவர்களுக்காகப் பரிதாபப்படுவதை

விட்டுவிட்டு அவர்களின் உணர்வுகளைப் புரிந்து, அவற்றுக்கு மதிப்பளித்து, சமுதாயத்தில் அவர்களின் குரலாய் ஒலித்து, உரிமைகளைப் பெற்றுத் தந்து, எல்லோரும் மகிழ்ச்சியாய் இணைந்து வாழும் விதமாக நீதியை நிலைநாட்ட வேண்டும். இயேசு கிறிஸ்துவும் நீதியை அதிகமாக வலியுறுத்துகின்றார். நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோராய் வாழ நம்மை அறிவுறுத்துகின்றார் (மத் 5:6). தவறியோரைக் கண்டிக்கவும் செய்தார் (லூக் 11:42).

"Justice denied anywhere, diminishes justice everywhere." ஓர் இடத்தில் மறுக்கப்படும், நீதி மற்றெல்லா இடங்களில் நிலைபெற்ற நீதியை பொய்யாக்குகின்றது என்பது Martin Luther king Jr. என்பவருடைய வாசகமாகும். நாமும் பொறுப்புள்ள குடிமக்களாய் எங்கும், எதிலும் நீதியை நிலைநாட்ட முன்வருவோம்.

**2. திருச்சட்டத்தை நிறைவேற்றுங்கள்:** (உரோ. 13:8)

பிறரிடத்தில் அன்புகூர்பவர், திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார் என்று தூய பவுல் கூறுகிறார். இஸ்ரயேலருக்குக் கடவுளால் தரப்பட்ட திருச்சட்டம் இவ்வாறு அறிவுறுத்துகின்றது; "விபச்சாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறருக்குரியதைக் கவர்ந்திட விரும்பாதே..."

இதைக்குறித்து தூய பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில்,இவைகளெல்லாம் உனக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு கூர்வாயாக என்ற கட்டளையில் அடங்கியுள்ளன. அன்பு அடுத்திருப்பவருக்கு தீங்கிழைக்காது. ஆகவே அன்பே திருச்சட்டத்தின் நிறைவு என்று குறிப்பிடுகின்றார் (உரோ 13:10).

இன்று சமுதாயத்தில் நடைபெறும் அநீதிகளுக்கும், தீமைகளுக்கும் காரணம் அடுத்திருப்பவர் மீது அன்பு செலுத்தாததே ஆகும். சமுதாயத்தில் நீதிக்கும் அமைதிக்கும் அடிப்படையாக இருப்பது அன்பு என்னும் செயற்பாடே! ஆகவே தான் தூய பவுல் "உடன் பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள்; பிறரை உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்" என்று கூறுகிறார் (உரோ 12:10). நம் ஒவ்வொருவரிடமும் நிபந்தனையற்ற அன்பு வெளிப்பட வேண்டும். நிபந்தனையற்ற அன்பை வளர்த்துக் கொண்டால் மட்டுமே பொறுப்புள்ள குடிமக்களாய் நாம் வாழும் சமுதாயத்தில் திருச்சட்டத்தை நிறைவேற்ற முடியும்.

இன்று பலர் எளியவர்களின் சுதந்திரத்தைப் பறித்து, அவர்களை அடிமைகளாக்கி, தங்கள் சட்டங்களை அவர்கள் மீது சுமத்தி அநீதிக்கும் வன்முறைக்கும் வழிவகுக்கின்றார்கள். அதிகமாக நடைபெறும் காவல்நிலைய மரணங்களும், ஆணவப் படுகொலைகளும், பாலியல்

துன்புறுத்தல்களும் இதன் வெளிப்பாடே. நீதிமொழிகளின் ஆசிரியர் "அன்பும் உண்மையும் மன்னவனை ஆட்சியில் நீடித்திருக்கச் செய்யும்; அன்பாகிய அடிப்படையிலே தான் அவனது அரியணை நிலைத்து நிற்கும்" (20:28) என்று கூறுகிறார். அதிகாரமும், அரசியல் பலமும் எப்போதும் நமக்குத் துணையாயிராது! அன்பென்னும் உணர்வே நம்மை நிலைத்துநிற்கச் செய்யும் என்னும் புரிதலோடு ஆட்சி, அதிகாரம், தலைமைத்துவம் மற்றும் ஏனைய நிலைகளில் இருப்பவர்கள் தன்னலமற்ற அன்பைத் தங்களில் வெளிப்படுத்திட வேண்டும்.

மாற்கு நற்செய்தியில், பரிசேயரில் சிலர் இயேசுவிடம், சீசருக்கு வரி செலுத்துவது பற்றி கேள்வி கேட்டார்கள். இயேசு, நாணயத்திலிருந்து உருவத்தை, பரிசேயரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, சீசருக்கு உரியதை சீசருக்கும், சீசரைவிட உயர்ந்தவரான கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள் என்றார் (மாற் 12:13-17). கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? "பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே; உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக. நான் ஆண்டவர்!" (லேவி 19:18) என்று கூறுகிறார். கடவுளும் தன்னலமற்ற அன்பையே நம்மில் எதிர்பார்க்கிறார். "உனக்கு அடுத்திருப்பவர்" என்பது தேவையிலிருக்கும் அனைவரையும் உள்ளடக்குகிற பரந்து விரிந்த கண்ணோட்டமாகும்.

திருவள்ளுவர், "அன்பு இல்லாதவர் எல்லாவற்றையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்ளும் தன்னலக்காரராய் இருப்பார். அன்புடையவரோ தம் உடம்பையும் பிறர் நலனுக்காக ஈந்து மகிழும் இயல்புடையவராக வாழ்வார் (அன்புடைமை, குறள் 2)" எனப் பொருள்படப் பாடுகிறார். இப்படிப்பட்ட அன்பால்தான் திருச்சட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று தூய பவுல் கூறுகிறார். ஆகவே பொறுப்புள்ள குடிமக்களாய்த் தன்னலமற்ற, அடுத்தவருக்குத் தீங்கிழைக்காத அன்பை நம்மில் மலரச்செய்து திருச்சட்டத்தை நிறைவேற்ற முன்வருவோம்.

திருப்பாடல் 146-இல் ஆண்டவர் அனைத்தையும் படைத்து பாதுகாப்பவர், துன்புற்றோருக்கு உதவுபவர் என்று புகழப்படுகிறார். எளியோருக்கும், துன்புறுவோருக்கும் நன்மை செய்யாமல் ஆண்டவரை வழிபடுவது ஏற்புடையது அன்று; மாறாக, அன்பு, நீதி போன்ற செயல்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளுவதே ஏற்புடையதாக இருக்கும். "அன்பர்களே, நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள்..." (கலா 5:13) எனும் மறைவார்த்தைக்கேற்ப பொறுப்புள்ள குடிமக்களாய் வாழ்ந்து வளம் பெறுவோம்.

திரு. M. **பிரிஸ்டன் வினோ**

31-01-2021

உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு

# படைப்பின் நன்னலம்

## THE GOODNESS OF CREATION

தொநூ 1:24-31 எபே 1:3-14
திபா 104:1-13 மத் 6:9-13

**"கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன."** (தொநூ 1:31)

படைப்புகள் அனைத்தும் கடவுளால் உருவாக்கப்பட்டவை என்பது எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்கிற உண்மை. படைப்பு எப்படி உருவானது? என்பது அறிவியல் எழுப்பும் கேள்வி (Science deals'how' questions), படைப்பு ஏன் உருவானது, எதற்கு உருவானது என்பதே இறையியல் சிந்தனையாகும். (Theology deals why/what questions). கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் "நன்றாய்" இருந்தன (தொநூ 1:31) என்பதே படைப்பு ஏன்? என்பதற்கான பதிலாய் இன்று நம்முன் வைக்கப்படுகிறது. படைப்பு நன்மை, அது நன்று, கடவுளின் நல்வினை, அவரின் உபகாரம் என்றெல்லாம் இதனைப் பொருள்படுத்திக் கொள்ளலாம்.

படைப்பின் நன்னலத்தை, நன்மையைக் குறித்துப் பேசும் போது, பெரும்பாலும் நீர், நிலம், காற்று, வான், நெருப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய இயற்கையை மட்டுமே எண்ணுகிறோம். படைப்பின் மகுடமாகப் படைக்கப்பட்ட மனிதர்களாகிய நம்மை விட்டு விடுகிறோம். நாமும் ஏனைய படைப்புகளும் நன்மையாகப் படைக்கப்பட்டவர்கள். ஒரு நிறுவனத்தில் கடைநிலையிலிருக்கிற சாதாரணத் தொழிலாளி தவறு செய்தாலும், அந்நிறுவனத்தின் உயர் நிர்வாகியாக (CEO/Manager) இருப்பவரே அப்பொறுப்பை ஏற்க வேண்டியவர். அதுபோல கடவுள் நன்னலத்துடன் படைத்த படைப்பில் எந்த நன்மை குறைவுபட்டாலும் அதனை நிர்வகிக்கும் நிர்வாகியாகப் (தொநூ 1:26,28) பொறுப்பைப் பெற்றுள்ள நாமே பொறுப்பேற்க வேண்டியவர்கள். படைப்பின் நன்னலத்திற்குப் பொறுப்பாளிகள் நாம், ஏனென்றால் நாமும் நன்னலத்தோடு சக படைப்புகளின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளோம். ஆனால் நமது செயல்பாடுகள் "தன்னலத்தோடு" இருப்பது வேதனை தரும் செய்தி.

குரு ஒருவர் கற்பனை நிகழ்வு ஒன்றை, தன் சீடர்களிடம் கூறினார். நீங்கள் அடர்ந்த புதர்கள் மண்டிக்கிடக்கும், ஒழுங்கற்ற, வாழச் சாதகமற்ற காட்டுப் பகுதியில் அகப்பட்டுக் கொண்டீர்கள். உங்களுக்கு முன்னே பெரிய காட்டாறு நிறைய தண்ணீர் பாய்ந்து செல்லுகிறது. ஆற்றின் மறுகரையைப்

பார்த்தால் மிக ஆழமாக, வாழ்வதற்கேற்ற, அமைதியான பகுதியாகத் தென்படுகிறது. ஆனால் ஆற்றைக் கடக்க வழி தெரியவில்லை; என்ன செய்வது? என விழி பிதுங்கி நிற்கிறீர்கள். ஒரு சிந்தனை உதிக்கிறது. சில மரங்களை வெட்டி, துண்டுகளாக்கி 'மரத்தெப்பம்' ஒன்றை உருவாக்குகிறீர்கள். உங்களையும் தெப்பத்தையும் காட்டாறு இழுத்துச் செல்லாமலிருக்க, கயிறு போன்ற வள்ளிக் கொடி ஒன்றை மரத் தெப்பத்தின் ஒரு பக்கத்தில் கட்டிக் கொண்டு, மறு முனையை கரையில் நிற்கும் மரம் ஒன்றில் இறுக்கமாகக் கட்டிவிட்டு வெற்றியும் பெறுகிறீர்கள். அழகான, வாழ ஏற்ற அக்கரையில் சேர்ந்த நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று குரு சீடர்களைப் பார்த்துக் கேட்டார்.

சீடன் ஒருவன் சொன்னான், தனக்கு உதவிய மரத்தெப்பத்தை பத்திரமாக எடுத்து ஒளித்து வைப்பேன். அடுத்தமுறை பயன்படுத்துவேன். மற்றொருவன் சொன்னான், அதை என்னோடு எடுத்துச் செல்வேன், என் பிள்ளைகளுக்காய், பிள்ளைகளின் பிள்ளைகளுக்காய் என்றான். குரு மூன்றாவதாகச் சொன்னார். அது உன்னுடையதல்ல; உன்னுடன் எடுத்துச் செல்ல, உனக்கு மட்டும் உரியதும் அல்ல; அதை ஒழித்து வைக்க, அது நன்னலத்தோடு படைக்கப்பட்டது. அது தன் கடமையைச் (நன்மையை) செய்யட்டும், அதை அங்கேயே விட்டு விடு என்றார்.

படைப்புகள் ஒவ்வொன்றும் சுயநலத்திற்கானதல்ல, பொதுநலனுக்கானது. அதில் மனித இனமும் விதிவிலக்கல்ல. "மனுக்குலம் எவ்வாறு படைப்பின் நன்னலம்?" என்பதையும், படைப்புகளில் ஒன்றாகிய நாம் செய்ய வேண்டிய நன்மை என்ன? என்பதையும் நம் சிந்தையில் உணர்வதே அருள்நாதர் நமக்குத் தருகின்ற அவரது அருள் வார்த்தை. அதனைத் தியானிப்போம்.

### *1. ஆண்டவர் அருளிய அடையாளம்* : (The Personification)

தொநூல் 1:26,27இல் சொல்லப்பட்டுள்ளது, "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்." கடவுள் மனுக்குலத்திற்கு அருளிய அவரது உருவே, அவர் அருளிய அடையாளம். அவ்வடையாளம்தான் அவர் மனுக்குலத்திற்கு செய்திருக்கும் பிரதான நன்மை.

குடும்பங்களில் குழந்தைகள் பிறந்ததும், பார்க்கின்றவர்கள் சொல்வார்கள், குழந்தை அப்பாவை அல்லது அம்மாவைப் போல இருக்கிறது. அதைக் கேட்கிறபோது பெற்றோருக்கு மகிழ்ச்சி. என் பிள்ளை என்னைப் போல இருக்கிறது. பிள்ளை வளருகிறபோது பிள்ளைக்கும் சந்தோஷம். நான் அப்பா/அம்மா போல இருக்கிறேன். நான் என் பெற்றோரின் சாயலில் இருக்கிறேன் என்று எந்தப் பிள்ளையும் அதற்காக வருத்தப்படுவதில்லை. கடவுளின் பிள்ளைகளாகப் படைக்கப்பட்ட நமக்கு அவர் அருளியிருக்கும் அவரது சாயல் என்கிற அடையாளம் மிகுந்த மகிழ்ச்சியின் செய்தியே. அது உரிமையின் அடையாளமும் கூட.

அவ்வடையாளம் நமக்குத் தருவது வெறும் உருவம் அல்ல, ஆண்டவரோடுள்ள திருக்குடும்ப உறவு. எபேசியர் திருமுகத்தில் 1:4,5இல் திருத்தூதர் பவுல் சொல்லுகிறார், "உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தெரிந்தெடுத்தார், இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார்..." என்பதாக. ஆண்டவர் அருளிய அடையாளம் தரும் ஆழமான உறவு நிலை, அவரது பிள்ளைகள் என்கிற அடையாளம். உலகம் தோன்றுமுன்னே முன்குறிக்கப்பட்ட அடையாளம் அது. எவ்வளவு உயர்வான நன்மையை நமக்குச் செய்திருக்கிறார்.

இன்று உலகில் உறவு நிலைகளை அடையாளம் காண்பதும் கடினமாகிவிட்டது. பிள்ளைக்காய் உரிமை கோரும் பெற்றோர், வாரிசுரிமைகளுக்காய் மரபணு பரிசோதனை செய்து கொள்ளும் பிள்ளைகள் என்று சூழ்நிலைகள் மாறிவிட்டன. ஆனால் ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம், சோதனைகளால் அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் அல்லர் கிறிஸ்து இயேசு மூலமாகச் சொந்தமாக்கப்பட்ட ஆண்டவருடைய பிள்ளைகள். இந்த உறவு நிலையின் வெளிப்பாடாகத்தான் அருள் நாதர் தமது பிள்ளைகளாகிய நமக்கு மன்றாடக் கற்றுத்தரும் போது தூய மத்தேயு 6:9இல் "விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே" என அழைக்கக் கற்றுக் கொடுக்கிறார். இந்த நன்மையைப் பெற்றிருக்கிற நாம் செய்ய வேண்டிய பிரதி நன்மை என்ன?

இறைவரைப் பற்றிய தேட்டம் உலகில் அதிகரிக்கிறது. எங்கு, எதில், எப்பொழுது காணலாம்? தூணிலும், துரும்பிலும் இருப்பார் என்பார் சிலர், காணக்கூடாதவர், உருவம் அற்றவர் என்பார் இன்னும் சிலர். ஆனாலும் தேட்டம் தீர்ந்தபாடில்லை. எசாயா 40:18இல் இஸ்ரயேல் மக்களிடம் எசாயா இறைவாக்கினர் கேட்கிறார், "இறைவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்?", எந்தச் சாயலை அவருக்கு நிகராகக் கொள்வீர்கள்? அது கடவுளுக்குச் செய்யும் பிரதி நன்மையாக இருக்க முடியுமா? அவரது படைப்புகளை அவருக்கு நிகராக்க முடியாது.

கடவுள் நன்று என்று கண்ட படைப்பின் நன்னலம் காக்கப்பட, அவரின் அடையாளத்தைப் பெற்ற அதிகாரிகளாகிய நாம் படைப்பின் நன்னலத்தைப் பராமரிப்பதின் வழியாக ஆண்டவர் அருளிய அவரது அடையாளத்தை நம்மிலே உறுதிப்படுத்துகிறோம். படைத்தவரின் பதிலாட்களாய் உலகில் உயர்ந்து நிற்கிறோம். இறையவரை எங்கும் தேடி நிற்கும் உலகிற்கு இறைவரின் அடையாளத்தை நம்மிலே காண்பிக்கிறோம். இதுவே நாம் செய்யும் பிரதி நன்மையாக இருக்க வேண்டும்.

### ***2. ஆண்டவர் அருளிய அனுகூலம்*** : (The Partnership)

"ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொநூ 1:27)

மனிதன் தனித்திருப்பது நல்லதன்று, தகுந்த துணையை உருவாக்குவேன் (தொநூ 2:18) என்று துணையாயிருக்கவும்,

தூண்டுகோலாயிருக்கவும், துன்பத்தில் ஆறுதலாயிருக்கவும் கடவுள் நமக்கு அருளியிருக்கும் உற்றதுணை அவர் அருளிய அனுகூலமே. அதுவே ஏற்ற நன்மை. இந்த அனுகூலத்தை முழுப்படைப்புகளுக்கும் செய்திருப்பது அனைத்தையும் சமமாய், நன்றாய்ப் பார்க்கும் அவரது பார்வையைக் காண்பிக்கிறது. உதாரணமாக, செடி, மரங்கள் தொடங்கி பறவை, பட்சிகள் என்று எல்லா உயிர்களிலும் ஆண், பெண் என்கிற அனுகூலத்தை உருவாக்கியிருக்கிறார்.

தனிமை பயங்கரமானது. வயோதிபத்திலே, குடும்பச் சூழ்நிலைகளினாலே தனிமையாக வாழ்கிறவர்களுக்கு அதின் வேதனை தெரியும். கொரோனாவிற்குப் பிற்பாடு "தனிமைப்படுத்துதல்" என்னும் வார்த்தை பிரபலமாகிவிட்டது. இன்று இதன் வேதனையைப் புரியாமல் தனிமைப்படுத்திக் கொள்வதை வாடிக்கையாக்கிக் கொள்கிறார்கள். தனிமை அனுகூலம் இல்லை, அது ஆபத்தானது. தனிமை எவ்வளவு உறுதியான பக்திமான்களையும் தடுமாற வைக்கும், பாவத்தில் தள்ளும், பாதாளத்திற்கு எடுத்துச் செல்லும். ஆகவே தான் அனுகூலமாய் உற்ற துணையை மனுக்குலத்திற்குத் தமது நன்னலமாகக் கடவுள் தந்திருக்கிறார். ஆணானாலும், பெண்ணானாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் அனுகூலமானவர்களே! பேதம் இல்லை.

வாழ்வின் அனுகூலமான சூழலை, துணையிடம் பெற முடியாதவர்கள் தேடிச் செல்லும் மூன்றாவது துணை "இயற்கையும்-இறைவரும்." வாழ்க்கைப் பயணத்தில் சூழ்நிலைகளினால் வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்படுகிறவர்களுக்கு ஆண்டவரே அடைக்கலம், பெலன், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணை என்று திபா 46:1 சொல்கிறது. எச்சூழலில் வாழ்கிறவர்களும் ஆற்றலும், அனுகூலமும் பெறும்படி தாம் படைத்த முழுப்படைப்புகளையுமே மனுக்குலத்திற்கு அனுகூலமான துணையாக ஆண்டவர் தந்திருக்கிறார். ஆகவேதான், ஆறுதலற்ற நேரங்களில் அனுகூலமான துணையான இறைவனை இயற்கையிடம் தேடுகிறோம். எனவே கடற்கரைகளும், சுற்றுலாத்தலங்களும், பறவை மற்றும் விலங்குகளின் சரணாலயங்களும் ரசிக்க ஏற்ற இடங்களாக மாறிவிட்டன. இயற்கை அனுகூலமான துணையாக இருக்கிறபடியால் நிலமும், கடலும், இயற்கையும் பெண்பாலினமாகவே கருதப்படுகிறது.

இயேசு நாதர் பயன்படுத்திய உருவகச் செய்திகள் பெரும்பாலும் இயற்கையிலிருந்தே எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. திராட்சைத்தோட்ட உவமை, விதைக்கிறவர் உவமை, அடைக்கலான் குருவி, ஆடு, தொழுவம், கடல், கடுகு என்பன போன்றவை இயற்கை நம் அனுகூலமான துணை என்பதை உணர்த்துகிறது. அதேநேரம் நம்மையும் உடன் படைப்புகளுக்கு

அனுகூலமான நன்மையாகவே ஆண்டவர் படைத்திருக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். படைப்புகளுக்கும் நமக்கும் இடையே இருக்கும் இந்த அனுகூலப் பாலம் உடைந்து போகாமல் பாதுகாக்க வேண்டியது நம் கடமை. அதுதான் நாம் ஆண்டவருக்குச் செய்யும் பிரதி நன்மையாக இருக்க முடியும். இன்று இவ்வனுகூலப் பாலத்தை உடைப்பதை இலாபமாகப் பார்க்கிறோம். உண்மையிலே அது இல்லாமல் இழப்பே என்பதை உணர ஆண்டவர் அழைக்கிறார்.

### *3. ஆண்டவர் அருளிய ஆற்றல்* : (The Power)

தொநூ 1:28இல் சொல்லப்பட்டுள்ளது, "....பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். ...அனைத்தையும் ஆளுங்கள்." பெருகுகின்ற ஆற்றலை, கடவுள் மனுகுலத்திற்கு ஆசியாகவே, நன்மையாகவே அருளியிருக்கிறார்.

பலுகிப் பெருகுவது ஆசீர்வாதம், அது ஆண்டவர் அருளிய ஆற்றல். நமக்கு அருளப்பட்ட ஆற்றல் நமது வாழ்வோடு முடிந்து போகிறதில்லை. எந்த உயிரும் தனது பிள்ளையை ஈன்று விட்டு அப்படியே விட்டுவிடுகிறதில்லை. அதனைப் பாதுகாப்புடன் வளர்க்க எவ்வளவோ பிரயாசப்படுகிறது. தனது ஆற்றல் முழுவதையும் அதற்காகச் செலவு செய்கிறது. நாமும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் மட்டும் அல்ல, அவர்களை வளர்த்து ஆளாக்குவதிலே நம் ஆற்றல் முழுவதையும் செலவிடுகிறோம். வாழ்வதும் வாழவைப்பதும் தான் ஆண்டவர் அருளிய ஆற்றலின் உள்ளர்த்தங்கள் (Power to live and let live)

இதுவும் பலவேளை தவறாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. நம்மையும் நம் எல்லைகளையும் வளர்த்துவதிலே, பெருக்குவதிலே பெருமளவு நமது ஆற்றலைச் செலவழிக்கிறோம். கடவுள் நன்று என்று படைத்த ஒரு சக படைப்பை நமது அதிகாரத்தின் ஆற்றலால் அழித்து, நம்மையும் நமக்குரியவைகளையும் பெருக்குவதை எப்படி நன்மையாகப் பார்க்க முடியும்? அழிப்பதையல்ல, வாழவைப்பதையே ஆற்றல் என்று சொல்ல முடியும்.

அறிவு ஜீவிகளாகிய மனித இனம் விளம்பரப்படுத்திச் செய்யும் மரம் நடுதல் போன்ற படைப்புகளின் பெருக்கத்தை, சத்தமே இல்லாமல் விலங்குகள், பறவைகள் விதைப் பரவல் மூலம் செய்து விடுகின்றன. பழங்களுடன் கூடிய விதைகளை உண்டு எச்சத்தின் வழியாக எங்கும் மரம், செடிகளை வளர்த்துக் கொடுக்கின்றதில் வவ்வால்கள் முதலிடத்தில் இருக்கின்றன. அப்படியானால் யார் ஆற்றல் உள்ளவர்கள்! எபேசியர் 1:8இல் பவுலார் கூறுகிறார், கடவுள் அனைத்து ஞானத்தையும் அறிவுத் திறனையும் தந்துள்ளார். இந்த ஞானம் நம் வழியாக, நமது ஆற்றலாக வெளிப்பட வேண்டும். அது தான் நாம் ஆண்டவருக்கும் அவரது

படைப்புகளுக்கும் செய்யும் நன்மை. மீன்கள் பெருக்கமடையும் காலத்தை மீன் பிடிக்கத் தடைசெய்யும் காலமாக அரசு அறிவிக்கும் போது, மீன் உணவைத் தேடாமல் அதைக் கடைப் பிடிப்பதுதான் ஆண்டவர் அருளியிருக்கும் ஆற்றலில் வெளிப்படும் ஞானம். ஏனென்றால் பெருகுவதே ஆசீர்வாதம்.

இயேசுநாதர் கற்றுத் தந்த இறைவேண்டலில், "இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்" (மத் 6:11) என்று மன்றாடும்போது 'நாங்கள் இன்று வாழ்வதற்கான வாழ்வின் உரிமையைத் தாரும் என்று கேட்கிறோம்' (We ask our right to live). அதே மன்றாட்டைக் கேட்கும் உரிமை கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் படைப்புகளுக்கும் உள்ளது. இதை அறியும் ஞானம் நமது ஆற்றல் என்றும், நம்மையும், முழுப்படைப்பையும் நன்னலத்தோடு இறவாமல் வாழச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்த இறங்கிவந்த இயேசு என்னும் உணவு. "அவரே வாழ்வு தரும் உணவு" என்கிற மாபெரும் உண்மையை யோவான் 6:48 தெரிவிக்கிறது. நமது வாழ்வுக்கான, வளர்ச்சிக்கான போராட்டங்களும், தேடல்களும், நிலையான வாழ்வைத் தராது. அவை மாயை. "நிலையான நகரம் நமக்கிங்கு இல்லை, நித்திய வீட்டில் தானே" என்கிற பாடலின் வரிகளை உணர்ந்து படைக்கப்பட்ட படைப்புகளின் நன்னலமும், படைப்புகளின் மகுடமாகிய மனுக்குலத்தின் நன்னலமும் குறையாமல், ஆண்டவர் அருளியிருக்கும் அடையாளத்தைக் கொண்டு, அனுகூலங்களைப் பயன்படுத்தி, ஆற்றலுடன் நாமும் வாழ்வோம், நம் உடன் படைப்புகளையும் வாழச் செய்வோம்.

அருள்திரு. J. **ஹெரால்டு அனித்**

07-02-2021



# படைப்பின் வீழ்ச்சிநிலை

## THE FALLEN-NESS OF CREATION

தொநூ 3:1-10 உரோ 3:21-26
திபா 53 மத் 18:23-35

**"ஏனெனில், எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்"** (உரோ 3:23).

கடவுள் தம் வார்த்தையினால் இவ்வுலகத்தைப் படைத்து அனைத்தையும் நல்லதெனக் கண்டார். கடவுளின் படைப்பையும் அவரது நோக்கத்தையும் சரியாய்ப் புரிந்து அதற்கேற்ப மானுடம் வாழ வேண்டுமென்பதே கடவுளின் எதிர்பார்ப்பு. தொடக்கக் கால பெற்றோராகிய ஆதாம், ஏவாள் என இருவரையும் கடவுளே தமது உருவில் படைத்து இயற்கையோடு இயைந்து வாழவும், கடவுளுக்கு அஞ்சி நடக்கவும், ஒருவருக்கொருவர் அமைதியுடனும் அன்புடனும் இருக்கவும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதோடு மானிடம் இறைவனோடும், இயற்கையோடும் பிற உயிர்களோடும் இசைந்து ஒரு கூட்டு வாழ்வை அவனியில் இயக்கவே படைக்கப்பட்டது. ஆனால் மனிதனின் கீழ்ப்படியாமையால் படைப்பு வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டது. வீழ்ச்சி என்பது இருப்பு நிலையைக் கடந்து தாழ்வான நிலைக்குச் செல்வது அல்லது இயல்பு நிலையை இழந்து தவிப்பது எனப் புரிந்து கொள்ளலாம். இந்த வீழ்ச்சியைப் படைப்பின் வரலாற்றோடு திருமறையின் வெளிச்சத்தில் நின்று சிந்திப்போம்.

### *1. மாண்பினைச் சிதைத்த மானிடம்* : (தொநூ 3:6)

படைப்பாளராகிய கடவுள் தமது சொந்த உருவில் மனிதரைப் படைத்து, நேசித்து, படைப்புகள் அனைத்தின் மீதும் அதிகாரிகளாகவும், அவற்றை ஆளுகை செய்யவும் அனைத்தையும் பண்படுத்தவும், பாதுகாக்கவும் பணித்தார். மனித மாண்புகள் சிதைவுறாதிருக்கவும் நேரிய வழிகளில் நடந்து தன்னைக் காத்திடவும் கடவுள் மானிடத்திற்குச் சில கட்டளைகளையும் கொடுத்தார். மானுடம் உத்தமமாயிருக்க வேண்டுமென்பதும் தம்மோடு உறவுடனிருக்க வேண்டுமென்பதும் அவர்தம் விருப்பம். கடவுளின் இந்த விருப்பத்தினை உலகில் ஒவ்வொருவரும் நிறைவு செய்தால் மட்டுமே மனித மாண்பு சிதைவுறாதிருக்கும்.

கடவுள், வேண்டாமென விலக்கி வைத்த மரத்திடமும் அதன் கனியிடமும் ஏவாளின் பார்வை விழுந்தது. தீயோனின் வார்த்தையால் கவரப்பட்டு, கடவுள் விலக்கிய மரத்தின் கனி சுவையானதாகவும்

பார்வைக்கு இனிமையாகவும் அறிவைத் தெளிவிக்கிறதாகவும் எண்ணி அதனைப் பறித்து உண்கிறார். தான் படைக்கப்பட்ட உன்னத நோக்கத்தையும் மாண்பையும் மானிடம் சிதைத்தது. உலகு சார்ந்தவையான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு ஆகியவை தந்தையிடமிருந்து வருவனஅல்ல, அவை உலகிலிருந்தே வருபவை என 1யோவான் 2:16இல் காண்கிறோம். தாமஸ் வாட்ஸன் என்பவர் சொல்லுகிறார்: "தீயோனே பாவத்தின் தந்தை, அவமானமே அதன் துணை, மரணம் தான் அதன் கூலி." கடவுளின் கட்டளைக்குக் கட்டுப்படாததாலும் கீழ்ப்படியாததாலும் மானிடம் தனக்குரிய மாண்பினைச் சிதைத்துக் கொண்டது. இன்றும் மானிடம் சுயநீதி, சுயவிருப்பம், சுயதீர்மானம் இவைகளால் மாண்பைச் சிதைக்கிறது.

மாறிவரும் உலகில் தீமைக்கு உடன்படாமல், அதற்கு அடிமையாகாமல் கடவுளின் திருவுளத்தை நிறைவு செய்வதே என் பணியெனக் கருதி வாழ்ந்தால் மனித மாண்பு சிதைவுறாது காக்கப்படும்.

**2. மறைத்திடத் துணிந்த மானிடம்** : (தொநூ 3:9-10)

கடவுள் மனிதனை ஏற்ற துணையுடன் படைத்து பாதுகாப்பான, இயற்கை எழிலும் வளமும் கொண்ட ஏதேன் தோட்டத்தில் இருவரையும் வைக்கிறார் (தொநூ 2:8). தோட்டத்தில் இவ்விருவரிடமும் அன்பு, உறவு, உயர்வு, உரிமை, பணி, பொறுப்பு போன்ற உயர்ந்தவற்றை கடவுள் எதிர்பார்த்தார் (தொநூ 2:15,19). ஆனால் அவர்கள் தீயோனின் தந்திரத்தாலும் விலக்கப்பட்ட மரத்தின் கவர்ச்சியாலும் வஞ்சிக்கப்பட்டதால் முழுப் படைப்பும் சாபத்திற்குள்ளானது. இது தனிநபர் வீழ்ச்சி மட்டுமல்ல, ஒட்டுமொத்த வீழ்ச்சியாக இன்றும் தொடர்கிறது. தாராளமயமாக்கல், உலகமயமாக்கல், நவீனம் என்னும் பெயரில் இன்றும் மனிதகுலம் ஏதோ ஒரு நிலையில் சிறார்கள் முதல் பெரியோர் வரை ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. விலக்கப்பட்ட கனியை உண்டால், கடவுளைப் போல் ஆவீர்கள் என்பது தீயோன் கொடுத்த விளம்பரம். கவர்ச்சியான விளம்பரம் ஏமாற்றத்தையே அளித்தது. கனியைப் பறித்து உண்டபின் கடவுளைப் போல் மாறவில்லை. வாழ்வின் ஒளி இழந்தனர், தாமாக இறை உறவிலிருந்து தங்களை விலக்கிக் கொண்டனர். கடவுளின் கட்டளையை அவமாக்கிய பின் ஆண்டவரை ஏறெடுத்துக்கூடப் பார்க்கத் துணியாமல் வெட்கப்பட்டுத் தங்களைக் கடவுளிடமிருந்து மறைத்துக் கொண்டார்கள். தோட்டத்தில் கடவுள் இருவரையும் அழைத்தபோது அவருக்குக் கீழ்ப்படியவில்லையே என்ற குற்ற உணர்வு அவர்களிடம் அதிகரித்ததால் கடவுளைக் காணத் துணிவின்றி ஓடி ஒளித்துக் கொண்டனர். கடவுளின் சத்தத்தைக் கேட்டதும் மகிழ்வோடு உறவாடவும் வழிபடவும் வேண்டிய மானிடம் விழி பிதுங்கி, வழி விலகி நின்றது. அனனியாவும், சப்பீராவும் தங்களுக்குரியதை

மறைத்தனர், மாண்டு போயினர் (திப 5:1-6). பணத்தின் மீது ஆசை கொண்ட யூதாஸ் இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தான். தன்னை மறைக்கத் துணிந்தான், மாண்டு போனான். இன்றும் ஒருவர் துணிச்சலுடன் செய்யும் பாவம் சமூகத்திலிருந்தும், இறைப் பார்வையிலிருந்தும் தன்னை மறைக்க வைக்கிறது, மாண்டுபோகச் செய்கிறது.

***3. மன்னித்திட மறுகும் இறைமைந்தர்*** : (உரோ 3:24)

மன்னிப்பு, மீட்பு என்பது இலவசமாய், இறையருளால் தரப்படுவதாகும். தொடக்கக்கால பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் தவறிழைத்து கடவுளை விட்டு விலகினர். இவர்கள் வழியாகப் பாவம் அவனியில் வந்தது. தூய பவுலடியாரும் உரோமையருக்கு எழுதிய திருமடலில் சொல்லுகிறார், “எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்” (உரோ 3:23). இச்சூழலில் இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்து பாவத்தால் வீழ்ந்து போன மனுக்குலத்தை மன்னித்து, புதுவாழ்வினை வழங்குகிறார். திருமைந்தர் இயேசு கிறிஸ்து மானிடர் மீது வைத்த அன்பின் வெளிப்பாடுதான் மன்னிப்பினை வழங்கிட ஏதுவாயிற்று (யோவா 3:16).

J.S. வஸ்வானி சொல்லுகிறார், “ஒரு பாவியை மீட்டெடுப்பது ஒரு குருவானவரின் மறையுரையோ அல்லது புத்தகத்தில் கிடைக்கும் நல்ல சிந்தனைகளோ அல்ல; மாறாக ஒரு தூய்மையான தெய்வீக அன்பு கொண்ட ஒருவரின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் மன்னிப்பின் ஆற்றலாகும்” எனத் தெளிவாகச் சொல்லுகிறார். மத் 18:23-30 வரையிலான பகுதியில் பத்தாயிரம் தாலந்து கடன் மன்னிக்கப்பெற்ற மனிதன் தன்உடன் வேலையாள் தன்னிடம் பெற்றிருந்த நூறு தெனாரியம் கடனை மன்னிக்க மனமில்லாதிருந்தான்.

கீழ்ப்படியாமையால் கடவுளை விட்டு, தூரம் சென்ற நம்மை, மன்னித்து ஏற்க இறைமைந்தர் இயேசு கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம் பக்கம் மறுகி நிற்கின்றார். “வீழ்ச்சி” என்பது முற்றிலும் முடிந்தது என்பது அல்ல; அதில் முயற்சியும் மறுவாழ்வுக்கான வழிகளும் உண்டு. நமது வீழ்ச்சியிலிருந்து மீண்டு வர இழந்ததைத் தேடவும் மீட்கவும் வந்த மானிட மகனாகிய கிறிஸ்து இயேசுவின் மீது ஆழமான நம்பிக்கை கொள்வோம் (லூக் 19:10). அவரது அன்பின் ஆழத்தை உணர்ந்து கொள்வோம். நம் இதயக் கதவைத் தட்டும் இயேசுவுக்கு நம்மை முழுவதும் கொடுப்போம் (திவெ 3:20). படைப்பு அனைத்தும் வீழ்ச்சி நிலையிலிருந்து விடுதலை பெற கிறிஸ்துவின் வழியில் செயல்படுவோம்.

அருள்திரு. Y. **லாறன்ஸ்**

07-02-2021

பக்திமுயற்சி சங்க ஞாயிறு

# இளையோர் : அமைதியின் கருவிகள்

## YOUTH : INSTRUMENTS OF PEACE

1சாமு 24:1-13 2கொரி 7:1-16

திபா 37:22-40 லூக் 10:1-12

**“முன்னோரின் வாய்மொழிக்கேற்ப, தீயோரிடமிருந்த தீமை பிறக்கும். ஆதலால் உம்மேல் நான் கைவைக்க மாட்டேன்.”** (1சாமு 24:13).

தாவீது சொல்லுகிற இந்த வசனம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. அதாவது,

தீமை, வன்முறை ஆகியவை தீயவர்களாக வாழுகிற எந்த வயது மனிதரிடத்திலும் இருந்து பிறக்கலாம்; தீமை செய்கிறவர்களுக்கு வயது வித்தியாசமில்லை.

தாவீது ஏன் இதை சொல்லியிருக்க வேண்டுமென்பதை கவனித்துப் பார்த்தால், தாவீது தன்னோட 600 பேர் கொண்ட வீணரான இளைஞர் கூட்டத்தை வைத்துக்கொண்டு வன்முறையில் ஈடுபடுகிறார்; தன்னையே கொல்லப் பார்க்கிறான் என்று அரசராகியத் சவுல் தாவீதை துரத்திக் கொண்டேயிருந்தார்.

சவுல் இப்படியொரு எண்ணம் கொள்ள காரணம் தாவீதோடிருந்த இளைஞர் கூட்டம், சவுலின் மோசமான ஆட்சியால் ஒடுக்கப்பட்டவர்களாக, கடன்பட்டவர்களாக, முறுமுறுக்கிறவர்களாக (1சாமு 22:2) இருந்தார்கள்.

அவர்களுடைய எதிர்ப்பும், முறுமுறுப்பும் சவுலுக்கு விரோதமாக இருந்தாலும் அவர்களை வன்முறையில் ஈடுபடும்படி தாவீது தூண்டவில்லை, ஊக்கப்படுத்தவில்லை.

இவர்களிலே மூன்று பேர் பெரும் வீரர்களாகவும் இருந்தார்கள் (2சாமு 23:13, 1குறி 11:15).

ஆனாலும் அவர்களும் சவுலுக்கு விரோதமாக வன்முறையில் ஒரு போதும் ஈடுபடவில்லை.

ஒதுங்கி கெபியிலே இருந்தார்கள்.

ஆனால் சவுலோடிருந்தவர்கள் தாவீதுக்கு விரோதமாக வன்முறையில் ஈடுபடும்படி சவுலை தூண்டினார்கள்.

தாவீது, சவுலின் தவறான எண்ணத்திற்குப் பதில் சொல்லுவது போல 1சாமு 24:13 ஐ சொல்லுகிறார்.

அதாவது, யார் வன்முறையாளர்? நாங்களல்ல, என்னோடிருக்கிற இளைஞர்களல்ல, உம்மோடிருக்கிறவர்களே வன்முறையாளர்கள். வன்முறையாளர்களுக்கு வயது கிடையாது என்பதையே தாவீது இந்த வசனம் மூலம் சுட்டிக்காட்டுகிறார். காலாகாலமாக சமுதாயம் இளைஞர்களை வன்முறையின் விளைநிலமாகப் பார்க்கிறது. எல்லாரும் விரும்பும் ஒரு இனிமையான பருவம் இளம் பருவம்.

இளம் பருவத்திலே, நிறைய நேரமிருக்கும், ஆரோக்கியம் இருக்கும், ஆனால் பணம் அதிகமிருக்காது. திருமணமாகிவிட்ட நடுத்தர வயதில் ஆரோக்கியமிருக்கும், பணமிருக்கும், நேரமிருக்காது. முதுமை பருவத்திலே, நேரம் நிறைய இருக்கும், பணமும் இருக்கும், ஆரோக்கியம் இருக்காது. வயது வித்தியாசமின்றி எல்லாரும் விரும்பும் பருவம் இளம் பருவம்.

தாவீது திபா 37:25-இல் நான் இளைஞனாயிருந்தேன்... என இளம் பருவத்தின் மகிழ்ச்சியான நினைவுகளை அசைபோடுகிறார். தாவீதின் இனமை பருவமும், அவரோடிருந்தவர்களின் இளமைப் பருவமும் எப்படி இருந்தது? ஊஞ்சல் கட்டாமல் ஊஞ்சலாடிய பருவம் தாவீதின் இளம் பருவம். ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது இப்படித்தான் ஆனந்தமாக இருந்தார்.

தாவீதோடிருந்த இளைஞர்கள் மலைகளின் சிகரம் வரை களைப்பே இல்லாமல் ஏறக்கூடியவர்கள் மாத்திரமல்ல, எதிரிகள் வந்துவிட்டால் அந்த சிகரத்திலிருந்தும் தைரியமாகக் கீழே குதித்து ஓடும் தீரர்கள். இதுபோல வேறு எவராவது சிகரம் ஏறி அதிலிருந்து கீழே குதித்தால் மரணம்தான் ஏற்படும். பெலவீனர்களிடம் தங்கள் பெலத்தைக் காட்டுபவர்கள் பெலசாலிகளேயல்லர்.

தாவீதோடிருந்த இளைஞர்கள் பெலவீனர்களிடம் பெலத்தைக் காட்டாத பெலசாலிகளாக இருந்தார்கள். தங்களைவிட வயதானவர்களான சவுலிடமும் அவருடைய ஆட்களிடமும் பெலத்தைக் காட்டவில்லை. பெலத்தை வெளிப்படுத்தும் முறை வன்முறைதான் என்னும் நிலையில் வாழ்ந்த இளைஞர்கள் நடுவிலே, திருமறையிலே சில மாதிரி இளைஞர்கள் வன்முறை கருவிகளாக அல்ல, அமைதியின் கருவிகளாக இருந்தார்கள். இளையோரை திபா 127:5 ஒரு வேகமான போர்க் கருவிக்கு ஒப்பிடுகிறது. இளைஞர்கள் மட்டுமல்ல, மனிதர்களெல்லாரும் எப்படிப்பட்ட கருவிகளாக இருக்க வேண்டுமென ஆண்டவர் சித்தம் கொண்டிருக்கிறர் என்பதையே தியானிக்கப் போகிறோம்.

***1. நன்முறையின் கருவிகள்*** : (1சாமு 24:6)

நம்மை நல்லவர்களாக மாற்ற முயல்பவர்களைவிட தீயவர்களாக மாற்ற முயல்பவர்களே ஏராளம். நல்லவர்களாக மாற்ற அதிகம் போராட வேண்டும். தீயவர்களாக மாற்ற அதிகம் கடினப்பட வேண்டியதில்லை.

தாவீதையும் கடினமேயில்லாமல் தீயவராக மாற்ற பலரும் முயன்றார்கள். எல்லா விஷயங்களிலும் வெற்றி பெற விடாமுயற்சி தேவை. கெட்ட பழக்கங்களை விடுவதற்கு ‘விடும் முயற்சி’ தேவை.

தாவீதோடிருந்தவர்கள் தாங்கள் மறைந்திருந்த குகைக்குள் சவுல் வருவதைப் பார்த்து சவுலைக் கொன்றுபோடும்படி தாவீதைத் தூண்டினார்கள். இதுதான் நல்ல வாய்ப்பு. இனி இது போன்ற ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்காது என வன்முறையில் ஈடுபடத் தூண்டினார்கள் (1சாமு 24:4) சவுலுக்குப் பயந்து தாவீது காட்டிலும் மேட்டிலுமாக ஒளித்துக் கொண்டிருந்தார் (1சாமு 23:19)

எஷிமோனுக்குத் தெற்கே ஆகிலா என்னும் மலைக்காட்டில் ஒளிந்துக் கொண்டிருந்தான். பின் என்கேதி அருகேயுள்ள மலையின் குகையிலே ஒளித்துக் கொண்டிருந்தான். இந்த குகையினுள்ளேதான் சவுல் வந்து விட்டார். இருளிலே இதைப் பார்த்த தாவீதின் நண்பர்கள், தாவீதினிடத்திலே நம்முடைய பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு காண்கிற நாள் வந்து விட்டது. இனி வீட்டை விட்டு காட்டிலும், மலையிலும் ஒளிய வேண்டிய அவசியம் இல்லை. இப்போதே சவுலை கொன்று போடு எனத் தூண்டினார்கள். கெபி இருளான இடம். இங்கே சவுலைக் கொன்றால், யார் கொன்றது என்பது கூடத் தெரியாது. ஆகவே ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று போடு. அப்போது நீ அரசனாகிய விடலாம். நாமும் சமாதானமகா வீட்டிற்குப் போய் விடலாம். இதுவரை நன்முறையில் செயல்பட்டோம். இனி இந்த முறையில் சவுலைச் சந்திப்போம்.

என தாவீதை வன்முறைக்குத் தூண்டினார்கள். வன்முறையில் ஈடுபடும்படி பலர் நம்மைத் தூண்டுவார்கள்.

100 கறுப்பு எறும்புகளையும் 100 சிவப்பு எறும்புகளையும் சேகரித்து ஒரு கண்ணாடி ஜாடியினுள் விட்டுவிட்டால் வன்முறையாக எதுவும் நடக்காது. ஆனால் அந்த கண்ணாடி ஜாடியை எடுத்து பலமாக குலுக்கி மேஜையில் வைத்தால் என்ன நடக்கும்? குலுக்கப்பட்ட வேகத்தில் ஒன்றும் புரியாத அந்த எறும்புகள் குழப்பமடைந்து ஒன்றையொன்று தாக்கிக் கொல்லத் தொடங்கும். சிவப்பு எறும்பை எதிரியென்றும், கறுப்பு சிவப்பை எதிரியென்றும் நினைத்து வன்முறையில் ஈடுபடும். ஆனால் எதிரி ஜாடியை அசைத்தவர்கள்தான்.

சவுலையும் இப்படித்தான் சிலர் குலுக்கி தாவீதிற்கு விரோதமாக வன்முறையில் ஈடுபடத் தூண்டினார்கள். இதையே 1சாமு 24:9-இல் தாவீது உமக்கு பொல்லாப்புச் செய்யப் பார்க்கிறான் என்று சொல்லுகிற மனிதருடைய வார்த்தைகளை ஏன் கேட்கிறீர்? எனத் தாவீது சவுலிடம் சுட்டிக் காட்டினார். தாவீதையும் அப்படியே அவருடைய நண்பர்களும்

வன்முறையில் ஈடுபடத் தூண்டினார்கள். ஆனால் வன்முறை நன்முறையல்ல என தாவீது அதற்கு மறுப்பு சொன்னார்.

1சாமு 24:7 தன் மனிதரைச் சவுலின் மேல் எழும்ப ஒட்டாமல் இவ்வார்த்தைகளினால் அவர்களைத் தடைபண்ணினான். தன் நண்பர்கள் வன்முறையில் ஈடுபடத் தூண்டினபடியால் சவுலின் சால்வைத் தொங்கலைத் தான் தாவீது கொஞ்சம் அறுத்துக் கொண்டார். அதுவே தாவீதிற்கு பெரும் தவறாக நெஞ்சம் அடித்துக்கொண்டது. பொதுவாகத் தவறு செய்துவிட்டோமே எனப் பயப்படுகிறதைவிட, தான் தவறு செய்ததை யாராவது பார்த்து விடுவார்களோ என்றுதான் பலருடைய மனம் படபடவென அடிக்கும்.

தற்போதைய இளைஞர்கள் தவறு செய்வதைக் கண்டுபிடித்துக் கண்டித்தால், இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன் எனச் சொல்லுகிறார்களென்றால் அதன் பொருள்-உங்களுக்குத் தெரியாமல் செய்வேன் என்பதுதான். தன் தவற்றை மறைக்க ஆண்கள் கோபத்தையும், பெண்கள் கண்ணீரையும் பயன்படுத்துகிறார்கள். தாவீதும் இப்படி நடந்து கொண்டிருக்கலாம். ஆனால் அது நன்முறையல்ல, வன்முறை என்பதை உணர்ந்து அப்படி நடக்கவில்லை.

நல்ல அனுபவம் கிடைக்கும் போது மகிழ்ச்சியடைய வேண்டும். மோசமான அனுபவம் கிடைக்கும் போது பக்குவப்பட வேண்டும். சவுலிடமிருந்து கிடைத்த மோசமான அனுபவம் வன்முறையில் ஈடுபடுவது நன்முறையல்ல என்னும் பக்குவத்தைத் தாவீதிற்குக் கொடுத்தது. வன்முறை மூலமாகவே இளைஞர் ஆற்றலைக் காட்ட வேண்டும் என்னும் முறையற்ற முறைக்கு தாவீது முற்றுப்புள்ளி வைத்து நன்முறையின் கருவிகளாக தன்னோடிருந்தவர்களும் மாறும்படி தூண்டினார்.

***2. நற்செயலின் கருவிகள்*** : (2கொரி 7:9)

மனிதருக்குள் மனம் செய்யும் பெரிய நற்செயல் மனந்திரும்புதல். ஒரு முறை ஆண்டவர் இயேசு கிறிஸ்து விண்ணகத்தில் எப்போது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும் என்ற கேள்விக்குப் பதில் சொன்னார்.

பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டுவதால்

பெரிய பெரிய தோட்டங்களை நாட்டுவதால் மகிழ்ச்சி ஏற்படாது. ஏனென்றால் அவருடைய படைப்புகள் மனிதருடைய படைப்புகளை விட மிகப் பெரியவை. அப்படியானால் விண்ணகத்தில் எது மகிழ்ச்சியை ஏற்படுத்தும்? (லூக் 15:7).

(லூக் 15:10)தூய பவுலுக்கும் பெரிய மகிழ்ச்சி கொரிந்து சபையாரின் மனந்திரும்புதலால் ஏற்படுகிறது. பவுல் ஒருமுறை கொரிந்து சபையில் ஏற்பட்ட தவற்றைக் கண்டித்து கடிதம் எழுதினார். தவறு செய்யும்போது நம் தவற்றை நாம் தவறு என உணருவதேயில்லை.

சுட்டிக் காட்டப்பட்டாலோ தட்டிக் கேட்கப்பட்டாலோ மட்டும் உணருகிறோம். ஆனாலும், சுட்டிக் காட்டப்பட்டதை தட்டிக் கழிக்கப் பார்க்கிறோம். உள்மனது முணுமுணுத்தால் உள்வாங்கிக் கொள்ளுவோம். ஆனாலும், வெளிப்படையாக ஏற்பதற்கு வெட்கம் கொள்கிறோம். தவற்றைச் சுட்டிக் காட்டியவர்கள் மீது நமக்குத் துக்கம் கலந்த கோபம் வருகிறது.

இதையே பவுல் 2கொரி 7:10இல் உலகப் போக்கிலான மன வருத்தம் மரணத்தை விளைவிக்கும் என எழுதியிருக்கிறார். இந்தத் துக்கம் கலந்த கோபம் ஒரு எரிச்சலாக நமக்குள்ளே சுழன்று கொண்டேயிருக்கும். இது சிந்தனையிலும் செயலிலும் நம்மை வன்முறையாளர்களாக மாற்றி விடுகிறது.

உலகப்போக்கிலான மனவருத்தமடைந்த ஒரு மனிதன் ஒரு தடவை தன் போதகரிடம் சென்று என்னால் என் கோபத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. கோபம் என் கூடவே இருக்கிறது. அன்பைக் காட்ட வேண்டுமென்று நினைத்தாலும் கோபம் முந்திக்கொண்டு வந்து விடுகிறது. நான் என்ன செய்வது? எனக் கேட்டான். உடனே போதகர், நீ கோபத்தைக் கொஞ்சம் காட்டினால் அதைப் போக்க வழி சொல்லுகிறேன் என்றார்.

அதற்கு அந்த மனிதன் தற்சமயம் என்னிடம் கோபம் இல்லை. அதனால் கோபத்தைக் காட்ட முடியாது என்றான். உடனே போதகர், பரவாயில்லை உன்னிடம் கோபம் இருக்கும்போது அதை என்னிடம் கொண்டு வந்து காட்டு அது போதும் என்றார். அந்த மனிதனுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. ‘கோபத்தை எப்படி ஒருவரிடம் கொண்டுபோய்க் காட்ட முடியும். திடீரென வரும், திடீரென போகும். அதை எப்படிக் கொண்டு வர முடியும்’ எனக் கேட்டான். உடனே போதகர், ‘திடீரென வந்து திடீரென போவதினால் அது உன் குணமாக இருக்க முடியாது. எப்போதும் உன்னுடனே இருப்பதுதான் உன் குணம்.’ நீ பிறந்த போது கோபம் உன்னோடு இல்லை. கை, கால்கள் போல அது உன்னுடனே பிறக்கவில்லை. உன் பெற்றோர்கள் அதை உனக்குத் தரவில்லை, அது வெளியே இருந்து உனக்குள்ளே வருகிறது. உன்னுடையதல்லாததை விரட்டியடி உன்னடன் பிறக்காததைப் புறம்பே தள்ளு என்றார்.

இது கோபத்திற்கு மட்டுமல்ல. நம்மை அலைக்கழிக்கும் வெறுப்பு, பொறாமை, துக்கம் போன்ற எல்லா உணர்ச்சிகளுக்கும் பொருந்தும். கோபத்தையும், துக்கத்தையும் நம்முடையதாக்க நினைக்கும் போது, அவை

வலிமையாக நம்மைத் தாக்கி வன்முறையாளர்களாக மாற்றுகிறது. நமக்கு தேவைஉலகப் போக்கிலான துக்கம் அல்ல; நம்மை மனந்திரும்பச் செய்யும் கடவுளுக்கு ஏற்புடைய துக்கம். அது பவுல் சொல்லுகிறது போல... மீட்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது...(2கொரி 7:10). நம்முடைய மனதைப் பாதிக்கும்படியாக நம்மிடம் உருவாகும் எதுவும் நமக்கு எதிரானதுதான். முகமும், அகமும் சிவக்குமளவிற்குக் கோபம் கொள்ளக்கூடாது. மனம் குறுக்கு வழிக்குப் போகுமளவிற்குப் பொறாமை படக்கூடாது. மனம் வலிக்குமளவிற்கு வார்த்தையில் வன்முறை இருக்கக்கூடாது. மனதைக் கெடுக்குமளவிற்குஆசை இருக்கக்கூடாது. பழிவாங்குமளவிற்குப் பகையை மனதில் வளர்க்கக்கூடாது.

நம் மனதிற்கு செய்யப்படும் மருத்துவமே மனந்திரும்புதல், மனந்திருப்புதலால் நம்மில் நற்செயல்கள் நடக்கட்டும், நாம் நற்செயல்களின் கருவியாவோம்.

### *3. நற்குணத்தின் கருவிகள்* : (லூக் 10:3)

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு 12 சீடர்களைத் தவிர வேறு 70 பேரையும் நியமித்தார். ஆண்டவர் ஒரு பட்டணத்திற்கோ, இடத்திற்கோ போகப் போகிறாரென்றால் இந்த 70 பேரில் இரண்டு பேர் முதலாவது அங்கே போய் அதற்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். முதிர்ச்சி என்பது வயதால் வருவதல்ல. பணிப்பொறுப்பை ஏற்பதிலிருந்து முதிர்ச்சி தொடங்குகிறது. 70 பேருக்கும் பொறுப்பைக் கொடுக்கும் போது அவர்கள் தங்கள் பணியால் வாழ்க்கையில் குணத்திலே முதிர்ச்சியடைய வேண்டுமென ஆண்டவர் விரும்பினார். கல் கொண்டு கட்டடங்களைக் கட்டலாம். மண் கொண்டு மண்பாண்டங்களை செய்யலாம் சொற்களைக் கொண்டு கவிதை, உரைநடை அமைக்கலாம் ஆனால் மனிதனை எதைக்கொண்டு நற்குணமுடையவர்களாய் உருவாக்க முடியும்? மனிதரை நற்குணமுடையவர்களாக உருவாக்க ஆண்டவர் இரண்டு எடுத்துக்காட்டுகளை கூறுகிறார். ஆட்டுக்குட்டிகள் ஓநாய்கள் (லுக் 10:3).

மனிதக் கூட்டத்தை இந்த இரண்டு விலங்கினக் கூட்டத்திற்குள்ளே ஆண்டவர் அடக்கி விடுகிறார். இந்த இரண்டு விலங்கினக் கூட்ட உருவகம் மனிதரின் முதிர்ச்சியை விளக்குகிறது. உலகத்திலே மனிதர்கள் மாறி மாறி இந்த இரண்டு விலங்கினத்தின் வாழ்க்கை நிலையிலே வாழ்கிறார்கள். ஆட்டுக்குட்டியாக வாழ்பவர்களும் தங்களுக்கு ஆதரவாளர்கள் பெருகிவிட்டால் ஓநாயக மாறி விடுவதுண்டு. சுயநலம் மிகுந்து விட்டால்

ஓநாயாக மாறி விடுவதுண்டு. அதிகாரம் கிடைத்துவிட்டால் ஓநாயாக மாறி விடுவதுண்டு. ஓநாய் ஓவென சத்தமிடும். ஆட்டினால் அப்படிச் சத்தமிட முடியாது. பெருங்குரலெடுத்து, சத்தமிட்டு சண்டையிடுவதும் ஓநாய் தான்.

சிலர் இளைஞர்களாக இருக்கும்போது ஆட்டுக்குட்டியாக இருப்பார்கள். வயது முதிர்ச்சியடையும்போது ஓநாயாக மாறிவிடுவார்கள். இதற்கு நேர்மாறாக சிலர், இளைஞர்களாக இருக்கும்போது ஓநாயாக இருப்பார்கள். வயதாகி பெலன் குறையும்போது ஆட்டுக்குட்டியாக அடங்கி விடுவார்கள். உன்னை என்ன செய்கிறேன் பார் எனச் சவால் விடுவதும், கூட்டத்தை கூட்டி எதிர்க்க வருவதும் ஓநாயின் அடையாளங்கள்.

சூழ்நிலைகளால் அவ்வப்போது மாறிக் கொண்டிருக்காமல் ஒரே நிலையாக-ஆட்டுக்குட்டியாக நாம் வாழ வேண்டுமென ஆண்டவர் விரும்புகிறார். இதற்காகவே லூக் 10:3-ஐ சொன்னார். குணத்திலே அவ்வப்போது மாறிக் கொண்டிருப்போரை மனவளர்ச்சி அற்றவர்கள், மனமுதிர்ச்சி குறைந்தவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறுவார்கள். அன்பு குறையும்போது மனதிலே வன்மம் வளர்ந்து ஓநாயாகி விடுகிறோம். நம் அன்பு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் அது வெறுப்பாக மாறி ஆட்டுக்குட்டியாக இருக்கும் நாம் ஓநாயாக மாறிவிடுகிறோம். ஆனால், தன்னலம் பாராமல் பிரதிபலன் பாராமல் பிறர்மீது அன்பு செலுத்தினால் ஆட்டுக்குட்டியாக இருப்போம்.

அன்பை வியாபாரப் பொருளாக்காமல் அதை நம்மோடு பிறந்த குணமாக வைத்திருந்தால் ஆட்டுக்குட்டியாக இருப்போம். நம் குழந்தைகள் மீது கொண்டுள்ள அதே அன்பை, பிற குழந்தைகள் மீதும் செலுத்த முடியுமானால், அது நாம் ஆட்டுக்குட்டியாக இருக்கிறோம் என்பதன் அடையாளம். மக்கள் மீது அன்பு கொண்டுள்ள ‘ஆட்டுக்குட்டித் தலைவர்கள்’ மக்கள் பணத்தில் ஊழல் பண்ண மாட்டார்கள். ஆகவே 70 பேரையும் ஆட்டுக்குட்டியாக இருக்க ஆண்டவர் கூறினார். பிறரின் உணர்வுகளைக் கண்டுகொள்ளாமல் செல்லப் பழகுவதில் தான் அன்புவற்றத் தொடங்குகிறது. இது ஓநாயின் வாழ்க்கை.

நாம் ஓநாயக வாழக்கூடாது, ஆட்டுக்குட்டியாக என்றும் வாழ நம்மை அர்ப்பணிப்போம், உறுதி ஏற்போம். அதன் மூலம் நற்குணத்தின் கருவிகளாவோம்.

அருள்திரு. R. **டட்ஸ் ஞானறாபி**

14-02-2021

**உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு**

## தவக்காலம் : ஓர் ஒப்புரவின் காலம்

**LENT : A TIME OF RECONCILIATION**

தொநூ 45:1-15 எபே 2:11-22
திபா 85 யோவா 2:1-11

**"... அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார்"** (எபே. 2:14).

திருச்சபை நாட்காட்டியின்படி சாம்பல் புதன் முதல் தவக்காலம் தொடங்குகிறது. கிறிஸ்தவர்களின் வாழ்வில் இது முக்கியமான காலம். இக்காலத்தில் நம் வாழ்வை ஆய்வு செய்வது அவசியமானது.

ஒருவர் தன் 20ஆம் வயதில் இந்த உலகை மாற்ற முயன்றார். முடியவில்லை. அவருக்குத் திருமணமானபோது, தன் மனைவியின் குணத்தை மாற்ற விரும்பினார். எந்த மாற்றமும் இல்லை. அவருக்குக் குழந்தைகள் பிறந்தன. அவர்களையாவது மாற்றிவிடலாம் எனஎண்ணினார். முடியாமற்போனது. ஆனால், முதுமையில்தான் ஒன்றை உணர்ந்தார். தன் உடனிருந்தோரையும், குடும்பத்தினரையும் மாற்ற முயன்றதற்குப் பதிலாக தன்னையே மாற்ற முயன்றிருக்கலாம் என உணர்ந்தார். எனவே, "என் கடவுளே, என்னையே மாற்ற எனக்கு உதவும்" என்று வேண்டினார், மாற்றம் பெற்றார். என் இளைமையிலிருந்தே இப்படி வேண்டியிருந்தால் என் வாழ்க்கையை வீணடித்திருக்கமாட்டேன் என்று எண்ணிக் கொண்டார்.

பொதுவாக, மனிதர் குற்றவுணர்வு அடையும் தருணம் எதுவென்றால், எப்போது தன் இயலாமையை உணர்ந்து செய்யத் தவறியவற்றை, தருணம் கிடைத்தால் செய்வேன் என உணர்வது எப்போதென்றால், துன்பத்தின் போதும், நோயின் போதும், முதுமையின் போதுமாகும்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது வாழ்க்கையின் கடைசியில் சீர்செய்வது அல்ல, நிகழ்காலத்திலேயே சீர்செய்யப்பட வேண்டிய ஒன்று. அத்தகைய சுய ஆய்வை இந்தத் தவக்காலத்தில் நாம் அனுபவமாக்க வேண்டும். தவக்காலத்தில் நம்மை உடைத்து மீள் உருவாக்குவது (Deconstruct and Reconstruct) அவசியமானது. இவைகளை ஒரே வார்த்தையில் "ஒப்புரவு" (Reconciliation) எனலாம். "தவக்காலம் : ஓர் ஒப்புரவின் காலம்" (Lent : A Time of Reconciliation). நாம் சகமனிதர்களோடும், சகபடைப்புகளோடும், இறைவரோடும் ஒப்புரவாக அழைக்கப்படுகிறோம். எபேசியர் திருமுகத்தின்

ஆசிரியர் பவுலார், இறைவர் மனிதர்களை ஒன்றுபடுத்த துன்பத்தை ஏற்றார் எனக் கூறுகிறார் (எபே 2:14). அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்ற சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார். இந்தத் தவக்காலத்தில் நாம் ஒருவரோடொருவர் ஒப்புரவை ஏற்படுத்த ஆண்டவர் அழைக்கிறார். திருமறை சார்ந்து ஒப்புரவின் அவசியத்தையும், ஒப்புரவின் பயன்களையும் தியானிப்போமாக!

### *1. ஒப்புரவினால் உருவாகும் மகிழ்ச்சி* :

இன்று மனிதர்கள் உறவுகளால் தனிமைப்படுத்தப்படுவதும், உறவுகளைத் தனிமைப்படுத்துவதும் மகிழ்ச்சிக்குப் பெரும் தடையாக இருக்கின்றன. உலகிலேயே கொடுமையானது நிராகரிப்பும், புறக்கணிப்பும் தாம். இவைகள் மனதில் எழுகின்ற பகை, வெறுப்பு, எரிச்சல் போன்றவற்றால் வருபவை. வன்மம், பகை உள்ளிட்ட தீய உணர்வுகள் நம்மை அழிக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

இயேசு கிறிஸ்து “உங்கள் பகைவரிடமும் அன்பு செய்யுங்கள்” என்று சொன்னார். நாம் எப்படி அன்பு செய்வது? என்பதை நம் இல்லத்திலிருந்துதான் தொடங்க வேண்டும். குடும்பத்தில் அன்பு செய்யாமல், அதைத் தாண்டி உலகிலும் அன்பு செய்ய முடியாது. அன்னை தெரசாவின் புகழ்பெற்ற வாசகம் “நீ இந்த முழு உலகிற்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வரவேண்டுமென்று விரும்பினால், வீட்டிற்குச் சென்று உன் குடும்பத்தை அன்பு செய்”. (“ If you want to bring happiness to the whole world, go home and love your family”) என்பதாகும். தொடக்கநூல் 45:1-16 வரையுள்ள திருமொழிகளில், யோசேப்பு தன் உடன் சகோதரர்களோடு ஒப்புரவான நிகழ்வைக் காண முடிகிறது.

யோசேப்பு தன் பணியாளர்களை வெளியே போங்கள் (வச. 1) என்று சொல்லி அழுகிறார் (வச. 2), நான் தான் யோசேப்பு என்கிறார். சகோதரர்கள் பதில் சொல்லவில்லை (வச. 3). அவர்களை அருகில் அழைத்து நீங்கள் விற்றுப்போட்ட யோசேப்பு நான் தான் என்கிறார் (வச. 4). இங்கு ஒப்புரவின் அழைப்பு பாதிக்கப்பட்ட யோசேப்பிடம் இருந்தே வருகிறது. யோசேப்பு தன் சகோதரர்களைப் பார்த்து, அவர்கள் குற்ற உணர்வினால் கலக்கம் அடையக் கூடாது என எண்ணி, “நீங்கள் மனம் கலங்க வேண்டாம்” (வச. 5)? இது இறைவனின் திட்டம் என்கிறார். யோசேப்பு கடவுள் தன்னை “பார்வோனுக்குத் தந்தையாகவும், அவர் வீடு முழுவதற்கும் தலைவராகவும், எகிப்து முழுவதற்கும் ஆளுனராகவும் ஏற்படுத்தி உள்ளார்” (வச.8) என்று தன் நிலையை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் அனைவரையும் முத்தமிட்டு அழுதார். அப்பொழுது சகோதரர்கள் உரையாடினார்கள். “அழுகை அழுக்கை அகற்றும்” என்பதற்குச் சான்றான நிகழ்வு அது.

யோசேப்பின் சகோதரர்கள் வந்துள்ளனர் என்ற செய்தி பார்வோனின் அரண்மனையை எட்டவே, பார்வோனும் அவர் அலுவலர்களும் அகமகிழ்ந்தனர். அங்கு நிகழ்ந்த ஒப்புரவினால் மகிழ்ச்சி உண்டாயிற்று.

பல சூழ்நிலைகளில் நாம் இவ்வாறு சொல்லுவதுண்டு, " I can forgive, but I cannot forget." பிறர் நமக்குச் செய்யும் தீங்குகளை மறக்க முடியவில்லை அல்லது மறக்க மாட்டேன் எனச் சொல்வதன் வழியாக மன்னிக்கவும் மாட்டேன் என்கிறோம். பகையை, வன்மத்தை எப்போதும் சுமந்து கொண்டே அலைகிறோம். ஒரு நாள் ஆசிரியர் தன் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது, மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார். உங்களுக்கு மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் இருக்கிறதா? நீங்கள் யாரேனும் பழிவாங்கத் துடிக்கிறீர்களா? மாணவர்கள் ஒருமித்த குரலில் ஆமாம், ஐயா என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு! ஒவ்வொருவரையும் அழைத்து மன்னிக்கவும், மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன? எனக் கேட்டார். ஒவ்வொருவரும் 5,10 என அடுக்கிக் கொண்டே சென்றார்கள். ஆசிரியர் மாணவர்களுக்கு, பழி வாங்கும் எண்ணம் தவறு எனப் புரிய வைக்க நினைத்து தக்காளிகளை கொண்டு வரச் சொன்னார். ஒவ்வொரு மாணவனாக அழைத்து, எத்தனை கோபங்கள் எனக் கேட்டு அத்தனை தக்காளிகளை அவர்களிடம் கொடுத்து, ஒரு நிபந்தனையையும் அவர்களுக்குச் சொன்னார். அந்தத் தக்காளிகள் எப்போதும் அவர்களோடு உடனிருக்க வேண்டும். ஓரிரு நாள்கள் எந்தக் குறையும் இல்லாமல் தக்காளியை உடன் வைத்திருந்தார்கள். மேலும் நாள்கள் செல்லச் செல்ல தக்காளி அழுகி நாற்றமெடுக்க ஆரம்பித்தது. இப்போது மாணவர்கள் கூச்சத்துடன் ஆசிரியரை அணுகினர். தக்காளியைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர். ஆசிரியர் ஏன் என்று கேட்டார். தக்காளி அழுகி நாற்றம் எடுக்கிறது, அவற்றை உடன் வைத்திருப்பது கடினம் என மாணவர்கள் சொன்னார்கள். அப்போது ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து "நாற்றம் வீசுபவை அழுகிய தக்காளி மட்டுமல்ல, பகைமை உணர்வும், பழி வாங்கும் குணமும் உங்கள் மனதில் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன" என்று சொன்னார். மாணவர்கள் தக்காளியை மட்டுமல்ல, பகைமையையும், பழி வாங்கும் உணர்வையும் வெளியே வீசி எறிந்தனர்.

நாமும் நம்முடைய பகையை வேரறுத்து அனைவரோடும் ஒப்புரவாகி அதனால் ஏற்படும் மகிழ்ச்சியைக் கொண்டாடுவோம்.

### *2. ஒப்புரவினால் ஏற்படும் மாட்சி* :

"இதன் வழியாக இயேசு தம் மாட்சியை வெளிப்படுத்தினார்" (யோவா 2:11).

யோவான் நற்செய்தியில் இரண்டு இறையியல் சிந்தனைகள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. (1) இயேசு கிறிஸ்துவின் மாட்சிப்படுத்தப்படுதல் (Glorification of Jesus Christ) (2) இயேசு கிறிஸ்து சிலுவையறையப்படுதல் (Crucifixion of Jesus Christ)

யோவான் 2-ஆம் அத்தியாயத்திலும் இதன் கூறுகளைக் காணலாம். மனிதரைக் கடவுளோடும், மனிதரை மனிதரோடும் மனிதரைப் படைப்புகளோடும் ஒப்புரவாக்க வந்த இயேசு கிறிஸ்து, ஒப்புரவை ஏற்படுத்தும் இடையீட்டாளர் என்பதை முதல் அரும் அடையாளத்திலே வெளிப்படுத்துகிறார். கானாவில் திருமண இல்லத்தில் திராட்சை ரசம் தீர்ந்து விட்டது. இயேசுவின் தாய் திருமண இல்லத்தின் குறைவை அவரிடம் சொன்ன போது, "என் வேளை இன்னும் வரவில்லை" (வச 4) எனக் கூறுகிறார். இயேசு கிறிஸ்து தண்ணீரை ரசமாக்கிய பின்பு, பரிமாறப்பட்டது. 10-ஆவது வசனத்தில், பந்தி மேற்பார்வையாளர் சுவை மிகுந்த ரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்? எனக் கேட்டார். ஒன்று தெளிவாகிறது, முதலில் பரிமாறப்பட்ட ரசத்தைப் பார்க்கிலும், இறுதியில் பரிமாறப்பட்ட ரசம் சுவை மிக்கது. திருமண இல்லத்தில் முதன்மையான இடத்தில் இருப்பவர்கள் யார்? செல்வந்தர்கள், சமயத்தலைவர்கள் எனச் செல்வாக்குடையவர்கள்.

திருமண இல்லத்தில் கடைசியில் உண்பவர்கள் யார்? சமுதாயத்தில் சமமாக மதிக்கப்படாதோர், பணியாளர்கள், ஓரம் கட்டப்பட்டவர்கள், நோயாளிகள், யாசகம் புரிவோர். சுருக்கமாகச் சொன்னால், மீந்ததை உண்பவர்கள். இவர்களின் வேளையே கிறிஸ்துவின் வேளை என்று புரிந்துகொள்ளலாம்.

பகையாளரிடம் ஏற்படுத்தும் ஒப்புரவு மட்டுமல்ல, உயர்வுக்கும், தாழ்வுக்குமான ஒப்புரவில் தான் இயேசு கிறிஸ்துவின் மாட்சி இருக்கிறது. எபே 2:13 இல் ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள் என்கிறார் பவுலார்.

ஒரு காலத்தில் தொலைவில் இருந்த, அதாவது தூரமாய் இருந்த நம்மை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாடுகள் வழியாக, தியாகத்தின் வழியாகக் கடவுள் தம்மோடு இணைத்துள்ளார். சமத்துவத்திற்கு எதிராகவோ, பிரிவினைகளுக்குக் காரணமாகவோ நாம் செய்வது கடவுளுக்கு விரோதமானது. அதுமட்டுமல்ல இயேசு கிறிஸ்துவின் தியாகத்தை உதாசீனப்படுத்துவதுமாகும்.

ஃபியோதர் தஸ்தாயெவ்ஸ்கி ஒரு புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர். ஒரு முறை அரசாங்கத்தை எதிர்த்து எழுதினார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார். அவரோடு சேர்த்து பதினாறு பேர் அரசாங்கத்தை எதிர்த்து

எழுதவும், கலகமும் செய்தார்கள் என்று கைது செய்யப்பட்டிருந்தனர். அந்த பதினாறு பேர்க்கும் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் பதினாறு பேரும் ஒரு மைதானத்தில் இரண்டு வரிசைகளில் நிற்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் என்பது தான் தண்டனை. இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் துப்பாக்கியால் சுடப்பட்டுச் சாகப்போகிறோம் என்ற அச்சத்தில் பதினாறு பேரும் நிற்க, முன் வரிசையில் இருந்த ஒருவன் பயந்து மயங்கி விழுகிறான், வீரர்களில் ஒருவன் அவனை எழுப்பி, “நீ மயங்கி விழுவதினால் சாவிலிருந்து தப்பிக்க முடியாது, மரணம் உறுதி” என்றார். அவர்களுக்குத் தண்டனை நிறைவேற்றப்பட இருந்த அந்தக் கடைசி நிமிடத்தில் வீரன் ஒருவன் ஓடி வந்தான். அவன் கையில் அரசு உத்தரவு இருந்தது. அது என்னவென்றால், அந்த 16 பேருக்கும் மரணதண்டனை ஆயுள்தண்டனையாகக் குறைக்கப்பட்டிருந்தது. இந்தச் செய்தியைக் கேட்டவுடன் தஸ்தாயெவ்ஸ்கி முகங்குப்புற விழுந்து நிலத்தை முத்தமிட்டு தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டார். இந்த உலகத்தில் இன்னொரு முறை நான் வாழ்வதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வாழ்க்கைதான் எவ்வளவு மகத்தானது, எவ்வளவு உயர்வானது. விலைமதிப்பற்ற, யாராலும் திருப்பித் தர இயலாத இவ்வாழ்வில் எத்தனை வேற்றுமை, வெறுப்பு, பகை, அறமற்ற செயல்கள். இந்த உன்னதமான வாழ்க்கையைக் கொண்டா நான் மற்றவர்களைக் காயப்படுத்தினேன், துன்புறுத்தினேன். இனி நான் புதிய மனிதன், அன்பு செய்யும் மனிதன் என்று தன் வாழ்வையே மாற்றிக் கொண்டார் தஸ்தாயெவ்ஸ்கி.

நம் வாழ்க்கையின் மகத்துவத்தை, சிறப்பை, உலகமனிதரில் எவராலும் திருப்பித் தர முடியாத வாழ்வின் மதிப்பை நாம் உணர இந்தத் தவக்காலம் நமக்கு ஒரு வாய்ப்பு. குறைந்த பட்சம் இன்றிலிருந்தாவது நாம் பகையை மறந்து, வெறுப்பை விட்டு, ஏற்றத்தாழ்வை விட்டு ஒப்புரவினால் இந்தத் தவக்காலத்தின் மகிழ்வையும், இறைவனுக்கு மாட்சியையும் உருவாக்க உறுதி ஏற்போம். அதற்கு இறைவன் நம் அனைவருக்கும் அருள் புரிவாராக.

திரு. **அ. கால்வின் தேவநேசன்**

14-02-2021



# நலமருள்தலும் முழுமையும்

## HEALING AND WHOLENESS

யோபு 42:1-12 — 2கொரி 12:1-10
திபா 6 — யோவா 5:1-9

**"ஆண்டவரே, எனக்கு இரங்கும்; ஏனெனில், நான் தளர்ந்து போனேன்; ஆண்டவரே, என்னைக் குணமாக்கியருளும்; ஏனெனில், என் எலும்புகள் வலுவிழந்து போயின."** (திபா 6:2)

தென்னிந்தியத் திருச்சபை இந்நாளைக் குணமாக்கும் அருள்பணி ஞாயிறாக ஆசரிக்கின்றது. நலமருள்தல் கடவுளின் மீட்புப்பணியிலும், மனிதரை முழுமையாக்கும் பணியிலும் முக்கியப் பங்காற்றுகிறது. குணமாக்குதல் என்பதைக் குறிக்க இஸ்ரயேலர் அவர்கள் தாய் மொழியில் "ரிபுத்" என்ற சொல்லைப் பயன்படுத்துவர். இச்சொல், 'உடைந்ததை ஒன்று சேர்த்தல்' அல்லது 'பழுது நீக்கிச் சரிப்படுத்துதல்', என்ற பொருளைத் தருகின்றது.

தண்ணீர் நிரம்பிய மண்பாண்டம் சில கீறல்களை அல்லது உடைவுகளைச் சந்திக்கின்றபோது, மெதுவாகத் தன்னுள் நிரம்பி நிற்கும் தண்ணீரை இழந்து வெறுமையாவது போல், நலமின்மை அல்லது பலவீனங்கள் மனித உடலிலும், உளத்திலும் உடைவுகளை உருவாக்கி முழுமையைச் சிதைத்து விடுகின்றன. இவ்வுண்மையை நம் நாட்டில் மனிதரின் இறுதிச் சடங்கில் முழுமையான மண்பாண்டமொன்றைத் துளையிட்டும், இறுதியில் முற்றும் உடைத்தும் உணர்த்துவதைப் பார்க்கக்கூடும்.

உடலிலும், உள்ளத்திலும் ஏற்படும் தாக்கங்கள் மனிதனின் முழுமையை உருக்குலைத்துவிடுகின்றன. இப்படி உருக்குலைந்த மானுடத்தை மறுபடியும் முழுமை நிலைக்குக் கொண்டு வருதலே கடவுளின் நலமருள்தல் என்று விவிலியம் கூறுகிறது.

### *1. உள்ளச் சிதைவிலிருந்து நலமருளுதல்* : (யோபு 42:11)

"...ஆண்டவர் அவருக்கு வரச்செய்த தீமை அனைத்திற்காகவும் ஆறுதல் கூறி அவரைத் தேற்றினர்."

பிளேட்டோ என்ற தத்துவவியலாளர், "நீ உடலைக் குணப்படுத்த விரும்பினால் முதலில் உனது மனதைக் குணப்படுத்த வேண்டும்" என்றார். உள்ளச் சிதைவு உடல் பலவீனங்களைக் காட்டிலும் கொடியது; வாழ்வின் முழுமையையும் சிதைக்கக்கூடியது. இப்படிப்பட்ட உள்ளச்சிதைவில்

சிக்கிய மனிதருள் யோபுவும் ஒருவர். யோபு உடல் பலவீனத்தைத் தாங்கி நிற்பினும் அதையும் தாண்டி, அவரது மனைவியின் கடினமான வார்த்தைகளும், அவர்களது நண்பர்களான எலிப்பாசு, பில்தாது, சோப்பார் கூறிய கொடிய வார்த்தைகளும் யோபுவை, யோபு 19 : 2 இன்படி "என் உள்ளத்தை எவ்வளவு காலத்திற்குப் புண்படுத்துவீர்? என்னை வார்த்தையால் நொறுக்குவீர்?" என்று கூற வைத்தது.

உடல் நோய்வாய்ப்பட்டு உள்ளவர்களில் பெரும் பகுதியினரின் நோய்களுக்கு உள்ளத்திலுள்ள சிதைவுகளே காரணம் என ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. 60% - 80% வரையுள்ள உளச்சிதைவுகளே உடல் நோய்களாகக் காணப்படுகின்றன. உளச்சிதைவு ஆறாதவரை அவை திரும்பத் திரும்ப வரும். உளச்சிதைவு ஆறும்போது உடல் நோயும் முற்றும் குணம் பெறும். மனிதன் முழு நலத்துடன் வாழ உளச்சிதைவுகள் சீர்செய்யப்பட வேண்டும்.

யோபுவின் உளச்சிதைவை இறைவார்த்தையும் (யோபு 42:11), மற்றவர்களுடைய ஆறுதல் நிறைந்த வார்த்தைகளும் ஆற்றின. இன்றும் அனாதை இல்லங்களிலும், முதியோர் இல்லங்களிலும் உளச்சிதைவோடு இருக்கின்றவர்களுடன் ஆறுதல் நிறைந்த வார்த்தைகளைக் கூறுவோம். அத்தோடு நலமருளும் இறைவார்த்தைகளுக்கு நேராய் வழிநடத்துவோம்.

***2. உள்மனக் காயத்திலிருந்து நலமருளுதல்*** : (2கொரி 12:9)

...அவர் என்னிடம், "என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்."

பவுல், கிறிஸ்துவின் அரசைக் கட்டி எழுப்பும் பொருட்டு இறுதிவரை போராடிய மாபெரும் திருத்தூதுவர், அறிவில் சிறந்தவர், ஆற்றல் உள்ளவர், பல வரங்களைக் கொண்டவர். மூன்று அருட்பணிப் பயணங்களை மேற்கொண்டவர். இப்படி பல சிறப்புகளைக்கொண்ட பவுல் தன்னுள் ஒரு முள் அல்லது பெருங்குறை இருப்பதை 2கொரி 12-இல் குறிப்பிடுகிறார். அவருள் இருந்த இந்தப் பெலவீனம் மாற, மூன்று முறை வேண்டுதல் செய்த போதிலும், முழுமையான நல வாழ்வை அவரால் பெற முடியவில்லை.

பவுல் தன்னுள் காணப்பட்ட பெலவீனத்தைக் குறித்து கூறுகின்ற போது 2கொரி 12:7-இல் "எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள்போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்த சாத்தான் அனுப்பிய தூதனைப் போல் இருக்கிறது" என்றார்.

இப்பகுதியைப் படிக்கின்றபோது, ஏன் ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட பலவீனத்தை அனுப்புகிறார்? என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்விக்கும் தூய பவுலே பதிலை நமக்குத் தருகிறார். எப்படியெனில் கடவுளின் அருள் நமது ஆற்றலின்மைகளில் போதுமானதாய் இருக்கின்றது. அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்படி தான் இப்படி நடக்கிறது. நம்முடைய எல்லாக் குறைகளோடும், சுகவீனத்தோடும், வியாதிகளோடும் நாம் ஆண்டவரைச் சார்ந்து வாழ, இது ஒரு வாய்ப்பை நமக்குத் தருகின்றது. இறைவனுடைய ஆற்றல் நம் பெலவீனங்களையும் தாண்டி நமக்குப் பெலனை அருள்கின்றது.

### *3. உடல்குறைபாட்டிலிருந்து நலமருளுதல்* : (யோவா 5:8)

"இயேசு அவரிடம், எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்."

பலவீனங்கள் மனித வாழ்வோடு ஒன்றிணைந்தவை என்று கூறும் அளவிற்கு நோய்களும், நோய்களின் எண்ணிக்கைகளும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழலில் உடல் குறைபாட்டிலிருந்து நலமருள்பவராய் இயேசுநாதர் விளங்குகின்றார் என்பதற்கு யோவான் 5:1-9 இல் கூறப்பட்டுள்ள மனிதர் சான்றாகின்றார்.

அன்றிருந்த மருத்துவர்களாலும், நம்பி இருந்த குளத்தினாலும் சுகம் பெற முடியாமல் 38 ஆண்டுகள் வியாதிப்படுக்கையில் உடல் நலமின்றி இருந்த மனிதனுக்கு இயேசு அற்புத விடுதலை வழங்கினார். விடுதலை வழங்குவதற்கு முன் "நலம்பெற விரும்புகிறாயா?" என்று கேட்டார் (யோவான் 5:6). வியாதிப்பட்டவரோ நலம்பெற வேண்டுமென்று விரும்பினார். ஆண்டவரை விசுவாசித்தார்! விடுதலையோடு படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தார். ஆண்டவரிடம் விருப்பம் கொண்டு வருகின்ற யாவருக்கும் முழுமை வாழ்வை அருள்வார். அதைத் திருப்பாடலாசிரியரும் திபா 145:9-இல் "அவர் தமக்கு அஞ்சி நடப்போரின் விருப்பத்தை நிறைவேற்றுவார், அவர்களது மன்றாட்டுக்குச் செவி சாய்த்து அவர்களைக் காப்பாற்றுவார் எனக் கூறுகிறார்."

1810-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ஆம் நாள் தென்திருவிதாங்கூரின் முதல் திருத்தூதரான ரிங்கல் தௌபே, அம்மாண்டிவிளை கிராம மக்களைச் சந்திக்கச் சென்றார். இயல்பாகவே குழந்தைகளை வெகுவாய் நேசிக்கும் குணமுடையவர் ரிங்கல்தௌபே. அவர் அருளுரையை நிறைவு செய்து அமர்ந்திருந்த போது, அவரை

நோக்கி, பிறவியிலே நடக்க இயலாத நான்கு வயது சிறுவன் தவழ்ந்து வந்தான். அச்சிறுவனை, நடக்க இயலாதவன் என அறியாத ரிங்கல் தௌபே அவனைத் தூக்கி தம் மடியில் வைத்து ஆசீர்வதித்தபின் தரையில் விட்டார். அச்சிறுவன் உடனே நடந்து தாயிடம் சென்றான் என்பது வரலாற்று உண்மை.

பக்தர் தாவீது தனது வலுவிழந்த எலும்புகளோடு கடவுளை நோக்கிக் கதறினார். அவரோடு உறவாடி ஒப்புரவாகிய போது ஆண்டவர் அவரை உயிர்ப்பித்து அவரது வேண்டலைக் கேட்டருளியதை திருப்பாடல் 6-இல் வாசிக்கிறோம். நம்முடைய வாழ்விலும் ஆண்டவரிடம் விண்ணப்பம் செய்து, பழைய பாவ வாழ்வைஅறிக்கையிட்டு கடவுள் அருளும் நலனையும், முழுமை வாழ்வையும் பெற்று ஆண்டவரின் பிள்ளைகளாகத் திகழுவோம்.

அருள்திரு. S. **ஏசு ரெனிபெல்**

# தவக்காலம்
## LENTEN SEASON

ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு,
உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு.
பிறப்புக்கு ஒரு காலம், இறப்புக்கு ஒரு காலம்;
நடவுக்கு ஒரு காலம், அறுவடைக்கு ஒரு காலம்;
கொல்லுதலுக்கு ஒரு காலம், குணப்படுத்தலுக்கு ஒரு காலம்;
இடித்தலுக்கு ஒரு காலம், கட்டுதலுக்கு ஒரு காலம்;
அழுகைக்கு ஒரு காலம், சிரிப்புக்கு ஒரு காலம்;
துயரப்படுதலுக்கு ஒரு காலம், துள்ளி மகிழ்தலுக்கு ஒரு காலம்;
கற்களை எறிய ஒரு காலம், கற்களைச் சேர்க்க ஒரு காலம்;
அரவணைக்க ஒரு காலம், அரவணையாதிருக்க ஒரு காலம்;
தேடிச் சேர்ப்பதற்கு ஒரு காலம், இழப்பதற்கு ஒரு காலம்;
காக்க ஒரு காலம், தூக்கியெறிய ஒரு காலம்;
கிழிப்பதற்கு ஒரு காலம், தைப்பதற்கு ஒரு காலம்;
பேசுவதற்கு ஒரு காலம், பேசாதிருப்பதற்கு ஒரு காலம்;
அன்புக்கு ஒரு காலம், வெறுப்புக்கு ஒரு காலம்;
போருக்கு ஒரு காலம், அமைதிக்கு ஒரு காலம்”

(ச.உ 3:1-8)

என்கிறார் சபை உரையாளர். அந்த அடிப்படையில் மனமாற்றத்திற்கான சிறந்த காலமாகத் தவக்காலம் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது. இக்காலத்தை உயிர்ப்புப் பெருவிழாவுக்கான தயாரிப்புக் காலம் எனவும் அழைப்பது பொருத்தமானதேயாகும். இதற்காக நாற்பது நாட்களை ஆண்டவர் நமக்கு தந்துள்ளார்.

இறையியலாளர்கள் காலத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றனர். ஒன்று வரலாற்றுக் காலம் (Chronos), இன்னொன்று அருளின் காலம் (Kairos) ஆகும். சாம்பல் புதனிலிருந்து தொடங்கும் இந்த நாற்பது நாள்களை வரலாற்றுக் காலமாக அல்ல; மாறாக அருளின் காலமாகவே கருத திருச்சபை நமக்கு அறிவுரை சொல்லியுள்ளது. எனவே 113-வது பாமாலை “இந்த அருள் காலத்தில், கர்த்தரே உம் பாதத்தில் பணிவோம் முழந்தாளில்...” எனத் தொடங்குகிறது.

## *நாற்பது என்ற எண்ணின் சிறப்புகள்:*

திருவிவிலியத்தில் "நாற்பது" என்ற எண்ணைப் பல இடங்களில் பார்க்கலாம். குறிப்பாக,

நோவா காலத்தில் நாற்பது நாள்கள் இரவும் பகலும் மழை பெய்தது (தொநூ 7:12).

நாற்பது நாள்களாகப் பெரு வெள்ளம் மண்ணுலகில் வந்து கொண்டிருந்தது (தொநூ 7:17).

நாற்பது நாள்கள் முடிந்தபின் பேழையில் தாம் அமைத்திருந்த சாளரத்தை நோவா திறந்தார் (தொநூ 8:6).

இஸ்ரயேலர் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் பயணம் செய்தனர் (இச 8:2, எண் 32:13)

இஸ்ரயேலர் நாற்பது ஆண்டுகள் மன்னா உண்டனர் (விப 16:35).

மோசே சீனாய் மலையில் நாற்பது நாள்கள் தங்கியிருந்தார் (விப 24:18).

நாற்பது நாள்கள் உளவாளிகள் கானானை உளவு பார்த்தனர் (எண் 13:25).

எலியா நாற்பது நாள்கள் உண்ணாமல் பாலைவனப் பயணம் மேற்கொண்டார் (1அர 19:8).

இஸ்ரயேலரின் பாவச்சுமையை எசேக்கியேல் இறைவாக்கினர் நாற்பது நாள்கள் சுமந்தார் (எசே 4:6).

ஐக்கிய இஸ்ரயேல் நாட்டை சவுல், தாவீது, சாலமோன் ஆகிய அரசர்கள் தலா நாற்பது ஆண்டுகள் ஆண்டனர் (1அர 11:42; 2 சாமு 5:4).

பெலிஸ்திய வீரர் கோலியாத் இஸ்ரயேலருக்கு எதிராக நாற்பது நாள்கள் சவால் விட்டார் (1சாமு 17:16).

இயேசு திருமுழுக்கு பெற்ற பின் நாற்பது நாள்கள் இரவும் பகலும் நோன்பிருந்தார் (மத் 4:2).

இயேசு நாற்பது நாள்கள் பாலைநிலத்தில் இருந்தார் (மாற் 1:13).

இயேசு நாற்பது நாள்கள் அலகையினால் சோதிக்கப்பட்டார் (லூக் 4:2)

இயேசு துன்புற்று இறந்த பின்பு நாற்பது நாள்களாகச் சீடர்களுக்கு தோன்றி இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார் (திப 1:3).

## *தவக்காலம் கணக்கிடப்படுவது எவ்வாறு?*

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 21-ஆம் நாளை ஒரு அடிப்படை நாளாக எடுத்துக்கொள்வர். ஏனென்றால் மார்ச் 21-ஆம் நாள் தான் சூரியன் பூமத்திய ரேகையில் பயணம் செய்யும். மார்ச் 21 ஆம் நாளுக்கு அடுத்த வரும் பௌர்ணமி தினத்தைத் தொடர்ந்து வரும் ஞாயிறே உயிர்ப்புத்தினம். ஒரு வேளை பௌர்ணமி தினம் ஞாயிறு அன்று வந்தால் அதற்கு அடுத்த ஞாயிறு உயிர்ப்புத் தினம் ஆகும். இதே உயிர்ப்புத் திருநாளுக்கு முன்வரும் ஞாயிறுகள் தவிர்த்து வரும் 40 நாள்களைத் தவக்காலம் எனக் கருதுவர்.

இந்த ஆண்டு மார்ச் 21-ஆம் நாளுக்கு அடுத்து வரும் பௌர்ணமி தினம் மார்ச் 28-ஆம் நாள். அதைத் தொடர்ந்து வரும் ஞாயிறு ஏப்ரல் 4-ஆம் நாள் உயிர்ப்புத் திருநாள் அதற்கு முந்தைய ஞாயிறுகள் தவிர மீதமுள்ள 40 நாள்களும் தவக்காலம் ஆகும்.

## *தவக்காலம் ஓர் வசந்த காலம்*

தவக்காலத்தை "Lent" என்ற ஆங்கிலச் சொல்லால் அழைப்பர். இதற்கு வசந்த காலம் எனப் பொருள். எனவே கடவுளின் அருளால் நமக்குத் தரப்பட்டுள்ள இந்த அருளின் காலத்தில் நோன்பு வழியாகவும், தர்மத்தின் வழியாகவும், இறைவேண்டலின் வழியாகவும் கடவுளோடும் சக மனிதர்களோடும் உள்ள உறவைச் சரி செய்ய முயலுவோம்.

இந்தத் தவக்காலத்தில்

பாவமாம் இலைகள்
பழுத்துமே உதிரட்டும்
இறையவரின் அருளால்
தீந்தளிர் மலரட்டும்

என்ற பாடல் வரிகளைச் செயலாக்குவோம். தவக்காலம் பொருள் பொதிந்த காலமாகட்டும்.

அருள்திரு. J **நேச பிரின்ஸ்**

17-02-2021



## சிலுவை: தன்னல மறுப்புக்கு ஓர் அழைப்பு

**CROSS: A CALL TO SELF-DENIAL**

யோவே 2:12-20 கலா 2:15-21

திபா 32 லூக் 9:23-27

**"...என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்"** (லூக் 9:23).

மிகவும் நீண்டதும் நெடியதுமான பயணம் என்று இந்த உலகில் பார்க்கப்படுவது என்னவெனில் மனிதவாழ்க்கைப் பயணம் ஆகும். தம் மாறிச் செல்லும் தனது வாழ்வைத் தடுத்து நிறுத்தி, சுய ஆய்வுக்குத் தன்னை உட்படுத்தி முறையான வழியில் சரியாக பயணிப்பவரே ஒரு சிறந்த மனிதர் ஆகிறார். இப்படிப்பட்ட சுய மதிப்பீட்டிற்குத் திருச்சபை தரும் தருணம் தான் தவக்காலம். இந்த தன் ஆய்வுக்கு நம்மை சிந்திக்க உதவியாக இருந்து அழைப்பது தான் சிலுவை. அவமானம் மிக்கவர்கள் அவர்மானம் தனைபறிக்க அவரின் தோளில், அவமானச் சின்னமதை அணைத்தேற்றி வைத்தார்கள். ஆளபோதும், புவிமானம் காப்பதற்குச் சிலுவைதனை முத்தமிட்டு புனித அண்ணல், உவமானமாகவரும் எதிர்காலந்தனை எண்ணி உடன்சுமாந்தார்.

கண்ணதாசன், இயேசு காவியம் வரிகள்... உரமாகும் ஆன்மீகம் : சாம்பல்

- ❄ ஒன்றுமில்லா வெறுமையை குறிக்கிறது
- ❄ உயர்ந்த இடத்தில் வைக்கப்படுவது இல்லை தாழ்மையை குறிக்கிறது.
- ❄ தனது தன்மையில் மென்மையைக் குறிக்கிறது.
- ❄ சுத்தமாக்க பயன்படும் தூய்மையை காட்டுகிறது.
- ❄ மீண்டும் எருவாக மாறிடாத புதுமைக்கு எடுத்துக்காட்டு.
- ❄ தன்னை இழந்து உரமாகி உதவுகின்றது.

சந்திர குப்தர் அரசாண்ட காலத்தில் சாணக்கியர் தலைமை அமைச்சராய் இருந்து வந்தார். அரசர் குளிரால் துன்பப்படும் மக்களுக்கு, கம்பளிப் போர்வைகளை கொடுங்கள் என்று சொல்லி ஆயிரம் போர்வைகளை வாங்கி, சாணக்கியரின் குடிசைக்கு அனுப்பி வைத்தார். நாளை அவற்றை கொடுக்கலாம் என்று சாணக்கியர் நினைத்து தனது குடிசையில் வைத்து இருந்தார். இரவு திருட வந்த திருடர்கள் சாணக்கியர்

மூடியிருந்த போர்வையை பார்த்து ஆச்சரியத்துடன்  அதிர்ந்து நின்றனர். ஏன் என்றால் சாணக்கியர் கிளிந்த போர்வையை போர்த்திக்கொண்டு நடுங்கிய நிலையில் தாங்கி கொண்டு இருந்தார். இதை பார்த்த திருடர்கள் அவரை எழுப்பி நாங்கள் திருட வந்தோம் உங்கள் குடிசைக்குள் இவ்வளவு கம்பளிப் போர்வைகள் இருக்க நீங்கள் ஏன்? இந்த பழைய கிழிந்த போர்வையைப் போர்த்தி கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டனர். அதற்கு அவர் இந்த கம்பளி போர்வைகளை, உடுத்திக்கொள்ள பேறு பெற்றவர்கள் குளிரால் துயருறும் ஏழைகள் மட்டும். அதை நான் போர்த்தினால் உங்களை போன்ற திருடன் ஆவேன் என்றான். மன்னர் கம்பளிகளை ஏழைகளுக்கு மட்டுமே தான் கொடுக்க சொன்னார். அவர்கள் தான் உரிமையாளர்கள் என்று கூறவே திருடர்கள் மனதில் முள் குத்தியது போல ஆகி மன்னிப்பை பெற்று அவ்விடம் விட்டு சென்றனர்.

சிலுவை தன்னல மறுப்பிற்கு ஓர் அழைப்பு விடுக்கும் கருவியாய் உள்ளது என்பது பற்றி தியானிப்போம்.

***1. தன்னை இழக்கத் துணிதல்***: (லூக் 9:23a)

என்னை பின்பற்றவிரும்பும் எவரும் தன்னலம் துறக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்

மார்ட்டின் பூபர் (Martin Buber) என்பவர் கூறும்போது உண்மையான நல்லுறவு என்பது சுயம் என்னும் கட்டு உடைப்படும் போது தான் உருவாகின்றது என்கிறார்.

என் பின்னே வாருங்கள் என்று இயேசு அழைத்த உடன் அவருக்கு பின்சென்ற சீடர்கள் (மத். 4:19) சில நேரங்களில் தங்களது அழைப்பையும் இயேசுவின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றிட தவறியவர்களாய் மாறினர். தன்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து உண்மை பணியராய் இயேசுவின் மாதிரியை பின்பற்றிட கருத்தாய் கூறினார். சீடர்கள் சில நேரங்களில் பணி பெறுவதா? பணிபுரிவதா? என்பதில் தெளிவற்று இருந்தனர். தன்னை முழுவதுமாய் இழக்க துணிந்த ஒருவரால் மட்டுமே சிலுவை சுமக்க முடியும், தன்னை இழக்க முன்வருபவரால் மட்டுமே பிறருக்கு உண்மையான அன்பை கொடுக்கவும் ஆறுதல் வழங்கவும் பிறரது காயங்களை கட்டவும் இயலும். எல்லா சூழலிலும் உண்மையான பணியாளர் என்பதை வெளிப்படுத்துவதுடன் எல்லா வேளைகளிலும் துணிவுடன் பணிசெய்திட ஆயத்தமாயும் இருக்க சிலுவை அழைப்பு தருகின்றது.

***2. தன் சிலுவை எடுக்கத் துணிதல்***: (லூக் 9:23b)

தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொள்வது என்பது இலகுவான ஒன்று அல்ல. Pope Francis கூறும்போது சிலுவை இல்லாத

கிறிஸ்துவே இயேசுவுக்கு சீடனாய் இருக்க முடியாது என்கிறார். சிலுவை என்ற வார்த்தை கிரேக்கச் சொல்லான சொல்லில் இருந்து வந்தது. உரோமை அரசில் குற்றம் செய்த அடிமைகள் அரசுக்கு எதிராக புரட்சி செய்தவர்களை சிலுவையில் தூக்கிலிடுவது மிகவும் இழிவான தண்டனையாகவும் கருதினர். கி.பி. 325-ஆம் ஆண்டிற்கு பிறகு King Constantine அரசர் தான் முதன் முதலாக தண்டனையின் சின்னத்தை புனித சின்னமாயும் கிறிஸ்தவம் அரசுடைமை சமயமாயும் ஓய்வுநாள் இயேசுவின் உயிர்தெழுந்த நாளான வாரத்தின் முதல் நாள் என்றும் அறிவித்து பிரகடனமாக்கினார். இங்கே இயேசு சிலுலையை நாள்தோறும் சுமக்க துணிவுகொள் என்பது துன்பங்களை ஏற்று கொள்வதும் கடினப்பாடுகளின் ஊடாய் வாழ்க்கை பயணத்தை தொடருவதும் ஆகும். Peter Drucker கூறும்போது தன்னை செழுமைப்படுத்துவது அல்ல தன்னை இழந்து சிலுவையை சுமப்பது தான் உண்மையான வாழ்வுக்கான பணி என்கிறார். நம்முடைய துன்பங்களை நாம் ஏற்பது கடினமற்றது. ஆனால் பிறரது வாழ்விற்காகவும் பிறர் நன்மை பெறும் பொருட்டு ஏனையவரது கடினங்களை நாம் ஏற்றுகொள்ள துணிவதும், அடுத்தவருக்கு பாதையாக நமது பாதங்களை தருவதும் சிலுவை சுமப்பது என்று ஏற்கலாம். சிலுவை துன்பத்தின் மத்தியின் இன்பம் தருவதும், கைவிடப்பட்ட வேளையில் தாங்கி கொள்வதும், இறைவருக்கும் நமக்கும் இடையே நல்ல உறவினை உருவாக்கிடும் உன்னத கருவியாய் இந்த தவக்காலத்தில் செயல்படட்டும். பிறருக்கு நல்வாழ்வு தரும் கருவியாயும் பிறரையும் நம்மைபோல் பார்க்கும் ஊடகமாயும் சிலுவை காட்சிப்படட்டும். சிலுவையின் நிழலில் தினமும் அமர்ந்துஇளைப்பாறிடுவோம். ஜெஸ்ட்டின் மார்ட்டையரின் கூற்றுப்படி மனித உடலின் அமைப்பே சிலுவை போன்று அமைந்து இருக்கின்றது. கைகள் இரண்டையும் விரித்து நின்றால் அது தெளிவாகும். நாமே பிறரது பாரங்களை சுமக்கும் உன்னதமான சிலுவையாய் மாறி பிறரின் காயங்களை ஆற்றுவோம்.

***3. தயக்கமின்றிப் பணிசெய்யத் துணிதல்***: (லூக் 9:23c)

சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னை பின்பற்றட்டும்.

இயேசுவை பின்பற்றி செய்கின்ற பணி என்பது துணிவுடன் தினந்தோறும் நிறைவேற்றப்படும் ஒரு தொடர் பணியே இது உலகமக்களின் மீட்பை முன்னிலைப்படுத்திய ஒன்றாகும். உயிருடன் எழுந்த கிறிஸ்து தமது சீடர்களிடம் நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரார் திருமுழுக்கு கொடுங்கள். இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன்

இருக்கிறேன். மத் 28:19,20 என்று கூறி துரித தன்மையுடன் பணிசெய்திட அழைக்கின்றார். தன்னை இழந்து, தனது சிலுவையை சுமந்து பணிசெய்யும் முயற்சி என்பது விடுதலைக்காய் ஏங்கி நிற்கும் மக்களுக்கு விடுதலை வாழ்வு கிடைத்திட உழைப்பதாகும் (லூக் 4:18,19). பவுலோ பிரையரே என்னும் பிரேசில் நாட்டு கல்வியாளர் கூறுகையில் ஓரம் தள்ளப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட சூழலில் இருந்து தான் விடுதலைபணி நடைபெறும் என்கிறார்.

முழு இதயத்தோடு ஆண்டவரின் திரும்பி வாருங்கள் (யோவே 2:12) என்ற அழைப்பு கி.மு. 835 முதல் 796 வரையிலான காலகட்டத்தில் இறைவாக்குப்பணியை செய்து வந்த இறைவாக்கினர் யோவேல், ஆண்டவரின் வருகைக்காக இஸ்ரயேல் மக்கள் தங்களை தயார்செய்ய வேண்டும் என்பதற்காக தயக்கமின்றி கொடுக்கப்பட்ட அழைப்பாக இருந்தாலும் நாம் வாழும் காலச் சூழலில் நமக்கு தரப்படுகின்ற அழைப்பாகவே உள்ளது. முழு இதயத்தோடு ஆண்டவரிடம் திரும்பி வருவது என்பது வழிபாட்டில் இணைவதோ, உடைகளை கிழித்து கொண்டு, சாக்கு உடை உடுத்தி, சாம்பலில் அமர்வதோ (மத் 15:8,9) அல்ல மாறாக, குற்றத்தை உணர்ந்து நொறுங்கிய இதயத்தோடு (திபா 51:17) ஆண்டவரிடம் வருவது. அது தான் முழு இதயத்தோடு திரும்பி வருவதாகும்.

நாமும் இந்த சாம்பல் புதன் நாளில் சிலுவையின் நிழலில் அமர்ந்து சிலுவை நாதரின் வாக்கை வாழ்வாக்குவோம். ஆமென்!

திரு. S.S. **ஆல்பின் டேவிட் ராஜ்**

| 21-02-2021 | உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு & தவக்கால முதலாம் ஞாயிறு |
|---|---|

# தொடக்கூடாதவரைத் தொடுதல்

## TOUCHING THE UNTOUCHABLE

| | |
|---|---|
| 2அர 5:1-10 | எபி 13:8-17 |
| திபா 10:1-12 | மத் 8:1-4 |

**இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக! என்று சொன்னார்"** (மத் 8:3).

பல வகையான மனிதர்களை நாம் பார்க்கிறோம். முதலாவது வகையினர் நினைத்தது நடந்தால் பெருமை கொள்கிறார்கள். கெட்டது நடந்தால் ஏன் எனக் கேள்வி எழுப்புகிறார்கள்.

ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது? ஏன் இவர்கள் என் விஷயத்தில் தலையிடுகிறார்கள்? ஏன் எனக்கு மட்டும் கடவுள் இந்த வேலையைத் தந்தார்? ஏன் நான் மட்டும் இப்படி, இந்த நிலையில் இருக்கிறேன்? இரண்டாம் வகையினர், எப்படி என்று கேள்வி எழுப்பி வாழக்கூடியவர்கள். எப்படி இந்த அநீதியைத் தடுத்து நிறுத்துவது? எப்படி இந்தத் தீமையான உலகை மாற்றுவது? எப்படி மனிதர்கள் அர்த்தமுள்ள வாழ்வு வாழ உதவுவது? எப்படி இந்தச் சூழ்நிலையைக் கடந்து செல்வது? எப்படி என்று கேள்வி கேட்போர், இருக்கின்ற சூழ்நிலையில், நம்மால் என்ன செய்ய முடியும்? என்ற தேடலைத் தொடர்ந்து நிறைவேற்ற முயற்சிப்பார்கள்.

எப்படி என்ற கேள்விக்குப் பதில் தரக்கூடிய விதத்தில் திருமறைப் பகுதிகள் அழகான, அர்த்தமுள்ள பதிலைத் தருகின்றன. இவை பதில் மட்டுமல்ல, திருப்பணி, மனிதநேயப்பணி, அருட்பணி, விடுதலைப்பணி என அனைத்திலும் நம்மை உயிரோட்டமாய் உட்படுத்தும் உந்துசக்தியாகவும் உள்ளது. தொடக்கூடாதவரைத் தொடும் மன உணர்வை , மனத்தெளிவைப் பெறுவது எப்படி?

### *1. பாதிக்கப்பட்டோரோடு கூட்டொருமை* : (2அர 5:3)

சீரிய நாட்டின் படைத்தளபதி பெரிய மனிதர். பராக்கிரமசாலி, யுத்த வீரர். ஆனால் அவர் தொழுநோயாளி. உலகத்தின் பார்வையில் ஆற்றலுள்ளவர், மேன்மையானவர். ஆனால் நொறுங்கிப்போன, உடைந்து போன நிலையில் தான் அவரும் அவரது குடும்பமும் வாழ்ந்திருக்க வேண்டும்.

உலகின் அமைப்புகள், நாடுகள், நிறுவனங்கள் திருச்சபைகள், கிறிஸ்தவச் சமூகங்கள் நாமானைப் போன்றே காணப்படுகின்றன. வெளியே பராக்கிரமம், பிரம்மாண்டம், ஆஹா, ஓஹோ எனப்புகழப்படும் நிலை. ஆனால், ஏராளமான பிரச்சனைகள், தோல்விகள், ஐக்கியமின்மை, சமாதானமின்மை, மொத்தத்தில் நோய்த் தாக்குதலுள்ளான சூழ்நிலைகள்.

நாமான் வீட்டு வேலைக்காரப் பெண் இந்த வேதனை நிறைந்த சூழ்நிலையை நன்கு அறிகிறாள். பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பத்திற்கு எப்படி உதவுவது? என்று யோசிக்கிறாள். உதவ முன் வருகிறாள். கடவுளின் விடுதலை அருளும் வழியை அறிந்து வைத்தவள், நாமானின் மனைவியிடம் அதனைப் பகிர்கிறாள். சமாரியாவில் உள்ள இறைவாக்கினரிடம் போனால் விடுதலை கிடைக்கும் என்கிறார். பாதிக்கப்பட்டவர்களுக்குத் தான் அதன்வலி தெரியும். ஏற்கனவே அடிமையாக, சிறுவயதிலே வீட்டு வேலைக்குத் தள்ளப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட சிறு பெண் பாதிக்கப்பட்டவருக்கு உதவுகிறாள். இன்று பாதிக்கப்பட்டோர் பலர் நமக்கேன் வம்பு என ஒதுங்கிக் கொள்கிறார்கள். சிலர், நன்றாகப் பாதிக்கப்படட்டும் என வேடிக்கை பார்க்கிறார்கள்.

பாதிக்கப்பட்டோருடன் இறைவன் இருக்கிறார் என்ற உண்மையை, நற்செய்தியை உணர்வோர் சும்மா இருப்பதில்லை. பாதிக்கப்பட்டோரோடு தம்மை இணைத்துக் கொள்கிறார்கள், குரல் கொடுக்கிறார்கள், வழிகாட்டுகிறார்கள், போராடுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள், திருச்சபை, திருப்பணித் திட்டங்கள் அனைத்தும் இந்தத்தடத்தில் பயணம் செய்ய வேண்டும் என்பதே ஆண்டவரின் எதிர்பார்ப்பு. மத் 25:35,36,40 ஆகிய வசனங்களில் கிறிஸ்துவே நமக்கு இப்படிப்பட்ட திருப்பணிப் பயணம் செய்ய ஆலோசனை கூறியுள்ளார். பாதிக்கப்பட்டோரோடு கூட்டொருமையை வெளிப்படுத்தி, தொடக்கூடாதவர்களைத் தொடும் முயற்சியில் ஈடுபடுவோம்.

### *2. பாதிக்கப்பட்டோரை மனித நேயத்தோடு அணுகுதல்* :

(மத்தேயு 8:3)

இஸ்ரயேல் சமூகத்தில் தொழுநோயாளிகளின் அவல நிலைகளை லேவி 13:44-46 வரை உள்ள பகுதி தெளிவாக விளக்குகின்றது. தொழுநோய் தாக்குதலுக்குள்ளான மனிதனை, குரு, தீட்டுள்ளவன் (Untouchable) என அறிவிப்பார். அதுமுதல் அவன் ஊருக்கு வெளியே தனியே குடியிருக்க வேண்டும். பாளயத்திற்குப் புறம்பே (ஊருக்கு வெளியே) இருக்க வேண்டும். அப்பக்கமாக யாராவது வந்தால் தீட்டு தீட்டு எனச் சத்தமிட வேண்டும். தனிமை, விரக்தி, நோய்த் தாக்குதல், உணவுத் தட்டுப்பாடு, பசி, வெறுப்பு, நம்பிக்கையற்ற நிலை இவற்றோடு வாழ வேண்டும்.

இயேசு இப்படிப்பட்ட நிலையிலுள்ள பாதிக்கப்பட்ட மனிதன் வாழும் இடத்திலே அவனைச் சந்திக்கிறார். அவனது உள்ளார்ந்த உடைந்து போன உணர்வுகளை அறிகிறார். அவனது ஏக்கத்தோடும், எதிர்பார்ப்போடும் கூடிய வேண்டுதலை ஏற்கிறார். சமூகச்சட்டங்கள், சமயச்சட்டங்கள் அனைத்தையும் மீறி அவனை மனிதநேயத்தோடு அணுகுகிறார். தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு குணமாக்குகிறார். இதன்வழி யூதசமய, சமூகச் சட்டங்களுக்குச் சம்மட்டி அடி கொடுக்கிறார். குருவிடம் உன்னைக் காண்பித்து சமயக் கடமைகளை நிறைவேற்றி ஆரோக்கியமான மனிதனாக வாழ ஆலோசனை கொடுக்கிறார்.

இந்தக் காலத்தில் கூட தொழுநோயாளிகளைப் பயத்தோடும், வெறுப்போடும் பார்க்கிற நிலையே காணப்படுகிறது. தொழுநோயாளிகள் வெறுத்து ஒதுக்கப்படுகிற நிலையிலும் உள்ளனர். இந்த வெறுப்பு, ஒதுக்கப்படுதல் இந்திய அளவில் சாதி ரீதியாகவும், இன ரீதியாகவும் இன்றளவும் பின்பற்றப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தியக் கிராமங்களில் கூலித்தொழிலாளிகளான பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறார்கள். தனிக் குவளை, தனி இருப்பிடம், தனித் தொழுகைக் கூடம் என ஒதுக்கப்படும் நிலை தமிழகத்திலும், இந்திய அளவிலும் இன்றும் கொடுமையாக உள்ளது.

சீடர்களைத் தெரிந்த போது மனிதனை மனிதனாக்குகிற பணிக்காக சீடர்களை அழைத்துக் கற்பித்தார். பாதிக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று விடுதலையாக்கி மனிதநேயப்பணிகளை நிறைவேற்றினார். எரிகோ பாதையில் அடிபட்ட மனிதனுக்கு நல்ல சமாரியன் செய்த பணியின் மூலமாக மனிதநேயப் பணியை அடையாளமாக்கினார். இங்கும் தொழுநோய் பிடித்த மனிதனைத் தொட்டு, குணமாக்கி மனிதனாக ஏற்றுக் கொண்டார். இவனைத் தொழுநோய் என்கிற நிலையிலேயே அனுப்பிவிடக் கூடாது என்ற உணர்வே கிறிஸ்துவிடம் மேலோங்கி நின்றது.

திருச்சபையின் திருப்பணிப் பயணம் மனிதரை மனிதராக்குகின்ற பணி, மனிதநேயப்பணி, சமூக, சமயச் சட்டங்களைக் கடந்து செய்யப்பட வேண்டிய விடுதலைப்பணி என்பதைக் கிறிஸ்துவின் வழியாக நாம் கற்றுக் கொள்கிறோம்.

சொந்த ஜனமான யூதரைத் தள்ளி
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்து பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காக - பாடித்துதி மனமே

எனப்பாடுவது எத்தனை அர்த்தமுள்ள மனிதநேயப் பணித்திட்டம்.

### *3. புறம்பாக்கப்பட்டோரின் நிலைக்கு நம்மைத் தாழ்த்துதல்* :

(எபி 13:12,13)

லேவி 13:46இன்படி தொழுநோயாளியின் குடியிருப்பு பாளையத்திற்குப் புறம்பே இருக்க வேண்டும் என்பது யூதச்சமய, சமூகநடைமுறையாக இருந்தது. சில நேரங்களில் தொழுநோயாளி குணமடைந்தால் யூதச்சமயக் குருவுக்குத் தகவல் கொடுக்கப்படும். அவர் சுத்திகரிப்பின் நியமங்களை நிறைவேற்றியபின்பு ஊருக்குள் அனுமதிப்பார். இயேசு கிறிஸ்துவும் மத் 8:1இன்படி மலையிலிருந்து இறங்கி வரும்போது இந்த மனிதனை ஊருக்கு வெளியே தொழுநோயாளியின் இருப்பிடத்திலே சந்தித்தார். புறம்பாக்கப்பட்ட தொழுநோயாளியின் இருப்பிடத்திற்குச் சென்று அவனது வேதனை நிலையை உணர்ந்து, அவனது நிலைக்கு இறங்கி வந்து உரையாடி தொழுநோயாளிக்கு விடுதலை கொடுத்தார்.

எதை ஏற்கவில்லையோ அதனை மீட்க முடியாது என்ற இறையியலின் ஆழம் நிறைந்த அனுபவத்தை இயேசு நிறைவேற்றினார். கிறிஸ்துவின் சிலுவை மரணமும், அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடமும் புறம்பாக்கப்பட்ட இடத்தில் அதாவது ஊருக்கு வெளியே நடந்தேறியது. இதனையே எபிரேயர் திருமுக ஆக்கியோன் நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார் என எழுதினார். வேறுபாடுகள் நிறைந்த (Diversity) உலகில் வாழ்கிறோம். உள்ளவன்-இல்லாதவன், கற்றவன்-கல்லாதவன், ஏழை-பணக்காரன், அதிகாரம் பெற்றோர்- அதிகாரம் அற்றோர், உயர்சாதி-தாழ்ந்தசாதி எனும் ஏராளமான வேறுபாடுகள் நிறைந்த சூழல்களில் நாம் வாழ்கிறோம். தொடக்கூடாதவர்களாக (Untouchables) ஒரு சமூகம், ஏழைப்பெண்கள், குழந்தைகள், தொழில் ரீதியாக புறம்பாக்கப்பட்ட இனங்கள், இன்றும் மனித சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, புறம்பாக்கப்பட்டு, புறம்போக்கான இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

திருச்சபை திருப்பணி, அருட்பணி, இறையரசுப் பணி அனைத்தும் புறம்பாக்கப்பட்டோரின் இருப்பிடத்தை நோக்கி நகர வேண்டும். புறம்பாக்கப்பட்டோரின் நிலைக்கு நம்மைத் தாழ்த்த வேண்டும். மத் 8:5,6-இல் நூற்றுவர் தலைவரின் செயல் இப்படிப்பட்டதாகவே இருந்தது. என் பணியாளன் கொடிய வேதனைப்படுகிறான் என்று இயேசுவை வேண்டிக் கொண்டார். அவரது விசுவாசத்தை, உணர்வை இயேசு பாராட்டினார்.

அமெரிக்காவின் அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் வாலிபனாக இருந்த போது, நியூ ஆர்லியன்ஸ் என்ற இடத்தில் கறுப்பின மக்கள் அடிமைகளாக விற்கப்படும் சந்தைக்குச் சென்றார். நீக்ரோ

குடும்பம் ஒன்றில், தந்தையை ஒருவர் அடிமையாக வாங்கிச் சென்றார். தாயை வேறு ஒருவர் அடிமையாக வாங்கிச் சென்றார். மகளை மற்றொருவர் அடிமையாக வாங்கிச் சென்றார். ஒவ்வொருவரும் விற்கப்பட்டபோது அந்தக் குடும்பம் கதறிய கதறல், கண்ணீரோடு அழுத காட்சி ஆபிரகாம் லிங்கனின் இதயத்தை உடைத்தது. அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என்ற தாகம், ஏக்கம் உள்ளத்திற்குள் குடிகொண்டது. அடிமை முறையை ஒழிக்க, தான் அதிபராக வேண்டும் என்ற ஆர்வம் அவரை உந்தித் தள்ளியது. அவர் அதிபராகி முப்பது இலட்சத்திற்கும் அதிகமான கறுப்பின மக்களுக்கு விடுதலையை அறிவித்தார். பெருமைக்காக, சுயநலத்திற்காக, பணம் சம்பாதிக்க, சுகபோகமாய் வாழ பதவியைத் தேடுபவர்கள் பலர். ஆபிரகாம் லிங்கன் நீக்ரோ மக்களை அடிமை நிலையிலிருந்து விடுவிக்க அதிபராகப் பணியாற்ற தீர்மானம் எடுத்தார்.

கிறிஸ்துவோடு இணைந்து தொடக்கூடாதவர்களைத் தொடுகிற உன்னதமான பணித்திட்டத்தை நிறைவேற்ற திருச்சபையாக, இறைமக்களாகச் செயல்படுவோம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

28-02-2021

**தவக்கால இரண்டாம் ஞாயிறு &**
**உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு**

# வாழ்வைக் காக்கும் நம்பிக்கை

**LIFE SAVING FAITH**

| | |
|---|---|
| 2அர 4:1-7 | திப 5:12-16 |
| திபா 72 | லூக் 5:17-26 |

**அவர்களுடைய நம்பிக்கையைக் கண்ட இயேசு அந்த ஆளைப்பார்த்து, “உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார்** (லூக் 5:20).

ஆன்மிக வாழ்வில் விசுவாசம், நம்பிக்கை, பற்றுறுதி போன்ற இறைத் தகவுகள் நம்மை இறைவனுடன் ஆழமான நட்புறவு கொள்ளச் செய்கின்றன. சீர்திருத்தத் திருச்சபைகளின் தந்தை மார்ட்டின் லூதர், ஆபகூக் இறைவாக்கினரின் கூற்றை தம்முடைய சீர்திருத்த கருத்துகளின் மையமாகக் கொண்டுள்ளார். ஆபகூக் 2:4 இல் நேர்மையுடையவரோ தம் நம்பிக்கையினால் வாழ்வடைவார் (The one who is righteous will live by faith) என்கிறார். இந்த வசனத்தில் சொல்லப்பட்ட நம்பிக்கையை, தன்னுடைய மிக முக்கியக் குறிக்கோளான Sola Fide (Faith alone) “பற்றுறுதி மட்டும்” என்பதில் பயன்படுத்தினார் மார்ட்டின் லூதர்.

நம்பிக்கை, விசுவாசம், பற்றுறுதியைக் குறிக்கும் சொல் ‘ஆமென்’ என்னும் எபிரேய அடிச் சொல்லிலிருந்து எழுந்தது. ‘ஆமென்’ என்னும் அடிச்சொல்லின் பொருள் “உறுதி செய்தல்,” “திடப்படுத்தல்,” “வலிமையாகவும் திடமாகவும் இருத்தல்” என்பனவாகும். திருமறையில் இச்சொல் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் உள்ள உறவையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. இறை நம்பிக்கை என்பது நம்மை உயிர்ப்பிக்கின்ற, வாழ்வைக் காக்கச் செய்கின்ற இறைத் தகவு ஆகும். நீதிமொழிகள் 3:5 இல் “முழு மனத்தோடு ஆண்டவரை, நம்பு உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே” என்ற வசனம் பழைய ஏற்பாட்டில் இறை நம்பிக்கை, நம் வாழ்வு சார்ந்து உண்மையானதாக அமைய வேண்டும் எனக் கற்பிக்கிறது. புதிய ஏற்பாட்டில் இறை நம்பிக்கை இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, அவரின் இறைப் பணிகளுடன் தொடர்புடையது. அது கிறிஸ்துவைப் பின்தொடர்வதற்கு நமக்கு வழி காட்டுகிறது. இயேசுகிறிஸ்து கூறும் போது மாற்கு 9:23-இல் நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும் என்கிறார். மேலும் இறை நம்பிக்கை உடையவர், மாற்கு 16:17இல் நம்பிக்கை கொண்டோர்அநேக அடையாளங்களைச் செய்வர் என்கிறார்.

யோவான் 11:40இல் நீ நம்பினால் கடவுளின் மாட்சிமையைக் காண்பாய் என்கிறார். இவ்வசனங்கள் இறைவன் மீது தனிப்பட்ட மனிதனின் இறை நம்பிக்கை கடவுளின் மாட்சிமையைக் காண்பதற்கு உதவுகின்றன. எபிரேயர் 11 ஆம் அதிகாரம் முழுவதும் இறைநம்பிக்கையின் முழுப் புரிதலை நமக்குக் கற்றுத் தருகிறது. இறைநம்பிக்கை நம் வாழ்வை எத்தகைய சூழலில் காப்பாற்றுகிறது என்பதை அறிய முயல்வோம்.

### *1. முழுக் குடும்பத்தையும் காப்பாற்றிய இறைநம்பிக்கை :*

(The Faith that saved the whole family) : (2அர 4:1-7)

2அரசர்கள் 4:1-7 வரையுள்ள திருமறைப் பகுதியில் இறைவாக்கினர் குழுவினைச் சார்ந்த ஒருவரின் மனைவி மிகவும் வேதனையுடன் எலிசாவிடம் கதறி அழுதாள். தன் கணவர் இறந்து போக கடன்காரன் தன் இரு பிள்ளைகளையும் அடிமையாக்கிக் கொள்ள வந்திருக்கிறான் என்று தனது பாரத்தைப் பகிர்ந்தாள். எலிசாவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இறை நம்பிக்கை கொண்டவராய் தன் வீட்டில் வைத்திருந்த எண்ணையை சுற்றிலும் உள்ளவரிடம் இருந்து சேகரித்த பாத்திரங்களில் எல்லாம் நிறைத்தாள். கடவுளின் அடியவரிடம் அதை அறிவித்த போது நீ போய் எண்ணையை விற்று உன் கடனைத் தீர்த்து விடு. எஞ்சியதைக் கொண்டு நீயும் உன் புதல்வரும் பிழைத்துக் கொள்ளுங்கள் என்றார் (2அரா 4:17). இக்கைம்பெண்ணின் இறை நம்பிக்கை அவளது முழுக் குடும்பத்தையும் காப்பாற்ற உதவியது.

தொநூ 6-9 வரையுள்ள அதிகாரங்களில் நோவாவும் அவர் குடும்பமும் கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இறை நம்பிக்கை கொண்டதால் பெரும் அழிவிலிருந்து காக்கப்பட்டார்கள். யோசுவா 2:1-21இல் இராகாபு இறை நம்பிக்கை கொண்டவராய் இருந்தமையால் கீழ்ப்படியாதவரோடு அழியாது அவரும் குடும்பமும் தப்பித்துக் கொண்டார்கள். ஆகவே எபி 11:31இல் நம்பிக்கையுடையோர் பட்டியலில் இராகாபு இடம் பெற்றார். தற்கொலைக்குத் தயாரான பிலிப்பி நகரச் சிறைக்காவலர் மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்? என வினவிய போது திப 16:31-இல் ...ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும். அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள் எனத் திருத்தூதர் பவுல் புத்தி சொல்கிறார். இறை நம்பிக்கை முழுக் குடும்பத்தையும் பாதுகாக்க உதவுகிறது.

## *2. முழுச் சமூகத்தைக் காப்பாற்றிய இறைநம்பிக்கை :*

(The Faith that saved the society) (திப 5:12-16)

"...ஒருமனத்தவராய்..." (திப 5:12)

திருத்தூதர் பணிகள் 5:12-16 வரையுள்ள வசனங்களில் அனனியாவும் சப்பீராளும் மரணமடைந்த பின்னர், சாலமோனுடைய மண்டபத்தின் முன் ஒருமனப்பட்டு கூடிவந்த மக்களுக்கு முன்பாக திருத்தூதர்கள் தொடர்ந்து அற்புதங்களைச் செய்து வந்தார்கள். கடவுளின் பிரசன்னமும் வல்லமையும் அவர்களோடு தங்கியிருந்ததை மக்கள் தெளிவாய் உணர்ந்த காரணத்தால், ஒருவரும் அவர்களோடு ஐக்கியம் கொள்வதை எளிதான செயல் என்று எண்ணவுமில்லை. சொல்லளவில் விசுவாச அறிக்கையைச் செய்யவுமில்லை. ஆனாலும் மக்கள் அவர்களை மேன்மைப்படுத்தி, பலரும் ஆண்டவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். மேலும் பலர் தங்களைச் சார்ந்த பிணியாளர்களைப் படுக்கையிலும், கட்டிலிலும் கிடத்தி பேதுரு நடந்து செல்லும் போது அவருடைய நிழலாகிலும் சிலர் மேல் படும்படிக்குத் தெருக்களில் வைத்தார்கள். திருத்தூதர்களின் வாழ்க்கையில் உண்மையும் வல்லமையும் இருந்ததையும், மற்றவர்களுக்குக் கடவுள் ஆசீர்வாதத்தைப் பொழிவதற்கு அவர்கள் வாய்க்காலாகத் திகழ்ந்தனர் என்பதையும் எளிதில் மக்கள் கண்டு கொண்டார்கள். நகரத்தைச் சுற்றியிருந்த பகுதிகளிலிருந்து பிணியாளிகளும் பிசாசு பிடித்தவர்களும் அவர்களிடத்தில் வந்தபோது, அவர்களெல்லாரும் அதாவது முழுச் சமூகமும் காக்கப்பட்டது.

திருத்தூதர்கள் ஆற்றிய திருப்பணிக்கு அளிக்கப்பட்ட கடவுளின் சான்றாக இந்த அற்புதங்கள் நிகழ்ந்தன என்பதை எபிரேயர் 2:4-ஆம் வசனம் தெளிவுப்படுத்துகிறது. நவீன காலத்தில் "சுகமளிக்கும் பெருவிழாக்களைக்" குறித்து நன்கு அறிய, திருத்தூதர்களிடத்தில் கொண்டுவரப்பட்ட எல்லாரும் குணமாக்கப்பட்டார்கள் என்ற சொற்களை மட்டும் கவனித்தால் போதும். "விசுவாசச் சுகமளிப்போர்" என்று அழைக்கப்படுபவர்களைக் குறித்து எண்ணிப் பார்க்கும் போது, மேற்கூறிய உண்மை பொருந்தாது என்பது யாவரும் அறிந்ததே.

தொடக்கத் திருச்சபை இறை நம்பிக்கையின் சமூகமாக விளங்கியது. திப 2:44,45 இல் தொடக்கத் திருச்சபையின் விசுவாசிகள் மீண்டும் ஒருமித்துக் கூடினார்கள். அவர்கள் சகலத்தையும் விசுவாசத்தோடு பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். அவர்களுடைய ஐக்கியத்தில் தேவை ஏற்பட்டபோது தங்களுக்குச் சொந்தமானவற்றை விற்று அதிலிருந்து பெற்ற பணத்தை எல்லாருக்கும் பகிர்ந்து

கொடுத்தார்கள். அங்கு சமத்துவம் நிலவியது. பேதுரு, யோவான் முழுச் சமூகத்தைக் காப்பாற்ற ஒன்றாகப் பணிசெய்ததோடு அவர்களது செய்தியும் அவ்வண்ணமாக அமைந்ததால் அற்புதமும் நிகழ்ந்தது. தொடக்கத் திருச்சபையில் ஆழமாக விளங்கிய இறைநம்பிக்கை முழுச் சமூகத்தையும் காக்க உதவிற்று.

### *3. இறையரசை உடைமையாக்கும் இறைநம்பிக்கை :*

(The Faith that receive the Kingdom of God) (லூக் 5:17-26)

".... சிலர்....." (லூக்கா 5:18).

இயேசு கப்பர்நகூமிலிருந்த போது ஒரு கூட்ட மக்கள் அவர் சுகமளிப்பதைப் பார்க்கவும், உபதேசிப்பதைக் கேட்கவும் கூடினர். அங்கு இயேசு கிறிஸ்து முடக்குவாதமுற்றவரைச் சுகப்படுத்தினார். அவரோ தனி மனிதனாக அவரிடம் வர இயலாதிருந்தார். ஆகையால் அவர் ஒரு சில மனிதர்களின் உதவியின் மூலம் அவரிடம் சேரக்கூடிய பாக்கியத்தைப் பெற்றிருந்தார். அவர்களுக்கு இயேசு அவரைச் சுகமாக்குவார் என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை அவரால் கனப்படுத்தப்படக் கூடியதாக இருந்தது. அம்மனிதன் மீதான அவர்களது அன்பு, அவர்களது ஒருமனப்பட்ட முயற்சியை வாசலில் கூடியிருந்த மக்கள் கூட்டமும், வேறே எதுவும் தடை செய்ய இயலாதிருந்தது. அவர்கள் வாசல் வழியே உள்ளே போகமுடியாத பொழுது, கூரையின் மேல் ஏறி ஓடுகளைப் பிரித்து அம்மனிதரைப் படுக்கையோடு அவருக்கு முன்பாக இறக்கினார்கள்.

தனி நபர் வாழ்வைக் காப்பதற்கு பிறரின் இறை நம்பிக்கை தூண்டுதலாக உள்ளது. இறைவர் மேல் வைக்கும் நம்பிக்கை நம்மை நிலையற்ற இவ்வுலகில் மட்டுமல்ல, நிலையான மறுவாழ்விற்கும் அழைத்துச் செல்கிறது. இவ்வாழ்வை இவ்வுலகில் பெற்ற நம்பிக்கையோடு பவுல் அடிகளார் நிறைவுடன் சொல்கிறார், "நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே" (2திமொ 4:7,8).

சாதுசுந்தர்சிங், தான் இறைப்பணி ஆற்றிய திபெத் செல்ல ஆயத்தப்பட்டார். அப்போது கடுமையான பனிப் பொழிவு, குளிர், மழை இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்ட காலம். அவருடைய நண்பர்கள் சாதுவிடம் இக்காலநிலை பயணம் செய்வதற்குத் தகுந்தது இல்லை என்று எச்சரித்தனர். ஆனால், சாது, எச்சரிப்பையும் மீறி திபெத் பயணத்தை

மேற்கொண்டார். போகும் பாதை எங்கும் பனிப் பாறைகள் உறைந்து கிடந்தன. ஓர் இடத்தில் சற்று வித்தியாசமாக கறுப்பு நிறத்தில் பனி போர்த்தப்பட்ட பொருளைப் பார்த்து வியப்புடன் பனிக் கட்டிகளை விலக்கிப் பார்க்கும் போது ஒரு மனிதன் குளிரினால் விரைத்து மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தான். அந்த மனிதனுக்கு உதவி செய்யும் எண்ணம் கொண்டு, உதவிக்காக பிறர் வருகையை எதிர் நோக்கினார். அப்போது அங்கு ஒரு வழிப்போக்கன் வந்தான். அவனிடம் நாம் இருவரும் இந்த மனிதனுக்கு உதவி செய்வோம் என்று கேட்ட போது, அவர் மறுத்து விட்டார். சாதுசுந்தர் சிங் அந்த மனிதனின் உயிரைக் காப்பாற்ற தன் தோளில் அந்த மனிதனைச் சுமந்து கொண்டு நடக்க ஆரம்பித்தார். சற்று தூரம் சென்ற போது இருவரின் உடலும் சூடு கொண்டு அந்த மனிதன் பிழைத்துக் கொண்டான். போகும் வழியில் அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உதவி செய்ய முடியாது என்று சென்ற மனிதன் கொடும் பனியில் சிக்கி மரித்துப் போயிருந்தான்.

பெருந்தொற்று (Covid-19), 2020 ஆம் ஆண்டு உலக மக்களை மிகவும் கலங்கச் செய்தது. உயிர் காப்பதற்கு மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணி செய்வோர் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாது இரவு பகல் பாராது உழைத்தார்கள். இறையரசை நம்முடன் வழ்பவர்கள் சுதந்தரிப்பதற்கு நம் இறைநம்பிக்கை, பற்றுறுதி செயலாக்கம் உடையதாக மாற வேண்டும். உயிர் இல்லாத உடல் போல, செயல்கள் இல்லாத நம்பிக்கையும் செத்ததே (யாக் 2:26). 2019 டிசம்பர் முதல் Covid-19 எனும் உயிர்க்கொல்லி நோய் முழு உலகத்தையும் பாதிப்படையச் செய்த போது பணம், பட்டம், பதவி, புகழ், படைபலம் போன்ற யாதொன்றும் மக்களின் வாழ்வைக் காக்க துணை செய்யவில்லை. வாழ்வைக் காக்க உறுதுணையாக இருப்பது உயிர் தந்த கடவுள் மாத்திரமே என்பது இதன் மூலமாக நிரூபணமாகியது. ஆகவே வாழ்வைக் காக்கும் கடவுள் மீது நம்பிக்கை கொள்வோம்! அவரில் வாழ்ந்திருப்போம்!!

அருள்திரு. K. **எட்வின் ஜாண் தேவகுமார்**

07-03-2021

தவக்கால மூன்றாம் ஞாயிறு &
உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு

# இறைவேண்டலில் நிலைத்திருத்தல்

**PERSISTENCE IN PRAYER**

2அர 20:1-11 | 1தெச 5:12-22
திபா 116 | மாற் 7:24-30

**"இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்"** (1தெச 5:17).

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குழுவினர் கப்பல் பயணத்தை மேற்கொண்டனர். கப்பல் தென்னாப்பிரிக்கா கடல் பகுதியில் உள்ள நன்னம்பிக்கை முனையைக் (Cape of Hope) கடக்கும் போது கப்பல் பெரும் புயலின் சீற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. கப்பலின் ஆழ்த்தட்டில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் கப்பலுக்குள் வர ஆரம்பித்தது. கப்பலின் பாரத்தைக் குறைப்பதற்காக உடமைகளை எல்லாம் கடலில் எறிந்து தோல்வி அடைந்தவர்களாய் விரக்தியின் விளிம்பில் நின்றனர். கப்பல் மாலுமி மக்களைப் பார்த்து நாம் செய்த முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டன. இனிப் படைத்தவரை நோக்கித்தான் முறையிட வேண்டும் என்றார். கப்பல் மாலுமி இந்தச் சூழ்நிலையில் பாடல் ஒன்றை இயற்றினார் (ஞானப்பாடல் 221, கடல் கொந்தளித்துப் பொங்க). அப்பாடலை அனைவரும் இணைந்து பாடி நெருக்கடி நிலையில் உறுதியோடு இறைவேண்டல் செய்தனர். கண்களைத் திறந்து பார்க்கும் போது கப்பலின் அடித்தட்டில் உடைப்பு ஏற்பட்ட பகுதியில் ஒரு மிகப் பெரிய மீன் எதிர்பாராத விதமாக வந்து வெளியேயும், உள்ளேயும் தண்ணீர் வரமுடியாத அளவுக்கு இறுக்கமாக அடைத்திருந்தது. எல்லோரும் ஆச்சரியமடைந்து நிர்ப்பந்தமான சூழ்நிலையில் இறைவேண்டலுக்கு இறைவன் பதில் தந்தார் என்று நன்றி செலுத்தி பயணத்தின் நிறைவை அடைந்தனர்.

இறைவேண்டல் என்பது இறை - மனிதத் தொடர்பு சாதனமாகும். கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையும் ஆணிவேராகவும் அமைந்திருப்பது இறைவேண்டலாகும். இறைவேண்டல் இல்லாத வாழ்க்கை வறண்ட பூமிக்குச் சமமாகும். "மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவேண்டல் செய்ய வேண்டும். ஏனென்றால் மனிதர் தமக்கான எல்லா ஆற்றலையும் இறைவேண்டல் வழியாகப் பெறுகின்றனர்" என்று அலெஸிஸ் கரோலின் என்ற இறையடியார் கூறுகின்றார். அன்னை தெரசா இறைவேண்டலைக் குறித்துச் சொல்லும் போது "கடவுளின் கையில் நம்மை முழுமையாக ஒப்படைத்துவிட்டு அவருடைய திருவுளம் நிறைவேறக் காத்திருப்பது" என்கிறார். கிறிஸ்தவ இறைவேண்டல் என்பது வெளிவேடமான வார்த்தை வித்தையல்ல, மாறாக விண்ணகத் தந்தை நம்மை நோக்குகிறார் என்பதை

உணர வைப்பதாகும். இறைவேண்டல் என்பது நம் உயிரோடும், உணர்வோடும், உடலோடும் கலந்த ஒன்றாக அமைய வேண்டும். இறைவேண்டல் ஒரு உறவு சம்பந்தமானது. ஒரு குழந்தை தன் இயலாமையில், இல்லாமையில் தன் பெற்றோரிடம் உதவி கேட்பதைப் போன்றதாகும். நிலையில்லாத அல்லது நம்பிக்கையில்லாத இறைவேண்டல் என்பது வெற்றுத் துப்பாக்கியால் சுடுவது போன்றது. பெரும் சத்தம் எழுப்புமேயொழிய பெரிய செயல் எதையும் சாதிக்காது என்கிறார் பிரான்சிஸ் ஃபர்கிட் என்ற இறையியலாளர். கிறிஸ்தவச் சமயத்தில் இன்று இறைவேண்டல் நாடகத்தன்மையோடு ஏறெடுக்கப்பட்டு, பணமுதலீடு செய்யும் சாதனமாக அதைப் பயன்படுத்துகின்றனர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். இறைவேண்டலில் நிலைத்திருத்தல் குறித்து திருமறைப்பகுதிகள் சார்ந்து தியானிப்போமாக.

### *1. மானிட வாழ்வை மீட்டெடுக்கும் நிலையான இறைவேண்டல்* : (2அர 20:1-11)

இஸ்ரயேலின் புகழ்பெற்ற அரசராகிய தாவீதின் வம்சத்தில் யூதாவின் பதினெட்டாவது அரசராக எசேக்கியா பதவியேற்றார். எசேக்கியா என்றால் பொருள் 'யெகோவா என் பெலன்' என்பதாகும். எசேக்கியா தனது இருபத்தைந்து வயதில் பதவியேற்று அரசராக இருபத்தொன்பது ஆண்டுகள் (2அர 18:1,2) அரசாண்டவராவார். தன்னுடைய அரசாட்சியின் துவக்கத்திலேயே எருசலேம் பெரியகோயிலின் கதவுகளைத் திறந்து பழுதுபார்த்து சுத்திகரித்து மக்களைக் கடவுளிடம் திருப்பி அவரை உண்மையாய்ச் சேவித்து உடன்படிக்கைச் செய்யும்படி செய்தார். குருத்துவத்தை அவர் மீண்டும் நிலைநாட்டினார். ஒரு தேசிய விடுமுறையாகப் பஸ்காவை மீண்டும் கொண்டாடச் செய்தார். மோசே பாலைவனத்தில் செய்த வெண்கலச் சர்ப்பத்தை வணங்கி வந்தனர். அதனை அழித்தார். அனேக சீர்திருத்தங்களைச் செய்த எசேக்கியா தன்னுடைய முப்பத்தொன்பதாவது வயதில் மரணத்திற்கு ஏதுவான நோயினால் பாதிக்கப்பட்டார். எசேக்கியாவுக்கு ஏற்பட்ட நோயைக் குறித்து திருமறையில் காணும் போது கட்டி மற்றும் பிளவை என்ற குறிப்புகள் இடம் பெறுகின்றன. 2அர 20:7இல் நோயினுடைய சிகிட்சை முறை குறிப்பிடப்பட்டுள்ளது. காயவைக்கப்பட்ட அத்தி அடை என்பது புண்களின் எரிச்சல், கட்டி, அரிப்பு, நீர்க்கோவை போன்ற நோய்களைக் குணமாக்கும் எகிப்திய மருத்துவ முறையாகும். எசேக்கியாவுக்கு ஏற்பட்ட பாதிப்பு போரினால் ஏற்பட்ட காயமா? புற்றுநோய் சார்ந்த கட்டியா? அல்லது அசீரியப் படையெடுப்பின் அச்சுறுத்தலால் ஏற்பட்ட விளைவா? ஆகிய கேள்விகள் எழுகின்றன. ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் பல நிலைகளில் பாதிக்கப்படுவார். முதலில் நோயினுடைய கொடுமையான அனுபவம், இரண்டாவது நோய் ஏற்படுத்தும் சார்பு நிலை, மூன்றாவது

நோயினால் ஏற்படும் விளைவு ஆகியனவாகும். எசேக்கியாவுக்கு நோய் ஏற்படுத்திய வீரியத்தால், 2அர 20:1இல் எசாயா இறைவாக்கினர் கூறுகிறார், “நீர் உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தும் . ஏனெனில் நீர் சாவினின்று பிழைக்க மாட்டீர்” என்றார்.

ஆப்பிள் நிறுவனத்தின் அதிபர் ஸ்டீவ் ஜாப்ஸ் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு மரணநிலையின் போது சொன்ன வார்த்தை “உங்கள் வாகனத்தை ஓட்ட ஒருவரை நியமிக்கலாம், உங்களுக்காகச் சம்பாதிக்க எத்தனை பேரையும் நியமிக்கலாம். ஆனால் உங்கள் நோயையும் அதனால் ஏற்படும் மன, உடல் வலியையும் ஏற்றுக்கொள்ள யாரையும் நியமிக்க முடியாது” என்றார். எசேக்கியாவுக்கு மரணம் குறிக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்ட போது தனிமையாய் சுவர்ப்புறமாகத் திரும்பினார். தாங்கொண்ணாத துயரம் நிறைந்தவராய் வாழ்வுக்காகக் கடவுளிடம் நிலையான இறைவேண்டல் ஏறெடுத்தார். 2அர 20:3இல், “...நம்பிக்கைக்குரியவனாய் நடந்து கொண்டேன் என்பதையும், உமது பார்வைக்கு நேர்மையானதையே செய்தேன் என்பதையும் நினைத்தருளும்” என்று உறுதியோடு கதறி அழுது வேண்டுதல் செய்தார் (2குறி 31:20). ஜாண்வெஸ்லி என்னும் இறையடியார் இறைவேண்டலைக் குறித்துச் சொல்லும் போது, “கிருபாசனத்தில் முட்டி மோதுங்கள், மோதிக் கொண்டே இருங்கள். கடவுளுடைய கிருபையும் இரக்கமும் இறங்கி வரும்” என்கிறார். இறைவாக்கினர் சொல்லும் செய்தி தீர்க்கமானது. மாறுபடக் கூடியதல்ல. ஆனால், எசேக்கியாவின் நிலையான இறைவேண்டல், கடவுள் இறைவாக்கினர் வழியாகச் சொல்லிய மரணத்தின் நிலையை மாற்றியமைத்து விட்டது. 2அர 20:5,6இல், “உன் மன்றாட்டைக் கேட்டேன். உன் கண்ணீரையும் கண்டேன். இதோ உன்னைக் குணப்படுத்துவேன். உனது ஆயுளில் இன்னும் பதினைந்து ஆண்டுகள் கூட்டுவேன் என்பதைச் சொல்” என்றார். இங்கு நிலையான இறைவேண்டல் முழுநலத்தையும், மரணம் குறிக்கப்பட்டவருக்கு மானிட வாழ்வையும் மீட்டெடுத்து வழங்கியது. நம் வாழ்க்கையிலும் எவ்வளவு பெரிய பாதிப்பு நம்மைத் தொற்றிக் கொண்டாலும் இயேசு கிறிஸ்துவிடம் நிலையான இறைவேண்டல் செய்தால் நமக்கு ஆயுளைக் கூட்டி வாழ்வை நிச்சயம் வழங்குவார் என்பதில் மாற்றமில்லை.

### *2. மகிழ்வை மலரச் செய்யும் நிலையான இறைவேண்டல்:*

(1தெச 5:12-22)

படைப்புகளின் மகுடம் என்று மமதை கொள்ளும் மனிதர், அனேக நோய்களில் உள்ளம் உடைந்து உருக்குலைந்து நொறுங்கிப் போய்விடுகின்றனர். படைப்புகளில் எதுவும் தன்னைத்தான் அழித்துக் கொள்வதில்லை. ஆனால் மனிதர் தமக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு இல்லையென்று தம்மைத்தாமே மாய்த்துக் கொள்கின்றனர். புனித

அகஸ்டின் சொல்லுகின்ற போது “இறைவா எங்கள் உள்ளங்கள் உம்மில் இணையும் வரை நாங்கள் அமைதி பெறுவதில்லை” என்றார். மனிதர்கள் இன்று சுமக்கமுடியாத சுமைகளோடு வாழ்ந்து வருகின்றனர். “இறைவேண்டலின் வல்லமை மீது சாத்தானுக்கு மனிதனை விட அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. ஆனால் அவன் இறைவேண்டல் செய்பவன் அல்ல; மாறாக, இறைவேண்டலால் பாதிக்கப்படுபவன்” என்று இறையடியார் கே. சிங் என்பவர் கூறுகின்றார். இயேசு கிறிஸ்துவினுடைய விண்ணேற்றத்திற்குப் பின்பு சில ஆண்டுகளில் தூய பவுலடிகளால் எழுதப்பட்ட திருமுகம் தான் தெசலோனிக்கர் திருமுகமாகும். தூய பவுலடியார் மூன்று ஓய்வு நாள்கள் மட்டுமே இங்கு தங்கி பணி செய்தார் என்று கூறப்படுகிறது. சிசரோ என்பவர் தெசலோனிக்கப் பட்டணம் உரோமைப் பேரரசின் மத்தியப்பகுதியிலிருந்த ஒரு துறைமுகப்பட்டணம் என்பார். பவுலடியாரின் பிறதிருமுகங்களை ஒப்பிடும் போது இந்த மடலில் இறையியல் கருத்துகள் அதிகம் நிறைந்திருப்பதைக் காணமுடியும். தெசலோனிக்கப் பட்டணத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் பல்வேறு பிரச்சனைகள் நிறைந்த சூழ்நிலையில் காணப்பட்டனர். உரோமைச் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கம், கலாச்சாரத் தாக்கம், யூதர்களால் சந்தித்த பல எதிர்ப்புகள், அனுபவமிக்க தலைவர் இல்லாத சூழ்நிலை, மற்றும் அறிவுநெறித் தாக்கம் நிறைந்த நிலைகள் எல்லாம் காணப்பட்டன. கிறிஸ்துவின் வருகையைக் குறித்த ஐயப்பாடு அதிகம் நிறைந்திருந்தது. இறந்தவர்கள் கிறிஸ்துவின் வருகையில் நிலைவாழ்வில் பங்கு பெறுவார்களா? என்பதற்கு மறுமொழியாயும் உழைப்பை மறுத்து மகிழ்வையும் இழந்து நிற்கின்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டவர்களாய் இருந்தவர்களைப் பார்த்தும், தூய பவுலடியார் 2தெச 5:16,17-இல் “எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்” என்கிறார். நம்முடைய சூழ்நிலைகள் மாறி இருந்தாலும் நாம் இறைவனை நோக்கி நிலையான இறைவேண்டல் செய்யும் போது கடவுள் மகிழ்வை நம் மனத்தில் ஏற்படுத்துவார். ஆபிரகாம் லிங்கன் தன் ஆட்சிக் காலத்தில் எதிரிகள் சூழ்ந்திருக்கும் கடினமான சூழ்நிலையில் பதட்டம் இல்லாமல் மகிழ்வுடன் காணப்பட்டார். அதிகாரிகள் அதிபரிடம் எப்படி இந்தச் சூழ்நிலையில் பதட்டம் இல்லாமல் இருக்க முடிகிறது என்று கேட்டார்கள். அப்பொழுது அவர் சொன்னார் “நான் என்னுடைய வாழ்விற்கான எல்லா ஆற்றலையும் இறைவேண்டலில் இருந்து தான் பெறுகிறேன். எனவே தான் நான் மகிழ்வுடன் இருக்க முடிகிறது என்றாராம்.” பிலிப்பியர் 4:6-இல் பவுலார், “எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டலாகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள்” என்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து லூக் 18:1-இல் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்.

எதிர்நோக்கியிருக்கும் மகிழ்வைப் பெறுவதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும், நாம் தளராத மனத்துடன் எப்பொழுதும் உரோ 12:12, யாக்கோபு 5:13 ஆகிய வசனங்களின் அடிப்படையில் இறைவனிடம் மன்றாடக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகத்தின் பிரச்சனைகளை, கவலைகளை, ஐயங்களை, அவலங்களை அகற்றி மகிழ்வை நம் வாழ்வில் மலரச் செய்வதற்கு ஆண்டவராகிய இயேசுவை நோக்கி நிலையான இறைவேண்டல் ஏறெடுப்போம்.

### *3. மறுகட்டமைப்பை ஏற்படுத்தும் நிலையான இறைவேண்டல்* : (மாற் 7:24-30)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பணி, மரணம், உயிர்ப்பு அனைத்துமே உலகத்தில் பல தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தின. இயேசு கிறிஸ்து புறஇனத்தார் வாழும் பகுதியான தீர் பகுதிக்குள் நுழைந்து ஒரு வீட்டிற்குள் போனார். இயேசுவின் வருகையைக் கேள்விப்பட்டு கிரேக்கரும், சிரிய பெனிசிய இனத்தைச் சார்ந்த பெண் அவ்விடம் வந்து தன் மகளுக்காக இயேசு கிறிஸ்துவிடம்இறைவேண்டல் செய்து நின்றாள். மாற்கு நற்செய்தியாளர், இல்லத்தில் நடைபெறுவதைப் போன்று காட்சிப்படுத்துகின்றார். மத்தேயு நற்செய்தியாளர் நடைபயணத்தில் நடைபெறும் நிகழ்வைப் போலச் சித்திரித்து இயேசு கிறிஸ்து பாராமுகம் காட்டுவதைப் போலவும், இனனொரு பக்கம் அந்தப் பெண்ணை அனுப்பிவிடத் துடிக்கும் சீடர்களின் நிலைப்பாட்டையும் மத்தேயு 15:21-28இல் விவரிக்கிறார். கானானியர்களை, சபிக்கப்பட்டவர்கள், பாவிகள் குற்றமிழைப்பவர்கள் என இணைச்சட்டநூலும் அதனையடுத்து வந்த இலக்கியங்களும் சித்திரிக்கின்றன. இவர்கள் தீயநடத்தையும் சிலை வழிபாடுகளையும் பின்பற்றுகிறவர்கள் என்று இறைவாக்கினர்கள் கூறுகின்றனர். எப்படியிருப்பினும் இந்தப் பெண் மூன்று நிலைகளில் தாழ்த்தப்பட்டிருக்கிறார். முதலில் அவர் ஒரு பெண். இரண்டாவது அவர் ஒரு புறவினத்துப் பெண். மூன்றாவது அவர் பேய் பிடித்த மகளின் தாய். இப்படி மூன்று நிலைகளில் தாழ்த்தப்பட்ட ஒரு பெண் அனைவருக்கும் முன் இயேசுவின் காலில் வீழ்ந்து கிடந்தார். உதவி வேண்டி நிற்கும் பெண் சமூகத் தடைகளை உடைத்தெறிந்து ஒரு இனத்தின் அடையாளமாக ஆண் துணையின்றி வந்தவர் என்பதையும், விக்கிரகங்களுக்கு முன்பாக வீழ்ந்து கிடந்தவர், இப்பொழுது இயேசுவை வாழ்வு வழங்கும் இறைவனாக எண்ணி பாதத்தில் வீழ்ந்து வேண்டுதல் செய்கிறார் என்பதையும் புரிய வேண்டும். மாற்கு 7:27 இல் இயேசு அவரைப் பார்த்து முதலில் பிள்ளைகள் வயிராற உண்ணட்டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல என்றார். யூதர்கள் புறஇனத்தாரைச் செருக்குடன் மரியாதையின்றி அழுக்கடைந்த நாய்களாக அவர்களைக் கையாண்டனர். கிரேக்கச் சமூகத்தில் நாய் அவமரியாதையின் சின்னமாய்ப்

பார்க்கப்பட்டது. இங்கு இயேசு கிறிஸ்து பாரம்பரியங்களைப் பின்பற்றும் யூதரைப் போலவும், ஒரு இனத்தை அவர்கள் வாழும் இடத்திலே சென்று கொச்சைப்படுத்தவதைப் போலவும் மேலோட்டமாகத் தோன்றுகிறது. மாற்கு 7:28 இல் அதற்கு அந்தப் பெண், ஆம் ஐயா, ஆனாலும் மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறுபிள்ளைகள் சிந்தும் சிறுதுண்டுகளைத் தின்னுமே என்று பதிலளித்தாள். நிராகரிக்கப்படும் கோரிக்கை, உதாசீனப்படுத்தம் நிலை, தடைகள் நிறைந்த சூழல். ஆனால் அவமானத்தை அடையாளமாக மாற்றும் மறுகட்டமைப்பு நிலையை இங்கு காணமுடியும். பிறப்பால் வராத உரிமை இங்கு நிலையான இறைவேண்டல் வழியாக ஏற்படுகிறது. கிங்சாங் என்ற அறிஞர் குறிப்பிடும்போது "நம்பிக்கை என்பது விழித்திருககும் நிலையில் காணும் கனவு" என்பார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் குறிப்பிடும் போது, "பிறந்த குழந்தை கூட அழுகை என்னும் புரட்சியைச் செய்து தான் தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்கிறது" என்கிறார். இறைவனின் மேசை என்பது அனைவருக்கும் பொதுவானது என்பதை வெளிப்படுத்தினார். அந்த மேசையின் கீழ் (உணவு சிதறலுக்காக) எச்சில் உணவுக்காகக் காத்திருக்கும் நாய்க் குட்டிகள் என்ற உரிமை போதும் என்று நம்பிக்கையை வெளிப்படுத்தினாள். ஒரு ஒதுக்கப்பட்ட, புறம்தள்ளப்பட்ட இனத்தின் ஒற்றைப் பெண் பிரதிநிதியாக ஆணாதிக்க யூதச்சமுதாயத்தின் முன் நிலையான இறைவேண்டல் வழியாய் மறுகட்டமைப்பை விதைப்பதைக் காணமுடியும். ஒரு இனம், மாற்றி சிந்திக்கத் துவங்கிவிட்டது என்றால் அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பார்கள். இயேசு இந்தப் பெண்ணிற்குச் சொல்லும் வார்த்தை மாற்கு 7:29-இல், இயேசு அவரிடம் நீர் இப்படிச் சொன்னதால், போகலாம், பேய் உம் மகளை விட்டு நீங்கிற்று என்றார். இங்கு ஒரு புறஇனத்துப் பெண்ணுடைய நிலையான இறைவேண்டல் மறுகட்டமைப்பையும் மகளுக்கு நலனையும் வழங்கியது.

இறைவேண்டல் என்பது வெறும் சத்தம் அல்ல; அது ஒரு யுத்தமாமே. இறைவேண்டல் என்பது உதட்டின் உச்சரிப்பு மட்டுமல்ல இருதயத்தில் உருவாகும் உணர்வின் வெளிப்பாடு. இயேசு கிறிஸ்துவிடம் நிலையான இறைவேண்டல் ஏறெடுக்கும் போது மறுவாழ்வை மீட்டெடுத்து, மகிழ்வை மலரச் செய்து மறுகட்டமைப்பை ஏற்படுத்தும் என்பதில் மாற்றமில்லை. இடைவிடாது இறைவேண்டல் செய்வோம். இறைவனின் வழிநடத்துதலை நாம் பெறுவோம்.

அருள்திரு. D. **டார்வின் வினோ**

14-03-2021

தவக்கால நான்காம் ஞாயிறு &
உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு

# விடுவிக்கும் உண்மையான வழிபாடு

**TRUE WORSHIP THAT LIBERATES**

விப 3:11-18 திப 16:25-34
திபா 137 லூக் 13:10-17

**"... அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்"** (லூக் 13:12).

வழிபாடுகள் பலவிதம். எல்லாச் சமயங்களும் வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. போதனை என்பது வழிபாட்டின் ஓர் அம்சம். ஒவ்வொரு மார்க்கமும் தம் தம் இறை நம்பிக்கைக்கு ஏற்றாற்போல வழிபாட்டு முறைகளையும், வழிபாட்டுத் தலங்களையும் அமைத்துள்ளனர். உலகு போற்றும் அறம் போதித்த திருவள்ளுவர் தன் முதல் குறளாய் 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று பாடியுள்ளது கடவுள் நம்பிக்கைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. உலகுக்கு அறம் பொதிந்த செய்தியைக் கொடுத்தவர், 'அறத்திற்கும், உலகத்திற்கும், எழுத்திற்கும் முதன்மையானவர் கடவுளே' என்கிறார்.

கிறிஸ்தவத் திருச்சபை என்பது 'கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட அல்லது மீட்கப்பட்டவர்களின் கூட்டம்' (elected or called - out community) என அறியப்படுகிறது. திருச்சபையின் அடிப்படை விசுவாசம், கடவுள் தம் வார்த்தையினாலும் (Word), வல்லமையினாலும் நம்மைப் படைத்தார், அடிமைத்தனத்தில் விடுவித்தார், பாவத்தினால் வீழ்ந்து கிடந்த நமக்காய்க் கிறிஸ்துவைத் தந்து நம்மை மீட்டார். ஒவ்வொருவரோடும் தனித்தனியே இறைஉறவை மேம்படுத்தி தம்மையே வெளிப்படுத்தினார் (God's self-revelation with individuals). இக்கூட்டத்தாரே மீட்கப்பட்டவர்கள் (திப 2:47) என்று திருமறை அடையாளப்படுத்துகின்றது. மீட்கப்பட்டவர்கள் அல்லது இறைமக்கள் கடவுளுக்குச் செய்யும் கைம்மாறுதான் 'வழிபாடு.' அப்படியானால் வழிபாட்டு முறை என்பதை இவ்வாறு புரிந்து கொள்ளலாம். கடவுளின் வார்த்தைக்கும், அவரின் வெளிப்பாடுகளுக்கும் திருச்சபை செய்யும் மறுமொழி மற்றும் கடவுளின் வார்த்தையையும்,அவரது தியாகத்தையும், நம்மேல் கொண்ட அன்பையும், அறிக்கையிடும் கூறுகளே வழிபாடு என்பதாகும்.

கிறிஸ்தவத் திருச்சபையில் வழிபாடு மிக உயர்ந்த, உன்னதமான மற்றும் இன்றியமையாத அம்சம். திருமறையும் வழிபாட்டை

முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது. படைப்பின் வரலாறு, மனிதனின் வீழ்ச்சி, மீட்பு, மக்களோடு கடவுள் ஏற்படுத்தியிருக்கும் உடன்படிக்கை, திருச்சபை அல்லது தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கூட்டம் மற்றும் நித்திய நம்பிக்கை போன்றவை வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு அர்த்தம் பெறுபவை.

வழிபாடு என்னும் பதம் எபிரேயத்தில் 'Shachah' என்றும், கிரேக்கித்தில் 'Proskuneo' என்றும், ஆங்கிலத்தில் 'Worship' என்றும் அழைக்கப்படுகிறது. மொழியியல் அகராதியின்படி 'Shachah' என்றால் 'பணிதல் - to bow down' என்றும், 'Proskuneo' என்றால் 'முத்தமிடுதல் - to kiss like a dog' என்றும், 'Worship' என்றால் 'மதிப்பளித்தல் - Worthship' என்றும் பொருள். இவைகளின் யதார்த்த விளக்கம் அறியவேண்டுமெனில் இச்சொற்கள் குறிக்கப்பட்டிருக்கும் திருமறைப்பகுதிகளை வாசித்தும் தியானித்தும் அறிதலே சிறப்பானது.

இன்றைய சூழலில் வழிபாடு சபைகளையும் (congregations), பிரிவுகளையும் (denominations) பிரித்து நிற்கிறது. உணர்ச்சிவசப்படுதலுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. வரையறைகள் கடந்த வழிபாட்டிற்கு வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றன. நமக்கு விடுதலை கொடுப்பவர் உண்மைக் கடவுள் எனில், அவரை வழிபடும் வழிபாடு உண்மையானது, அது நமக்கு விடுதலையை உறுதிப்படுத்துகின்றது என்பதைத் தியானிக்க இந்தத் தவக்காலம் பொருத்தமானது. டேவிட் பட்ரிக் (David Buttrick) என்பவர் இவ்வாறு கூறுகிறார், "கடவுள் இயேசு கிறிஸ்துவில் நம் ஆத்துமத்தை விடுதலையாக்க மட்டும் வந்தார் எனில், சமூக அடிமைத்தனத்திற்குள்ளான இம்மண்ணின் மக்களையும், பாழாய்ப் போய்க் கொண்டிருக்கும் படைப்புகளையும் விடுதலை செய்ய வேறு ஒரு மீட்பர் வரக் காத்திருக்க வேண்டுமா? அப்படியானால் இயேசு கிறிஸ்துவை உலகின் மீடபர் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் நமக்குக் கொடுத்திருப்பது பாதி விடுதலையல்லவோ? அப்படியல்ல, இயேசுவே உலகின் ஒரே மீட்பர்" என முடிக்கின்றார். வழிபாடு நாம் பெற்றிருக்கும் விடுதலையை அறிவிப்பதாயும், உறுதிப்படுத்துவதாயும் அமைவதே விடுதலை தரும் வழிபாடு.

### *1. இறைச்சந்திப்பும் விடுதலை வழிபாடும்* : (விப 3:16)

"உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர்-ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் - எனக்குக் காட்சியளித்து இவ்வாறு கூறினார்: உங்களையும், எகிப்தில் உங்களுக்கு நேரிட்டதையும் நான் கண்ணாலே கண்டுகொண்டேன்."

பழைய ஏற்பாட்டில் 'இறைஉறவை வழிபாடு நீட்டிப்பு செய்யும் என்று இஸ்ரயேலர் ஆணித்தரமாய் நம்பினர். இவ்வழிபாட்டினூடே தம் மக்களைச் சந்தித்து அவர்களோடு கடவுள் நல்லுறவினைப் பேணுகிறார் என்பது மூதாதையர் நம்பிக்கை.' 'இறைச்சந்திப்பு' திருமறையில் முற்பிதாக்களையும், அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ரயேலரின் விடுதலையினையும் முக்கியப்படுத்தியது. எகிப்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ரயேல் மக்களைக் கடவுள் சந்திக்கிறார் (விப 3:16). ரபிமார்களின் பாரம்பரியத்தில் இவ்வசனம் தொநூ 50:24-இல் வரும் கடவுள் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்த நாட்டை விட்டு, தாம்....ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற நாட்டிற்குப் போகப்பண்ணுவார்....என்னும் வசனத்தைப் பிரதிபலிக்கிறது. 'சந்திப்பு' என்னும் பதம் 'paqad' என்னும் எபிரேயப் பதத்தின் தமிழாக்கம். இப்பதம் 'நட்புறவு, அதிக கவனம் செலுத்துதல்' என்னும் அர்த்தம் கொண்டது. இச்சந்திப்பு அன்பின் மிகுதியினாலும், வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகள் ஆனதாலும் நிகழ்ந்ததே. இச்சந்திப்பு மகிழ்ச்சியினாலோ, ஆரவாரத்தினாலோ, எழுச்சியினாலோ, பலியினாலோ அல்ல; மாறாக இச்சந்திப்பு கடவுளின் சுதந்தரவாளிகளாய்த் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் பட்ட வேதனையில் பங்குகொள்வதற்காகவே.

மோசே இச்செய்தியை ஆரோன் மூலம் இஸ்ரயேல் சபைக்கு அறிவித்தார். கடவுள் தங்களைச் சந்தித்து தங்கள் உபத்திரவங்களைக் கண்ணோக்கினார் என்பதை அறிந்தபோது, விடுதலையின் உற்சாகத்தினால் மக்கள் தலைகுனிந்து (shachah) கடவுளைப் பணிந்துகொண்டார்கள் (விப 4:31). அதோடு கடவுளை நிரந்தரமாய் பலியினூடே வழிபட அனுமதி கேட்டனர் (விப 3:18). காரணம், பலி செலுத்துதலை இஸ்ரயேலரின் விடுதலையை உறுதிப்படுத்தும் வழிபாடாகக் கடவுள் நியமம் கொடுத்தார். பலி கடவுளைக் கனப்படுத்தும் விதமாய் நிறைவேற்றப்பட்டது.

ஆக, 'இறைச்சந்திப்பு' மனிதன் அனுபவிக்கும் பாடுகளின் மத்தியில் வெளிப்படுகிறது. 'விடுதலை' வழிபாட்டில் அறிவிக்கப்படுகிறது. இவைகள் இரண்டின் மத்தியில் இறைப்பணிக்காய்த் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்களான மோசே, ஆரோன் மற்றும் இஸ்ரயேலின் மூப்பர்களின் அருட்பணி அளப்பரியது. திப 9-ஆம் அதிகாரத்தில் சவுலை ஆண்டவர் சந்தித்த போது அவரை ஆட்படுத்தியிருந்த அதிகார வெறியிலிருந்து அவரை விடுவித்து மக்களுக்கு நற்செய்திப் பணியாளராய் ஆண்டவர் ஏற்படுத்தினார். இயேசு கிறிஸ்துவும் மக்களைச் சந்தித்த போது (லூக் 4:18) விடுதலையை உறுதிப்படுத்துகின்றார். விடுதலை தரும் வழிபாடு இறைச்சந்திப்பில் தொடங்கி, கிறிஸ்துவின் சிலுவையாலும் பாடுகளினாலும் மெருகேற்றப்பட்டு, 'விடுதலையை' உறுதிப்படுத்தும் வழிபாட்டில் முழுமையடைகின்றது.

## 2. அதிகார வெறியின் அடக்குமுறையைத் தகர்த்த வழிபாடு :

"நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" என்னும் கிறிஸ்துவின் பாக்கிய வசனப்போதனை, நீதிமான்கள் நீதி செய்வதால் எதிர்கொள்ளும் உபத்திரவத்தையும், இயேசு கிறிஸ்து மற்றும் அவரது சீடர்கள் அடைந்த துன்புறுதலையும் நியாயப்படுத்துகின்றது. திப 16:25-32 வசனங்களில் அத்தகைய வேதனையைப் பவுலும் சீலாவும் அனுபவித்தனர்.

குறிசொல்லும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு ஏழைப் பெண் சில செல்வந்தர்களின் பணப் பசிக்கு இரையானாள். தமிழ் மொழிபெயர்ப்பில் 'குறிசொல்லும் ஆவி' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இப்பதம் கிரேக்கத்தில் 'pneuma python' அதாவது 'spirit of python' 'சர்ப்பத்தின் ஆவி' எனும் ஆவியைக் குறிக்கின்றது. கிரேக்கப் புராணத்தில் 'python' என்பது, பூமிக்கான அல்லது நிலத்திற்கான கிரேக்கத் தெய்வமாகிய 'கயா' வுக்கு (Gaya) பிறந்த வலுசர்ப்பம் (Dragon Serpant). இந்தச் சர்ப்பம் பூமியிலிருந்து தோன்றியது என்றும் வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் பூமியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிலிருந்து தப்பிய ஒரே உயிர் என்பதும் கிரேக்கர்களின் புராணத்தில் நம்பப்படுகிறது. இதன் முக்கியமான பணியாகச் சொல்லப்படுவது குறி சொல்லுதல் கல்லைப் (oracle stone) பாதுகாத்தலும், பூமியின் மத்தியில் காணப்படும் அதன் உறைவிடத்தைப் பாதுகாத்தலுமே. 'இது புதிய கடவுளின் வருகையை அல்லது அறிமுகத்தை அதிபயங்கரமாய் எதிர்க்கும்.' ஆக, திப 16:16 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த அடிமைப்பெண் 'Zeus' என்னும் கிரேக்கக் கடவுளைத் தவிர்த்து வேறு யாரும் அறிமுகமாவதைத் தடுக்கும் ஆவியால் நிரப்பப்பட்டவள். ஆனால் அவளோ பவுலையும், அவனோடிருந்தவர்களையும் பார்த்து 'இந்த மனிதர் உன்னதமான கடவுளின் பணியாளர், மீட்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்' என உரைக்கக் கூறுகிறார். அவள் கூறியதில் என்ன தவறு என எண்ணத் தோன்றும். பவுல் அவரைக் கட்டுப்படுத்தியிருந்த அதிகார வெறியினையும், சர்ப்பத்தின் ஆவியையும் அறிகிறார். அவரை விடுவிக்கிறார். ஆனால் விடுதலையோ விபரீதத் தர்க்கத்தை ஏற்படுத்தியது. இப்பெண்மணியால் பண ஆதாயம் பெறும் எஜமான்கள் பவுலுக்கும், சீலாவுக்கும் விரோதமாக எழும்பி, தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி அடித்து, துன்புறுத்தி சிறைச்சாலையின் உட்காவலறையிலே கால்களைத் தொழுமரத்தில் மாட்டி காவலில் வைத்தனர் (வ. 21,23,24).

தியத்திரா உரோமை ஆட்சிக்குட்பட்ட பகுதியானாலும் அங்குக் கிரேக்க மொழி மற்றும் கலாச்சாரம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆயினும் உரோமை அரசாட்சியின் கலாச்சாரம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. உரோமை மத, கலாச்சாரத்தைப் பின்பற்ற வற்புறுத்தினர். உரோமை மத நம்பிக்கையில் சீசரே கடவுள். அதை மீறுவோர் உரோமையரால் அடிமைப்படுத்தப்பட்டனர். சர்ப்பத்தின் ஆவியால் குறிசொன்ன பெண் உரோமை அதிகாரிகளின் துணையோடு உரோமை வியாபாரிகளால் அடிமைப்படுத்தப்பட்டாள். அவள் விடுதலையானபோது '....நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணி, உரோமையராகிய நாம் ஏற்றுக்கொள்ளாத....' (வ. 20,21) என்னும் குற்றச்சாட்டை அவர்கள் மேல் சுமத்துகின்றனர். கடவுளின் நீதியை நிறைவேற்றியதாலும், நன்மை செய்ததாலும் பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். துன்பத்தின் மத்தியில் திருத்தூதர் ஏற்றெடுத்த ஆயுதம் 'வழிபாடு.' அவர்கள் அனுபவித்த துன்பம் வசனம் 23இல் 'அநேக அடி' என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. விவிலியப் பண்டிதர்கள் இதனை 'மரணத்திற்கேதுவான அடி' என விளக்குகின்றனர். உடல்அசதி, மற்றும் மனச்சோர்பின் மத்தியிலும் கடவுளை வழிபடுவதில் மகிழ்ச்சி கண்டனர் பவுலும் சீலாவும். பாவத்திற்கும், வியாதிக்கும், அதிகாரத்திலிருந்தவருக்கும் நம் முன்னோர்கள் அடிமைப்பட்டுக் கிடந்தபோது நமக்கு நன்மை செய்த அருட்பணியர் அடைந்த உபத்திரவம் நம் கண்முன் மலிந்து கிடக்கும் சாட்சிகள்.

இன்று பலர் மனக்கசப்புகளை முக்கியப்படுத்தி, பிரிவினைகளைக் காரணம் காட்டி வழிபாட்டில் பின்வாங்குகின்றனர். ஆனால் வழிபாடோ உடல்சோர்வையும், மனக்கலக்கத்தையும், நீக்கி சமூக வன்முறையிலிருந்து விடுதலையை உறுதிசெய்கிறது.

### *3. ஆதரவளிக்கும் அறச்செயலே விடுதலை தரும் வழிபாடு* :

'அறம்' (Ethics), 'ஒழுக்கம்' (Morality) என்னும் வரையறை 'நன்மை தீமை' யினை வகையறுக்கும் அளவுகோல்கள். ஒழுக்கம் என்பது வாழ்வியல் முறை, குணாதிசயம் மற்றும் மாந்தரின் நன்னடத்தை ஆகியவற்றைச் சட்டத்திற்குட்பட்டும், விதிகளுக்குட்பட்டும் தர மதிப்பீடு செய்யும் கூறு. ஒழுக்கத்தில் மாற்றுக் கேள்விக்கு இடமில்லை. எடுத்துக்காட்டு, 'ஓய்வுநாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு' என்னும் கற்பனையினை உள்ளபடி கடைப்பிடிப்பது அல்லது கீழ்ப்படிவது ஒழுக்கம் (Obeying the existing law is Morality). ஆனால் 'அறம்' என்பது சமயோஜித புத்தியோடு, சூழலின் தேவைக்கேற்ப, விமர்சன

அணுகுமுறையோடு கைக்கொள்ளும் முறைகள். 'ஓய்வுநாளில் வேலை செய்தல் கூடாது' என்பது நியாயப்பிரமாண விதிமுறையின் விளக்கம். ஆயினும் சகமனிதன் வேதனையுறும் போது தேவைக்கேற்ப, சூழலுக்கு ஏற்ப இவ்விதியினை அணுகுதலே 'அறம்'. பத்துக் கற்பனைகள் 'ஒழுக்கக் கோட்பாடுகள், அதைச் சூழலின் தன்மையோடு அணுகுதல் 'அறம்' பொதிந்த வாழ்வு முறை. லூக்கா 13:10-17 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் 18 வருடமாய்ப் பிசாசின் பிடியில் அகப்பட்டு நிமிர இயலாத கூனியாயிருந்த பெண்ணைச் சுகப்படுத்திய நிகழ்வு, கிறிஸ்து காண்பித்திருக்கும் அறச்செயலை நினைவுப்படுத்துகின்றது. இயேசுவின் அற்புதங்களில் காணப்படும் பொதுவான அம்சங்கள் இந்நிகழ்விலும் காணப்படுகின்றன. இயேசு அவளைக் கண்டு-அழைத்து-விடுதலையாக் கப்பட்டாய் என்று சொல்லி-அவள் மேல் கைகளை வைத்தார் - அவள் விடுதலை பெற்று கடவுளை மகிமைப்படுத்தினாள். இந்நிகழ்வு ஓய்வுநாளில் நடைபெற்றதால் தொழுகைக்கூடத்தலைவர் அவர் மேல் கோபமடைந்தார்.

இயேசு ஓய்வுநாள் பாரம்பரியத்தைப் பின்பற்றவில்லையா? எனும் கேள்வி எழும். இயேசு ஓய்வுநாளை அவமாக்கி தம் வேலையைச் செய்தார், ஆகையால், நாங்களும் ஓய்வுநாளில் எங்களுக்கு விருப்பப்பட்ட வேலையைச் செய்வோம் என்னும் வாதங்களால் ஓய்வுநாளில் தங்கள் மனவிருப்பத்தை நிறைவேற்றி அதை நியாயப்படுத்துவோரும் உண்டு. இயேசு ஓய்வுநாளை உண்மையாய்க் கடைப்பிடித்தார் என்பதற்கு இச்சம்பவம் ஒரு சான்று.

திருமறை கூறும் ஓய்வுநாள் நியமங்களில் தடைசெய்யப்பட்ட ஓய்வுநாள் உழைப்புகள் என்னும் பட்டியல் விரிவாய் இல்லையெனினும், வயல்வெளிகளில் உழைப்பதைத் தவிர்ப்பது (விப 34:21; எண் 15:32-36), திராட்சைரசத்தில் மிதிப்பது மற்றும் விலங்குகளை ஏற்றுவது (நெகே 13:15-18), வியாபாரம் மற்றும் சுமை சுமத்தல் (எரே 17:22, ஆமோ 8:5), பிரயாணங்களைக் கைவிடுவது (விப 16:23-30), மற்றும் நெருப்பைப் பற்றவைத்தல் (விப 35:2-3) போன்றவை தடைசெய்யப்பட்டவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. யூத ரபிமார்கள் இந்நியமங்களை இவைகளோடு தொடர்புடைய பணிகளுக்கும் பொருந்தும் என்று வியாக்கியானம் செய்தனர். எடுத்துகாட்டாக, வயல் நிலத்தில் உழைப்பதைத் தானிய உற்பத்தி எனவும், அடைத் தயாரிப்பு எனவும் விளக்கி விதைத்தல், உழுதல், அறுத்தல், தானியங்களைப் பகுத்தல், அரைத்தல் மாபிசைதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டியவை எனப் போதித்தனர். சுமை சுமப்பதைக் குறித்து எரே 17:21-27 மற்றும் நெகே 13:15-22 ஆகிய திருமறைப்பகுதிகளில்

வியாபாரத் தேவைக்காய்ச் சுமை சுமத்தல் ஓய்வுநாளில் தவிர்க்கப்பட வேண்டியது. ஆனால் ரபிகள் படுக்கையைச் சுமந்து செல்வதையும் சுமை சுமத்தலாய்க் கருதினர். அதிகாரிகள் சட்டங்களை அதிகப்படுத்துவதன் நோக்கம், மக்களைத் தங்கள் அதிகாரத்தின் கீழ் கட்டுப்படுத்துவதற்காகவே. சட்டச் சீர்திருத்தம் என்னும் பெயரில் மேற்கொள்ளப்படும் ஊழல்களும் இதையே நிரூபிக்கின்றன. இவைகள் மக்களுக்கு ஆதரவாய் இருக்கின்றனவோ இல்லையோ, அதிகாரத்திலிருப்போருக்கு ஆதரவாய் இருக்கின்றன. இயேசு கிறிஸ்து ஓய்வுநாளை மிகுந்த பயபக்தியோடு கடைப்பிடித்து கடவுளின் வழிபாட்டுக் கற்பனையை நியாயமாய்ப் பின்பற்றி அதை நமக்கு மாதிரியாக்கியிருக்கின்றார். யூதர் கடவுளை வழிபடுகிறோம் எனச் சொல்லி சட்டங்களை வழிபட்டனர். ஆனால் இயேசு கிறிஸ்துவோ கடவுளின் படைப்புகளின் இயலாமையைக் கண்ணோக்கி கூனியான பெண்ணிற்குச் சுகம் கொடுத்து வழிபாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றார். ஆதரவற்றோருக்கு ஆதரவாயிருந்து சிலுவை சுமத்தலே விடுதலை தரும் உண்மையான வழிபாடு.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

21-03-2021

**உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு & பாடுகளின் ஞாயிறு, தவக்கால ஐந்தாம் ஞாயிறு**

## சிலுவை: மெசியா காலத்தின் ஒரு புதிய திருக்காட்சி
## CROSS: A NEW VISION OF THE MESSIANIC AGE

| | |
|---|---|
| இச 18:15-22 | 2கொரி 1:3-11 |
| திபா 73 | லூக் 18:35-43 |

**"அவர் உடனே பார்வை பெற்று, கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவைப் பின்பற்றினார்"** (லூக் 18:43).

சிலுவையின் செய்தி மனிதகுலத்திற்கு ஒரு புதிய பார்வையைத் தருகிறது. இந்தப் பார்வை துன்பத்தில் கூட நம்பிக்கையைத் தருகிறது. சிலுவை யூதர்களுக்கு ஒரு தடுமாற்றமாகவும், கிரேக்கர்களுக்கு மடமையாகவும், கடவுளை நம்புவோர்க்கு கடவுளின் ஞானத்திற்கும் ஆற்றலுக்கும் அடையாளமாகவும் மாறிவிட்டது (1 கொரி. 1:18, 23). குற்றம் சாட்டப்பட்டவர் தனது சிலுவையைச் சுமந்து, சிலுவையில் அறையப்படுவதற்காக நடப்பது ரோமானிய ஆட்சியின் போது ஒரு பொதுவான காட்சியாக இருந்தது. சீடத்துவத்தின் பாதையை சிலுவையைச் சுமந்து செல்வதோடு இயேசு ஒப்பிடு (மத் 10:38; மாற் 8:34; லூக் 14:27). தூய பவுல், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று விசுவாசிகளுக்கு அழைப்பு விடுக்கிறார் (உரோ 6:110). புதிய வாழ்வில் பயணிக்க, நம்மில் உள்ள பழைய மனித இயல்பு சிலுவையில் அறையப்பட வேண்டும் (உரோ 6: 46). இவ்வாறு சிலுவையைச் சுமந்து நாளுக்கு நாள் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்ற அழைப்பு நமக்கு இருக்கிறது. நகரவாயிலுக்கு வெளியே துன்புற்ற நம் ஆண்டவருக்கு ஏற்பட்ட இகழ்ச்சியில் பங்கு கொண்டு, நம் முகாமை விட்டு வெளியேறி இயேசு கிறிஸ்துவுக்கு அருகில் செல்ல இந்த அழைப்பு நம்மைத் தூண்டுகிறது (எபி 13:1213). இங்கே நாம் இறைப்பணிக்கான சவாலைப் பெறுகிறோம். கிறிஸ்தவச் சீடத்துவம் என்பது தினமும் சிலுவை சுமப்பதும் சிலுவையில் அறையப்படுவதும் ஆகும். இச்சிலுவை நன்னம்பிக்கையையும் வெற்றியையும் அளிக்கும் மெசியா காலத்தின் ஒரு புதிய திருக்காட்சியைத் தருகிறது.

"மெசியா" என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் "அருள்பொழிவுச் செய்யப்பட்டவர்" என்பதாகும். எபிரேய மொழியில் "மாஷா" மற்றும் "மஷியா", (masha, masiah) அரமேயு மொழியில்

“மெஷிஹா” (meshiha) மற்றும் கிரேக்க மொழியில் “மெசியா” ஆகிய வார்த்தைகள் (யோவா 1:41, 4:25) ஒரே கருத்தை குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றன. கிறிஸ்டோஸ் (Christos) என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் ‘அருள்பொழிவு செய்யப்பட்டவர்’. எபிரேய பழைய ஏற்பாட்டின் செப்டுவஜின்ட் என்ற கிரேக்க மொழிபெயர்ப்பில் கிறிஸ்டோஸ் என்ற சொல் “மெஷியா” என்ற எபிரேய வார்த்தையை மொழிபெயர்க்க 40 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து “கிறிஸ்து” என்னும் சிறப்புப் பெயர் இயேசுவைக் குறிக்கும் பெயராக உருப்பெற்றது. தூய பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட மக்களும் பொருட்களும் எண்ணெயால் அருள்பொழிவு செய்யப்பட்டு பிரிக்கப்படுகின்றனர். எனவே, அருள்பொழிவு செய்யப்பட்டவர் பிரிக்கப்பட்ட நபர். மேசியாவுக்கு பல பெயர்கள் உள்ளன. ஆபிரகாமின் சந்ததி, தாவீதின் மகன், மானிட மகன், என் மகன், என் பணியாளர், என் அர்ப்பணிப்புள்ளவர், துளிர், அமைதியின் இளவரசர், வியத்தகு ஆலோசகர், வலிமைமிக்க கடவுள், என்றுமுள தந்தை போன்றவை.

மெசியா பற்றி பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட இறைவாக்குகள் இயேசுவின் வாழ்க்கையில் நிறைவேறின என்றும், இயேசுவே விவிலியத்தில் முன்னறிவிக்கப்பட்ட மெசியா ஆவார் என்பதும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. மெசியாவாக வந்த இயேசு தமது திருப்பணி, இறப்பு, உயிர்த்தெழுதல் வழியாக உலகத்தை மீட்டு அதன் ஆண்டவரும் மீட்பரும் ஆனார். இயேசு மீண்டும் அரசராகவும் ஆண்டவராகவும் வருவார். எனவே, இயேசுவில் வெளிப்பட்ட மெசியா சிலுவையின் மெசியா ஆவார். இயேசு யூதருடைய மெசியா மாத்திரமல்ல, அவர் உலகத்தின் மீட்பராகவும் இருக்கிறார் என்பதை லூக்கா வலியுறுத்திக் கூறுகிறார்.

குல மரபு என்பது யூதர்கள் மத்தியில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. குறிப்பாக, மெசியா தாவீதின் குலத்தில் தான் வருவார் என்பது பெரிய எதிர்பார்ப்பாக இருந்தது. நற்செய்தியாளர்களான மத்தேயுவும் லூக்காவும் இயேசு தாவீதின் குலத்தில் வந்தவர் என்பதைக் காட்டுவதற்காக மூதாதையர் பட்டியலைக் குறிப்பிட்டனர் (மத் 1:1-17; லூக் 3:23-38). இயேசு தாவீதின் மகன் என மக்கள் நம்பினர். இதுவே பழைய ஏற்பாட்டு இறைவாக்கின் நிறைவேறுதலாகவும், யூதர்கள் மெசியாவைக் குறித்துக் கொண்டிருந்த நம்பிக்கையாகவும் இருந்தது. எனவே, மத்தேயுவும் லூக்காவும் நற்செய்தி நூல்களைத் தொடங்கும்போது இயேசு கிறிஸ்து தான் மெசியா என்றும், அவர் தாவீதின் குலத்தில் வந்தவர் என்றும் யூதர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மூதாதையர் பட்டியலை எழுதினர்.

அவ்வாறே மெசியாவாக வந்த இயேசு தம் சிலுவையை நோக்கி பாதையில் பார்வையற்ற மனிதர் ஒருவரைச் சந்திக்கிறார். அவரை நலமாக்குகின்றார். கிறிஸ்துவால் பார்வை பெற்ற அவர், சிலுவையை நோக்கிய பாதையில் கிறிஸ்துவுக்குப் பின் சென்றார். மெசியா காலத்தைக் குறித்த புதிய திருக்காட்சியின் வெளிப்பாட்டை அறிந்துகொண்டார். ஆகவே சிலுவைப்பாதையில் கிறிஸ்துவுடன் தன்னை இணைத்துக் கொண்டார். அந்நாளில் அவர் பெற்ற மாற்றத்தைக் குறித்துத் தியானிப்போம்.

***1. புதிய பார்வை:*** (லூக் 18:43)

லூக் 17:15இல் தான் நலம் பெற்றதை உடலில் பார்த்த சமாரியத் தொழுநோயாளர் உடனடியாக இயேசுவிடம் திரும்புகின்றார். இதற்கு பிந்தின பகுதியில் (19:3) சக்கேயு இயேசுவைப் 'பார்க்க' விரும்பினார். இங்குப் பார்வையற்ற ஒருவர் பார்வை பெறுகிறார். "காணுதல்" அல்லது "பார்வை" என்பது லூக்காவின் ஒரு முக்கியமான கருத்துரு ஆகும். இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நிகழ்வில் இதை சிமியோன் வழியாக மிக அழகாக அறிமுகம் செய்கிறார் லூக்கா: "மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன" (2:30-31). சக்கேயு நிகழ்விலும் 'மக்கள் அனைவரும் காணுமாறு மரத்தில் ஏறி நின்ற சக்கேயுவின் கண்கள் இயேசுவைக் பார்த்துவிட்டன.' எனவே, 'பார்த்தல்' அல்லது 'பார்வை' என்பது "மீட்பைத் தேடுதல்" அல்லது "தேடிக் கண்டடைதல்" என்று பொருள்கொள்ளலாம்.

இயேசு பர்த்திமேயுவிடம், 'நான் உமக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?' எனக் கேட்டவுடன், 'ஆண்டவரே, நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்' என்கிறார். தனக்கு எது தேவை? என்பதை அவர் அறிந்தவராக இருக்கிறார். எனவே, 'நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்' என்கிறார். இயேசுவைத் தாவீதின் மகன் எனத் தன் மனக்கண்களால் கண்டுகொண்டது முதல் பார்வை. இப்போது அவரைத் தன் உடற்கண்களால் பார்க்க விரும்புகிறார். முதல் பார்வை தெளிவானால் இரண்டாவது பார்வை மிகவும் எளிதாகும்.

பர்த்திமேயுவின் உலகம் இருண்ட உலகமாகவே இருந்தது. ஆனால் இயேசுவைச் சந்தித்த நாள் வித்தியாசமாக இருந்தது. வழக்கத்திற்கு மாறாகப் பெருந்திரளான மக்கள் கூட்டம் அவரைக் கடந்து சென்றது. வழக்கமாகத் தன் பசி போக்குவதற்காகக் குரலெழுப்பும் பர்த்திமேயு, அன்று இயேசு போகிறார் என அறிந்து, தன் இருண்ட உலகம் அகன்று போகவும், புதிய பார்வை பெறவும் குரலெழுப்பினார். கடந்து

போகிறவர் நாசரேத்தூர் இயேசு என அறிவிக்கப்பட்டபோது, அவர் மெசியா என உணர்ந்து, “தாவீதின் மகனே” என அழைத்தார். பர்த்திமேயு, இயேசுவைக் குறித்து ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்க வேண்டும். இயேசு கடவுளின் பெயரால் வந்தவர்; கடவுளின் வல்லமையோடு செயல்படுபவர்; இவரால் செவிடர் கேட்கின்றனர்; முடவர் நடக்கின்றனர்; பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர் என்பதைக் கேள்விப்பட்டிருக்கக் கூடும். மேலும், மெசியாவின் வருகையில் பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும்; காது கேளாதோரின் செவிகள் கேட்கும் (எசா 35:5) என எசாயா முன்னுரைத்த மெசியா இவர்தான் என நம்பியிருப்பார். எனவே, அவர் மனது வைத்தால் அவரால் தனக்கு மீண்டும் பார்வை அளிக்க இயலும் என பர்த்திமேயு உளமார நம்புகிறார். அந்த நம்பிக்கையின் வெளிப்பாடுதான் அவருடைய உதடுகளிலிருந்து வெளிவந்த, “நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்” என்ற கூக்குரல். இயேசு அந்த மனிதரின் நம்பிக்கையைக் காண்கின்றார். தம்மில் நம்பிக்கை கொண்டவர்களைக் கடவுள் கைவிடுவதில்லை என்னும் உண்மை இங்கே தெளிவாகிறது. இயேசு பார்வையற்ற மனிதருக்குப் பார்வையளிக்கிறார். பர்த்திமேயு பார்வையற்றவர். ஆனால், இயேசு, தாவீதின் மகன் என்னும் மெசியாவின் சிறப்பைத் தன் மனக்கண்ணில் கண்டார். மக்களை இருளின் பிடியிலிருந்து மீட்க வந்த மெசியாவை நம்பி, அவரிடம் வந்தால் புதிய பார்வை கிடக்கும் என்பதற்கு பர்த்திமேயு பாடமாகிறார்.

***2. புதிய பாதை :*** (லூக் 18:43)

இயேசுவின் பயணம் எருசலேமுக்கு நேரான பயணம். எருசலேமுக்குச் செல்வதற்குமுன் இயேசு தம் சீடர்களை அழைத்து, எருசலேமுக்குச் செல்லும்போது மானிடமகனைப் பற்றி இறைவாக்கினர் வாயிலாக எழுதப்பட்டவை யாவும் நிறைவேறும்; அவர் பிற இனத்தவரிடம் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவரை ஏளனம் செய்து அவமானப்படுத்தி அவர்மீது துப்புவார்கள். அவர்கள் அவரை அடித்துக்கொலை செய்வார்கள். ஆனால் மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுவார் எனத் தாம் எதிர்கொள்ளப் போகிற பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். பாஸ்கா விழாவுக்காக மற்ற திருப்பயணிகளோடு இணைந்து எருசலேம் நோக்கிப் பயணிக்கிறார். உண்மையில், இவருடைய பயணம் சிலுவைக்கு நேரான பயணம்; இதுவும் ஒரு சிலுவைப் பாதையே. இப்பாதையின் ஓரத்தில் தான் பர்த்திமேயு அமர்ந்திருந்தார்.

மெசியாவாகிய இயேசுவால் குணமாக்கப்பட்டவுடன், இயேசுவின் பாதையைப் பின்தொடர்ந்தார். எருசலேமுக்கு நேரான பாதையில் இயேசுவைப் பின்தொடர விரும்பும் நமக்கு பர்த்திமேயு ஒரு

முன்மாதிரியாகிறார். இயேசுவோடு நடக்கத் தீர்மானிப்பது என்பது தைரியத்திற்கு ஆதாரமாகவும் (source of courage), சிலுவையில் பெறும் வெற்றியின் விதையுமாகும் (seed of victory in the cross). சிலுவை என்பது தந்தையாம் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவைப் பின்தொடர்வதாகும்.

"நானே வழி, நானே உண்மை, நானே வாழ்வு. என் வழியாய் அன்றி யாரும் தந்தையிடம் வர முடியாது" எனக் கூறிய ஆண்டவர் இயேசுவின் வார்த்தையின்படி அவர் வழியைத் தெரிந்தெடுப்பது நம்மை நிலைவாழ்வுக்குக் கொண்டு சேர்க்கும். நிலை வாழ்வுக்குச் செல்லும் பாதை நெருங்கியதும், ஒடுங்கியதுமாகும். துன்பங்களைத் தாங்கிச் செல்வதே இப்பாதை காட்டும் சிந்தனை. இப்புதிய பாதையைத் தேர்ந்தெடுப்பது உண்மை வாழ்வைத் தரும்.

***3. புதிய பயணம் :*** (லூக் 18:43)

லூக்கா நற்செய்தியில், இயேசு எருசலேமுக்குப் பயணமாகப் போவது பற்றிய கூற்றுத்தொடர் முதன்மைப்படுத்திக் காட்டப்படுகிறது (லூக் 9:51-19:44). இது 10 அதிகாரங்களில் விவரிக்கப்படுகிறது. லூக்கா நற்செய்தியின் மூன்றில் ஒரு பகுதி இயேசுவின் எருசலேம் பயணம் பற்றியதுவே. பயணம் செல்லும் வேளையில் இயேசு தம் சீடருக்குப் போதனை வழங்கிக்கொண்டே செல்கிறார். எருசலேமுக்குச் செல்லும் இயேசு பிறருடைய கட்டாயத்தினால் அங்குப் போகவில்லை, மாறாக, தாமாகவே விரும்பிச் செல்கிறார். தம்மைப் பின்செல்ல விரும்புவோரும் தம்மோடு இணைந்து பயணத்தில் சேர்ந்துகொள்ளக் கேட்கிறார் (லூக் 9:51-62). இப்பயணம் சிலுவைக்கு நேரான பயணம்.

லூக்கா நற்செய்தியில் எருசலேம் உலக மீட்பின் திட்டத்திற்கு மையமாகத் திகழ்கிறது. இந்நூல் எருசலேமில் தொடங்கி எருசலேமில் முடிகிறது. இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்தார் என்னும் கருத்து முதன்மைச் செய்தியாக விளங்குகிறது (லூக் 19:10). இகழ்ந்து ஒதுக்கப்பட்ட பாவிகள், பெண்கள், ஏழைகள், சமாரியர் ஆகியோருக்கு இந்நூலில் சிறப்பிடம் வழங்கப்படுகிறது. இயேசு எருசலேம் நோக்கிப் பயணம் செய்யும்போது, தம்மைப் பின்செல்ல விரும்பும் சீடர் எவ்வாறு வாழவேண்டும் என்பது குறித்து வழங்குகின்ற விரிவான போதனைகள் (லூக் 9:51-19:44) சிறப்பிடம் பெறுகின்றன. அதாவது, இயேசு கிறிஸ்துவுக்குச் சீடராக விரும்பும் எவரும் சிலுவை சுமந்து அவரைப் பின்தொடர வேண்டும் என்பதே அப்போதனை.

இயேசுவின் திருப்பணியின்போது, அவரை மேசியாவாகக் கண்டவர்கள் விடுதலைக்காக அவரை நாடினர். பர்த்திமேயுவின் 'தாவீதின் மகனாகிய இயேசு' என்ற அழைப்பில் இது காணப்படுகிறது

(லூக் 18:38, மத் 9:24). இயேசு கிறிஸ்துவின் வழி நிகழ்ந்த அறிகுறிகளைக் கண்டதும் ஏராளமான மக்கள் இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள் என்று யோவான் சான்று பகருகின்றார் (யோவா 6:2). இந்த விடுதலை சிலுவையின் செய்தியை உறுதிப்படுத்துகிறது. "பாவங்களுக்காக மரித்து நீதிக்காக வாழ்வதற்காக அவர் நம் பாவங்களை அவருடைய உடலில் மரத்தின் மீது சுமந்தார்; அவருடைய காயங்களால் நீங்கள் குணமாகிவிட்டீர்கள்" (1 பேதுரு 2:24; மத் 8:17). சிலுவையைத் தாங்கிய மேசியா மனிதகுலத்திற்கு விடுதலையை அறிவித்தார். சிலுவைவழி இயேசு கிறிஸ்துவில் பெறும் மீட்பை இப்பயணம் வலியுறுத்துகிறது.

பர்த்திமேயுவிடம், உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று என்று இயேசு கூறியதும், அவர் உடனே பார்வை பெற்று, கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவைப் பின்பற்றினார். பார்வை பெறுவது கடவுளைப் புகழ்வதற்காகவும், இயேசுவைப் பின்பற்றுவதற்காகவும்தான் என்பது அவரது அனுபவம். பார்வை பெற்றதும் தனது குடும்பத்தினரைத் தேடிச் செல்லவில்லை, புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான முயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை. மாறாக, கடவுளைப் புகழ்ந்தார், இயேசுவைப் பின் தொடர்ந்தார். இதைக் கண்ட மக்கள் யாவரும் கடவுளைப் புகழ்ந்தனர். எனவே, ஒரு நற்செய்தியாளராகவும் மாறிவிட்டார்.

பார்வை பெற்ற மனிதரின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவர் கடவுளைப் போற்றிப் புகழ்கின்றார் இயேசுவைப் "பின்பற்றுகிறார்." நமது உள்ளத்தில் நிலவுகின்ற இருளை அகற்றி நமக்கு உள்ளொளி தருகின்றவர் இயேசு. உலகுக்கு ஒளியாக வந்த அவர் நம் உள்ளத்தை ஒளிர்விக்கின்றார். நாமும் நலம் பெறுகின்றோம். நம் உள்ளத்தில் பெருக்கெடுக்கின்ற நன்றியுணர்வு இறைப்புகழாக வெளிப்பட வேண்டும். அவர் காட்டும் பாதையைத் தேர்ந்தெடுத்து, அவரைப் பின்தொடர்வோம். சிலுவை வழி மீட்பைச் சொந்தமாக்கி வாழ்வோம்.

அருள்திரு. T.P. **சலீம் தங்ககுமார்**

28-03-2021

குருத்தோலை ஞாயிறு

## ஓசன்னா : கோவிலில் புதிய அரசர்

**HOSANNA : NEW KING IN THE TEMPLE**

எசா 56:1-8 | 1கொரி 3:16-23
திபா 24 | மத் 21:1-17

**"... இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் எளிமையுள்ளவர்; கழுதையின் மேல் ஏறிவருகிறார்...."** (மத் 21:4,5).

இயேசுவின் பயணம் புறவினப்பகுதியான கலிலேயாவிலிருந்து புறப்பட்டது (மத் 19:1). பாஸ்காப் பண்டிகைக்கு ஆறுநாளுக்கு முன் பெத்பகு வந்தபோது இயேசுவின் பயணம் புதிய புரட்சியின் பவனியாக மாறியது. கலிலேயாவிலிருந்து கால்நடையாய் நடந்த இயேசு, கடைசி இரண்டு மைல் கழுதையின் மீது பவனியாக வந்தார். பாஸ்காப் பெருவிழா காலத்தில் பலர் இந்தப் பாதை வழியாக எருசலேம் செல்வது வழக்கம். அக்கால வரலாற்றுக் குறிப்பின்படி பல லட்சம் யூதர்கள் பாஸ்கா ஆசரிக்க எருசலேமில் கூடுவர். எருசலேம் ஆலயம் யூதரது சமய சமூக வாழ்வில் மையமாக அமைந்தது.

இஸ்ரயேலரது வரலாற்றில் சவுல் காலத்திலிருந்து அரசாட்சி முறை அறிமுகமானது. தாவீது எருசலேமைத் தலைமையிடமாக்கினார். சாலமோன் எருசலேமில் ஆலயம் கட்டினதால் அரசு, ஆலயம், ஆன்மிகம் மூன்றிற்கும் முதன்மையிடமானது எருசலேம். இந்த பின்னணியுடன் அரசராக்கப்பட்டு ஆலயம் சென்றனர். யோவாஸ் போன்று சிலர் ஆலயத்தில் அரசராக்கப்பட்டு அரண்மனை சென்றனர் (2அர 11:12,19). பிற்கால உடைவுபட்ட அரசில் நாடு பலமுறை அடிமைப்படுத்தப்பட்டது. இச்சூழலிலிருந்து மீட்க புதிய அரசர் வருவார் என்ற எதிர்பார்ப்பு அதிகமானது. இச்சூழலில் இயேசு புதிய அரசராக பவனி வந்தார்.

ஆண்டவர் இயேசுவை அரசராகக் கண்ட பலர், பல அரசப் பெயர்களைக் கொடுத்தார்கள். அமைதியின் அரசர், தாவீதின் அரசர், யூதரின் அரசர், இஸ்ரயேலின் அரசர் (மத் 27:42), உன் அரசர், வருகின்ற அரசர், மகிமையின் அரசர், நித்திய அரசர், கண்ணுக்குப் புலப்படாத அரசர், (1திமொ 1:17), நீதியின் அரசர், மக்களினங்களின் மன்னர் (திவெ 15:3), சீயோனின் அரசர், கிறிஸ்து எனப்பட்ட அரசர் (லூக் 23:2), அரசருக்கெல்லாம் அரசர் (1திமொ 6:15). இத்தனை பெயருடைய அரசர் இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு எவரும் இல்லை. எனவே இயேசு எருசலேம் கோவில் சென்ற புதிய அரசர் என்பது பொருத்தமானதாகும்.

***1. புதிய முகவரி தந்த புதிய அரசர்*** : (மத் 21:4)

அரசபவனி பல கண்ட இஸ்ரயேலரது வாழ்வில் இயேசுவின் பவனி புதிய முகவரி தந்தது. அரசபவனி உலக அதிகாரத்தின் பவனி. இயேசு தாழ்மையின் பவனியாகச் சென்று, பவனிக்கு ஆன்மிக முகவரியை அறிமுகம் செய்தார். அரசர்கள் பயிற்சி பெற்று பெலமுள்ள, பழக்குவிக்கப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட குதிரையில் பவனி சென்றனர். ஆண்டவர் இயேசு கிராமத்திலுள்ள, பயிற்றுவிக்கப்படாத, பழுதில்லாத கழுதையில் பவனி சென்று புதிய அர்த்தம் தந்தார். கழுதையை இராணுவ பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதில்லை. சாதாரண மக்கள் பயன்படுத்தினர் (1அர 1:33,38). அக்காலத்தில் கழுதைகளைப் பண்டிகைக்கு வருபவர்கள் பயன்படுத்தக் கொடுத்தனர். ஆண்டவருக்கு வேண்டும் என்றதால் உண்மையான ரபீக்குக் கழுதை பயன்படப் போகிறது என்று மகிழ்ந்திருப்பர் (லூக் 19:34).

அரசபவனிக்கு பல ஆயத்தங்கள், திட்டங்கள், பாதுகாப்புகள் உண்டு. இயேசுவின் பவனிக்கு மனந்திரும்புதல் என்ற ஆன்மிக ஆயத்தம் தேவை. இது மனிதத்திட்டம் அல்ல, இறைத்திட்டம். இறைவாக்கினரின் இறைவாக்கு நிறைவேற்றிய பவனி (மத் 21:5). அரசபவனிக்கு அழைக்கப்பட்ட கூட்டம், ஆயத்தப்படுத்தப்பட்ட கூட்டம் இடம் பெறும். புதிய அரசர் இயேசுவின் பவனியில் அழைக்கப்படாத திரளான கூட்டம் பங்கேற்றது (மத் 21:8). அரசபவனி படைவீரர்களால் ஆயத்தப் படுத்தப்பட்டது. புதிய அரசரின் பவனி சீடர்களால் ஆயத்தப்படுத்தப்பட்டது (மத் 21:2,6). அரசபவனியில் பெருமை, புகழ், பெலம் வெளிப்படும். புதியஅரசர் இயேசு தாழ்மை, அமைதி, அன்பு, தியாகத்தை அறிமுகப்படுத்தினார். செக்கரியா 9:10-இல் யுத்தவில் அழிந்து போகும் என்றதுபோல் யுத்தமில்லாப் பவனி. ஓசன்னா என்ற கூக்குரலுடன் தங்களை மீட்டுக் கொள்வதற்கான தேடலின் பவனி (மத் 21:9) ஆட்சியைப்பிடிக்கும் அரசபவனியல்லாது உலக அதிகாரத்திற்கு மாறாக புதிய முகவரி கொடுக்கும் அமைதியின் பவனியே புதிய அரசர் இயேசுவின் பவனி.

நீங்களே ஆலயம் என்ற வசனத்தைப் போன்று (1கொரி. 3:17) நமது வாழ்வாகிய ஆலயத்தை ஆவியர் தங்கும் ஆலயமாக, பரிசுத்தம் நிறைந்த ஆலயமாக (3:16) ஒப்படைப்போம். ஆலயத்திலிருந்து வாழ்வாகிய ஆலயத்தை தூய்மைப்படுத்தும் பவனியாக இயேசுவின் பவனி இன்று அமைய வேண்டும்.

## *2. புதிய அரசமைக்கும் ஆன்மிக அரசர்* : (மத் 21:9)

தாவீதின் அரசு அமைக்க வந்த இயேசு (மாற் 11:10) ஆண்டவரின் பெயரால் வருகின்றவர் என்பதை உணர்த்த மக்கள் உன்னதத்தில் ஓசன்னா என்றனர். இந்தப் பவனி ஆட்சியைப் பிடிக்கும் அரசியல் பவனியல்ல; ஆன்மிக வாழ்வுக்கு அறைகூவல் தரும் ஆன்மிகப் பவனி. அரண்மனை அரசர் வாழும் இடம். மக்களை அடக்கி ஆளும் இடம். நீதி மட்டுமல்ல அநீதியும் குவிந்துள்ள இடம். அரண்மனை, அழிக்கும் அதிகாரங்கள் குவிந்த இடம். புதிய அரசர் இயேசு அரசமாளிகைக்கல்ல, ஆன்மிகமாளிகையான ஆலயத்திற்குப் பவனியாகச் சென்றார். ஆலயம் ஆன்மிகமிழந்து அரசமாளிகையாக்கப்பட்டு அதிகாரக் குவியலும் அடக்குமுறையும் நிறைந்திருந்தது. ஆண்டவரின் வீடாகிய ஆலயம், அரண்மனை வீடுபோல் அநீதியின் வீடாக இருந்ததால், இயேசு, இது என்வீடு; உன்வீடு அல்ல என்றார். என்வீடு ஆன்மிகவீடு, என்வீடு உனக்குரிய சிந்தனைகளால் அல்ல, எனக்குரிய சிந்தையாயிருக்க வேண்டும் என்றார். என்வீடு ஜெபவீடு, விசுவாச வீடு; வியாபார வீடல்ல என்றார். இன்றைய திருச்சபையில் எல்லா விற்பனை விழாக்களையும் வியாபாரமாக விமர்சிப்பவர்கள் உண்டு. இன்றைய திருச்சபையின் விற்பனை விழாக்கள் விசுவாசப் பணிகளுக்காகப் பயன்படுத்தப் படுகின்றதே தவிர, தனிமனித வளர்ச்சிக்கல்ல.

அரசர் போரில் வெற்றிபெற்று அரண்மனை நோக்கி வெற்றிப் பவனியாகத் திரும்புவார். உரோமை மன்னர் வெற்றி பெற்றுத் திரும்பும் வெற்றிப் பவனியின் முடிவில், கொள்ளையடித்த பொருளை கொண்டுவருவார். மன்னர் அமர்ந்து வரும் வாகனம், பொன்முலாம் பூசப்பட்ட குதிரை வண்டியாக அமையும். வீதியெங்கும் மக்கள் மன்னரை மகிழ்ச்சியோடு அரண்மனைக்கு வரவேற்பர். போரில் அடிமையாக்கப்பட்டவர்களை விலங்குகளுடன் மோதவிட்டு பல இறப்புகள் நடுவில் மன்னர் வாழ்க எனச் சத்தமிடுவர்.

இயேசு அரண்மனை ஆட்சிக்கல்ல; ஆன்மிக ஆட்சிக்காக ஆலயத்திற்குப் பவனியாகச் சென்றார். ஆலயத்தை ஆண்டவரின் வீடு, என்வீடு என்று கண்ட இயேசு, சொந்த வீட்டிற்குப் பவனியாக வந்தார். சொந்தமானவர்களோ ஏற்றுக்கொள்ளவில்லை (யோவா 1:11). அசுத்த ஆவியுள்ள மனிதன் ஜெபஆலயத்தில் வந்த இயேசுவை, எங்களைக் கெடுக்கவா வந்தீர்? (மாற் 1:24) என்று கேட்டதுபோல் அவர்வீட்டில் அவரையே வெளியேற்றும் ஆவியுடைய சாத்தான்கள் ஆலயங்களில்

பெருகி, உமக்கு இங்கு என்ன? என்று கேட்கின்றனர். இன்று பல ஆலயங்கள் கொடுப்பவர்களை, நல்லவர்களை, உண்மையுள்ளவர்களை வெளியே துரத்தி தீயவர்களும், ஆலயவாஞ்சை இல்லாதவர்களும், பதவிவெறியர்களும் பணபெலத்தால் ஆலய, ஆன்மிக அதிகாரத்திற்குள் ஊடுருவி ஆலயத்தை அரண்மனைபோன்று மாற்றி இயேசுவைக் கேட்டது போல் உமக்கு இங்கு என்ன? என்று கேட்கிற நிலை பெருகி வருகிறது.

புதிய அரசர் மலாக்கி 3:1-இன்படி ஆலயத்திற்குத் தீவிரமாய் வருவார்.

மலாக்கி 3:4-இன்படி எருசலேமின் காணிக்கை ஆண்டவருக்கு பிரியமாயிருக்கும்.

மலாக்கி 3:5-இல் அநியாயக்காரர்களுக்குத் தீவிர சாட்சியாயிருப்பார். இன்று பிறர்மீது வெற்றி பெறும் அரண்மனைபோல் அல்ல; நம் வாழ்வில் வெற்றிபெற ஓசன்னா என்று போர் முழங்கிடுவோம்.

### *3. புதிய அடையாளமான புதிய அரசர்* : (மத் 21:16)

ஆண்டவரின் அரசுக்குரியவர்கள் யார்? என்ற கருத்து மோதல் அக்கால ஆன்மிகத் தலைவர்களான தலைமைக்குரு, பரிசேயர், மறைநூல் அறிஞர் போன்றவர்களிடம் அதிகம் இருந்தது. இவர்கள் நாங்களே முதன்மையானவர்கள், அரசுக்குரியவர்கள் என மேன்மை பாராட்டியிருந்தபோது இயேசு தம்மைப் புதிய ரபீயாக, பெரிய ரபீயாக, மேசியாவாக, அரசராக அடையாளம் காட்டினார். இயேசுவால் இறையரசுக்குரியோர் என அடையாளம் காட்டப்பட்ட சிறுவர்கள் இயேசுவைப் புதிய அடையாளமாகக் கண்டனர். அதிசயங்கள் செய்யும் அடையாளமாகச் சிறுவர்கள் கண்டனர். ஆலயத்தில் புறம்பாக்கப்பட்ட பார்வையற்றோர், நடக்கமுடியாதோரை ஏற்றுக் கொள்ளும் புதிய அடையாளமாக இயேசு இருந்தார். ஆலயம் புற இனத்தவரின் இடத்தை அபகரித்து வியாபாரமிடமாக மாற்றியதால் ஆசனங்களைக் கவிழ்த்து ஆலயம் தூயவரின் அடையாளம் என்பதை நிலைநாட்டினார்.

ஆகமங்களை ஆராய்ந்து அறிந்த ஆன்மிகத் தலைவர்களால், புதிய அரசரை அடையாளம் காணஇயலவில்லை. ஆனால் சிறுவர்கள் எங்கள் அடையாளம் பரிசேயரோ, மறைநூல் அறிஞர்களோ அல்ல என்பதைக் கண்டு இயேசுவைப் புதிய அடையாளமாக ஏற்றதால், ஓசன்னா என்றார்கள். யூதச்சட்டமே யூதர்களின் ஆன்மிக அடையாளமாக இருந்தது. இந்தச் சட்டம் பார்வையற்றோரை, நடக்கமுடியாதோரை சிறுவர்களை புறந்தள்ளியது. புதிய அரசர் என் வீடு எல்லா மக்களுக்கும்

இறைவேண்டலின் வீடு என்றார் (மாற் 21:17). இயேசுவின் புதிய அடையாளம் என்ன? தாவீதின் மகன், ஆண்டவரின் பெயரால் வருபவர் (மத் 12:9), நாசரேத்திலிருந்து வந்த இறைவாக்கினர் (மத் 21:11). தாழ்மை, அன்பு, எளிமை, தியாகம். இப்படி இயேசுவின் வாழ்வு முழுமையுமே புதிய அடையாளமாக இருந்ததால் உலகமே பின் சென்றது (யோவா 12:19). உலகிற்கே புதிய அடையாளமானார் புதிய அரசர் இயேசு.

இன்று தாழ்மைக்குத் தரும் மதிப்பு என்ன? இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். தாழ்மையுள்ளவர் (செக் 9:9). Augustin of Hippo கூறும்போது "பெருமை இறைத்தூதர்களைப் பேய்களாக மாற்றுகிறது, தாழ்மை மனிதரை இறைத்தூதர்களாக மாற்றுகிறது." விண்ணகம் என் அரியணை என்ற (எசா 66:1) ஆண்டவர், அரண்மனை இல்லாத புதிய அரசர், பழக்கப்படாத கழுதையாகிய நம் மேல் பவனி செல்ல விரும்புகின்றவர். நம் வாழ்வை அவர் பணிக்கு வாகனமாகக் கொடுப்போம்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

29-03-2021

தூயவாரம் - திங்கள்

# அத்திமரம் தரும் பாடம்

மத் 21:18-22

**"...இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்"என்று அதைப் பார்த்துக் கூறினார்**
(மத் 21:19).

பழைய ஏற்பாட்டு நூல்களில் அத்திமரம் வளமை (எண் 13:23; இச 8:8), அமைதி மற்றும் செழுமைக்கு (1அர 4:25; மீக்கா 4:4; செக் 3:10) அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது. மட்டுமல்ல, இஸ்ரயேல் மக்கள் மீது ஆண்டவர் காண்பிக்கப் போகும் நியாயத்தீர்ப்புக்கும் அத்திமரங்கள் அடையாளமாகச் (Symbol) சுட்டப்பட்டுள்ளன.

நாம் ஆராய்கின்ற திருமறைப் பகுதி (மத் 21:18-22) இரண்டு விதமான போதனைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. அப்போதனைகள் தற்காலத் திருச்சபைக்கு மிக முக்கியமானதும் தேவையானதும் ஆகும். அவைகளைப் பார்ப்போம்.

### *1. நீதித் தீர்ப்பிற்கு உள்ளாகும் இஸ்ரயேல்* : (மத் 21:18,19)

Hill என்னும் இறையியலாளர், எருசலேமிற்கு வரப் போகும் அழிவைச் சுட்டிக் காட்டும் வண்ணமாகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அத்திமரத்தைப் பட்டுப் போகப் பண்ணினார் எனக் குறிப்பிடுகிறார். மத்தேயு 21:18-22-க்கு முந்தின பகுதியாக அமையும், "இயேசு கோவிலைத் தூய்மையாக்குதல்" (21:12-17) நிகழ்வைக் கொண்டே Hill இவ்வாறு கூறுகிறார்.

யாவே தமது மாபெரும் மாண்பை உலக அளவில் விளங்கப்பண்ண இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்து வந்து கானான் நாட்டில் குடியமர்த்தினார். தமது திட்டத்திற்கான தெளிவான வரைமுறைகளையும் அவர்களுக்குத் தந்தார். ஆனால் அவ்விடத்தில் யாவேயின் விருப்பத்தை நிறைவேற்ற இஸ்ரயேல் மக்கள் தவறி விடுகின்றனர். இதனால் தான், அவர்களுக்கு எதிராக தலைவரின் நீதித் தீர்ப்பு வருகிறது. ஆம்! இதற்கு அடையாளமாகவே நீதிபரரான இயேசு கிறிஸ்து அத்திமரத்தைச் சபித்தார்.

தற்காலத் திருச்சபை கிறிஸ்துவின் வழியாய் தந்தையின் பெயருக்கு மாட்சியைக் கொண்டு வருவதற்கு அழைக்கப்பட்ட ஒன்றாகும். மேலும் இறைவரது விருப்பம் புவியில் நிறைவேற ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

அந்த நோக்கத்திற்கு மாறாகத் திருச்சபை காணப்படும் போது அது நீதித் தீர்ப்பிற்கு உட்படுத்தப்பட்டு, தண்டனைக்கு உரியதாகிறது என்பதை மறந்து போகக் கூடாது.

இதனாலேயே, தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தவறிய இலவோதிக்கேயா திருச்சபையைத் தம் வாயிலிருந்த உமிழ்ந்து போடுவதாக ஆண்டவர் எச்சரிக்கிறார் (திவெ 3:16).

**அத்திமரத்தைச் சபித்ததின் மூலம் ஆண்டவர் நமக்குச் சொல்லும் முக்கியமான இரண்டு செய்திகள் :**

1. பயனற்றது அழிவுக்குட்படும்
2. செயல்படாத நிலையும் அழிவைத் தரும்

கிறிஸ்துவின் பெயரை அடையாளமாகக் கொண்ட ஒவ்வொருவரும் பயனுள்ளவர்களாக, அதாவது பிறருக்குப் பயனுள்வர்களாக வாழ வேண்டும். "என்னில் கனி கொடாதிருக்கிற கொடிது எதுவோ, அதை அவர் அறுத்துப் போடுகிறார், கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் செய்கிறார்" (யோவா 15:2). கிறிஸ்துவினுடையவர்கள் அன்பு, மன்னிப்பு, அமைதி முதலானவற்றை அள்ளி வழங்குவோராய்க் காணப்படவே ஏற்படுத்தப்பட்டவர்கள்.

Germany-யின் Sonnenberg-ஐ சார்ந்தவர் Margret. எதிர்பாராத விதமாக இவர் இளம் வயதில் மரணத்தைத் தழுவ வேண்டி இருந்தது. தன் மரணப்படுக்கையில் கணவர் மற்றும் போதகரை அழைத்துச் சொன்னார்; "சிறுவனாக இருக்கின்ற தன் மகனை நற்செய்தி சொல்லப்படாத இடங்களுக்குச் செல்ல ஆயத்தப்படுத்த வேண்டும்" என்று. அந்தச் சிறுவன் தான் Christian Frederick Schwartz. தஞ்சை, திருச்சி, தரங்கம்பாடி குறிப்பாக, திருநெல்வேலியில் அனேகரைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார்.

ஆம்! Schwartz அவர்களைப் போன்று கனி தந்து, நீதித் தீர்ப்பிலிருந்து தப்பவே ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளனர்.

***2. மன்றாட்டின் மாபெரும் ஆற்றல் :*** (மத் 21:21,22)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அத்திமரத்தைக் கடிந்து கொள்ளவே அது பட்டுப் போயிற்று. இதைக் கண்டுணர்ந்த சீடர்கள், இவ்வளவு சீக்கிரமாகப் பட்டுப்போயிற்றே (21:20) என வியப்புற, ஆண்டவர் கூறிய பதில் மிக முக்கியமானது.

தீமைக்கு எதிரான போராட்டத்தில் மன்றாட்டின் மாண்பு எத்தகையது என்பதை அருள்நாதர் இவ்விடத்தில் சீடர்களுக்குப் புரிய வைக்கிறார்.

✵ மகிழ்வான நேரத்தில் துதித்தல் (தொநூ 29:35; திபா 28:7; எசா 25:1)
✵ சவாலான சூழலில் ஜெபித்தல் (எஸ்தர் 4:16; தானி 6:10; திப 12:5)

இவை திருமறை வலியுறுத்தும் முக்கியமான கருத்துகள். அதாவது, ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் வளராதபடி அல்லது கிறிஸ்துவின் நற்செய்தியானது கிறிஸ்தவ வாழ்வினால் பரந்து விரிந்திடாதபடி சாத்தான் எப்போதும் திட்டம் வகுத்து ஏதாவது வகையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறான் (திவெ 12:10). சாத்தானின் இந்த முயற்சி கிறிஸ்தவர்களுக்குச் சவால் நிறைந்த ஒன்றாகும்.

தொடக்கக் காலத் திருச்சபையில் அனனியா, சப்பீராள் என்னும் தம்பதியினர் காணப்பட்டனர் (திப 5:1-11). இவர்களது வாழ்வு அழிந்து போவதற்குப் பொல்லாங்கனின் தூண்டுகோலே காரணம் எனத் திருமறை போதிக்கிறது.

தற்காலக் கிறிஸ்தவர்கள் மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்பது, "அங்கொன்று இங்கொன்று" என எப்போதாவது மன்றாடுகின்ற வழக்கத்தை மாற்றி, தொடர்ச்சியான, இடைவிடாது மன்றாடும் பண்பை எல்லோரும் தங்கள் பண்பு நலனாகக் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக, சவாலான சூழல்களில், அந்தச் சூழல் மாற வேண்டும் என மன்றாடுவர். ஆனால் ஆண்டவர் அந்தச் சூழலை எதிர்கொள்ளும் ஆற்றலைத் தருகிறவராய் உள்ளார். உங்கள் மன்றாட்டினால் உருவேற்படும் "நம்பிக்கை நிறைந்த ஆற்றல்" மலை போன்ற எதிர்மறையான சூழலையும் தாண்டிச் செல்ல உதவுகிறது என்றே ஆண்டவர் திருவாய்மொழிந்தார் (21:21).

திருமறை வலியுறுத்துகின்ற,

✵ விடியற்கால மன்றாட்டு (மாற் 1:35)
✵ நண்பகல் மன்றாட்டு (திபா 55:17)
✵ மாலை நேர மன்றாட்டு (1குறி 23:30)
✵ உபவாசித்து மன்றாடுதல் (2குறி 20:3)
✵ இடைவிடாது மன்றாட்டு (லூக். 18:7)

என மன்றாடும் வாழ்விற்கு அதிக முக்கியத்துவம் தருவோர், மாபெரும் செயல்களைப் புவியினில் இறைவருக்காய் நிறைவேற்றுவோராய் விளங்குவர்.

ஆழ்துளைக் கிணறுகளுக்கான இயந்திரங்கள் (Bore- well machines) கண்டுபிடிப்பதற்கு முன் கிணற்றைத் தோண்டுவோர், பாறை தென்படுமோ,

என்னவோ? தென்பட்டால் என்ன செய்வது? என்ற கலக்கத்தோடு, அச்சத்தோடு அப்பணியில் ஈடுபடுவர். ஆனால் ஆழ்துளைக் கிணறுகளுக்கான இயந்திரங்கள் வந்த பின் அவ்வித பதற்றத்திற்குத் தேவை இல்லை. காரணம், இயந்திரங்கள் பாறைகளைத் துகள்களாக்கி விடுகின்றன. மன்றாடுவோரின் வாழ்வில் இத்தகைய நம்பிக்கை சார்ந்த ஆற்றல் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் “கிறிஸ்தவ வாழ்வு என்பது மன்றாட்டின் வாழ்வு” என்பதைப் புரிந்து எல்லா இறை மக்களும் வாழ வேண்டும்.

ஆம்! கிறிஸ்துவின் வார்த்தைகள் மீது பிடிப்பு இல்லாத வாழ்வு நீதித் தீர்ப்பைக் கொண்டு வரும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் வாழ, தங்களைத் தூய ஆவியாருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். இடைவிடாத மன்றாட்டு ஆற்றல்மிக்கோராய் ஒவ்வொருவரையும் மாற்றும் என்பதை உணர்ந்து மன்றாடுவதை வாழ்வின் பண்பாகக் கொண்டு வாழ, தீர்மானம் செய்வோம்.

அருள்திரு. J.T. **ஜெறோம்**

30-03-2021

*தூய வாரம் - செவ்வாய்*

## எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்?

மத் 21:23-27

**இயேசு கோவிலுக்குள் சென்று கற்பித்துக்கொண்டிருக்கும் போது தலைமைக் குருக்களும் மக்களின் மூப்பர்களும் அவரை அணுகி "எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டார்கள்** (மத். 21:23).

இயேசு கோவிலைத் தூய்மைப்படுத்திய நிகழ்வினைத் தொடர்ந்து தலைமைக் குருக்களாலும், மக்களின் மூப்பராலும் பல வினாக்கள் இயேசுவிடம் எழுப்பப்படுகின்றன. ஒன்றினை அறிந்து கொள்ள விரும்பி கேட்கப்படும் வினாக்களும் உள்ளன. ஒருவரை அகப்படுத்த வேண்டி எழுப்பப்படும் வினாக்களும் உள்ளன. "நீர் எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறீர்?" (மத். 21:23) என்பது இயேசுவிடம் எழுப்பப்பட்ட வினாவாகும். சமய மற்றும் அரசியல் தலைவர்களால் உருவாக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பின் தீமைகளை மாற்றியமைக்கக் கூடியதாக இயேசுவின் செயல்கள் இருந்தன. இயேசுவின் நாட்களில் ஆலயவரி, அரசுவரி, ஆலயக் குருவிடம் செலுத்தும் காணிக்கை போன்றவை மக்களை அதிகமாகப் பாதிப்படையச் செய்தன. பதினெட்டு வயது நிரம்பிய ஆண்கள் ½ சேக்கல் வரியாக ஆலயத்துக்குச் செலுத்த வேண்டும். அப்போது உரோமை நாணயம் பழக்கத்திலிருந்தபடியால் அந்நாணயத்தில் உரோமை அரசரின் உருவச்சின்னம் பதிக்கப்பட்டிருந்தது. எனவே, அப்போது பழக்கத்திலிருந்த தெனாரியம், திராக்மா நாணயங்களைக் கொடுத்து பணமாற்று பெற்று ஆலயத்துக்குச் செலுத்தவேண்டியிருந்தது. இவ்விதமாக சேக்கல் பணத்தை ஆலயத்தில் செலுத்துவதன் வாயிலாக ஆலயத்தில் கடவுள் ஆண்டவர் என்றும், உலகவாழ்வில் உரோம நாணயத்தை ஏற்கிறபடியால் அரசர் கடவுள் என்றும் மறைமுகமாக அங்கீரிக்கும் போக்குக் காணப்பட்டது. மேலும் பணமாற்று செய்ய கூலி வசூல் செய்யப்பட்டது. உரோமை அரசின் கட்டுப்பாட்டுக்குள் பாலஸ்தீனம் இருந்தபடியால் யூதர்கள் உரோமை அரசுக்கு வரிசெலுத்த வேண்டியிருந்தது. ஏழைகளிடமிருந்து சுரண்டி எடுக்கப்படும் வரிகளைக் குறித்து வினா எழுப்பவோ அதனை மறுக்கவோ மக்களுக்கு உரிமையில்லை. இச்சூழலில் தம்மை மானிடமகனாக வெளிப்படுத்திய ஆண்டவர், தீமையான சமூகக் கட்டமைப்புகளை மாற்றுகின்ற பணியே கடவுள் விரும்பும் பணி என்று கோவிலைத் தூய்மைப்படுத்தி,

கோவிலினுள் செல்ல முடியாத மாற்றுத்திறனாளிளைக் கோவிலுக்குள் நுழையச் செய்து (மத் 21:14) மாற்றுருவாக்கத்துக்கு நேராக வழிநடத்துவதைக் கண்ட தலைவர்கள் இயேசுவின் அதிகாரத்தினைக் குறித்து வினா எழுப்பினர். இயேசுவின் அதிகாரத்தை இரு நிலைகளில் புரிந்து கொள்ளலாம்.

## *1. நீதிவாழ்வுக்கான அதிகாரம்* :

உரோமை ஆளுகையின் சட்டங்களாலும் யூதச்சமயக் கொள்கைகளினாலும் கோட்பாடுகளினாலும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நோயுற்றோர் துன்புறுத்தப்பட்டனர். இவ்விதமாய் நீதிமறுக்கப்பட்ட மக்களும் நீதிவாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் இயேசுவின் செயல்பாடுகளில் வெளிப்பட்டன. இயேசுவின் அதிகாரம் நீதி வாழ்வுக்குரியது என்பதனை விளக்க திருமுழுக்குநர் யோவானை எடுத்துக் காட்டுகிறார் (மத் 21:25). யோவானால் கொடுக்கப்பட்ட முழுகுதலை யூதர்கள் முக்கியப்படுத்தினர். சமய அரசியல் சட்டங்களைக் கடைப்பிடித்து எப்படியும் வாழலாம் என்ற நிலைப்பாடும் இருந்தது. ஆனால் யோவானின் கூற்றாகிய மனந்திரும்புதல் வாயிலாக மன்னிப்பு வழங்கலாம், அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்ப வேண்டியதில்லை என்ற போக்கு இருந்தது. மனந்திரும்புதலும் மன்னிப்பு பெறுதலும் ஒடுக்கப்பட்ட ஏழைகளுக்குரியதாகவே கருதப்பட்டன. ஏனெனில் அவர்கள் அதிகாரத்தில் இருப்போரின் கண்களுக்குத் தெரியவில்லை. ஆண்டவரது நீதி என்பது தீமை செய்யும் யாராக இருந்தாலும் மனந்திரும்புவதும், மன்னிப்பு பெறுவதும், ஒருவருக்கொருவர் மன்னித்து வாழ்வதுமாகும் (மத் 6:12,14). அத்தகைய நீதியை நிறைவேற்றத் தவறும்போது அநீதிக்காகக் குரல் கொடுக்கின்ற அதிகாரம் தமக்கு மட்டுமல்ல, இறை நம்பிக்கையுடன் செயல்படும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. மட்டுமல்லாமல் அதனைவிட பெரிய செயல்களையும் செய்ய முடியும் (மத் 21:21) என்று சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். அத்தகைய நீதிக்குரிய பணிவிடைகளில் நம்மை இணைப்பதுடன், நீதிவாழ்வுக்குரிய செயல்களைச் செய்து வாழ்வோம்.

## *2. நிறைவாழ்வுக்கான அதிகாரம்* :

யூதர்கள் தங்கள் பிறப்பிலேயே நிறைவாழ்வுக்குரியவர் என்றும், கடவுளுக்கு ஏற்புடையவர்கள் என்றும் எண்ணினர். ஆனால் அவர்களது செயல்களினால் மக்களை பல நிலைகளில் அடிமைப்படுத்தினர் (மத் 23:23). விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதனைப் போல் அனைவரும் நிறைவுள்ளவராய் இருப்பதுவே ஆண்டவரின் எதிர்பார்ப்பு (மத் 5:48), அதற்கு மாறாக, மக்களை ஒடுக்குவதும் இயற்கை வளங்களைச்

சுரண்டி அழிப்பதும் தீயோனின் ஆற்றலாக இயேசு கருதினார் (யோவா 8:44). அத்தீமைகளினின்று விடுவித்து மக்களை நிறைவாழ்வுக்கு நடத்துவதில் தான் தமது அதிகாரம் இருப்பதாகக் குறிப்பிட்டார் (யோவா 10:10). நிறைவாழ்வைப் பெற்றுக் கொள்ள இறையரசின் பண்பான பகிர்தலை முன்னிலைப்படுத்தி, சொல்லும் செயலும் இரண்டறக் கலந்து வாழும் முறையை இயேசு கற்றுக் கொடுத்தார். போதனைகள் செயல்பாட்டுடன் செல்லும்போது நிறைவாழ்வின் பயணத்தில் பயணிக்க முடியும். இதனை மக்களுக்குப் புரிய வைக்கும் நேரத்தில் இலைகளுடன் காட்சியளித்த அத்திமரத்தைப் பட்டுப்போகச் செய்து (மத் 21:19) மாய்மாலமாய் பேசிவிட்டு செயல்வடிவம் கொடுக்காத பகட்டான பரிசேய வாழ்வு முறையைக் கண்டித்தார். சமூகத் தீமையான மாய்மால வாழ்வு முறையை மாற்றுகின்ற பணியில் தம்மை இணைத்து மக்களை நிறைவாழ்வுக்கு நேராக நடத்துகின்ற பணிக்கான அதிகாரத்தை இயேசு செயல்படுத்தினார். இருட்டைக்குறித்து பயந்து கொண்டிருப்பதை விட ஒரு விளக்கை ஏற்றிவைத்தால் இருள் வெளிச்சமாகும். தீமைகள் உலகில் இருக்கிறது என்று பயந்து நிற்காமல், கடவுள் தரும் ஆற்றலுடன் மீட்பு என்னும் நற்செய்தி விளக்கை ஏற்றி வைப்போம். நம்பிக்கையுடன் நாம் செய்யும் செயல்கள் கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்கும் போது சொல்லும் செயலும் இணைந்து நிறைவாழ்வுக்கான அதிகாரப்படுத்தப்பட்ட பணியை உலகினில் செய்கிறோம் என்ற புரிதலுடன் வாழ்வோம். அப்பணியைத் தொடர தூயாவியார் துணைபுரிவாராக!

அருள்திரு. G. **கிரீஷ் குமார்**

# அவர் எனக்குச் செய்தது முறையான செயலே

மத் 26:6-13

**"ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே"** (மத் 26:10).

2020-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் பெண் துணைஅதிபராகத் தேர்வு செய்யப்பெற்றவர் திருமதி கமலா ஹாரிஸ் ஆவார். வெற்றிபெற்ற பின் இவர் ஆற்றிய உரை உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. அவ்வுரையில், "நான், இந்த நேரம் இங்கு இருப்பதற்கு முக்கியக் காரணமான பெண், என் தாய் ஷியாமளா கோபாலன் ஹாரிஸ். இந்தியாவிலிருந்து, தன் 19ஆவது வயதில் இங்கு வந்த அவர், நான் இந்த இடத்தில் இருப்பேன் எனச் சிறிதும் நினைத்திருக்கமாட்டார். எனினும் அமெரிக்காவில் இத்தகைய தருணங்கள் அரங்கேறுவது சாத்தியம் என நம்பியவர் அவர். இந்த நேரத்தில் நான் அவரை நினைவுபடுத்த விரும்புகிறேன். சம உரிமை, சுதந்திரம், அனைவருக்கும் நீதி உள்ளிட்டவற்றிக்காகப் போராடி தியாகங்களைச் செய்த கறுப்பினப் பெண்கள் உட்பட அனைத்துப் பெண்களுக்கும் என் நன்றிகள். கறுப்பினப் பெண்கள் ஜனநாயகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றனர். இதே போல் ஆசிய, வெள்ளை, லத்தீன், பூர்வீக அமெரிக்கப் பெண்கள் என அனைவருக்கும் என் நன்றி. அமெரிக்கத் துணை அதிபராகப் பொறுப்பேற்கும் முதல் பெண்ணாக வேண்டுமானால் நான் இருக்கலாம். எனினும் கடைசிப் பெண்ணாக இருக்க மாட்டேன். அதை என்னால் உறுதியாகக் கூற முடியும். அமெரிக்காவில் அனைத்து விதமான சாத்தியக் கூறுகளும் இருப்பதை, இந்த நாளில் அனைத்துப் பெண் குழந்தைகளும் உணர்ந்திருப்பர்" என்று குறிப்பிட்டார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் காலத்திலும், சமூக அளவிலும், சமயத் தளங்களிலும் பெண்கள் முதன்மையான பணிவிடைகளிலும் பதவிகளிலும் பங்கேற்பது சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. ஆனால் கடவுளின் மாபெரும் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற வந்த இயேசு கிறிஸ்து, தமது வாழ்விலும் பணிவிடையிலும் சிலுவை மரணத்திலும், உயிர்ப்பிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்களையும் பங்கேற்கச் செய்ததோடு

மட்டுமல்லாமல் அவர்களுக்கு முதன்மையையும் அளித்தார். அத்தகைய நோக்கில் ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட, கனப்படுத்தப்பட்ட ஒரு பெண்ணைக் குறித்துத் தான் மத் 26:6-13 வரையுள்ள வசனங்களில் படிக்கின்றோம். இப்பெண்ணை ஆண்டவர் ஏன் கனப்படுத்தினார்? எவ்வாறு கனப்படுத்தினார்? என்பதையும், இந்நிகழ்வின் வழியாக அவர் கற்றுத்தரும் உண்மைகளையும் தியானிப்போமாக.

### *1. முறையானதைச் செய்த பெண்* :

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மோடு கூட இருக்கவும் தம் பணிவிடையிலும் பாடுகளிலும் பங்கேற்கவும், தம் உயிர்ப்பு மற்றும் விண்ணேற்புக்குப் பிற்பாடு, தம்மால் நிறைவேற்றப்பெறும் மீட்பின் பணியைத் தொடர்ந்தாற்றவும் பன்னிரு சீடர்களைத் தெரிவு செய்தார். அவர்களிடம் மூன்று முறை தமக்கு நிகழப்போகும் பாடு மரணத்தை குறித்தும் உயிர்ப்பைக் குறித்தும் முன்னறிவித்தார் (மத் 16:21-23, 17:22-23, 20:17-19). அவ்வாறு மூன்று முறை முன்னறிவித்தும் அவருடைய சிலுவை நோக்கிய பயணத்தில் சீடர்கள், அவருக்கு முறையான பங்களிப்பைத் தரவில்லை. ஓடிப்போகிற, மறுதலிக்கிற, இறைத்திட்டத்திற்கு முரண்படுகிற மனநிலை உடையவர்களாகவே இருந்தனர். எடுத்துக்காட்டாக, ஆண்டவர் முதன் முறையாகத் தம் சாவை முன்னறிவித்தபோது அவருடைய சீடராகிய பேதுரு, "ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது" என்ற போது, இறைத்திட்டத்திற்கு பேதுரு தடையாயிருப்பதை ஆண்டவர் கடிந்து கொள்கிறார் (மத் 16:22-23). ஆண்டவர் இரண்டாவது முறையாகத் தம் சாவை முன்னறிவித்த போது அதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதைக் குறித்து அவரிடம் விளக்கம் கேட்கவும் அஞ்சினார்கள். (மாற் 9:30-32). அதேவேளையில் தங்களுக்குள் யார் பெரியவர் எனச் சண்டையிட்டுக் கொண்டார்கள் (மாற் 9:33-34). மூன்றாவது முறையாக ஆண்டவர் தம் சாவை முன்னறிவித்தபோது, அவருடைய பாடுகளின் பயணத்தில் பங்கேற்க வேண்டியவர்கள், அவருடைய ஆட்சியின் அரியணையில் யார் வலப்புறமும் இடப்புறமும் அமருவர் என உரிமை கோரிக்கொண்டிருந்தனர் (மத் 20:20-21). இவ்வாறு ஆண்டவருடைய சீடர்கள் அவருடைய பணிவிடையிலும் பாடுகளிலும் அவருடைய உண்மையான நோக்கமறிந்து தாங்கள் முறையாகச் செய்ய வேண்டியதை, தங்களுடைய அழைப்புக்கு ஏற்றவைகளைச் செய்யாமல் தோற்றுப்போன அல்லது தவறிப்போன நிலையைக் காண்கிறோம்.

இச்சூழலில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பெத்தானியாவில் சீமோன் இல்லத்தில் இருந்தார். அப்போது பெண் ஒருவர் இயேசுவிடம் வந்து அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து, தம்

கூந்தலால் துடைத்து தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத்தைலம் பூசினார். இதைக் கண்ட சீமோன் இச்செயலைச் செய்வதற்கு, ஒரு பாவியான பெண்ணை எவ்வாறு அனுமதிக்கலாம் என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். ஆண்டவர் சீமோனைப் பார்த்து, "நான் உம்முடைய வீட்டிற்குள் வந்த போது, நீர் என் காலடிகளைக் கழுவ தண்ணீர் தரவில்லை; இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து, அவற்றைத் தம் கூந்தலால் துடைத்தார். நீர் எனக்கு முத்தம் கொடுக்கவில்லை; இவரோ நான் உள்ளே வந்தது முதல் என் காலடிகளை ஓயாமல் முத்தமிட்டுக் கொண்டே இருக்கிறார். நீர் எனது தலையில் எண்ணெய் பூசவில்லை; இவரோ என் காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார்" (லூக் 7:36-39; 44-46 மத்தேயு மற்றும் மாற்குவின் நற்செய்தி நூற்களில் நறுமணத் தைலத்தை அவர் தலையின் மீது ஊற்றியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது).

இயேசு கிறிஸ்துவின் சிலுவை நோக்கிய பயணத்தில் சீடர்கள் முறையாகச் செய்யத் தவறிய நல்ல செயல்களை, இயேசு கிறிஸ்துவை விருந்துக்கு அழைத்திருந்த சீமோன் செய்யத் தவறிய நற்கிரியைகளை இப்பெண்மணி செய்கின்றார். ஆண்டவர் சிலுவையில் மரித்து மரணத்தை வென்று அரசராக முடிசூட்டிக் கொள்ளப் போகிறார் என்பதை அறிந்து அவர் மீது நறுமணத் தைலத்தை ஊற்றி அவரை அடக்கத்திற்கு ஆயத்தம் செய்யும் முறையான செயலைச் செய்தார்.

இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்பதும் அவருடைய மரணத்தையும் உயிர்ப்பையும் நமது வாழ்வில் வெளிப்படுத்துவதும் இறைமக்களாகிய நாம் செய்ய வேண்டிய நற்கிரியை, முறையான செயல் என்பதை நினைவில் கொள்வோம்.

### *2. மெய்க் கீர்த்தியளிக்கும் ஆண்டவர்* :

சீடர்கள் செய்யத் தவறிய, சீமோன் செய்யத் தவறிய முறையான செயலை, பாவியெனக் கருதப்பட்ட இப்பெண்மணி செய்கிறார். இதுவே ஆண்டவருடைய பார்வையில் ஏற்புடையதாயிருந்தது. சீமோனின் இல்லத்திலிருந்தோரின் பார்வையில் இது வீணான செயலாக, விலை மதிப்புமிக்க நறுமணத் தைலத்தை விரயம் செய்யும் செயலாகக் காணப்பட்டது. ஆனால், ஆண்டவர் இச்செயலுக்கு பற்றுறுதியை வெளிப்படுத்தும் செயல் என்று அங்கீகாரம் வழங்குகின்றார். தம்மைக் குறித்தும் தமது பணிவிடையைக் குறித்தும், மரணத்தைக் குறித்தும் சீடர்களைக் காட்டிலும் இப்பெண்மணி நன்கு அறிந்து கொண்டார் என ஆண்டவர் அவரைக் கனப்படுத்துகின்றார். இப்பெண்ணுக்கு எதிராகப்

பேசியோரிடம், "ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே" (மத் 26:10) என்று சொல்லி அப்பெண்ணுக்கு அங்கிருந்த தடைகளை அகற்றி தமது மீட்பு பணிவிடையில் பங்கேற்கும் முன்னுரிமையை ஆண்டவர் வழங்குகின்றார்.

பொதுவாக சாதாரண மனிதர்களான நாம் நம்மைப் பாராட்டுவதைப் புகழ்தல் என்கிறோம். அதில் உண்மையான புகழ்தலுமுண்டு, புகழ்வது போல் பழிப்பது, பழிப்பதைப் போல் புகழ்வது என்ற வஞ்சப் புகழ்ச்சியும் உண்டு. ஆனால் தமிழ் வரலாற்றில் அரசர்களைப் புகழ்வதை மெய்க் கீர்த்தி என்கிறார்கள். மெய்க் கீர்த்தி என்றால் உண்மையான புகழுக்குரிய செயல்களைச் செய்வோருக்கு வழங்கப்படும் ஒன்றாகும். இங்கே ஆண்டவர் தம்மை அபிஷேகம் செய்த பெண்ணுக்கு மெய்க் கீர்த்தியை அருளுகின்றார். "உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக் கூரப்படும்; இவரும் நினைவு கூறப்படுவார் என்று நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் " (மத் 26:13) என்று மெய்க் கீர்த்தியை அருளுகின்றார். நான்கு நூற்செய்தி நுற்களிலுமே இப்பெண் செய்தது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தூய வாரம் புதன்கிழமை தோறும் எல்லா திருச்சபைகளும் இப்பெண்ணின் நற்செயலையும் ஆண்டவர் அப்பெண்ணுக்குத் தந்த கனத்தையும் குறித்து தியானிக்கின்றன. இதுவே ஆண்டவர் இவருக்கு வழங்கிய மெய்க்கீர்த்தி.

ஆண்டவருக்காக நாம் செய்யும் நற்செயல்கள் மற்றவர்களின் பார்வையில் அற்பமானது, வீணானது எனக் கருதப்படலாம். ஆனால் ஆண்டவருடைய பார்வையில் அது முறையானது, ஏற்புடையது, விரும்பத்தக்கது என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவின் சிலுவைப் பாதையையும், பாடுகளையும் தியானித்துக் கொண்டிருக்கும் நாம் மனிதருடைய பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெறும் நோக்கில் நம்முடைய செயல்களை அமைத்துக் கொள்ளாமல் ஆண்டவருடைய பார்வையில் ஏற்புடைய செயல்களைச் செய்ய நாடுவோமாக.

அங்கீகாரம் மறுக்கப்படுவோருக்கும், பாவியாக கருதப்படுவோருக்கும், புறக்கணிக்கப்படுவோருக்கும் ஆண்டவர் அங்கீகாரம் வழங்கினார், அவர்களை கனப்படுத்தினார் என்பதை உணர்ந்து செயல்படுவோம். அத்தகைய மக்களின் முகவரியாக திருச்சபை திகழட்டும்.

திரு. **அ. கால்வின் தேவநேசன்**

01-04-2021

**வியாகுல வியாழன்**

## நன்றித்திருவிருந்து: இயேசுவை நினைவுகூர்தல்

**EUCHARIST : THE RE-MEMBRING JESUS**

விப 12:1-17 | 1கொரி 11:23-34
திபா 116 | மத் 26:17-30

**"... இது உங்களுக்கான என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார்"** (1கொரி. 11:24).

நற்கருணை (Eucharist) என்பதற்கு 'நன்றிகூறுதல்' என்று பொருள். Eucharist எனும் சொல் கிரேக்கத்தில் இரு சொற்களால் ஆனது இயு+கேரிஸ், இயு-நல்ல, கேரிஸ்-கருணை. ஆகவே இறையவரின் நல்ல கருணையை நினைவுகூர்ந்து நன்றி சொல்வது நன்றித்திருவிருந்தாகும். நன்றித்திருவிருந்து ஆண்டவர் ஏற்படுத்திய விருந்து (மத் 26:26,27). விருந்தில் 'நன்றிகூறுதல்' என்பது ஆண்டவரின் திருக்கட்டளை (லூக்கா 22:19). நம்முடைய கடந்தகால அனுபவங்களை எப்போதும் மறக்கக் கூடாது, நினைவிற் கொள்ள வேண்டும். இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கைப் பயணத்தில் வலுவூட்டும் நிகழ்வாக ஆண்டவரின் பாஸ்கா விருந்து உள்ளது (விப 12:11). இந்நாள் தலைமுறைதோறும் 'நினைவுகூரும் நாளாக' விளங்கும் (விப 12:14). தமது வாழ்வின் நிறைவுப் பயணத்தில் ஆண்டவர் இயேசு பஸ்கா நினைவு நன்றி விழாவைக் கொண்டாடினார். பாஸ்காப் பலியாகத் தம்மை அடையாளப்படுத்தி, தலைமுறைத் தலைமுறையாக நினைவு கூரவும் கட்டளையிடுகின்றார். தூய பவுல் ஆண்டவரின் நினைவாக நாம் கடைப்பிடிக்க வேண்டியவை மற்றும் 'ஆண்டவரின் திருவிருந்து' ஆகியவற்றை பற்றி 1கொரிந்தியர் 11:23-33 வரையுள்ள திருமொழிகளைக் கொண்டு விளக்கம் தருகிறார். இப்பகுதியின் வழியாக திருவிருந்தின் உண்மைகளைக் கற்றுக்கொள்வோம்.

### *1. இறைமகனின் பாடுகளை நினைவுகூர்தல்* :

"....நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்" (1கொரி 11:26). 'சாவை அறிவித்தல்' என்பது கிறித்துவின் துன்பத்தில் பங்குகொண்டு, மனம்தளராமல் சான்றுடன் வாழ்வதாகும். திருவிருந்தில் பங்குபெறும் இறைமக்கள் நன்றிசொல்வதுடன், இறைமகனின் பாடுகளையும் நினைவிற் கொள்ள வேண்டும். பாஸ்கா விழா என்பது பாடுகளில் இறைவர் தந்த விடுதலையை நினைவுகூர்வதாகும். ஆண்டவர் என் வாழ்வுக்காக, என் மீட்புக்காகப் பாடுபட்டார் என்று உணர்வதே உண்மையான நினைவுகூர்தல். இறைமகனின் பாடுகளை

நினைவிற்கொள்ளும் இறைமக்கள் மண்ணுலகில் வாழும் மக்களின் பாடுகளை நினைவிற் கொண்டு அவர்களோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். விடுதலைப்பயணத்தில் பாடுபடும் மக்களுடன் கடவுள் தம்மை இணைத்துக்கொண்டார் (விப 12:1-17).

மனிதர் என்றே கருதப்படாமல் மிருகங்களைவிட மோசமாகத் துன்புறுத்தப்பட்ட கறுப்பின மக்கள், விடுதலையைச் சுவைக்க, அரசியல் களம் நின்று போராடி, தென்னாப்பிரிக்கா நாட்டின் தந்தையாக விளங்குபவர், அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற நெல்சன் மண்டேலா என்பவராவார். இறைமகனின் பாடுகளை நினைவிற் கொள்ளும் இறைமக்கள், மண்ணுலக மக்களின் பாடுகளை நினைவிற் கொள்வோம்.

### *2. இறைமகனின் பாசத்தை நினைவுகூர்தல்* :

“இது உங்களுக்கான என் உடல்....இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை” (1கொரி 11:24,25). இறைமகனின் அன்பு, பாசம் எல்லையற்றது. யாரும் யாருக்காகவும் உயிரைக் கொடுப்பதில்லை. பெற்றோர் - பிள்ளைகள் என்ற உறவில் கூட உயிரைக் கொடுக்க யாரும் முன்வருவதில்லை. ஆண்டவர் தம்மையே பலி ஆடாக ஈந்தளித்துள்ளார். முதல் உடன்படிக்கை நூலில், பலியாக ஆடு செலுத்தப்பட்டுள்ளது (விப 12:3-5). ஆண்டவர் இயேசு தம் சீடர்களுடன் நிறைவு நன்றி விருந்தில் பங்கு பெறும்போது, “எனது உடல்.... இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்” (மத் 26:26-28). குற்றத்திற்கு ஏற்றவாறு தன்தன் குற்றப்பழிகளைச் சுமக்க வேண்டும். இறைமகன் மனுக்குலத்தின் மீது பாசம் கொண்டபடியால் மண்ணுலகின் குற்றத்தைத் தாமே ஏற்றுக்கொண்டார்.

நன்றித்திருவிருந்தில் பங்குபெறும் இறைமக்கள் இறைவரின் பாசத்தை மக்கள் மீது காட்ட வேண்டும். இறைவரிடம் பாசம் செலுத்துகிறோம் என்று சொல்லுகின்ற பலர், மக்கள் மீது பாசம் செலுத்தவில்லை. அவர்களுடைய ஆன்மிகம் குருட்டு ஆன்மிகமாக உள்ளது. “ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார் (மாற் 10:45).

### *3. இறைமகனின் பகிர்தலை நினைவுகூர்தல்* :

இறைமகனின் உடல், குருதி ஒரு சமுதாயத்திற்கோ, குறிப்பட்ட மக்களினத்திற்கோ அல்ல, முழு உலகத்திற்கும் உரியது. மக்களின் பசி அறிந்தவர், தம்மையே உணவாக்கினார். சிலுவையின் மீட்பு என்பது முழு மண்ணுலகத்திற்குமானது. “ஆண்டவராகிய இயேசு காட்டிக்

கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு...'' (அதைப் பிட்டு-அதைப் பகிர்ந்து) (1கொரி 11:23,24) கொடுத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இறைமகன் தமது வாழ்வில் இரக்கம் கொண்டு பசியாய் இருந்தோரைப் பசியாற்றினார். அதனடிப்படையில் தம் நினைவாகத் தம் உடலை உணவாகத் தந்தார். பாஸ்கா ஆடு தெரிவுச் செய்யப்படுகையில் ‘‘ஓர் ஆட்டினை உண்ண ஒரு வீட்டில் போதிய ஆள்கள் இல்லையெனில், உண்போரின் எண்ணிக்கைக்கும், உண்ணும் அளவுக்கும் ஏற்ப அண்டை வீட்டாரைச் சேர்த்துக் கொள்ளட்டும்'' (விப 12:4). இறைவர் பாஸ்கா விழா பற்றி மக்களுக்குக் கட்டளையாகச் சொல்லும்போதே ‘பகிர்தலை' மையப்படுத்துகிறார். தூய பவுலடிகளார் ‘‘ஒன்றுகூடி உண்ணுங்கள்'' என்று 1கொரி 11:33-இல் நினைவுபடுத்துகிறார்.

கடவுளையும் உணவையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஏனெனில் கடவுள் தம்மை, தம் மக்களுக்கு வெளிப்படுத்த நினைத்ததும் உணவின் வழியாகத்தான் (யோவான் 6:32). திருத்தந்தை பிரான்சிஸ் கூற்றுப்படி, ‘‘நற்கருணை என்பது எல்லா நிலையிலும் நிறைவடைந்தவர்களுக்கல்ல, மாறாக, சமூகத்தின் எல்லா நிலையிலும் ஒடுக்கப்பட்டும், ஓரங்கட்டப்பட்டும், ஒடுங்கிய வயிற்றோடும் உள்ள நலிந்தவருக்கு வலுசேர்க்க மருந்தாகக் கொடுக்கப்பட வேண்டிய பரிசு'' என்கிறார். அருள்பணி. இயே. சத்தீஷ் ராஜ் ‘‘மனிதப் பசியும் கடவுளின் ரொட்டியும்'' என்ற தனது நூலில், ‘‘நற்கருணையாகிய கடவுள் தம்மையே மண்ணுலகத்திற்குப் பகிர்ந்தார். அதுபோல மானிடம் பகிர்தலைக் கற்று, நற்கருணையில் பங்குபெற வேண்டும்'' என்கிறார்.

பாஸ்கா விழாவை, இறைமகன் நினைவுகூர்ந்து வாழ்வின் கடைசிப் பயணம் வரையிலும் பின்பற்றியதுபோல, அவர்வழியில் வாழும் இறைமக்களாகிய நாமும் பாஸ்காப் பலியாகத் தம்மையே சிலுவையில் தியாகம் செய்த ஆண்டவர் இயேசுவை மனத்திற்கொண்டு, நினைவுகூர்ந்து கடைப்பிடிப்போம். நற்கருணையில் பங்குபெறும்போதெல்லாம் இறைமகனின் பாடுகளையும், பகிர்வையும் நினைவிற்கொண்டு, புதிய சமுதாயம் படைத்திடப் பாடுபடுவோம், பாசத்தை வெளிப்படுத்துவோம், பகிர்தலைப் பறைசாற்றிப் பகிர்ந்திடுவோம்.

திரு. **மு. ஜெஸ்லின் ஸ்டீபன்**

02-04-2021

புனித வெள்ளி

## சிலுவை : இறப்பின் இறப்பு

**CROSS : DEATH OF DEATH**

| | |
|---|---|
| எண் 21:1-9 | 1கொரி 15:50-58 |
| திபா 22 | மத் 27:1-56 |

**"சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?"** (1கொரி. 15:55).

வாட்டர்லூ போர் (Waterloo war) 1815-ஆம் ஆண்டு ஐக்கிய அரசுக்கும் (இங்கிலாந்து-United Kingdom) பிரெஞ்சுக்கும் இடையே நடைபெற்றது. வெல்லிங்டன் பிரபு (lord Wellington) ஐக்கிய அரசின் படைகளுக்கும், நெப்போலியன் பிரெஞ்சப் படைகளுக்கும் தலைமை தாங்கினர். இந்தப் போரின் முடிவை அறிய மக்கள் காத்துக் கொண்டு இருந்தனர். தூரத்திலிருந்து வந்த கப்பல் வெல்லிங்டன் பிரபுவின் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்களுக்குப் போரின் செய்தியைச் சுமந்து வந்து கொண்டிருந்தது. மக்கள் கப்பலை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். கப்பல் தூரத்தில் வரும்போது அதில் எழுதப்பட்டிருந்த lord Welligton defeated என்ற செய்தியை இங்கிலாந்து மக்கள் வாசித்துக் கலக்கமடைந்தனர். ஆனால் கப்பல் அருகில் வரவர அதைச் சூழ்ந்திருந்த பனிப்படலம் அகலவே "lord Welligton defeated his eneimies" எனத் தெளிவாகத் தென்பட்டது. இதனைப் பார்த்து மக்கள் மகிழ்ந்தனர். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் வீழ்ச்சி போலத் தோன்றினாலும் நம் ஆண்டவர் மானுடத்தின் பாவங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு பாவத்திற்கும் சாபத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து வெற்றி சிறந்தார். அவர் சிலுவை வாயிலாகத் தமது அன்பை வெளிப்படுத்திய நாளையே புனித வெள்ளியாக நாம் கொண்டாடுகிறோம். இச்சிறப்பு நாளில் திருமறைப்பகுதிகள் சார்ந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் சிறப்புகளைத் தியானிப்போமாக.

### *1. தடையைத் தடமாக்கிய கிறிஸ்துவின் சிலுவை* :

மரணம் மனித வாழ்வுக்குப் பெரும் தடையாகக் கருதப்பட்டது. இது மனிதருடைய பாவத்தின் நிமித்தமாக ஏற்பட்ட ஒன்று. தொடக்க மனிதருடைய கீழ்ப்படியாமை என்னும் பாவம் மானுடரை வீழ்ச்சியடையச் செய்தது. இதனையே ஜென்மபாவம் என்று கிறிஸ்தவ இறையியல் கற்பிக்கின்றது. பாவத்தினூடாக கடவுளுக்கும் மனிதருக்குமான உறவு உடைபட்டது. 1கொரிந்தியர் 15:45 முதல் 49 வரையுள்ள பகுதியில் ஆதாமையும் கிறிஸ்துவையும் ஒப்புமைப்படுத்திக் கூறுகின்றார் பவுலார். ஆதாமினால் பாவம் பிறந்தது, பாவத்தினால் இவ்வுலகில் சாவு நுழைந்தது.

ஆனால் இறுதி ஆதாமாகிய கிறிஸ்துவினால் பாவம், சாவு ஆகியவற்றினின்று நமக்கு விடுதலை கிடைக்கப் பெற்றதை நாம் அறியலாம். அது மட்டுமல்லாமல் முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பதைப் போல, இறப்பை, தம் இறப்பினால் சிலுவையில் வென்றார் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம், மனிதருடைய மரணத்தை மறுமைக்கு வாசலாக்கியது. 1கொரிந்தியர் 15:54-55 வரையுள்ள வசனங்களில் அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாவாமையையும் அணிந்து கொள்ளும்போது இறப்பு முற்றிலும் ஒழிந்து வெற்றி கிடைத்தது எனப் பவுலார் குறிப்பிடுகின்றார். இது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வழியாக நிறைவேறியது. இறந்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் என்கிற வார்த்தை, இறப்பு நிரந்தரமானது அல்ல என்பதை வெளிப்படுத்துகிறது. எண்ணாகமம் 21:9இல் கம்பத்தில் உயர்த்தப்பட்ட வெண்கலப்பாம்பைப் பார்த்தோர் பிழைத்தனர். அதைப்போன்று சிலுவையில் தொங்கிய கிறிஸ்துவைப் பார்ப்போர் நிலைவாழ்வுக்கு நேராக நடத்தப்படுவர். இதன் மூலம் "என்னிடம் பற்றுறுதி கொள்வோர் இறந்தாலும் பிழைப்பர்" என்ற வார்த்தை நிறைவேறுகின்றது. மனிதருடைய வாழ்க்கையில் இறப்பு ஒரு தடையாக இருந்தது. ஆனால் கிறிஸ்துவின் இறப்பின் வழியாக, மனிதருடைய மரணம் தடையாக அல்ல நிலைவாழ்வுக்கான தடமாக மாற்றம் பெற்றது. ஆதாமுக்குள்ளாக எல்லாருக்கும் மரிப்பது ஒரு தடை. ஆனால், கிறிஸ்துவின் மரணம் நமக்கு மரணத்தை வெல்வதற்கான வழி. ஏனென்றால், இயேசு இறப்பை வென்று மரணத்தின் கொடுக்கை முறித்தார். இது கடவுள் கிறிஸ்துவில் வெளிப்படுத்திய அன்பில் விளைந்த ஒன்றாகும். அவ்வன்புக்கு நன்றியும், சான்றும் பகர்கின்றவர்களாய் வாழ்வோம்.

## *2. தண்டனையை ஆசியாக மாற்றிய கிறிஸ்துவின் சிலுவை* :

சிலுவை, கிறிஸ்தவர்களின் சின்னம். கிறிஸ்தவத்தின் தனித்தன்மை என்பது கிறிஸ்துவில் வந்த சிலுவை வழி மீட்பு ஆகும். சுகி சிவம் என்பவர் இவ்வாறு கூறுகிறார், "அரசர்களின் மணி மகுடங்களை விட, இறைமைந்தரின் முள் மகுடம் உலகப்புகழ் பெற்றது." சிலுவை என்பது உரோமை ஆட்சியில் மரணத்தண்டனைக்கேதுவான குற்றம் செய்வோரைத் தண்டிப்பதற்கான ஒரு கொலைக்கருவியாகும். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்பது முதலாம் உடன்படிக்கை நூலின் கூற்றாகும் (இச 21:23, கலா 3:13). ஆனால் இயேசு கிறிஸ்து எப்போது சிலுவையில் இறந்தாரோ, அப்போது அது நம்பிக்யைின் சின்னமாக, புனிதச் சின்னமாக மாறியது. குற்றம் புரிவோர் தண்டனை பெறும் இடம், மன்னிப்பு பெற்று வாழ்வு பெறும் இடமாக மாறியது. இதைத் தான் தூய பவுல்,

பாவத்திற்குக் கிடைக்கும் கூலி சாவு; மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள்கொடை, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு என்று கூறுகின்றார் (உரோ 6:23). இயேசுகிறிஸ்துவில் நாம் இந்த நம்பிக்கை வாழ்வை, சிலுவை வழியாகப் பெறுகின்றோம். ஏனென்றால் அது நம் பாவத்தைச் சிலுவையில் வென்று, புது வாழ்வை ஏற்படுத்தியது. முதலாம் ஏற்பாட்டில், மீட்புப் பரிகாரமாக, இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் பஸ்கா இருந்தது போல, புதிய ஏற்பாட்டில் முழுஉலக மக்களையும் மீட்கும் வழியாக கடவுள் தம் மகனையே அனுப்பி பாவத்திற்குப் பரிகாரம் செலுத்திக் கொண்டார். பாவத்தின் சம்பளம் மரணம். ஆகவே பாவம் செய்தவர் மரண ஆக்கினைக்கு உட்பட்டு இறந்தனர். ஆனால் இயேசுவின் சிலுவை இறப்பினால் சாவு முற்றிலும் ஒழிந்து வெற்றி கிடைத்தது. 1கொரிந்தியர் 15:56-இன்படி பாவமே சாவின் கொடுக்கு, பாவத்தினால் சாவு உண்டாகிறது. ஆனால் மீட்க வந்த கிறிஸ்துவோ சட்டத்தினின்றும், சட்டத்தின் விளைவான பாவத்தினின்றும், பாவத்தின் கூலியான சாவினின்றும் நம்மை மீட்டுவிட்டார். இப்போது சாவு என்பது நச்சுக் கொடுக்கை இழந்த தேள் போன்றது. கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வோரைத் தீண்ட இயலா நிலையில் இன்று சாவு காட்சியளிக்கிறது.

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததின் வழியாய், தண்டனை ஆசீர்வாதமாக மாறியது. கிறிஸ்து சாவை வென்றதோடு தமது வெற்றியில் நமக்கும் பங்கு தருகிறார். எனவே நமக்குக் கிடைத்துள்ள இந்த வெற்றிக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். இந்திய இறையியலாளர் செஞ்சையா சொல்கிறார், “மறுவாழ்வு, மரணத்தினால் பாதிக்கப்படுவதில்லை, இரட்சிப்பு என்பது பாவமின்மை மட்டுமல்ல, அது முழுமையான வாழ்க்கை.” இயேசுவின் சிலுவை, தண்டனையை ஆசியாக மாற்றியது, வாழ்வை வழங்கியது. ஆகவேதான் பக்தர் பாடுகின்றார்.

அருளின் திருவே சிலுவை - எங்கள்
ஆண்டவரின் சின்னம் சிலுவை
திரு அவைக்கு வந்த சிலுவை - எங்கள்
தெய்வநாதரின் சிலுவை .......
பாவிகட்கானதும் சிலுவை
பாவத்தை ஏற்றதும் சிலுவை
ஏவும் பாவம் தீர்த்த சிலுவை - இன்று
யாவரும் நேசிக்கும் சிலுவை
ஜீவாதிபதியின் சிலுவை - திருச்
சின்னமாய்த் திகழும் சிலுவை

திரு. J. **தேவராஜ ஜெபஸ்டின்**

# புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு

**HOPE FOR THE NEW LIFE**

தானி 12:1-4 1பேது 4:12-19
திபா 4 மத் 27:62-66

**“இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர்; அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்”** (தானி 12:2).

மூன்றரை அடி உயரமிருக்கும் பெண்ணால் வாழ்க்கையில் எந்த உயரத்தையும் அடைய முடியாது என்று நினைத்தவர்களின் பிற்போக்குத்தனத்தைத் தன் வானுயர்ந்த வெற்றியின் வழியாக மாற்றியிருக்கிறார் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள டேராடூனில் பிறந்த ஆர்த்தி. பள்ளியில் கல்வி கற்கும்போது அவமானத்தையும், புறக்கணிப்பையும் எதிர்கொண்டவர், உடல் குறைபாடெல்லாம் ஒரு பொருட்டே இல்லை என்று நினைத்தவர், அறிவையும், திறமையையும், வாழ்வின் எதிர்நோக்கையும் பெருக்கிக்கொண்டார். கல்லூரிப் படிப்பை முடித்து முதல் முயற்சியிலேயே இந்திய ஆட்சிப் பணித்தேர்வில் வெற்றி பெற்று, முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரி என்ற பெருமையைப் பெற்றார். அஜ்மீர் மாவட்ட ஆட்சியராகவும், 2018-இல் ராஜஸ்தான் சட்டமன்றத் தேர்தலின்போது மாவட்டத் தேர்தல் அதிகாரியாகவும், ராஜஸ்தான் முதல்வரின் இணைச் செயலராகவும் பணியாற்றினார் (02-08-2020, இந்து தமிழ்). புதியவாழ்வுக்கான எதிர்நோக்கு இருந்தபடியால் வாழ்வில் மிகப்பெரிய உயரத்தை எட்டமுடிந்தது.

தவக்காலத்தின் நிறைவுநாள் ‘அமைதியின் நாள்’, ‘வாழ்வுக்கான எதிர்நோக்கு நாள்’, ‘பற்றுறுதியில் துளிர்விடும் நாள்’ என்று புரிந்துகொள்ளலாம். விதைக்கப்பட்ட விதை மூன்றாவது நாள் துளிர்விடும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிக்கு இருப்பதுபோல், அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த சில பற்றுறுதியாளர்களுக்கு உயிர்த்தெழுதல் மீது எதிர்நோக்கு காணப்பட்டது. யூதக் கொள்கைகளை நிலைநாட்ட முயற்சித்த தலைமைக் குருக்களும், பரிசேயர்களும் மக்களின் எதிர்நோக்கை மழுங்கடிக்கத் திட்டமிட்டனர் (மத் 27:62-63). ‘எதிர்நோக்கு’ என்னும் சொல்லை இரண்டு பொருள்களில் புரிந்து கொள்ளலாம். (1) எதிர்பார்த்துக் காத்திருத்தல் (2) பிரச்சனை, அனுபவம் முதலியவற்றை எதிர்கொள்ளுதல் என்பனவாகும். வாழ்க்கையின் பயணத்தில் எதிர்கொள்ளும் சவால்களை வாழ்வுக்கான எதிர்நோக்குகளாக அமைத்து வாழ்வதால் கிடைக்கும் புதிய வாழ்வை, தானியேல் 12:1-4 வரையுள்ள விவிலியத் திருமொழிகள் வழி தியானிப்போம்.

### *1. துன்பத்தில் மீட்பு* :

"...மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராத துன்ப காலம் வரும். அக்காலத்தில் உன் இனத்தார் விடுவிக்கப்படுவர்... அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள்" (தானி 12:1). யூத மக்களிடம் ஒரு நம்பிக்கை காணப்பட்டது. "நீதித்தீர்ப்புக்காக நிற்கும் மனிதர்களுள் நற்செயல்கள் செய்தோரின் பெயர்கள் அடங்கிய வாழ்வின் நூலும், தீச்செயல்கள் செய்தோரின் பெயர்கள் அடங்கிய ஒரு நூலும் உண்டு" என்பதாகும். நீதியினிமித்தம் அநீதியாகத் துன்பம் அனுபவிக்கும்போது உறுதியாக 'விடுதலையும்', 'மீட்பும்' உண்டு என்பது தானியேல் நூலில் சொல்லப்படும் வாழ்வின் எதிர்நோக்காகும். துன்பத்தில் வாழ்ந்த கிறிஸ்தவப் பற்றுறுதியாளர்களுக்கு, தூய பேதுரு தமது திருமுகத்தில் 1பேதுரு 4:13இல் "கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்" என்று கூறுகிறார். துன்பங்கள் இரண்டு விதங்களில் வருவதுண்டு. அவை... (1) வாழ்வில் தவறு செய்தால் (2) கிறிஸ்தவர்கள் என்கின்றபடியால் (1பேதுரு 4:15-16). கிறிஸ்துவினிமித்தம் துன்பம் அனுபவிக்கும் போது மீட்கப்படுவது உறுதி.

2020 ஆம் ஆண்டில் பெருந்தொற்று (கொரோனா) நோய் என்கிற துன்பம் நம்மை ஆட்கொண்டது. இல்லங்களில் அமர்ந்து கடவுளிடம் இறைவேண்டல் ஏறெடுத்து எதிர்நோக்குடன் பொறுமையோடு காத்திருந்தோம். கடவுள் பெருந்தொற்று என்ற துன்பத்திலிருந்து நம்மை மீட்டுள்ளார்.

### *2. துயரத்தில் முடிவில்லா வாழ்வு* :

"இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்" (தானி 12:2). நான்காம் அந்தியோக்கின் ஆட்சிக்காலத்தில் யூதர்கள் வாடிய உள்ளத்தோடு துன்பதுயரத்தில் மூழ்கியிருந்தபோது நம்பிக்கையூட்டும் விதத்தில் 'முடிவில்லா வாழ்வு' உண்டு என்று தானியேல் வழியாகக் கடவுள் கூறுகிறார். இயேசுவின் சிலுவைச் சாவு, முடிவில்லா வாழ்வின் அடித்தளம். சமயத்தலைவர்கள் முடிவில்லா வாழ்வுக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்லறைக்குக் காவல் இட்டனர் (மத் 27:64-65). விதை வெடித்து மரம் வளர்வதுபோல் முடிவில்லா வாழ்வு அருளும் ஆண்டவரைக் கல்லறையால் புதைத்து வைக்க முடியவில்லை.

துயரத்தில் வாழும்போது பொறுமையுடன் காத்திருந்து எதிர்நோக்கும்போது, இறையவர் அருளும் மாட்சிமிக்க வாழ்வு வெளிப்படும். 2020 ஆம் ஆண்டு காவல்துறையால் சாத்தான்குளத்தில் இழைக்கப்பட்ட கொடூர நிகழ்வுக்குக் கிறிஸ்தவப் பற்றுறுதியாளர்களின் பதில் என்பது

"நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" (மத் 5:10). முடிவில்லா வாழ்வு வழங்கப்படும்போது குற்றம் இழைத்தோர் இழிவுக்கு உள்ளாவர் (தானி 12:2). முடிவில்லாத வாழ்வின் எதிர்நோக்கோடு கிறிஸ்தவ ஓட்டத்தில் ஓட வேண்டும்.

### *3. துன்ப துயரத்தில் நல்லோர் மிளிர்தல்* :

வாழ்வின் வெற்றிக்கு மூன்றே வரிகளில் வழி காட்டப் போவதாய் ஞானி ஒருவர் அறிவித்தார். அந்த நாளில் அவருடைய துறவுமடத்தின் நுழைவாயிலில் ஊரே கூடியது. வெற்றி, தோல்வி, பகிர்தல் என்ற மூன்று சொற்களைச் சொல்லி மெல்ல நகர்ந்தார் ஞானி. குடியிருந்த மக்கள் அவரைப் பின்தொடர்ந்து விளக்கம் கேட்டனர். அதற்கு அவர் "தோற்போம் என்ற எண்ணத்தை வெற்றி பெறுங்கள்", "குழந்தைகளுடன் விளையாடுவதில் தோற்று விடுங்கள்", "பொருளையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொடுங்கள்" என்று கூறினார். வாழ்வில் ஏற்படும் துன்பதுயரங்களில் பொறுமையுடன் போராடி வெற்றி பெற்று, இவ்வுலகத்தின் குழந்தைகள் என்கின்ற சிந்தையுடன், பகிர்ந்து நல்லோராய் வாழும்போது விண்மீனாய் மிளிரமுடியும்.

"ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும் பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்" (தானி 12:3). நான்காம் அந்தியோக்கு காலத்தில் நல்லோராய் வாழ்ந்து துன்பதுயரங்களைச் சந்தித்தவர்கள் முடிவில்லா வாழ்வில் விண்மீனாய் மிளிர்வார்கள் என்று கூறுகிறார். பேதுரு ஆக்கியோன் "..... நீங்கள் பேறுபெற்றவர்கள்..... கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள் மேல் தங்கும்" என 1பேதுரு 4:14-இல் கூறுகிறார். நல்லோராய் வாழ்வது மிகமிகக் கடினம். கடினமான சூழலிலும் நல்லோராய் வாழும் போது பேறுபெற்றோராய் மிளிரமுடியும்.

கிறிஸ்தவ வாழ்வில் துன்பதுயரங்கள் வரும்போது சற்றும் துவண்டுவிடாமல், பற்றுறுதிப் பயணத்தில் மனஉறுதியுடன் பயணிக்க வேண்டும். கிறிஸ்துவின் வாழ்வு, சாவு என்பது முடிந்துபோன கதை அல்ல. புதிய வாழ்வின் உயிரோட்டமான தொடக்கம். கல்லறை என்பது புதிய வாழ்வின் கருவறை. தாயின் கருவறை உயிர்கொடுப்பதுபோல், கல்லறை புதிய வாழ்வின் எதிர்நோக்கை நமக்குத் தருகிறது. இயேசுவின் வாழ்வு ஒவ்வொரு மனிதர்களின் வாழ்விலும் புதிய நம்பிக்கையூட்டும். இறப்பு வாழ்வை மங்கச் செய்யலாம். ஆனால் உயிர்ப்பு, வாழ்வை மிளிரச்செய்யும். இயேசுவைப் பின்பற்றிய பெண்கள் கல்லறைக்கு எதிரே பொறுமையுடன் அமர்ந்து, வாரத்தின் முதல்நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தனர் (மத் 27:61, 28:1). உயிர்ப்பின் மகிழ்ச்சியையும், முடிவில்லா மகிழ்ச்சியையும் பெற்றனர்.

திரு. ***மு. ஜெஸ்லின் ஸ்டீபன்***

04-04-2021

உயிர்ப்பு ஞாயிறு

# உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல்

## RESURRECTION : CELEBRATING THE JOY OF SALVATION

விப 14:5-31 கொலோ 3:1-11
திபா 118:14-29 மத் 28:1-10

**"அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்"** (மத் 28:6).

உடன்படிக்கையின் அடையாளம் மட்டுமல்லாமல், வாழ்வில் தான் ஒரு குடும்பப் பெண் என்ற அந்தஸ்தைக் கொடுக்கும் தாலிக்கயிற்றில் பத்து வெள்ளிக்காசுகள் பதிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று களைந்து விட்டது. மங்கல நாள் அமங்கலமாகக் காணப்பட்டது. முகம் களை இழந்து விட்டது. வெளியே செல்ல முடியவில்லை. அதைத் தேட முற்பட்டாள். விளக்கைக் கொளுத்தினாள்; வீட்டைப் பெருக்கினாள்; இழந்த வெள்ளிக்காசை மட்டுமல்ல, தனது வாழ்வைப் பெற்றாள். மகிழ்ச்சியை என்னவென்று சொல்வது? அயலகத்தார், உற்றார், உறவினருடன் சொல்லி மகிழ்ந்தாள். இழந்த வாழ்வைத் திரும்பப் பெற்றேன் என்று.

திடீரென்று யோர்தான் நதிக்கு வருகிறார் ஒருவர். முழுக்கு முனிவர் யோவானால் திருமுழுக்குப் பெற்றார். அச்சமயம் தூய ஆவியாரால் "என் அன்பார்ந்த மைந்தர் இவரே" என்னும் குரல் வானத்திலிருந்து ஒலித்தது. திருப்பணியை ஆரம்பித்தார். அதிகாரமுடையவராய்ப் போதித்தார். அற்புதங்கள் பல செய்தார். வாக்குரைக்கப்பட்ட மெசியா இவரே எனக் கண்டு மக்கள் பெருந்திரளாய் அவர் பின் சென்றனர். நோயின் அடிமைத்தனம், பிசாசின் கட்டுகள், அரசின் அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்றனர். தங்களை வழிநடத்த யூதருக்கு அரசர் ஒருவர் வந்துள்ளார் என்று கண்டு அவருக்குச் சீடராயினர். ஆனால் அவர்கள் நம்பிக்கையில் தோற்றுப் போயினர். ஆட்சியாளர்கள் இயேசுவைப் பிடித்தனர். தேசத்துரோகி எனச் சிலுவையில் அறைந்து கொன்றனர். அவரது சரீரம் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. அவரை நம்பி, பின்சென்றவர்கள் கலங்கினர். கைவிடப்பட்ட நிலையை உணர்ந்தனர். பயந்து ஒளித்தனர் (லூக் 24:20-21). இச்சூழலில் உயிர்ப்பின் செய்தி அவர்களுக்கு மகிழ்ச்சியின் செய்தியாக அமைந்தது. "உயிர்ப்பின் செய்தி அன்று மட்டுமல்ல, என்றுமே மகிழ்வின் செய்தியாக உள்ளது. இன்றும் உயிர்ப்பைக் கொண்டாடும் நாம் அர்த்தத்துடன் கொண்டாடினால் அது நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மூன்று குறிப்புகளின் வாயிலாக நாம் உயிர்ப்பு விழா தரும் மகிழ்வைச் சிந்திப்போம்.

### *1. மரணத்தில் இருந்து மகிழ்வின் வாழ்வு :*

(Death to Joy of Life)

பெற்றோர் இல்லை. சகோதரர் மட்டுமே தங்களுக்கு உறுதுணையாயிருந்து வாழ்வு தரமுடியுமென்று எண்ணியிருந்த நிலையில் சகோதரனும் மரித்து விட்டான். கைவிடப்பட்ட நிலையில் மரியாளுடைய கூற்று, "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" என்பது அவளது விரக்தி நிலையைக் காட்டுகிறது. லூக் 24:20,21-இல் சீடர்கள் இயேசுவின் மரணத்தினால் அடைந்த விரக்தி நிலையைக் காட்டுகிறது. "அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம்." இந்நிலையில் இயேசுவின் உயிர்த்தெழுதல் செய்தி சீடர்களின் விரக்தி நிலையில், வாழ்விழந்த நிலையில், வாழ்வு தருவதாக, மகிழ்வின் செய்தியாக அமைந்தது. இன்றும் மரணஓலத்தில் வாழும் மக்களுக்கு, வாழ்வின் விரக்தியில் எங்களுக்கு வாழ்வு இல்லையே என்று ஏங்குபவர்களுக்கு மரணத்தை வென்று உயிர்த்த ஆண்டவர் வாழ்வு தருபவராக உயிர்த்துள்ளார் என்பது அனுபவத்தில் மகிழ்வின் செய்தியாக அமைகிறது. "சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1கொரி 15:55).

### *2. நம்பிக்கையின்மையில் மகிழ்வின் நம்பிக்கை :*

(Hopelessness to Joy of Hope)

"ஐயா, தண்ணீர் கலங்கும் போது என்னைக் குளத்தில் இறக்கி விட ஆள் இல்லை. நான் போவதற்குமுன் வேறு ஒருவர் இறங்கி விடுகிறார்" (யோவா 5:7) என்ற பரிதாப நிலை தான் அநேகருடைய வாழ்வின் நிலை ஆகும். வியாதி, போராட்டம், கலக்கம் நிறைந்து மடிந்து போகின்ற நிலை தான் காணப்படுகிறது. முதலாம் பாடத்தில் இஸ்ரயேல் மக்களுடைய நம்பிக்கையற்ற சூழல் தெளிவாக உள்ளது. "எகிப்தில் சவக்குழிகள் இல்லையென்றா எங்களைப் பாலை நிலத்தில் சாவதற்கு இழுத்து வந்தீர்?" (விப 14:11). "பாலை நிலத்தில் செத்தொழிவதை விட, எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்?" (விப 14:12) என்னும் கூற்றுகள் அவர்தம் விரக்தியையும் வாழ்வில் நம்பிக்கையற்ற தன்மையையும் காட்டுகிறது. அங்கேயும் கடவுளுடைய செயல்பாடு, கடலைப் பிளந்து, எகிப்தின் சேனையிடமிருந்து மக்களைக் காத்த நிலை இஸ்ரயேலருக்கு ஓர் உயிர்ப்பின் வாழ்வாக, நம்பிக்கையின்மையிலே ஒரு மகிழ்வின் நம்பிக்கையாக அமைந்தது. உயிர்ப்பின் விழா ஆண்டவர் உயிர்த்தார்; அவர் ஆற்றல் இன்றும் நம்பிக்கையிழந்தோருக்கு மகிழ்வின் நம்பிக்கையாக உள்ளது என நிரூபிக்கிறது.

### *3. பயத்திலிருந்து மீட்பின் மகிழ்வு* (Fear to Bliss of Salvation) :

பார்வோன் சேனை வலிமையுடன் காணப்பட்டது. இஸ்ரயேலர் பயந்தனர். இனி வாழ்வு இல்லை எனக் கருதினர். மோசே அவர்களிடம் "அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள்! இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள்" (விப 14:13) என்று கூறுகிறார். கடவுளின் ஆற்றலுக்கு முன்பு மன்னனோ, அவனது படையோ ஆற்றலிழந்து விடுகின்றனர். சிலுவையில் இயேசு மரித்தபோது பேரரசனும் அவனது சகாக்களும் தங்கள் ஆற்றல் பெரிது, தாம் வென்று விட்டோம், தங்களை எதிர்த்த இயேசு ஆற்றலிழந்து விட்டார் என எண்ணினர். ஆனால் சிலுவை ஆற்றலிழந்தவரின் ஆற்றலாய் (Power of the Powerless) இயேசுவின் உயிர்த்தெழுதலின் மையமாய் மாறினது. சிலுவையில் அறையும் போது இயேசுவைப் பல்வேறு நிலைகளில் பரிகசித்தனர். ஆனால் உயிர்த்தெழுதல் அதிகாரங்களைப் பரிகசித்தது. (Resurrection is in a way mockery of the power) எனலாம். உயிர்ப்பு மக்களுக்கு அதிகாரங்களைக் குறித்த பயத்திலிருந்து விடுதலையையும் மகிழ்வையும் தரும் அதேவேளையில் அதிகாரங்களுக்கு அதிர்வையும் பயத்தையும் கொடுக்கிறது. மத் 28:8-இல் "அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெரு மகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" என்று சொல்லப்படுகிறது. புனித பவுல் கொலோசையருக்குக் கூறும் போது, "கிறிஸ்துவே அனைவருக்குள்ளும் அனைத்துமாயிருப்பார்" என்று உயிர்த்த ஆண்டவரின் ஆளுகையைக் குறிப்பிடுகிறார்.

ஆக, உயிர்ப்பின் விழா மீட்பினை வாழ்வில் பல்வேறு கோணங்களில் உணர்ந்து கொண்டாடும் மகிழ்வின் விழா ஆகும். மரணம் சூழ்ந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்தும், நம்பிக்கையற்ற சூழலில் இருந்தும், பயத்திலிருந்தும் உங்களை மீட்டு மகிழ்வின் வாழ்வை, உயிர்ப்பின் விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவர் அருள்வாராக. "அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார், அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்."

அருள்திரு. முனைவர் D. **சாம் கிறிஸ்டோபர்**

# உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு

## ENCOUNTER WITH THE RISEN LORD

தொநூ 32:22-32 திப 9:1-18

திபா 40 யோவா 20:24-29

**"...நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!"** (யோவா 20:28) .

ஆண்டவர் இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த நிகழ்வு உலகிற்கு மகிழ்வையும் அமைதியையும் வழங்கியது. உயிர்ப்பு நிகழ்வு மானுடத்திற்கு உவந்தளித்த இத்தகைய நல்லாசிகளை ஆண்டவரின் சீடர்களால் உடனடியாக அனுபவமாக்க இயலவில்லை. அச்சம், கலக்கம், ஐயம் போன்ற உணர்வுகளுடன் அவர்கள் போராடிக் கொண்டிருந்தனர். ஆணடவரின் அளவற்ற அன்பினால் நிகழ்ந்த சந்திப்புகள் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருந்த எதிர்மறை உணர்வுகளை அகற்ற துணை நின்றன. உயிர்த்த ஆண்டவரின் சந்திப்பினால் தோமாவின் வாழ்வில் ஏற்பட்ட நல்ல திருப்பங்களை இன்று தியானம் செய்யலாம்.

### *1. உள்ளத்தில் உறுதி வழங்கிய சந்திப்பு* :

"....ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்...." (யோவா 20:27)

உயிர்த்த ஆண்டவர் சீடர்களுக்கு வழங்கிய முதல் திருக்காட்சியின் போது தோமா அங்கு இல்லை. அந்த மகிழ்வான செய்தியைச் சீடர்கள் பகிர்ந்துகொண்ட போது தோமா ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஆண்டவரின் உடலில் உண்டான காயங்களைத் தொட்டுப் பார்த்தால்தான் தன்னால் நம்ப முடியும் என்று கூறிவிட்டார். அவரது பதிலில் இணைந்திருக்கின்ற ஐயம் பல காரணங்களை உள்ளடக்கியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

நமது வாழ்விலோ அல்லது நமது அன்புக்குரியோர் வாழ்விலோ தாங்கொணா வேதனைகள் சூழ்கின்றபோது மனக் குழப்பமும் அதிர்ச்சியும் ஏற்படுகின்றன. இதன் விளைவாக உள்ளத்தில் கேள்விகளும் ஐயங்களும் எழுகின்றன. ஆண்டவர் இயேசு மானுட வாழ்வின் நிறைவில் எதிர்கொண்ட துன்பங்களும், அவரது கொடூரமான மரணமும் தோமாவின் உள்ளத்தை அதிகமாய் வேதனைப்படுத்தியிருக்கும். அவரது எண்ணங்கள் இயேசுவின் காயங்களில் குவியமாகி இருந்ததாலேயே அவரது வாயிலிருந்து இத்தகைய வார்த்தைகள் புறப்பட்டிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. உண்மையை அறிந்து கொள்ள இருந்த ஆவலும் தோமாவின் ஐயத்திற்கு ஒரு காரணமாக இருந்தது. அத்தோடு கூட, நான் இல்லாத நேரத்தில் ஆண்டவர் காட்சி வழங்க காரணம் என்ன? என்னிடம்

ஆண்டவருக்கு அன்பு இல்லையா? என்பன போன்ற ஐயம் கலந்த கேள்விகளும் வருத்தங்களும் தோமாவின் உள்ளத்தில் நிறைந்து நின்ற போது, “அம்மா ஊட்டினால் தான் சாப்பிடுவேன்” என்று அழும் குழந்தையைப் போன்று “இயேசுவைப் பார்த்தால் தான் நம்புவேன்,” என்று ஆண்டவரின் திருக்காட்சிக்காக ஏங்கி நின்றார். “உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்....” (திபா 34:18) என்பதும், “உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்துகின்றார்...” (திபா 147:3) என்பதும் ஆண்டவரின் கரிசனையைப் பறைசாற்றும் திருப்பாடல் வரிகளாகும். உள்ளத்தில் எழுந்த கேள்விகளும், ஐயங்களும், நம்பிக்கைத் தடுமாற்றமும் தோமாவின் உள்ளத்தை உடையச் செய்தன. உள்ளத்தின் உணர்வுகளை உய்த்துணர்கின்ற உயிர்த்த ஆண்டவர் அவரைக் கனிவுடன் நோக்கினார். தோமாவின் உளக் காயங்களை ஆற்றி, நம்பிக்கை வழங்க உயிர்த்த ஆண்டவர் இயேசு திருக்காட்சி வழங்கினார். தமது காயங்களைக் காண்பித்து அவற்றைத் தொட்டுப் பார்க்கக் கூறினார். “....ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்....” என்று கூறி உள்ளத்தில் உறுதி வழங்கினார். ஆண்டவரின் அருளும், அவரது அருள்மொழிகளும் கலங்கிப்போயிருந்த தோமாவின் உள்ளத்திற்கு அருமருந்தாயின. அவரது எதிர்பார்ப்பும், ஏக்கமும் நிறைவேறின. காயங்களில் வெளிப்பட்ட ஆண்டவரின் பேரன்பும், பேரருளும் தோமாவின் உள்ளத்தை நிறைத்தன. உடைந்த உள்ளம் ஒன்று சேர்ந்தது. ஐயம் நீங்கி நம்பிக்கை பிறந்தது.

நான்சி ஈஸ்லான்ட் என்ற இறையியலாளர் உயிர்த்த ஆண்டவர் காயங்களுடன் சீடர்களுக்கு அருளிய காட்சியை (லூக்கா 24:36-39) அடிப்படையாகக் கொண்டு புதிய இறையியல் உருவகத்தை (Theological Metaphor) அறிமுகம் செய்தார். மாற்றுத்திறனுடையோர் பார்வையில் உயிர்த்த ஆண்டவரின் காயங்களை அணுகிய நான்சி, ஆண்டவரை, “மாற்றுத்திறனுடைய கடவுள்” (‘Disabled God’) என்று குறிப்பிட்டார். கடவுளுக்கு வழங்கப்பெற்ற இந்தப் பெயர் மாற்றுத்திறனுடையோருக்கு புதிய நம்பிக்கையை வழங்கியது. “நாங்கள் இறைச்சாயல் பெறாதவர்களா?”, “நாங்கள் சாபத்திற்குரியவர்களா?” என்பன போன்ற ஐயம் நிறைந்த கேள்விகளுக்கு நம்பிக்கையின் விடைகளை இந்த இறையியல் வழங்குகின்றது. ஆண்டவர் சிலுவையில் ஏற்ற ஆழமான காயங்களை உயிர்த்த உடலிலும் தாங்கி நின்றது, “மாற்றுத்திறனுடையோரும் இறைச்சாயல் பெற்றவர்கள்” என்பதையும், “அவர்கள் சாபத்திற்குரியவர்கள் அல்லர்” என்பதையும், உறுதிப்படுத்துகின்றது. எனவே, தோமாவைப் போன்று இன்றும் பல கேள்விகளுடன் நம்பிக்கையிழந்து இருப்போர், இந்த இறையியல் புரிதல் வழியாக வாழ்வை எதிர்கொள்ளும் நம்பிக்கையையும், உறுதியையும் பெறுகின்றனர்.

யாக்கோபு கானான் நாட்டை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தபோது, தன் சகோதரன் ஏசாவை நினைத்து உள்ளம் கலங்கினார். ஏசா தன்னை ஏற்றுக்கொள்வாரா? அல்லது என்னையும் என் குடும்பத்தினரையும் தாக்குவாரா? என்பன போன்ற கேள்விகள் அவர் உள்ளத்தில் எழுந்தன. இந்த இக்கட்டான நேரத்தில் கடவுள் யாக்கோபைச் சந்தித்தார் (தொநூ 32:22-32). அப்போது அவருக்குப் புதிய பெயர் சூட்டி நல்லாசி வழங்கினார். சகோதரன் ஏசாவைச் சந்திக்கவும், அவருடன் ஒப்புரவாகி புது வாழ்வைத் தொடரவும் செய்தார். இன்றும், உயிர்த்த ஆண்டவரின் சந்திப்பு உள்ளத்தாலும், உடலாலும் உடைந்திருப்போருக்கு நம்பிக்கையையும், உறுதியையும் வழங்குகின்றது.

## *2. உண்மையை உணரச் செய்த சந்திப்பு* :

"…. நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவா 20:28).

உயிர்த்த ஆண்டவரின் காட்சியும், அவர் மொழிந்த திருவார்த்தைகளும் தோமாவின் வாழ்வில் சிறந்ததோர் திருப்பத்தை ஏற்படுத்தின. தோமா, உயிர்த்த ஆண்டவரின் காயங்களைத் தொட்டுப் பார்த்ததாகச் செய்திகள் இல்லாவிட்டாலும், இந்த உயர்ந்த சந்திப்பு வழியாக ஆண்டவர் தோமாவின் உள்ளத்தை ஆழமாகத் தொட்டுவிட்டார் என்பதை அறிய முடிகிறது. இதனாலேய, உன்னதமானதோர் உண்மையை உணர்ந்து கொள்ளவும் அதை உலகிற்கு எடுத்துரைக்கவும் முடிந்தது. ஆண்டவரின் காயங்களைப் பார்த்து இன்ப அதிர்ச்சி அடைந்த தோமா இறையியல் பேருண்மை ஒன்றை உலகிற்கு எடுத்துக்கூறினார். "…. நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்று பரவசத்துடன் தன் பற்றுறுதியை அறிக்கை செய்து இயேசுவை ஆண்டவராகவும், கடவுளாகவும் சுட்டிக் காட்டினார். முதல் உடன்படிக்கை நூலில் (பழைய ஏற்பாட்டு நூலில்) கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பெற்ற எபிரேயச் சொற்களுக்கு இணையான கிரேக்கச் சொற்கள் இங்குப் பயன்படுத்தப்பெற்றுள்ளன. இதன் வழியாக, இயேசு முழுமையான மனிதத்தன்மையையும், முழுமையான இறைத்தன்மையையும் உள்ளடக்கியவர் என்ற இறையியல் சிந்தனையும் உலகிற்கு உரைக்கப்படுகின்றது.

இயேசுவின் மானுட வாழ்வின் போது அவரை ஆண்டவர் என்று சில இடங்களில் அழைத்தாலும் இயேசுவை ஆண்டவராகவும், கடவுளாகவும் இணைத்து அறிக்கை செய்தவர் என்ற சிறப்பை தோமா பெற்றுக் கொண்டார். இதுவே பின்னர் திருச்சபையின் முதன்மையான பற்றுறுதி அறிக்கையாக மாறியது. பேரரசர் வணக்கம் நடைமுறைக்கு வந்த போதும், கிறிஸ்தவர்கள் பற்றுறுதியில் நிலைத்திருந்து இறைவழிபாட்டில் உறுதியாக நிலைநிற்க இந்த அறிக்கை துணைநின்றது. கி.பி.81-96 காலக்கட்டத்தில் உரோமைப்பேரரசராக இருந்த தொமீசியன், மக்கள்

தன்னை “ஆண்டவர்” என்றும் “கடவுள்” என்றும் அழைக்கவேண்டுமெனக் கட்டளை பிறப்பித்திருந்தார். ஆனாலும், கிறிஸ்தவர்கள் பேரரசரின் ஆணைக்கு இணங்கவில்லை. இவ்வாறு, இன்னல் வந்தாலும் இறைப்பற்றில் உறுதியாக இருக்க தோமாவின் அறிக்கை ஊக்கம் வழங்கியது.

தோமா இறையருளால் உணர்ந்து கொண்ட உண்மை, பற்றுறுதியறிக்கையோடு நின்றுவிடவில்லை. அது அர்ப்பண அறிக்கையாகவும் வெளிப்பட்டது. நம்பிக்கையின் உச்சக்கட்ட நிலை, கடவுளிடம் முழுமையாகச் சரணடைவது ஆகும். உயிர்த்த ஆண்டவரின் சந்திப்பை அனுபவமாக்கிய தோமா, “....நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!” என்று கூறி கிறிஸ்துவிடம் தம் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தார். உண்மையும் உயிரோட்டமுமான நம்பிக்கை இருந்தால், கடவுளிடம் சரணடையும் சிந்தை நம்மிலும் உருவாகும்.

உயிர்த்த ஆண்டவர் திருப்பாதத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தோமா, அருட்பணியாற்றவும் தன் வாழ்வை அர்ப்பணம் செய்தார். இயேசுவின் இறைத்தன்மையைப் பறைசாற்றவும், அவரது போதனைகளைப் போதிக்கவும் நம் இந்தியத் திருநாட்டிற்கு கி.பி. 52-இல் வருகை தந்தார். இந்தியாவின் வடபகுதியிலும், மலபாரிலும், மைலாப்பூரிலும் அருட்பணியாற்றி கி.பி.72-இல் கிறிஸ்துவுக்காகத் தன் வாழ்வை உயிர்த்தியாகம் செய்தார். ஆண்டவரின் சீடர்களில் அதிக தூரம் சென்று நற்செய்திப் பணி புரிந்தவர் என்ற பெருமையும் தோமாவிற்கு உண்டு.

சவுல் சீறியெழுந்து சீடர்களைத் துன்புறுத்த விரைந்து சென்ற போது, உயிர்த்த ஆண்டவர் சவுலைச் சந்தித்தார் (திப 9:1-18). மக்களைத் துன்புறுத்துவது தம்மைத் துன்புறுத்துவதற்கு இணையானது என்ற உண்மையை சவுலுக்கு ஆண்டவர் உணர்த்தினார். இதன் வழியாக, யூதச் சமய நீதிச் சட்டங்கள் சார்ந்தும், பற்றுறுதி குறித்தும் தனக்கிருந்த தவறான புரிதல்களை சவுல் உணர்ந்து கொண்டார். சேவை என்று நினைத்து தீமைகளை நிறைவேற்றியது தவறானது என்பதையும் புரிந்து கொண்டார். ஆண்டவரின் அருள் வார்த்தைகளால் உணர்வடைந்த சவுல், ஆண்டவரின் திருவுளத்திற்குத் தன் வாழ்வை அர்ப்பணம் செய்தார். உயிர்த்த ஆண்டவரின் சந்திப்பு சவுலின் வாழ்வைப் புத்தாக்கம் செய்தது. நல்ல அருட்பணியாளராய் அவரை உருவாக்கம் செய்தது.

உயிர்த்த ஆண்டவரின் சந்திப்பு அச்சத்துடனும், ஐயங்களுடனும், கேள்விகளுடனும் வாழ்வோருக்கு நம்பிக்கையையும், உறுதியையும் வழங்குகின்றது. பற்றுறுதி வாழ்வில் உண்மையான புரிதல்களைப் பெறவும், பற்றுறுதியின் உச்சக்கட்டமாய் முழுமையாக நம்மை அர்ப்பணம் செய்யவும் நமக்குத் துணை செய்கின்றது.

அருள்திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

18-04-2021

உயிர்ப்புக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு

# உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல்

**IDENTIFYING THE RESEN LORD IN THE WORK PLACE**

ரூத் 2:1-18
திபா 15
திப 9:36-43
யோவா 21:1-14

**"நீ செய்துள்ள அனைத்திற்கும் உனக்குத் தகுந்த பலனளிப்பார்"** (ரூத் 2:12)

அன்னை தெரசா அவர்கள் தம் காப்பகத்தில் நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளைச் செய்து கொடுக்கும் போது, ஒரு நோயாளி அன்னை தெரசாவின் நிழற்படத்துக்கு (photo) முன் நின்று கொண்டு, கைகளைக் கூப்பி வணங்கிக் கொண்டிருந்தார். இதனைக் கவனித்த தெரசா அவர்கள், அந்த நோயாளியிடம் வந்து என்னப்பா செய்கிறாய்...? "நான் என் தெய்வத்தை வணங்கிக் கொண்டிருக்கிறேன். என்னப்பா சொல்கிறாய், நான் வணக்கத்துக்குரியவள் அல்ல, நீ வணங்க விரும்பினால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை வணங்கு." அதற்கு அவன் "எனக்கு அந்தக் கடவுள் எப்படிப்பட்டவர் என்று தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். அவர் உங்களைப் போல் தான் இருப்பார்" என்று சொல்லி விட்டு நடக்க ஆரம்பித்தான். நாம் வாழும் இடத்தில், நாம் பணி செய்யும் இடத்தில் நம் ஆண்டவரை நம் செயல் மூலம் அறிமுகம் செய்ய வேண்டும், அடையாளம் காட்ட வேண்டும். ஆனால் நாம் வாழும் இடத்தில் யாருடைய அடையாளத்தை நினைப்பூட்டுகிறோம்.

ரூத்து தன் மாமியிடம் தனக்கு உதவின ஒருவரைப் பற்றிச் சொன்ன பொழுது, அவர் யாரென்று தெரியாத நகோமி, அந்த நபரைப் பற்றிச் சொல்கின்ற சாட்சியான வார்த்தையைத்தான் ரூத் 2:19 இல் பார்க்கிறோம். போவாசு தாம் வாழ்ந்த இடத்திலும், பணி செய்த இடத்திலும் இறைவனை அடையாளம் காட்டினார். ஆனால், இயேசுவின் சீடர்கள் மூன்றரை ஆண்டுகள் இயேசு கிறிஸ்துவோடு இருந்த பின்னும், எந்தத் தாக்கமும் இல்லாமல், "மீன் பிடிக்கப் போகிறேன்" (யோவா 21:3) என்பது எவ்வளவு தவறான அடையாளம். இன்றைய திருச்சபைகள் மனம் திரும்பாத மக்களால் நிரம்பி வழிவதால் கிறிஸ்துவின் அடையாளத்தை இழந்து, அரசியலின் கூடாரமாய்க் காட்சி அளிக்கிறது. அந்தியோக்கியாவில் வாழ்ந்த இறைமக்களைப் பார்த்து, பிறமக்கள் அவர்கள் பணியால் வாழ்வில் கிறிஸ்து தெரிகிறார் என்பதை உணர்ந்து அவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் (திப 11:26) என்று முதன்முதலாகப் பெயர்

சூட்டினார்கள். இன்று வாழும், பணி செய்யும் இடத்தில் உன் பெயர் என்ன? உன் அடையாளம் என்ன? நாமும் நம் பணியிடத்தில் போவசைப் போல் செயல்பட வேண்டும்.

### *1. வாழ்த்தும் போவாசு* : (ரூத் 2:4)

நம்முடைய வயல்களில் அறுவடைக் காலத்தில் நெற்கதிர் பொறுக்கிறவர்களை சிலர் விரட்டுவார்கள். சிலர் திட்டுவார்கள். ஆனால் தன் வயலில் யாரென்று தெரியாத ரூத்தை வாழ்த்திப் பேசுகிறார். யாரென்று பின்னால் தான் போவாசுக்குத் தெரியும் (2:11) நம்முடைய சாட்சிக்கு ஓர் அடையாளம் நம்முடைய வார்த்தைகள். எனவே நாம் வார்த்தைகளைக் கவனமாய் வெளிப்படுத்த வேண்டும். இந்த உலகில் மிக இனிமையானதும் மிகக் கசப்பானதும் நம்முடைய நாவு தான். "நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா" (1குறி 25:17) என்று வார்த்தையைத் தவறவிட்ட அமத்சியா ராஜா, சான்றை இழந்தார். நம்முடைய பேச்சு எப்பொழுதும் இனிமையானதாகவும், சுவையுடையதாகவும் இருக்க வேண்டும் (கொலோ 4:6 வார்த்தைகள் வழியாய் நாம் அடையாளப்படுத்தப் படுகிறோம். இதனால் தான் மிகுந்த எதிர்பார்ப்போடு ஆலயம் வந்த Dr. அம்பேத்கர். ஆலயத்தை விட்டு வெளியேறி புத்த மதத்துக்குச் சென்றார். ஏன் அவர் நம்மை ஏற்றுக் கொள்ளவில்லை? கிறிஸ்தவர்கள் வார்த்தையில் வாழ்கிறார்கள்; வாழ்க்கையில் அல்ல என்று கூறி விட்டுச் சென்றார். டால்ஸ்டாய் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது பிச்சைக்காரர் ஒருவர் 'அமர்ந்த நிலையில் பிச்சை கேட்கிறார்.' தன்னிடம் எதுவும் இல்லாததினால் 'சகோதரா, என்னிடம் தருவதற்கு ஒன்றும் இல்லை' என்று சொன்னதும் டாலர் டாலராய் போட்ட மனிதனுக்கெல்லாம் நன்றி செலுத்தாத பிச்சைக்காரர், உடனே எழுந்து கைகளைக் கூப்பி டால்ஸ்டாயை வணங்கி நன்றி சொல்லுகிறார். காரணம், அடையாளமான வார்த்தை. டால்ஸ்டாயின் வார்த்தையில் அந்த இறைவனையே பார்க்கிறேன் என்றார். இங்கு போவாசும் வார்த்தையால் இறைவனைக் காட்டியவர். எனவே நாமும் வார்த்தைகளில் கவனமாய் இருப்போம். கசப்பான வார்த்தை வெறுப்பை வளர்க்கும். கடுமையான வார்த்தை உறவை முறிக்கும். வீசப்படும் கல்லிலும் பேசப்படும் சொல்லிலும் கவனமாக இருப்போம். கல் ஊரைக் கொல்லும். சொல் உரையாடிக் கொல்லும்.

### *2. மனிதநேயத்தைக் காட்டும் போவாசு* : (ரூத் 2:8)

வறுமையினாலும், பசியினாலும் கதிர் பொறுக்க வந்த இளம் பெண்ணாகிய ரூத்துவை மனிதநேயத்தோடு நடத்தினார் போவாசு. நீ வேறு எங்கும் செல்ல வேண்டாம். இங்கேயிரு என மனிதநேயத்தை வெளிப்படுத்தி ஆண்டவரின் அடையாளத்தை வெளிப்படுத்தினார். ஐநாவின் ஒரு சிறப்புக் கூடுகையில் மனிதர்களிடமிருந்து மனிதனைக்

காக்கும் கருவி எது? என்று வினவிய பொழுது, அதற்கு நிறைவாகத் தரப்பட்ட பதில் "மனிதநேயம்." இதனை நாம் வாழும் மற்றும் பணி செய்யும் இடத்தில் போவாசைப் போல் வெளிக் காட்ட வேண்டும். ஆனால் 'பத்திரங்கள் பீரோவில் பத்திரமாய்ப் பூட்டி வைத்திருப்பது போல, மனிதநேயத்தையும் பத்திரமாய்ப் பூட்டி வைத்திருக்கிறோம்.' சக மனிதனை கூட நேசிக்க முடியாத நிலையில் இன்று நாம் இருக்கிறோம். ஆற்றுப் பாலத்தில் ரயில் கவிழ்ந்து கிடக்க, குற்றுயிரும் குலையுயிருமாகத் துடிக்கும் பயணிகளின் நகைகளைப் பிடுங்கி, அவர்களை ஆற்றுக்குள் உதைத்துத் தள்ளும் மனிதர்கள் வாழ்ந்தது நம் பூமியில் தான். நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு, இயற்கைப் பேரிடர்கள் தாக்கும் போது அங்கே புகுந்து கொள்ளையடிக்கும் மனிதப் பதர்கள் யார்? நம்முடன் வாழ்பவர்கள் தானே. இன்று அன்பின் ஊற்றுக்கண் அடைக்கப்பட்டு விட்டன. மனிதநேயத்தின மனக்கண்கள் சல்லடைத் துளைகளாகத் துளைக்கப்பட்டு விட்டன. நம் முன்னோர்களின் அடையாளங்களான 'திண்ணை', 'சுமைதாங்கிச் சத்திரம்' போன்ற மனிதநேய அடையாளங்கள் சுயநலத்தால் சுருங்கிப் போயின. ஒரு மைதானத்தில் மனநலம் பாதிக்கப்பட்டோரின் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. எல்லாரும் கோட்டை நோக்கி ஓடினார்கள். நெருங்கும் சமயத்தில், தம் கூட வந்த பையன் வீழ்ந்து விட, வேகமாய் வந்தவர்கள் நின்று, பின்னால் வந்து, வீழ்ந்தவனைத் தூக்கிக் கொண்டு எல்கையை அடைகிறார்கள். இங்கு யார் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்? தன்னோடு வருபவன் வெற்றி பெற வேணடும் என நினைத்த இவர்களா மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்? பொறாமையையும், வஞ்சனையையும் விட்டுவிடுவோம். தொற்கா (திப 9:38) பிறர் மீது கொண்ட மனிதநேயம் எத்தனை பெரிய அடையாளம். நாமும் அடையாளமாவோம்.

### 3. அன்பு செய்யும் போவாசு : (ரூத் 2:14,16)

போவாசு மிக பெரிய அன்பை எடுத்துக் காட்டுகிறார். (1) உணவை கொடுக்கிறார், (2) சேர்த்துக் கொள்கிறார் (2:14), (3) அவர்களை விட்டுவிடச் சொல்கிறார் (2:16) தனக்காக மட்டும் வாழாமல், பிறரையும் வாழ வைக்கிறார். தொற்கா, நல்ல சமாரியன் இவர்கள் அன்பிற்கு அடையாளமானவர்கள். அன்பு வெளிப்படுத்தப்படும்போது ஆண்டவர் வெளிப்படுவார். ஆனால் இன்று அன்பும் வற்றிப் போனது. ஆம்ஸ்ட்ராங்கிடம் சந்திர மண்டலத்தில் கால் பதித்தபோது நீங்கள் என்ன நினைதீர்கள் என்று கேட்டபோது, "பூமியில் இருந்து லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சந்திர மண்டலத்தில் இடம் பிடித்த மனிதனால் பக்கத்து வீட்டில் உள்ள மனிதர்கள் மனதில் இடம் பிடிக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டேன்" என்றார். இன்று பொருள்களைச் நேசிக்கிற அளவுக்குக் கூட சக மனிதர்களை

நேசிக்கவில்லை. 1961-1989 காலக்கட்டத்தில் கிழக்கு ஜெர்மனிக்கும்- மேற்கு ஜெர்மனிக்கும் பிரிவினை இருந்து வந்தது. அப்பொழுது கிழக்கு ஜெர்மனி மக்கள் தங்கள் கோபத்தைக் குப்பைகளாகச் சேகரித்து சுவரைத் தாண்டி மேற்கு ஜெர்மனிக்குள் போட்டனர். மேற்கு ஜெர்மனி மக்கள் மிகவும் யோசித்து, அன்பின் அடையாளமாய்ப் பழங்களைச் சேகரித்து, ஒரு குறிப்பை எழுதி, கிழக்கு ஜெர்மனி பக்கம் போட்டனர். கிழக்குப் பக்க மக்கள் அதைப் பார்க்கிறார்கள். அதில் "நீங்கள் தந்தவற்றிக்கு நன்றி. எங்களிடம் இருப்பவற்றைத் தான் உங்களுக்குத் தர முடிந்தது" என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு கண் கலங்கினார்கள். மாற்றம் பெற்றார்கள். அன்பு கடவுளின் அடையாளம். போவாசு தம் பணிக்காலத்தில் அன்பை வெளிக்காட்டினார். நாமும் பிறரிடத்தில் நம் அன்பை வெளிக்காட்ட வேண்டும்.

காகங்களில் ஏதேனும் ஒரு காகம் அடிபட்டுக் கீழே விழுந்தால் மற்ற காகங்கள் காப்பாற்றாமல், கொத்தியே கொன்று விடும். இன்றைய இறைமக்கள் பலரும் இப்படித்தான் இருக்கிறார்கள். சீனாவின் உற்பத்தியில் 28% ஏற்றுமதியாகிறது. இந்தியாவில் 2.5% மட்டுமே உற்பத்தியில் ஏற்றுமதியாகிறது. சீனாவைப் போல் நம்மிடம் எந்த வளம் இல்லை? ஆனால் உற்பத்தியில் ஏன் வேறுபாடு? காரணம், பணிப்பண்பாடு. சீனர்கள் பணி செய்யும் போது அவர்களைக் கண்காணிக்க வேண்டியது இல்லை. ஆனால் நம்மைக் கண்காணிக்க மேற்பார்வையாளர்கள். அதற்கு மேல் CCTV கேமரா. ஆனாலும் பணியில் உண்மை இல்லை. சீனர்கள் தங்களுக்குத் தங்களையே எஜமானராய் நினைத்து, பொறுப்பாய்ச் செயல்படுகிறார்கள். நாம் எப்படிச் செயல்படுகிறோம்? போவாசு கற்றுத்தந்த வாழ்க்கை முறையையும் தொற்காவின் வாழ்க்கை முறையையும் கைக்கொண்டு, நாம் வாழும் இடத்தில் கிறிஸ்துவை அடையாளமாக்குவோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

25-04-2021

உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

# உயிர்ப்பின் அனுபவப் பின்னணியத்தில் சமூக உருவாக்கம்

## COMMUNITY FORMATION AROUND RESURRECTION EXPERIENCE

எசா 25:1-9 திப 4:32-37

திபா 126 லூக் 24:13-35

**"... வழியிலே அவர் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?"** (லூக். 24:32).

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளின் மாலைப்பொழுதில் இரண்டு சீடர்கள் எருசலேமிலிருந்து எம்மாவு என்னும் சிற்றூருக்குச் சென்று கொண்டிருந்தனர். எம்மாவு எருசலேமிலிருந்து 7 மைல் தூரத்தில் இருக்கிறது. அந்நாளில் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் பேசிக் கொண்டே சென்றனர். அப்பொழுது உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவர்களுடன் நடந்து போனார். அவர்களோ அவரை இன்னார் என்று அறியவில்லை. இயேசு அவர்களைப் பார்த்து "நீங்கள் துக்கத்துடனே வழியில் பேசிக் கொள்வது என்ன?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள் "நசரேயனாகிய இயேசுவைப் பற்றியவையே. அவர் ஆற்றல்மிக்க இறைவாக்கினர்." அவரை, தலைமைக் குருக்களும் அதிகாரிகளும் மரணத்தீர்ப்புக்கு ஆளாக்கிச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். நாங்களோ அவர் இஸ்ரயேல் மக்களை மீட்டு விடுவிப்பார் என்று நம்பியிருந்தோம் என்றனர். இயேசு கிறிஸ்து மோசே முதல் இறைவாக்கினர் அனைவரும் தம்மைக் குறித்து எழுதியுள்ளவற்றை விளக்கிக் கூறினார். ஆனால் இந்தச் சீடர்களோ மந்த இருதயமுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இந்த உயிர்ப்பின் அனுபவம் எப்படிப்பட்ட சமூக உருவாக்கத்தை ஏற்படுத்தினது என்பதைப் பார்ப்போம்.

### *1. உயிர்ப்பின் அனுபவம்: "இருந்திருந்தால்" என்பதிலிருந்து "ஆம்" என்ற நிலையை உருவாக்கியது* :

(Resurrection Experience: moving from "If to Yes")

லூக்கா 24:24 - ஆனால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை

லூக்கா 24:31 - அப்பொழுது அவர்கள் கண்கள் திறந்தன, அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள்.

இரண்டு பாதைகள் நமக்கு முன் உள்ளன.

(1) வாழ்க்கையில் ஏமாற்றங்களை முன்னிறுத்தி வாழ்க்கையை முடக்கிப் போடுகிற பாதை.

(2) வாழ்க்கையில் இயேசுவை முன்னிறுத்தி முன்னோக்கிச் செல்கிற பாதை.

எம்மாவு நோக்கிப் பயணித்த சீடர்களின் அணுமுறை, கடந்தகால ஏமாற்றங்கள், உண்மைக்கு மாறான கருத்துகள் நிகழ்வுகள் என வாழ்க்கையை முடக்கிப் போடுகிற பயணமாயிருந்தது. உயிர்த்தெழுந்த ஆண்டவர், இவைகளைத் தவிடுபொடியாக்கி, "இருந்திருந்தால் என்பதிலிருந்து ஆம்" இயேசு உயிரோடு இருக்கிறார், அவர் என்னை நேசிக்கிறார் என்ற உண்மையை நோக்கிப் பயணிக்க அழைக்கிறார். இயேசுவை முன்னிறுத்தி முன்னோக்கிப் பயணிக்க அழைக்கிறார். பெத்தானியாவிலே மார்த்தா, மரியா, இலாசர் இயேசுவுக்கு அன்பான குடும்பம். அந்தக் குடும்பத்தில் இலாசர் இறந்து போக "மார்த்தா இயேசுவை நோக்கி நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் இறந்திருக்க மாட்டான் என்றார்" (யோவா 11:21), மரியாவும் "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால், என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" (யோவா 11:32) என்கிறார். இவர்களுடைய கண்ணீர், ஏக்கங்கள், எண்ணங்கள் என அனைத்தையும் தவிடுபொடியாக்கி, இலாசரை உயிர்பெறச் செய்தார். இந்த நிகழ்வில் இயேசு எங்களுடன் இருந்திருந்தால் இது நடந்திருக்காது என்று மக்கள் கருதினர். ஆனால் இயேசுவோ நான் உங்களுடன் இருக்கிறேன் என்கிறார். இந்த உயிர்த்த ஆண்டவர் நம்முடன் இருந்து செயல்பட விரும்புகிறார். இதற்கு நாம், நம் இதயத்தைத் திறக்க வேண்டும். அமைதியில் இறைவனின் குரலைக் கேட்க வேண்டும். உளமார இயேசுவிடம் மன்றாட வேண்டும்.

## *2. உயிர்ப்பின் அனுபவம்: அழிவிலிருந்து அழியாமையை நோக்கிய பயணம்*

(Resurrection Experience: moving from ruin to rebuild )

"அவருக்கு மரண தண்டனை விதித்து சிலுவையில் அறைந்தார்கள்" (லூக் 24:20).

தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞர்களும், சதுசேயரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பிடித்தோம், அடித்தோம், இரத்தத்தைச் சிந்தச் செய்தோம், கதையை முடித்தோம், கல்லறையில் அடைத்தோம் என்று எண்ண, "எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர். அவரது உடலைக் காணாது, வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடு இருக்கிறார் என்றும் சொன்னார்கள்" (லூக்கா 24:22). "மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை அகற்றி விடுவார், பிற இனத்தார் அனைவரின் துன்பத் திகிலை தூக்கி எறிவார், என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்து விடுவார்"

(எசா 25:7). இஸ்ரயேலர் பாபிலோனில் அடிமைப்பட்டு, நம்பிக்கை இழந்து விரக்தியோடு வாழ்ந்து கொண்டிருந்தனர். எசாயா இறைவாக்கினர் அவர்களைப் பார்த்து, அழிவிலிருந்து அழியாமைக்கு நேராக ஆண்டவர் இட்டுச் செல்வார் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்.

ஆண்டவரே தென் நாட்டின் வறண்ட ஓடையை
நீரோடையாக வான்மழை மாற்றுவது போல,
மாற்றச் செய்கிறவர் என்கிறார் திருப்பாடலாசிரியர் (திபா 126:4).

எம்மாவு அனுபவம் உயிர்த்த ஆண்டவரைக் கண்டுணர்ந்து கொண்டதை (லூக்கா 24:35), உலகிற்கு உணர்த்தி நிற்கிறது. இனி நாங்கள் அழிந்து போவோம், எங்களுக்கு ஆதரவு யார் உண்டு? என்று கலங்குவோருக்கு இந்த உயிர்ப்பின் அனுபவம் அழியாமையை நோக்கிய பயணமாகத் திகழ்கிறது.

### *3. உயிர்ப்பின் அனுபவம்: 'நான்' என்பதிலிருந்து 'நாம்' (எல்லோருக்கும்) என்பதை நோக்கிப் பயணப்பட அழைக்கிறது* :

(Resurrection Experience: moving from mine to everyone)

"எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயர் பறைசாற்றப்பட வேண்டும்" (லூக் 24:47).

எம்மாவு பயணத்திலே இரண்டு சீடர்களுடன் சென்றவரைப் பார்த்து அவர்கள், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, எங்களுடன் தங்கியிரும் என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அவரோ அப்பத்தை எடுத்து, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவரை இயேசு என்று அறிந்தார்கள். எம்மாவு சீடர்கள் தப்பிப் பிழைத்தால் போதும் என்று எண்ணியவர்கள், இந்த அனுபவத்திற்குப் பின்பு அவரை அறிவிக்க எருசலேமுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். உயிர்ப்பின் நற்செய்தியைப் பொதுவுடமையாக்கினார்கள். இந்த உயிர்த்த இயேசு கிறிஸ்து எங்களுக்கு மட்டும் உரியவர் என்ற நிலைமாறி அவர் எல்லோருக்கும் சொந்தமானவர் என்பதை வெளிப்படுத்தினர். "உயிர்த்த கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாயிருந்தனர். அவர்களில் எவரும் தமது உடமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது" (திப 4:32). உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்றவர்கள் உடமைகளைப் பொதுவுடமையாக்கினார்கள். இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார் (எசா 25:6). உணவு பொதுவுடமையாக்கப்படுகிறது.

சீயோனின் அடிமைநிலையை ஆண்டவர் மாற்றின போது, நாம் ஏதோ கனவு கண்டவர் போல இருந்தோம். அடிமை நிலையை மாற்றி எல்லோருக்கும் விடுதலை என்பதைப் பொதுவுடமையாக்கினார் (திபா 126:1). நாங்கள் தப்பித்தால் போதும் என்று கருதிக் கொண்டிருந்த சீடருக்கு இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் அனுபவம் அவரை எல்லாருக்கும் பறைசாற்றும் துணிச்சலைத் தந்தது.

German நாடு பிளவுபட்டிருந்த போது, Berlin நகரத்தை, கிழக்காகவும், மேற்காகவும் மதிலை உருவாக்கிப் பிரித்தனர். ஒரு நாள் கிழக்குப் பெர்லினைச் சார்ந்த சிலர், லாரிகளில் குப்பைக் கூளங்களைக் கொண்டு வந்து மதிலைத் தாண்டி, மேற்குப் பெர்லினில் கொட்டினர். பதிலுக்குப் பதில் செய்யாமல் மேற்குப் பெர்லின் மக்கள் லாரிகளில் உணவுப் பொருட்களைக் கொண்டு கிழக்குப் பெர்லினில் அடுக்கி வைத்து விட்டு "Each gives what he she has", "ஒவ்வொருவரும் தன்னிடம் என்ன இருக்கிறதோ அதைத்தான் கொடுப்பர்" என்ற வசனத்தை எழுதி வைத்து விட்டுச் சென்றனர். இதைக் கண்ட கிழக்குப் பெர்லின் மக்கள் நெகிழ்ந்து போனார்கள். அங்கு ஒற்றுமை நிலவியது.

உயிர்த்த ஆண்டவருடனான சந்திப்பு, நான், எனது என்பதிலிருந்து, ஆண்டவர் எல்லா மக்களினத்தாருக்கும் உரியவர் என்ற செய்தியை உணர்த்தி நிற்கிறது.

அருள்திரு. அறிவர் J. **ரசல் ஐசக்**

02-05-2021

உயிர்ப்புக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு

# கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உயிர்ப்பு

## BELIEVING IN CHRIST : RESURRECTION

2அர 4:27-37 திப 26:12-23
திபா 90 யோவா 11:17-28

**இயேசு அவரிடம் "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்றார்** (யோவா 11:23).

ஒருமுறை இங்கிலாந்து தேசத்தைப் பகைவர்கள் பயங்கரமாகத் தாக்கினர். இனி, எதிர்காலத் தலைமுறையே நாட்டில் இல்லாமல் போய்விடுமோ? எனப் பயந்த அரசர், சிறுவர் சிறுமிகளை ஒரு ரயில்வண்டியில் ஏற்றி பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்தார். ஒரு சிறுமி அண்ணனைப் பார்த்து நாம் எங்குச் செல்கிறோம்? பயமாக இருக்கிறது என அழுதாள். அண்ணன், "நாம் எங்குச் செல்கிறோம் என எனக்கும் தெரியாது; ஆனால் நம் அரசர் நல்லவர்; நம்மைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்புகிறார் என்று மட்டும் நான் நம்புகிறேன்" என்று சொன்னான்.

திருமறையின் வசனங்களில் நம்பிக்கை, நல்லெதிர்நோக்கு இரண்டும் தனித்தனியே சொல்லப்பட்டுள்ளன. சில பகுதிகளில் ஒரே அர்த்தத்தைக் கூறுவது போல் தோன்றினாலும் மூல மொழிகளில் இரண்டும் வேறுபட்ட அர்த்தங்களைத் தருகின்றன. நம்பிக்கை என்பது இறைவன் மனிதனுக்கு அருளும் மீட்பையும் அவர் அருளும் ஈவையும் நம்புவதாகும். நல்லெதிர்நோக்கு என்பது நன்மைகளை இறைவனிடம் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகும். வளமையான வாழ்விற்கும் நிறைவான மகிழ்ச்சிக்கும் நம்பிக்கையென்னும் நங்கூரம் அவசியமானது. இந்த நங்கூரத்தினால் வாழ்க்கையென்னும் கப்பல் நிலைநிறுத்தப்படவில்லையென்றால் அது, திசைதெரியாமல் அலைக்கழிக்கப்படுவது உறுதி. இதற்கு மாறாக, ஆழமான நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவார்கள். பழைய ஏற்பாட்டில் நம்பிக்கை என்னும் கருத்து கடவுள் மீதும், அவரது உண்மைத்தன்மையின் மீதும் வைக்கும் நம்பிக்கை என அறுதியிட்டுக் கூறலாம். அனுபவம் மிக்க ஆபிரகாம், எலிசா போன்ற பக்தர்களின் நம்பிக்கை இறைவனின் திருமுன்னிலையில் நிலைத்து நின்றது. இன்றைய நற்செய்திப் பகுதியில் இயேசுவுக்கு மிகவும் அன்பான நண்பராயிருந்த இலாசருவின் கல்லறையருகே நடந்த நிகழ்வு கூறப்படுகிறது. இந்நிகழ்வு, நமது இருளான வேளையில் நம் அருகில் வந்து நமது துக்க வேளையில்

நம்முடன் அமர இயேசு சித்தமாயுள்ளார் என்பதைக் காண்பிக்கிறது. இயேசு நம்முடைய கண்ணீரில் தம்மை இணைத்துக் கொள்கிறார். இயேசுவின் நற்செய்தியானது நம்மை இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும்படி நகர்த்துகிறது. கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையின் வெளிப்பாடு உயிர்ப்பை மையப்படுத்தியது என்பதைத் திருமறைப்பகுதிகளை மையமாகக் கொண்டு புரிந்து கொள்வோம்.

### *1. கிறிஸ்துவில் நம்பிக்கை-இக்கட்டில் மீட்கும்* :

"கடவுளின் அடியாரிடம் வந்து அவர் காலடிகளைப் பற்றிக்கொண்டார்" (2அர 4:27).

ஆழமான நம்பிக்கையுள்ளவர்களுடன் இறைவன் உடனிருந்து, எல்லா எதிர்ப்புகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கிறார். நம்பிக்கையற்ற மனிதர் தனிமையாகவே தன் பலத்தை மட்டும் நம்பி துன்பங்களை எதிர்கொள்கிறார். ஆனால் இறை நம்பிக்கையுள்ள மனிதரோ தனது பலத்தைவிட இறைவனுடைய பலம் (இறைபலம்) தன்னோடிருப்பதை உணர்ந்து துன்பங்களை எதிர்கொள்கிறார்.

சமாரியாவிலிருந்து கர்மேல் போகும் வழியில் சூனேம் ஊர் இருந்தது. அங்கு பெயர் சொல்லப்படாத செல்வந்தக் குடும்பத்தைச் சார்ந்த பணிவான, கண்ணியம் மிகுந்த, கனம் பொருந்திய - போன்ற சிறப்புகளைக் கொண்ட பெண், தங்கள் வீட்டில் எலியா தீர்க்கர் தங்க இடமும், உணவும் கொடுத்துப் பராமரித்தார். நம்பிக்கையற்ற வயதுமுதிர்ந்த காலத்தில் தீர்க்கரின் வாக்குப்படி குழந்தை பிறந்தது. அக்குழந்தை வாக்குத்தத்தத்தின் குமாரன்; ஜெபத்தின் குமாரன்; அன்பின் குமாரன். ஆனாலும் அக்குமாரனின் ஜீவன் பிரிந்து போகிறது. நல்ல குடும்பத்தில் இக்கட்டான சூழல்; பயங்கரமான வருத்தம்; மகன் மரித்துப்போன செய்தியோடு வருகிறார். கேகசி குழந்தை நலம்தானா? எனக் கேட்க, நலம்தான் எனப் பதில் கூறுகிறார். ஆண்டவர் நமக்கு அனுமதிக்கும் இக்கட்டை நன்மைக்கேதுவானது என நம்ப வேண்டும். இறப்பின் செய்தியை எவருக்கும் சொல்லாமல் இறைவாக்கினர் எலிசாவின் காலடிகளைப் பற்றிப்பிடித்தார். கேயாசி தடுத்தார். தீர்க்கரோ அவள் ஆத்துமா துக்கமாயிருந்ததை உணர்ந்து துக்கத்தை அவள் வாயின் வார்த்தைகளால் அறிய விரும்பினார். இப்பெண் தீர்க்கரை நம்பினாள். வாழ்வில் வீழ்ச்சியடைந்தவர்கள் உயிர்வாழ, உயர்ந்தவர் கால்களைப் பிடித்து உணவு, உறைவிடம் பெறுகின்றனர். செல்வந்தர் - மற்றவர்கள் கால்களைப் பிடிப்பது கடினமான அனுபவம். இங்கு தீர்க்கனுக்கு உணவு, உறைவிடம் கொடுத்த பெண் தீர்க்கர் கால்களைப் பிடித்து உதவி கேட்பது, உலகப்பார்வையில் பொருத்தமற்றது. இக்கட்டான சூழலில் சுகபோகமான

உச்சங்களை உதறி கடவுளிடம் நம்பிக்கைக் கொள்வது கடினமான அனுபவம். இக்கட்டான சூழலில் செல்வச் சீமாட்டி தன் காலைப் பிடித்து கெஞ்சுவதை பார்க்கிறார் தீர்க்கர். தன் வேலைக்காரனிடம் தடியைக் கொடுத்தனுப்பி மரித்த பிள்ளை உயிர்பெறச் செய்ய முயன்றார். எதுவும் நடக்கவில்லை, ஏமாற்றம். இக்கட்டில் இறை ஆற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கடவுளின் பாதத்தில் கெஞ்சாமல் தன் மனதில் தோன்றியதைச் செய்ய முனைகிறார் (வச. 29). பயங்கரமான தோல்வி. ஆண்டவரே விடுவிக்கமுடியும் என நம்பத் தவறுகிறார். மனிதரால் எந்த அற்புதத்தையும் செய்ய முடியாது. நமது சுயவிருப்பம், சுயஆலோசனை, சுயசித்தம், சுயபெருமை அற்புதங்களை நடப்பிக்காது. எலிசா இறைபாதத்தைப் பிடித்தார். நம்பிக்கையின் ஆண்டவர் எலிசா தீர்க்கருக்கு உறுதியளித்தார்.

பெரும்பான்மையான விசுவாசிகள் தங்களிடம் ஒரு பெரிய தெய்வீக ஆற்றல் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்வதில்லை. ஆனால் ஆண்டவரின் போதனைகளின்படி நம்பிக்கையுள்ள வாழ்வு வாழ்வதற்கு இறையாற்றல் மிகமிக அவசியம். வீழ்ச்சிகளை உணரமுடிகிற அனுபவம்தான் கடவுள்மேல் வலிமையான நம்பிக்கை வைக்க உதவுகிறது. இப்பிரபஞ்சத்தில் வாழும் நமக்கு அநேகபாடுகளும், உபத்திரவங்களும், இடர்களும் உண்டு. இயேசுவில் நம்பிக்கை வைப்போர் இப்பிரபஞ்சத்தின் பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுவர்.

### 2. *கிறிஸ்துவில் நம்பிக்கை - விட்டுவிலகாமல் சார்ந்துநிற்கும்* :

“உம் உயிர்மேல் ஆணை; உம்மை நான் விடமாட்டேன்” (2அர 4:30).

நம்பிக்கை என்பது முற்றிலும் கடவுளைச் சார்ந்து நிற்பது. தன் தேவைகள் சந்திக்கப்படும் விதமாகத் தன் தாயைப் பற்றிக் கொண்டு முற்றிலும் சார்ந்திருப்பது போன்ற அனுபவம். சூனேமியாள், ஆண்டவர் தனக்குக் கொடுத்த குமாரனை மரணத்தால் எடுத்துக் கொள்ள முடியாது என நம்புகிறாள். ஏனெனில் செத்துப்போன பிள்ளை எலிசாவுக்கும் சிநேகிதன். எலிசா நிச்சயமாகவே தன் சிநேகிதனை உயிரோடே எழுப்புவார் என்ற நம்பிக்கை சூனேமியாள் இதயத்தில் நிரம்பியிருந்தது. அவளது வாழ்வில் கேகசியின் குறுக்கீடு நம்பிக்கையில் தளர்வைத் தந்தது. தன்மகன் உயிர்பெற தீர்க்கர் எலிசாவைச் சார்ந்து நிற்க வேண்டியதை உணர்ந்தாள். எனவே தான் எலிசாவிடம் நான் உம்மை விடுகிறதில்லை என ஆண்டவருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்கிறேன் என்றாள். வாழ்வின் தேவைகளைச் சந்திக்க சூனேமியாளைச் சார்ந்து தங்குவதற்கு மேல்வீட்டறை, உபகரணங்கள், உணவு இவைகளைப்

பெற்றுக் கொண்டவர் தீர்க்கர் எலிசா. இப்போது சொல்வச்சீமாட்டி தீர்க்கரைச் சார்ந்து, உம்மை விடமாட்டேன் என்கிறாள். உலகில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகளைக் களைந்து ஒவ்வொருவரும் இறங்கிவந்து ஒருவரையொருவர் சார்ந்து கொள்ளும்போது உயிர் பிழைக்கும் வாய்ப்பைப் பெறுகிறோம். இறைஉறவில் நிலைக்கிறோம்.

எலிசா தீர்க்கர் இறைஉறவில் சார்ந்து, மன்றாடி, இறைஆற்றல் பெறுகின்றார். மரித்துப்போன பிள்ளையின் அருகில் வருகிறார். தன் வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் பிள்ளையின் கண்கள் மீதும் தன் உள்ளங்கை பிள்ளையின் உள்ளங்கையிலும் படும்படி எலிசா குப்புற அவன்மீது சார்ந்து படுத்துக் கொண்டார். இந்தச் சார்பு நிலை குழந்தையின் சரீரத்தில் உயிரைக் கொண்டு வந்தது. உயிரிழந்த, ஒளியிழந்த, பெலன் இல்லாச் சமூகத்தில் கடவுளைச் சார்ந்து நிற்க அழைக்கப்படுகிறோம். வலிமையான இடங்களைச் சாராமல் வாழ்விழந்தவர்களைச் சார்ந்து வாழ்வளிக்க வேண்டும். இல்லாதவர்கள் இருக்கிறவர்களிடம் சார்ந்து வாழ்வதுதான் உலகஇயல்பு. ஆனால் இங்கே இருக்கிறவர்கள் இல்லாதவர்களுடன் சார்ந்து செயல்படுவதுதான் இறை உறவில் உண்மையான அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் தியாகம் மற்றும் பலவேளைகளில் கண்ணீரின் அனுபவங்களைக் கொண்டது. இன்றைய நிருபப்பகுதியில் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடாது என பவுல் தன் உள்ளத்தில் உணர்த்தப்படுகிறார். இயேசுவை எதிர்க்காமல் அவரைச் சார்வதுதான் உண்மையான இறையாற்றல் என உணர்ந்து (திப 26:15) நீர் யார்? என்றார். அதற்கு இயேசு நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார். சக்தியற்றவராகத் தரையில் விழுந்துகிடக்கும் போது, ஆண்டவர் பவுலைச் சந்தித்து இறையாற்றலை வெளிப்படுத்துகின்றார். பவுலும் கிறிஸ்துவைச் சார்ந்து அவரை நம்புவதற்கு இந்தச் சம்பவமே போதுமானது.

கொடி, தன் சொந்த முயற்சியால் கனியை உருவாக்க முடியாது. மரத்தின் சத்து வந்து சேர்ந்தால்தான் கனிகொடுக்கும் வளத்தைப் பெற முடியும் (யோவா 15). வலிமையான இடத்திலிருந்து வலுவிழந்த பகுதிக்குச் சத்துகள் பகிரப்பட வேண்டும். ஒரு விசுவாசி தன்னை மீட்கக்கப்பட்டவனென்னும், பரிசுத்தவானென்றும் நம்புவதால் மட்டும் இறையாற்றலைப் பெற முடியாது. கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் சாவுக்குட்பபட்ட இந்தச் சமூகத்தில் சத்துகளைப் பகிர்ந்து வாழ வேண்டும். இதைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிப்பவை இறைவேண்டல் மற்றும் தியானம். இதன்மூலம் கடவுளோடு சாரும் அனுபவத்தில் தெய்வீகச் சிந்தனைக்ள நமக்குள் வந்து செயல்பட ஆரம்பிக்கிறது. அன்பு, பொறுமை, தாழ்மை, தயவு, சமாதானம், நற்குணம் நம்மில் வெளிப்படுகிறது. இதுதான்

கிறிஸ்துவை நம்பிச் சார்வதில் வெளிப்படும் தெய்வீகக்குணம். இது சமூகத்திற்கு உயிரூட்டுகிறது. ஒளி இழந்தவர்களுக்கு ஒளியூட்டுகிறது. பெலன் இழந்தவர்களுக்குப் பெலனளிக்கிறது.

### *3. கிறிஸ்துவில் நம்பிக்கை - இறப்பினும் வாழவைக்கும்* :

இயேசு அவரிடம், "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்றார்
(யோவா 11:23)

பல்வேறு காரணங்களினிமித்தம் தங்களிலும் கிறிஸ்துவிலும் நம்பிக்கையிழந்து வாழ்வோர் செத்தமனிதர்களாவர். உணவில்லாமல் 2 மாதம் வாழ்ந்து விடலாம்; நீரில்லாமல் சில நாட்கள் நிலைத்து விடலாம். ஏன் காற்றில்லாமல் கூட சில நிமிடம் தாக்குப்பிடிக்கலாம். ஆனால் நம்பிக்கையில்லாமல் வாழ்வென்பதே இல்லை. இன்றைய நற்செய்திப் பகுதியில் இயேசு உயிர் பெற வைப்பது இலாசரை மட்டுமல்ல; நம்பிக்கை கொள்ளாமலிருந்த தம் சீடர்களையும் தான். சீடர்களை எவ்வாறு நம்பிக்கை கொள்ள வைப்பது என்று இயேசு சிந்தித்திருக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் இலாசரின் இறப்பு சிறந்த ஒரு வாய்ப்பாக இருந்தது. எனவே தான் நான் (இயேசு) அங்கு இல்லாமல் போனதுபற்றி உங்கள் பொருட்டு மகிழுகிறேன். நீங்கள் என்னை நம்புவதற்கு இது ஒரு வாய்ப்பாகிறது என்று சொன்னார். இறந்துபோன இலாசர் பாவத்தால் செத்துப்போன ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் நம்பிக்கையின் அடையாளமாக இருக்கிறார். செத்து நாற்றமெடுத்த மனிதகுலத்திற்கு உயிர்கொடுக்க இவ்வுலகிற்கு இயேசு வந்ததை வெளிப்படுத்தும் வண்ணமாக இலாசரின் கல்லறையருகில் வருகிறார். இதைக் கேள்விப்பட்ட மார்த்தா விரைந்து இயேசுவிடம் வந்து, நீர் இங்கு இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கத்திருக்க மாட்டான் என்றாள். இந்த வார்த்தை கவலைக்குரிய உணர்வை உள்ளடக்கியது. மார்த்தா நம்பிக்கையின் அடிப்படையான உயிர்த்தெழுதலை நம்பினாள். இயேசு கற்பித்ததை நம்பினாள் (யோவா 5:28-29; 6:39-40). கிறிஸ்துவின் தெய்வீகத்தை நம்பினாள். தந்தை எல்லாவற்றையும் தன் கையில் கொடுத்தார் (யோவா 3:35). எல்லா அதிகாரமும் இயேசுவின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது என அவள் உணரவில்லை. இயேசு அருகிலிருப்பது வாழ்வின் ஆற்றல் என அறிவித்தார். ஆபத்தான நேரத்தில் நம் அருகில் ஒருவர் வந்து நான் இருக்கிறேன்; பார்த்துக்கொள்வேன் என்றால் அது நமக்கு எவ்வளவு நம்பிக்கைக்குரிய வார்த்தை. இயேசு "உன் சகோதரன் மீண்டும் எழுந்திருப்பான்" என மார்த்தாவிடம் சொல்கிறார். இந்த வார்த்தை மார்த்தாவுக்கு நம்பிக்கையைத் தந்தது. உயிர்த்தெழுதலும், வாழ்வுமாகிய இயேசு அருகிலிருந்தால் முடியும் என நம்பினாள்.

இவ்வுலகில் கிறிஸ்துவை நம்புகிறவர்கள் மரணத்துடன் உறவு கொண்டிருக்க மாட்டார்கள். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெற்றுக்கொள்வர் (யோவா 3:16). கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்வோர் இறப்பினும் வாழ்வர். இன்னும் அனேகர் மார்த்தாவைப்போல இயேசு அருகில் நிற்பதை மறுத்து/மறந்து வலம் வருவதைப் பார்க்கிறோம்.

நம்பிக்கை என்பது திருச்சபை நமக்குக் கற்றுத்தந்துள்ள சில வார்த்தைகளை மனப்பாடம் செய்து ஒரே கடவுளை விசுவாசிக்கிறேன் என்று ஒப்புவித்தல் மட்டுமல்ல. சாவுக்கு இணையான சமூக அடிமைத்தனங்களாகிய சமயவெறி, இனவெறி, நுகர்வுவெறி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, ஏழ்மைநிலை போன்ற அநீதிகளில் வாழ்வுக்காகப் போராட வேண்டும்.

வாழ்வுக் கப்பலைத் துன்ப அலைகளும், சோதனைப் புயல்களும் தாக்கினாலும் நம்பிக்கையை நங்கூரமாகக் கொண்டிருப்பவர்களை எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே, வாழ்வின் எச்சூழலிலும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு இடர்களையும் இழப்புகளையும் தாண்டி வாழ்வு பெறுவோம்.

அருள்திரு. அறிவர் T. **ராஜன்**

09-05-2021

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு**

# அருள்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பு

**CHRIST'S INVITATION TO BE AN EXPRESSION OF MISSION**

எசே 34:25-31 1பேது 2:1-10

திபா 47 யோவா 20:19-23

**"தாகமாய் இருப்பவர்களே, நீங்கள் அனைவரும் நீர்நிலைகளுக்கு வாருங்கள்; கையில் பணமில்லாதவர்களே, நீங்களும் வாருங்கள்; தானியத்தை வாங்கி உண்ணுங்கள், வாருங்கள், காசு பணமின்றித் திராட்சை இரசமும் பாலும் வாங்குங்கள்"**

(எசா 55:1).

அன்றைய காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருகிற போது 3G-யைக் கொண்டு வந்தார்கள். 1. Gold, 2. Glory, 3. Gospel. அதாவது பொன்னைப்பெற, புகழைப்பெற மற்றும் நற்செய்தியைச் சொல்லுவதற்கு இந்திய நாட்டிற்கு வருகை தந்தனர். "என் பின்னே வாருங்கள்" என்று இயேசு நாதர் நம்மை அழைக்கின்றார். அழைப்புத் தந்த ஆண்டவர் என்னைப் பின்பற்றிவா! என்னோடு இருக்க வா! என்னோடு மகிழ்ந்திட வா! என்னோடு உறைந்திட வா! என் இறப்பிலே பங்கேற்க வா! என் உயிர்ப்பிலே நிலைத்திட வா! என்று அழைக்கின்றார். "வா என்று அழைத்த ஆண்டவர், போ" என்று கூறுகிறார். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கிடப் போ! சிறைப்பட்டோருக்கு விடுதலை வழங்கிடப் போ! என்று கூறுகிறார். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கிடப், போ! மற்றவருக்கு உதவி வழங்கிடப் போ! அன்பில் நிலைத்திருந்து வாழ்ந்திடப், போ! போ! போ! என்கிறார். தன்னில் சந்ததி பிறக்கும் எனக் காத்திருந்த வயதான ஆபிரகாம், கொஞ்சம் பலன் இருந்தும் தூதரோடு போராடிய யாக்கோபு, தவறான குற்றச்சாட்டால் சிறையில் சிக்கிய யோசேப்பு, வனாந்தரத்தில் நிர்க்கதியாக நின்று தவித்த மோசே, கடவுள் என்னோடு இல்லை எனப் போரடித்த கிதியோன், பிள்ளை இல்லை என ஆலயத்தினுள் அழுத அன்னாள், சவுலுக்குப் பயந்து காடுகாடாகச் சுற்றித் திரிந்த தாவீது, 450 கள்ளத் தீர்க்கதரிசிகள் முன் நின்ற ஒரே ஓர் எலியா, முற்றிலும் எதிரெதிரான சூழலில் அழுது புலம்பிய எரேமியா, சாக வேண்டிய நிலையிலும் என்னை இறைவர் பார்ப்பார் என்று ஏங்கிய யோபு, மீன் இல்லாத வலைகளோடு வெறுமையில் நின்ற பேதுரு, வைத்தியர்களால் கைவிடப்பட்டும் எங்கும் திரிந்து கடைசியில் கடவுளிடம் வந்த இரத்தப்போக்குடைய பெண் ஆகியோரின் அன்றைய நிலையை மாற்றியது நற்செய்தியே தான்.

“அருட்பணி, அரும்பணி, அதற்காக உன்னை அர்ப்பணி.”

***1. வாருங்கள்*** (Approach me) : (எசா 55:1)

தாகமாய் இருப்பவர்களே, நீங்கள் அனைவரும் என்னண்டை வாருங்கள் என்று அழைக்கின்றார். அருட்பணிக்கு ஓர் அழைப்பு உண்டு; இறைப்பணிக்கு ஓர் அழைப்பு உண்டு; அதுபோல எல்லாவற்றிற்கும் ஓர் அழைப்பு உண்டு. திருமறையில் பல இடங்களில் வாருங்கள் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. என் பின்னே வாருங்கள் (மத் 4:19), உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் (மாற் 1:17). பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, என்னிடம் வாருங்கள் (மத் 11:28). அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் (மாற் 4:35), சீடர்களைப் பார்த்து இளைப்பாறப் போவோம் வாருங்கள் (மாற் 6:35). பிள்ளைகளே போஜனம் பண்ணுவதற்காக வாருங்கள் (யோவா 21:12). வாருங்கள் என்ற வார்த்தைக்கு அதிகப்படியான அழுத்தம் தந்தவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. வாருங்கள் என்று அழைத்தாரே, இவர்கள் எதற்காக வர வேண்டும்? வந்தால் என்ன கிடைக்கும்?

2019 ஆம் ஆண்டிலே சிரியாவிலே போர் நடந்தது. அப்போது எடுக்கப்பட்ட ஒரு ஒரு புகைப்படமானது எல்லோரையும் வேதனைப்பட வைத்தது. மக்களின் கண்கள் எல்லாம் கண்ணீரால் குளமாயின. போரின் போது ஒரு குழந்தை பரிதாபமான நிலையில் தள்ளப்பட்டது. அப்போது ஒரு மருத்துவர் அந்தக் குழந்தைக்கு உணவினைக் கொடுத்தார். அப்போது அந்தக் குழந்தை மருத்துவரின் காதில் எதையோ முணுமுணுத்தது. அது என்னவெனில், எனக்குப் பசி எடுக்கவில்லை. ஏதாவது மருந்து தருவீர்களா? (Doctor, could you give me a medicine, so that I won’t be hungry again) என்று கேட்டது.

நம் ஆண்டவர் இப்படிப்பட்ட நிலைமையிலே “தாகமாய் இருப்பவர்களே, என்னிடத்தில் வாருங்கள்” என்கிறார். “வழிபாடு மூலம் நாம் கடவுளின் அண்மையில் செல்கின்றோம். ஆனால் சேவை மூலம் கடவுள் நம் அண்மையில் வருகின்றார்” என்றார் அன்னைதெரசா.

***2. வாங்குங்கள்*** (Accord me) : (மத் 10:8)

“கொடையாகப் பெற்றீர்கள், கொடையாகவே வழங்குங்கள்” என்றார் இயேசு கிறிஸ்து. “நீங்கள் வந்து வாங்குங்கள்” (எசா 55:1) என்கிறார். லூக் 18:18-30, மாற் 10:17-31. ஆகிய வசனங்கள் நிலைவாழ்வைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அழகாக விளக்குகின்றன. நிலையான வாழ்வுக்கான திட்ட வரைவை (Plan chart) ஆண்டவர், “வாங்குங்கள்” என்கிறார்.

மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் 2018-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ஆம் நாள் புது டெல்லியில்

நடைபெற்ற "Social and Educational Upliftment Function Performed by Christians" என்ற சிறப்புக் கூடுகையில் இப்படியாகச் சொன்னார்கள். "I wonder why I was not born as a christian?" அவர்களின் பேச்சு எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது. யோவான் 6:48-58இல் "வாழ்வு தரும் உணவு நானே" என்று கூறி அந்த இடத்தில் தம்மையே கொடுத்து, "வாங்கிக் கொள்ளுங்கள்" என்கிறார். கிறிஸ்துவினுடைய வார்த்தையே உணவாக வருகிறது (இச 8:3, மத் 4:4, யோவா 7:37). இவையெல்லாம் வாங்குங்கள் என்பதற்கான அடையாளமாகும். பல ஆண்டுகளுக்கு முன்பதாகவே நலமானதைச் சாப்பிடுங்கள் கொழுத்ததைக் கொடுங்கள் என்கிறார். இன்று நாம் நலமானதைச் சாப்பிட்டுவிட்டு எஞ்சியதைத் தான் ஏழைகளுக்கு கொடுக்கிறோம். அதுபோல, திருமண நிகழ்வுகளில் மீதி வருவதைத் தான் ஏழைகளுக்குக் கொடுப்போம். சபைநாள் விழாவிலும் மீதி வருவதைத்தான் ஏழைகளுக்கும், அனாதை இல்லங்களுக்கும் கொண்டு கொடுப்போம். அதுபோன்று பிறந்தநாள் விழா மற்றும் அரசியல் கூட்டங்களிலும் மீதி வருவதைத்தான் ஏழைகளுக்குக் கொடுப்போம். "நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல; ஆண்டவருக்காகவே செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள்" (கொலோ 3:23). "எங்கெல்லாம் மக்கள் கல்வியில், நாகரிகத்தில், பண்பாட்டில் வளர்ந்திருக்கிறார்களோ, அந்த இடத்தைத் தேடி பாருங்கள், அங்கே ஒரு கிறிஸ்தவ அருட்பணியாளரின் கல்லறை இருக்கும்" என்றார் பேராயர் ஸ்டீபன் நீல்.

***3. வாழுங்கள்*** (Uphold me) :

"என்னிடம் வாருங்கள்; தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள்" (எசா 55:3). ஆமோஸ் இறைவாக்கினர் இப்படியாகச் சொல்லுகிறார், "விழுந்து போன தாவீதின் கூடாரத்தைக் கட்டுவேன்." ஆகவே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தைக் கட்ட முடியும் என்றால், நம்முடைய உடைக்கப்பட்ட, நொறுக்கப்பட்ட, சிதறடிக்கப்பட்ட வாழ்க்கையை ஏன் கட்ட முடியாது?

அன்றைய காலத்தில் இந்திய நாட்டிற்குப் பொன்னுக்காகவும், புகழுக்காகவும் வந்திருக்கலாம். ஆனால் நற்செய்தி சொல்லப்பட்டதன் காரணமாகத்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். "The New Leader" என்ற ஆங்கிலப் பத்திரிக்கையில் "The Parable for today" என்ற தொடரில் குறிப்பிடப்பட்ட ஒரு நிகழ்ச்சி. சில ஆண்டுகளுக்கு முன் திருவண்ணாமலை மாவட்டத்தில், ஒரு குக்கிராமத்தில் 11-ஆம் வகுப்பு படித்து வந்த ராஜலட்சுமி என்ற மாணவி, காட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்த தன்னுடைய தந்தைக்கு சைக்கிளில் சாப்பாடு கொண்டு சென்றாள். போகின்ற வழியில் லாறி ஒன்று அவள்மீது மோதி, 2 கால்களும் அந்த இடத்திலே சிதைந்து போயின. அவள் உயிருக்காகப் போராடிய

வேளையில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள், அவளை அருகிலிருந்த மருத்துவ மனைக்குத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். இந்நிலையில் ராஜலட்சுமியின் பெற்றோர் அலறி அடித்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடி வந்தனர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ராஜலட்சுமி தன் பெற்றேரை அருகில் அழைத்து, உங்களிடம் சிலவற்றைப் பேச விரும்புகிறேன், அதற்கு நீங்கள் செவிகொடுப்பீர்களா? என்று கேட்டாள். பெற்றோரும் அதற்கு சரி எனக் கூறி விட்டார்கள். நீங்கள் இருவரும் சண்டை போடாமல் சமாதானமாக இருக்க வேண்டும். நான் படிப்பதற்கு எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்து தந்த மாவட்ட ஆட்சியாளருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டும். நான் இறந்த பிறகு, இரண்டு கண்களையும் எடுத்து, பிறவியிலே பார்வையில்லாமல் இருக்கும், பக்கத்து வீட்டில் வசிக்கும் புவனேஸ்வரி என்ற சிறுமிக்குக் கொடுக்க வேண்டும். இந்த மூன்று செயல்களையும் எனக்காகச் செய்யுங்கள் என்று கூறி உயிரை விட்டாள். இவளுடைய இந்தச் செயல் பத்திரிக்கையில் மிகவும் அதிகமாகப் பேசப்பட்டது. அவள் சொன்னது போன்றே, அவளுடைய கண்கள் இரண்டும் புவனேஸ்வரி என்ற சிறுமிக்குப் பொருத்தப்பட்டன. ராஜலட்சுமி என்ற அந்த மாணவி செய்த தியாகத்தினால் புவனேஸ்வரி வாழ்வு (பார்வை) பெற்றது போல, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தியாகத்தினால் நாம் அனைவரும் வாழ்வு பெற்றிருக்கிறோம். “அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே” என்றார் தாயுமானவர்.

அருள்திரு. அறிவர் C. **சுதீபன்**

16-05-2021

உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு

# தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல்

**WAITING UPON THE HOLY SPIRIT**

எசா 40:25-31 திப 1:1-11
திபா 51 லூக் 24:44-49

**"...நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்"** (லூக் 24:49).

இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை ஏற்றுக்கொள்வதற்குத் தயங்கிய தமது சீடரின் பயத்தைப் போக்கி, தமது செயல்களுக்குச் சாட்சிகளாய் மாற்றும் விதமாக அவர்களுக்குத் தோன்றி 40 நாட்களளவும் ஆண்டவர் அவர்களோடிருந்தார். விண்ணேறுவதற்கு முன்பு இறுதி நிகழ்வாகத் தந்தையின் வாக்குறுதியைச் சீடருக்கு நினைவுறுத்தினார் (லூக் 24:49). முழுக்கு முனிவர் யோவான் தண்ணீரால் திருமுழுக்கு அளித்தார். ஆனால், நீங்கள் தூய ஆவியால் திருமுழுக்கு பெறுவீர்கள் என்றார். இயேசுவின் கட்டளை என்னவென்றால் ஆண்டவரின் வாக்குறுதி நிறைவேறும் வரை காத்திருங்கள் என்பதாகும். காத்திருப்போர் அடையும் நன்மைகள் என்ன? என்பதே இச்செய்தியின் மையக் கருத்தாகும்.

### எருசலேமில் ஏன் காத்திருந்தனர்?

யூதர்கள் மோசேயின் வழியாய் ஆண்டவர் அருளிய விழாக்களைக் கொண்டாடினர். மூன்று விழாக்கள் சிறப்பு வாய்ந்தவை. பாஸ்காவிழா, பெந்தக்கோஸ்துவிழா, கூடாரவிழா. ஆகியனவாகும். பாஸ்காவிழாவுக்குப் பின் ஐம்பதாம் நாள் பெந்தக்கோஸ்து விழாவைக் கொண்டாடினர். இது ஏழு வாரங்களுக்குப் பின்பு வந்ததால் இதை வாரங்களின் விழா என்றும் அழைத்தனர் (2குறி 8:13). இது ஒரு விவசாயவிழா. இவ்விழாவில் இஸ்ரயேலர் அனைவரும் இறைச்சமுகத்தில் நன்றிப்பலிகளுடன் கூடுவர் (விப 34:22-23; லேவி 23:15-16; இச 16:9-14). இஸ்ரயேலின் சமய, சமூக வாழ்வில் முக்கியமானது இவ்விழாவாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த விழா காலத்தில் இயேசு தம் சீடரை எருசலேமில் காத்திருக்கப் பணித்தார். புதிய உடன்படிக்கையின் அச்சாரமாகவும், திருச்சபையாக இயேசுவின் அடியவர் மாற்றம் பெறுவதை விளக்கும் நிகழ்வாகவும் இது பார்க்கப்படுகிறது

காத்திருப்போர் தூய ஆவியரால் திருமுழுக்குப் பெற்று, பெலனடைந்து, உலகெங்கும் இயேசுவுக்குச் சாட்சிகளாயிருப்பார்கள் என்பதுவே இயேசுவின் வாக்குறுதி. அவ்வாக்குறுதியைத் தியானிப்போமாக.

***1. காத்திருப்போர் தூய ஆவியாரால் திருமுழுக்குப் பெறுவர்:*** (திப 1:5).

இயேசுவைக் குறித்து முழுக்கு முனிவர் யோவான், இறை ஆட்டுக்குட்டி என்றார் தூய ஆவியார் புறாவைப்போல் அவர் மீது இறங்குவதைக் கண்டு, கடவுள் அறிவுறுத்தியபடி இயேசு தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார் என்றார் (யோவா 1:19-34).

திருமறையில் தூய ஆவியாரைக் குறித்து தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. படைப்பு, பாதுகாப்பு, புனரமைப்பு ஆகியவற்றில் தூய ஆவியாரின் பங்களிப்பு, அவரது ஆள்தத்துவம், கடவுள், மைந்தர், தூய ஆவியாரின் ஒற்றுமை ஆகியன விளக்கப்பட்டுள்ளது. காற்று, நெருப்பு, மழை, பனி, எண்ணெய் என்று தூய ஆவியாரைப் பற்றி திருமறையில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இயேசு தூய ஆவியார் கடவுளின் வாக்குறுதி என்றார் (யோவா 16:7,13). பெந்தக்கோஸ்து எனும் விவசாய விழா தேற்றரவாளனாகிய தூய ஆவியாரை உலகம் பெற்றுக் கொண்ட அருள்பொழிவு நாளாக மாறியது. சீடர்கள் மற்றும் பற்றுறுதியுடையோர் (வேறுபாடில்லாமல்) அனைவரும் அடைந்த மாற்றத்தின் நாளாயிற்று. தூய ஆவியார் ஆள்தத்துவம் பெற்று மக்கள் மத்தியில் வெளிப்பட காத்திருக்க ஆண்டவர் அறிவுறுத்தினார். இயேசுவால் பணியமர்த்தப்பட்ட அருள்பணியர் அனைவரும் திருப்பணிக்குத் தகுதிப்படுத்தப்படும் நிகழ்வுக்காய்க் காத்திருக்கக் கூறினார். இது மீண்டும் மீண்டும் திருமுழுக்குப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கூறப்படவில்லை. மாறாக, தூய ஆவியாரால், ஆண்டவரின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கும் நிகழ்வாகும். இயேசுவின் சீடர்களும் அவர்களுடன் இருந்தவர்கள் அனைவரும் அழைப்பைப் பெற்றனர். இயேசுவின் திருப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றுவோர் அனைவரும் இத்தகையை அருள்பொழிவைப் பெற ஆண்டவர் திருவுளம் கொண்டுள்ளார்.

***2. காத்திருப்போர் பெலனடைவர் :*** (எசா 40:31)

இயேசு தமது சீடர்களிடம், தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் வலிமையடைவீர்கள் என்றார் (திப 1:8). சூழல்களின் நெருக்கத்தால் நலிவுற்று, வலிமை குன்றியவர்கள் தூய ஆவியாரின் வருகையால் வலிமை பெறுவர் என்று நம்பிக்கையூட்டினார். எசாயா இறைவாக்கினர், பாபிலோனில் அடிமைகளாயிருந்த எபிரேயர்களிடம், ஆண்டவர் மேல் பற்றுறுதியுடன் காத்திருப்போர் புதிய ஆற்றல் பெற்று கழுகுபோல் பறந்து உயரே செல்வர் என்றார் (எசா 40:31). சோர்வுற்றவர்களுக்கு வலிமையும், வலிமையிழந்தவர்களுக்குத் தமது ஊக்கத்தையும் தருவார் என்றார் (எசா

40:29). இளைஞர்கள் சோர்வடைவர், வாலிபர் தடுமாறி வீழ்வர் (எசா 40:30). ஆனால், ஆண்டவர் மேல் பற்றுறுதியுடன் காத்திருப்போர் வலிமையடைவர். அவர்கள் ஓடுவர்; ஆனால் களைப்படையார். அவர்கள் நடந்து சென்றாலும் சோர்வடையார். என்ன ஒரு விந்தை! நெருக்கத்திலிருப்போர் காத்திருக்கும் போது பெலனடைவர். அவர்கள், கழுகு தனது இறகுகளை உதிர்த்து பின்னர் புதிய இறகுகளுக்காகக் காத்திருந்து புது வலிமையுடன் இறக்கைகளை விரித்து உயரே பறப்பர். காத்திருப்போரும் தூய ஆவியாரால் வலிமைபெற்று இறையரசின் பணியாளர் ஆவர். காத்திருங்கள், தந்தை வாக்களித்த வல்லமையை உங்களுக்கு அனுப்புவேன் என்றார் இயேசு (லூக் 24:49). அத்தகையை வல்லமையைப் பெற்று இறைப்பணியாற்ற ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

### ***3. காத்திருப்போர் சாட்சிகளாவர் :*** (திப 1:8).

தூய ஆவி வரும் பொழுது உலகின் அனைத்துப் பகுதிகளிலும் சாட்சியாவீர்கள் என்றார். ஆகவே தூய ஆவிக்காய்க் காத்திருத்தல் இன்றியமையாதது. இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் போதனைகளுக்குச் சாட்சிகளாவீர்கள். தூய ஆவியார் இயேசுவின் போதனைகளை நினைவுறுத்தி (யோவா 14:16), இயேசுவுக்குச் சாட்சி பகர்வார் (யோவா 15:26). இயேசுவின் பணியைத் தூய ஆவியார் தொடர்வார் (யோவா 16:7).

இயேசுவின் அருள்தொண்டர்கள் மாற்றுருவாக்கம் பெற்று அவருக்குச் சாட்சிகளாகும்படி தூய ஆவியார் அருள் புரிவார் என்று ஜெரோம் (கிபி:340-420) என்ற திருச்சபை வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். அதாவது, சீனாய் மலையில் நிகழ்ந்த மாற்றமும், பெந்தக்கோஸ்து அன்று ஏற்பட்ட மாற்றமும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒற்றுமையுடையன (அசைவு - மலை மற்றும் சீடர்கள் தங்கியிருந்த வீடு. நெருப்பு - சீனாய் மலையிலும், அருள்தொண்டர்களின் நாவுகளிலும், பெருஞ்சத்தம் - சீனாய் மலையிலும், அருள்தொண்டர்கள் மத்தியிலும்). எருசலேமில் காத்திருங்கள் என்று அறிவுறுத்திய ஆண்டவர் ஆவியாரின் அருள்பொழிவைப் பெற்று சாட்சியின் வாழ்வு வாழப் பணித்தார். பெந்தக்கோஸ்து விழாவின் போது ஆண்டவருக்கு நன்றிப்பலியாக விளைச்சலின் பலன்களையும் கொண்டு வந்து, தங்களுடன் வாழும் வறியவர், நலிந்தோர், துன்புறும் மக்களுக்கு உதவி புரிந்து சாட்சி பகர்ந்தனர் (இச 16:11-14).

ஆண்டவர் இயேசுவின் வாழ்வு, போதனை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி பகரும் நாம், நலிந்தோர் மற்றும் ஆதரவுற்றோருக்கு உதவிட அழைக்கப்படுகிறோம். ஆதரவு தருதல் என்பது சாட்சி வாழ்வின் முக்கிய அம்சமாகும். தூய ஆவியாருக்காய்க் காத்திருந்து பெற்றுக் கொள்ளும்போது அத்தகைய மாற்றத்தை அருளுகிறார்.

தூய ஆவியாரின் ஆற்றல் பெறுவதற்காய்க் காத்திருப்போர் அவரால் திருமுழுக்குப் பெற்று பெலனடைந்து உலகம் முழுவதும் அவருக்குச் சாட்சி பகர்வார்கள் என்று இறைமைந்தன் இயேசுவின் வார்த்தைகள் தம் சீடர்களின் பற்றுறுதியை வலிமைப்படுத்தி அரும்பெரும் செயல் செய்யத் துணைபுரிந்தது. இன்றும் தூய ஆவியார் செயல்பட ஆற்றலால் நம்மை நிரப்ப, காத்திருக்கிறார். ஏனெனில் இது கடவுளின் வாக்குறுதி. திருச்சபை இறையரசின் தகவுகளால் நிறைந்து, அவரது அன்பை உலகிற்கு எடுத்துரைத்து நற்செய்தியைப் பறைசாற்ற தூய ஆவியார் அருள்புரிவாராக.

அருள்திரு. முனைவர் M. **ஜஸ்டின் மோசஸ்**

23-05-2021

பெந்தக்கோஸ்து ஞாயிறு

## வாரும் தூய ஆவியாரே, எம்மைப் புத்தாக்கம் செய்தருளும்

**COME HOLY SPIRIT, RENEW US**

எசே 37:1-14 திப 2:1-13

திபா 104:24-35 யோவா 16:1-11

**"...தொடக்கத்திலேயே நான் இவற்றை உங்களிடம் சொல்லவில்லை; ஏனெனில் நான் உங்களோடு இருந்தேன்"** (யோவா 16:4).

மரம் பட்டுப் போனால் பறவைகள் வருவதில்லை. மனிதர்களின் மனம் பட்டுப் போனால் உறவுகள் நெருங்குவதில்லை. மகிழ்ச்சியோடு துளிர் விட்டுக் கொண்டிருந்த சீடர்களின் மனம் பட்டுப்போகும் ஒரு காலம் வரும் என்பதை ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்னார். அவர்களுடைய காலப் பயணங்கள் தடுமாறும் ஒரு காலம் குறித்து ஆண்டவர் சொன்னார். கைகளில் சிக்காத காற்று போல ஆண்டவர் அவர்களை விட்டுவிட்டுக் கடந்துபோகும் காலம் அது. ஆண்டவர் சொன்னதுபோலவே அந்தக் காலம் வந்தபோது அவர்கள் மனதிலும் உடலிலும் பழுதடைந்து போனார்கள். அவர்களது நினைவுகளின் தாறுமாறான மாற்றங்கள் அவர்களை நிலைகுலையச் செய்தன. இமைகள் துயில மறுத்தன. மிகவும் சோர்ந்து உயிரற்றவர்கள் போலாகி விட்டார்கள். காய்ந்த சருகாக அவர்களது மனம், துன்பம் என்னும் காற்று அலைக்கடிக்கும் திசைகளிலெல்லாம் பயணித்தது. முன்பு தள்ளு முள்ளு செய்து ஆண்டவரைச் சந்திக்க வந்த கூட்டமெல்லாம் இப்போது எங்கோ போய் விட்டது. தள்ளாடிப் போய் மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள். எல்லாமே போய்விட்ட தோல்வியில் துவண்டு போயிருக்கிறார்கள். உலகம் வெற்றியடைந்தவர்களையே தேடிப் போய் ஏற்றுக் கொள்ளும், தோல்வியடைந்தவர்களைத் துரத்திவிடும். தோல்வியடைந்த நிலையில் வீடடங்கிப் போயிருந்த சீடர்களின் மனநிலை புகைமூட்டமாகத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் தூய ஆவியின் மழையைப் பொழியச் செய்து அவர்களைப் புத்தாக்கம் செய்தார் தூய ஆவியார். இதனால் பட்டுப் போயிருந்த அவர்களது வாழ்வு மீண்டும் புதிதாகத் துளிர்த்தது.

தூய ஆவியாரின் காலம் என அறியப்படுகிற சபையின் காலத்திலே, ஆவியார் ஆறுதல் செய்கிறவரானபடியால், சபையில் ஆறுதல் பெருகியது (திப 9:31). ஆவியாரின் சிந்தையோடிருந்தவர்களுக்கு ஜீவன், சமாதானம் ஏற்பட்டது (உரோ 8:6). ஆவியார் தமது சித்தத்தின்படி சபை வளர, ஈவுகளைப் பகிர்ந்து கொடுத்தார் (1கொரி 12:11). தூய ஆவியாருக்கு

இப்படி ஏராளமான பணிகள் இருக்கின்றன. இன்று நாம் தூய ஆவியார் எப்படி மனிதரைப் புத்தாக்கம் செய்கிறார்? என்பதைத் தியானிப்போம்.

### *1. கனவுகளைப் புதுப்பிக்கிறார்* :

நம்மை நேசிக்கிறவர்களும், நாம் நேசிக்கிறவர்களும் நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டால் அவர்களைக் குறித்த நினைவுகளோடு, அவர்களோடு வாழ்ந்த காலம் மறுபடியும் வந்துவிடாதா? எனக் கனவு காண்பதுண்டு.

எசேக்கியேல் இறைவாக்கினரின் மனநிலையும் அப்படித்தான் இருந்தது. காற்றடித்தும் கலையாத மேகம் போலவும், நீர் குடித்தும் தணியாத தாகம் போலவும், ஒருவாறு சமாளித்து உலகத்தைப் பார்த்து புன்னகைத்தும், பிரியாமல் துரத்தின சோகத்தோடும் அந்தப் பள்ளத்தாக்கிலே எலும்புகளைப் பார்த்து அவர்கள் உயிரோடு வந்துவிடமாட்டார்களா? எனக் கனவு கண்டு கொண்டிருந்த போது, ஆண்டவர் அவரது கனவு நனவாகும் என அவரோடு பேசி, கனவுகளைப் புதுப்பித்து வாக்குத்தத்தம் கொடுத்தார் (எசே 37:4-7).

சீடர்களும் இதே போல ஆண்டவரோடு வாழ்ந்த காலங்களை ஏக்கத்தோடு கனவாகக் கண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய செவிகள் அவருடைய குரல் கேட்கக் காத்திருந்தன. அவர்களுடைய விழிகள் அவரைப் பார்க்க பறவை போலப் பறந்தன. இருதயம் தரையில் விழுந்த மீனைப் போலத் துடித்தது. இந்தச் சூழ்நிலையில் அவர்களது கனவுகளை ஆவியார் மிக அருமையாகப் புதுப்பித்தார். எவ்வாறு புதுப்பித்தாரென்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். 1800ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்திலே Francis Barraud என்ற ஓவியர் இருந்தார். அவருக்கு Mark என்ற உடன் பிறந்த தம்பி இருந்தார். அவரது தம்பி எதிர்பாராத விதமாக அகால மரணமடைந்து விட்டார். மரணமடைந்தவர், சொத்துக்களாக விட்டுப் போனவை Emile Berliner என்ற ஜெர்மானியர் கண்டுபிடித்து உலகிற்குக் கொடுத்த கிராமபோனும், தன் குரலில் ஒலிப்பதிவு செய்த இசைத் தட்டுகளும், செல்ல வளர்ப்பு நாய் நிப்பரும் தான். தம்பியை இழந்த Francis Barraud-ஐ விடவும், எஜமானை இழந்த நிப்பர் தான் எஜமானுக்காக அதிகம் வருந்தி கண்ணீர் விட்டபடி இருக்கும். ஒரு நாள் பிரான்சிஸ் தன் தம்பியின் நினைவுகளால் உந்தப்பட்டு அவர் பாடி, பதிவு செய்திருந்த இசைத் தட்டை ஒலிக்கச் செய்தார். எங்கிருந்தோ அந்தக் குரலைக் கேட்ட நாய் நிப்பர் புத்துணர்வு பெற்றது. தன் எஜமான் உயிரோடிருக்கிறார் என்ற உணர்வோடு ஓடி வந்து அந்த இசைத்தட்டு அருகே நின்று அக்குரலை ஆவலுடன் கேட்டது. இந்தக் காட்சியைக் கண்ட ஓவியர் Francis Barraud அதை ஓவியமாகத் தீட்டினார். கிராமபோன் கம்பெனி அந்த ஓவியத்தை விலைக்கு வாங்கி, தங்கள்

இசைத்தட்டுகளுக்கு ‘His Master’s Voice’ எனப் பெயர் வைத்தார்கள். அந்தப் படத்தை இலச்சினையாக (Logo) ஆக்கினார்கள். சீடர்கள் வாழ்விலும் தூய ஆவியாரின் வருகைக்குப் பின் ஒரு பெரிய திருப்புமுனை ஏற்படுகிறது. ஒவ்வொரு விடியலிலும் ஏமாற்றத்தோடு அவர் நினைவுகளைச் சுமந்தபடியே இருந்தார்கள். பிரிந்து போன நினைவுகள் எந்நாளும் கனவாக அல்ல, கண்ணீராக வந்து கொண்டேயிருந்தன. திடீரென்று ஒரு நாள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பேசின வார்த்தைகள் யாவற்றையும் தூய ஆவியார் மூலமாகத் தங்கள் உள்ளத்தில் ஒலிபரப்பாகக் கேட்கிறார்கள். ஆண்டவர் முன்னறிவித்து பின்னாட்களில் நற்செய்தி நூலில் பதிவு செய்யப்பட்ட யோவா 14:26, யோவா 15:13 ஆகியன நிறைவேறுகிறதை உணர்கிறார்கள். மனம் செயல்பட முடியாமல் ஆண்டவரைக் குறித்து கனவு மட்டும் கண்டு கொண்டிருந்தவர்கள், இப்போது மனதைச் செயல்படுத்த ஆரம்பிக்கிறார்கள். தூய ஆவியார், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து நினைவூட்ட, நினைவூட்ட சீடர்கள் அவற்றை நற்செய்தி நூற்களாக, திருமுகங்களாக (நிருபங்கள்) எழுதினார்கள். உதிரி உதிரியாக இருந்த அவர்களின் மனதின் நினைவுகள் தூய ஆவியாரின் உந்துதலால் திருமறையாக வடிவெடுத்தது. என்றும் எல்லாரிடமும் இருக்கிற அருட்பணியாளராகிய திருமறை தூய ஆவியாரால் திருச்சபைக்குக் கிடைத்தது. இதயத்திலிருந்து அழிக்க முடியாத அவரது நினைவுகளை மீட்டெடுத்து மனதிற்குள் நிறுத்தி அதைப் புதுப்பித்து திருமறையின் புதியஏற்பாட்டுப் பகுதியாக்கின தூய ஆவியார் இன்றும் பல பிரச்சனைகளில் சிக்கிப் போயிருக்கும் நம்மை நேர்மறைச் சிந்தனை வழியாக புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறார். நேர்மறைச் சிந்தனையுள்ளோரை விஷம் கூட ஒன்றும் செய்யாது; எதிர்மறைச் சிந்தனையுள்ளோரை மருந்து கூடக் குணப்படுத்த முடியாது. ஓர் அலைக்கும் மறு அலைக்கும் இடைப்பட்ட கடற்கரை போல, அடுத்தடுத்து பல துன்பச் சூழல்கள் நமக்கு ஏற்படும் போது ஆவியார் நம் மனதைப் புதுப்பிக்கவும், நம் கனவுகளைப் புதுப்பிக்கவும் அவரிடம் ஒப்படைப்போம்.

### *2. நினைவுகளைப் புதுப்பிக்கிறார்* :

அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகத்தினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக் காட்டுவார் (யோவா 16:8). சரீரம் பாவத்தில் மூழ்குவதை விட வெளியே தெரியாத நம் மனம் பாவத்தில் மூழ்கியிருக்கும். பாவ ஆழத்தில் மூழ்கிப் போயிருக்கும் மனதைத் தூக்கியெடுத்து புதுப்பிக்கும் பணியில் தூய ஆவியார் ஈடுபடுகிறார். மனம் எப்படிப் பாவத்தில் மூழ்கிப் போகிறது? மனதின் வேலை சொற்களைப் படமாக மாற்றுவது. அந்தப் படமாக்கும் வேலையில் நிறைய Editing நடக்கும். இல்லாதது சேர்த்துக் கொள்ளப்படும் அல்லது இருப்பது

பெரிதுபடுத்தப்படும் அல்லது சிறிதுபடுத்தப்படும். நம் மனநிலைக்கேற்ப படம் தயாராகும். இதற்குப் பின்னணி இசை சேர்ப்பது போல உணர்ச்சிகளைக் குறைத்து மெருகேற்றுகிறோம். பின்னர் அந்தப்படம் நினைவாக நம் நெஞ்சில் நிற்கும். அந்த நினைவு தரும் பாதிப்புகளே பாவமாக வெளிப்படுகிறது. நமது பாவங்கள் நம் எண்ணத்திற்கேற்ப நமது நீதியாகவும், நமது நியாயமாகவும் வெளிப்படுகின்றன. இந்த நேரத்தில் தான் அன்பையும் கோபத்தையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் ஆற்றலுள்ள தாய் தந்தையைப் போல தூய ஆவியார் செயல்பட்டு நம்முடைய பாவத்தைக் குறித்தும், எது நீதி? எது நியாயம்? என்பவற்றைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். சிலர் நம்மை அலட்சியப்படுத்தி நம்மைத் துன்புறுத்துவார்கள். அவர்களது அலட்சியங்களுக்கு மதிப்பு கொடுக்க ஆரம்பித்தால் நம்மால் நீதியைச் செய்ய முடியாது. தூய ஆவியார், நம்மை மனிதர் அலட்சியம் செய்தாலும் அதற்கு மதிப்பு கொடுக்காமல் உண்மையாய் நீதியை, நியாயத்தை வெளிப்படுத்துவார். தூய ஆவியார் சீடர்களிடம் நீதி என்பது பழிக்குப்பழி வாங்குவதல்ல என்பதை உணர்த்தினார். தவறு செய்தவர்கள், தங்கள் தவற்றை உணர வைப்பதே நீதி என்பதை உணர்த்தினார். 2020-ஆம் ஆண்டின் தொடக்கத்திலே அதிகமாக பேசப்பட்ட விவாதப் பொருள், நிறவெறி என்பதாகும். Black lives matters என்றொரு அமைப்பினர் இங்கிலாந்து நாட்டின் Bristol நகரில் நிறவெறிக்கு எதிராகப் போராட்டம் நடத்திய போது 17 ஆவது நுற்றாண்டில் அடிமைகளை விற்று, பணம் சம்பாதித்தவர் என்று சொல்லப்பட்ட Edward Golden என்பவரது சிலையை, இந்த அமைப்பினர் கயிறு கட்டி இழுத்து கீழே தள்ளி உடைத்தனர். பின்னர் தெருவில் இழுத்துக் கொண்டு போய் உள்ளூர் ஆற்றில் தள்ளினார்கள்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் கொடூரமாக சித்திரவதை செய்தவர்களை இப்படித் தான் பழிக்குப் பழி வாங்கி நீதியை நிலை நிறுத்த வேண்டும், நியாயம் செய்ய வேண்டுமென சீடர்களும் விரும்பினார்கள். ஆனால் தூய ஆவியார் அவர்களது இந்த நினைவுகள் நீதியல்ல, நியாயமல்ல, பாவம் என உணர்த்தினார்.

ஒரு மனிதரின் உயர்ந்த பண்பு எங்கே வெளிப்படுகிறது? அவர் நண்பர்களிடம் நடந்து கொள்ளும் தன்மையிலா? இல்லை. அவர் எதிரிகளிடம் எப்படி நடந்து கொள்கிறார் என்பதில்தான்.

சீடர்கள் தம்மைப் புரிந்து கொண்டவர்கள், நெருக்கமானவர்கள் என்பதற்காக அவர்களது பிழைகளைச் சுட்டிக் காட்டாமல் இருக்கவில்லை. மனிதர்கள் தங்களைப் பிடிக்காதவர்களைக் குறித்து இருக்கும் நல்லவற்றைத் தவறாகப் பரப்புவது போல, தூய ஆவியார் செயல்படவில்லை. பாவத்தை, நீதியை, நியாயத்தைச் சீடர்களுக்கும் உலகத்தாருக்கும் தெளிவாகக் கண்டித்து உணர்த்தினார், உணர்த்துகிறார்.

தூய ஆவியார் கிறிஸ்துவுக்குள் சீடர்களையும் நம்மையும் கொண்டு வருகிறார் (யோவா 14:16,20, உரோ 8:1,2, 2கொரி 5:17), கடவுளின் பிள்ளைகளாக மாற்றுகிறார் (உரோ 8:16,14, கலா 4:5-7), மாம்சக் கிரியைகளை அழிக்க உதவுகிறார் (உரோ 8:13, 1தெச 2:13, 1பேது 1:2), சபை மூலமாகத் தமது வல்லமையையும் ஞானத்தையும் வெளிப்படுதிதுகிறார் (1கொரி 12:7-11, 1கொரி 2:7, எபே 3:5,6), இறையரசில் பிரவேசிக்கச் செய்கிறார் (யோவா 3:5, கொலோ 1:13), ஜெப வீரர்களாக, பரிந்து பேசுவோராக மாற்றுகிறார் (எபே 6:18, உரோ 8:26, யூதா 20). மனிதர்களிடம் இரகசியங்களைச் சொன்னால் அவர்களிடம் நம் சுதந்திரத்தை இழந்து அடிமையாகிப் போவோம். ஆண்டவரிடம் நம் ரகசியங்களைச் சொன்னால் அவர் தூய ஆவியார் மூலம் நமது நினைவுகளைச் சுத்தம் செய்வார், தூய்மையானவர்களாக மாற்றுவார். விலக்க விலக்க வந்து சேரும் தூசி போல நினைவுகளால் ஏற்படும் பாவ மாசுகளை அகற்ற ஆவியாரிடம் நம்மை ஒப்படைப்போம்.

### *3. பெலத்தைப் புதுப்பிக்கிறார்* :

திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்த உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது (திப 2:2).

நம்முடைய வாழ்வுக்கு ஆண்டவருடைய பெலம் வேண்டும். நம்முடைய பெலம் குறைவுள்ளது. நமக்கு எதற்கெல்லாம் பெலம் தேவை என்பதைத் திருமறை தெளிவாகப் பட்டியலிடுகிறது. எதிரி முன் நிற்க (லேவி 26:37), எல்லாவற்றையும் செய்ய (பிலி 4:13), உள்ளான மனுஷனில் பெலப்பட (எபே 3:16), பிசாசை ஜெயிக்க (எபே 6:1-12), சத்தியத்தில் உறுதியாய் நிற்க (எபி 10:22), பாவத்திற்கு எதிர்த்து நிற்க (எபி 12:4), அன்பை அறிய (எபே 3:17-19), உயிர்த்தெழ (பிலி 3:21), சீயோனில் தேவசன்னிதியில் காணப்பட (திபா 84:7). ஆண்டவரின் பெலம் தேவை.

சரீரத்தில் கொஞ்சம் பலமிருந்தும் பலமேயில்லாத நிலையில் சீடர்கள் இருந்தார்கள். ஆண்டவர், தூய ஆவியார் மூலமாக அவர்கள் பெலத்தைப் புதுப்பிப்பேன் என வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார் (திப 1:8). அதேபோல அவர்களது பெலத்தைப் புதுப்பிக்கிறார். காணமுடியாத காற்று மிகவும் பெலமுள்ளது. இந்தக் காற்று தீயுடன் சேர்ந்து கொண்டால் காட்டுத் தீயாக எரிகிறது; காற்றுடன் தண்ணீரும் சேர்ந்து கொண்டால் பெருவெள்ளமாகிறது; காற்றுடன் ஓசையும் சேர்ந்து கொண்டால் பேரோசையாகிறது. இப்படியாகப் பயப்படுத்தும் காற்று அவர் கூட இல்லாத மேல் வீட்டறையை அசைத்தபோதும் அவர்கள் பயப்படவில்லை. ஏனென்றால் ஆவியாரால் அவர்கள் பெலப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

ஆவியாரால் பெலப்படுத்தப்படும் வரை அவர்களது பெலம், நல்லவர்களை மட்டும் சந்திக்க வேண்டும் என்று இருந்தது. இப்போது யாரையும் எதிர்கொள்ளலாம் என அவர்களது பெலம் புதுப்பிக்கப்பட்டது. தங்கள் வலிகளை வெளியே சொல்லி வடிகால் தேட நினைத்த அவர்களது மனம் அப்படியே மாறிப் போனது. இப்போது பிறர் வலிக்குத் திட பெலன் தருபவர்களாக மாறிப் போனார்கள். முன்பு தங்களுக்கென்று சில கூட்டத்தைக் கூட்டி, உரிமை பாராட்டி வாழ நினைத்தார்கள். ஆனால் தூய ஆவியாரின் பெலப்படுத்துதலுக்குப் பின் அவர்களது கால்கள் உலகமெங்கும் போகும்படி பெலனடைந்தன. அவர் விட்டுச் சென்ற இடத்தை விட்டு நகர விரும்பாமலிருந்தவர்கள், தூய ஆவியாரின் பெலத்தினால் நகர்ந்து எருசலேம் வரைக்கும் வந்து விட்டார்கள்.

தூய ஆவியார் எத்தகைய துன்ப ஆழத்திலிருந்தும் மனதை மீட்டெடுத்து பெலமளிப்பவராவார். பொய்யான மயக்கத்திலாழ்த்தி, கவலையைத் தற்காலிகமாக மறக்க வைக்கும் லாகிரி வஸ்துகள் போன்றதல்ல, அவர் அருளும் பெலம். அவர் அருளிய பெலம், லாகிரிப் போதை வஸ்துவால் ஏற்பட்டதெனச் சந்தேகமும் ஏற்பட்டது (திப 2:15). ஆனால் ஆவியாரின் பெலன் அவர்களைச் சமதளத்தில் இருந்து உயர்த்தி, இவ்வுலக மக்கள் யாவரையும் அன்பால் அணைத்துக் கொள்ள வேண்டிய உன்னதமானவர்கள் தாங்கள் எனப் பெலப்படுத்தியது. ஆகவே தைரியமாக, ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என உயரத்தில் நின்று சாட்சி கொடுத்தார்கள். முன்பு பயந்து போய் அடைத்துக் கொண்டு வீட்டங்கு நிலையிலிருந்தவர்கள் இப்போது ஒவ்வொரு மக்களின் மனக்கதவாகத் திறந்துக் கொண்டே போகிறார்கள். மாற்றமடைந்திருந்த அவர்களது அக உயரம் பல மடங்கு உயர்ந்திருந்தது. சாட்சியின் ஒவ்வொரு அருளுரையிலும் அவர்களது மனம் தூய ஆவியாரால் புத்தாக்கம் செய்யப்பட்டுக் கொண்டே இருந்தது. மக்கள் மனதின் அழுக்குகளையும், கறைகளையும் அருளுரைகள் துடைத்திருந்தன. தூய ஆவியாரால் அவர்களது பெலன் புதுப்பிக்கப்பட்டதால் கழுகைப் போல அவர்களுக்குப் பெலன் கிடைத்தது. அது உயிர்த்த கிறிஸ்துவுக்கு அருகில் அவர்களைக் கொண்டு சென்றது.

முரண்பட்ட வார்த்தைகளில் நினைவுகளும் கனவுகளுமாய் வாழவே நித்திரையில் கலந்து இருந்த சீடர்களைத் தூய ஆவியார் புதுப்பித்தார். கோடரியில் வெட்டுப்படும் மரம், வேர் இருக்கும் வரை அழாது. அது மீண்டும் தன்னைப் புதுப்பித்து, வேறு கிளை பரப்பும். வேராக ஆண்டவர் இருக்கும் வரை பயப்பட வேண்டாம். தழும்புகளைத் தடவிப் பாருங்கள், தளர்ச்சியை நீக்குங்கள். எத்தனை புயலடித்தாலும் இதயக் கதவை ஆண்டவருக்காகத் திறந்து வைத்திருப்போம். புத்தாக்கமும் புதிய விடியலும் அவரிடமிருந்து வரும்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

30-05-2021

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும்
முதலாம் ஞாயிறு & மும்மை ஞாயிறு

# நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம்

## WE WORSHIP THE TRIUNE GOD

தொநூ 1:1-28 | 2கொரி 13:11-14
திபா 2 | யோவா 1:1-18

**"ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக"** (2கொரி 13:13).

கிறிஸ்தவக் கோட்பாடுகளில் அதிக மோதலை உருவாக்கிய இன்னும் பல வினாக்களை எழுப்புகிற கடினமான ஒரு சிந்தனை மூவொரு இறைமை (திரித்துவம்). திருமறையில் மூவொரு இறைமை என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. இரண்டாவது நூற்றாண்டு இறையியலாளர் அந்தியோக்கியாவின் பேராயர் தியோபிலஸ், 'ட்ரையாஸ்' (Trias) என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தினார். தொடர்ந்து தெர்த்துலியன் (Tertullian) என்ற இறையியலாளர், 'ட்ரினிடாஸ்' (Trinitas) என்ற சொல்லை, தந்தை, மகன், தூய ஆவியாரைக் குறிப்பிடப் பயன்படுத்தினார். நான்காவது நுற்றாண்டு தொடக்கத்தில் திருச்சபையில் பல மாறுபட்ட சிந்தனைகள் உருவாயின. ஒன்று, மூன்று கடவுள்கள் கோட்பாடு (Tritheism), தந்தை, இயேசு, தூய ஆவியார் மூன்று கடவுள்கள் என்று சிலர் போதித்தனர். இரண்டாவது யூனிட்டேரியனிசம் (unitari anism). ஒரே கடவுள், அவர் தான் படைப்பாளர். மகன் படைக்கப்பெற்றவர், தூய ஆவியார் கடவுளின் ஆற்றலின் வெளிப்பாடு என்று சிலர் கற்பித்தார்கள். மூன்றாவது, மொனார்க்கியனிசம் (monarchianism). ஒரே கடவுள், ஒப்பந்தக் காலத்தில் (பழைய ஏற்பாட்டுக் காலம்) தந்தையாகவும், புதிய ஒப்பந்தக் காலத்தில் (புதிய ஏற்பாடு) மகனாகவும் பெந்தக்கோஸ்துக் காலத்துக்குப் பின் தூய ஆவியாராகவும் செயல்படுகிறார் என்பது இவர்களது சிந்தனை.

இம்மூன்று தவறான சிந்தனைகளினால் திருச்சபை திணறியது. எனவே கி.பி 325ஆம் ஆண்டு நிசேயாவில் நடைபெற்ற திருச்சபை மாமன்றத்தில் மூவொரு இறை (Trinity) என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது. கான்ஸ்டான்டிநோபிலில் நடைபெற்ற திருச்சபை மாமன்றம் இதனை உறுதி செய்தது. திருமறை ஆதாரங்களுடன் பற்றுறுதியை உறுதிப்படுத்த திருச்சபையால் உருவாக்கப்பெற்ற ஓரிறைக் கோட்பாடு இது. திருமறையில் படைப்பு தொடங்கி - திரித்துவச் சூத்திரங்கள் (Triniterian Formula) திரித்துவப் பாடல்கள் (Doxology), திரித்துவக் கட்டளை (command) சொல்லப்பட்டுள்ளன. ஆனால் இம்மறை பொருளை (mystery) விளங்குவதும் புரிந்து கொள்வதும் கடினம். பேராயர் அகஸ்டின் மூவொரு இறைமையைப் புரிந்து கொள்ள ஒருவர் முயன்றால் அவர் தன் மனதை

இழந்து விடுகிறார். மூவொரு இறைமையை மறுதலிப்பவர் தன் ஆன்மாவை இழந்து விடுகிறார். எனவே, மூவொரு இறைமையின் மறைபொருளை, பற்றுறுதிப் பட்டறிவுடன் (Faith experience) சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

சிலையர்மாக்கர் (Schleiermacher) என்ற இறையியலாளர் இக்கோட்பாடு கிறிஸ்தவக் கோட்பாட்டின் முகட்டுக்கல் (Coping stone of christian doctrine) என்கிறார். பிரேசில் நாட்டு இறையியலாளர் லியனர்டோ பாப் (Leonardo Boff), "அரசியல்-பொருளாதார திருச்சபைஅமைப்புகளில் திருத்தத்தைத் தரும் உள்ளான, ஆழமான இறை உறவு மூவொரு இறைமை" என்கிறார். இரக்கமில்லாத இன-நிற வெறிக் கொலைகள்-சமூகப் பொருளாதார வன்கொடுமைகள்-புலம் பெயரும் தொழிலாளர்கள்-விவசாயிகளின் மரண அவலங்கள் பெருகி வரும் காலத்தில் மூவொரு இறைமை, ஒரு கோட்பாட்டுடன் நின்று விடாமலிருக்க அறைகூவல் தருகிறது. திருமறையும் இதன் அறைகூவல்களைத் தெளிவுபடுத்துகின்றது.

### *1. பழமைவாதச் சிந்தனைகளைப் புதுக்கீடு செய்கிறது :*

(Translates our traditional understandings)

தொடக்கநூல் முதல் பிரிவு, கடவுள் படைப்பாளர் என்றும், எவ்வாறு தம் வார்த்தையால் படைத்தார், முழுப்படைப்பும் எவ்வாறு படைக்கப்பட்டது என்பதையும் விளக்குகிறது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் சூழலில், இப்பகுதி கடவுளின் இயக்க நிலையை வலியுறுத்துகிறது என்ற பார்வை, கடவுளைப் பற்றிய பழமைவாதச் சிந்தனைக்குப் புத்தாக்கம் தருகிறது. கடவுள் இயங்காமல் இயக்குகிறவர் (unmoved mover), கடவுள் நிலையானவர் (stable), மாறவே மாட்டார் (Unchanging God), கடவுள் உயரத்தில் இருக்கிறார் (God is up there) என்ற சிந்தனைகள் புதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மூவொரு இறைமை ஓர் இயக்கம் (movement). இது கடவுளின் அழகு (Beauty of God). ஏதேன் தோட்டத்தில் உலா வந்த கடவுள் மக்களுடன் தம்மை அடையாளப்படுத்துகிறார். ஒடுக்கப்பட்ட மக்களுடன் பாலைநிலத்தில் நடக்கும் கடவுள், எருசலேமில் - கலிலேயாவில் - சமாரியாவில் விளிம்பு நிலை மக்களுடன் நடக்கிறார். புலம்பெயர்ந்த மக்களுடன் நடக்கிறார். (God is not only Transcendent) கடவுள் தாண்டி அப்பால் நிற்பவர் அல்ல, அருகில் இருக்கிறார். வன்புணர்வினால் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவாக-தாம் படைத்து நல்லதென்று கண்ட இயற்கை அழிக்கப்படும் போதும்-இயற்கையோடுள்ள உறவு துண்டிக்கப்படும் போதும் இன்னும் கடவுள் போராடிக் கொண்டிருக்கிறார். இது தான் கடவுளின் அழகு. கடவுள் எட்டாத உயரத்தில் இருக்கிறார் என்ற பழமைவாதச் சிந்தனையைப் புதுக்கீடு செய்கிறது.

## *2. எல்லைகளைத் தாண்டிச் செல்கிறது :*
(Transcends the boundaries)

கொரிந்துத் திருச்சபையின் பிரிவினைகளைப் பவுலார் சந்திக்கிறார். அணி சார்ந்த பிரிவினைகள். பவுலைச் சார்ந்தவர்-கேபாவைச் சார்ந்தவர்-அப்பல்லோவைச் சார்ந்தவர் எனத் திருச்சபையில் பிரிவினைகள் புகுந்து விட்டன. யூதர்களுக்கும்-யூதர் அல்லாகோருக்குமிடையே பிரிவினை. பவுல் இப்பிரச்சினைகளில் பல கடினப்பாடுகளையும் தன் திருப்பணியில் சந்திக்கிறார். எனவே, மூவொரு இறை வாழ்த்து சொல்லி எல்லைகளைக் கடந்து உறவுடன் வாழ அழைக்கிறார். திருச்சபை குடும்பங்களின் குடும்பம். குமுகாயங்களின் குமுகாயம் (Community of communities). மார்ட்டின் லூத்தர் "கிறிஸ்து எங்கெல்லாம் திருச்சபைகளைக் கட்டுகிறாரோ, அங்கே சாத்தான் சிற்றாலயங்களைக் கட்டுகிறான்" என்கிறார்.இன்றைய திருச்சபை பிரிவினைகளினால் சாத்தானின் சிற்றாலயங்களாக மாறாமலிருக்க எல்லைகளைக் கடந்த உறவு, ஆண்-பெண் ஏழை-செல்வந்தன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற எல்லைகளைத் தாண்டும் உறவு உருவாக வேண்டும்.

## *3. மாற்றுருவாக்கம் செய்கிறது :* (Transforms of our actions)

மூவொரு இறைவர் செயல்பாடுகளில் மாற்றுருவாக்கம் செய்கிறார் (Triune God transforms our actions). வாக்கு மனிதனானார் என்றும், யோவான் மாற்றுருவாக்கத்திற்கான முதல் பணியைச் செய்தார் என்றும் யோவான் 1:1-18 வரையுள்ள பகுதியில் விளக்குகிறார். மூவொரு கடவுள் சுமைதாங்கும் கடவுள், இஸ்ரயேல் மக்களுக்கு உணவளித்த கடவுள், நகரத்துக்கு வெளியே வாழ்ந்த 5000 பேருக்கும் அதிகமான மக்களுக்கு உணவளித்த கடவுள், உரிமை - உணவு - உடை மறுக்கப்பட்ட இலாசருவின் பக்கம் நின்ற கடவுள், எரிகோ சாலையோரத்தில் குற்றுயிராக்கப்பட்ட மனிதனின் பக்கம் நின்ற கடவுள், எருசலேமிலும் யூதேயாவிலும் சமாரியாவிலும் பூமியின் எல்லை வரைக்கும் சான்றுகளை அனுப்பிய கடவுள், மாற்றுருவாக்கும் மூவொரு கடவுள் நம் செயல்பாடுகளிலும் மாற்றங்களை விரும்புகிறார்.

1963-ஆம் ஆண்டு மார்ட்டின் லூத்தர் கிங் சொல்லும் போது, "என்னுடைய நான்கு கறுப்புக் குழந்தைகள் தங்கள் தோலின் நிறத்தினால் அல்ல, தங்கள் குணங்களினால் நடத்தப்பட வேண்டும் என்று கனவு காண்கிறேன்" என்கிறார் (I have a dream, my four children will be judged not by the colour of their skin, but by the contact of their character). திருச்சபை கனவு காண வேண்டும். திருச்சபை அதிநுட்ப திரித்துவத்தின் திருஉருவம். (Church is the icon of the most holy Trinity). எனவே, மூவொரு இறைமையைக் கொண்டாடும் நாம், பழமைவாதச் சிந்தனைகளைப் புதுக்கீடு செய்து, எல்லைகளைத் தாண்டும் செயல்பாடுகளுடன் மாற்றுருவாக்கும் கனவு காண்போம். மூவொரு கடவுளின் சான்றுகளாக வாழ்வோம்.

அருள்திரு. முனைவர். M. **பீட்டர் சிங்**

06-06-2021

# விண்ணிலிருந்து வரும் ஞானம்

## WISDOM FROM ABOVE

1அர 3:16-28 யாக் 1:1-8
திபா 119:33-40 லூக் 10:21-24

**உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும்; அப்பொழுது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பவர்** (யாக் 1:5).

புதிய கல்வியாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களது புதிய வகுப்பு, புதிய பாடங்கள், தங்களின் கற்றல் திறமை போன்றவற்றை மனதில் கொண்டு புதிய எதிர்பார்ப்பில் இருப்பர். மாணவர்களில் சிலர் பெற்றோரின் வலியுறுத்தலின் பேரில் தங்களுக்கு விருப்பமற்ற கடினப் பாடப்பிரிவுகளில் சேர்ந்து கொண்டு பாடங்களைப் புரிந்து படிக்க இயலுமா? என்ற ஐயத்தில் சோர்வடைவோரும் உண்டு. இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் மிகவும் குறைவான கற்றல் திறனுள்ள மாணவர்களுக்குப் பொறுப்போடு கல்வியைப் புகட்டுவதில் ஆர்வம் கொண்டிருக்கும் ஆசிரியர்களும் பலர் உண்டு. கல்வி கற்பதற்கும் கற்பிப்பதற்கும் சிறப்புத் திறன் தேவைப்படுகிறது. இந்நாட்களில் கல்வி என்பது வியாபார நோக்கு, பொருளாதார மேம்பாடு போன்றவற்றோடு மட்டும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. எனவே கல்வி புகட்டுவதின் நோக்கமும், கற்பதின் நோக்கமும் வாழ்வின் உயர்ந்த நிலையை எட்டிப் பிடிப்பதற்கும், நன்றாகப் பணம் சம்பாதிப்பதற்குமே என்பது ஒரு சாதாரண மனிதனின் எண்ணமாயிருக்கிறது. மார்க் K. ஸ்மித் என்ற கல்வியாளர் கல்வி பற்றிக் கூறும்போது, “கல்வி என்பது உண்மை அல்லது மெய்யறிவையும் அதற்கான செயல்முறையையும் அழைத்தல் அல்லது வரவழைத்தல் என்கிறார்.” உண்மை அல்லது மெய்யறிவை ஞானம் எனலாம். யாக்கோபு அடிகளார் ஞானத்தைக் கடவுளிடமிருந்தே பெற்றுக்கொள்ள முடியும். எனவே குறைவான ஞானம் கொண்டிருப்போர், கடவுளிடம் கேட்கட்டும் என்கிறார். கடவுளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஞானம் கல்வியினால் பெற்றுக் கொள்ளும் வியாபார நோக்குடைய அறிவுக்கு வேறுபட்டது. ஞானம் எங்கேயிருந்து வரும்? என்ற கேள்விக்கு, “ஆண்டவருக்கு அஞ்சுங்கள் அதுவே ஞானம்” (யோபு 28:28) என்று யோபுவின் புத்தகமும்; ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே

ஞானத்தின் தொடக்கம் (நீமொ 1:7) என நீதிமொழிகள் ஆக்கியோனும் கூறுகின்றனர். விண்ணிலிருந்து பெறப்படும் ஞானத்தின் தகவுகள் எவை எனப் பார்ப்போம்.

***1. உண்மையை உய்த்துணரும் ஞானம்*** : (1அர 3:16-28)

தாவீது அரசருக்குப் பின்னர் இஸ்ரயேல் நாட்டை ஆளும் மன்னர் பொறுப்பு அவருடைய மகன் சாலமோனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்போது அவர் வயதில் மிகவும் சிறியவர். அவர் சிறியவரெனினும் பெரியோரை விட அதிக ஞானம் அதாவது உண்மையை உய்த்துணரும் ஞானம் அவருக்கு இருந்தது. அதனை அவர் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டார் (1அரச 3:9). இறைவனிடம் ஞானத்திற்கான அவரது மன்றாட்டு மிகத் தெளிவானதாக இருந்தது. "உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமையைப் பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்காகத் தந்தருளும்" (1அரச 3:9) என்று மன்றாடினார். உலகப்பட்டறிவின் தகவுகளான செல்வச்செழிப்பு, பகைவரின் பிராணன், உலகில் முதலிடத்தை எட்டிப் பிடிப்பதற்கான போட்டிகளில் வெற்றி போன்றவற்றிற்கு மாற்றாக, சாலமோன் இறைவனிடம் மன்றாடிய ஞானம் விளங்குகிறது. விண்ணிலிருந்து வரும் ஞானம் பல வாழ்வு சார்ந்த நன்மைகளான உண்மையைக் கண்டறிதல், நன்மையையும் தீமையையும் வகைப்படுத்தி உணர்ந்து கொள்ளல் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டது. சாலமோன் இத்தகைய தகவுகளைக் கொண்டிருந்தார். எனவேதான் அவரால் மிக சிக்கலான வழக்குகளையும் மிகச் சாதுரியமாகக் கையாண்டு நல்ல நீதியைத் தன் மக்களுக்கு வழங்க முடிந்தது. 1அர 3:16-28 வரை குறிப்பிட்டுள்ள குறிப்பு, இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. சாலமோன் அரசர் 'உண்மையான தாய்' இவர்தான் என்பதை உய்த்தறியும் ஆற்றல் பெற்றிருந்தார். யாக்கோபு அடிகளாரும் கூறும்போது, விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மை. மேலும் அது அமைதியை நாடும்; பொறுமை கொள்ளும்; இணங்கிப்போகும் தன்மையுடையது; இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது; நடுநிலை தவறாதது; வெளிவேடமற்றது (யாக் 3:17) என அதன் பண்புகளைக் கூடுதலாக எடுத்துரைக்கிறார். இதுவும் அவர் இறைவனிடத்தில் பெற்ற ஞானத்தின் அடிப்படையிலேயே கூறுகிறார். இன்று நாம் வாழும் சூழலில் மக்கள் பெற்றுள்ள ஞானம் பேய்த்தன்மை வாய்ந்ததாகவும், பொறாமையும், கட்சி மனப்பான்மையும் உடையதாக இருப்பதால்தான் குழப்பங்களும், கொடுஞ்செயல்களும் மலிந்து கிடக்கின்றன. இவை மண்ணுலகைச் சார்ந்தது; அழிவுக்கு இட்டுச் செல்லும். எனவே வாழ்வு சார்ந்த, விணணிலிருந்து வரும் ஞானத்திற்கு முதலிடம் கொடுப்போம்.

## *2. வீணானவற்றிலிருந்து விலகிக் கொள்ளும் ஞானம்* :

(திபா 119:37)

தாவீது அரசர் நுண்ணறிவுக்காக மன்றாடும் தனது இறைவேண்டலில் வீணானவற்றை நான் பாராதபடி என் கண்களைத் திருப்பி விடும் (திபா 119:37) என வேண்டுகிறார். காரணம் வீணானவற்றிலிருந்து விலகிக் கொள்ளுதல் ஞானத்தின் வெளிப்பாடு. கடவுள் கொடுத்த ஞானத்தில் தான், தாவீது அரசர் உண்மையுடனும், நேரிய உள்ளத்துடனும் நடந்து கொண்டார் (1அர 3:6). அவருடைய வாழ்விலிருந்து தான் சாலமோனும் செல்வம், எதிரிகளின் சாவு, புகழ், சுயநலம் போன்றவை நிலையற்ற, வீணான மாயை என்பதைக் கற்றுக் கொண்டார். எனவே அவற்றை ஒதுக்கி விட்டு விண்ணிலிருந்து பெறும் மாசற்ற, தூய்மையான ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ விரும்புகிறார். கடவுளுக்கு அஞ்சி நடப்பதும், திருச்சட்டத்தின்படி வாழ உந்துதல் பெறுவதும் கடவுள் கொடுக்கும் மெய்யுணர்வினாலேயே (திபா 119:34,38). அத்தகைய மெய்யுணர்வின்படி வாழ்வதால் கடவுள் அருளும், நலமார்ந்த நீடித்த வாழ்வு வாழலாம் (திபா 119:40). ஆனால் பிற்காலத்தில் இஸ்ரயேலர்கள் எனப்படும் கடவுளின் மக்கள், இவை உண்மையென அறிந்திருந்தும் இறைவனின் கற்பனைகளைக் கைக்கொள்வதிலிருந்து தவறிவிட்டனர். எனவே அழிவைச் சந்தித்தனர்; சிதறடிக்கப்பட்டனர். ஆம், விவேகிகள் எதிரில் வரும் ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்வர். ஆனால் அறிவற்றவர் அதன் எதிரே சென்று கேட்டுக்கு ஆளாவர் (நீமொ 22:3). இன்று நாம் வாழும் உலகத்தை டிஜிட்டல் உலகம் என்று சொல்லலாம். உலகமே ஒரு சிறிய கைப்பேசிக்குள் அடங்கியிருக்கிறது. இதனால் பல நன்மைகள் இருந்தாலும், அதனுள்ளே ஆழமாகச் சென்று வேரூன்றி விட்டால், அது நம் வாழ்வையே அழித்துவிடும். இத்தகைய ஆபத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள நமக்கு விண்ணிலிருந்து வரும் ஞானம் தேவை. இத்தகைய ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் கடமை.

## *3. கேட்போருக்கு அருளப்படும் ஞானம்* : (யாக் 1:5)

தமிழகராதி ஞானம் என்பது என்ன என்பதைப் பற்றி அழகாக விளக்குகிறது. அறிவை அல்லது அனுபவத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்கு ஒத்த முடிவுகளும் மதிப்பீடுகளும் செய்யும் ஆற்றல் என்பதாகும் ‘பகுத்தறிவு,’ “விவேகம்,” “மெய்யறிவு,” “மதிநுட்பம்” போன்றவை அதன் பல்வேறு பொருள்கள் என விளக்கமளிக்கிறது. யாக்கோபு அடிகளார் ஒரு வயது மூத்த பெரியவராக ஞானத்தில்

குறைவுள்ளோர் யாரிடத்தில் கேட்க வேண்டும் என்பதைத் தனது அனுபவத்தினடிப்படையில் தெளிவாகக் கூறுகிறார். “உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும்; அப்பொழுது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பார்” (யாக் 1:5) என்கிறார். சாதாரண எளிய மனிதராகிய யாக்கோபு ‘நடைமுறை வாழ்வின் வழிகாட்டி’ எனப்படும் யாக்கோபு திருமுகத்தை எழுத, தேவையான ஞானத்தை ஆண்டவரிடமிருந்தே பெற்றுக் கொண்டார். இத்தகைய இறைஞானத்தின் பன்முகங்களாகிய பகுத்தறிவு, விவேகம், மெய்யறிவு, மதிநுட்பம் போன்றவை கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவருக்கும் தேவை. இத்தகைய ஞானமே உலகம் சென்று கொண்டிருக்கும் தற்போதைய நிலையைப் பகுத்தறிந்து மதிப்பீடு செய்யத் தேவையானது; கல்வி அறிவையும் நடைமுறைக்கு ஒத்ததாக மாற்றத் தேவையானது. ஆண்டவரின் திருச்சட்டம் அதாவது திருமறை எளியவருக்கு ஞானம் அளிக்கின்றது (திபா 19:7). ஆகவே திருமறையைத் தினந்தோறும் ஒழுங்காகப் படித்து தியானம் செய்வதின் மூலமும் தினந்தோறும் இறைவனிடம் ஞானத்திற்காக உண்மையாக மன்றாடுவதின் வழியாகவும் இத்தகைய இறை ஞானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த ஞானம் பெரியோர், சிறியோர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும், குழந்தைகளுக்கும் அருளப்படுகிறது (லூக் 10:21). எனவே வாழ்வு தரும் ஞானத்தை இறைவனிடம் பெற்று ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்வார்களாக.

அருள்திரு. G. **சாம் ரிச்சர்ட் நெல்சன்**

13-06-2021

சுற்றுச்சூழல் ஞாயிறு

# இறைமாட்சியைப் பறைசாற்றும் படைப்பு

**CREATION PROCLAIMS GLORY OF GOD**

நீமொ 8:22-31 திவெ 21:1-8
திபா 19 லூக் 8:22-25

**“வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது”** (திபா 19:1).

நாம் வாழும் இந்தப் பூமி எதிர்பாராமல் எங்கிருந்தோ முளைத்துவிட்ட ஒன்றல்ல. பூமியில் வாழும் உயிரினங்களும் எப்படியோ வந்தவை அல்ல. அனைத்தும் இறைவனின் படைப்புகள். ஒழுங்கற்றதும் வெறுமையுமாய் இருந்த இந்தப் பூமியை ஒழுங்குபடுத்தி ஆண்டவர் தம் ஞானத்தால் நேர்த்தியாய்ப் படைத்திருக்கிறார் (நீமொ 8:22-31).

> “ஆனைத்தும் அவரால் உண்டாயின; உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை” (யோவா 1:3).
>
> “ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது” (திபா 104:24).

கடந்த இருபது ஆண்டுகளில் சூழியலாளர்களிடையே அதிகம் உச்சரிக்கப்பட்ட சொற்கள் புவி வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம், பசுங்குடில் விளைவு, கரிம உமிழ்வு போன்றவையாகும். இவைகள் நமக்கு அவசியமற்ற அல்லது தினமும் பயன்படுத்தாத சொற்களாக இருந்தாலும் இதன்விளைவுகள் நம் அன்றாட வாழ்வை ஏதோ ஒருவகையில் பாதித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் நாம் எந்தவகையிலும் காரணமில்லை என்று ஒதுங்கிக் கொள்கிறோம். ஆனால் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வுக்கு நாம் ஒவ்வொருவரும் எந்த அளவுக்குப் பொறுப்புடனும் அக்கறையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கொரோனா பெருந்தொற்று நமக்கு உணர்த்தியிருக்கிறது. ஒரே ஒரு புவிக்கோள், வாழும் மக்களோ கிட்டத்திட்ட 800 கோடி, மற்றும் எண்ணிலடங்காப் பிற உயிரினங்கள். கரிசனையுடன் இதனைப் பயன்படுத்துவதே இறைமாட்சிமையை வெளிப்படுத்தும். இறைவனால், அவர் திட்டப்படி, அவர் வார்த்தையால் படைக்கப்பட்ட படைப்புகள் அனைத்தும் கடவுளின் மாட்சிமையை பறைசாற்றுபவை. ஏனென்றால், “மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை; நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம். கடல்கள் மீது அதை நிலைநாட்டினவரும் அவரே” (திபா 24:1,2).

சூரியன் பூமிக்கு ஒளி கொடுக்கிறது. பூமி தன்னைத்தானே சுற்றுவதோடல்லாமல் சூரியனையும் சுற்றி, தன் அச்சிலிருந்து விலகாதவாறு, நின்று, கடவுளின் மாட்சியை வெளிப்படுத்துகின்றது. கடல் தன் எல்லையை நிர்ணயித்து எண்ணிறந்த உயிரினங்களைத் தனக்குள் அடைக்கலமாக்கி இறைமாட்சிமையைப் பறைசாற்றுகின்றது. சந்திரன், விண்மீன்கள் தங்கள் பாதையை ஒருபோதும் தவறவிடுவதில்லை. மரம், செடி கொடிகள் அதனதன் காலத்தில் பூக்களையும், காய், கனிகளையும் உற்பத்தியாக்குவதின் வழியாய்க் கடவுளின் மாட்சிமையைப் பறைசாற்றுகின்றன.

மனுக்குலம் வாழ்வதற்கு மிகவும் தேவையானது நிலம், நீர் காற்று. இவைகள் இறைவனின் படைப்புகளாய் உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளாய் இருக்கின்றன. படைப்பின் வரலாற்றில், ஒவ்வொரு நாள் படைப்பின் நிறைவிலும், தாம் படைத்த படைப்புகளைப் பார்த்து மகிழ்ந்தார், நல்லது என்று கண்டார் ஆண்டவர். படைப்பின் நிறைவாக, மனிதனைப் படைத்த ஆண்டவர், முதல் மனிதக் குடும்பமாகிய ஆதாம் மற்றும் ஏவாளோடு உரையாடினார், உலாவினார், பொறுப்புடன் வாழ்வதற்கு ஆலோசனையையும் தந்தார். ஆனால் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் மனித இனம் பாவத்தால் வீழ்ந்தபோது, மனிதனைப் படைத்ததற்காக அவர் மனம் வருந்தினார். இறைவனின் திட்டத்திலிருந்து மனுக்குலம் விலகிச் செல்லும் போது, தன் பாதுகாப்பை இழந்து வருவதோடு கடவுளின் கோபத்திற்கும் உள்ளாக்கப்படுவதை வரலாறு நமக்குக் கற்றுத் தருகிறது.

இறைவனின் மாட்சிமையைப் பறைசாற்றும் படைப்புகளாய் நாம் வாழ்வது எப்படி? நமது கடமை என்ன? இறைவனின் எதிர்பார்ப்பு என்ன? என்பதைத் தொடர்ந்து தியானிப்போம்.

### *1. பொறுப்புள்ள குடிமக்களாய் இறைமாட்சியைப் பறைசாற்றுவோம்* :

இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகம் புனிதமானது. இந்தப் புனிதத் தன்மையை உணராதபோது அல்லது மதிக்காத போதுதான் அனைத்தும் அழிவைச் சந்திக்கிறது. ஒழுங்கற்றதும் வெறுமையுமாய் இருந்த பூமியை ஒழுங்குபடுத்தி, நேர்த்தியாய் அனைத்தையும் படைத்தார் ஆண்டவர். அனைத்தும் நல்லது என்று கண்டார். அனைத்து இயற்கை வளங்களையும் கண்டு மகிழ்ந்தார். பண்படுத்திப் பாதுகாக்கும் பொறுப்பினை ஆதாம் மற்றும் ஏவாளின் கரங்களில் ஆண்டவர் கொடுத்தார். இன்று நம் கரங்களில் கொடுத்திருக்கிறார். பூமியின் வளங்களைப் பொறுப்பற்ற நிலையில் நாம் பயன்படுத்தி அழிப்பதன் விளைவு நம் நலமான வாழ்வை அழிப்பதோடு எதிர்கால வழிமரபின் வாழ்வாதாரங்களையும் முழுமையாய் அழித்து விடுகிறோம்.

தன் பொறுப்பினை உணராத மனிதன், இயற்கை மீது அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்துபவனாக மாறியிருக்கிறான். நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், இயற்கை வளங்களையும் நாட்டுமக்களையும் பாதுகாக்க வேண்டியது அவர்களது பொறுப்பு. ஆனால் இன்று இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு, இலாபம் ஒன்றையே குறிக்கோளாக வைத்து தனி நபர்களுக்குத் தாரைவார்க்கப்படுகிறது. அனைத்து உயிரினங்களுக்குமான இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது.

யுனெஸ்கோவால் (UNESCO) பாதுகாக்கப்பட்ட மேற்குத் தொடர்ச்சிமலை வனப்பகுதிகள் அழிக்கப்பட்டு தனியார் முதலாளிகளின் சொத்தாகி வருகின்றன. கடந்த 30 ஆண்டுகளில் மட்டும் 23,716 தொழிற்சாலைத் திட்டங்களுக்காக 14,000 சதுர கிலோமீட்டர் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இது நாகலாந்து மாநிலத்தின் நிலப்பரப்புக்கு இணையானது. இறைவன் படைத்து, சூழியலைச் சமநிலைப்படுத்த அமைத்திருக்கின்ற இயற்கையான காடுகளை அழிக்க முனைவது நாட்டைக் குப்பை மேடுகளாக்க முயல்வது போன்றே தோன்றுகிறது. மட்டுமல்ல காடுகள் அழிக்கப்படுவதால் காட்டு விலங்குகளின் இடப்பெயர்ச்சி வேகமாகிக் கொண்டிருக்கிறது. கூடவே அவை கொடிய நோய்களை உருவாக்கும் விதவிதமான நுண்கிருமிகளையும் (virus) சுமந்து செல்கின்றன. இதன் விளைவே கொரோனா போன்ற வைரஸின் தாக்கம் என்றும் விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்.

விழிப்புடனும், பொறுப்புடனும் ஒவ்வொரு மனிதனும் செயல்படவில்லையெனில் படைப்புகளின் அழிவை எவரும் தடுத்திட இயலாது. கடவுள் ஆதாம்-ஏவாளை ஏதேன் தோட்டத்துக்குக் கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (தொநூ 2:15). நாம் வாழும் இந்தப் பூமியைப் பயன்படுத்துவது மட்டுமல்ல பண்படுத்திக் காக்கும் பொறுப்பை ஆண்டவர் நம் கரங்களில் கொடுத்திருக்கிறார். பொறுப்புள்ள குடிமக்களாய்/ இறைமக்களாய்ப் பூமியைப் பாதுகாத்து, வளப்படுத்தி இறைமாட்சிமையைப் பறைசாற்றுவோம்.

### *2. புனரமைக்கும் பணியாளர்களாய் இறைமாட்சியைப் பறைசாற்றுவோம்* :

கடவுள் தம்மால் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புகளையும் பார்த்து அவை நல்லது என்று கண்டார் (தொநூ 1:25). ஆனால் ஆதாம், ஏவாள் என்ற தொடக்க மனிதர்களின் கீழ்ப்படியாமை அவருக்கு மனஸ்தாபத்தை ஏற்படுத்தியது. கீழ்ப்படியாமையின் விளைவு பாவமும் வன்முறையும் பூமியில் பெருக ஆரம்பித்தது. அழிவுக்கு நேராய் சென்று

கொண்டிருந்த மனுக்குலத்தைப் புனரமைக்க, சீரமைக்க கடவுள் விரும்பினார். திருமறை முழுக்க வரலாற்றில் புனரமைக்கும் கடவுளாய் இறைமக்களின் விடுதலைப் பணியில் செயல்பட்டிருப்பதை அறிந்திட முடிகிறது.

கடவுளுக்கு உலகுடன் ஓர் உடன்படிக்கை உண்டு. அந்த உடன்படிக்கையின் வழியாய் உலகை மீட்கவே விருப்பம் கொள்கிறார் என்பதுவே திருமறைச் செய்தி. எனினும் வானமும் பூமியும் வையகமும் மனுக்குலமும் கடந்து செல்லும் நிலைக்குட்பட்டது. மரணம் தவிர்க்க இயலாதது. மனிதன் அழிவுக்குட்பட்டவன். நிலம் நிலை குலைவுக்குட்பட்டது. படைப்பு அழிவுக்குட்பட்டது எனப் பவுலடியார் குறிப்பிடுகிறார் (உரோ 8:21). படிப்படியான இவ்வழிவு பாவத்துடன் தொடர்புடையது. குடியேற்றம், முன்னேற்றம் என்னும் பெயரில் நிலம் சூறையாடப்படுகிறது. பூமியில் சுயநலமிக்க ஆட்சியாளர்களால் குற்றமற்றோரின் இரத்தம் சிதறிக் கிடக்கின்றது.

உலகப் போரில் 60 இலட்சத்திற்கும் அதிகமான யூதமக்களை கொலைசெய்த ஹிட்லரின் செயலை இந்த உலகம் மறந்துவிடுவதில்லை. ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டின் தீப்பிழம்புகளால் மாண்டுபோன உயிர்களை மண்ணுலகும் விண்ணுலகும் மறந்துவிடுவதில்லை. இன்றும் ஒவ்வொரு நாளும் இந்தப் பூமியும் உயிர்களும் அலட்சியமாய் அழிக்கப்படுகின்றன. எனவேதான் ஆண்டவர் யோவானுக்குக் கொடுத்த காட்சியில், “இதோ நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்” என்கிறார் (திவெ 21:1,5).

வளர்ச்சி என்ற போர்வையில் இயற்கை வளங்களை அழித்து தொழிற்சாலைகளை அமைப்பது எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கும் முயற்சியாகும். சுற்றுச்சூழலுக்கு மிகுந்த அச்சுறுத்தலான (EIA 2020) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை 2020 - இந்திய அரசால் அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்பட்டிருப்பது ஆபத்து நிறைந்த முயற்சியாகும்.

அரசாலும் சுயநலமிகு மனிதர்களாலும் பாதிப்புக்குள்ளாக்கப்படும் இந்தப் பூமியைச் சீரமைக்கும் பணியினை இறைவன் நம் கரங்களில் கொடுத்திருககிறார். நாம் வாழும் பகுதிகளில் இன்று நீர் நிலைகள், நீரோடைகள், மலைகள் பராமரிப்பின்றி அழிக்கப்படுகின்றன. இவைகளைக் கண்டும் காணாதவர்கள் போல் நாமும் சென்று விடுகிறோம். புனரமைக்கும் பணியாளர்களாய் ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். இறைவனின் படைப்புகளைக் காத்து, சீரமைக்கும் பணியை

அலட்சியப்படுத்துவது மனித வாழ்வைக் கேள்விக் குறியாக்கிவிடும். விழிப்புடனிருந்து சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே விடுதலைப்பணியில் ஆண்டவர் அனைவரையும் அமர்த்தியிருக்கிறார்.

பக்தர் யோபு மனித வாழ்வு பற்றிக் குறிப்பிடும் போது, "மரத்திற்காவது நம்பிக்கையுண்டு; அது தறிக்கப்பட்டால் மீண்டும் துளிர்க்கும்; அதன் குருத்துகள் விடாது துளிர்க்கும். அதன் வேர் மண்ணில் பழமை அடைந்தாலும், அதன் அடிமரம் நிலத்தில் பட்டுப் போனாலும், தண்ணீர் மணம் பட்டதும் அது துளிர்க்கும். இளஞ்செடிபோல் கிளை விடும். ஆனால் மனிதர் மடிகின்றனர் மண்ணில் மறைகின்றனர்; உயிர் போனபின் எங்கே அவர்கள்?" (யோபு 14:7-10).

ஆண்டவர் நமக்கு அருட்கொடையாகக் கொடுத்திருக்கும் காலங்களில் அவர் விரும்பும், பணித்திருக்கும் கடமைகளை நிறைவேற்றி புவியைச் சீரமைத்திடச் செயல்படுவோம்.

"இயற்கையிடம் ஒவ்வொருவருடைய அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற போதுமானவை உள்ளன. ஆனால் மனிதருடைய பேராசையை நிறைவு செய்ய இயற்கையிடம் வளங்கள் இல்லை" என்றார் காந்தி.

கிமு எட்டாம் நுற்றாண்டில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களிடம், பொருளாசைச் சிந்தனை மேலோங்கி இருந்தது. பூமி கடவுளுடையது. ஆனால் அதை நினையாதவர்களாய் வீட்டோடு வீடு சேர்க்கவும், வயலோடு வயல் சேர்த்து பிறர் வாழ்வை அழித்து, ஏழைகளை நசுக்கி அவர்களுடைய நிலத்திலேயே அடிமைகளாக்கினர். மனிதனின் தன்னலமும் பேராசையுமே இன்றும் இயற்கை அழிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கும் கேட்டினை உருவாக்கியிருக்கின்றது.

"படைப்பு அனைத்துமே கடவுளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி" என்கிறார் பிரான்சிஸ் அசிசி. கடவுள் அழகாய்ப் படைத்து, பண்படுத்தி, பாதுகாத்து, பயன்படுத்துவதற்காய் நமது கரங்களில் கொடுத்திருக்கிற இந்தப் பூமி வழிமரபினர் வளமாய்ப் பயன்படுத்துவதற்கானது. பொறுப்புள்ள குடிமக்களாய் நாம் செயல்படுவதும், புனரமைக்கும் பணியாளர்களாய் உழைப்பதுமே புவியைப் பாதுகாப்பதற்கான வழி என்பதை உணர்ந்து, அர்ப்பணித்து கடவுளின் மாட்சியைப் பறைசாற்றும் அற்புதப் படைப்புகளாய் வாழ்ந்திடுவோம்.

அருள்திரு. J. **வின்செண்ட் றாபர்ட்**

20-06-2021

## உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுங்கள்

**WORSHIP THE LORD IN TRUTH AND SPIRIT**

எசா 6:1-8 | 2தெச 2:13-17
திபா 139 | யோவா 4:15-26

**"கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்"** (யோவா 4:24).

வழிபாடு என்பது இறைஉறவின் சின்னம். அது மனுக்குலத்தை இணைக்கும் சின்னமாகும். எனவே வழிபாடு என்பது வெறும் மனித முயற்சியல்ல. அது இறைவரின் அருட்கொடைக்கு அவரருளால் மனிதரிலிருந்து எழும் மறுமொழியாகும். ஆகவே அத்தகைய மறுமொழியை வழிபாடு என்று கூறுவதை விட இறை-மனித உறவு என புரிந்து கொள்வது தான் சிறப்பு. விவிலிய ஆய்வாளர்களின் கருத்துப்படி விவிலியத்தில் காணப்படும் நீண்ட உரையாடலில் ஒன்று தான், இயேசு கிறிஸ்துவுக்கும் சமாரியா பெண்ணுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் (யோவா 4:4-29). 'தோரா' என்னும் முதல் ஐந்து நூற்களை மட்டும் ஏற்றுக்கொண்ட சமாரியர்கள் 'கெரிசீம்' மலையில் மட்டும் சென்று வழிபடும் வழக்கம் உடையவர்கள். யூதரோடு எவ்வித உறவும் கொள்ளாமல் பகைமை உணர்வோடு வாழ்ந்து வந்தவர்கள், யூதர்களால் தாழ்த்தப்பட்டவர்களாக நடத்தப்பட்டார்கள். எருசலேமுக்குச் சமாரியாவின் வழியாகப் போவது சுலபமாயிருந்தாலும், சமாரியா வழியாகச் செல்வதைத் தவிர்த்து யோர்தான் ஆற்றையும் கடந்து சுற்றுப்பாதையில் சென்றுவருமளவும் இவர்கள் மீது வெறுப்பு கொண்டு இருந்தவர்கள், யூதர்கள். இப்படிப்பட்ட கடுமையான சமூகக் கட்டுப்பாட்டுச் சூழ்நிலையிலே, இயேசு சமாரியா வழி செல்லுகிறார். வழியில் சமாரியா பெண்ணை, கிணற்றண்டையில் சந்திக்கிறார். இவர்களுடைய உரையாடலானது சமாரியரின் வழிபாட்டு மையமாக இருந்த - "சிக்கார்" என்ற இடத்தில் நடந்தது. இவ்வுரையாடலின் மையக்கருத்து "வழிபாடு" என்பதாகும்.

உலகைப் படைத்த உன்னதரோடு உறவாடும், உரையாடும் உன்னத வேளை தான் வழிபாடு. இந்த வழிபாடு வழியாக மனிதனுக்கும் கடவுளுக்குமிடையேயுள்ள உறவு வலுவடைகிறது, வளர்கிறது. உண்மையாகவே சிக்காரில் யாக்கோபின் கிணற்றண்டையிலே சமாரியா பெண்ணிற்கு ஆண்டவரைச் சந்திக்கும் இணையற்ற நேரம் கிடைத்தது. இந்தச் சந்திப்பு சமாரியா பெண்ணிற்கு ஒரு வழிபாடு வேளையைப் போலவே அமைந்தது. வழிபாடு முழுமைபெற உண்மையோடும்

ஆவியோடும் ஆண்டவரை வழிபட வேண்டும் என்று இயேசு சமாரியா பெண்ணுக்குக் கற்றுக் கொடுக்கிறார். இங்ஙனம் வழிபடுவதினால் வரும் உன்னத அனுபவங்களைக் குறித்து திருமறைப் பகுதிகளின் வெளிச்சத்தில் தியானிப்பது சிறப்பானதாகும்.

### ***1. தூய்மையின்மையை உணர உதவும் வழிபாடு*** :

கிறிஸ்தவத்தின் தொடக்கமே தூய்மையின்மையை உணருதலில் அல்லது தவற்றை உணருவதில் தான் இருக்கிறது. வழிபாடு நமது தூய்மையின்மையை உணர உதவி செய்கிறது. கடவுளின் மகிமைக்கு அடையாளமாக ஆலயம் புகையால் நிரம்பியதைக் கண்ட எசாயா, கடவுளுடைய மகிமைக்கு முன் நின்று வழிபட வந்திருக்கும் தன் தூய்மையற்ற நிலையையும் கண்டார். “அவர்களுள் (சேராபீன்களில்) ஒருவர் மற்றவரைப் பார்த்து படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர், மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது.” (எசாயா 6:3) என்ற குரலைக் கேட்டவுடனே, எசாயா, ‘ஐயோ நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்; தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்’ (எசா 6:5) என்றார்.

அதுபோலவே யாக்கோபின் கிணற்றருகே சமாரியாபெண் ஆண்டவரோடு உரையாடும் போது இயேசுவைப் பார்த்து ‘எனக்குக் கணவர் இல்லையே என்றார், இயேசு அவரிடம் எனக்குக் கணவர் இல்லை என நீர் சொல்வது சரியே.’ உமக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள். என்றாலும் இப்போது உம்முடன் இருப்பவர் உம் கணவர் அல்ல. எனவே நீர் கூறியது உண்மையே என்றார் (யோவா 4:17,18). இப்படி தனது தூய்மையின்மையை உணர்ந்து அறிக்கையும் செய்தாள். உண்மையாய் வழிபடுதல் என்பது “உள்ளதை உரைப்பதும், உள்ளத்தை வெளிப்படுத்துவதும்” ஆகும். The true worship should help us to identify the real sinful nature and prompt us to the reconciled relationship with God. தற்காலத்தில் இறைமக்கள் வழிபாட்டில் தங்களது தூய்மையின்மையை உணர்வதைவிட, பரவசமாய் இருக்க வேண்டும் என்று தான் கரிசனை கொள்கிறார்கள். ஆனால் இறைமக்கள் பேரரசனாகிய தாவீதைப் போல.... “உமது திருமுன்னிலிருந்து நான் எங்கே தப்பியோட முடியும்?” (திபா 139:7) ஏனெனில் என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தவையே என்று எப்போதும் “உள்ளதையும் உள்ளத்தையும் கடவுளுக்கு முன் மறைக்காமல் ஒளிவுமறைவின்றி உண்மையாய்க் கடவுளை வழிபடுவது நன்மை தரும்.”

### ***2. தூய்மையடைய உதவிடும் வழிபாடு*** :

கோவிலில் கடவுளை வழிபட சென்ற எசாயா தன் தூய்மையின்மையை உணர்ந்து, தன் நிலையை வழிபாட்டில், அறிக்கை செய்த வேளையில் கடவுள் அவரைத் தொட்டுத் தூய்மைப்படுத்தினார். எப்படியெனில், “அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலிபீடத்திலிருந்து

நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அதைத் தம் கையில் வைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பறந்து வந்தார்" (எசா 6:7), "அதனால் என் வாயைத் தொட்டு, இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப் பழி உன்னை விட்டு அகன்றது; உன் பாவம் மன்னிக்கப்பட்டது (எசா 6:7)" என்றார். அது போலவே இயேசு கிறிஸ்துவோடு உரையாடிக் கொண்டிருந்த பெண் தன் தூய்மையின்மையை உணர்ந்தாள், உள்ளத்தையும் உள்ளதையும் மறைக்காமல் பகிர்ந்து கொண்ட போது ஆண்டவர் அவள் ஒரு தாழ்குலத்தவள், ஏழை, தீண்டத்தகாதவள், ஒதுக்கப்பட்டவள், ஒடுக்கப்பட்டவள், ஒழுக்கக் கேடானவள் எனப் பிறரைப்போல ஓரங்கட்டாமல் தொடர்ந்து உரையாடினார். இச்செயல் வழி தூய்மையின்மையை உணர்ந்த பெண்ணை ஏற்றுக் கொண்டார் என்று புரிந்து கொள்ள முடிகிறது. மேலும் சமாரியப் பெண் இயேசுவிடம் "நீர் யூதர், நானோ சமாரியப் பெண், நீர் என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்பது எப்படி? " (யோவா 4:9) என்றும், எம் தந்தை யாக்கோபை விட நீர் பெரியவரோ? என்றும் இரண்டு வினாக்களை எழுப்பியும், வாழ்வு தரும் ஊற்றாம் இயேசு அவளைப் புண்படுத்தாமல் புறக்கணியாமல் பற்பல உண்மைகளைப் புரிந்து கொள்ள வைத்தார். உண்மையோடு கடவுளை வழிபடும்போது தூய்மையடையவும், அறியாமையினால் நாம் எழுப்பும் வினாக்களுக்குரிய விடையை விலைமதிப்பற்ற கடவுளுடைய வார்த்தையின் வழி அவர் தெளிவுப்படுத்துகிறார். அங்ஙனமே, தூய பவுல் தெசலோனிக்கப் பட்டணத்தாரிடம்....."தூய ஆவியால் தூய்மையாக்கப்பட்டு, நீங்கள் உண்மையை நம்பி மீட்பு அடையும்படி, கடவுள் உங்களை முதன்முதலாகத் தேர்ந்து கொண்டார் (2தெச 2:13)" என்று கடிதத்தின் வழியாக அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களுக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினார். Worship is an absolutely indispensable part of the Christian experience. Because it involves the concepts of cleaning, purifying, confession and repenting. உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுவதன் வழியாக நாம் தூய்மையடையலாம் என்பதை மறந்து வழிபாட்டில் பயன்படுத்தப்படும் வியூகங்களும், ஆடம்பரங்களும், ஆடையலங்காரமும் ஆரவாரமும் தான் வழிபாட்டிற்கு அழகு சேர்க்கும் என எண்ணுகிறார்கள் பலர்.

### *3. தூயவரைக் குறித்த அறிவில் வளர உதவிடும் வழிபாடு:*

சக மனிதரோடு உரையாட உரையாட அந்த நபரைக் குறித்து அதிகமாய் அறிந்து கொள்ளவும், அவர்களது பண்பினைப் புரிந்து கொள்ளவும் முடியும். அதுபோலவே உண்மையாய் ஆண்டவரை வழிபடும் போது அவரைக் குறித்த அறிவிலும், புரிந்து கொள்ளுதலிலும் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் கண்டு கொள்ள முடிகிறது. எசாயா

ஆலயத்தில் கடவுளை வழிபட்டுக் கொண்டிருந்த போது தன் தூய்மையின்மையை உணர்வகிலும், தன்னைத் தூய்மைப்படுத்திய தூயவராகிய கடவுளைக் குறித்த அறிவிலும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் கண்டார். குறிப்பாக, எசா 6:3-இல் எசாயா கடவுளை, "தூயவர்" என்று கண்டார். பின்பு கடவுளை, "படைகளின் ஆண்டவராகிய அரசர்" (எசா 6:5) என்று புரிந்து கொள்வதில் முதிர்ச்சியைக் கண்டார். அப்படியே சமாரியப் பெண் இயேசு கிறிஸ்துவை, யோவா 4:9-இல் ஒரு யூதராகக் கண்டாள், பின் யோவா 4:11,15-இல் "ஐயா" என்று அவரை ஆண்டவராகக் கண்டாள். அதன்பின் யோவா 4:19-இல் "நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டு கொண்டேன்" என்று புரிந்து கொண்டவர், யோவா 4:25,29-ல் "மெசியாவாக", அதாவது நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதர் எனக் கண்டாள். இப்படி சமாரியப்பெண் உரையாடலின் வழி தூயவராம் ஆண்டவரைக் குறித்த அறிவில் வளர்ச்சியையும் மற்றும் முதிர்ச்சியையும் கண்டார். இத்தகைய வளர்ச்சியும் முதிர்ச்சியும் தான் நமது பற்றுறுதியை மெருகூட்டும் அல்லது உறுதிப்படுத்தும். ஆனால் ஆண்டுகளாகக் கடவுளை ஆலயத்தில் வழிபட்டும் கடவுளைக் குறித்த அறிவில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் இன்றி இறைவிருப்பத்திற்கு மாறான வீண் செயல்களை மீண்டும் மீண்டும் வாழ்வில் தொடர்ந்து செய்துவருவது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

### *4. தூயவருக்கென அர்ப்பணிக்க உதவிடும் வழிபாடு* :

உண்மையோடும் ஆவியோடும் அமையும் வழிபாடு அல்லது 'இறை-மனித உறவு' இறைமக்களை அர்ப்பணத்துக்கு நேராக நடத்துகிறது. தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையடைந்து தூயவரையும் அவரது திட்டத்தையும் அறிந்த எசாயா தன் வாழ்வை அர்ப்பணம் செய்தார். எப்படியெனில், "மேலும் யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்? என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன் அதற்கு, இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும் என்றேன்" (எசா 6:8). உன்னத வாழ்வை முழுமையாகக் கடவுளுக்கென அர்ப்பணம் செய்த எசாயா இறை ஆற்றலோடு இறைவாக்குரைத்தார். இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்த சமாரியா பெண் தூயவராம் ஆண்டவரைத் துரிதமாய் அவனியோருக்கு அறிவிக்க தன்னை அர்ப்பணித்தார். இந்த அர்ப்பணிப்பின் தூண்டுதலால் தான், "அப்பெண் தம் குடத்தை விட்டு விட்டு ஊருக்குள் சென்று மக்களிடம், "நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ!" என்றாள் (யோவா 4:28,29). அதன் விளைவாக "சமாரியர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுவிடம் வந்தார்கள்" (4:30), "நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார் என்று சான்று பகர்ந்த பெண்ணின்

வார்த்தையை முன்னிட்டு அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர் (4:39)" அப்பெண்ணின் அர்ப்பணம் சமாரியர்களில் அனேகர் ஆண்டவரிடம் நம்பிக்கை வைக்கச் செய்தது என்று தெளிவாக அறிய முடிகிறது. தூய பவுல் தமது இரண்டாம் நற்செய்திப் பணயத்தின் போது தெசலோனிக்க நகருக்கு வந்தார். அங்கு எதிர்ப்புகள் பல இருந்தது. எனினும் அர்ப்பணத்தோடு அப்பட்டணத்தாருக்குச் செய்தவைகளைக் கடிதம் வழி "நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாட்சியை நீங்கள் அடையும் பொருட்டே, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக அவர் உங்களை அழைத்தார்" (2தெச 2:14) என நினைவுபடுத்துகிறார். இங்கு தூய பவுல் தூயவராம் கடவுளைக் குறித்து அர்ப்பணத்தோடு அறிவித்த நற்செய்தியின் வழியாக அப்பட்டணத்தின் மக்கள் ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களானார்கள் என்று கோடிட்டுக் காட்டுகிறார். மேலும் தூய பவுல் உரோமைப் பட்டணத்தாரிடம் "கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள், இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு" (உரோ 12:1) என்பதையும் எப்பொழுதும் கருத்தில் கொண்டு கடவுளுக்கு விருப்பம் இல்லாத வழிகளை விட்டு, முழுமையாக அவருக்கு அர்ப்பணம் செய்வது நலமானதாகும் என வலியுறுத்துகிறார். உண்மையாகவே, வழிபாடு என்பது நம்மைக் கடவுளோடு இணைக்க உதவி செய்வது மட்டுமல்லாமல், வழிபாடு என்பது நம்மைத் தூயவருக்கென அர்ப்பணம் செய்ய உதவுகிறது.

சமயத்தின் பெயரால் அடிமைத்தனமும், ஆலயத்தின் பெயரால் வியாபாரமும் வழிபாட்டின் பெயரால் வெற்றுச் சட்டங்களும், பலிப்பரிகாரம் என்ற பெயரில் கொள்ளையும் நடைபெறுவது மிக வேதனையானது. ஆகவே இந்நாட்களில் வழிபாடு என்பதன் உண்மைப் பொருள் மறைக்கப்பட்டு, ஆடம்பர விளம்பரம் செய்து அலங்கார மேடையிட்டு, ஒளிவெள்ளப்பந்தலிட்டு, இசைக்கருவிகளை இரைச்சலிடச் செய்து, வண்ண வண்ணக் கொடியசைத்து, ஆரவாரம் செய்வதுதான் வழிபாடு என்று எண்ணாமல், நாம் யாரை வழிபடுகிறோம் என்ற "அறிவுணர்வு" (instinct) மற்றும் நாம் வழிபடும் கடவுளுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற "அகத்தூண்டல்" (inspiration) போன்றவை இருக்குமேயானால் அந்த வழிபாடு தான் அதிக பொருள் உள்ளதாக அமையும் என்று உணர்ந்து கடவுளை வழிபடுவோம்.

அருள்திரு. G.S. ***ஆஸ்வின் ஜெயசிங்***

27-06-2021

## சீடத்துவத்தின் மதிப்பு

**COST OF DISCIPLESHIP**

| | |
|---|---|
| தானி 6:11-23 | 2கொரி 6:1-10 |
| திபா 34 | மாற் 10:35-45 |

**"...உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்"** (மாற் 10:43).

சீடத்துவம் என்பது கிறிஸ்தவத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிற வார்த்தையாகும். இது கிறிஸ்தவத்தின் முதன்மையான கருப்பொருளைக் கொண்டது. Dietrieh Bonhoeffer என்ற இறையியலாளர் சீடத்துவம் இல்லாத கிறிஸ்தவம், கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம் என்கிறார் (Christianity without discipleship is always christianity without Christ). சீடத்துவம் என்ற சொல்லுக்கான கிரேக்கப் பதம் 'MATHETES' என்பதாகும். இவ்வார்த்தையின் பொருள், 'குருவிடம் இருந்து கற்றுக் கொள்பவர்' என்பதாகும். பழைய ஏற்பாட்டில் சீடர் என்ற பதத்தைப் படிக்க இயலாது. ஆனால் புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் படிக்க இயலும். மாற்கு 2:18-இல் யோவானின் சீடர்கள், பரிசேயர்களின் சீடர்கள், இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்பவர்களைத் திருமறை அறிமுகப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து சீடர்களை உருவாக்கும் போதகராகத் தம்மை அறிமுகப்படுத்துகிறார் (மத் 3:5; யோவா 3:2). சீடத்துவத்தின் அடிப்படைத் தகுதியாக இயேசுவின் அழைப்பு அறிமுகப்படுத்தப்படுகிறது (மாற்கு 1:16,17). அழைப்பை ஏற்று ஆண்டவரிடம் கற்றுக் கொள்பவர்கள், அவரது சீடர்கள் என்று அழைக்கப்பட்டனர் (மத் 5:1; லூக் 6:17). தங்களை முழுமையாக அர்ப்பணித்து வாழ்வது சீடத்துவத்தின் இன்னொரு தகுதியாகும். பில்லி கிரகாம் என்ற பணியாளர் சீடத்துவத்திற்கு இவ்விதம் விளக்கம் தருகிறார், "சீடர்கள் என்பவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குத் தங்களை அர்ப்பணித்து, ஒவ்வொரு நாளும் பின்தொடர வேண்டியவர்கள்; ஆவி, ஆத்துமா, சரீரத்தில் கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டியவர்கள்" என்கிறார்.

இத்தகைய மதிப்புமிக்க சீடத்துவத்தை, பணம், பதவி, பட்டம் என்பவற்றை மையப்படுத்திப் புரிந்து கொள்ள ஆரம்பித்தனர். எனவே இயேசு நாதர் நித்திய வாழ்வைப் பெற்று கொள்ள வழிதேடிய வாலிபனுக்கு, என்னைப் பின்பற்றி வர விரும்பினால் உடமைகள் அனைத்தையும் விற்று, தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு என்னைப் பின்பற்றிவா என்ற அழைப்பைத் தருகிறார். (மாற்கு 10:21) இயேசு கிறிஸ்துவின் போதனை சீடர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தியது. தொடர்ச்சியாக, சீடத்துவத்தின்

சிறப்பு என்பது இழப்புகளில் தான் அமைந்து இருக்கிறது என்ற போதனை (மாற்கு 10:32) சீடர்களுக்கு மீண்டும் அச்சத்தைப் பெரிதாக்கியது. எருசலேம் பயணமும் எருசலேமில் அனுபவிக்கப் போகும் இன்னல்களைக் குறித்த விளக்கமும், சீடர்களின் அச்சத்தை அதிகரித்தது. உடனே தான், யாக்கோபும், யோவானும் இயேசு கிறிஸ்துவிடம் வந்து உலகம் சார்ந்த சீடத்துவ மதிப்பீட்டைக் கேட்கின்றனர். அப்போது சீடத்துவத்தின் மதிப்புகளைக் குறித்து இயேசு நாதர் பயிற்றுவிக்கிறார். சீடத்துவத்தின் மதிப்புகளைக் குறித்துத் திருமறைப் பகுதிகளை மையப்படுத்தி மூன்று உண்மைகளைத் தியானிப்போம்.

### *1. பாடுகளின் பயணத்தில் வெளிப்படும் சீடத்துவத்தின் மதிப்பு* : (தானி 6:16)

சீடத்துவம் என்பது பதவியில் அல்ல. மாறாக பாடுகளின் பயணத்தில் மலரும் மலர் தான் சீடத்துவம். பக்தன் ஒருவன், "உறங்கும் உலகை விழிக்கச் செய்யும் கருவிகளே துன்பங்கள்" என்று வரையறை தருகிறார். "தறிக்கப்பட்ட மரம் தான் நிறைய கனிகொடுக்கும். துளையிடப்பட்ட மூங்கில்தான் இசை எழுப்பும். அரைக்கப்பட்ட சந்தனம் தான் மணத்தை வீசும். புடமிடப்பட்ட பொன் தான் மிளிர ஆரம்பிக்கும்" என்பது ஒரு புதுக்கவிதை. தானியேல் என்பவர் நேபுகாத்நேச்சரால் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டவர். இறைவனைப் பின்பற்றும் சீடத்துவப் பாதையில் சிறிதளவும் களங்கம் இல்லாமல் வாழ்ந்தவர். கடவுளின் அருளினால் அன்னிய தேசத்தில் அதிகாரியாக மாறினார். பொறாமைகளின் பெருக்கத்தால் தரியு அரசனின் காலத்தில் சீடத்துவ வாழ்வு முதன்மையா? அல்லது சிங்கக்கெபி இல்லாத சிறப்பான வாழ்வு முதன்மையா? என்ற பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டார். சிங்கக்கெபியைச் சிங்காசனமாய்த் தெரிந்துகொண்டு சீடத்துவ வாழ்விற்கு மதிப்பு சேர்த்தார் (தானி 6:11-23). பாடுகள் பரமனின் பாதையில் உறுதியைத் தருகின்றன. இதனை இயேசு நாதர் பணிவிடையின் பாதையில் சீடர்களுக்குப் பல்வேறு கோணங்களில் பயிற்றுவிக்கிறார் (மாற்கு 8:34). மாற்கு 10-ஆவது அதிகாரத்தில் அமரும் இடத்தில் முதன்மை வேண்டிய சீடர்களுக்கு, "நான் குடிக்கும் பாத்திரம்" என்ற ஒன்றை அறிமுகப்படுத்துகிறார். இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பாத்திரம், இயேசுநாதர் கெத்சமனேயில் வெளிப்படுத்திய துன்பத்தின் பாத்திரத்தில் பங்காளியாய் மாறுவது தான் சீடத்துவத்தினுடைய சிறப்பு.

கிறிஸ்தவச் சீடத்துவத்தில் துன்பம் என்பது எதிர்பாராத நிகழ்வு அல்ல. மாறாக வழக்கமான கிறிஸ்தவ அனுபவம். இதனை ஆண்டவர் பவுலடியாரை தம்முடைய சீடத்துவப் பணிக்குத் தெரிவு செய்யும் போது தெளிவுபடுத்துகிறார் (திப 9:16). மேலும் இயேசு நாதர் தம் சீடர்களுக்கு, எருசலேமில் அனுபவிக்கப் போகும் துன்பங்களை விளக்கும் போது,

பேதுரு, இது உமக்கு நேரிடக் கூடாது என்று வாதிடும் போது, இயேசு நாதர் சிலுவை என்பது சீடத்துவத்தின் மகிமை. எனவே நீ அப்பாலே போ என்று அப்புறப்படுத்துவதைக் (மத் 16:21,23) கற்றுக் கொள்ளலாம். சீடத்துவத்தில் சந்திக்கும் துன்பங்கள், பரமனின் பந்தியில் பங்காளிகளாக்கும் மிகப் பெரிய அனுபவம் ஆகும் (1பேது 4:13). சீடத்துவ வாழ்வில் சந்திக்கும் துன்பங்கள், துன்பப்படும் மானிடத்தின் வேதனை உணர்வுகளை உணர்ந்து கொண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்ல, உதவி செய்கிற உன்னதமான அனுபவம் (2கொரி 1:4) ஆகும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரெனாய்ர் என்பவர் எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டார். நோயின் கொடுமை அவரது உடலை வெகுவாய்ப் பாதித்திருந்தது. விரல்கள் உருக்குலைந்து இருந்தன. யாராவது பிறர் தான் இவரைத் தூக்கி நாற்காலியில் அமர வைக்க வேண்டும். இப்படிப்பட்ட கொடுமையான துன்பத்தின் மத்தியிலும் தன் ஓவியத்தினைப் பயன்படுத்தி, படங்களை வரைந்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய நண்பர் அவரைச் சந்தித்து, ஏன் உங்களைத் துன்புறுத்திக் கொள்கிறீர்கள்? ஓய்வெடுக்கக் கூடாதா? என்று கேட்டதற்கு, ரெனாய்ர் அவரிடம், துன்பம் ஒருநாள் மறைந்து விடும். ஓவியத்தின் அழகோ ஒருநாளும் மறைவது இல்லை என்றார். சீடத்துவப் பாதையில் சந்திக்கும் துன்பம் ஒருநாள் மறைந்து விடும். ஆனால் சீடத்துவத்தின் மதிப்பு ஒருநாளும் மறைவது இல்லை.

## *2. பற்றாளர்களைப் பண்படுத்துவதில் வெளிப்படும் சீடத்துவத்தின் மதிப்பு* : (2கொரி 6:1)

"சீடன் என்பவன் பிறருக்கு ஏணியாய் இருப்பவன்." சீடத்துவத்தின் மகிமை என்பது பின்னடியார்களை உருவாக்குவது அல்லது உறுதிப்படுத்துவதில் அமைந்துள்ளது. ஜாண் சக்கரியா என்பவர் எழுதிய "In Search of Christian Leadership Qualities and Role" என்னும் புத்தகத்தில் "தலைமைத்துவத்தின் மாண்பு வலுமைமிக்க பின்னடியார்களை உருவாக்குவதில் தான் அமைந்துள்ளது" என்கிறார். இத்தகைய சிறப்புமிக்க பணிவிடையை நிறைவேற்றுவதில் முனைந்து செயல்பட்டவர் தான் தூய பவுலார். கிறிஸ்துவின் தூதுவராய்த் (2கொரி 5:20) தன்னை அறிமுகப்படுத்தியவர் பிறரையும் கிறிஸ்துவின் தூதுவராய் உருவாக்குவதில் துணிந்து செயல்பட்டார். கொரிந்து சபை மக்கள் தாங்கள் பெற்ற இறைவார்த்தை, திருமுழுக்கு, திருவிருந்து போன்றவற்றில் சந்தேகங்கள் நேரிட்டபோது, அவர்களைக் கிறிஸ்தவப் பற்றுறுதி வாழ்வில் உறுதிப்படுத்துவதற்காய் உன்னதமான அறிவுரைகளை வழங்குகிறார். தலைவனின் வாழ்வு என்பது பின்னடியார்களுக்கு ஒரு பாடப் புத்தகமாக அமைய வேண்டும் என்பதுதான் இவரது ஆலோசனை. 2கொரி 6:3 இல் பற்றாளர்கள் பலப்படும்படி சீடர்கள் குற்றம் சாட்டப்படாதவர்களாய் வாழ

வேண்டும் என்ற படிப்பினையை வெளிப்படுத்துகிறார். இப்பணிவிடையை நிறைவேற்றுவதற்காய் உலகில் அவர் அனுபவித்த துன்பங்களைப் பட்டியலிடுகிறார்.

தூய பவுலாரின் பணிவிடை காலத்தில் உடன் பணியாளர்களான திமொத்தியையும், தீத்துவையும் உருவாக்குவதற்காய் அவர் மேற்கொண்ட முயற்சிகளை திப 16:1-3, கலா 2:1ஆகியவற்றில் காணலாம். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய பணிவிடைக்காலத்தில் சீடர்களைத் தெரிவு செய்வதையும், அவர்களைப் பயிற்றுவிப்பதையும் நாம் காணலாம். இயேசுநாதர் முதலில் 12 பேரையும், 70 பேர், திரள்கூட்டம் என்று பலதரப்பட்ட சூழல்களில் சீடர்களைத் தெரிவு செய்கிறார். மேலும் தெரிவு செய்த சீடர்களைப் பயிற்றுவிப்பதற்காய் இயேசு நாதர் நான்கு விதமான முறைகளைக் கையாளுகிறார். (1) நான் செய்கிறேன், நீ கவனி, (2) நான் செய்கிறேன், நீ உதவு (3) நீ செய், நான் கவனிக்கிறேன் (4) நீ செய், நான் உதவுகிறேன். இத்தகைய பின்னணியத்தில் சீடர்கள் வளர்ந்து வரும்போது இயேசுநாதர் சீடர்களைக் குறித்து அச்சமடையாமல் ஆச்சரியம் கொள்கிறார் (யோவா 14:12). பின்னடியாளர்களை உருவாக்குவது சீடத்துவத்தின் மதிப்புமிக்க செயலாக அமைந்துள்ளது.

### *3. பணிவிடையில் வெளிப்படும் சீடத்துவத்தின் மதிப்பு*:

(மாற்கு 10:43)

சீடத்துவம் என்பது பதவியில் அல்ல. பணிவிடையில் அமைந்திருக்கிறது. Peter Drucker என்பவர் சீடத்துவத்தின் மதிப்பை இவ்விதம் வெளிப்படுத்துகிறார், "பதவி ஒரு மனிதனுக்கு வசதிகளையும், வல்லமையையும் தருவது இல்லை. மாறாக, பொறுப்பை அம்மனிதன் மீது சுமத்துகிறது." இயேசு கிறிஸ்துவின் வலது மற்றும் இடதுபுறத்தில் அமர்ந்திருப்பது தான் சீடத்துவத்தின் சிறப்பு என்று நினைத்த யாக்கோபு மற்றும் யோவானிடம் சீடத்துவத்தின் மதிப்பு என்பது அமரும் இடத்தில் அல்ல, அணுகும் முறையில் தான் அமைந்திருக்கிறது என்பதனை இயேசு கிறிஸ்து விளக்கிக் கற்றுக் கொடுத்தார். சீடர்கள் என்பவர்கள் பதவி மோகம் கொண்டு, பிறரை அடக்கி ஆள நினைக்கும் சிந்தனையில் விழுந்து விடாமல் விழிப்பாக இருக்க வேண்டியதின் அவசியத்தை விளக்கிக் காட்டுகிறார். பெரியவர்களாக, முதன்மையானவர்களாக இல்லாமல் தொண்டராக, பணியாளராக வாழ்வதில் தான் உண்மையான சீடத்துவ பண்பு அடங்கி இருக்கிறது என்பதனை சீடர்களின் கால்களைக் கழுவும் நிகழ்வின் மூலம் காண்பிக்கிறார் (யோவா 13:1-16).

பணிவிடை செய்யும் சீடர்கள் என்பவர்கள் உடைந்து, உபயோகம் அற்றோர் என்று சமூகத்தில் ஓரம் கட்டப்பட்ட மனிதர்கள் மீது கரிசனை கொள்வார்கள். மாற்கு 2:1-12-இல் கடைநிலை மனிதன் மீது பரிவு காட்டும்

பணிவிடைக்காரர்களின் பற்றுறுதியைக் கண்டு இயேசு கிறிஸ்து வியந்து போகிறார். பற்றுறுதியும், பணிபுரிதலும் நாணயத்தில் காணப்படும் இரண்டு பகுதிகளைப் போன்று மனித வாழ்வின் இரண்டு பக்கங்கள் ஆகும். கறுப்பினத் தலைவர் மார்ட்டின் லூத்தர் கிங், தான் சாகும் தருவாயில் அருகில் இருந்தோரை அழைத்து என்னுடைய இறுதி நிகழ்வில் யாராவது உரையாற்றினால் இவர் "நோபல் பரிசு பெற்றவர், 400 விருதுகளைப் பெற்றவர் என்று உரையாற்றாமல் பிறருக்குப் பணிவிடை செய்வதில் மகிழ்ச்சி அடைந்தவர் என்று உரையாற்றுங்கள்" என்றார். புனிதர் அன்னை தெரசா அவர்கள் கூறும் போது "ஜெபிக்கும் உதடுகளை விட. உதவும் கரங்களே சிறப்பானவை" என்கிறார். தலைமைத்துவம் என்பது தேவையில் இருப்போருக்குப் பணிவிடை செய்வதில் தான் நிறைவு பெறுகிறது.

அமெரிக்க நகரம் ஒன்றில் அதிகாலை நேரத்தில் அரசுக்குச் சொந்தமான வண்டி ஒன்றிலிருந்து பல பொருட்களை ஐந்து நபர்கள் இறக்கிக் கொண்டிருந்தனர். அருகில் நின்ற மேற்பார்வை அதிகாரி இப்படிப்பட்ட வேலையைச் செய்ய அரசாங்கம் ஐந்து நபர்களை மட்டும் நியமித்துள்ளது என்று முனங்கிக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாகச் சென்ற வழிப்போக்கர் ஒருவர், அதிகாரி முணுமுணுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அருகில் சென்று, என்னவென்று விசாரித்தார். அதற்கு அந்த மேற்பார்வை அதிகாரி, தன்னுடைய குறையைக் கூறி இன்னும் ஒரு வேலையாள் இருந்தால் வேலை எளிதாக முடிந்து விடும் என்றார். வழிப்போக்கர், அப்படியானால் நீங்களும் அவர்களோடு இணைந்து வேலை செய்யலாமே என்று சொன்ன போது "நான் மேற்பார்வை அதிகாரி இது போன்ற என் தகுதிக்குக் குறைவான வேலைகளை நான் செய்வது இல்லை" என்றார். வழிப்போக்கர் வேறு எதுவும் பேசவில்லை. தன்னுடைய மேல்கோட்டைக் கழற்றி வைத்துவிட்டு ஐந்து பேருடன் தானும் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தார். இறுதியாக அவர் அவ்விடம் விட்டுச் செல்லும் முன் மேற்பார்வை அதிகாரியைப் பார்த்து, உங்களுக்கு உதவி செய்த வழிப்போக்கர் யார் என்று யாராவது கேட்டால் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் என்று சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு தன் வழியே சென்றார்.

யோவான் 15:8-இன்படி தந்தையானவர் மாட்சியடையும்படி சீடத்துவத்தின் உயர்ந்த மதிப்பீடுகளான பாடுகளின் பயணத்தில், பற்றுறுதியில் நிலைத்திருந்து, பற்றாளர்களைப் பண்படுத்தி, பணிவிடை செய்து வாழ்வோமாக!

அருள்திரு. P.G. **ஜெயின்குமார்**

04-07-2021



## பொறுப்பாண்மை: வெளிப்படைத்தன்மையும், கணக்கொப்புவித்தலும்
**STEWARDSHIP: TRANSPARENCY AND ACCOUNTABILITY**

விப 36:2-7 பிலி 4:10-20
திபா 116:12-19 லூக் 19:11-27

**...."நன்று, நல்ல பணியாளரே, மிகச் சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராயிருந்தீர். எனவே பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும்"** (லூக் 19:17).

பொறுப்பாண்மை (Stewardship) என்பது ஒருவரிடம் கொடுக்கப்பட்டுள்ள வளங்களை மிகவும் கவனமாகவும், பொறுப்புடனும் நல்ல திட்டமிடுதலோடும் பயன்படுத்தி, அதிலே நன்மை பெறுவதாகும். பொறுப்பாண்மையில் சிறந்து விளங்கிட அதிலே வெளிப்படைத்தன்மையும், நிறைவடைகின்ற நிலையும், பொறுப்புடமையோடு (கணக்கு ஒப்புவித்தல்) செயல்படுதலும் தேவையானது. கடவுள் தம்மால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் பொறுப்பாண்மையுடன் செயல்பட எதிர்பார்க்கிறார். கடவுளின் எதிர்பார்ப்புக்கேற்ற நிலையில் செயல்படாது, தவறும்போது, அதற்குரிய தீர்ப்பினைத் தருகிறார். மட்டுமல்லாது அவரது எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் போது, அவர் பாராட்டி அதற்குரிய பரிசினையும் (Reward) வழங்குகிறார். நமது வாழ்வுச் சூழலில், கடவுள் நமது வாழ்வில் தந்துள்ள பொறுப்பாண்மையில் எங்ஙனம் செயல்பட வேண்டுமென்பதைத் திருமறைப்பகுதிகளின் வாயிலாகச் சிந்திப்போம்.

### *1. பொறுப்பாண்மையில் வெளிப்படைத்தன்மை* : (விப 36:2-7)

கடவுளின் கட்டளையின்படியும், அவரது திட்டத்தின்படியும் தூயதிருப்பணியினை நிறைவேற்றிட மோசே ஏற்பாடுகளைச் செய்தார். இப்பணிக்காக ஞானம், அறிவுக்கூர்மை, அனுபவம், தொழில் திறமை, நல்ல திட்டமிட்டு வேலை செய்யும் பெட்சலேல், ஒகொலியாபு ஆகியோரை ஏற்படுத்தினார் (விப 35:30). தூயதிருப்பணி கடவுளின் திருப்பணி எனவே அதில் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட அவர்கள் தங்களை ஒப்படைத்து, கடவுள் கொடுத்துள்ள திறமைகளை மதிநுட்பத்துடன் பயன்படுத்தினர். இவர்கள் வெளிப்படைத்தன்மையோடு செயல்படுவதற்குக் காரணம், இவர்கள் ஆண்டவரிடமிருந்து அறிவுக் கூர்மை பெற்றதோடு, அப்பணியினை நிறைவேற்றிட உள்ளார்வம் உடையவராயிருந்தனர். (விப 36:2).

தூயதிருப்பணியினைச் சிறப்பாகச் செய்திட இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தங்கள் கைகளைத் திடப்படுத்தி, காணிக்கைகளைக் கொண்டு வந்து பொறுப்பாண்மையோடு கொடுத்தனர். எவருடைய அழுத்தமோ, உந்துதலோ, விளம்பரமோ, கண்டிப்போ இன்றி, தன்னார்வத்துடன் காலை முதல் மாலை வரை கொண்டுவந்து கொடுத்தனர் (விப 36:3). மக்கள் மிகுந்த ஒப்படைப்போடும், மன நிறைவோடும் கொடுத்து மகிழ்ந்தனர். பெற்றுக் கொண்டவர்களும் மன நிறைவோடும் மனமகிழ்வோடும் ஏற்றுக் கொண்டனர். பெற்றுக் கொண்டு பணியினை நிறைவேற்றியவர்கள் பொறுப்பாண்மையுடன் செயல்பட்டதால் நிறைவடைந்தனர். ஆகவே அவர்கள் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு, மோசேயிடம் வந்து, மோசேயை நோக்கி "மக்கள் கொண்டு வருவது ஆண்டவர் கட்டளையிட்ட வேலைக்கும் அதிகமாகவே உள்ளது" என அறிவித்தனர். நமது திருச்சபைகளிலும் அந்த நிலை வரவேண்டுமென்பது கடவுளின் ஏக்கமும் நமது எதிர்பார்ப்புமாயுள்ளது.

இறைத்திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட தூயதிருப்பணியில் தங்களை ஈடுபடுத்தி, மிகவும் ஒப்படைப்போடும், பொறுப்போடும், கடமையுணர்வோடும், திறமையோடும் ஞானத்தோடும், விவேகத்தோடும், பணி செய்தவர்களின் வெளிப்படைத்தன்மையினால், மோசே "ஆணோ பெண்ணோ யாராயினும் இனிமேல் தூயகத்துக்காகக் காணிக்கை கொண்டு வரவேண்டாம்" எனக் கட்டளைப்பிறப்பித்தார். (விப 36:5,6). இஸ்ரயேல் மக்களும் காணிக்கை கொண்டு வருவதை நிறுத்தினர். மக்களின் ஒப்பற்ற கொடையினால் சேகரித்து வைத்தவை, செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமானதாயும், தேவைக்கு அதிகமாகவும் இருந்தது (விப 36:7). நமது தூயகத்திருப்பணியில் இத்தகைய நிறைவான அனுபவம் ஏற்படுமென்றால் அது எத்துணைச் சிறப்பானதாக அமையும்.

பொறுப்பாண்மையில் வெளிப்படைத்தன்மையோடு செயல்படுகையில் அதினால் நிறைவு ஏற்படுகிறது. கடவுளும் மகிழ்வடைகிறார். நமது வாழ்வுச் சூழலில் கடவுள் நமக்குத் தந்துள்ள நமது வாழ்வு, நமது பொறுப்புகள் அனைத்திலும் வெளிப்படைத் தன்மையோடு செயல்பட வேண்டும். பொறுப்பாண்மையில் வெளிப்படைத்தன்மை தேவையற்ற வதந்திகளையும், தீமையான செயல்பாடுகளையும் தடுத்து, இறைநீதியினை வெளிப்படுத்தும். ஆகவே நமது அனைத்துப் பணிகளிலும் வெளிப்படைத்தன்மையோடு செயல்பட நம்மை அர்ப்பணிப்போம்.

***2. பொறுப்பாண்மையில் நிறைவடைதல் :*** (பிலி 4:10-20)

துய பவுலார் பிலிப்பித் திருச்சபைக்குக் கடிதம் எழுதுகையில், தனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு குறைவிலும் நிறைவிலும் எதனையும் செய்யும் ஆற்றல் எனக்குண்டு என்பதோடு, தான்

பட்டதுன்பத்தில் அத்திருச்சபை பங்கு கொண்டது அவர்களது நல்மனதைக் காட்டுகிறது எனக் கூறி (பிலி 4:13,13), தற்போது தனது நிறைவடைந்த நிலையினை எண்ணி, கடவுளை மாட்சிப்படுத்துகிறார். (பிலி 4:20). பவுலார் திருப்பணியாற்றிய காலத்தில், “சீனோ” என்ற கிரேக்கத் தத்துவவாதியால் “Stoic” என்ற “Philosophy of personal ethics” கொள்கை பரப்பப்பட்டது. இக்கொள்கை மானிட வாழ்வில் விருப்பு வெறுப்பற்ற தன்மையினை வெளிப்படுத்தி, மக்கள் நிறைவுடன் வாழ வேண்டுமென எடுத்துரைத்தது. எல்லாச் சூழலிலும் விருப்பு வெறுப்பற்ற நிலையில் மனநிறைவுடன் வாழ்வது நிறைவிற்கான வழியாகும். பொறுப்பாண்மையில் நிறைவடைந்து செயல்படுவது கடவுளின் எதிர்பார்ப்பு.

பவுலார் குறிப்பிடுகையில் “நீங்கள் என்னைப் பற்றி அக்கறை கொண்டிருந்தீர்கள் என்பது உண்மை. ஆனால் அதனைக் காட்டிக் கொள்ளும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை” எனக்குறிப்பிடுகிறார். ஏற்கனவே நீங்கள் இரண்டொரு முறை செய்த உதவி, உங்கள் நற்பலன் கணக்கில் உள்ளது. உங்களது உதவியினை எப்பப்பிராதித்துவின் வாயிலாகப் பெற்று நிறைவுற்றிருக்கிறேன் என்கிறார் (பிலி 4:17,18). பவுல் தனது பணிவிடையில் மக்களிடமிருந்து பெற்ற நன்மைகளினால் நிறைவடைந்தவராய் இப்பொழுது தன்னிடம் நிறைவாக இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தினார். இத்தகைய நிறைவடைந்துள்ள நிலைக்குக் காரணம் அவரிடமிருந்த “போதும்” என்ற திருப்தியடைகின்ற மனநிலையாகும். ஏற்கனவே Stoic தத்துவத்தால் விருப்பு வெறுப்பற்ற தன்மையினை அறிந்திருந்த நிலையில், கிறிஸ்து இயேசுவில் கிடைக்கும் வலுவினால் தனக்கு வறுமையிலும், வளமையிலும், வாழத் தெரியும் எனவும், நிறைவோ குறைவோ எந்தச் சூழலிலும் வாழ பயிற்சி பெற்றிருக்கிறேன் என்கிறார் தூய பவுலார். அதனால் பவுல் பட்ட துன்பங்களில் நிறைவினைக் காண்பதற்கு பிலிப்பித் திருச்சபையின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது. அது அவர்களின் நிறைவினையும், நல்மனத்தையும் காட்டுகிறது (பிலி 4:14). திருச்சபையார் நிறைவோடும் நல்மனத்தோடும் செய்த உதவியினாலும், கடவுளின் ஆசியினாலும் இப்போது தன்னிடம் நிறையவே இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறார் (பிலி 4:18). இறைமக்கள் நிறைவோடு கொடுத்த காணிக்கைகள் நறுமணம் வீசி, கடவுளுக்கு ஏற்புடைய உகந்த பலியாயிருக்கிறது. ஆகவே கடவுள் கிறிஸ்து இயேசுவின் வழியாய் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு, அவர்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்கிறார் (பிலி 4:19).

தேவையோடிருக்கும் நிலையிலும் மற்றவர்களின் தேவையினைச் சந்திக்க உதவிடுவது நிறைவடைந்த வாழ்வின் உன்னத நிலையாகும். அத்தோடு தேவைகள் இல்லாத நிலை ஏற்படுகையில், மக்கள் உதவி செய்ய ஆயத்தமானால், தருகிறார்களே எனப் பெற்றுக் கொள்ளாமல், போதும் என்ற நிலையில் வாழ்வது நிறைவான அனுபவம். நிறைவு ஏற்படும்போது குறைவு முற்றிலுமாக மாறிவிடுகிறது. கடவுள் நமக்கு அருளியுள்ள பணிவிடைகளிலும், நன்மைகளிலும் மனநிறைவடைவது நமது பொறுப்பாண்மையில் நிறைவினைக்காணும் அனுபவம். இன்று நமது வாழ்விலும் திருச்சபைகளிலும் இந்நிலை ஏற்படுகையில் கடவுள் மனமகிழ்வடைகிறார்.

***3. பொறுப்பாண்மையில் பொறுப்புடைமை*** : (லூக் 19:11-27)

பொறுப்பாண்மையில் பொறுப்புடமை என்பது தரப்பட்டுள்ள பொறுப்புகளில் கணக்கு ஒப்புவித்தலாகும். நம்மிடம் கடவுள் தந்துள்ள பொறுப்புகளில் கடவுளுக்குக் கணக்கு கொடுத்து நாம் அதற்குரிய பங்காகிய பரிசினைப் பெறவேண்டியவர்கள். இயேசுவின் இறையாளுகையினைக் குறித்த போதனையினைக் கேட்டவர்கள், இறையாட்சி உடனடியாகத் தோன்றப்போகிறது என நினைத்தார்கள். அப்போது இயேசு தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிவிடைகளில் பொறுப்புகளில் பொறுப்புடைமையோடு செயல்படுகிறவர்கள் மட்டுமே இறையாளுகையில் பங்கு பெற முடியும் என்பதை எடுத்துரைத்திட பத்துமினா நாணய உவமையினைக் கூறினார். "ஒருமினா" என்பது நூறு திராக்மா மதிப்புள்ள நாணயம். ஒரு "திராக்மா" என்பது ஒரு தொழிலாளியின் ஒரு நாள் கூலிக்கு இணையான வெள்ளி நாணயமாகும். மத்தேயு நற்செய்தியாளர் மினா நாணயத்திற்குப் பதிலாகத் தாலந்துகளைப் பயன்படுத்துகிறார் (மத் 25:14-30).

இயேசு கூறிய உவமையில் உயர் குடிமகன் ஒருவன் ஆட்சியுரிமை பெற்றுவர தொலை நாட்டிற்குச் சென்றபோது, தனது பணியாளர்களில் பத்துப் பேரை அழைத்து மினா நாணயங்களைக் கொடுத்து, தாம் திரும்ப வரும் வரையிலும் வியாபாரம் செய்யுங்கள் எனக் கூறிச் சென்றான். பத்துப்பேரும் தங்களது ஒருநாள் கூலியினை வேலை செய்யாமலே அதனைத் தங்களது வியாபாரத்தின் முதலீடாகப் பெற்றனர். தங்களது தலைவர் வரும் வரையிலும் தாங்கள் பெற்ற முதலீட்டைக் கொண்டு உழைக்க வேண்டும். தலைவர் வரும்போது தாங்கள் பெற்ற பொறுப்பாண்மையில் எவ்வளவு பொறுப்புடைமையுள்ளவர்களாகச் செயல்பட்டனர் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்பது தலைவனின் எதிர்பார்ப்பு. பணியாளர்கள் தங்களது பணிவிடையில் ஒப்படைப்போடும்,

வெளிப்படைத்தன்மையோடும் செயல்பட்டு, கணக்கு ஒப்புவித்து பரிசு பெற வேண்டியவர்கள். இந்த உவமையில் பத்துப் பேருக்குப் பதிலாக மூன்றுபேர் வந்து தங்களது பொறுப்புடைமையினை வெளிப்படுத்தினர். இரண்டுபேர் பரிசினைப் பெற்றனர், ஒருவர் பொறுப்புடைமையில் தவறினபடியினால் தண்டனையினைப் பெற்றார் (லூக் 19:27).

மூன்று பணியாளர்களும் பொறுப்புடைமையினை ஒப்படைத்தபோது உண்மையினைக் கூறினர். மூன்றாவது நபர்தான் பெற்றுக்கொண்டதைத் தொலைத்திடவில்லை, அழித்திடவில்லை, பத்திரமாகப் பாதுகாத்து திரும்பக் கொடுத்தார். அவரது இந்தச் செயல்பாடும், அவரது வார்த்தைகளை, “நீர் கண்டிப்புள்ளவர், என உமக்கு அஞ்சி மறைத்து வைத்தேன், நீர் வைக்காததை எடுக்கிறவர், நீர் விதைக்காததை அறுக்கிறவர்” என்பவைகளும் அவரின் தண்டனைக்குக் காரணமாயின. தான் நியமிக்கப்பட்ட பொறுப்பில் தவறின தனது பிழையை உணராமல், தனது தவறினை தலைவன் மீது சுமத்தியது தவறு. ஆனால் பொறுப்புடையவராகச் செயல்பட்டதினால் அதற்குரிய பரிசினைப் (Reward) பெற்றனர். தனது தலைவனிடம் “நன்று” என்ற பாராட்டையும், அதிக பணிப்பொறுப்பினையும் பெற்றனர். பொறுப்பாண்மையில் “நல்ல பணியாளர்” என்ற பாராட்டினைக் கடவுளிடமிருந்து பெறுவது பொறுப்புடைமையின் சிறப்பாகும்.

நமது வாழ்வுச் சூழலில் நமது பொறுப்பாண்மையில் வெளிப்படைத்தன்மையோடும், ஒப்படைப்போடும், பொறுப்புடைமையோடும் செயல்படுவது வாழ்விலே மேன்மையினைத் தரும். தயாளத்தின் கடவுள் நம்மிலே தந்துள்ள பொறுப்புகளில் நாம் எப்படிச் செயல்படுகிறோம் என்பதை கவனிக்கிறார். அவர் நம்மிடம் பொறுப்புடைமையினை எதிர்பார்க்கிறார். ஆகவே, நமது கடமைகளில் உண்மையுள்ளவர்களாய்ச் செயல்பட்டு அவரது பாராட்டினையும் அவர் அருளும் பரிசினையும் பெற்று நிறைவுடன் வாழ்ந்திட நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

11-07-2021

## இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும்

### THEOLOGICAL EDUCATION : KNOWING AND DOING FAITH

விப 3:1-12 2திமொ 2:1-13
திபா 111 யோவா 12:20-26

**"எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்"** (யோவா 12:26).

இறையியல் (Theology) என்ற வார்த்தை இரண்டு கிரேக்கச் சொற்றொடர்களை உள்ளடக்கியது. "Theos" என்ற கிரேக்கச் சொல்லுக்கு இறை அல்லது இறைவன் என்று பொருள். "Logos" என்ற கிரேக்கச் சொல்லுக்கு 'வார்த்தை' என்று பொருள். இதனுடைய கூட்டுப் பொருள் இறைவார்த்தைகளை அறிவது, நம்புவது விளக்குவது, எடுத்துரைப்பது, அறிவிப்பது போன்ற பல்வேறு பொருள்களையுடையது ஆகும். இறைமகன் இயேசு கிறிஸ்துவும் வார்த்தையாக (யோவா 1:1) பிறருக்கு வாழ்வு கொடுப்பதற்காக, உலக மக்களின் மீட்புக்காக உப்பாக, ஒளியாகத் தம்மை தியாகம் செய்தார். இயேசு கிறிஸ்துவின் அருள் நிறைந்த வார்த்தைகளில் பொதிந்துள்ள இறையியல், இறையரசுத் தகவுகள் நம்மை அவர் அரசுக்குரியவர்களாக மாற்றுவதாகவும், அவரைப்போல வாழ்வதற்கும், நம்மை ஆயத்தப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. மத்தேயு 24:35இல் "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்கிறார் இயேசு. இறைவார்த்தைகள், ஒழிந்து போகாமல் நிறைவேறிக் கொண்டே இருக்கும். இறைவனின் திருவுளத்தை உலகில் பறைசாற்றும். இந்தியாவில் முதன் முதலில் இறையியல் கல்வியை 1707 ஆம் ஆண்டு தமிழ் மொழியில் தரங்கம்பாடியில், பர்த்தலோமேயு சீகன்பால்க் அவருடைய நண்பர் ஹென்றி புளூச்சோ இணைந்து ஆரம்பித்தனர். அதனுடைய நோக்கம் எல்லா மக்களும் தமிழில் இறையியலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். மேலும் தமிழ் மொழியில் திருமறையையும் மொழிபெயர்த்து வழங்க அச்சுக் கூடத்தையும் நிறுவினார்கள். அதன்பிற்பாடு 1818 ஆம் ஆண்டு இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் செராம்பூர் பகுதியில் சேறும் சகதியுமான இடத்தை, தன்னுடைய கடின உழைப்பில் பெற்று, அதில் இறையியல் கல்வி, கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நிறுவினார் வில்லியம் கேரி. இவருடன் ஜோஸ்வா மார்ஸ்மென், வில்லியம் வார்டு இணைந்து, திருமறையை இந்திய

மொழியில் மொழி பெயர்ப்பு செய்யவும், மேலைநாட்டு இறையியல் நூல்களை இந்திய மொழியில் மொழிபெயர்ப்பு செய்யவும் பல்வேறு பணிகளை நிறைவேற்றினார்கள். செராம்பூர் இறையியல் கல்லூரி கிறிஸ்தவச் சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் இறையியல் பயின்றால் போதும் என்று நினையாமல் இந்தியாவின் பிறசமய மக்களும் இறையியல் படிப்பதற்குப் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. செராம்பூர் இறையியல் கல்லூரியின் கீழ் 61 அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளும், தேசிய திருச்சபைகளின் கூட்டமைப்பு (NCCI) கத்தோலிக்க ஆயர் மாநாட்டுக் கூட்டமைப்பு (CBCI) உலகத் திருச்சபைகள் மாமன்றம் (WCC) இவைகளின் பிரதிநிதித்துவத்துடன் இறையியல் கல்வியை வழங்கிவருகிறது. தமிழ் மொழியில் மதுரையிலுள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரி பிராந்திய மொழி வாரியான இறையியல் கல்லூரிக்கு முன்னோடியாகச் செயல்படுகிறது. பால்திலிக் என்ற இறையியலாளர் குறிப்பிடும்போது, இறையியல் கட்டமைப்பு என்பது "கிறிஸ்துவின் போதனைகளின் உண்மை அறிக்கையை அறிந்து, அந்த உண்மை அறிக்கையை விளக்கமாக வரும் தலைமுறையினருக்குக் கொடுப்பது ஆகும்" என்கிறார். இறையியல் விடுதலை இறையியல், வரலாற்று இறையியல், தலித் இறையியல், பழங்குடி ஆதிவாசிகள் இறையியல், பெண்ணிய இறையியல், சூழல் சமூக இறையியல், இயற்கையைப் பேணும் இறையியல் என்று பல்வேறு கோணங்களில் இறையியல் கல்வி வளர்ச்சிபெற்றுள்ளது. நம்முடைய வீடு, வாழும் சூழல், திருச்சபை போன்றவை இறையியல் பயிற்றுப் பாசறை என்பதை நாள்தோறும் நாம் பெற்றுக் கொள்ளும் திருமறை வழியான இறையியல் தகவுகளால் மெய்ப்பிக்கப்படுகிறது. இதனால் இறையியல் கல்லூரிக்கு சென்று இறையியல் கற்றுக் கொள்ள வாய்ப்பு இல்லை என்றாலும், நம்முடைய சூழல்களில் கிடைக்கும் இறையியல் கருத்துகள் இறைவனுக்குள் வாழ்வதற்குத் துணைபுரிகிறது. பிளாரன்ஸ் ஞான இராபின்சன் அவர்கள் குறிப்பிடும்போது "இறையியல் கல்வி, நம்முடைய இளம் தலைமுறையினருக்குத் திருமறைப்பள்ளி பயிற்சிப் (Suday School Education) பட்டறையிலிருந்து தரமானதாகக் கிடைக்க வேண்டும்." அப்போது தான் வரும் தலைமுறை இறையியல் தகவுகளால் நிலைத்து வேரூன்றி செழுமை ஆன்மிக இறையியலுக்கும், போலி வேட இறையியலுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும். யோவான் நற்செய்தி நூலில் 12-ஆம் அதிகாரம் வசனம் 20 முதல் 26 முடிய உள்ள பகுதியின் வழியாக இறையியல் கல்வி: நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்தலும் என்ற செம்பொருளை நாம் புரிந்து கொள்ளலாம்.

### *1. இயேசு கிறிஸ்துவைக் காண்பதற்கு இறையியல் கல்வி* :

(Theological Education to see Jesus Christ) (யோவா 12:21).

இறைமகன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய புரிதல் இல்லாத கிரேக்கர்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ள விரும்பி அவருடைய சீடர்களான பிலிப்பு, அந்திரேயா போன்றோரிடம் கேட்கின்ற போது, அவர்களால் உடனே பதிலுரைக்க இயலவில்லை. அந்திரேயாவும், பிலிப்புவும் இயேசு கிறிஸ்துவிடம் சென்று அதைச் சொல்லுகிறார்கள் (யோவா 12:22). அதற்கு இயேசுவின் பதிலுரை யோவா 12:23-இல் “மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது.” யூதர்களின் பார்வையில் கிரேக்கர்கள் அந்நியர்கள் (Gentiles). ஆனால் இவர்களும் இறையாட்சிக்குரியவர்கள் இவர்களுக்கும் இறையியல் வார்த்தைகள் கிடைக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவைக் காண்பதற்கு நமக்கு இறையியல் கல்வி இன்றியமையாத ஒன்றாக உள்ளது. அக்கல்வியின் சாராம்சம் பிறரையும், நம்முடன் வாழும் பிற பற்றுறுதி, சமய மக்களையும் இறைவனுக்குள் வழிநடத்த முடியும். விப 3:1-12 வரையிலும், மோசே எரிகிற முட்செடி வழியாக இறைவனைக் கண்டு, அவர் கட்டளைக்கு, அவருடைய பணிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார். சக்கேயுவும் இயேசு கிறிஸ்துவைப் பார்ப்பதற்கு ஒரு காட்டத்தி மரத்தில் ஏறுகிறார். கிறிஸ்து அம்மரத்தின் அருகே வந்து, சக்கேயுவை அழைத்து, வீட்டிற்குச் சென்று இறை உறவை ஏற்படுத்துகின்றார் (லூக் 19:1-6). லூக்கா 23:8-இல் ஏரோதும் இப்படித்தான் இயேசு கிறிஸ்துவைக் காண்பதற்கு வாஞ்சித்து பின் அவரைக் கண்டபின் இகழ்ந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. பல்வேறு சூழல்களில் இறைவனைக் காண்பதற்கு விரும்புகிறோம். தவறான இறையியல் புரிதலுடன் அவரைக் காண்பதற்கு முயற்சித்தால் அது தோல்வியையும், ஏமாற்றத்தையும் நமக்குத் தரும்.

“இயேசுவை நாம் எங்கே காணலாம்? அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்” என்ற பாடலின் கடைசி வரிகளில் “மண்டியிட்டு வீழ்ந்தேன் நான் திருமறை முன்பாக” என்பது இறைவார்த்தைகளினால் இறைவனைக் காண முடியும் என எடுத்துரைக்கிறது.

### *2. இயேசு கிறிஸ்துவுடன் வாழ்வதற்கு இறையியல் கல்வி* :

(Theological Education to live with Jesus Christ)

“கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப்

பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவார்" (யோவா 12:24,25). இயேசு கிறிஸ்துவுடன், மண்ணிலும், விண்ணிலும் வாழ்வதற்கு இறையியல் கல்வி, இறைவார்த்தைகள் நமக்கு உதவுகின்றன. திருத்தூதர் பவுல், திமொத்திக்கு பல்வேறு அறிவுரைகளை இறைப்பணி நிறைவேற்றும் நோக்கில் வழங்கி உள்ளார் (2திமொ 2:1-13). 2திமொ. 2:3இல் "கிறிஸ்து இயேசுவின் நல்ல படைவீரரைப் போன்று துன்பங்களில் பங்கு கொள்." மேலும் படைவீரர், விளையாட்டுவீரர், தொழிலாளர்கள் இவர்களின் தன்லமற்ற உழைப்பு இதன்வழியாகவும், பல்வேறு காரியங்களை எடுத்துரைத்து வசனம் 11-இல் "நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம்" அவரை மறுதலிக்கக் கூடாது என்பதையும் கற்றுத் தருகிறார். இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் உடனிருந்த யூதாஸ் 30 வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு அவரைக் காட்டிக் கொடுத்து தன் வாழ்வை இழந்து போனான். பேதுரு சேவல் கூவும் முன் மூன்று முறை மறுதலித்து பின் மனம் கசந்து அழுது கிறிஸ்துவுக்காகக் குருதிச்சான்றானார் (மத் 26:15, லூக் 22:59-62). இயேசு கிறிஸ்துவுடன் வாழ்வதற்குக் கற்பிக்கிறது இறையியல் கல்வி. 2திமொ. 3:12-இல் "கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர். துன்பம். பாடுகள் இல்லாமல் இறைவனுடன் வாழ்வது கூடாத காரியம்." சோமன்தாஸ் என்ற இறையியலாளர், கிறிஸ்துவின் பாடுகளுடன் மகப்பேற்றில் ஏற்படும் பிரசவவலியை ஒப்பிட்டு, உலகில் வாழ்பவர் எவரும் வலிகளை, வேதனைகளை, பாடுகளை உள்ளடக்கி கிறிஸ்துவுடன் வாழ்வது சிறப்பானது என்கிறார். தற்போதைய சூழலில் செழுமைப் போதனைகளினால் வலிகள், வேதனைகள் இல்லாமல் கிறிஸ்துவுடன் வாழ்வதற்கு விரும்பி சிறு கஷ்டங்கள் வரும்போது கிறிஸ்துவை விட்டு உலகத்துடன் ஒன்றித்து விடுகின்றனர்.

### 3. *இயேசு கிறிஸ்துவைப் பின்தொடர்வதற்கு இறையியல் கல்வி* : (Theological Educationto follow Jesus Christ)

"எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும்" (யோவா 12:26).

இயேசு கிறிஸ்து, தம்முடைய சீடர்களை நீங்கள் என்னைப் பின்தொடருங்கள் என்கிறார். மத்தேயு 16:24-இல் பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். வசனம் 25-இல் ஏனெனில், தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற

எவரும் வாழ்வடைவர். டீட்றிச் போன்காபர் குறிப்பிடும்போது, இறைவர் பல்வேறு சூழல்களில் மனிதர்களை அர்ப்பணிக்க அழைக்கும்போது, தம் உயிரையும் கொடுக்க முன்வர வேண்டும் என்கிறார் (When chist calls a man, he bids him come and die). இயேசு கிறிஸ்து, மனுக்குல மக்களின் மீட்புக்குத் தம்மைக் கொடுக்கும் போது, யோவா 13:14,15-இல் "ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளை கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்" என்கிறார். பிலி 2:5-11, 2கொரி 8:9, எபே 5:25, 2கொரி 10:1 போன்ற திருமறைப் பகுதிகளில் கிறிஸ்துவின் திருப்பணி சார்ந்த இறைத் தகவுகளைப் பவுலடிகளார் தம் கடிதங்களில் எழுதியுள்ளார். ஜப்பான் நாட்டிலிருந்தவர் கொசுகே கோயாமா (kosuke Koyama). இவருடைய இறையியல் ஆசிய நாடுகளின் பின்னணியத்துடன் அமைந்துள்ளது. "Water Buffalo Theology" (நீர் எருமை இறையியல்) என்ற புத்தகம் 1974 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. கைப்பிடி இல்லாத சிலுவை (No handle on the cross), என்ற நூல் அவருடைய இறையியலில் வெளிப்பட்ட உண்மையாகும். கிறிஸ்தவ அமெரிக்கர்களையும் அவர்களால் துன்பப்படுத்தப்பட்ட ஜப்பானியர்களையும் அன்பு செலுத்தினார். ஆகவே நாம் பிறரைத் துன்பப்படுத்தக்கூடாது. அனைவரையும் அன்பு செலுத்த வேண்டும் என மேற்கண்ட சூழல் இறையியலை அமைத்தார்.

இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும் என்பது பாடுகள் வழியாக, இயேசு கிறிஸ்துவைக் காண்பதற்கும் அவருடன் உறவு கொண்டு வாழ்வதற்கும், இறை ஆசியில் பங்கு கொள்வதற்கும் வழிகாட்டுகிறது. நம்முடன் வாழும் அத்தனை இறைமக்கள், மற்றும் இறைப்படைப்புகளில் இறையியலின் தகவுகளை உணர்ந்து, பெருந்தொற்று, இயற்கைச் சீற்றங்கள், உடைவுகள், வன்முறை, தீவிரவாதம், பெண்கள் மற்றும் பெண்குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் போன்றவற்றை எதிர்ப்பதற்கும் திருச்சபைகளில் நல்லுறவு காண்பதற்கும் இறையியலின் மெய்த் தகவுகளுடன் ஒன்றிணைவோம். இறை அமைதி ஏற்படட்டும்.

அருள்திரு. முனைவர் S. **டேவிட் ஜோசப்ராஜ்**

18-07-2021

## இறைமக்கள்: உப்பும், ஒளியும்

**PEOPLE OF GOD : SALT AND LIGHT**

எசா 49:1-7 எபே 5:1-5
திபா 27 மத் 5:13-16

**"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்..... நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்"** (மத் 5:13-14).

'ஒளி' என்னும் பதம் திருமறையில் பல இடங்களில் நேரடியாகவும் (literally), உருவக அடையாளமாகவும் (figuratively) வருகின்றது. திருமறையின் முதல் அதிகாரத்தில் 'கடவுளின் முதல் படைப்பு ஒளி' (தொநூ 1:3) எனவும், திருமறையின் இறுதி அதிகாரத்தில் 'கடவுளே நித்திய ஒளி' (திவெ 22:5) எனவும் ஒளியின் முதன்மையும், முக்கியத்துவமும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமறையில் சுமார் 200 இடங்களில் ஒளியைக் குறித்த செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. சமய வழிபாடுகள், விழாக்கள் மற்றும் இந்திய வழக்கத்தில் 'ஒளியேற்றல்' அல்லது 'விளக்கேற்றல்' என்பதற்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இதன் பொருள் 'சுபம், நலம், பொருள், வளத்தைப் பெருக்கி, மடமையை வீழ்த்தும் உலகின் முதன்மை சக்தியான ஒளியே, உன்னை வணங்குகிறேன்' என்பதாகும். நமது திருமறையும் ஒளியைக் கடவுளோடும், கடவுளின் இருப்பு நிலையோடும், கடவுளின் திட்டத்தை நிறைவேற்றும் மக்களோடும் ஒப்புமைப்படுத்துகின்றது. இயேசு கிறிஸ்துவும் இந்த உருவகத்தைப் பயன்படுத்தி, இறைமக்களின் வாழ்வு எங்ஙனம் அமைய வேண்டுமென்று எடுத்தியம்புகிறார். 'இறைமக்கள் பிறருக்குப் பயனுள்ளவர்களாய் வாழ வேண்டும்' என்பதே இயேசுநாதர் பயன்படுத்துகின்ற 'உப்பு' மற்றும் 'ஒளி' உருவகங்கள் வலியுறுத்திச் சொல்லுகின்ற உண்மை. போப் பிரான்சிஸ் அவர்கள் 2013 ஆம் ஆண்டு பேதுரு சதுக்கத்தில் ஆற்றிய உரையில், "இன்றைய உலகிற்கு அவசரமாய்த் தேவைப்படுவது ஆசிரியர்கள் அல்ல; மாறாக சான்றாளர்கள்; நாவினால் பேசுவது அல்ல, மாறாக நம்முடைய வாழ்வின் மூலமாகப் பேசுவதாகும்." (Today's world stands in great need of witness, not so much of teachers but rather of witness. It is not so much about speaking, but rather speaking with our whole lives). சுவை கொடுத்தல், ஒளி கொடுத்தல் என்கின்ற இரண்டு தன்மைகள் இருந்தாலும் கொடுக்கப்பட்டிருக்கின்ற திருமறைப்பகுதிகள் ஒளியினை மையப்படுத்தி வருவதால் இறைமக்கள் எப்படி ஒளி கொடுப்பது என்பதனைத் திருமறைப்பகுதிகள் சார்ந்து சிந்திப்போம்.

***1. இறைமக்கள் : பாடுகளால் ஒளிர்பவர்கள்*** : (எசா. 49:6,7)

எசாயா 40 முதல் 55 வரை இரண்டாம் எசாயாவின் (Deutero-Isaiah) இறைவாக்காகும். இவர் காலம் கிமு 587 க்கு பிந்தைய பாபிலோனியச் சிறையிருப்பின் காலமாகும். எரேமியா, எசேக்கியேல் போன்ற இறைவாக்குரைஞர்கள் உரைத்த இறைவாக்கு நிறைவேறும் காலம் தாமதித்த போது, யூதர்கள் தங்களின் சிறையிருப்பிலிருந்து மீண்டு சொந்த நாடு திரும்புவது இயலாத காரியம் என்று கருதி, சோர்ந்துபோய் நம்பிக்கையற்றுக் காணப்பட்டனர். அச்சூழலில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாய் எதிர்கால விடுதலை குறித்து இரண்டாம் எசாயா குறித்த பாடல்கள் (42:1-4; 49:1.6; 50:4-9; 52:13-53:12) அமைந்துள்ளன. குறிப்பாக அறிஞர் B. Duhm இதனை Ebed YHWH songs என்று அழைக்கிறார். 'துன்புறும் ஊழியர்' குறித்த பாடல்களில் எசாயா 49:3இல் மட்டும் இஸ்ரயேலைத் துன்புறும் ஊழியராக அடையாளப்படுத்துகின்றார். ஆனால் 5,6 ஆகிய வசனங்களில் இஸ்ரயேல் நாட்டைக் குறித்து அல்ல, மாறாக ஓர் ஊழியரின் தெரிந்தெடுப்பைக் குறித்தும், அழைப்பைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது.

பலர் இத்துன்புறும் ஊழியர் 'இஸ்ரயேல் நாட்டினர்' என்றும், 'இரண்டாம் எசாயா' என்றும், 'தாவீதின் மரபில் வரும் அரசரில் ஒருவர்' என்றும், 'விடுதலை அளிக்க வெளிப்படும் மெசியா' என்றும் வியாக்கியானமும் விவாதமும் செய்கின்றனர். இயேசு கிறிஸ்து பிறர்பொருட்டு இப்பாடுகளை அனுபவித்ததால் (vicarious suffering) கிறிஸ்துவத் திருச்சபையின் நம்பிக்கையின்படி 'துன்புறும் ஊழியர்' இயேசு கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எசாயா 49-ஆம் அதிகாரம் முக்கியப்படுத்துகின்ற உண்மை, இந்த ஊழியர் பிறருக்கு ஒளி வீசக் கூடியவராக இருப்பார்; அந்த ஒளியினைக் கொடுப்பதற்கு அவர் பல வேதனைகளை அனுபவிப்பார் என்பதே. இவர் பிறர்நலத்திற்காய் அல்லது பொதுநலத்திற்காய்ப் பாடுபடுபவராக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். மிருகங்களின் கோரத் தாக்குதலில் பிரியாத அவர் உயிரை, போர் வீரரின் வாள் பறித்தது. இத்தகு பாடுகளை, திருச்சபைத் தந்தை தெர்த்துலியன் இவ்வாறு வர்ணிக்கின்றார், 'இரத்தச் சாட்சிகளின் இரத்தம், திருச்சபையின் வித்து' (The blood of Martyrs is the seed of the church).

கிறிஸ்தவ வரலாற்றில் பாடனுபவிப்பதே சான்று பகர்தலாய்க் கொள்ளப்பட்டது. கிபி 325-ஆம் ஆண்டு நிசேயாவில் மன்னர் கான்ஸ்டன்டைன், ஏரியன் கூற்றைக் குறித்து விவாதிப்பதற்காக அழைத்த மாமன்றத்தில் கலந்து கொண்டவர்களின் கூட்டம், 'தியாகிகளின் கூட்டம்'

(army of martyrs) போன்றே காட்சியளித்தது. ஏனெனில் பங்கேற்ற பேராயர்களில் பலர், உரோமைப் பேரரசின் சர்வாதிகார ஆட்சிமுறையால் திருச்சபை எதிர்கொண்ட துன்பக் காலத்தில் கைகளை இழந்து, கால்களை இழந்து, பார்வையை இழந்து கிறிஸ்துவுக்காய் ஒளிர்ந்தவர்கள். இப்பாடுகளின் கொடுமையான அனுபவத்தை எபி 11:34-38 வரையிலான வசனங்கள் மிகத்தெளிவாய் விளக்குகின்றன. இவர்கள் திருச்சபைக்குமுன் இருக்கும் மேகம் போன்ற திரளான சாட்சிகள் என எபி 12:1 உரைக்கின்றது.

3-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் உரோமைப் பேரரசன் செப்டிமஸ் செவேரஸ் (Septimius Severus) கிறிஸ்தவர்களை ஈவு இரக்கமின்றி, இன, வயது வித்தியாசமின்றி கொன்று குவித்தான். குறிப்பாக வட ஆப்பிரிக்காவில் உள்ள கார்த்தேஜிலிருந்து திருமுழுக்குப் பெற ஆயத்தமாய் இருந்த விபியா பெர்பெட்வா (Vibia Perpetua) என்னும் இளம் கர்ப்பவதியான தாயோடு, வேறு 5 பேரையும் பிடித்து வந்து சிறையில் அடைத்தார்கள். சிறையில் காவலின் கொடுமையின் மத்தியில் குழந்தையினை ஈன்றெடுத்து, தனது குழந்தைகளுக்குத் தாய்ப்பால் குடிக்கக் கொடுத்த நிகழ்வு கல்நெஞ்சையும் உருக்கும்படி வைத்தது. நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டவருக்கு கிறிஸ்துவை மறுதலிக்க வாய்ப்பு கொடுக்கப்பட்டது. கைக்குழந்தையைக் கையிலேந்தி காண்பித்து அக்குழந்தைக்காகவாவது கிறிஸ்துவை மறுதலிக்க அவர் தந்தை அவரை வேண்டினார். ஆனால் தான் கிறிஸ்துவின் மந்தை என்பதிலே உறுதியாக அவர் இருந்தார்.

***2. இறைமக்கள் : பண்புகளால் ஒளிர்பவர்கள் :*** (எபே 5:1-13)

திருமறையில் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு இருமை அல்லது இரட்டைவாத முறை (dualism) பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக யோவான் நற்செய்தி நூலில் இருள்/ஒளி, விண்ணகம்/மண்ணகம், ஆவி/மாம்சம், இரவு/பகல் என்னும் இருமைப் பட்டியல்களைப் பார்க்கலாம். இவற்றில் இருள்/ஒளி மிகச் சிறப்பான அடையாளம் ஆகும். பழைய ஏற்பாட்டில் ஒளி மீட்புக்கும், விடுதலைக்கும் அடையாளமாய்க் கூறப்பட்டுள்ளதென்றால் ‘இருள்’ அடிமைத்தனத்துக்கு உருவகப்படுத்தப் பட்டுள்ளது (2சாமு 22:29; திபா 18:28; நீமொ 4:18,19; மீக் 7:8-9). இந்த இருமை முறையை பவுலடிகளாரும் பல திருமுகங்களில் பயன்படுத்துகின்றார். எபே. 5:1-14 வசனங்களில் ஆக்கியோன் ஒளியின் மக்களுடைய செயல்பாடுகளை வேறுபடுத்திக் காண்பிக்கிறார். ஒளியில் நடக்கிறவர்கள் ஒழுக்கக்கேடுகள், பேராசை, மடமையான பேச்சு போன்றவற்றைத் தவிர்த்து

ஆண்டவருக்கு உகந்த நன்னடத்தையை அறிந்து, ஆராய்ந்து பார்த்துச் செயல்பட அழைக்கப்படுகின்றனர். இந்த அழைப்பு புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன (யோவா 12:35,36; உரோ 13:12-14; 1தெச 5:5; 1பேது 2:9). ஒளியின் மக்களாய் ஒளி கொடுத்து வாழ்வதற்கு அடிப்படை நற்பண்புகளோடு வாழ்வது அவசியம்.

முதலில் 120 சீடர்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் சமுதாயத்தில் ஏற்படுத்தின மாற்றங்களும், தாக்கங்களும் எண்ணிலடங்காதவை. ஆனால் இன்று மூலைமுடுக்கெல்லாம் திருச்சபைகள், இறையியல் கற்ற போதகர்கள், உற்சாகமாய்க் கொடுக்கும் கொடை வள்ளல்கள், அச்சு இயந்திரங்கள், தலை சிறந்த இலக்கியங்கள், மேம்பட்ட ஊடகங்கள் என எவ்வளவோ வசதி வாய்ப்புகள் இருந்தும், நற்செய்தி ஒளி சமுதாயத்தில் வீசுவதும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதும் அரிதாகத்தான் இருக்கின்றது. இதற்குக் காரணம் ஒளிவீச அழைக்கப்பட்டவர்கள் நற்பண்புகளோடு வாழாததுதான் காரணமோ? என்ற ஐயம் எழுகின்றது. பிற சமயத் தலைவர்கள் சிலர் சொன்ன கூற்றை அறிந்திருக்கின்றோம் 'கிறிஸ்துவை எங்களுக்கு பிடிக்கின்றது; ஆனால் கிறிஸ்தவர்களை அல்ல.' காரணம், கிறிஸ்தவர்களின் வாழ்வு, கிறிஸ்துவின் போதனைகளுக்கும் திருமறைக்கும் முரணாக அமைந்திருக்கின்றன என்கின்றனர். ஒரு மனிதனின் பண்பு அவன் ஓய்வுநாளில் எங்குச் செல்கின்றான் என்பதில் அல்ல; மாறாக, அவன் வாழ்வை எப்படி வாழ்கின்றான் என்பதில்தான் அமைகின்றது. ஆதலால் நற்பண்புகளோடு வாழ்ந்து ஒளி வீசுவோம்.

### *3. இறைமக்கள் பணிகளால் ஒளிர்பவர்கள்* :

இயேசு கிறிஸ்து, "நானே உலகத்தின் ஒளி" என்று அறிவித்ததை யோவான் நற்செய்தியாளர் பல இடங்களில் கூறுகின்றார் (யோவா 1:1-5; 3:19; 8:12; 9:5; 12:46). கிறிஸ்துவின் மூலமாக இறைவனின் ஒளி உலகிற்கு வந்தது போன்று தம்முடைய ஒளியைப் பெற்று உலகிற்கு இறைமக்கள் ஒளி வீச வேண்டும் என்று இயேசுநாதர் வலியுறுத்திக் கூறுகிறார். சூரிய ஒளியிலிருந்து எப்படி சூரிய மின் சக்தி தயாரிக்கப்படுகின்றதோ அது போன்று இறைமக்கள் நீதியின் சூரியனாம் இயேசுவிடமிருந்து ஒளியைப் பெற்று ஒளி கொடுக்க அழைக்கப்படுகின்றோம். இறைமக்களின் வாழ்வு பிறர் வாழ்வில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் அது உவர்ப்பற்ற உப்புக்கும், மரக்காலுக்குள் இருக்கும் விளக்குக்கும் சமம் என்று இயேசுநாதர் சொல்கின்றார். நற்கிரியைகளின் வழியாகத்தான் இறைமக்கள்

தாங்கள் பெற்ற ஒளியைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்க முடியும் (மத் 5:16). நமது கிரியைகள் நம் சுயப் புகழுக்கானதாய் அமையாமல் விண்ணகத் தந்தைக்கு மாட்சிமை ஏற்படுத்துவனவாய் அமைதல் வேண்டும்.

நற்கிரியைகளின் மூலமாகத்தான் ஒளிவீச முடியும் என்று உணர்ந்த சான்றோர்களுடைய பணியின் மூலமாகத்தான் இயேசு கிறிஸ்துவின் ஒளி தொடர்ந்து வீசிக் கொண்டே இருக்கின்றது. வேலூரில் CMC ஒளிகொடுக்கின்றது என்றால், அது ஐடா ஸ்கடர் அவர்களின் நற்பணியும், தியாகமுமாகும். சென்னை கிறிஸ்தவக் கல்லூரி ஒளிகொடுக்கிறது என்றால், அது ஆண்டர்சன் மற்றும் மில்லர் ஆகியோரின் நற்பணியும் தியாகமும் ஆகும். கொல்கொத்தாவில் செராம்பூர் பல்கலைக்கழகம் ஒளிகொடுக்கிறது என்றால், அது வில்லியம் கேரி அவர்களின் நற்பணியும், தியாகமும் ஆகும். கொல்கொத்தாவில் அன்னை தெரசாவின் நற்பணிகள், டோனாவூரில் ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் அருட்பணிகள் இன்றும் கலங்கரை விளக்காய் சமுதாயத்தில் ஒளி வீசுகின்றன. குமரி மண்ணிலும் அருட்பணியாற்றின அருட்பணியரின் பணிவிடை இன்றும் ஒளிகொடுத்துக் கொண்டிருக்கின்றது. Carl F.H. Henry அவர்களின் கூற்று, 'நற்செய்தியானது சரியான நேரத்தில் கிடைத்தால் மட்டும்தான் அது நல்ல செய்தி' (The Gospel is only good news, if it gets there in time). ஆகவே, இறைமக்கள் நற்செயல்களை செய்து நற்செய்தி ஒளியினைப் பரப்ப வேண்டும்.

ஜான் கெய்த் பால்க்னரின் (John Keith Falconer) கூற்று: "எனக்கு எரியும் ஒரு மெழுகுவர்த்தி மட்டுமே உள்ளது. ஒளியால் நிரம்பிய நிலத்தை விட இருள் நிறைந்த நிலத்தில் நான் அதை ஒளிரச் செய்வேன்" என்கிறார். நாமும் பாடனுபவித்து, பண்புடன் வாழ்ந்து, பணி செய்து கிறிஸ்துவுக்காக ஒளி கொடுப்போம். உப்பாய்ச் சுவை கொடுப்போம்.

திரு. T. **ஜெபின்**

25-07-2021

## அருள்பொழிவுத் திருப்பணி: கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பெற்றது

**ORDAINED MINISTRY: MARKED BY THE WOUNDS OF CHRIST**

1சாமு 22:12-23 கலா 6:11-18

திபா 56 யோவா 21:15-19

**"...என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்"** (கலா 6:17).

பண்டைக் காலங்களில் போர் வீரர்கள் தங்கள் படைப்பிரிவின் தளபதிகளுக்கு விசுவாசமுள்ளவர்கள் என்பதைக் காண்பிக்க, தங்கள் உடலில் பச்சைக் குத்திக்கொண்டனர் (Signs of loyalty). சமயப்பற்றாளர்கள் தங்கள் மெய்ப்பற்றை வெளிப்படுத்த தங்கள் உடலில் உருவங்களையோ,எழுத்துகளையோ, பெயர்களையோ பச்சைகுத்திக் கொண்டனர். அடிமைகளின் உடலிலும், முதலாளியிடமிருந்து ஓடிப்போய் மீண்டும் பிடிபட்ட அடிமைகளின் உடலிலும் முத்திரை பதித்தனர். இது அவமானத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. குற்றவாளிகளின் உடலில், போரில் சிறைபிடிக்கப்பட்ட கைதிகளின் உடலில் முத்திரை பதித்தனர். இதுவும் அவமானமும் இகழ்ச்சியுமாகக் கருதப்பட்டது.

பவுல் திருப்பணி செய்த காலத்தில் பலர் அவரைத் திருத்தூதுவராக ஏற்க மறுத்தனர். குறிப்பாக, யூத மார்க்கத்தைச் சார்ந்த சகோதரர்கள் (கலா 2:4; 3:1) விருத்தசேதனம் தான் அடையாளம் (கலா 6:12-13) எனவும், பவுல் திருத்தூதுவர் அல்ல எனவும் கூறி கலாத்துப் பட்டணத்து விசுவாசிகளைக் குழப்பி விட்டனர். இந்தச் சூழ்நிலையில் பவுல், கிறிஸ்துவினுடையவர்கள் என்பதற்கு விருத்தசேதனமோ, பேசும் வார்த்தைகளோ அடையாளம் அல்ல. கிறிஸ்துவின் நற்செய்தியின் பொருட்டு என் உடலில் உள்ள தழும்புகளே நான் கிறிஸ்துவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம் எனக் கூறுகிறார். அவரது உடலில் எந்தப் பெயரையோ அல்லது உருவத்தையோ பச்சை குத்திக் கொள்ளவில்லை. லேவி 19:28-இன்படி அது தவறான செயல். எனவே, நற்செய்திப் பணியின் போது யூதர்களாலும், பிற இனத்தவராலும் உடலில் ஏற்பட்ட காயங்களும், அனுபவித்த வேதனைகளுமே இந்த அடையாளங்கள் எனக் கூறுகிறார் (2கொரி 11:23-28).

அருள்பொழிவு திருப்பணி கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு காயத்தின் பின்னணியத்திலும் பல உண்மைகள், தியாகங்கள் மறைந்து கிடக்கின்றன. அந்தக் காயங்களினால் ஏற்பட்ட அவமானம், நிந்தனை, ஏராளம் உண்டு. இயேசு கிறிஸ்து அனுபவித்த வேதனைகள், பாடுகள், அவமானங்கள், சிலுவையின் காயங்கள் தான் மனுக்குல மக்களின் விடுதலை வாழ்வின் அடித்தளங்கள். தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக் கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்கு நாம் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறோம் (திப 20:28). நமது அதிகாரத்தைச் செலுத்தி, பிறரைக் காயப்படுத்துவதும், அவர்களை அழிப்பதும் உண்மையான திருப்பணியல்ல. கிறிஸ்துவின் மீது கட்டப்பட்ட திருச்சபைப் பணியில் பலர் நம்மீது கல்லெறிந்து காயப்படுத்துவார்கள். கிறிஸ்துவுக்காகக் காயப்படுவதும், பாவ அடிமைத்தனத்தில் கட்டுண்டு காயப்பட்டுக் கிடப்போரின் காயங்கட்டுவதுமே மேன்மையான அருள்பணி.

### *1. கிறிஸ்துவுக்காகக் காயப்படுதல்:*

கிறிஸ்துவின் திருப்பணியைத் திருச்சபையில் நிறைவேற்றும் போது கிறிஸ்துவுக்காகப் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறோம். அநேக நேரங்களில் நாம் அனுபவிக்கும் பாடுகள் சுயநலத்தாலும், நமது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதாலும் ஏற்படுகின்றன. சில நேரங்களில் அநீதிக்குத் துணை போவதால், இறை நீதியை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, மன அமைதியை இழந்து தவிக்கிறோம். நமது விருப்பத்தை நிறைவேற்ற நாம் அனுபவிக்கும் பாடுகளையெல்லாம் கிறிஸ்துவுக்காகக் காயப்பட்டோம் எனக் கூறுவதும் தவறாகும். கிறிஸ்துவுக்காக, நற்செய்திக்காக, இறைநீதியை நிறைவேற்ற பாடுகளை அனுபவித்திருக்கிறோமா? காயப்பட்டிருக்கிறோமா?

கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற தவறிய அரசர் சவுலைத் தள்ளிவிட்டு, தாவீதை அரசராக அருள்பொழிவு செய்தார். தாவீதின் வளர்ச்சியை சகிக்க முடியாத சவுல், தாவீதைக் கொலைசெய்ய முயன்றதால் தாவீது தப்பி ஓடிவிட்டார். பின்வரும் காரியங்கள் அவரது அனுபவமாக மாறியது. அருள்பொழிவு திருப்பணி செய்பவர்களுக்கும் இதுவே அனுபவமாக இருக்கும் எனத் திருமறை கூறுகிறது.

இகழப்படுவீர்கள் (Reproach), (லூக் 8:53; திப 17:32; 1பேது 4:14) பகைக்கப்படுவீர்கள் (Hatred), (மத் 10:22) துரத்தப்படுவீர்கள் (Drive away), (யோவா 1:11) கொல்லப்படுவீர்கள் (Killed) (யோவா 16:1-3; உரோ 8:36.)

சவுலின் சதித்திட்டத்திற்கு விலகி ஓடிய தாவீதுக்குப் போஜனம் கொடுத்த குருவாகிய அகிமெலேக்கு (1சாமு 21:1-7). செய்த செயலை ஏதோமியனாகிய தோயேகுக்கு சவுலுக்கு அறிவித்தான் (1சாமு 22:9,10). அரசனிடத்தில் வரவழைக்கப்பட்ட அகிமெலக்கு உண்மையைக் கூறிய பின்னரும், தாவீது குருக்களைக் கொல்லக் கட்டளையிட்டார். அரசனின் வேலைக்காரர்கள் தங்கள் கைகளை குருக்களுக்கு விரோதமாக நீட்டவில்லை. ஆனால் ஏதோமியனாகிய தோயேகு 85 குருக்களைக் கொன்றான் (1சாமு 22:13-18). கடவுளால் அருள்பொழிவு செய்யப்பட்ட குருக்கள் என்ன தவறு செய்தார்கள்? தாவீதுக்கும் அவருடைய ஆட்களுக்கும் பசிக்கு உணவு கொடுத்து நன்மை தான் செய்தார்கள். ஆனாலும் கொல்லப்பட்டார்கள். 2கொரி 11:23-28-இல் கூறப்பட்டுள்ளபடி, திருத்தூதுவர் பவுலினுடைய திருப்பணி அனுபவம் தான் கிறிஸ்துவுக்காகக் காயப்படும் திருப்பணி.

***2. கிறிஸ்துவுக்காகக் காயம் கட்டுதல்:*** (எசே 33:15,16).

அருள்பொழிவு திருப்பணி என்பது பிரசங்கித்தல், தொழுகை நடத்துதல், இல்லச்சந்திப்பு மட்டுமல்ல, காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவதே (எசே 34:15,16) உண்மையான திருப்பணி. ஏழைகளையும் எளியவர்களையும் ஏமாற்றி, தசமபாகம், காணிக்கை என்ற பெயரில் பணத்தை வாங்கி, ஆடம்பர வாழ்க்கை வாழ்வதோ, நற்செய்தி ஊழியக் காணிக்கையைப் பங்கிட்டுக் கொள்வதோ அல்ல. நம்முடைய வருமானத்தில் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் நம் வீட்டில் வந்து புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுப்பதும், (இச 26:12,13) ஏழைகளின் நியாயம் புரட்டப்படாமல் இறைநீதியை நிறைவேற்றுவதுமே அருள்பணி.

அருள்பொழிவுத் திருப்பணி என்பது பிறரைக் காயப்படுத்துவதற்கும் ஆளுகை செய்வதற்கும் அதிகாரம் செலுத்துவதற்குமல்ல (எசே 34:2-6), காயப்பட்டவர்களின் காயம்கட்டும் பணி (லூக் 10:30-37). காயப்பட்டுக் குற்றுயிராய்க் கிடப்பவர்களுக்கு உதவி செய்யவோ, அவர்களது காயத்தைக் கட்டவோ மனமில்லாமல் ஒதுங்கி ஓடும் ஆசாரியர், லேவியர் வாழும் உலகில், சமாரியனைப் போல காயம்கட்டி, சத்திரம் சேர்க்கும் திருப்பணியர், ஆயர்கள் அநேகர் கிறிஸ்துவின் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். (திபா 147:3). உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்துகின்றார். அவர்களின்

காயங்களைக் கட்டுகின்றார். காயப்பட்டவர்களின் காயங்களைக் கட்டுகிற கடவுளின் பணியைச் செய்கின்ற நாமும் காயப்பட்டவர்களின் காயங்களைக் கட்டுவோம்.

நமக்காகக் காயப்பட்ட கிறிஸ்துவின் பணியை நிறைவேற்றும்போது நிச்சயமாக நமக்கும் காயங்கள் ஏற்படும். அவைகள் அவமானத்தின் அடையாளமோ, தோல்வியின் அடையாளமோ அல்ல. அவைகள் வெற்றியின் அடையாளங்கள், நம்பிக்கையின் அடையாளங்கள். அவருக்காகக் காயப்படுகிற நம்மை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமை பலப்படுத்தும்.

நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்லுகிறோம் (2கொரி 4:8-10) என்பதே நமது பணிவிடையின் அனுபவமாகட்டும்.

அருள்திரு. D. **ஐசக் சுந்தர்சிங்**

01-08-2021

## அருள்பணி : கிறிஸ்துவின் வேதனையைப் பகிர்தல்

**MISSION : SHARING GOD'S PAIN**

எசா 6:1-8 | திப 9:10-18
திபா 40:1-13 | லூக் 10:1-11

**மேலும், "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?" என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு "இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்" என்றேன்** (எசா 6:8).

Mission என்ற ஆங்கிலச் சொல் இராணுவத்தில் பயன்படுத்தப்படும் சொல். குறிப்பிட்ட வீரர்களை, ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவேற்ற அனுப்பப்படுவதை Mission என்பார்கள். இது வன்முறை கலந்தது. இரத்தம் சிந்துதலோடு தொடர்புடையது. ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கோ, தேசத்திற்கோ மட்டுமே நன்மை தரக்கூடியது. ஆனால் Mission என்பது மற்றவர்களுக்காய் இரத்தம் சிந்தி, இறைவேதனைகளை கரிசனையோடு பகிர்வதில் தான் அடங்கியிருக்கிறது.

தமிழில் நாம் இதனை அருள்பணி என மொழி பெயர்க்கின்றோம். இது ஆழமான, அர்த்தம் பொதிந்த ஒரு வார்த்தையாக இருக்கிறது. "கிறிஸ்துவின் அருளால், கிறிஸ்துவின் அருட்கொடைகளைச் சுமந்து சென்று, தேவையில் இருப்போருக்கு வாரி வழங்கும் பணியே அருள்பணி, இது மிக மிக இன்றியமையாத பணி" "நாம் இந்த உலகில் இருப்பதற்குக் காரணம் கிறிஸ்தவ அருட்பணியே" என்று ஆண்ட்ரு முர்ரே கூறுகிறார். இது அருட்பணியின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.

"கிறிஸ்தவ அழைப்பு என்பது பிழைப்பிற்கானது அல்ல, உழைப்பிற்கானது" என்பதில் நமக்குத் தெளிவு வேண்டும். இறையரசின் திருப்பணியாளர்களாய் இரவும், பகலும் அயராது உழைக்கும்படியாய் நாம் அழைக்கப்படுகின்றோம். மனிதர்கள் மீது கடவுள் கொண்ட கரிசனையை, வேதனையை உள்ளபடியே மனிதர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டியது அருள்பணியாளர்களின் கடமையாக இருக்கிறது.

கிறிஸ்துவின் வேதனைகளை நாம் எப்படிப் பகிர்வது என்பதனைத் திருமறைப் பகுதிகளின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

### *1. குரல் கொடுப்போம்* :

கிறிஸ்துவின் வேதனையைப் பகிர்கின்ற அருள்பணியாளரின் இன்றியமையாத பணி, குரலற்றோர்க்காய்க் குரல் கொடுப்பதே. எசா 6:8இல்

இறைக்குரல் வேதனையோடு தொனிப்பதை நாம் காண இயலும். "யாரை அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?" என்பதே அந்த வேதனைக் குரல். இறைவர் எந்தப் பணிக்காக ஆட்களைத் தேடுகிறார்? குரலற்ற மக்களுக்காகக் குரல் கொடுக்கத்தானே. விடுதலைப் பயணம் 3-ஆம் பிரிவில் பார்க்கின்ற போது, கடவுள் மோசேயைஏன் அழைக்கிறார்? குரலற்றவர்களாய், அடிமைகளாய் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்காகக் குரல் கொடுக்கத்தான். லூக்கா 4:18,19-இல் இயேசு கிறிஸ்துவின் நாசரேத்தூர் அறிக்கையிலும் இந்தச் சிந்தனை முக்கியத்துவம் பெறுகிறது. இறைவரின் குரல் வேதனையோடு தொனிக்கும் சூழலில், இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும் என்று எசாயா இறைவாக்கினரைப் போல அர்ப்பணம் செய்யும் உள்ளம் நமக்குத் தேவையாயிருக்கிறது.

நமது மண்ணிலே, நம் முன்னோர் பட்ட பாடுகள், சந்தித்த ஒடுக்குதல்களைச் சொல்லி முடியாது. அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டவர்களாய், விலங்குகளைப் போல நடத்தப்பட்ட காலம் இருந்தது. பெண்கள் மேலாடை கூட அணிய முடியாமல், கூனிக்குறுகி, குரல் கொடுக்கவும் முடியாமல் தயங்கி நின்றபோது, அவர்களுக்காய் இணைக் குரல்கள் ஓங்கி ஒலித்தன. அது அருள்திரு. சார்லஸ் மீட் மற்றும் அவரது மனைவியின் குரல்களே. தீர்க்கமாய் ஒலித்த இக்குரல்களால், பல்லாண்டுகளாக நிலைத்திருந்த சாதீய அடிமைத்தனம் நம் சமூகத்திலிருந்து விடைபெற்றது. இப்படி விடுதலை பெற்ற மக்களின் மகிழ்ச்சிப் பாடல் ஒன்று ஓலைச்சுவடியாக கிடைக்கப்பெற்றது. 1845-ஆம் ஆண்டில் அடிமை முறையை ஒழிக்கும் சட்டம் இயற்றப்பட்ட போது பாடப்பட்ட பாடல் இது.

> "எமது அடிமை வேலை ஒழிந்ததே
> எமது அடிமை ஓலை கிழிந்ததே"

என்று ஆர்ப்பரிக்கின்றன இதன் வரிகள். இதற்குக் காரணம் அருள்பணியாளர்கள் கொடுத்த குரல் தான். இப்படிப்பட்ட அருள்பணியை செய்யவே இறைக்குரல் வேதனையோடு நம்மை அழைக்கிறது. இறை வேதனையை இணைந்து பகிர்வோம். விடுதலை வாழ்வைப் பெறுவோம்.

### *2. குணப்படுத்துவோம்* :

இறைமக்கள் குணமாக்கப்பட வேண்டும் என்பது அருள்பணியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. பெலன் இழந்து நிற்பவர்களுக்கு ஆற்றலையும், ஆறுதலையும் கொடுக்க வேண்டியது நமது கடமையே. இதிலே யாரையும் ஒதுக்கி வைக்க நமக்கு உரிமையில்லை. ஆண்டவரின்

சீடர்களுக்கு, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு மாபெரும் அச்சுறுத்தலாய்ச் சீறி எழுந்தவர் சவுல். கிறிஸ்துவைப் பின்பற்றும் இந்தப் புதிய கூட்டத்தைச் சிதறடித்து, அவர்களைக் கைது செய்து எருசலேமுக்கு இழுத்து வர வேண்டும் என்பதே சவுலின் நோக்கம் (திப 9:1,2). "தவறான பாதையில் வேகமாய்ச் செல்வதை விட, சரியான பாதையில் மெதுவாகச் செல்வதே புத்திசாலித்தனம்" என்பார்கள். ஆனால் சவுலுக்கு இதனை சொல்லிக் கொடுக்க யாரும் இல்லை. ஆனால் கடவுள் அதனைக் கற்றுக் கொடுத்தார்.

பலவித கனவுகளோடு தமஸ்குவை நெருங்கிய சவுல், வானில் தோன்றிய ஒளியால் தரையில் விழ, பார்வையை இழந்து தடுமாறினார். இறையன்பை உணர்ந்து கொண்ட சவுலோ பார்வையற்றவராய்த் திக்கற்று நின்றார். இவரையும் குணமாக்க வேண்டுமே. அதுதானே இறைத் திட்டம். சவுலின் பழைய வாழ்வை நினைவுகூர்ந்து இந்தச் சமுதாயம் அவருக்கு உதவி செய்ய தனது தயக்கத்தையே வெளிப்படுத்தியது (திப 9:13,14). ஆனால், கடவுள் விடவில்லை. சவுலுக்காக அவர் வேதனைப்பட்டார். அந்த வேதனையை சவுலிடம் சொல்லிப் புரிய வைத்து விட்டார். அதே போன்று மற்றவர்களிடமும் புரிய வைக்க வேண்டியிருந்தது. சவுல் முழுமையாகக் குணமாகும் வரை கடவுளின் வேதனை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

தம்மைப் பிடிக்கும்படியாக வந்த தலைமைக் குருவின் பணியாளரின் காதை, இயேசு கிறிஸ்துவுடன் இருந்த ஒருவர் துண்டித்த போதும் அவருக்காக இயேசு கிறிஸ்து வேதனைப்பட்டார். அவரைக் குணமாக்கினார் (லூக் 22:50,51). எனவே அனைவரும் குணமாக்கப்பட வேண்டும் என்பதே கடவுளின் விருப்பமாயிருக்கிறது. கடந்த ஆண்டு கொரோனா எனும் பெருந்தொற்றால் அதிகமானோர் தங்களைத் தனிமைப்படுத்தும் சூழலுக்கு ஆளானார்கள். அவர்கள் பட்டபாடுகள், மனபாரங்கள் கணக்கிலடங்காதவை. இந்தச் சமூகம் அவர்களை ஒதுக்கி வைத்த போதும், நம் இறைவன் அவர்களின் வேதனைகளை உணர்ந்து, அவர்களுடன் வேதனைப்பட்டார். இந்த வேதனையைப் பகிர்ந்து கொள்வதும், குணமாக்கும் பணியில் இணைந்து செயல்படுவதும் அருள்பணியாளர்களின் கடமையாகும்.

### *3. குறைவுகளை ஏற்போம்* :

அருள்பணிக்கான அழைப்பு என்பது மலர்ப் படுக்கை போன்றது அல்ல. அது ஒரு முள் படுக்கை. இதில் பாடுகள், குறைவுகள் வருவது இயல்பான ஒன்று. அந்தக் குறைவுகளை மனமுவந்து ஏற்க வேண்டியது அருள்பணியாளரின் கடமை என்பதைக் கிறிஸ்து போதிக்கிறார். அருள்பணிக்காகத் தம் அடியவர்களை கிறிஸ்து அனுப்பும் நிகழ்வினை லூக் 10ஆம் பிரிவில் காண்கின்றோம். இந்த அருள்பணியாளர்களுக்கு

அவர் கற்றுக் கொடுத்த மாதிரி மிகவும் சிறப்பானது. "ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல உங்களை நான் அனுப்புகிறேன்" (லூக் 10:3) என்று இயேசு கிறிஸ்து கூறும் போதே இந்த அருள்பணியின் கடினம் நமக்குப் புலனாகிறது. ஆனால் இந்தக் குறைவுகளை நாம் மனமுவந்து ஏற்க வேண்டும் என்பதே இறைத் திட்டம். வழியில் நீங்கள் எதையும் கொண்டு செல்ல வேண்டாம். கிடைத்ததை உண்டு, அங்கே தங்கி இருங்கள் என்று போதிக்கிறார். இது எளிமையான வாழ்வை நாம் முன்வைக்க வேண்டும் என்பதற்கான அடையாளம். இதிலே யாராவது, எந்த நகரமாவது உங்களை ஏற்காவிட்டால், உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிட்டு வந்து விடுங்கள் என்று போதிக்கிறார். இது அந்த நகரத்தை நாம் சபிக்க அல்ல; அந்தத் தீமையான நிகழ்வினை அன்றோடு நாம் மறக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

கிறிஸ்து இவ்வுலகில் திருப்பணியை நிறைவேற்றிய போதும் எல்லாமே நிறைவாக அமைந்துவிடவில்லை. எதிர்ப்புகள், கேலிகள், அவமானங்களின் நடுவேதான் தம்முடைய திருப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றினார். "ஒருமுறை கூட நற்செய்தியைக் கேட்டிராத எவரோ ஒருவர் இருக்கும் வரை, இருமுறை நற்செய்தியைக் கேட்பதற்கு யாருக்கும் உரிமையில்லை" என்றார் ஆஸ்வால்ட் J. ஸ்மித். நற்செய்தியை அனைவரும் அறிய வேண்டுமாயின் குறைவுகளை மனமகிழ்வோடு ஏற்றுக் கொண்டு நாம் அருள்பணியாற்ற வேண்டியது தேவையாக இருக்கிறது. நற்செய்தியை நம் மண்ணில் விதைத்த தென் திருவிதாங்கூரின் திருத்தூதர் அருள்திரு. வில்லியம் தொபியாஸ் ரிங்கல்தௌபே அவர்கள் அருள்பணியாளராய் நம் மண்ணில் வந்த போது அவருக்குக் கிடைத்த வாய்ப்புகள் மிகக் குறைவானதே. பெரிய வரவேற்பில்லை, சுகபோக வாழ்வில்லை. ஆனால் இறை வேதனை அவரின் உள்ளத்தில் நிறைந்திருந்தது. அந்த வேதனையைச் சுமந்து கொண்டு அருள்பணியாற்றிய அடியவரின் மகத்தான பணியின் பலனே கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி.

இன்று நாமும் குரலற்றவர்களுக்காய்க் குரல் கொடுத்து, நோய்களிலிருந்து மக்களை ஏற்றத் தாழ்வின்றிக் குணமாக்கி, இறை வேதனைகளை நமது குறைவுகளின் நடுவே பகிர்ந்து கொள்ளும்போது, மாபெரும் மலர்ச்சியினை நம் மண்ணில் காண முடியும். அதற்காகக் கருத்தாய் நாம் செயல்படுவோம். இறைப் பெலன் நம்மைத் தாங்கி வழிநடத்தட்டும்.

அருள்திரு. M. **கிதியோன்**

08-08-2021

# திருமணத்தை மதியுங்கள்

**HONOUR MARRIAGE**

| | |
|---|---|
| மலா 2:13-16 | 1கொரி 13:1-14:1 |
| திபா 45 | மாற் 10:2-9 |

**"இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல்"** (மாற் 10:8).

திருமணம் என்பது இறைச் சமூகத்தில் ஓர் ஆண் மற்றும் பெண் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கையின் உறவாகும். (Marriage is a covenant relationship between a man and woman in the presence of God). இவ்வுறவு சிதைவதற்கு அனேகக் காரணங்கள் இருப்பினும் திருமணத்தை மேன்மையுள்ளதாக மதிப்பளிக்கத் தவறுவதே முதன்மையானது. இன்றைய நவீன உலகில் தவறாகப் புரிந்து கொள்ளுதல், முதிர்ச்சியின்மை, போதைப் பொருட்களின் பயன்பாடு, வரதட்சணை போன்ற அனேகக் காரணிகள் உறவுகளை முறிக்கின்றன. ஆனால் திருமணத்தின் சாரமே திருமணத் தொழுகையில் இறைவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளும் உடன்படிக்கையும் அதை ஒருபோதும் மீறக் கூடாது என்ற உணர்வுமே திருமண வாழ்வை வலுப்படுத்த உதவுகின்றன.

## *1. நெருக்கமான அன்பின் வழியாகத் திருமணத்தை மதியுங்கள்* : (Honour marriage through intimate love) (மலா 2:14)

திருமண உறவில் Intimacy நெருக்கமான தன்மை மிக மிக இன்றியமையாதது. இவ்வசனத்தில் கூறப்படும் 'உன் தோழி' என்னும் வார்த்தை திருமண உறவில் நெருக்கத்தைக் காட்டுகின்றது. கணவன் மனைவி இருவருக்குள் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? யார் கட்டுப்படுத்துபவர்? யார் வழிநடத்துபவர்? போன்ற ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல், நண்பர்களைப்போல தோழமையுடன் செயல்படுவது உறவை திரும்ப வலுப்படுத்துவதுடன் சரியான புரிந்து கொள்ளுதலையும் உருவாக்கும். நல்ல தோழர்களுக்கிடையே ஒளிவுமறைவுகள் இல்லாது போல, எதையும் மறைவின்றிப் பேசுவது போல, திருமண உறவில் கணவன் மனைவியிடையே காணப்படும் அன்பு மிக நெருக்கமான ஒன்றாக அமைவது திருமணத்தை மதிக்கச் செய்யும். 1கொரி 13:1 முதல் காணப்படும் அன்பின் பண்புகளும் உறவில் நெருக்கத்தை (Intimate relationship) அதிகரிக்கும்.

### 2. உறுதியான நம்பிக்கையினூடாகத் திருமணத்தை மதியுங்கள் (Honour marriage through strong faith) : (மலா 2:15)

திருமணத்தின் நோக்கங்களிலேயே முக்கியமானது தேவ பக்தியுள்ள சந்ததிகளை உருவாக்குவதே. திருமண உடன்படிக்கை இறைவன் முன்னால் செய்யப்பட்டது. அதை மீறக் கூடாது என்பது ஆழ்ந்த உறுதியான இறைப் பக்தியின் வெளிப்பாடாகும். கணவன் மனைவியிடையே காணப்படும் நம்பிக்கை பொருள் அளவிலோ, சூழ்நிலைகளுக்கு உட்பபட்டதோ அல்ல. மாறாக, எந்தக் காரணிகளாலும் உடைத்துப்போட முடியாத உறுதியான ஒன்று. எச்சூழலிலும் அவர் என் மனைவி, இவர் என் கணவர் என்ற அன்பின் பிணைப்பும், இறைவன் எங்கள் உறவில் இணைந்துள்ளார் என்ற நம்பிக்கையுமே உறவுகள் முறிந்து விடாதபடிக்குப் பாதுகாக்கும். குடும்ப உறவுகளின் மேல் கொண்டுள்ள நம்பிக்கை தேவப் பக்தியின் அடிபபடையிலேயே காணப்படும் திருமண உறவை விட்டுச் செல்லாமல் அதை மதித்து, தலைமுறை தோறும் அதைக் காத்திடச் செய்வார்.

### 3. அறிவார்ந்த சகிப்புத்தன்மையினூடாகத் திருமணத்தை மதியுங்கள் : (Honour marriage through intelligent endurance)

(மலா 2:16)

திருமண வாழ்வில் விழிப்புணர்வு மிகவும் இன்றியமையாதது. திருமணத்தைக் குறித்து, குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைக் குறித்து விழிப்புடன் காணப்படுவது திருமண வாழ்வைச் சிறப்புடன் நடத்திட துணைபுரியும். இதற்காகவே திருமண முன் ஆலோசனை வகுப்புகளைப் பேராயம் (Pre - marital counselling) நடத்துகின்றது. மலா 2:16-இல் தள்ளிவிடுகிறவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் எனக் கூறப்பட்டுள்ளது. திருமண உறவில் விட்டுக் கொடுத்தல், சகித்தல், பொறுமை, சாந்தம் இவை மிகவும் தேவை. இவை அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் குணங்களாக அல்ல; மாறாக அறிவார்ந்த உறவுகள் உடைந்து விடாதபடிக்கு வெளிப்படுத்தும் குணங்களாகவே காணப்பட வேண்டும். சகிப்புத்தன்மை அறிவார்ந்ததாக அதாவது சூழ்நிலை, கலாச்சாரம், குடும்ப மரபுகள், பாரம்பரியம் இவற்றை உணர்ந்து ஏற்றுக் கொள்வதையே உணர்த்துகின்றது. மாற்கு 10:2-9 இல் மோசே தள்ளுதற் சீட்டைக் கொடுத்தது, மக்களின் இருதயக் கடினத்தினால். தற்போதோ நீங்கள் அறிவுசார்ந்து சிந்தித்து கணவன்

மனைவி பிரிக்கமுடியாதபடிக்கு ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் திருமண வாழ்வில் சகிப்புத்தன்மை தானாகவே ஏற்பட்டுவிடும். அது கணவன் மனைவி இருவரின் பண்பாகவே, குணமாகவே மாறிவிடும்.

திருமணமான முதல் வாரமே Acid-னால் முகம் கருகிப் போன ஆனந்தியைத் தள்ளிவிடாமல் காத்துக் கொண்டவர் அவருடைய கணவராகும். இது போல எத்தனையோ மனிதர்கள் திருமணத்தை மதித்து சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்க, சிறு சிறு குறைகளைச் சுட்டிக்காட்டி உறவுகளை உடைத்துக் கொண்டிருக்கும் மனிதர்களும் பெருகி வருகின்றனர். திருமண வாழ்வில் நெருக்கமான அன்பின் (Intimate love) வழியாகவும், உறுதியான நம்பிக்கையின் (firm in faith) வழியாகவும், அறிவார்ந்த சகிப்புத்தன்மையினூடாகவும் (Intelligent endurance) திருமணத்தை மதிப்போம், திருமண வாழ்வை மதிப்புடன் வாழ்வோம்.

அருள்திரு. J. **டேனியல் ஜோசையா**

15-08-2021

## திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும்

**BAPTISM : DYING AND RISING UP WITH CHRIST**

தொநூ 7:11-24 உரோ 6:1-14
திபா 29 யோவா 12:20-26

**"இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்"** (உரோ 6:4).

திருமுழுக்கு என்பது (Baptism) 'Bapto' என்ற கிரேக்க வேர்ச் சொல்லிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதற்கு மூழ்குதல், கழுவுதல், சுத்தம் செய்தல் போன்ற பல பொருள்கள் உள்ளன. திருச்சபை திருமுழுக்கை மிக முக்கியமான திருவருள்சாதனமாகப் பின்பற்றி வருகிறது. எனவே கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வு திருமுழுக்கிலிருந்து தொடங்குகிறது. திருமுழுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்புக்கட்டளையாகவும் இருக்கின்றது (மத். 28:18,19). இன்று திருச்சபைகளில் திருமுழுக்கின் முறைகள் (Modes of Baptism) குறித்து விவாதங்களும், பிரிவினைகளும் எழுகின்றன. ஆனால் திருமுழுக்கின் முறை முக்கியமல்ல, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யாராயினும் திருமுழுக்குப்பெற்ற அனைவரும் கிறிஸ்துவோடு இணைகிறார்கள் (கலா 3:27). ஆகவே திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் இறப்பு, உயிர்ப்பு இவைகளில் நம்மை இணைத்துக் கொள்கிறோம். விசுவாச வீட்டார் (திருச்சபை) அனைவரோடும் இணைந்து பயணிக்க புதிய ஆற்றலைத் தருகிறது.

### *1. மீட்பின் அனுபவம்* : (தொநூ 7:11-24)
(Experience of Salvation)

திருமுழுக்கு என்பது சாதரண நீராடுதல் அல்ல; நம்மிலுள்ள தூய்மையின்மைகளைத் தூய்மைப்படுத்துகிறது. நம் ஆன்மிக வாழ்வில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

கடவுள், நோவா காலத்தில் வெள்ளப்பெருக்கின்போது பேழை வழியாகக் காக்கப்பட்ட அனைத்து உயிர்களோடும் உடன்படிக்கை செய்தார் (தொநூ 9:9,10). தூய பேதுரு இதனைத் திருமுழுக்கிற்கு அடையாளமாகக் காட்டுகிறார் (1பேது 3:19-21). இஸ்ரயேலர் செங்கடலைக்

கடந்த நிகழ்வினை, தூய பவுலடியார் (விப 14:15-31) இஸ்ரயேலர் செங்கடலில் பெற்ற திருமுழுக்காகக் கருதுகிறார் (1கொரி 10:1,2). செங்கடல் அனுபவம் அடிமைத்தனத்தினின்று நிரந்தர விடுதலை கொடுத்தது. பேழை, செங்கடல் இந்த இரண்டு நிகழ்வுகளுமே கடவுளின் ஆற்றலைப் புரிந்து கொள்ளவும், புதிய நம்பிக்கையோடு பயணிக்கவும், நம்மை நடத்தும் கடவுளின் திருமுன்னர் தூய்மையாய் வாழ வேண்டும் என்ற புதிய அனுபவத்தையும், பெற்றனர்.

மீட்பின் அனுபவம் அதைத் தொடர்ந்து தூய்மையான வாழ்வு இவைகள் அனைவரது வாழ்விலும் நிகழவேண்டிய ஒன்றாகும். பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பும் தூய்மையின் அடையாளமாகவும் கிறிஸ்வின் உடலாகிய திருச்சபையில் கொள்ளும் புதிய உறவாகவும் திருமுழுக்கு அமைந்துள்ளது (எபேசி 5:25,26; எபி 10:21,22).

### ***2. சுய மறுப்புக்கான அழைப்பு*** : (யோவா 12:20-26)

(A Call to Self denial)

திருமுழுக்கு கிறிஸ்துவோடு இணைவதற்கு அடையாளமாக இருக்கின்றது. ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் (திப 22:16; உரோ 10:9,10), முதலாவது பாவத்தினின்று கழுவப்பட்டு கிறிஸ்துவோடு இணைய வேண்டும் (எபி 10:22; 1கொரி 6:11; திப 22:16). அப்போது அவர் புதுப் படைப்பாகி புதிய ஆள்தத்துவத்தைப் பெறுவார். பழைய மனிதத் தன்மை அழிந்து போகும். இது கிறிஸ்துவோடு மரிப்பதையும் உயிர்ப்பதையும் குறிக்கிறது.

திருமுழுக்கின் வழியாகக் கிறிஸ்து நம்மைக் கனி கொடுக்கும் வாழ்வுக்கு அழைக்கிறார். திருமுழுக்கு சீடத்துவத்தின் பாதையாக அமைந்துள்ளது. தம்மைப் பின்பற்றுபவர்களைப் பார்த்து இந்த மீட்பின் பணிவிடையைத் திருமுழுக்கின் வழியாய்ச் செய்ய அழைக்கிறார் (மத் 28:19). திருமுழுக்குப் பெறுபவர் கிறிஸ்துவின் சிந்தையோடு வாழவும், கிறிஸ்து தம்மை வெறுத்ததுபோல, நாமும் நம்மை வெறுத்து சிலுவையைச் சுமந்து செல்ல அழைக்கப்படுகின்றோம். கோதுமை மணியைப் போல நம் வாழ்வு அமைந்திட வேண்டும். கோதுமை மணி தன்னை இழப்பது போல, கிறிஸ்துவுக்காக நாம் நம்மை வெறுத்து வாழ்வது, துன்பம் சகித்தல், கிறிஸ்து மாத்திரம் போதும் என வாழ்வது, பிறருக்குத் தொண்டு செய்வது போன்ற செயல்களை செய்ய வேண்டும்.

## 3. கிறிஸ்துவோடு இறத்தலும் எழுதலும் : (உரோ 6:9-14)

(Dying and Risingup with Christ)

திருமுழுக்கினால் நாம் கிறிஸ்துவில் ஒன்றுபடுவதோடு கிறிஸ்துவின் வழியாக அவரது இறப்பிலும், உயிர்ப்பிலும் பங்கு பெறுகின்றோம். கிறிஸ்துவின் சிலுவை அனுபவம், சிலுவையிலிருந்து பிரிக்கக்கூடாத அவரது உயிர்த்தெழுதலிலும் ஒருவர் எவ்வாறு திருமுழுக்கின் வழியாகப் பங்கு பெறுகிறார் என்பதின் விளக்கமே (உரோ 6:9-14) ஆகும். இது கிறிஸ்துவின் போதனையிலும் அடங்கியுள்ள (மாற் 10:38; லூக் 12:50).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவுக்குள் மரித்து உயிர்த்தெழும் ஓர் அனுபவமாகும். கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் அவருடைய இறப்புக்குள்ளாகத் திருமுழுக்கு பெற்றோம். அதன்வழி அவரோடு அடக்கம் பண்ணப்பட்டோம், புதிய உறவில் அவரோடிணைந்த நாம் புதிய நம்பிக்கையில் அவரோடு எழுப்பப்பட்டிருக்கிறோம் (கொலோ 2:12; உரோ 6:5,6,11). திருமுழுக்குப் பெற்ற நாம் பாவத்தில் நிலைத்திராத ஒரு புதிய வாழ்வை வாழ்வது மட்டுமல்லாமல் புதிய படைப்பாகவும் மாறுகிறோம் (2கொரி 5:17). இதன் வழி இன்னுமோர் புதிய நம்பிக்கை நமக்குள் எழுகிறது. அதென்னவெனில் கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டதுண்டானால் அவரோடு மகிமையில் வெளிப்படுவோம் (கொலோ 5:1-3). இத்திருமுழுக்கு கிறிஸ்துவுடன் இணைதல் என்பதை மிக அதிகமாக வலியுறுத்துகிறது (உரோ 6:3; கலா3:24; 1கொரி 12:13). மீட்பின் நன்மைகளை அனுபவிப்பவர்களாகவும் நிலைவாழ்வில் அவரது பிள்ளைகளாகும் வாக்குறுதியையும் தருகிறது.

இன்று கிறிஸ்தவர்களிடையே திருமுழுக்கினைப் புரிந்து கொள்வதில் தடுமாற்றம் காணப்படுகிறது. இதனை ஒரு விவாதப் பொருளாக எடுத்துக் கொள்ளாதபடி மீட்பின் அனுபவமாகவும், சுயநலமற்ற வாழ்வுக்கான அழைப்பாகவும் எல்லாவற்றிற்கு மேலாக, கிறிஸ்துவோடு இறத்தலும் எழுதலும் என்னும் நம்பிக்கையோடு பயணிப்போம்.

அருள்திரு. S. **பெல்சன் கிராமணி**

15-08-2021

**இந்திய விடுதலைத் திருநாள்**

# சமூக இசைவு

## COMMUNAL HARMONY

| | |
|---|---|
| தொநூ 11:1-9 | 2 திமொ 2:14-26 |
| திபா 66 | மத் 5:38-48 |

**..."உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்"** (மத் 5:48).

நமது இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டம் சிறப்புமிக்கது. நூற்றுக்கணக்கான தலைவர்கள் மற்றும் மக்களின் போராட்டமும், புரட்சியும், சிறை வாழ்வும், தியாகமும் கலந்த வெற்றி என்று பெருமையுடன் கூறுமளவிற்கு விடுதலையை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ நூற்றாண்டுகளாக இந்தியாவில் நடந்து வந்த பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்து, ஆட்சிப் பொறுப்பை இந்திய மக்களிடம் ஒப்படைக்கும் விழா 1947 ஆகஸ்ட் 14 ஆம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு டெல்லி மத்திய மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. இதில் சொற்பொழிவு நிகழ்த்திய இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு, "சுதந்திரம் உதயமாவதற்கு முன்னர் நாம் எல்லா வகையான துன்பங்களையும் சகித்துக் கொண்டோம். சில துன்பங்கள் இப்போதும் கூட நிழலாடுகின்றன. எனினும் கடந்த காலம் முடிந்து விட்டது. இப்போதும் வருங்காலமே நம்மை அழைக்கிறது. எனவே நம் கனவுகளை நிறைவேற்றிட நாம் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்" எனக் கூறினார்.

விடுதலையைப் பெற்றாலும் சமூகப் பிரிவினைகள், தீமைகள், வறுமை, வன்முறை, சமயப் பிரச்சனைகளால் நம் கனவுகள் சிதைந்து கொண்டிருக்கின்றன. சுதந்திரம் என்ற சுவாசக் காற்றை அனுபவிக்க திண்டாடும் மக்கள் கூட்டம் ஏராளம். உரிமைகள் மறுக்கப்பட்டு மக்கள் வீதிகளில் போராட வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகவே உள்ளது. ஆகவே நாட்டின் விடுதலையைக் கொண்டாடும் இச்சூழலில் குடிமக்கள் மற்றும் தேசத்தலைவர்களோடு இசைந்த வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம். சமூக இசைவு என்பது அமைதியற்ற மற்றும் ஒற்றுமையில்லாச் சூழல்களில் ஏற்படுகிற இணக்கமான நிலையே ஆகும். இந்த இசைவான வாழ்வை எவ்வாறு வாழ்வது? என்பதைத் திருமறைப்பகுதிகள் வழியாக சிந்திப்போம்.

### *1. பிரிவினையைக் களைவோம்:*

...வானளாவிய நகர் ஒன்றை நமக்காகக் கட்டி எழுப்பி, நமது பெயரை நிலைநாட்டுவோம் (தொநூ 11:4).

இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டும். மனிதர் அனைவரும் ஒன்றிணைந்து உழைத்தால் தான் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட முடியும். சினேயார் நாட்டின் சமவெளியில் குடியேறிய மக்கள் கடவுளை மறந்தவர்களாய் ஒருமைப்பாட்டை இழந்து, உறவுகளை விட பொருட்களைப் பெரிதாக மதித்து தங்கள் சுயநலத்தால் தங்களுக்கென்று பெயர் உண்டாக வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றைக் கட்டத் தொடங்கினர் (தொநூ 11:4). சுயநலமிக்க அந்த மக்கள் தாங்கள் செய்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற தற்பெருமையோடு காணப்பட்ட நிலையில் ஆண்டவர் அவர்கள் மொழியில் குழப்பத்தை உண்டாக்கி அவர்களைச் சிதறுண்டு போகச் செய்தார் (தொநூ 11:9).

சுயநலம் கடவுளின் விருப்பத்திற்கும், ஒற்றுமையான வாழ்விற்கு எதிரானது. பிரிவினையை உருவாக்குகிறது. மேலும் சமூகத்தின் இசைந்த வாழ்வுக்கு எதிரானதும் கூட. இது வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இந்தியத் திருநாட்டில் பிரிவினைகளைக் களைந்து ஒற்றுமையை நிலை நிறுத்துவது அவசியமாகிறது. கல்வி, விவசாயம், வேலைவாய்ப்புகளால் ஏற்படும் பிரிவினைகளைக் களைந்து ஒற்றுமையை வெளிக்கொணரும் இசைந்த வாழ்வைச் சமூகத்தில் வாழ்வோம்.

### *2. பண்புகளோடு வாழ்வோம்:*

...அனைவரிடமும் கனிவு காட்டுகிறவராகவும், கற்பிக்கும் திறமையுடையவராகவும் தீமையை பொறுத்துக் கொள்பவராகவும்...இருக்க வேண்டும் (2 திமொ 2:24,25).

ஒரு பணியாளர் தன் கடமைகளை நிறைவேற்றும் போது நல்ல நற்பண்புகளை வாழ்வில் வெளிப்படுத்தி கடவுளுக்கு ஏற்புடைய பணியாளராய் வாழ பவுலடியார் திமொத்திக்கு எழுதின இரண்டாம் திருமுகத்தில் அறிவுறுத்துகிறார். ஒருவரின் அறிவற்ற விவாதங்கள், சண்டைகள், வீண் பேச்சுகளால் சிறந்த பண்புகளை வெளிப்படுத்த முடியாது. ஆனால் அவை பகைமைக்கு அடிகோலுகின்றன.

அமைதியை வாழ்வில் இழக்கச் செய்கிறது. தன் வாழ்வை தூய்மையாய் வைத்துக் கொண்டு எந்த ஒரு நற்செயலையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒரு பெரிய வீட்டிலே விலையுயர்ந்த பொன், வெள்ளிக் கலன்கள் மட்டுமல்ல, மரத்தாலான கலன்களும் உள்ளது போன்று சமூகமும் பல தரப்பட்ட மக்களின் சங்கமம். இந்தச் சங்கமத்தில் மதிப்புடையவர்களும் உண்டு, மதிப்பற்றவர்களும் உண்டு. அனைத்துத் தரப்பினரோடும் நற்பண்புகளை வெளிப்படுத்தி அமைதியில் வாழ்வது இசைந்த வாழ்விற்குரிய சிறப்பான தடம். எனவே வேற்றுமை நிறைந்த சமூகத்தில் ஒற்றுமையின் பண்புகளை வெளிப்படுத்துவோம்.

## *3. பரிவை வெளிப்படுத்துவோம்:*

பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 5:44)

இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவில் உரைத்த போதனைகள் சமூக வாழ்வுக்கு மாதிரியாகக் காணப்படுகின்றன. ஒரு சமூகம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்தினார். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது பழைய ஏற்பாட்டுப் போதனை. இது மனிதனைப் பழிவாங்கத் தூண்டுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்து தீமை செய்வோரை எதிர்க்க வேண்டாம் (மத் 5:39) எனக் கற்பித்து மனிதர் பரிவுள்ளத்தோடு செயல்படத் தூண்டுகிறார். இதன் விளைவாக வன்முறை செய்வோர் அதனைத் தவிர்த்து விடுவர். இதனால் வன்முறை நீங்கி சமூகத்தில் அமைதி ஏற்படும். அந்நாட்களில் இயேசுவின் போதனைகள் சமூகத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. பல்சமயச் சூழல் நிறைந்த இந்திய நாட்டில் வாழும் நாம் பழிவாங்குதலைத் தவிர்த்து பரிவோடு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். பழிவாங்குவதும், கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன (உரோ 12:19, இச 32:35) என்கிறார் ஆண்டவர்.

மேலும் பகைவரை வெறுத்தல், துன்புறுத்துவோரைத் துன்புறுத்துதல், சபிப்போரைச் சபித்தல் போன்றவை இசைவான வாழ்விற்கு எதிரிடையானவைகள். எனவே இயேசுவின் போதனைகளைப் பின்பற்றி, பரிவோடு வாழ்ந்து, இசைந்த சமூகத்தைக் கட்டுவோம்.

இன்று இனம், மொழி பொருள்நிலை கொண்டு
எத்தனை பிரிவுகள் உண்டு?
அன்பினில் பகிர்ந்து இன்பமாய் இணைந்து
ஒன்றாய் இணைந்து வாழ்வதே அருளரசு

மனம் இசைந்து அனைவரும் உடன்பிறப்பாய்
தினம் வாழ்வது சிறப்பானது
நன்மையானது இன்பமானது
மண் வாழ்வினில் பேரழகு.

என்கிறது திரு. ஆர். மோகன் ராஜ் அவர்களின் பாடல் வரிகள்.

பல மொழிகளும், பிரிவுகளும், வேறுபாடுகளுமுடைய இந்திய நாட்டில் கிறிஸ்துவின் அடியவர்களான நாம் அனைவரும் உடன்பிறப்புகள். எனவே பிரிவினைகளைக் களைந்து, பண்புகளோடு வாழ்ந்து, பரிவை வெளிப்படுத்தி இசைந்த சமூகத்தைக் கட்டும் சிற்பிகளாவோம்.

திரு. M.R. **மில்ட்டன் மார்க்**

22-08-2021

## தூய ஒப்படைப்புப் பலி என்னும் திருவருள்சாதனம்

**SACRAMENT OF HOLY QURBANA / SACRIFICE**

| | |
|---|---|
| 2அர 4:42-44 | 1கொரி 11:23-30 |
| திபா 100 | யோவா 6:16-59 |

**"எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார்"** (யோவா 6:54).

ஆண்டவரின் விருந்து என்பது அவரது முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடையிலான ஒரு இணைப்பு (The Lord's Supper is a link between the Lord's first coming and His second coming ) என்று ஃபிரட்றிக் கோடெட் என்பவர் கூறுகின்றார். "கொர்பானா" (Qurbana) என்னும் சிரிய வார்த்தையும், "கொர்பான்" (Korban) என்னும் எபிரெய வார்த்தையும் ஒன்றோடொன்று தொடர்புடையது. எருசலேம் தேவாலயத்தில் நடைபெறும் பலிகளில் ஒன்று கொர்பான் பலி (மாற்கு 7:11). இந்தக் கொர்பான் என்ற வார்த்தை 'கரவ்' (Karav) என்ற எபிரெய வார்த்தையின் மூலத்திலிருந்து வருகிறது. இதன் பொருள் என்னவெனில் 'அருகில் ஈர்க்கப்படுதல்' அல்லது 'அருகில் வருதல்' (to draw close or near) என்பதாகும். தூய கொர்பானா என்பது ஒரு முழுமையான தொழுகையின் (Complete Worship) அடையாளமாகும். பிற திருவருட்சாதனம் தனி நபரின் நலனுக்காக ஆசரிக்கப்படுகின்றது. ஆனால் கொர்பானா என்பது திருச்சபையின் அனைத்து மக்களின் நலனுக்காக ஆசரிக்கப்படுகின்றது. ஆண்டவரின் விருந்து (Lord's Supper) என்பது திருவருட்சாதனங்களில் முதன்மையானதாகவும் (Queen of Sacraments), முழுமையானதாகவும் (Sacrament of perfection) கருதப்படுகின்றது. இது எத்தகைய நன்மைகளைத் திருச்சபைக்குத் தருகின்றது என்பதனைச் சிந்திப்பது நலமாகும்.

### *1. நிறைவாழ்வுக்கான ஒப்படைப்புப் பலி* :

இவ்வாறே அவன் அவர்களுக்குப் பரிமாற அவர்கள் உண்டனர். ஆண்டவரது வாக்கின்படி மீதியும் இருந்தது (2அரச 4:44). 2அர 4-ஆம் அதிகாரத்தில் எலிசா செய்த ஐந்து அற்புதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1. காலிப் பாத்திரங்களில் எண்ணெய் நிரப்புதல்
2. மக்கள் பேறு இல்லாத தம்பதியினர் குழந்தையைப் பெற்றெடுத்தல்
3. அந்த குழந்தை இறந்தபோது உயிர்பெறச் செய்தல்

4. விஷம் நிறைந்த கூழைத் தூய்மைப்படுத்துதல்
5. இருபது அப்பம் கொண்டு நூறுபேருக்கு உணவளித்தல்

இதில் ஐந்தாவது அற்புதம் (2அர 4:42-44), பல உண்மைகளை கற்றுத்தருகின்றது. இந்த அற்புதங்கள் நடைபெற்ற காலகட்டம் பஞ்சம் நிறைந்த காலகட்டம் (2அர 4:42-44) பாலைவனத்தில் நீரோடை போன்றதுதான் பஞ்சகாலத்தில் உணவு. இங்கு எலிசா பணிவிடைக்காரன் கொண்டு வந்த இருபது அப்பங்களை எல்லோருக்கும் அதாவது அங்கிருந்த நூறுபேருக்கும் கொடுக்கக் கட்டளையிடுகிறார். உடனே பணிவிடைக்காரன் இந்த நூறுபேருக்கு இதை நான் எப்படிப் பரிமாறுவேன்? (2அர 4:4) என்று கேட்கிறான். எலிசாவோ ஆண்டவரின் வார்த்தையின் படி அதைப் பங்கிட்டுக் கொடுக்க மீண்டும் அவனிடம் கூறினார். எலிசா சொன்னது போலவே எல்லாருக்கும் கொடுத்ததுமன்றி மீதியும் இருந்தது (2அர 4:44).

இப்பகுதியில் கடவுளின் பணியாளராகிய எலிசாவின் நம்பிக்கையும், கடவுளின் வார்த்தையும் இணைந்து சிறிய அளவான அந்த உணவை அதிகமான மக்களுக்குக் கொடுக்கவும், மீதி எடுக்கவும் உதவி செய்தது. முதற்பலனான அப்பங்களை பணிவிடைக்காரன் கொண்டு வருகிறான். அதை எலிசா பகிர்ந்து கொடுக்கச் செய்கின்றார். புதிய ஏற்பாட்டில் சொல்லப்படும் முதற்பலன் இயேசு கிறிஸ்து (1கொரி 15:23), (யாக் 1:18). அவரது உடலின் அடையாளமாக அப்பம் பகிரப்படுகின்றது. எலிசா பகிர்ந்து கொடுத்த அப்பம் மக்களுக்கு நிறைவைக் கொடுத்தது. அதைப் போன்று இயேசுவின் உடல் பகிர்ந்து கொடுக்கப்படுகின்ற போது விசுவாசிகள் நிறைவைப் பெறுகின்றனர்.

எலிசாவின் அற்புதத்தின் வழியாய் மக்கள் பசியின்றித் திருப்தியடைகின்றனர். இயேசுவின் உடல் பிடப்படும்போது அதைப் பெற்றுக் கொள்ளும் மக்கள் ஆன்மிக உணவால் திருப்தியடைகின்றனர். எலிசா செய்த அற்புதத்தால் பசியுடனிருந்த மக்கள் உடலளவில் பெலப்படுகின்றனர். அதைப் போன்று இயேசுவின் உடலை உட்கொள்ளும் போது விசுவாசிகள் ஆன்மிக வாழ்க்கையில் பெலனடைகின்றனர். கடவுளின் பணியாளராகிய எலிசாவின் நம்பிக்கை, கடவுளின் வார்த்தை மற்றும் குறைவான அளவு கொண்ட அப்பம் இணைகின்ற போது அற்புதம் நடைபெறுகின்றது, மாற்றம் நிகழ்கிறது. மக்கள் நிறைவைப் பெறுகின்றனர். திருவிருந்தின் போது கடவுளின் பணியாளர் கூறும் கடவுளின் வார்த்தை, திருவருட்சாதனங்களான அப்பம், திராட்சை ரசம், போன்றவை (சிறிதளவில் இருந்தாலும்) இணையும் போது, ஆண்டவரின் உடலின்

உதிரத்தின் அடையாளமாகிறபோது, நினைவுகூர்தலாகிறபோது அற்புதம் சாத்தியமாகிறது. வாழ்வு மாற்றம் பெறுகின்றது, நிறைவைக் கண்டு கொள்ள முடிகின்றது.

## *2. நீதிவாழ்வுக்கான ஒப்பபடைப்புப் பலி* : (1கொரி 11:23-30)

ஆகவே எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார் (1கொரி 11:27)

ஒருமுறை வெல்லிங்டன் அதிகாரி (Duke of Wellington - A man of high rank in the British nobility) திருவிருந்தில் கலந்து கொண்டார். அவர் அருகில் ஒரு ஏழை முதியவரும் திருவிருந்தில் பங்கு பெறுவதற்காக வந்தார். இதைக் கண்ட கோவில் பணியாளர்கள் அந்த ஏழை முதியவரை அதட்டிய வண்ணமாக அந்த இடத்தை விட்டுப் போகுமாறு வற்புறுத்தினர். நடப்பதை உணர்ந்த வெல்லிங்டன் அதிகாரி, அந்த ஏழை முதியவரின் கரத்தைப் பிடித்து, "நீங்கள் போக வேண்டாம் நண்பரே, இங்கே நாமெல்லாரும் சமமானவர்கள்" (Do not move friend, we are all equal here) என்றார். பவுல் 1கொரி 2:27இல் குறிப்பிடும் தகுதியற்ற நிலை என்பது அன்றைய கொரிந்து சபையில் காணப்பட்ட நீதியற்ற தன்மையைக் குறிக்கின்றது. ஏழைகள் புறக்கணிக்கப்பட்டனர். அவர்களது அன்பின் விருந்துகளில் ஏற்றத்தாழ்வு நிலவியது. தொடக்ககாலத் திருச்சபையில் "அகப்பே" (Agape or Love feast) என்ற அன்பின் விருந்து முறை இருந்துள்ளது (யூதா 12). எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்களால் இயன்ற அளவிற்கு உணவை ஓரிடத்தில் கொண்டு வந்து அதைப் பங்கிட்டு உண்பது அந்த விருந்தின் அம்சமாகும். அதைப்போல, தொடக்ககாலத் திருச்சபையில் கட்டிடங்கள் இல்லை. எனவே ஞாயிறு மாலை பெரும் செல்வர்கள் வீட்டில் வைத்து ஆண்டவரின் விருந்து (Lord's Supper) கிறிஸ்தவர்களால் கொண்டாடப்பட்டது. கொரிந்துத் திருச்சபையில் ஏழைகள் மற்றும் அடிமைகள் வருவதற்கு முன்னரே, செல்வந்தர்கள் இணைந்து உணவை உண்டு விடுவர். ஏழைகள் மற்றும் அடிமைகள் உணவின்றிச் செல்வது ஒரு வழக்கமாக மாறியது. இந்த விருந்தின் போது சிலர் விருந்தின் நோக்கத்தைச் சீர்குலைத்தனர். எனவே தான் பவுல் கொரிந்துத் திருச்சபையினரைத் தனது கடிதத்தில் கடிந்து கொள்கின்றார் (1கொரி 11:20,21).

இங்கு சமூக நீதி மறுக்கப்படுகின்றது. எனவே கொரிந்து நகரக் கிறிஸ்தவர்கள் நீதி வாழ்வு வாழ வேண்டும் என்பதை நினைப்பூட்டும் வண்ணமாக இயேசு தம் சீடருடன் இறுதி விருந்தில் கலந்த கொண்ட போது உரையாடிய வார்த்தைகளைத் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆண்டவரின் பந்தி என்பது கடவுளோடும் மனிதரோடும் நமக்கு உள்ள ஐக்கியத்தைக் குறிக்கின்ற இரு அம்சங்களைக் கொண்டது (Communion with Christ and others). இந்த இரண்டும் இணைந்தால் தான் ஆண்டவரின் விருந்து அர்த்தம் பெறும். ஆண்டவரின் விருந்தின் உண்மைத் தன்மையை உணர்ந்து, இக்காலத் திருச்சபை மக்களும் அதில் பங்கு பெற்றால் ஏற்றத்தாழ்வு அனைத்தையும் தாண்டி நீதி வாழ்வு வாழ அது வழிவகுக்கின்றது. ஒரு நீதியுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்ப கடவுள் நமக்கு உதவி செய்வார்.

வில்லியம் பார்க்ளே என்பவர் சபை குறித்து இவ்வாறு குறிப்பிடுகின்றார், “ஒரு சபையில் சமூகப் பற்றும், வகுப்பு சார்ந்த வேறுபாடுகளும் இருந்தால் அது உண்மைச் சபையல்ல. ஒரு உண்மையான சபை என்பது ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவில் இணைக்கப்படும் ஒரு அமைப்பாகும்” (A church where social and class distinctions exists is no true church at all. A real church is a body of men and women united to each other because all are united to christ).

***3. நிலைவாழ்வுக்கான ஒப்படைப்புப் பலி*** : (யோவா 6:15-59)

எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன் (யோவா 6:54).

யோவான் 6:1-15 மற்றும் 16-21 வரையுள்ள பகுதிகளில் இயேசு இரண்டு அடையாளங்களைச் செய்கின்றார். ஒன்று, அப்பத்தை 5000 பேருக்கும் அதிகமானோருக்குப் பங்கிட்டு அவர்களைப் போஷித்தல், மற்றொன்று ஆண்டவரின் மகிமையை (Glory) வெளிப்படுத்துதல். இந்த இரண்டு அடையாளங்களும் மக்கள் தேவையோடு இருந்த சூழலில் நடைபெறுகின்றது. ஓர் அடையாளத்தின் போது அவர்கள் உணவுத் தேவையோடு காணப்பட்டனர். மற்றொரு அடையாளத்தின் போது ஆபத்தான சூழலில் பாதுகாப்பின் தேவையோடு காணப்பட்டனர்.

இங்கே இவ்வுலக வாழ்வின் தேவைகளான உணவு மற்றம் பாதுகாப்பு தேவைப்பட்டபோது இயேசு அருஞ்செயல் செய்கின்றார். ஆனால் இந்த அருஞ்செயல்களுக்குப் பின்னர் இதைவிட மிக முக்கியமான ஒரு தேவையைக் குறித்து இயேசுநாதர் சீடர்களிடம் கூறுகின்றார். அது நிலைவாழ்வு குறித்த சிந்தை. உலகத்தில் வாழும்போது மனிதருக்கு உணவு மிகவும் அவசியமான ஒன்று. அப்படிப்பட்ட தேவையின் போது இயேசு தமது இரக்கத்தையும் மகிமையையும் வெளிப்படுத்துகின்றார். ஆனால் அதை விட முக்கியமான நிலைவாழ்வு

மக்களுக்குத் தேவை என்பதால் தம் உடலையும் தம் இரத்தத்தையும் அவர் சிலுவைப்பாடுகள் வழியாக மக்களுக்குப் பகிர்ந்து தருவதாகக் குறிப்பிடுகின்றார்.

எனவே ஆண்டவரின் பந்தியின் முதன்மை நோக்கம் என்பது மனிதர்கள் அனைவரும் நிலைவாழ்வைப் பெற வேண்டும் என்பதுதான். அந்த நிலைவாழ்வை ஒருவர் ஆண்டவரின் உடல் மற்றும் இரத்தத்தின் வாயிலாகப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதைத் தம் சீடர்களுக்கு விளக்குகின்றார். இயேசு மக்களிடம் இரண்டு விதமான உணவைக் குறித்து பேசுகின்றார். அழிந்து போகின்ற உணவு (Food that Perishes) மற்றும் நிலைத்து நிற்கும் உணவு (Food that endless for eternal life) (வ. 27). இயேசு, மக்கள் குறிப்பிட்ட "வானத்திலிருந்து வந்த உணவிற்கும்" தாம் கூறிய "வானத்திலிருந்து வந்த உணவிற்குமான" வேற்றுமையைக் குறிப்பிடுகின்றார். மக்கள் கூறிய உணவு இஸ்ரயேலருக்கு வானத்திலிருந்து கடவுள் கொடுத்தது. அந்த உணவை அவர்கள் உண்டனர். ஆனால் அவர்கள் அத்தியாவசிய பசி மட்டும் மாறியது. அவர்கள் மரித்தார்கள் (வ. வ. 49). ஆனால் இயேசு கூறும் உணவை உண்பவர்களுக்கு அத்தியாவசிய பசி மாறுவது மட்டுமல்லாமல் என்றுமே பசியில்லாமல் வாழ்கின்ற நிலைவாழ்வைப் பெறுகிள்றனர் (யோவா 6, திவெ 7:16).

ஆண்டவரின் விருந்து நம்மை நிலைவாழ்வுக்கு வழிநடத்திச் செல்லும் ஊடகமாய் விளங்குகின்றது. திருவருள்சாதனம் என்பது ஒரு மாயவித்தைச் சடங்கு அல்ல. மாறாக, கடவுள் மனிதரின் வாழ்க்கை முழுவதும் அவர்களோடு பயணத்துணையாக நடக்கப் பயன்படுத்தும் கருவியாகும் (A Sacrament is not a magical rite but rather the instrument God has chosen inorder to continue to walk beside man as his travelling companion through life) என்று போப் பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார். எனவே இந்த மேலான திருவருள்சாதனமாகிய ஆண்டவரின் விருந்தில் உண்மையுடன் கலந்து கொண்டு நிறைவாழ்வு, நீதிவாழ்வு மற்றும் நிலைவாழ்வு பெற்று வாழ, கடவுளின் உதவியை நாடுவோம்.

திரு. Y. **சுஜின்ராஜ்**

29-08-2021

## பன்மைத்துவம் : பொதுவான மானிடமும் நம்பிக்கையைப் பகிர்தலும்

**PLURALITY : COMMON HUMANITY AND FAITH SHARING**

யோனா 4:1-11 — திப 8:26-40

திபா 82 — மத் 22:1-14

**"இயலுமானால் உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் அமைதியுடன் வாழுங்கள்"** (உரோ 12:18).

பல இனத்து மக்கள், பலசமயத்தார், பல மொழிகளைப் பேசுவோர் என மக்கள் சேர்ந்து வாழும் சமுதாயத்தினைப் பன்மைச் சமுதாயம் என்கிறோம். இயேசு ஒரு பன்மைச் சமுதாயத்துள் வாழ்ந்தார். இவர் வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீனத்துள் ஆர்பிக் சமயம், மாபெரும் தாய்ச்சமயம், மித்ரா சமயம், ஐசிசு சமயம் ஆகிய சமயங்கள் இருந்தன, எபிரேயம், கிரேக்கம், அரமேயம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்ந்துள்ளனர். சமுதாயத்துள் பரிசேயர், சதுசேயர், ஆயக்காரர், ஏரோதியர், எசேனியர், செலோத்தேயர் ஆகிய பிரிவினர் வாழ்ந்துள்ளனர். இயேசு இத்தகு பன்மைச் சமுதாயத்துள் வாழ்ந்து இறையரசுப் பணி செய்தார். நம் தாய்த் திருநாடு ஒரு பன்மைத்துவ நாடு. இதனுள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச்சூழலில் விவிலியம் காட்டும் விண்ணவர் சார்ந்து சிந்திப்போம்.

### *1. மானுட எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டவர்* :

இறைவாக்கினர் யோனா, நெறிகெட்டு பாவச்சேற்றில் உழன்று கொண்டிருந்த நினிவேயின் மக்களுக்கு இறைச்செய்தி சொல்ல இறைவரால் அனுப்பப்பட்டார் (யோனா 1:1). நினிவே, மெசபத்தோமியாவின் பழம்பெரும் நகரங்களில் ஒன்று. அசீரியாவின் தலைநகராயிருந்தது. நினிவே இஸ்தார் (Ishtar) என்னும் பெண் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. இஸ்தாரைப் போர்களின் தெய்வமாயும், செழுமையின் தெய்வமாயும் மக்கள் நம்பினர். இந்தப் பெண் தெய்வத்தை விண்ணக அரசியாகக் (Queen of Heaven) கருதினர் (எரே 7:8; 44:17-19). இறைவனால் அனுப்பப்பட்ட யோனா, "இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று அறிவித்தார் (யோனா 3:4). யோனாவின் செய்தி கேட்ட நினிவேயின் அரசனும், மக்களும், விலங்குகளும், உண்ணவும், குடிக்கவும் செய்யாமல், தவற்றினை உணர்ந்து இறைவரை மன்றாடினர். இறைவரின் பரிவினால் நினிவேயின் மக்கள் பேரழிவினின்று

மீட்கப்பட்டனர். யோனா மக்களின் அழிவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். தான் எண்ணியது நிறைவேறாதபோது, "ஆண்டவரே என் உயிரை எடுத்துக்கொள்ளும், வாழ்வதைவிடச் சாவதே எனக்கு நல்லது" என்றார் (யோனா 4:3). ஆண்டவர் மனிதருடைய நிலைப்பாட்டை ஏற்பவரல்ல. மானுடம், உயிரினங்கள்பால் இரக்கம் காட்டுபவர், எச்சமயத்தவராயினும் இறைவனின் இரக்கத்திற்கு உரியவர்களாயிருக்கின்றனர் என்பதை நினைவில் கொள்வோம்.

### *2. மானுடம் உண்மையறிய முனைபவர்* :

'எத்தியோப்பியா என்ற சொல் எகிப்திற்குத் தெற்கேயுள்ள ஆப்பிரிக்கா, அரேபியா, இந்தியா போன்ற இடங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் எரிந்தமுகம், கருத்தமுகம்' என்னும் பொருளையும் கொண்டுள்ளது. பொதுவாக, கறுப்புநிறத்தை உடையவர்களைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிலிப்பு, எத்தியோப்பியாவின் அரசியான கந்தகியின் மந்திரியைச் சந்தித்தார் (திப 8:30) அண்ணகரான மந்திரி ரதத்தில், எசாயா இறைவாக்கினர் நூலில் இடம்பெறும் (எசா 53:7,8) பாடல் பகுதியைப் படித்துக் கொண்டிருந்தார். பிலிப்பு நிதியமைச்சரிடம் "நீர்வாசிப்பதன் பொருள் உமக்குத்தெரிகிறதா? என்று கேட்டார். அமைச்சர் பிலிப்புவிடம்" யாராவது விளக்கிக் காட்டா விட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்? என்றார் (திப 8:31). உண்மையை அறிய முடியாமலிருந்த அமைச்சருக்கு திருமறைப் பகுதியின் விளக்கத்தை பிலிப்பு கொடுத்ததுடன் நற்செய்தியாகிய இயேசுவைக் குறித்து அவருக்குக் கூறினார். பிலிப்பு வழிசென்ற உண்மை, அமைச்சரின் உள்ளத்துள் ஏற்படுத்திய அசைவு, அவர் திருமுழுக்கு பெறுவதற்கு வழிவகுத்தது. தூயாவியார் வரலாற்று, உண்மையை அறிய முடியாமல் தவிக்கும் மக்கள் உண்மையை அறிய, பிலிப்புவைப் போன்ற மக்களைத் தேடுகிறார். ஆலோசனை கொடுக்கிறார். நாம் பிலிப்புகளாவோம். வாய்மையாகிய கிறிஸ்துவை, வார்த்தைகளால், வாழ்வால் கொடுத்து மக்களுள் மாற்றங்களை உருவாக்குவோம்.

### *3. மானுடத்தைச் சேர்க்க தொடர்பணி செய்பவர்* :

உவமைகள்வழி இயேசு, இறையரசின் செய்தியைப் போதித்தார். குறிப்பாக, மத் 22:1-4 வரையுள்ள பகுதியில் ஓர் உண்மையைக் காண்கிறோம். அரசர் தம் மகனுக்கு திருமணம் நடத்தினார். திருமணத்திற்கு அழைப்பு பெற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வருமாறு அவர்தம் பணியாளர்களை அனுப்பினார். அழைக்கப்பட்டவர்கள் வரவில்லை. ஆனால் அவரோ சோர்ந்து போகாமல், அழைக்கப்பட்டவர்களை

அழைத்துவர தம் பணியாளர்களை அனுப்பினார். இறைவன், மகிழ்ச்சி நிகழ்ச்சியில் பங்கேற்க தம்பணியாளர்கள் மூலம் இன்னும் அழைப்பை அனுப்புகிறார். தமது இலட்சியம் ஈடேறுவது வரை தம் பணியாளர்களால் இப்பணியை இறைவன் தொடர்ந்து செய்வார். இறைவனின் பணி தொடர்பணி. இது வரலாற்றில் தொடரும். இறுதி நீதித்தீர்ப்பு வரை தொடரும். இப்பணியில் பங்குபெறுவோர் பேறுபெற்றோர். அழைப்புக்குக் கீழ்ப்படிவோர் பேறுபெற்றோர். சாதக, பாதகச் சூழல்களிலும் இறைவன் தம்பணியைத் தொடருகின்றார்.

இறைவன் நலிவுற்ற மக்களை, தம்மக்கள் என அழைத்து அருகில் வைத்திருப்பது உண்மை. ஆனால் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படாத சலுகை இவர்களுக்கு இறைவனால் தரப்படுவதில்லை. இறையச்சத்துடன் வாழும் மக்கள் பல சமயங்களிலும் உண்டு. தொடக்கநூலில் இறையச்சமுள்ள அபிமலேக்கைக் காண்கிறோம் (தொநூ 20:11). திருத்தூதர் பணிகள் நூலில் கொர்நேலியுவைக் காண்கிறோம் (திப 10:2). பிறசமய மக்கள், நம் சகோதர சகோதரிகள் என்ற உணர்வுடன் உரையாடி மகிழ்வுடன் வாழ்வோம்.

அருள்திரு. ***பாலஸ் செல்வமணி***

05-09-2021



# இயேசுவே குரு

## JESUS THE GURU

நீமொ 4:1-19 திப 22:1-5
திபா 141 லூக் 4:31-44

**“அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்...”** (லூக் 4:32).

செப்டம்பர் 5 ஆம் நாளைக் கல்வி ஞாயிறாகவும், ஆசிரியர் நாளாகவும் கொண்டாடுகிற அனைவருக்கும் வாழ்த்துகள். “நல்ல குடும்பத்தில் பிறந்தாலும், நல்ல வசதிகள் இருந்தாலும், கல்வி கற்காத ஒருவன் வாசனை இல்லாத மலரைப் போன்றவன்” என்று அறிஞர் ஒருவர் கூறுகிறார். குருகுலக் கல்வியாகத் தொடங்கப்பட்ட கல்வியானது ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் பள்ளிக்கல்வியாக மாற்றம் பெற்றது. இன்று இந்தக் கல்வியானது ஆரம்பக் கல்வியில் தொடங்கி, ஆராய்ச்சிக் கல்வி வரைக்கும் பரந்து விரிந்து கொண்டே வந்துள்ளது. கல்வியானது குழந்தைகளின் உடல் மற்றும் மனவளர்ச்சியோடு அறிவையும், நல்லொழுக்கத்தையும் வளர்க்கின்ற ஒரு சமூகச் செயற்பாடாகும். இது மனிதர் பெற்றிருக்கவேண்டிய செல்வங்களிலெல்லாம் பிரதானச் செல்வமாகக் கருதப்படுகிறது.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைப் பாராட்டும் வண்ணமாக ஒவ்வொரு ஆண்டும், முன்னாள் குடியரசுத் தலைவரான Dr. இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 5 ஆம் நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடி வருகிறோம். அரசும் விருதுகளை வழங்கி அவர்களைக் கௌரவித்து வருகிறது. நல்ல ஆசிரியர்களால்தான் நாட்டைத் தாங்கி நிற்கும் வலுவான தூண்களாக மாணவர்களை வடிவமைக்க முடியும். “ஆசிரியர் இல்லாத கல்வி, ஆன்மா இல்லாத உயிர்” என்று சொல்லும் அளவுக்கு மாணவர்களின் கல்விக்கு ஆசிரியர்களே பெரும் பங்காற்றி வருகிறார்கள்.

தென்னிந்தியத் திருச்சபையானது இந்நாளின் தியானப்பொருளாக “**இயேசுவே குரு**” (Jesus the Guru) என்னும் கருப்பொருளைத் தந்துள்ளது. குரு என்னும் சொல் திருமறையில் சொல்லப்படாவிட்டாலும், புதியஏற்பாட்டில் இயேசு நாதரின் சீடர்கள் அவரை ‘ரபீ’ என்று அழைத்தார்கள். ரபீ என்பதற்கு ‘போதகர்’ என்று அர்த்தமாம்

(யோவா 1:38). இன்று நம் போதகர்களை, குருமார்கள் என்றும் அவர்கள் பெறும் கல்வியை, குருத்துவக் கல்வி என்றும் அவர்கள் பெறும் பட்டத்தை குருத்துவப்பட்டம் என்றும் சொல்லுகிறோம். சீடர்களால் ரபீ என்று அழைக்கப்பட்ட போதகராகிய இயேசு நாதர் ஓர் ஆன்மிகக் குருவாக, உலகத்தை மீட்க வந்த ஒரே குருவாக இருக்கிறார். இந்தப் பின்னணியத்தில் இயேசுவே குரு என்பதனை, கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதிகள் வாயிலாகத் தியானிப்போம்.

### *1. ஞானமுள்ள குருவாகிய இயேசு* : (நீமொ 4:5)

மனிதனின் முழுமையான வளர்ச்சிக்குப் பெரிதும் தேவையாக இருப்பது ஞானமாகும். திருமறைப் பாடமாகக் கொடுக்கப்பட்ட நீமொ 4:1-19 வரையுள்ள வசனங்கள் இதை விளக்குகின்றன. ஞானத்தையும் மெய்யுணர்வையும் தேடிப்பெற்றுக்கொள். அதுவே ஞானமுள்ள செயல். ஞானம் உன்னைச் செவ்வையான பாதைகளிலே நடத்தும். உன் ஆயுட்காலமும் நீடிக்கும் என சாலமோன் கூறுகிறார். சாலமோன் அரசராகும் போது தமது மக்களுக்கு நீதி வழங்குவதற்கேற்ற ஞானமுள்ள உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று ஆண்டவரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்டார் (1அர 3:9). கடவுள் கொடுத்த ஞானத்தால் அவர் 3000 நீதிமொழிகளை உரைத்தார் (1அர 4:32). இவர் எழுதிய மூன்று நூல்கள் நம் திருமறையில் முக்கிய இடம் பெறுகின்றன. இதனால் இவர் ஞானி சாலமோன் என்று அழைக்கப்படுகிறார்.

ஞானம் என்பது கடவுளின் வார்த்தைக்கு உருவகமாகக் கூறப்படுகிறது. உலகப் படைப்பின் போதே நான் அவர் அருகில் சிற்பியாய் இருந்தேன் (நீமொ 8:30) என்று ஞானம் சொல்வதாக சாலமோன் குறிப்பிடுகிறார். இதையே எபிரேயர் திருமுக ஆக்கியோனும் தந்தையாகிய கடவுள், மகன் வழியாக உலகங்களைப் படைத்தார் (எபி 1:2) என்று கூறுகிறார். ஆதியிலே வாக்காய் இருந்த கடவுள், மாம்சமாகி இயேசு என்னும் பெயரில் நமக்குள்ளே வாசம் பண்ணினார் (யோவா 1:14). இயேசு ஒரு சாதாரண குடும்பத்தில், மரியாவுக்கும் தச்சனாகிய யோசேப்புக்கும் மகனாகப் பிறந்தார். தந்தையின் தச்சுக்கூடமே அவரது கல்விக் கூடமாக இருந்தது. தாய் மரியாளும் தந்தை யோசேப்பும், அவர்களுடைய ஆலய வழிபாடும், இயேசு நாதருக்கு ஆன்மிக வழிகாட்டிகளாக அமைந்திருந்தன. இயேசு ஞானத்திலும், உடல்வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் (லூக் 2:52). அவர் தம்முடைய 12-ஆம் வயதில் தேவாலயத்தில் போதகர் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்ததைக் கண்ட அவருடைய பெற்றோர்களும் அங்கிருந்தவர்களும் வியப்பில் ஆழ்ந்தார்கள் (லூக் 2:46-48).

அவருடைய திருப்பணியின் போது அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவருடைய போதனைகளைக் கேட்க திரளான மக்கள் அவருக்குப் பின் சென்றார்கள். இயேசு நாதரின் மலைப் பொழிவில் அவர் கூறிய ஞானமுள்ள போதனைகள் அனைத்தும் இன்றளவும் மறந்து விடாமல் எம்மதத்தைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் மிகுந்த போதனைகளாக அமைந்துள்ளன (மத் 5,6,7). ஒருமுறை அவரைக் கைது செய்யும்படி வந்த சேவகர்கள் வெறுங்கையோடு திரும்பி வந்து, அந்த மனிதர் பேசினது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை எனச் சொல்லும் அளவுக்கு (யோவா 7:45,46) அவருடைய போதனைகள் ஞானம் நிறைந்தவைகளாய் இருந்தன. இறையரசின் ஆழமான உண்மைகளை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் அளவில் உவமைகள் மூலமாகப் போதிக்கும் ஞானம் நிறைந்த குருவாகக் காணப்பட்டார் (மத் 13:34). ஆகவே அவருடைய போதனைகளைக் கேட்ட யூதர்கள், இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துகளை எப்படி அறிந்திருக்கிறார் என்று வியப்புற்றார்கள் (யோவா 7:15). அவரோ நான் கொடுக்கும் போதனை என்னுடையதல்ல, என்னை அனுப்பின தந்தையினுடையது என்றார். ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன எனப் பவுலார் கூறுகிறார் (கொலோ 2:3).

இவ்வுலகக் குருமார்களுக்கெல்லாம் மேலானவராக, இறைஞானம் மிகுந்தவராக, ஓர் ஆன்மிகக் குருவாக, மனிதர்க்கெல்லாம் மாதிரியாக வாழ்ந்த “ஒரேகுரு” இயேசு நாதர் ஒருவரே. கிறிஸ்துவைப் பின்பற்றும் அவரது பின்னடியார்களாகிய நாம் அவருக்குப் பிரியமாய் வாழ நமக்கு இறைஞானம் தேவையாயிருக்கிறது. அதை நாம் ஞானமுள்ள குருவாகிய இயேசுவினிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### *2. விடுதலை தரும் குருவாகிய இயேசு* : (லூக் 4:40)

விடுதலை உணர்வு ஒவ்வொரு மனிதனின் உயிர்மூச்சோடும் கலந்தது. இயேசு நாதர் விடுதலையருளவே இவ்வுலகத்திற்கு வந்தார் (லூக் 4:31-44). அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (திப 10:38). நமக்குத் தரப்பட்ட நற்செய்திப்பகுதியில் அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனிதனை, கட்டிலிருந்து விடுவித்தார் (லூக் 4:33-36). இதைப்போலவே 18 வருடமாய் பெலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு பெண்ணையும் (லூக் 13:12,13), அநேகம் பிசாசுகள் பிடித்ததினால் கல்லறைகளிலேயே தங்கியிருந்த ஒரு மனிதனையும் பிசாசுகளின் கட்டுகளிலிருந்து விடுவித்தார் (லூக் 8:26-35).

பிணியாளிகளைக் கண்டபோது இயேசு மனதுருகினார். அவரிடத்தில் கொண்டுவரப்பட்ட வியாதியஸ்தர்களையெல்லாம் அவர் சுகமாக்கி அனுப்பி விட்டார். காய்ச்சலாய்க் கிடந்த சீமோன் பேதுருவின் மாமியையும் சுகப்படுத்தினார் (மாற் 1:40-42). மரித்துப் போன யவீருவின் மகளையும், கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒரு வாலிபனையும், மரித்து நான்கு நாட்களான அவருக்குப் பிரியமான இலாசரையும் உயிரோடு எழுப்பினார் (மத் 9:25; லூக் 7:14; யோவா 11:43,44). இவ்வாறு விடுதலையருளும் விண்ணகக் குருவாகிய இயேசுவின் விடுதலைப் பணியானது தொடர்ந்து கொண்டே வந்தது.

இயேசு பாவத்தினால் வந்த வியாதிகளிலிருந்தும் மக்களை விடுவித்தார். வீட்டின் கூரையைப் பிரித்து, கட்டிலோடு அவருக்கு முன்னால் வீட்டினுள் இறக்கப்பட்ட முடக்குவாதக்காரனையும் (மத் 9:2,6), முப்பத்தெட்டு வருடமாய் பெதஸ்தா குளத்தண்டையில் விடுதலைக்காய்க் காத்துக்கொண்டிருந்த ஒரு மனிதனையும் (யோவா 5:5-8,14) அவர்களுடைய பாவங்களை மன்னித்து வியாதிகளிலிருந்து விடுவித்தார். பாவ அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பெண்ணை, நீ போ இனிப் பாவம் செய்யாதே என்று அனுப்பி விட்டார் (யோவா 8:11). இயேசுவால் சந்திக்கப்பட்ட ஒரு சமாரியப் பெண், அவளுடைய பாவவாழ்க்கையை விட்டதுமல்லாமல் அவள் மூலமாக சமாரியரில் அநேகர் இயேசுவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் மாறினார்கள் (யோவா 4:19,39).

இவை அனைத்துக்கும் மேலாக, எந்தக் குருவினாலும் தரமுடியாத விடுதலையை இயேசுவாகிய குரு நமக்குத் தந்தார். மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து விடுவிக்கவே அவர் இவ்வுலகத்திற்கு மனிதராக வந்தார். இயேசு என்ற பெயரின் பொருளே மீட்பர், அதாவது பாவத்திலிருந்து விடுவிப்பவர் என்பதாகும் (மத் 1:29). பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயும் இருக்கிறது என்று பவுலடியார் கூறுகிறார் (1திமொ 1:15). மனிதரின் பாவங்கள் மன்னிக்கப்பட இரத்தம் சிந்தப்பட வேண்டும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது (எபி 9:22) என்னும் நியதியை, இயேசுதாமே சிலுவையில் நிறைவேற்றி முடித்தார். அவருடைய மகனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1யோவா 1:7) என்று திருமறை கூறுகிறது. அத்தோடு பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை இயேசு தமது மரணத்தினாலே வென்று, சிலுவையில் வெற்றி சிறந்ததினாலே மரணபயத்திலிருந்தும் நம்மை விடுதலை செய்துள்ளார் (எபி 2:15).

ஆக, விடுதலை தரும் விண்ணகக் குருவாகிய இயேசுநாதரை விசுவாசித்து அவரை ஏற்றுக் கொண்டவர்களாகிய நாமெல்லாரும் அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாகும் தகுதியை அடைந்துள்ளோம் (யோவா 1:12). எனவே நாம் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, அப்பா, தந்தையே, என்று அழைக்கிற கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையைப் பெற்றிருக்கிறோம் (உரோ 8:15). அதாவது, அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு கடவுளின் பிள்ளைகளுக்குரிய மாட்சிமிக்க உரிமைப் பேற்றையும் பெற்றிருக்கிறோம்.

### *3. புதுவாழ்வு அருளும் குருவாகிய இயேசு* : (திப 22:5)

திப 22:1-5 வரையுள்ள வசனங்களில் பவுலடிகளார் தன்னைக் கொலை செய்ய முயன்ற யூதர்களுக்கும், அங்கே திரண்டு வந்திருந்த மக்களெல்லாருக்கும் முன்பாகப் பேசிய வார்த்தைகள் சொல்லப்பட்டுள்ளன. பவுலடியார் மூன்று தூதுரைப் பயணங்களை முடித்துக் கொண்டு எருசலேமுக்குத் திரும்பி வந்தார். அப்பொழுது ஆசியாவிலிருந்து வந்த யூதர்கள் கோவிலுள் அவரைக் கண்டு, இவன் தூய்மையான இடத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று கூக்குரலிட்டார்கள். இதனால் மிகுந்த கலவரம் உண்டாயிற்று. அவர்களெல்லாரும் அவரைக் கோவிலுக்கு வெளியே இழுத்துக் கொண்டுபோய்க் கொலை செய்ய முயன்றார்கள். இதை அறிந்த சேனாபதி அவர்களிடமிருந்து அவரைக் காப்பாற்றி கோட்டைக்குள்ளே கொண்டு சென்றான். மக்களிடம் பேச வேண்டுமென்று பவுல் அவனிடத்தில் உத்தரவுக் கேட்டுக் கொண்டு பேசத் தொடங்கினார். தான் தர்சுப் பட்டணத்தைச் சேர்ந்த யூதன் என்று எபிரேய மொழியில் பேசத் தொடங்கிய போது, அவர்களெல்லாரும் அமைதலானார்கள். ஏனென்றால் கமாலியேல் என்பவர் அக்காலத்தில் வாழ்ந்த ஒரு சிறந்த கல்விமானாயும், கனம் பெற்றவராயும், மக்களெல்லாராலும் அறியப்பட்டவராயும் இருந்தார். அதுமட்டுமல்ல அவர் ஒரு பக்தி வாய்ந்த பரிசேயர். யூதச் சட்டதிட்டங்களை நன்கு அறிந்த திருச்சட்ட அறிஞர். அவர்களுடைய ஆலோசனைச் சங்கத்தில் அங்கம் வகித்தவர். அச்சங்கத்தில் அவருக்கு எதிராகப் பேசுவோர் எவரும் இல்லை (திப 5:34-40).

இத்தனை சிறப்பு வாய்ந்த குருவிடம் கல்வி கற்றவரான பவுல், தனக்கு முன்னிருந்த மக்களிடம், திருச்சட்டத்தை நன்கு அறிந்தவனாகிய நான் உங்கள் எல்லாவரையும்போலக்கடவுளைக் குறித்து வைராக்கியமுள்ளவனாயிருந்தேன். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்களைத் துன்புறுத்துவதற்காகத் தலைமைக் குருவிடம் கடிதங்களை

வாங்கிக் கொண்டு தமஸ்கு நேராகப் பயணமானேன். வழியில் என்னுடைய விண்ணகக் குருவாகிய இயேசுநாதரால் நான் சந்திக்கப்பட்டேன். அதிலிருந்து என்னுடைய வாழ்க்கைப் பாதையே மாறி விட்டது. இயேசுவாகிய குரு என்னை ஒரு புதிய வாழ்வுக்கு நேராக அழைத்துச் சென்றார் என்று இயேசுநாதரால் தான் பெற்ற புதுவாழ்வைக் குறித்து அவர்களிடம் சாட்சியாகக் கூறினார்.

அப்போது அவர் கமாலியேலின் சீடனாகப் பேசாமல், இயேசுவாகிய குருவின் சீடனாகவே பேசினார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துகிறவராக அல்ல, மக்களையெல்லாம் கிறிஸ்துவுக்கு நேராகவழிநடத்தும் கிறிஸ்துவின் ஊழியக்காரராகவே பேசினார். தூயஆவியாரால் உந்தப்பட்டு அவர் எழுதின கடிதங்களெல்லாம் இதற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. ஒரு பெரிய செல்வந்தராகவும், கமாலியேலிடத்தில் கற்றவராகவும் இருந்த அவர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நபராக வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவை எல்லாவற்றையும் அற்பமும் குப்பையுமாக எண்ணி கிறிஸ்து அவருக்குக் கொடுத்த புது வாழ்வைப் போதுமென்று ஏற்றுக்கொண்டார் (பிலி 3:7,8). நாமும் பவுலைப்போலச் செல்வந்தர்களாகவும் கல்விமான்களாகவும் இருந்தாலும் இயேசுவால் சந்திக்கப்படும் போது பவுல் பெற்றுக் கொண்ட புதுவாழ்வைப் பெற்றுகொண்டு அவருக்காக வாழ முடியும்.

நம்முடைய குருவாகிய இயேசுநாதர் ஞானமுள்ளவரும், நம்மை ஞானவான்களாக்க வல்லவருமாயிருக்கிறார். அவர் தரும் ஞானம் இவ்வுலகத்துக்குரிய ஞானமாயிராமல் பரத்திலிருந்து வருகிறதாயிருக்கிறது. அது சுத்தமுள்ளதாயும், சமாதானம், சாந்தம், இரக்கம் முதலிய நற்கனிகள் நிறைந்ததாயும், பட்சபாதம் இல்லாததாயும் மாயமற்றதாயும் இருக்கிறது (யாக் 3:17). இத்தகையை ஞானம் நிறைந்த அவருடைய போதனைகளும், அவர் சிலுவையில் சிந்திய திருஇரத்தமும் மனுக்குலத்தைப் பாவ சாபங்களிலிருந்து விடுவித்து, புதுப்படைப்பாக்கி, புது வாழ்வைத் தந்துள்ளது. அவருடைய பிள்ளைகளாகிய நாம், ஒப்பற்ற குருவாகிய இயேசுவையே பற்றிக்கொண்டு அவர் காட்டும் பாதையில் அவருடைய சீடர்களாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. P. ***ராஜா ஜெயசிங்***

12-09-2021

# கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பெண் பங்காளர்கள்

**WOMEN PARTNERS IN GOD'S LIBERATIVE ACT**

விப 1:15-22 | உரோ 16:1-16
திபா 148 | மாற் 15:37-41

**"... அந்த மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் எகிப்திய மன்னன் தங்களுக்குக் கூறியிருந்தபடி செய்யவில்லை"** (விப 1:17).

...தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்!
அக்கா வந்து கொடுக்க
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே!
சும்மா கிடைக்க சுதந்தரம்
என்ன சுக்கா மிளகா?

என பாரதிதாசன் வினவுகிறார். உரிமை, விடுதலை, சுதந்தரம் என்பது சுலபமானதோ, இலவசமானதோ அல்லது சும்மா இருப்பவர்களுக்குக் கிடைப்பதோ அல்ல. செயல்படுகிறவர்களுக்கு, முயற்சி செய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுவது. ஒரு முட்டையிலிருந்து ஒரு கோழிக்குஞ்சு வெளிவருவதற்குப் போராடுகிறது. ஒரு மலர் மலர்வதற்குத் தன்னாலான முயற்சிகளைச் செய்கிறது. விடுதலை, சுதந்தரம் என்பது செயல்படுதல் அல்லது செயல்படுத்துதல். விடுதலை விலைமதிப்பில்லாதது. விடுதலை என்பது நிகழ்வல்ல, ஆனால் அனுபவம். விடுதலை என்பது பெறுவதன்று, வாழ்வது. வாழ்வில் சாவு ஒரு முறை தான். ஆனால் இஸ்ரயேலர் எகிப்தில் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருந்தனர். சாந்தும் செங்கல்லுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், அவர்களுக்கு அவர்கள் வாழ்வையும் கசப்பாக்கினார்கள் (விப 1:14). சுதந்தரம் இல்லாமல் அடிமைகளாக, உயிரோடு நடைபிணமாய் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு விடுதலைச் செயற்பாட்டிலும் கடவுள் பல்வேறு மனிதர்களை, பல்வேறு நிலைகளில் பயன்படுத்தினார், இன்றும் பயன்படுத்துகிறார். இஸ்ரயேலரின் விடுதலைச் செயற்பாட்டில் எப்படி வீரமங்கைகளான சிப்ரா, பூவா கடவுளின் பெண் பங்காளர்களாகச் செயல்பட்டார்கள் என்பதை விப 1:15-22 வரையுள்ள வசனங்களை அடிப்படையாக வைத்துச் சிந்திப்போம்.

### *1. அசம்பாவிதத்தைச் சம்பவமாக்கினர்* : (விப 1:16)

இந்த உலகத்தில் ஒவ்வொரு குழந்தையின் பிறப்பும் ஒரு மகிழ்ச்சியான சம்பவம். பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் என்று திருமறை குறிப்பிடுகிறது (திபா 127:4). ஒவ்வொரு குழந்தையும் கடவுளின் படைப்பில் சிறப்புமிக்கவர்கள் (திபா 139:13-14). பிறப்பால் ஒவ்வொரு குழந்தையும் கடவுளுடைய சாயலையும், தன்மையையும் பிரதிபலிக்கிறது (தொநூ 1:27). ஆனால் பிறக்கின்ற குழந்தைகளைக் கொலை செய்வது என்பது நாம் அவர்களுக்கு எதிராகச் செய்யும் அசம்பாவிதம். குழந்தைகளைக் கொல்வது இறைத்திட்டத்திற்கு விரோதமானது. எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த உலகத்தில் பிறப்பதற்குப் பிறப்புரிமை இருக்கிறது. ஒரு குழந்தை இந்த உலகத்தில் வரும்போது அதை வரவேற்க வேண்டியவர்களே அவர்களை வரவிடாமல் தடுப்பதைக் காண்கிறோம். பார்வோன் மருத்துவச்சிகளிடம் எபிரேய ஆண் குழந்தைகளைப் பிறக்கும் போது "கொன்று போடுங்கள்" எனக் கட்டளையிடுகிறார் (விப 16). அவர்களைக் கொல்வதன் மூலம், இஸ்ரயேலரின் பலத்தைக் குறைக்கவும், எகிப்தியர்களுக்கு எதிராக இராணுவத்தில் சண்டையிடுவதற்குப் போதுமான இளைஞர்கள் இருக்கக்கூடாது எனவும் பார்வோன் விரும்பினார். அதனால் பார்வோன் இஸ்ரயேலரை மூன்று வழிகளில் கொடுமைப்படுத்தினார். 1. கொடுமையான வேலைகளைச் செய்வதற்குக் கட்டளையிட்டார் (விப 1:13). 2. ஆண் குழந்தை பிறந்தால் பிறந்தவுடனே கொலை செய்யப்பட வேண்டும் (விப 1:16). 3. காப்பாற்றப்பட்ட ஆண் குழந்தைகளை நதியிலே வீச வேண்டும் (விப 1:22). பலம் வாய்ந்த பார்வோன், இந்த ஆண் சிசுக்கொலை அசம்பாவிதத்திற்கு அடிகோலுகிறார். ஆனால் பலவீனமான தாதியர்கள் இந்த அசம்பாவிதத்தை ஒரு சம்பவமாக மாற்றுகின்றனர் . இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஜெர்மனியில் ஹிட்லரால் ஆறு மில்லியன் யூதர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். ஹாலாகோஸ்ட் (holocaust) என்றழைக்கப்படும் இந்த அசம்பாவித சம்பவத்தில் ஆஸ்விட்ச் நகரில் அமைந்திருந்த வதைக்கூடங்களுக்கு (Concentration Camp) அனுப்பப்பட்டு பெரிய எரிவாயு அறைகளில் வைத்து பலர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வதைக்கூடங்களிலிருந்து ஒரு சிலர் அங்குள்ளவர்களின் உதவியோடு தப்பித்தனர். அப்படித் தப்பித்த ஹென்றி என்பவர் இப்படியாக எழுதுகிறார், "You did not live through Auschwitz. The place itself is death." சொல்லப்போனால் இஸ்ரயேலருக்கு எகிப்தும் அசம்பாவிதத்தின் இடமாக இருந்தது. ஆனால் இந்த மருத்துவச்சிகள் கொடுமையான அசம்பாவிதத்தைத் தங்களது ஞானத்தால், புத்திச் சாதுரியத்தால் சாதாரணச் சம்பவமாக மாற்றினர்.

மனித இனத்திற்கு எதிரான யுத்தமாகிய கொரோனா கொள்ளை நோய்க் காலத்திலும் அதிகாரமில்லாக் கடைநிலை ஊழியர்களான, முதல்நிலைப் பணியாளர்கள் எதற்கும் பயப்படாமல் சுயநலமில்லாச் சேவையாற்றுகின்றனர். பிறர் பிழைக்க, தங்கள் வாழ்வைத் தியாகம் செய்யும் சிறகில்லாத் தேவதூதர்களாகச் செவிலியர்கள் செயல்பட்டு நிகழும் அசம்பாவிதங்களை, சாதாரணச் சம்பவமாக மாற்றுகின்றனர். பிறர் உயிரைப் பாதுகாக்க, தங்களது உயிரைப் பணயம் வைக்கின்றார்கள். உண்மையாகச் சொன்னால், சாவின் விளிம்பிலிருப்பவர்களுக்கு உயிர் கொடுத்து காப்பாற்றி அசம்பாவிதத்தைச் சம்பவமாக்கி விடுதலைச் செயற்பாட்டில் கடவுளால் பயன்படுத்தப்படுகின்றனர்.

***2. சம்பவத்தைச் சரித்திரமாக்கினர்*** : (விப 1:18)

இரண்டாவதாக, இந்தப் பெண்மணிகள் ஒரு சாதாரண சம்பவத்தைச் சரித்திரமாக்கினர். இந்த உலகத்தில் குழந்தைப் பிறப்பு ஒரு சம்பவம் தான். எத்தனையோ குழந்தைகள் ஒவ்வொரு நாளும் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள். ஆனால் “கொன்று போடுங்கள்” என்ற பார்வோன் கட்டளைக்கு இவர்கள் கீழ்ப்படியாமல் எபிரேய ஆண் குழந்தைகளைக் காப்பாற்றி சம்பவத்தைச் சரித்திரமாக்கினர் (வ. 17). அதனால் தாங்களும் சரித்திரமாகினர் (வ. 20). பார்வோனின் கொடுமையினால், விலைமதிப்பற்ற விடுதலைக்கு ஆண் குழந்தைகள் அநேகரின் உயிர்கள் விலையாக, விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அழிவின் விளிம்பிலிருந்த பச்சிளங்குழந்தைகளை மீட்டு, சரித்திரத்தின் மையத்திற்குக் கொண்டு வந்தவர்கள். வலியோரைப் பாதுகாத்த எளியோர். பலமில்லாதவர்களான இந்த மருத்துவச்சிகள் நடந்த சம்பவங்களை அறிந்திருந்தனர். இவர்கள் பார்வோனைப் போல் அல்லாது கடவுளை அறிந்திருந்தனர். ஆண் குழந்தைகளைக் கொன்ற, வலிமை வாய்ந்த வல்லரசின் மன்னன் பார்வோனின் பெயர் வெறும் பார்வோன் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருடைய முழுப் பெயர் சொல்லப்படவில்லை. பொதுவாக, எல்லாருக்கும் பெற்றோர் வைத்த பெயர் இருக்கும். ஆனால், இவர்கள் சரித்திரத்தில் பெயர் பெற்றவர்களானார்கள்.

அன்னை தெரசா என்னும் பெயரை அன்னை என்னும் சொல் இல்லாமல் யாரும் பயன்படுத்தவில்லை. சரீரப்பிரகாரமாக ஒரு பிள்யையைக்கூட பெற்றெடுக்காத தெரசா அம்மையாருக்கு அன்னை என்ற பட்டம் கொடுக்கப்பட்டதென்றால் அவர் கொல்கத்தா நகரத்தின் தெருக்களில், சாக்கடையில் தேவையில்லை எனத் தூக்கியெறியப்பட்ட பச்சிளங்குழந்தைகளைத் தன் வெள்ளைக் கரங்களிலேந்தி சொந்தத்

பிள்ளைகளைப் போலக் காப்பாற்றியதுதான். சாக்கடைப் புனிதர் என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்ததும் அவருடைய தன்னிகரற்ற சேவையே. அடிப்படையில் ஆசிரியரான இவர் 1995-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-இல் சிசுபவன் என்ற இல்லத்தைத் தொடங்கி ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய, ஆதரவற்ற, குப்பைத் தொட்டியில் வீசப்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்ததால் சிறகுகளில்லாத வெள்ளைத் தேவதை புனிதரானதில் வியப்பொன்றுமில்லை. பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும் என்று அப்துல் கலாம் கூறினார். சாதாரணச் சம்பவங்களைச் சரித்திரமாக்குவதற்குத் தேவையான துணிச்சல் இப்பெண்களிடம் காணப்பட்டது. இவர்களுடைய இறப்பிற்குப் பின்னும் இவர்களைப் பற்றி பேசுகிறோம் என்றால், இவர்கள் இன்னும் சரித்திரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் எந்த ஒரு ஐயமுமில்லை. யூதர்களைக் காப்பாற்ற நான் செத்தாலும் சாகிறேன் என்றாள் எஸ்தர் (எஸ்தர் 4:16). பவுலின் உயிரைக் காக்க ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் தங்களது தலையைக் கொடுக்க முன்வந்தனர் (உரோ 16:4). மானிடமகன் மனிதருடைய உயிரை அழிப்பதற்கு அல்ல, மீட்பதற்கே வந்தார் (லூக்கா 9:56). பிறர் உயிரைக் காப்பாற்றுவதற்குத் தங்களது உயிரையும் தியாகம் செய்யத் தயங்கவில்லை. அதனால் தான் அவர்கள் சரித்திரத்தில் இடம் பெற்றார்கள். வரலாற்றில் வாய் பார்த்தவர்கள் இடம் பெறவில்லை. ஆனால், துணிச்சலோடு செயல்பட்டவர்கள் மட்டுமே சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றனர்.

### *3. சரித்திரத்தைச் சாதனையாக்கினர்* : (விப 1:19)

அசம்பாவிதத்தைச் சம்பவமாக மாற்றினதோடு, சம்பவத்தையும் சரித்திரமாக மாற்றினார்கள். இறுதியாக, சரித்திரத்தைச் சாதனையாக்கினார்கள். விடுதலை வீரர்கள் அநேகர் வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். ஆனால் விரல் விட்டு எண்ணக்கூடிய விடுதலை வீராங்கனைகளே வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். பலவீனமான தாதியர்களான இவர்கள் சரித்திரத்தில் இடம் பிடித்தது மிகப்பெரிய சாதனையே. எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேலரை விடுவிப்பதைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, சமுதாயத்தில் மிகப்பெரிய மாற்றம் சாத்தியமில்லாத விடுதலையாளர்களிடமிருந்து வந்திருக்கின்றது என்பது தெளிவாகிறது. மோசே என்ற விடுதலை வீரனையே சாவிலிருந்து விடுவித்தவர்கள். உண்மையில் இந்தப் பெண்கள் துணிச்சலோடு, ஞானத்தோடு செயல்படாதிருந்திருந்தால் மோசே என்ற விடுதலையாளர் சரித்திரத்தில் இருந்திருக்க மாட்டார். சாவுக்கே சாவு மணியடித்து விடுதலைக்கே விடுதலை தந்த விடுதலையாளர்கள். சரித்திரத்தில் சாதனை படைத்தவர்களுக்கு முதலிடமும், முதன்மையான இடமும் கிடைப்பது

இயல்பு. ஆனால் பலவீனமான இவர்களைக் கொண்டு பலவான்களை (ஆண் பிள்ளைகளை) கடவுள் விடுவித்தார். கடவுளுக்குப் பயந்த இவர்களைக் கொண்டு தைரியசாலிகளை விடுவித்தார். புறக்கணிக்கப்பட்ட இவர்களைக் கொண்டு பிரபலமானவர்களை விடுவித்தார். எகிப்திய வரலாற்றில் மிகவும் செல்வாக்கு மிக்க, வல்லமை வாய்ந்த பார்வோனின் மகள் பெயர் குறிப்பிடப்படவில்லை. அசாத்தியமானதை இம்மங்கையர் சாத்தியமாக்கினர். சதிக்கு உடன்படாமல், சதியாலோசனைகளைத் தகர்த்து சாதித்தவர்கள். சத்தியத்தைக் கடைப்பிடித்து சத்தியத்திற்குத் தங்கள் கழுத்தை ஒப்புக்கொடுத்தவர்கள். சாவுக்கு அஞ்சவில்லை. கடவுளுக்கு அஞ்சினர். பயந்தாங்கொள்ளிகள் தான். ஆனால் தைரியசாலிகளாய்ச் செயல்பட்டுச் சாதனையாகினர். வில்லியம் கேரி என்ற அருட்பணியாளர், "அசாதாரணமானவைகளைக் கடவுளிடமிருந்து எதிர்பாருங்கள். கடவுளுக்காக அசாதாரணமானவைகளைச் செய்யுங்கள்" என்றார் (Expect great things from God and attempt great things for God). மிகவும் சாதாரணமான மருத்துவச்சிகளைக் கொண்டு கடவுள் அசாதாரணமானவைகளைச் செய்தார். ரெனால்ட் ரீகன் என்பவர் "நம்மால் எல்லாருக்கும் உதவமுடியாது. ஆனால், எல்லாரும் யாருக்காவது உதவ முடியும்" (We can't help everyone, but everyone can help someone) என்று கூறுவதைப் போல இவர்கள் தங்களால் இயன்றதை விடுதலைத் திட்டத்தில் செய்தனர்.

பார்வோன் வாழ்வளிக்கும் வள்ளல்களான செவிலியரிடமே வாழ்க்கையைப் பறிக்கும்படியாய் ஆணையிடுகிறார். இன்றைய காலகட்டத்தில் குணமாக்க வேண்டிய மருத்துவர்களும், தாதிமார்களுமே கொலைகாரர்களாக மாறிவரும் இவ்வுலகில், இவர்களின் துணையோடு நடைபெறும் கருக்கலைப்பு, கருணைக்கொலை, பெண் சிசுக்கொலை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வாழ்வு கொடுத்தவருக்குப் பயந்து தங்கள் சொந்த வாழ்க்கைப் பற்றி கவலைப்படாமல் பார்வோன் ஆணையிட்டதைச் செய்யக்கூடாது என்ற தீர்மானத்தில் உறுதியாய் இருந்தனர். வாழ்விழந்தவர்களுக்கு, வாய்ப்பிழந்தவர்களுக்கு வாழ்வு கொடுத்து வரலாற்றில் தடம் பதிக்க உதவினர். பலர் நடந்த பாதையில் இவர்கள் நடக்காமல் ஒரு புதிய பாதையை உருவாக்கி சாதனை புரிந்தனர். கடவுள் இஸ்ரயேலருக்கு விடுதலையைக் கொடுக்க சரியான நபர்களை, விடுதலைப்பங்காளர்களாகச் சரியான இடத்தில் நிலைநிறுத்தினார் என்பதற்கு இவர்களது வாழ்க்கையே சான்றாக அமைகிறது.

எனவே, அசம்பாவிதத்தைச் சம்பவமாக மாற்றி, சம்பவத்தையும் சரித்திரமாக மாற்றி, சரித்திரத்தைச் சாதனையாக்கி கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பங்காளர்களாகச் செயல்படுவோம்.

முனைவர். **சோபனா கின்சன்பெல்**

19-09-2021

## என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன்

**MY PEACE I GIVE TO YOU**

செக் 8:12-19 உரோ 5:1-5

திபா 119:161-176 யோவா 16:16-33

**"என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன் என்றார்"** (யோவா 16:33).

இந்த உலகில் மனிதர் அமைதியைத் தேடி, அதை நாடித்திரிகின்றனர். ஆனால் அவர்களால் நிறைவான அமைதியை அடைய முடிவதில்லை. ஒவ்வொரு நாளும் அவர்கள் சந்திக்கின்ற மனிதர்கள், பிரச்சனைகள், அவர்களது வாழ்வில் எதிர்கொள்ளுகின்ற தோல்விகள், பெலவீனங்கள், ஏமாற்றங்கள் போன்ற பல காரணங்களால் அமைதி குலைந்து விடுகின்றது. இதனால் பல மனிதர்கள் அமைதியைத் தேடி தங்களைத் தனிமைப்படுத்தி, இந்த உலகைத் துறந்து வாழ்ந்தால் அமைதியைப் பெறலாம் என முயன்றாலும் அவர்களால் முழுமையான அமைதியை அடைய முடிவதில்லை. இந்நிலையில் இயேசுகிறிஸ்து யோவா 14:27-ஆம் வசனத்தில் இந்த உலகில் உங்களுக்குக் கிடைக்கப் பெறாத அமைதியை நான் தருகிறேன் என்று அன்போடு அழைக்கிறார். இன்றைய திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் இறைவன் தரும் அமைதியைப் பெற்றுக் கொள்ள வழி என்ன? என்பது பற்றிச் சிந்திப்போம்.

### *1. கடவுளின் மீட்பு நமக்குரியதாவதால் அமைதி* :

(செக் 8:13)

செக் 8:13இல் உலகில் சாபத்தின் அடையாளங்களாய் இருந்த யூதாவும், இஸ்ரயேலும் கடவுளின் மீட்புக்கு உரியவர்கள் ஆனதால் ஆசீர்வாதமாய் மாறுவார்கள் என்கிற வாக்குறுதியைக் கடவுள் தருகிறார்.

யூதா, இஸ்ரயேலின் பாவத்தினால் அவர்களது தேசம் அழிக்கப்பட்டது. மக்களின் நம்பிக்கைக்குரிய ஆலயம் அழிக்கப்பட்டது. இதனால் மக்கள் அடிமைகளாக, கைதிகளாக, அந்நியராக, நிலையான வாழ்விடம் இல்லாமல் அலைந்து திரிந்த காலங்களைச் சாபத்தின் நாட்களாகச் சுட்டிக்காட்டுகின்றார். அவர்கள் இறைவனின் மீட்பைத் தங்களுக்குச் சொந்தமாக்கி, அவருக்கு நேராகத் திரும்பி அவரால்

மீட்கப்பட்டபோது, இந்த உலகில் அவர்களைச் சாபத்தின் அடையாளங்களாகக் கண்ட பிறமக்கள், ஆசீர்வாதத்தின் அடையாளங்களாகப் பார்க்கத் தொடங்கினர். இதற்கு கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பதாக செக் 8:16,17 கூறுவது என்னவெனில், கடவுள் வெறுக்கின்ற தீமைகளை விட்டு நாம் விலகவேண்டும். அப்போது கடவுள் அருளும் மீட்பு நமக்கு உரியதாகும். அப்பொழுது உண்மையான சமாதானம் உருவாகும். அந்தச் சமாதானத்தின் பலன் செக் 8:12இல் சொல்லப்பட்டுள்ளது.

***2. நீதிமான்களாக்கப்பட்டிருப்பதால் அமைதி*** : (உரோ 5:1)

தவறு செய்தவனுக்குத் தண்டனை உண்டு. இது உலக நியதி. இந்த உலகில் மனிதனின் பாவத்திற்கு உரிய தண்டனையைக் கடவுள் அவனுக்குக் கொடுப்பாரானால் ஒரு மனிதனும் இந்த உலகில் வாழ முடியாது. ஆனால் இறைவன் தம் மகனை இந்த உலகிற்கு அனுப்பி, அவர் மீது இந்த உலக மக்களுடைய பாவத்தைச் சுமத்தி, அவர் மீது வைக்கின்ற விசுவாசத்தின் மூலம் அவர்களுக்கு நீதிமான்கள் என்கின்ற உரிமையைக் கொடுக்கின்றார். இந்த நிகழ்வு நாம் பாவிகளாய் இருக்கையிலேயே நடைபெறுவது இறைவனின் அன்பின் சிறப்பு (உரோ 5:8).

இறைவனின் இந்த அன்பை நமக்குச் சொந்தமாக்கி, அந்த அன்பினால் நாம் பெறும் பெருவாழ்வை ஏற்றுக்கொள்ளும் போது கடவுள் அருளும் அமைதியை நமக்குச் சொந்தமாக்க முடியும். ஏனெனில் கடவுள் எந்த ஒரு மனிதனுக்கும் இந்த அமைதியை அவனது தகுதியின் அடிப்படையில் கொடுப்பதில்லை. மாறாக, அவர்கள் கடவுள் மீது வைக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கின்றார். எசா 53:4-6 வசனங்கள் இறைவனின் இந்த அன்புச்செயல் குறித்து முன்னறிவிக்கின்றது. நாம் இறைவனின் இந்த அன்புச் செயல்மீது நம்பிக்கை வைத்து அமைதியை நமது வாழ்வில் பெற்றுக்கொள்வோம்.

***3. இறைவர் நம்முடன் இருப்பதால் அமைதி*** : (யோவா 16:33)

சீடரைவிட்டு இயேசு பிரியும்போது ஏற்படும் அமைதியற்ற சூழலைக் கூறும் யோவான், தொடர்ந்து இயேசு அவர்களுடன் இருப்பதால் ஏற்படும் அமைதியைப் பற்றி இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளில் குறிப்பிடுகின்றார். மத் 14:22-33 வரையுள்ள பகுதியில் இயேசு இல்லாத நிலையில் ஏற்பட்ட கொந்தளிப்பின் மத்தியில் இயேசுவின் வருகை அங்கே அமைதியை ஏற்படுத்திய சூழ்நிலையை விரிவாக்கின்றார். திருமறையில் எங்கெல்லாம் அமைதி இல்லாத சூழல் ஏற்படுகின்றதோ, அங்கே கடவுள்

தம்மை இணைத்துக்கொண்டு அந்த மக்களுக்கு அமைதி கிடைக்க தம்மால் தெரிந்து கொண்ட மக்களைப் பயன்படுத்துகின்றார் என்பதை நாம் அறிவோம். எகிப்தில் இஸ்ரயேலருக்கு அமைதி இல்லை என்ற போது மோசேயின் மூலம் அமைதி அளுளினார் (விப 3:1-12). மீதியானியர் நிமித்தம் அமைதி இழந்த இஸ்ரயேலரை மீட்க, கிதியோன் மூலம் கடவுள் செயல்பட்டார் (நீத 6:1-16). இந்த இரண்டு பகுதிகளிலும் "நான் உன்னோடு கூட இருப்பேன்" என்கின்ற வாக்குறுதியைக் கடவுள் கொடுக்கின்றார் (விப 3:12; நீத 6:16).

கடவுளின் மீட்பை நமக்குச் சொந்தமாக்குவதாலும், கடவுளால் நாம் நீதிமான்கள் ஆக்கப்பட்டிருப்பதாலும், கடவுள் நம்மோடு இருப்பதாலும் கிடைக்கும் அமைதி நிலையானது. இந்த உலகில் எவராலும் இந்த அமைதியை நமக்குத் தரமுடியாது. இந்த அமைதியை இறைவனிடம் பெற்று மனமகிழ்வுடன் வாழ்வோம்.

அருள்திரு. J. **விக்டர் ஞானராஜ்**

26-09-2021

# முதியோரின் ஞானம்

**THE WISDOM OF THE ELDERLY**

தொநூ 24:1-14 2திமொ 1:3-14
திபா 92 லூக். 1:5-7

**"…. இத்தகைய நம்பிக்கை முதலில் உன் பாட்டி லோயி மற்றும் உன் தாய் யூனிக்கி ஆகியோரிடம் விளங்கியது"** (2திமொ 1:5).

முதியோர் என்பவர்கள் வயதின் அடிப்படையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கூறலாம். முதியோர்கள் நம்முடைய குடும்பங்களில் இருக்கும்போது அவர்களைப் பாரமாக எண்ணாமல் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் எனக் கூறுவது நல்லது. முதியோர்களிடம் கனிவாகவும், அன்பாகவும் பேச வேண்டும். முதியோர்களைப் பராமரிப்பதும், அவர்களது ஆலோசனைகளைக் கேட்பதும் நமக்கு ஆசீர்வாதமானதாகும்.

திருமறையில், முதியோரை மதித்து நடக்க வேண்டும். அவர்களைக் கடினமாய் நடத்தக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது (இச 5:16; எபே 6:2,3; 1திமொ 5:1,2).

நமது குடும்பங்களிலும் முதியோர்களைப் பாரமாக நினைக்கின்ற இந்நாட்களில் நாம் நமது குடும்பங்களில் நம்மோடிருக்கும் முதியோரைக் கனப்படுத்துவதும் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்க முற்படுவதும் நல்லது. முதியோரின் அனுபவமிக்க ஞானம் எவ்வாறு சிறந்தது என்பதைத் திருமறைப் பகுதிகளிலிருந்து சிந்திப்போம்.

## *1. இறைஞானம் நிறைந்த முதியோர்* : (தொநூ 24:1-14)

ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கிற்கு பெண் தேட தெரிவுசெய்தவர், தன் வேலைக்காரரில் முதியவரும், அனுபவம் மற்றும் ஞானமுடையவரான எலியேசராவார். எலியேசர், ஈசாக்குக்குக் கடவுள் குறித்த பெண்ணைத் தெரிவு செய்ய கையாண்ட முறைமை, நடந்த கொண்ட விதங்கள், முதியவர்கள் இறைஞானத்தின் உறைவிடமானவர்கள் என்பதை மெய்ப்பிப்பதாக உள்ளது. கடவுளுடைய திட்டம் நிறைவேறியதையும் காண முடியும்.

எனவே "முதியோரிடத்தில் ஞானமும் வயது சென்றவர்களிடத்தில் பக்தியும் இருக்குமே" (யோபு 12:12) என்கிறது திருமறை. இஸ்ரயேலை ஆட்சி செய்த ரெகபெயாம் அரசரின் ஆட்சியில் (1அர 12:13) முதியோர்களின் ஆலோசனையை இக்கட்டான காலத்தில் உதாசீனப்படுத்தினபடியினால் இவருடைய ஆட்சி நிலைக்கவில்லை.

வயது முதிர்ந்த முதியோரின் அனுபவம்மிகுந்த ஞானம் நமக்குப் பயனுள்ளதாக உள்ளது. எனவே முதியோர்களிடம் அன்பு செலுத்துவோம். கனிவோடு நடந்து கொண்டு அவர்களுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிவோம். அது ஆசீர்வாதமானதாகும்.

## *2. இறைநம்பிக்கையில் முன்மாதிரியான முதியோர்* :

(2திமொ 1:4,5)

பவுல் திமொத்திக்கு அறிவுரை வழங்கும்போது, அவரது பாட்டி லோயி மற்றும் தாய் யூனிக்கி ஆகியோரிடம் இருந்த இறை நம்பிக்கை திமொத்தியிடமும் இருப்பதாகக் கூறுகிறார். முதியோரின் பற்றுறுதி அனுபவ ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதுவே நமக்கு முன்மாதிரியானதாகும். அனுபவத்தோடு வரும் விசுவாசம் மேலானதாகும். எனவே, திருப்பாடலாசிரியர், கடவுளின் மேலுள்ள பற்றுறுதி உலகில் துன்பங்களில் தடுமாறுவது அல்ல. இந்தப் பற்றுறுதி முதிர்வயதிலும் கனிதரும் ஆழமான பற்றுறுதியாகும் (திபா 92:15) எனக் குறிப்பிடுகிறார். “முதியோருக்கு அவர்களுடைய பேரப்பிள்ளைகள் மணிமுடி போன்றவர்கள்” (நீமொ 17:6).

நமக்கு முன்மாதிரியான முதியோரின் இறைநம்பிக்கை நமக்கும் தேவை என்பதை உணர்ந்து அவர்களின் விசுவாச வாழ்வைப் பின்பற்றுவோம்.

## *3. இறைபக்தியில் முன்மாதிரியான முதியோர்* : (லூக் 1:5-17)

இத்திருமறைப் பகுதியில் இறைவன் மீது கொண்ட பக்தியில் முன்மாதிரியாகத் திகழ்ந்த செக்கரியா-எலிசபெத்து என்ற குடும்பத்தைக் காணலாம். இவர்கள் கடவுளுடைய கட்டளையின்படியும், நீதியுள்ளவர்களாகவும் வாழ்ந்தார்கள். இவர்களுடைய முதிர் வயதுவரை இவர்களுக்குக் குழந்தை இல்லை என்கிற குறைவு இருந்தது. யூதச் சமூகத்தில் பெண்கள், பிள்ளைகள் பெற்றிருப்பதை ஒரு வரமாகவே எண்ணினர். குறைவுகள் இருந்தும் இறைபக்தியில் குறையாத இப்பெற்றோரின் வாழ்வு நமக்கு முன்மாதிரியானது. தங்கள் குறைவிலும் இறைபக்தியில் சிறந்து விளங்கியதால் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்ய, திருமுழுக்கு யோவானைப் பெற்றெடுக்கும் பாக்கியம் பெற்றனர்.

முதியோர் சொல் முன்னே கசக்கும், பின்னே இனிக்கும் என்பர். முதியோர்களிடம் ஞானம் நிறைந்த ஆலோசனைகளும், விசுவாசமும், இறைபக்தியும் உண்டு என்பதைப் புரிந்து நம்மோடுள்ள முதியோரை மதித்து, கீழ்ப்படிந்து நடப்போம். அதுவே நமக்கு ஆசீர்வாதமானதாகும்.

அருள்திரு. Y. **சாம் சுந்தர்சிங்**

27-09-2021

தென்னிந்தியத் திருச்சபை நாள்

# வழிபாட்டில் ஒன்றிப்பு

## UNITY IN WORSHIP

நெகே 2:17-20 உரோ 8:31-39
திபா 66 லூக் 9:1-6

**என் கடவுளின் அருட்கரம் என்னோடு இருக்கிறதையும், மன்னர் எனக்கு உரைத்ததையும் அவர்களுக்குச் சொன்னேன். அவர்களும் "வாரும் கட்டுவோம்" என்றனர்; நற்பணி செய்யத் தங்களைத் தயார் செய்து கொண்டனர்** (நெகே. 2:18).

1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் தென்னிந்தியத் திருச்சபையின் வரலாற்றிலே மறக்கமுடியாத ஓர் பொன்னாள் ஆகும். தங்களுடைய போதனைகளினாலும், ஆளுகை முறைகளினாலும் பல மாறுபட்ட தன்மைகளைக் கொண்டிருந்த ஆங்கிலிக்கன் (Anglican), காங்கிரிகேஷனல் (Congregational), பிறஸ்பிட்டேரியன் (Presbyterian), மெதடிஸ்ட் (Methodist) போன்ற திருச்சபைப் பிரிவுகள் ஒன்றிணைந்து தென்னிந்தியத் திருச்சபை என்னும் ஒன்றிப்பையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்திய நாளை ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி மகிழ்கின்றோம். இதுகாறும் தென்னிந்தியத் திருச்சபையின் வாயிலாக, விசுவாச வீட்டாராகிய நாம், பெற்றிருக்கின்ற மேன்மைகளையும், ஆன்மிக நன்மைகளையும், நன்றியோடு நினைவுகூர்ந்து, ஒருமைப்பாட்டிற்கு வித்திட்ட திருச்சபைகளின் ஐக்கியத்தை ஒன்றுபட்ட நிலையில் வழிபாட்டின் வழி கொண்டாடுவது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

தென்னிந்தியத் திருச்சபை அமைப்பு ரீதியான திருச்சபை, ஆன்மிகம், அர்த்தமுள்ள தொழுகைமுறை, சிறந்த நிர்வாகம், ஒன்றிப்பு இவற்றிற்குச் சான்றாய் இச்சீரிய திருச்சபை நிற்கின்றது என்றால், அது மிகையாகாது. தந்தையாகிய கடவுளும், மைந்தராகிய இயேசு கிறிஸ்துவும் ஒன்றாய் இருப்பது போன்று, மனுக்குலம் கடவுளோடும், சக மனிதர்களோடும் ஒன்றித்து வாழ வேண்டும் எனும் உயரிய கருத்தை அழுத்தமாக எடுத்துரைக்கின்ற திருச்சபையாக, தென்னிந்தியத் திருச்சபை இருக்கின்றது எனலாம். ஒன்றிப்பை முதன்மைப்படுத்தி, திருமறை கற்றுத் தருகின்ற உண்மைகளை தூய ஆவியாரின் துணையோடு கற்றுக்கொள்ள ஆயத்தப்படுவோம்.

வழிபாடு என்றாலே ஒன்றிப்பின் கொண்டாட்டம் எனலாம். கடவுள் நமக்கு அருளிய நன்மைகளுக்கு நாம் கூட்டாக / ஒன்றித்துச் செலுத்தும் நன்றிப் பலிதான் வழிபாடு. கடவுள் இறைமக்களுக்கு யாராக இருக்கிறார்? என்னவெல்லாம் செய்திருக்கிறார்? என்பதை இறைமக்கள் அறிந்து, உணர்ந்து கடவுளைப் போற்றும் செயல்பாடே வழிபாடு. இறைச்சமுகத்தில் இறைமக்கள் ஒவ்வொருவரும் தன்நிலை உணர்ந்து மனம்மாறி இறைவார்த்தையின் வழியாகக் கடவுளின் திட்டத்திற்கு முழுமையாகத் தம்மை ஒப்படைக்கும் அர்ப்பணிப்பின் செயல்பாடே வழிபாடு. இந்த வழிபாட்டில் இறைமக்களின் ஒருமனமும், ஒன்றிப்பும் இன்றியமையாததாகின்றன. இணைந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கின்ற பகைமையை அகற்றி, சமய, சமூக எல்லைகளையும், அடையாளங்களையும் கடந்து அனைவரோடும் நல்லுறவை ஏற்படுத்த ஏறெடுக்கும் வழிபாட்டையே இறைவன் விரும்புகிறார்.

## *1. இணைந்த கரங்கள்* :

சூசான் அரண்மனையில் அர்த்தக்சஸ்தா மன்னரின் பானபாத்திரக்காரனாய் (பானம் பரிமாறுவோன்) இருந்த போது, நெகேமியா யூதாவில் நடந்தவற்றைக் குறித்துக் கேள்விப்பட்டார். நெகே 1:1-3 வரையுள்ள வசனங்களில், சூசான் அரண்மனைக்கு அவரது சகோதரர்கள் வந்தபோது எருசலேமின் பாழான நிலையைக் குறித்து நெகேமியாவிடம் கூறினர். இச்செய்தி கேட்ட நெகேமியா, கண்ணீரோடு துக்கம் அனுசரித்து, நோன்பிருந்துஆண்டவரை நோக்கி முறையிடுகிறார். 11- ஆம் வசனத்தில் இவர் மட்டுமன்று இவரோடு சேர்ந்த வேறு சிலரும் மன்றாடுவதாகப் பார்க்கின்றோம். அந்த மன்றாட்டுக் குழுவின் தலைவராக நெகேமியா இருந்து நடத்தினார். நெகே 2:1-10 வரையுள்ள வசனங்களின் அடிப்படையில், நான்கு மாதங்கள் அவர்கள் ஏறெடுத்த மன்றாட்டின் பலனாய், அர்த்தக்சஸ்தா மன்னர், ஒரு நாள் நெகேமியாவை அழைத்து, எருசலேமுக்குப் போக உத்தரவு கொடுத்து, அரசாங்க நிலையில் உதவிகளையும் கட்டளையிட்டு, அவரை அனுப்பி வைத்ததைக் காண்கிறோம். எருசலேம் வந்து சேர்ந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, இரவு நேரங்களில் தனியாகச் சென்று நெகேமியா அலங்கத்தின் இடிபாடுகளைப் பார்வையிடுகின்றார் (2:12-16). பின் அலங்கத்தின் கட்டுமான வேலைக்கு நெகேமியா மக்களை உற்சாகப்படுத்துகையில், சிதறுண்ட மக்களும் “எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.” தொடர்ந்து, 52 நாட்களில் எருசலேமின் அலங்கம் கட்டிமுடிக்கப்பட்டதாகக் காண்கிறோம்.

இங்கு பல்வேறுவிதமான எதிர்ப்புகள், கடினப்பாடுகள் மத்தியிலும், மக்களின் தொடர் மன்றாட்டும், ஒன்றிணைந்த மனமும் பெரிய வெற்றியைத் தேடித் தந்தது. நம்முடைய வழிபாட்டிலும் இந்தத் தன்மைகள் காணப்பட வேண்டும். கிறிஸ்தவம் வலியுறுத்துகின்ற வழிபாட்டு முறை கூட்டு வழிபாட்டு முறையாகும் (Corporate Worship). எபிரேயர் 10:25இன்படி, சபைமக்கள் ஒன்று கூடிவருதல் அவசியமான செயல். இதனை இறைவன் விரும்புகிறார்; அங்கீகரிக்கின்றார். திப 2:42-47-இன்படி தொடக்கக்காலத் திருச்சபையினர், ஒவ்வொருநாளும், ஒரே மனத்தோடு கூடிவந்தார்கள். வழிபாட்டில் பங்கு பெறுவது என்பது கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் கூட்டுறவில் பங்கு பெறுவதாகும்.

நெகேமியாவின் ஊக்கமான தொடர் மன்றாட்டும், விடாமுயற்சியும், மற்றும் சிதறுண்ட மக்களின் ஒருமனமும், இணைந்த கரங்களும், எருசலேம் மதில் சுவற்றைத் திரும்பவும் கட்டியெழுப்பத் துணை நின்றன. நமது வழிபாட்டின் வழி இறைமக்களுடைய இணைந்த கரங்களும், ஊக்கமான மன்றாட்டும், சமூகத்தில் மலிந்து கிடக்கின்ற சீர்கேடுகளையும், அநீதிகளையும் களைந்து மக்களின் வாழவுக்கென்று நன்மைகளையும், நீதியையும் கொடுப்பதாய் அமையட்டும்.

### *2. இசைந்த ஆத்துமாக்கள்* :

வழிபாடு கடவுளிடம் நாம் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு. இறைவர் ஒருவர்தாம் வழிபாட்டுக்கு உரியவர். இந்த உலகிலே இறைவரை வழிபடுகின்ற எந்தப் படைப்பானாலும், வானதூதர்களானாலும் உலகம் தரக்கூடிய உயர்வு, தாழ்வு நிலைகள் எதுவாயிருந்தாலும் நாம் இணைந்துள்ள கடவுளின் அந்த அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது (உரோ 8:38-39).

கடவுளிடம் நாம் இசைந்திருக்ககு வேண்டுமென்றால், இவ்வுலகத்தின் சகமனிதர்களோடும் இணக்கமாக இருக்க வேண்டும். இந்த இசைவு நம்முடைய வழிபாட்டிலும், வாழ்விலும் காணப்பட வேண்டும். இதைத்தான் திருப்பாடகராகிய தாவீது 133-ஆம் திருப்பாடலில் "சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது" என்கிறார். நாம் இசைந்த ஆத்துமாக்களாய் வாழும்போது கடவுள் தம் அருள்கொடைகளை நமக்கு அருளுகின்றார் (உரோ 8:32). எனவே அந்த அருள்கொடைகளை அனுபவிக்க இறைமக்கள் இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றுபட்டு வாழ்வது இன்றியமையாதது.

திருச்சபை கிறிஸ்துவின் திருவுடலாகும். திருச்சபைக்குள்ளாக அவயவங்களாய் பல்வேறு தரப்பட்ட மக்கள் இருப்பினும் அவர்கள் எல்லாரும் தலையாகிய கிறிஸ்துவுக்குள் இசைந்த மனத்தோடு இருக்க வேண்டும். இதைத்தான் 1கொரி 12:12-31 வரையுள்ள வசனங்களின் வழி பவுலடிகளார் தெளிவுபடுத்துகின்றார். மனம் ஒன்றித்து வாழும்போது தான் இசைந்த ஆத்துமாக்களாய்க் கடவுளை வழிபட முடியும். வழிபாட்டிலே அனைவரது பங்களிப்பும் இன்றியமையாதது. திருச்சபையிலே ஆயர்களை ஏற்படுத்தியிருக்கிறார், மூப்பர்களைத் தந்திருக்கிறார், விசுவாச வீட்டாரைத் தந்திருக்கின்றார். ஒவ்வொருவரும் ஒற்றுமையோடு தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் செய்வதால், கிறிஸ்துவின் அன்பில் வளர்ச்சி அடைகிறோம். திருத்தூதரான பவுல் எபேசுத் திருச்சபைக்குச் சொல்லும்போது எபே 4:3-இல் "அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்" என்கிறார்.

***3. இயைந்து பணிபுரிதல்*** :

வழிபாடு வாழ்க்கையோடு தொடர்புடைய ஒன்று. பொருளுள்ள வழிபாட்டின் முக்கியமான இன்னொரு பகுதி நீதியை நிலைநாட்டுகின்ற செயலாகும். அன்பும், நீதியும், சமத்துவமும், விடுதலையும் அனைத்து மக்களும் பெற்றிட பணியாற்றுதல் வேண்டும். சமூக நீதியும், விடுதலையும் வழிபாட்டில் வெளிப்பட வேண்டும். இதனை இயேசு கிறிஸ்துவின் போதனைகளிலும் செயல்களிலும் காணலாம்.

லூக்கா 4:18,19-நாசரேத்தூர் அறிக்கையில் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் விடுதலை வாழ்வு பெற, தாம் அனுப்பப்பட்டதாகக் கூறிய இயேசு நாதர், அதேவிதமான பணிகளைச் செய்ய சீடர்களை உலகிற்கு அனுப்புகிறார் (லூக் 9:1-6). இதன் மூலம் வழிபாடு விடுதலை, நீதி ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதை இயேசுவானவர் வலியுறுத்துகின்றார். வாழ்க்கையோடும், சமுக நீதியோடும் இணைந்து வராத வழிபாடு, உண்மையான இறைப்பற்றுக்கு எதிரானது. எசா 1:17-இல், எசாயா இறைவாக்கினரும் இதே கருத்தை வலியுறுத்துகின்றார்.

வழிபாட்டிலே கலந்துகொள்கின்ற நாம் நன்மைகளை, ஆசிகளை இசைந்த மனம் உடையவர்களாய்ப் பகிர்ந்து, சமூகம் வாழ்வு பெற வேண்டும் என்னும் நோக்கத்தில் இயைந்து பணிபுரிவதில்தான் வழிபாட்டின் நோக்கம் முழுமை பெறுகிறது. இதனைத்தான் இறையியலாளர் ஒருவர், Service is a most beautiful aspect of life; if it is done with love, it enhances the value of life என்று குறிப்பிடுகின்றார்.

இணைந்த கரங்களும், இசைந்த ஆத்துமாக்களும், இயைந்து பணிபுரிவது வழிபாட்டிற்கு அழகு சேர்க்கின்ற காரணிகளாய் இருக்கின்றன. இறைவரும் ஒன்றித்த வாழ்வைத்தான் மனுமக்களிடம் எதிர்பார்க்கிறார். எனவேதான், இயேசுநாதரும் தம்முடைய மன்றாட்டில் மனுமக்களின் ஒற்றுமைக்காகத் தந்தையிடம் வேண்டுதல் செய்கின்றார் (யோவா 17:15-23).

உண்மையான வழிபாடு என்பது அசுத்தங்களுக்குள் நாம் மீண்டும் செல்லாதவாறு நம்மைத் தூய்மைப்படுத்தும். உண்மையான வழிபாடு பாவம் என்னும் விஷத்தை நமக்குள்ளிலிருந்து வேரறுத்து மீண்டும் தூய வாழ்வு வாழத் துணை செய்யும். உண்மையான வழிபாடு இறைவிருப்பத்தை ஏற்று அதை நிறைவேற்ற நம்மைத் தூண்டும்.

இறைமகன் இயேசு கிறிஸ்து ஆலய வழிபாடுகளிலும், ஆலயம் தொடர்பான நிகழ்வுகளிலும் ஆர்வத்தோடு பங்குபெற்றார். அவர் வழிபாடுகளில் பங்கு பெற்றதோடு நின்று விடாமல் எவ்வாறு நன்மையான செயல்களில் ஈடுபட்டாரோ, அவ்விதம் நாமும் வழிபாடுகளில் இணக்கத்தோடு பங்கு பெற்று, இறை ஆற்றலைப் பெற்று சமுதாயத்தில் ஆற்ற வேண்டிய அருட்பணியை நிறைவேற்ற நம்மை அர்ப்பணிப்போம்.

திரு. P. **பால் ஒய்சர் ஷெல்லி**

# விடுதலையின் விருட்சம் : தென்னிந்தியத் திருச்சபை

எசே 37:15-22 திவெ 2:1-7
திபா 122 யோவா 17:20-26

**"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!"** (யோவா 17:21).

திருச்சபை ஒருமைப்பாட்டு வரலாற்றிலேயே 27-09-1947-இல் உருவான தென்னிந்தியத் திருச்சபையே உலகில் மிக முக்கியமானதாகும். ஒரே கோட்பாடு, ஒரே பாரம்பரிய முறை சபைகள் ஒன்று சேராமல் பல பிரிவினையையுடைய, பல நம்பிக்கையையுடைய சபைகள் ஒன்றான வரலாறே தென்னிந்தியத் திருச்சபையாகும். திருச்சபையின் ஆன்மிகப் பயணத்தில் இரண்டாவது பெந்தகோஸ்து திருநாள் எனலாம். உலகத் திருச்சபை வரலாற்றில் புதிய விதை, புதிய தளிர், புதிய கனி தென்னிந்தியத் திருச்சபை இருபதாம் நூற்றாண்டில் புதிய ஐக்கியமாகத் தென்னிந்தியத் திருச்சபை மலர்ந்தது.

யோவான் தனது விண்ணகக் காட்சியில் எபேசு சபையைக் காண்கின்றார். எபேசு பவுலின் திருப்பணியால் நிறுவப்பட்டது. கி.பி. 52-55-இல் உருவாக்கப்பட்ட எபேசுவை ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப் பின் 95-இல் யோவானால் திறனாய்வு செய்யப்பட்டது. எபேசுவின் விசுவாச வளர்ச்சி, பாரம்பரியம், பண்பாடு, இறைப்பணி ஆன்மிக வாழ்வு.... அனைத்தையும் ஆவியார் முழுமையாக மதிப்பீடு செய்து கடவுளின் தோட்டத்தில் உள்ள வாழ்வு தரும் மரத்தினுடைய கனியை வெற்றி பெறுவோருக்குக் கொடுப்பேன் என்றார். தென்னிந்தியத் திருச்சபையாக அது கடந்து வந்த 13 ஆண்டுகளை மதிப்பீடு செய்து புதிய ஆன்மிக மதிப்பீட்டுடன் 74-ஆம் ஆண்டிற்குள் செல்ல ஆயத்தமாகும்போது வெற்றி பெறுவோருக்குக் கடவுள் கொடுக்கும் பரிசைப் பெற்றுக் கொள்ளும் ஆன்மிகப் பாதையில் செல்ல வேண்டும்.

## *1. விசுவாச ஒருமனத்திற்கான விதை : தென்னிந்தியத் திருச்சபை* :

பொறுமை, சகிப்பு, சத்தியத்தை அறிதல் போன்றவையெல்லாம் விசுவாச வாழ்வை ஒருமைப்படுத்துவதற்கான வழிகள் (திவெ 2:2). இந்த விதையே தென்னிந்தியத் திருச்சபை உருவான நாளில் விதைக்கப்பட்டது. எபேசு சபையும் விசுவாச வாழ்வில் சிறந்து விளங்கியது. இதற்கு உதாரணமாக, பொல்லாதவர்களை ஏற்றுக் கொள்ளாததும்,

திருத்தூதவரல்லாதோரை நிராகரித்ததும் ஆகும். பொல்லாதவன் நல்ல விதையைப் பறித்துக் கொள்கின்றான் (மத் 13:19). இன்றைய திருச்சபையில் விசுவாச குறைவுகளே ஒருமனமின்மைக்குக் காரணம். திருத்தூதுவர் திருச்சபை ஒருமனதுடனிருந்தது (திப 2:44). ஆனால் பவுல் காலத்தில் திருச்சபை பவுலைச் சார்ந்தவர்கள் எனப் பிரிவு எண்ணம் உருவானபோது பவுல் தனக்கென்று ஒரு பிரிவை ஊக்கப்படுத்தாது கிறிஸ்து பிரிக்கின்றவரல்லர் என ஒருமன வாழ்வை முன்வைத்தார் (1கொரி 1:12,13). பக்தி அனுபவங்கள் பல பிரிவுகளாக இந்தியத் திருச்சபையை பிரித்து வைத்திருந்த போது பக்தி வாழ்விலிருப்போரை ஒரே பாதையில், கிறிஸ்துவின் பாதையில் ஒருமனப்படுத்த, வளரச் செய்ய தூவப்பட்ட விதையே தென்னிந்தியத் திருச்சபை.

### *2. விசாலமாகப் படரும் விருட்சம் : தென்னிந்தியத் திருச்சபை* :

கடவுள் தங்களுக்கு மட்டுமே என்ற சுயமேட்டிமை யூதருக்குள் இருந்தது. ஆனால் கடவுள் எல்லா இனத்தவருக்கும் உரியவர் என்ற விசாலமான நோக்கத்தோடே பவுல் நற்செய்தி அறிவித்தார். எபேசுவும் பவுலின் நற்செய்தியால் உருவாக்கப்பட்ட சபையே. ஆனால் ஆதி அன்பை இழந்ததால் ஆதியில் செய்த கிரியையை செய் என்று திவெ 2:5 கூறுகின்றது. அன்பு அனைவரையும் இணைக்கின்றது. அன்பு எல்கை தாண்டி வெளியே செல்கின்றது. அன்பு அனைவரையும் ஏற்கின்றது. அன்பை இழந்தால் எந்தப் போதனையாலும் சபையைக் காக்கமுடியாது. அன்பு அடுத்த நிலைக்கு திருச்சபையை அழைத்துச் செல்லும். திருச்சபை மூத்தமகனாக இருந்தால் திரும்பி வரும் மகனை எப்படி ஏற்க முடியும்? (லூக் 15:20) திருச்சபை திருச்சபைக்குள்ளே படருவது அல்ல, அருகிலுள்ள நகரங்களிலும் அடுத்த ஊரிலுள்ள மரங்களிலும் அனைத்திலும் பரவ வேண்டும். யோசேப்பு அந்நிய நாட்டு அரண்மனையிலும் படர்ந்து அலங்கரித்தார் (தொநூ 49:22, திபா 80:8-13). திருச்சபைக்குள் உருவாகும் அன்பு, சத்தியம் பரந்த அன்பிற்கு, பரந்த ஐக்கியத்திற்கு படர வழி நடத்த வேண்டும்.

### *3. விளைச்சல் தரும் சுவையான கனி : தென்னிந்தியத் திருச்சபை* :

திருச்சபை கனிகளால் அறியப்படுகின்றது. சுவையான கனி தரும் விருட்சமாக வளர வேண்டும் என்பது ஆண்டவரின் அழைப்பு. நல்ல மரம் நல்ல கனிகளை கொடுக்கும் (மத் 7:17). அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். யோவானின் தரிசனத்தில் எபேசு சபைக்கு கனியைப் புசிக்க கொடுப்பேன் எனக் குறிப்பிடுகிறார் (திவெ 2:7).

சுவையான கனி கொடுத்தால் ஜீவ விருட்சத்தின கனியைப் புசிப்பார். பவுல் நட்டாலும் அப்பல்லோ நீர்பாய்ச்சினாலும் விளைச்சல் தருபவர் கடவுள் (1கொரி 3:6). சுவையான கனியை அறுவடையாகப் பெற அஸ்திபாரத்தின் மேல் ஆவியின் கனியான நல்ல மதிப்பீடுகளால் கட்ட வேண்டும் (12). திருச்சபை இரண்டு தரம் செத்து வேரற்றுப்போன மரம் போன்ற விசுவாசமல்ல (யூதா 12). திருச்சபை நதியோரம் நாட்டப்பட்ட மரம் போன்று சுவையான கனி தந்து சமூகத்தைக் குணமாக்கும் மரமாய் வளர வேண்டும் (திவெ 22:2).

எபேசு திருச்சபையைப் போல் இந்நாளில் நம்மைத் திறனாய்வு செய்து எபேசு குறைவுபட்ட அன்பை அடையாளம் கண்டது போன்று நாமும் குறைவுபட்டவைகளைக் கண்டு ஆதி ஐக்கியத்தை புதுப்பித்து கொள்வோம்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

03-10-2021

# இறைமக்களின் திருப்பணி

**MINISTRY OF THE LAITY**

1சாமு 25:14-28 | 1தெச 4:1-12
திபா 23 | லூக் 10:25-37

**"…. இயேசு நீரும் போய் அப்படியே செய்யும்" என்று கூறினார்** (லூக் 10:37)

திருச்சபை என்பது கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு மக்களால் மக்களுக்காக இயங்குகின்ற மக்களின் இயக்கமாகும். இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள பற்றுறுதியில் இணைந்துள்ள திருச்சபையின் அங்கத்தினர்களாக இருக்கும் இறைமக்கள் திருப்பணிக்கென அழைக்கப்பட்டவர்கள். பேராயர் வில்லியம் டெம்பிள் திருச்சபையைக் குறித்து, 'உலகில் பிறருக்கென வாழும் ஒரே நிறுவனம் திருச்சபை' எனக் கூறினார். இறைமக்கள் அனைவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட திறன்களைக் கொண்டு எந்தச் சூழலிலும் கிறிஸ்துவுக்கும் அவரது திருச்சபைக்கும் சான்று பகர்ந்து வாழவேண்டும். ஜெபித்தல், கொடுத்தல், கீழ்ப்படிதல் என்ற குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிடாமல் திருப்பணியில் பங்கேற்போராக இருக்க திருமறை அழைப்பு விடுக்கின்றது. எனவே இறைமக்கள் அனைவரும் இறைப்பணியில் இணைந்து கிறிஸ்துவுக்கும் அவரது திருச்சபைக்கும் சான்று பகரும் வாழ்வை வாழ வேண்டும். இறைமக்கள் திருப்பணி என்பது அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்துவைப் போன்று சான்றாக வாழ்வதும், தங்கள் சொந்த நம்பிக்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுமாகும். இறைமக்கள் திருப்பணி திருச்சபையில், நாம் வாழும் சூழலில் எவ்வண்ணமாக அமைய வேண்டும் என்பதைத் திருமறை வழியாகத் தியானிப்போம்.

## *1. இறைமக்களின் திருப்பணி* : *அமைதியை உருவாக்கும் பணி* (1சாமு 25:14-28)

நாபால் மாவோனிலிருந்த ஒரு செல்வந்தர். நாபால் ஆடுகளுக்கு உரோமம் கத்திருப்பதை அறிந்து தாவீது பத்து இளைஞர்களை அழைத்து கர்மேலிலிருக்கிற நாபாலைச் சந்தித்து சமாதான வாழ்த்துகளைக் கூற அனுப்பி வைத்தார். ஆனால் முரடனாக இருந்த நாபால் அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் வெறுமையாகத் திரும்ப அனுப்பிவிட்டார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட நாபாலின் மனைவியாகிய அபிகாயில், ஏற்பட்ட அமைதியற்ற சூழலை அறிந்து அமைதியை உருவாக்கும் நோக்கோடு தாவீதைச் சந்திக்கப் புறப்பட்டு, தாவீதைக் கண்டு தாவீதிற்கு

முன்பாக முகங்குப்புற விழுந்தார் (1சாமு 25:23). மேலும் தாவீதிடம் ஓர் அமைதியான சூழலை உருவாக்க வேண்டுதல் விடுத்தார். நாபாலின் மீது கோபமுற்றிருந்த தாவீதின் கோபம் தணிந்தது. போர் உருவாகி அமைதியிழக்கும் சூழலில் அபிகாயிலின் சொல் அமைதியை உருவாக்கினது. கோபம் அடங்கிய தாவீது அபிகாயிலைக் காண அனுப்பிய கடவுளைப் புகழ்ந்தார். அபிகாயிலின் இச்செயலில் ஒரு முழு நாட்டிற்கும் அமைதியைக் கொண்டு வந்தது. சரியான நேரத்தில், சரியான இடத்தில் அபிகாயில் சாதுரிய ஞானத்தோடு செயல்பட்டு அமைதியை உருவாக்கினார்.

இறைமகன் இயேசுவும் அமைதியை நிலைநாட்ட இவ்வுலகில் வந்தார். அவர்தம் மலைப்பொழிவில் அமைதியை ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் (மத் 5:9) எனப் போதித்தார். எனவே இறைமக்கள் திருப்பணி திருச்சபையிலும், சமூகத்திலும் அமைதியை உருவாக்கி கடவுளின் மக்களாக வாழும் பணியாக அமைய வேண்டும். 'ஆண்டவரே அமைதியின் கருவியாக என்னை உருவாக்கும்' (Lord, make me an instrument of peace ) என்ற இறைவேண்டல் இறைமக்களாகிய நம் அனைவரின் அன்றாட இறைவேண்டலாக அமையட்டும்.

## 2. *இறைமக்களின் திருப்பணி* : *நற்சான்றாக வாழ்தல்*
(1தெச 4:1-12)

தூய பவுலடியார் தெசலோனிக்கத் திருச்சபை மக்களை நற்சான்றுள்ள வாழ்வு வாழ அழைப்பு விடுக்கின்றார். நற்சான்றுள்ள வாழ்வு என்பது கடவுளுக்கு உகந்தவர்களாக இவ்வுலகில் வாழ்வதாகும். நற்சான்றுள்ள வாழ்வு நற்செய்தியை வாழ்வின் வழியாக அறிவிக்கும் பணியாகும். பவுலடியார் தெசலோனிக்கத் திருச்சபை மக்களிடம் கற்புநெறி தவறாமல் தூயவர்களாக வாழ அழைப்பு விடுக்கின்றார். தெசலோனிக்கத் திருச்சபை மக்களிடம் நீங்கள் கடவுளை அறியாத பிற மக்களைப் போன்று வாழக் கூடாது என ஆலோசனை கூறுகின்றார் (1தெச 4:5). கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல; தூய வாழ்வுக்கே அழைத்தார் எனவும் எழுதுகின்றார் (1தெச 4:7). தூய்மை என்பது தேவையற்றதை நீக்குவது, தேவையானதை அதிகப்படுத்திக் கொள்வதாகும்.

நாம் கணினி அல்லது கைப்பேசியைப் பயன்படுத்தும் போது கிளீன் யுவர் டிரைவ் (Clean your drive) என்ற எச்சரிக்கை அடிக்கடி வருவதுண்டு. அதாவது கணினியின் அல்லது கைப்பேசியின் சேமிப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தேவையற்ற தற்காலிகக் கோப்புக்களை (files) அழியுங்கள் என்ற எச்சரிக்கையே இது. நாம் கிளீன் செய்யும் போது தேவையற்றதை நீக்குவதால் தேவையானதற்கு இடம் கிடைக்கின்றது.

அதைப்போல, நாமும் நம்மிலிருக்கின்ற தேவையற்ற தன்மைகளை நீக்கி 'தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு' (உரோ 12:1) என்ற பவுலடியாரின் ஆலோசனையை ஏற்று நற்சான்று பகரும் இறைமக்களாக இவ்வுலகில் வாழ்வோம்.

### *3. இறைமக்களின் திருப்பணி : நல்ல அடுத்திருப்பவராக வாழ்தல்* (லூக் 10:25-37)

ஆண்டவருக்கு அன்பு செய்வதும், அடுத்திருப்பவருக்கு அன்பு காட்டுவதும் ஒரே சட்டத்தின் இருகூறுகள். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். நான் கடவுளை அன்பு செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தன் சகோதரனை அன்பு செய்யாதவன் தான் கண்டிராத கடவுளை அன்பு செய்ய இயலாது என்பது இயேசுவின் போதனை.

லூக் 10:25-37 -இல் அடுத்திருப்பவர் யார்? என்ற கேள்விக்கு இயேசு பதிலளிக்கிறார். இந்த உவமையில் வரும் குரு, இறந்தவரைத் தொட்டு விட்டு தீட்டுக்கு ஆளாகித் தொடர்ந்து வழிபாடு நடத்த முடியாதே என்று எண்ணி (எண் 19:11, 21:1) வழியில் குற்றுயிராய்க் கிடந்தவரை கண்டுகொள்ளாமல் செல்கின்றார். பிறருக்கு உதவுவதை விட வழிபாடு நடத்துவதே மிகவும் முக்கியம் என எண்ணியவர் இவர். லேவியனும், இக்குருவைப் போல நடந்து கொண்டான். இவர்கள் தன்னலவாதிகள். பிறருக்கு உதவுவதால் நமக்கு ஆபத்து வருமோ என எண்ணி நல்ல அடுத்திருப்பவராக வாழ விரும்பாதவர்கள்.

இவர்களுக்கு முற்றிலும் வேறுபட்டவர் அவ்வழியாய் வந்த சமாரியார். இவர் சட்டங்களைச் சரியாக பின்பற்றாத பாவிகள் என யூதர்களால் எண்ணி கழப்பட்டவர்கள். ஆனால் சட்டங்களைப் பற்றி அதிகம் கவலைப்படாத சமாரியர் தான் யூதரின் காயங்களைக் கட்டி, தன் வாகனத்தில் ஏற்றி அவர் உயிரைக் காத்தவர். எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை என எண்ணி, துணிந்து, வீதியில் கிடந்தவனும் தன் அடுத்திருப்பவர், தன் சகோதரர் என்பதில் தெளிவாயிருந்து மனித நேயத்தோடு செயல்பட்ட சமாரியரைப் போல, 'நாம்' 'நமது' என்ற எல்லைகளைத் தாண்டி யாருக்கெல்லாம் நமது உதவி தேவைப்படுகிறதோ அவர்களுக்கெல்லாம் உதவி செய்கின்ற நல்ல அடுத்திருப்பவராக வாழ்வதே இறைமக்கள் பணி. குறுகிய வட்டத்துக்குள் வாழாது பரந்த மனத்துடன் அனைவரையும், சிறப்பாக நம் பகைவரையும் அன்பு செய்து வாழ்வோம்.

இறைமக்களாக வாழ அழைக்கப்பட்ட நாம் இவ்வுலகத்தின் தவறான பாதையில் செல்லாமல் இவ்வுலகில் மாதிரியான நபர்களாக வாழ்வோம். அமைதியை உருவாக்கி, நற்சான்று பகர்ந்து நல்ல அடுத்திருப்பவராக இவ்வுலகில் வாழ்வோம். கிறிஸ்துவைப் போல ஒவ்வொரு நாளும் இவ்வுலகில் நற்சேவை வழியாக சான்று பகர்ந்து இறைமக்களாக வாழ்வோம்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

# மாற்றுத்திறனுடையோர் : மாண்பும் சார்பும்

## PERSONS WITH DISABILITY : DIGNITY AND DEPENDENCE

விப 4:10-17 திப 3:1-10
திபா 103:1-13 மத் 17:14-21

**"…. ஏனெனில் எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும் என்றார்"** (விப 4:10).

இறைச்சாயலில் படைக்கப்பட்ட மனிதர் பல்வேறு காரணங்களினால் இன்று இறைச்சாயலை இழந்து பல பாதிப்புகளை அடைகின்றனர். இது மனம், உடல் சார்ந்து அமைகிறது. உடல் நலம், மனநலம் குன்றியவர்களாக எப்படிப் பிறக்கின்றனர்? என்று அறிவியல் வழி பார்க்கும் போது பல காரணங்கள் அதற்கு விடையாக அமைகின்றன. அவைகளில் சில…

- மூதாதையர் வழியாக
- கர்ப்பிணிப் பெண்களைப் பாதிக்கும் சம்பவங்கள் வழியாக
- அடிக்கடி கருவைக் கலைத்தல்
- நெருங்கிய உறவினர் இடையே திருமணம்
- மருந்துகள் அதிகமாக அல்லது தவறாக எடுத்தல்
- சத்து இல்லாமை

இன்றைய காலகட்டத்தில் உடல் நலம் குன்றியவர்களுக்குப் பயன்படுத்தப்படும் பழைய சொற்களை முற்றிலுமாக விட்டுவிட்டு, புதிய நலம் தரும் வார்த்தைகளைப் பேசுவது மாற்றுத்திறனாளிகள் மீதுள்ள நமது கரிசனையினை மேலும் வலுப்படுத்தும். யூதர்களின் பொதுச்சட்டத்தின்படி எந்த ஒரு நபருக்காகிலும் உடலில் குறைவு இருந்தால் அவர்கள் மிருகத்தை விட இழிவாகவும், தீட்டானவர்களாகவும் கருதப்பட்டனர். அவர்கள் யூதச் சடங்கு சம்பிரதாயங்களில் பங்கு பெற முடியாது. பொதுவாக, இது கடவுளுக்கு விரோதமாகச் செய்கிற பாவத்தினால்தான் வருகிறது என்பது யூத மக்களிடையே காணப்பட்ட கருத்தாகும். அவர்கள் தனித்து வாழ வேண்டும் என்று சமூகம் அவர்களைத் தனிமைப்படுத்தியது. இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் நடக்க இயலாதவர், பார்வையற்றோர், பேசமுடியாதோர், திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்டோர், தீய ஆவி பிடித்த மனிதர் சமூகத்தில் தள்ளப்பட்ட நிலையில், இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட மாற்றுத்திறன் படைத்தோரிடம் அன்பு காட்டி, கரிசனையினை வெளிப்படுத்தி நலமருளி ஏற்றுக் கொண்டார்.

இன்று மாற்றுத்திறனாளிகள் என்று அடையாளப்படுத்தப்படும் இவர்களது மாண்பினைக் காக்க வேண்டியது நமது கடமை. மாற்றுத்திறனாளிகள் சாதாரண மக்களைவிடச் சாதாரணமானவர்கள் அல்லர் என்பதைத் தங்கள் வாழ்வில் நிரூபித்துச் சாதனை புரிந்தவர்களும் பலர் (ஐசக் வாட்ஸ், சார்லஸ் எலியட், லூயி பிரெயில்) உண்டு. இன்று சமூக நிலையிலே மாற்றுத்திறனாளிகள் பல பதவிகள், உயர்வுகளைப் பெற்றிருந்தாலும் ஒட்டு மொத்தத்தில் மாற்றுத்திறனாளிகளை, சமூகம் மனிதர்களாக மதிக்கவில்லை என்பது உண்மையே. அவர்களும் மனிதர்களே என்கிற உணர்வு நம்மிலே எழ வேண்டும். அவர்களது மாண்பு மதிக்கப்பட வேண்டும்.

### *1. புரிந்துகொள்ளுதல்* :

உடலாலும் மனத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையினைப் புரிந்துகொள்ள வேண்டும். "....நாவன்மை அற்றவன் நான்! ஏனெனில் எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும் என்றார்" (விப 4:10). இங்கே கடவுள் மோசேயின் இயலாமையினைப் புரிந்து கொண்டு அவரை உற்சாகப்படுத்தினர். வச. 12-இல் "நானே உன் நாவில் இருப்பேன்; நீ பேச வேண்டியதை உனக்குக் கற்பிப்பேன்" எனக் கூறி மோசேயைக் கடவுள் உற்சாகப்படுத்துகிறார். அவருடைய நிலையினைப் புரிந்து அவருக்குத் துணையாக ஆரோனை ஏற்படுத்துகிறார். அடையாளங்களைக் காண்பித்துத் தைரியப்படுத்துகிறார். இன்று நாம் மாற்றுத்திறனாளிகளைத் அந்நியப்பார்வையோடு அல்ல, இயேசுவைப் போலப் பார்க்க வேண்டும். அப்போதுதான் புரிந்து கொள்ள முடியும். தாவீது இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். அவரால் மேவிபோசேத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது (தனிமை, பொருளாதாரம், சவுலின் குடும்பத்திலிருந்து தள்ளப்பட்டவர்)

உடலாலும், மனத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களைச் சமூகம் Disabled people என்று அழைத்து அவர்களைத் தனிமைப்படுத்திய காலம் மாறி அவர்களை Persons with Disability அதாவது அவர்கள் நம்மைப் போன்றவர்கள், மனிதர்கள் எனப் புரிந்து கொண்டு, அவர்களது திறமைகளை உறுதிப்படுத்தி, சாதிக்க வைப்பதையும் நாம் மறுக்க முடியாது. எனவே இப்பணியினைத் தொடர்பணியாய்த் திருச்சபை செய்தல் வேண்டும்.

### *2. ஏற்றுக் கொள்ளுதல்* :

"...கடவுளைப் போற்றியவாறே அவர்களோடு கோவிலுக்குள் சென்றார்." (திப 3:8). நாம் விரும்புகிறதைக் கடவுளிடம் கேட்கிறோம். ஆனால் கடவுளோ தேவையானதை நமக்குத் தருகிறார். தாவீது

அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் துரத்தப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஆலயத்தில் (கோவிலினுள்) வர அனுமதி மறுக்கப்பட்டது. அந்த நிலையிலே ஆலயத்தின் வெளியே பிச்சை எடுத்துக் கொண்டு தங்களது வாழ்வை நடத்தியவருக்கு வாழ்வு கொடுத்து (எழுந்து நட) அவரை ஏற்றுக் கொண்டனர். பேதுருவும், யோவானும் தங்களோடு கடவுளை வழிபடும் உரிமையினைப் பெற்றுக் கொடுத்தனர் (திப 3:8). பொதுவாக மனிதருக்கு இரண்டு குணங்கள் உண்டு.

1. ஏற்றுக் கொள்கிற குணம், 2. நிராகரிக்கிற குணம் (Acceptance and Rejection). சரீரத்தில் குறைபாடு உள்ளவர்களைப் பார்க்கும் போது பெரும்பாலான மக்களின் மனதில் அருவருப்பு தோன்றுகிறது. ஆனால் திருச்சபை இப்படிப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். உடலாலும், மனத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஏழ்மை நிலையில் உள்ளார்கள். ஏனென்றால் தங்கள் சரீரம் பாதிக்கப்பட்டதினால் படிப்பும், தொழிலும் பாதிக்கப்படுகிறது. அதனால் வறுமை வருகிறது. எனவே தான் வறுமையின் சூழலில் ஆலயத்தின் வெளியில் பேதுரு, யோவானிடம் நடக்க இயலாத மனிதர் பிச்சை கேட்டார். மாறாக, இவர்கள் கொடுத்தது பிச்சை அல்ல.... வாழ்வு கொடுத்து ஏற்றுக் கொண்டனர். லூக் 14:12-14-இல் கிறிஸ்து கூறும் போது, விருந்துக்கு ஏழைகளை, மாற்றுத்திறனாளிகளை அழை என்கிறார். ஏனெனில் அவர்கள் தான் மெசியாவின் பந்தியில் முதன்மையானவர்கள் என்று மத் 8:11-இல் கூறுகிறார்.

### *3. வாழ்வு கொடுத்தல்* : (மத் 17:14-21)

சமுதாயத்தின் ஓர் அங்கமாய் வாழ்வதற்கான அங்கீகாரம் மாற்றுத்திறனாளிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு உடல் குறைபாடு ஒரு தடையல்ல என்பதைப் புரிதல் அவசியம். மத் 17:14-21-இல் பேய் பிடித்த ஒரு சிறுவனை இயேசு குணமாக்குகின்ற நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது. சிறுவனின் வாழ்வு மீது இயேசு கொண்ட ஒரு அக்கறையைக் காட்டுகிறது. வாழ வேண்டியவனை அடக்கி வைத்திருந்த பேயினை இயேசு துரத்தினார். பிறவியிலே பார்வை இழந்த மனிதனை இயேசுவிடம் கொண்டு வந்த போது சீடர்கள் இயேசுவிடம் கேட்டது, இவர் பார்வையற்றவராய்ப் பிறந்தது இவரது பாவமா? இவரைப் பெற்றவர் செய்த பாவமா? என்று கேட்டனர். சீடர்களின் இந்தக் கேள்வி ஒட்டு மொத்த சமுதாயத்தின் கேள்வியாகவே இருந்தது. சமூகம் இவரை, பாவி என்றே ஒதுக்கி வைத்திருந்தது. ஆனால் இயேசு இவரைக் குணமாக்கி,

மற்றவர்களைப் போலச் சமுதாயத்தில் வாழ வைத்தார் (யோவா 9:1-7). இயேசு கிறிஸ்துவால் வாழ்வு வழங்கப்பட்ட இவர்களைச் சக மனிதர்களைப் போல ஏற்று அன்பு செய்யவும், மதிக்கவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலியா நாட்டு மெல்போர்ன் நகரிலே பிறந்து வளர்ந்த நிக் வுஜிசிக் (Nick Vujicic) என்பவர் இரண்டு கால்களும் இல்லாதவர். பெற்றோர் கொடுத்த வாழ்வு, நம்பிக்கை மூலம் இவர் இன்று உலகமே அறியப்படும். தன்னம்பிக்கையை வளர்க்கும் பயிற்றுநராக (Best Motivator) செயல்படுவது மட்டுமின்றி ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற நற்செய்தியாளராகவும் இறைப்பணியாற்றி வருகிறார். எனவே மாற்றுத் திறனாளிகளை அற்பமாய் எண்ணாமல் அவர்களைப் புரிந்து கொண்டு, ஏற்றுக்கொள்ளவும், வாழ்வு கொடுக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. S. ***ஜெயசிங் ராஜன்***

17-10-2021



# பொருளுள்ள வாழ்வுத் தேடலில் இளையோர்

## YOUTH IN SEARCH OF A MEANINGFUL LIFE

| | |
|---|---|
| தொநூ 39:1-23 | எபி 12:1-11 |
| திபா 17 | யோவா 1:43-51 |

**"...பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும் போது தளர்ந்து போகாதே"** (எபி 12:5).

ஒருநாள் இளைஞன் ஒருவன் கடற்கரையில் நடந்து சென்று கொண்டிருந்தான். கடற்கரை அருகே குகை ஒன்று இருப்பதைக் கண்டான். அதற்குள் யாரும் அதிகமாகச் செல்லுவது இல்லை. இளைஞன் அக்குகைக்குள் சென்று பார்த்தான். எங்கும் குப்பையாக இருந்தது. அங்கு ஒரு பையில் ஏதோ இருப்பதைக் கண்டு அதைக் கரத்தில் எடுத்தான். அதில் ஒரு சில மண் உருண்டைகள் இருந்தன. சிறிது நேரத்தில் குகையிலிருந்து வெளியே வந்தவன், அவனை அறியாமல் பையையும் கையில் எடுத்து வந்திருந்தான். கடற்கரையில் நடந்தவன் பையிலிருந்த மண் உருண்டையை ஒவ்வொன்றாய் எடுத்து கடலில் எறிந்தான். ஒரு மண் உருண்டையைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதன் உள்பகுதி மின்னிக் கொண்டிருந்தது. உடனே மீதமிருந்த மூன்றையும் உடைத்துப் பார்த்தான். அத்தனைக்குள்ளும் இருந்த இரத்தினக் கற்களைக் கண்டு அதிர்ந்து போனான். கடலில் இறங்கி, தான் எறிந்த மண் உருண்டைகளைத் தேடினான். ஒன்றும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

இளைமைப் பருவம், காலமும் வாய்ப்பும் சந்தித்துக் கொள்ளும் பூங்கா. இதைப் பொருளுள்ளதாய் அமைத்துக் கொண்டால் வெற்றிகள் பூக்களாய்ப் பூத்துக் குலுங்கும். இளமையைப் பொருளுள்ளதாய் மாற்றுவது எப்படி? அதற்குத் தரப்பட்டிருக்கும் காலத்தைச் சிக்கனமாய்ப் பயன்படுத்த வேண்டும். வாய்ப்புகளைக் கையாள்வதற்கு நுட்பம் வேண்டும். நல்ல மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும்.

இளமை கொஞ்ச காலத்தில் சென்று விடும். அது திரும்ப வராது. எனவே குழந்தைப் பருவமும், இளமையும் மறையக் கூடியவையே என சபை உரையாளர் 11:10-இல் கூறுகிறார். ஆகவே பொருளுள்ள வாழ்வுத் தேடலில் இளையோர் எப்படிச் செயல்பட வேண்டும் எனச் சிந்திப்போம்.

***1. உறவில் உண்மையாயிரு*** : (தொநூ 39:7)

உறவுகள் உன்னதமானவை. உறவுகள் சுருங்கிக் கொண்டிருக்கின்றன. உறவுகள் உயிரூட்டப்பட உண்மை மிகவும் அவசியம்.

உறவில் பக்கத்து உறவு - தூரத்து உறவு, நல்ல உறவு - கெட்ட உறவு, உண்மை உறவு - போலி உறவு என அது விரிந்து கொண்டே இருக்கும். நல்ல உறவும், உண்மை உறவும் என்றும் நிலைத்து நிற்கும்.

யோசேப்பு அந்நிய நாட்டில் இருந்தார். ஆனால் ஆண்டவர் யோசேப்போடே இருந்தார். அவர் சிறப்புற்றவராக எகிப்தியத் தலைவன் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். வீட்டில் மேலாளராக யோசேப்பு நியமிக்கப்பட்டார். போத்திபார், தான் உண்ணும் உணவைத் தவிர வேறொன்றைப் பற்றியும் யோசேப்பிடம் விசாரிக்கவில்லை. இளைஞராயிருந்த யோசேப்பு நல்ல உடற்கட்டும் அழகிய தோற்றமும் கொண்டிருந்தார். எனவே போத்திபாரின் மனைவி யோசேப்பின் மீது கண் வைத்தாள். நல்ல உறவைச் சீரழிக்க முயன்றாள். ஆனால் யோசேப்பு தன் தலைவனுக்கு உண்மையுள்ளவராக இருக்க விரும்பினார். எனவே குற்றம் சாட்டப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

உண்மையுள்ள மனிதர் நலன்கள் பல பெறுவார் என நீமொ 28:20 கூறுவது போல, ஆண்டவர் யோசேப்புடன் இருந்து அவர் மீது பேரன்பு காட்டி, அவர் செய்த யாவற்றிலும் வெற்றி அளித்தார். நாமும் பொருளுள்ள வாழ்வு வாழ உறவில் உண்மையாயிருப்போம்.

### *2. உணர்த்துகையில் உயிரடைந்திரு* :

“தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார். ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோஅவர்களைக் கண்டிக்கிறார்” (எபி 12:6).

இந்த உலகம் நாம் தங்கிச் செல்லுகிற இடமே தவிர வேறல்ல. உலகில் வாழும் போது எதுவும் நமக்குச் சொந்தமும் அல்ல. எனவே நம் சொல், செயல், சிந்தனை தெளிவாய் இருக்க வேண்டும். ஒருவேளை தெளிவில்லை என்றால், உணர்த்தும் போது உயிரடைய வேண்டும். பன்முறை கண்டிக்கப்பட்டும் ஒருவர் பிடிவாதமுள்ளவராகவே இருந்தால், அவர் ஒரு நாள் திடீரென அழிவார் என நீமொ 29:1 கூறுகிறது.

தாவீது அரசர் உரியாவின் மனைவியிடம் பாவம் செய்தார். ஆனால் பாவம் செய்த உணர்வு கொஞ்சமும் அவரிடம் இல்லை. ஒரு நாள், நாத்தான் இறைவாக்கினர் அவரிடம் வந்து பாவத்தை உணர்த்தினார். ஏன் நீ ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்து அவர்தம் பார்வையில் தீயது செய்தாய் என்று கேட்டார். உடனே உயிரடைந்தார், உணர்வு பெற்றார். நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டேன் என்றார் தாவீது (2சாமு 12:13).

எண்ணங்கள் அணிந்திருக்கும் ஆடைகள் தான் வார்த்தைகள். வார்த்தைகள் வெறும் ஆடை மட்டுமல்ல, மானம் காக்கும் மேலாடைகள். எனவே சொல், செயல், சிந்தனை கண்ணியமாய் அமைவது அவசியம். இளையோர் பொருளுள்ள வாழ்வு வாழ உணர்த்துகையில் உயிரடைந்திருப்போம்.

### *3. உத்தமத்தில் உறுதியாயிரு* :

நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, “இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” என்று அவரைக் குறித்துக் கூறினார் (யோவா 1:47).

நத்தனியேல் இயேசுவின் சீடர்களில் ஒருவர். யோவான் நற்செய்தி நூலில் இவரது பெயர் நத்தனியேல் என்றும், மற்ற நற்செய்தி நூற்களில் பர்த்தலமேயு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிலிப்பு இவரை இயேசுவினண்டை அழைத்து வந்தார். உத்தமமான வாழ்வு வாழ்ந்த நத்தனியேலைக் கண்ட அருள்நாதர் இயேசு “கபடற்ற உத்தம இஸ்ரயேலர்” என்றார்.

உத்தமமாய் நடப்பவர்களைத்தான் இந்த உலகம் நியாயத்தில் வைத்திருக்கும். சுத்தமான என்ஜின் சக்தியைக் கொண்டிருக்கும். அதுபோல உத்தமமான வாழ்வு இறைசக்தியைப் பெற்றுக் கொள்ள உதவும். யோபு 1:1 இல் இறைவன் யோபுவைப் பார்த்து அவர் மாசற்றவரும் நேர்மையானவருமாய் இருந்தார். கடவுளுக்கு அஞ்சித் தீயதை விலக்கி வந்தார் என்று கூறுகிறார். திபா 37:18 இல் சான்றோரின் வாழ்நாள்களை ஆண்டவர் அறிவார்; அவர்கள் உரிமைச் சொத்து என்றும் நிலைத்திருக்கும் என தாவீதும் சொல்லுகிறார். யோசேப்பும் உத்தமத்தில் உறுதியாயிருந்ததால் உயர்வு பெற்றார். இளையோரும் பொருளுள்ள வாழ்வு வாழ உத்தமமாய் நடப்பது அவசியம்.

இளைஞன் ஒருவன் பசியால் ஒரு நாடகக் கொட்டகையில் நின்று கொண்டிருந்தான். அங்கே நாடகம் பார்க்க வந்த செல்வந்தர் ஒருவர், தன் குதிரை வண்டியிலிருந்து இறங்கினார். அந்த இளைஞனைப் பார்த்து என் குதிரையைக் கவனித்துக்கொள். உனக்குப் பணம் தருகிறேன் என்றார். அந்த இளைஞனுக்கு மிகுந்த சந்தோஷம். அந்தச் செல்வந்தர் திரும்பி வந்த போது அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவருடைய குதிரை வண்டியைச் சுத்தம் செய்து வைத்திருந்த படியால் அது ஜொலித்தது. அந்தச் செல்வந்தர் நிறைய பணம் கொடுத்தார். இளைஞன் அப்பணத்தைக் கொண்டு அங்கு ஒரு குதிரைக்காப்பு இடமும், அதற்கு வேலையாட்களையும் வைத்தான். சமயம் கிடைக்கும் போது நாடக அரங்கில் பல நாடகங்களையும் கண்டு மகிழ்ந்தான். அவர் தான் ஷேக்ஸ்பியர் ஆவார்.

வாழ்க்கை எனக்குச் சின்னஞ்சிறு தீபமன்று; அது அழகான தீப்பந்தம். அது அணைவதற்கு முன் பிரகாசமாக எரியச் செய்ய ஆசைப்படுகிறேன் என்றார் பெர்னாட்ஷா. இளமைப் பருவத்தில் பொருளுள்ள வாழ்வுத் தேடலில், உறவில் உண்மையும், உணர்த்துகையில் உயிரடைந்தும், உத்தமத்தில் உறுதியோடும் வாழ்வோம்.

அருள்திரு. S. **சுஜின் பிரிட்டோ**

24-10-2021

# வறுமைக்குக் கிறிஸ்தவ மறுமொழி

**CHRISTIAN RESPONSE TO POVERTY**

ஆமோ 8:4-7 யாக் 2:1-7
திபா 145 லூக் 16:19-31

**"வறியோரை நசுக்கி, நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழிக்கின்றவர்களே, இதைக் கேளுங்கள்"** (ஆமோ 8:4).

இறைவனின் படைப்பாம் இயற்கை வளங்கள் எல்லோர்க்கும் பொதுவாக இருந்து, மக்கள் தம் தேவைக்கேற்ப அவற்றைப் பயன்படுத்தி வந்தனர். இந்த நியதி காலப்போக்கில் மாறியது. 'பொருள் வேட்கை' எனும் உணர்வு மனிதரிடம் தோன்றி, 'தேவைக்கேற்ப' என்பது மாறி, 'திறனுக்கேற்ப' எனும் புதிய முறை உருவாகிற்று. இதன் காரணமாக 'வறுமை' மனித இனத்திற்குள் தொடங்கியது. இன்று உலகின் பெரும்பகுதி மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். 'கந்தையானாலும் கசக்கிக் கட்டுவது சரி - ஆனால் கசக்கும்போது எதைக் கட்டுவது?' என்பதே வறுமையிலிருப்போரின் அழுகுரல்.

வறுமை நிலையை உருவாக்குவதில் மனிதர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். உதாரணமாக, மூன்றாம் உலகநாடுகளிலிருந்து கனிமவளங்களை வல்லரசு நாடுகள் மலிவு விலையில் பெற்றுக் கொண்டு, அவற்றால் செய்த பொருட்களை, அதே நாடுகளுக்கு அதிக விலைக்கு விற்று லாபம் பெறுகின்றன. அதனால் சொந்த வளங்களையே அதிக விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. உலக வங்கிகளும், பன்னாட்டு நிதி நிறுவனங்களும், மூன்றாம் உலக நாடுகளுக்குக் கடனுதவி செய்கின்றன. அனால், தொழில்நுட்பங்களைச் சொல்லித்தர முன்வருவதில்லை. கடனுதவிகளைக் கொடுத்து மூன்றாம் உலக நாடுகளை வறுமையிலேயே வைத்துச் சுரண்டி வளருகின்றனர்.

'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றான் பாரதி. ஆனால் இந்தியாவில் இயற்கை வளங்கள் அதிகமிருந்தும் மக்கள் வறுமையில் வாடுகின்றனர். அநீதியான சமூக அமைப்புகளால் வறுமை, மக்கள் மீது 'திணிக்கப்பட்ட ஒரு கொடுமையாகவே' உள்ளது. கொரோனா பேரிடர் காலத்தில் விலையில்லா அரிசி மக்களின் பசியைப் போக்கினாலும், வறுமை நிலைமை மாற வழி காண்பிக்கப்படவில்லை. மனிதரின் பேராசையே தனிமனித வாழ்வின் வறுமை நிலைக்குக் காரணமாக இருந்தாலும், சமூகத்தில் நிலவும்

இச்சூழலுக்குக் கிறிஸ்தவத்தின் பதிலுரை என்ன? இன்றைய திருச்சபை வறியவரோடு ஒன்றுபட்டுச் செயல்படுகிறதா? என்ற கேள்விகள் நியாயமானவை. இவற்றிற்கு இங்கே பதில் பெற முயல்வோம்.

***1. வளங்களைப் பகிர்வோம்*** (Share Resources) : (ஆமோ 8:4-7)

ஏழைகளின் வழக்குரைஞராக அறியப்படுபவர் இறைவாக்கினர் ஆமோஸ். கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் சமய, சமூக நடைமுறைகளில் ஏழை, எளிய மக்கள் புறந்தள்ளப்பட்டு, மேன்மக்களின் கை ஓங்கியிருந்ததைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அந்நாட்களில் மக்கள் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி உறவினை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, அனைத்திலும் லாபநோக்கோடு, சந்தைமயமாக்கப்பட்ட நுகர்வுக் கலாச்சாரத்தில் மூழ்கியிருந்தனர். ஆதிக்கச் சக்திகொண்ட மக்கள், சமூகத்தில் ஏழைகளை அநியாயமாய் ஒடுக்கி, தங்கள் வளங்களைப் பெருக்கினார்கள். தங்களது அநியாயப் பொருள் சேர்ப்பிற்கு ஓய்வுநாளைக் கூட ஒரு சுமையாகக் கருதுமளவிற்குப் பேராசை மக்களிடையே பெருகியிருந்ததைக் காணலாம்.

இறைச் சட்டங்களைக் காற்றில் பறக்கவிட்டு, வளங்களைப் பகிராமல், எப்படிப் பதுக்கலாம்? எப்படி மோசடி செய்யலாம்? என்ற துர் எண்ணங்கள் ஆமோ 8:5-இல் சுட்டிக் காட்டப்படுகின்றன. இஸ்ரயேலரிடையே வாழ்ந்த ஏழைகள், வறுமையால் வாடுவோர்க்கு எந்தப் பயனும் வழங்கப்படவில்லை. இஸ்ரயேலரின் திருச்சட்டம் ஏழைகளைக் கரிசனையோடு நடத்தும்படி அறிவுறுத்தியும் அதற்குச் செவிகொடுக்காமல் தங்கள் சுயநல வேட்கையில் திளைத்திருந்தனர். வசனம் 6-இல் ஏழைகளை எளிதில் வாங்கத் திட்டமிட்டிருந்ததை ஆமோஸ் கண்டிப்பதன் வழியாக, வறியோரோடு வளங்கள் பகிரப்படாததைச் சுட்டிக் காட்டுகின்றார். இதே நிலைமை லூக் 16:19-31 வரையுள்ள பகுதியில் சொல்லப்பட்டுள்ள செல்வரும் இலாசரும் உவமையில் காணப்படுகிறது.

- ✵ செல்வர் ஏழ்மையாயிருந்த இலாசர் வாழ்வு பெற முயலவில்லை.
- ✵ நோயுற்றிருந்த இலாசருக்கு உதவி செய்யவில்லை.
- ✵ பசியாயிருந்த இலாசரின் பசியாற்றவில்லை.
- ✵ போக்கிடமற்று வாசலருகே கிடந்த இலாசரைக் கண்டுகொள்ளவேயில்லை.
- ✵ நாய்கள் பருக்களை நக்குமளவிற்கு நாறிப்போன நிலையைக் கண்டும் சிறிதும் சலனமின்றி வாழ்ந்து வந்தார்.

இப்படி வறுமையில் வாடுவோரின் நிலை கண்டும் கவலையின்றி வாழ்ந்து, வளங்கள் தேவையிலிருப்போர்க்குப் பகிரப்படாததால், வறுமை

வளர்ந்து, வறியோர் பெருகினர். இந்நிகழ்வின் வழியாக, மக்கள் பேராசை கொண்டு, பதுக்கி வைக்கும் பண்புடையவராகவும், சுயநலச்சிந்தையுடனும் காணப்பட்டதைத் திருமறை கண்டிக்கிறது. கிறிஸ்தவர்கள் வறியவரோடு வளங்களைப் பகிர வேண்டும் எனும் படிப்பினை இங்கே கற்பிக்கப்படுகிறது.

கிறிஸ்தவ அருட்பணிச் சேவைகள் வளங்களைப் பகிரும் நோக்கத்தோடு பாதிக்கப்பட்ட மக்களை மையமாகக் கொண்டே தொடங்கப்பட்டவை. பெரும்பான்மைச் சமூகத்தாலும், சமயத்தாலும் ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்க்கையை மாற்றுருவாக்கும் பணிகளில் கிறிஸ்தவப் பண்புகள் வெளிப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, திருச்சபைகள் வழியாக அருள்தொண்டர்கள் தொடங்கிய கல்விநிறுவனங்கள், மருத்துவமனைகள், அருட்பணிமையங்கள், தொழிற்பயிற்சி மையங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். கிறிஸ்தவத் திருச்சபையின், ஏழைகளுக்கு ஆதரவாகத் திகழ்ந்த இத்தகைய நிறுவனங்கள் இன்றும் அச்சேவைகளைத் தொடர வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயம். இதுவே தேவையிலிருக்கும் சமூகத்தின் மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்குமான வழியாக அமையும். ஆகவே, வளங்களைப் பகிர்ந்து வறுமை நிலை மாறப் பாடுபடுவோம்.

***2. எளிமையாய் வாழ்வோம்*** (Live Simple Life) : (லூக் 16:19-31)

வறுமையில் வாடிய இலாசருக்கு எதிர்மறையாக, செல்வர் ஆடம்பரமாக வாழ்ந்து, விலையுயர்ந்த ஆடை அணிந்து, நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார் என்று வ. 19இல் காண்கிறோம். தினமும் சுகபோகமான வாழ்வில் திளைத்த மனிதரால், வறியோர் புறக்கணிக்கப்பட்டு, அடுத்திருக்கும் ஏழையின் ஒருவேளை பசியாற்றக் கூட முடியாத மனநிலையில் காணப்பட்டார். வ. 25-இல் -மரணித்த பின்பு இலாசர் ஆபிரகாமின் மடியில் ஆறுதல் பெறுவதையும், செல்வர் மிகுந்த வேதனைப்படுவதையும் பார்க்கும் போது, வாழும் காலத்தில் எளிமையான வாழ்வு வாழ வேண்டும், ஏழைகளுக்கு உதவ வேண்டும், எளியோரை ஏற்றுக் கொண்டு வளங்களைப் பகிர வேண்டும் என்ற ஆலோசனையும், பகிராவிட்டால் நிலைவாழ்வில்லை என்ற எச்சரிப்பையும் பெற்றுக் கொள்கிறோம்.

இதே உண்மையைத் திருத்தூதர் யாக்கோபுவும் (யாக் 2:1-7) எடுத்துரைக்கிறார். ஆள்பார்த்துச் செயல்பட்டு, ஏழைகளை வெறுப்போரையும் அவமதிப்போரையும் எச்சரிக்கிறார். அவர் காலத்திலிருந்த கிறிஸ்தவச் சமூகம், வறியோரை வெறுத்து, செல்வரைச் சிறப்பிடத்தில் வைத்ததைக் கண்டிக்கிறார். செல்வர்களைவிட எளியோரே

சிறந்தவர்கள் என்றும், அவர்கள் கடவுள் நம்பிக்கையில் செல்வராகவும், இறையரசின் பங்காளர்களாகவும் உள்ளனர் என்றும், தங்களைப் போன்று பிறரையும் நேசிக்கும் பண்புடையோர் என்றும் அறிவுறுத்துகிறார்.

கடவுளைவிடவும் தங்களையும், உடைமைகளையும், செல்வத்தையும், பதவிகளையும் நேசிப்போர் எளிமையாய் வாழ்வதைக் கடினமானதாகவே பார்க்கின்றனர். கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரையும் சமமானவர்களாய்ப் பார்க்க வேண்டும் என்பதைத் திருமறை வலியுறுத்துகின்றது. எல்லாமிருந்தும் எளிமையாய் வாழ்வோராலேயே இது இயலும். கிறிஸ்தவர்கள் எளிமையாய் வாழ வேண்டும் எனும் பாடத்தினை இங்கே கற்றுக் கொள்கிறோம்.

இன்று ஆடம்பர வாழ்வு அனைவரது விருப்பமாகி விட்டது. ஒருவர் ஒரு நேரம் ஆடம்பர உணவுக்குச் செலவிடும் பணத்தால் வறியவர் ஒருவர், ஒரு வாரம் வரை திருப்தியாகச் சாப்பிடலாம். இது எல்லாவகை செலவினங்களுக்கும் பொருந்தும். ஆகவே, திருச்சபைகளில் உள்ள வறியோரை, சக திருச்சபை மக்களே பொறுப்பெடுத்து உதவி செய்ய வேண்டியது இன்றைய தேவையாகும். வறியோருக்கு அனுதாபங்களும், அழுகையும் மட்டும் போதாது. மேலாக, சிறு சிறு உதவிகள், தேவை அறிந்து செய்யப்பட வேண்டும். இல்லையேல் வறியோர் மேலும் ஒடுக்கப்படுவார்கள். குறைந்த வருமானங்களைக் கொண்ட மக்களின் அருங்கொடைகளைக் கொண்டு, அத்தியாவசியமற்ற ஆடம்பரச் செயல்களைத் தவிர்த்து, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி எளிமையாய் வாழ்ந்து, எளியோரை வாழ்வித்து வறியோரோடு ஒன்றுபட்டு நிற்போம். எளிமையாய் வாழ்ந்து வறுமை நிலை மாற ஒத்துழைப்போம்.

“வறியோரை நசுக்கி நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழிக்கின்றவர்கள்” (ஆமோஸ் 8:4) அனைவரும் மனம் மாறி மத்தேயு 25:35 முதல் சொல்லப்பட்டுள்ள வாசகங்களில், கிறிஸ்து விரும்பும் வாழ்க்கையைத் தினமும் கடைப்பிடித்து வறியோரை நேசித்து, வளங்களைப் பகிர்ந்து, எளிமையாய் வாழ்ந்து, இம்மண்ணில் நிறைவாழ்வையும், பின் நிலைவாழ்வையும் பெற அர்ப்பணிப்போம்.

அருள்திரு. J. **யாபேஸ்**

31-10-2021



# சீர்திருத்தப்பெற்ற சீர்திருந்தும் திருச்சபை

## CHURCH : REFORMED AND REFORMING

இச 26:4-11 திப 2:42-47
திபா 109:21-31 மத் 13:33-35

**"அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்"** (திப 2:42).

திருச்சபை என்பது ஓர் ஆன்மிக இயக்கம். போலித்தன்மைகள் வளர்ச்சிப் பாதைகளில் குறுக்கீடு செய்யாமல் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். திருச்சபையின் உறுதிநிலை நிறைவடைய மாசற்ற பக்தியுடனிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பேராயர் சாலமன் துரைசாமி அவர்கள், சீர்திருத்தும் திருச்சபையாக சமூகத்தில் சேவையைத் தொடங்குவதற்கு "திருச்சபை தன்னை அறுவைச் சிகிட்சைக்கு உட்படுத்த வேண்டும்" என்றார். பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்து வழிபாட்டுக்காகப் பக்தியின் சமூகமாய் ஒன்று கூடிய இடங்களில் மாற்றங்களுக்கான புரட்சிகளும், சீர்திருத்தப் போராட்டங்களும் இடம் பெற்றிருந்தன. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் சமய, சமூகச் சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இயேசு கிறிஸ்து புரட்சிக்கும், புதுமைக்கும், சீர்திருத்தத்திற்கும் இடமுண்டு என்பதை வலியுறுத்தினார். அடிமைத்தனம், மூடப் பழக்கவழக்கங்கள், கலலச்சாரச் சீர்கேடுகள், சமத்துவமின்மை, அதிகார அத்துமீறல்கள் சமூகத்தில் கரைபுரண்டோடிக் கிடந்த காலங்களில் தம்முடைய அர்த்தமிகு போதனைகள் வழியாக சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். சீர்திருத்தம் என்பது காலங் காலமாக நடைபெற்றுக் கொண்டு வரும் ஒன்று என்பதையும் நமது சிந்தையில் கொண்டிருக்க வேண்டும்.

திருச்சபை வரலாற்றில் பல காலக் கட்டங்களில் புதுமையான சிந்தனைகள் சொல்லப்பட்டாலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் (31-10-1517) ஜெர்மன் நாட்டிலுள்ள விட்டன் பர்க் ஆலயத்தில் மார்ட்டின் லூதர் அவர்கள் திருச்சபைச் சீர்திருத்தத்திற்கான அடித்தளம் அமைத்துத் தந்தார். இந்த ஆலயத்தின் முன்வாசலில் 95 நியமங்களை மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்து சீர்திருத்தப் புரட்சியை உருவாக்கினார்.

திருச்சபை என்பது விசுவாச வாழ்விற்கான கட்டமைப்புப் பெற்று விண்ணவரின் விருப்பங்களை நிறைவேற்றும் தூய பக்தி நிறைந்த இடம்.

ஆனால் பல நிலைகளில் அதன் உண்மைத் தன்மை உடைக்கப்பட்டு, பாசிச எண்ணமும், பாவத்திற்கான தீயச் சிந்தையும் ஊற்றப்பட்டு, அதன் நோக்கம் சிதைக்கப்பட்டு வந்ததை வரலாறு தெளிவுபடுத்துகிறது. சீர்திருத்தம் பெற்றுக் கொண்டு சீர்திருத்தும் திருச்சபையாகப் பயணிக்க வேண்டியதின் அவசியத்தைத் தொடக்கக் காலத் திருச்சபைச் செயல்பாடுகளின் அடிப்படையில் தியானிக்கலாம்.

தொடக்கக் கால திருத்தூதர்த் திருச்சபை பாடுகளின் வெளிப்பாடுகளினூடே உருவான திருச்சபை. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு தூய பேதுரு, தூய யோவான் போன்ற திருத்தூதர்களின் சாட்சியிலும், போதனையிலும், துணிச்சலான அணுகுமுறை அனுபவங்களால் உருவாக்கப்பட்டது. இந்தத் திருச்சபையில் ஏற்பட்ட புரட்சிகரமான வாழ்வியல் மாற்றங்கள், சீர்திருத்தத்தின் மாதிரிகளாக மக்களின் பார்வைக்குப்பட்டன. ஆகவே இந்த மாற்றங்களைப் பார்த்தவர்கள் சமூக அளவில் சீர்திருத்தம் பெற்று சீர்திருத்தும் உறுதித் தன்மையின் மாதிரிகளாக வெளிப்பட்டனர்.

***1. கற்பிப்பதில் உறுதி*** (Affirm in Teaching) :

திருத்தூதர்கள் இயேசு கிறிஸ்துவில் கண்டு, கேட்டு அனுபவமாக்கிய அத்தனை போதனைகளையும் விளக்கமாக மக்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். நம்பிக்கையில் உறுதியடைந்தவர்கள் நாள்தோறும் சபையில் தங்களை இணைத்துக் கொண்டனர். சீர்திருத்தம் என்பது இடத்தை மாற்றிக் கொள்வதும், நிறம் மாறுவதும் அல்ல. ஆனால் சீர்திருத்தம் என்பது ஒரு திருத்தூதுவர்த் திருச்சபையாகச் செயல்படுவதாகும். (Reformed community is known to be a true apostolic community)

உயிர்த்தெழுந்த இயேசு திரும்ப வருவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பதும், அதற்காகத் தங்களை ஆயத்தமாக வைத்துக் கொள்வதும் சீர்திருத்தத்தின் அடிப்படை உண்மையாகப் பார்க்கப்படுகிறது. கற்பிதங்களில் கலப்படம், காயப்படுத்துதல் இவைகளுக்கு இடம் தராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். பிரிவினைச் சக்திகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்படாமல் வார்த்தைகளின் உண்மை மற்றும் உறுதித் தன்மைக்கு இடமளிக்க வேண்டும். பவுலடியார் பிரிவினையை உருவாக்கும் பகட்டுக் கற்பிதங்கள் மிகவும் ஆபத்தானவை என்பதைத் திருச்சபை விசுவாசிகளுக்குக் கடிதங்களை எழுதி, உண்மையான திருத்தூதுவர் கற்பிதங்களில் உறுதிப்பட ஆலோசனை சொல்லுகிறார். அப்பல்லோ, பவுல், பேதுரு என்ற வேறுபாடுகளை விட்டு விடும்படியாக மக்களிடம் கேட்டுக்

கொள்கிறார். வரங்களை வைத்து விளையாடும் புரட்டுப் பக்திக்குப் புத்திமதி சொல்லி அதற்கு அடிமைப்பட்டு உறுதித் தன்மையை விட்டு, தூரம் போகவேண்டாம் என்பதை வலியுறுத்துகிறார். கற்பிதங்களில் உறுதி என்பதை சீர்திருத்தும் திருச்சபையின் அடையாளமாக தற்காலத் திருச்சபை எடுத்துக் கொண்டு பயணம் செய்ய வேண்டும். சீர்திருத்தத்திற்குரிய கற்பிதத்தின் முக்கியத்துவம் குறைந்து 'எழுப்புதல்' போதனை திருச்சபைகளில் புகுந்து உண்மையான திருத்தூதுவர் கற்பிதங்களிலிருந்து மக்களைத் தூரப்படுத்தி, செயல்படுதலின் வேகத்தைக் குறைத்து, பிரிவினைச் சக்திகளுக்கு இடமளித்துள்ளது. சீர்திருத்தம் பெற்ற திருச்சபையின் நோக்கம் என்பது திருத்தூதுவர் கற்பிதங்களில் உறுதியுடன் பயணம் செய்யும் திருச்சபையாக, சீர்திருத்தும் பணியின் பங்காளிகளாய் முன்னேறிச் செல்ல அழைக்கப்படுகிறோம்.

***2. நட்புறவில் உறுதி*** (Affirm in Companionship) :

சீர்திருத்தும் மற்றும் சீர்திருந்தும் திருச்சபையின் உறுதியான அடுத்தகட்ட செயல், நட்புறவு மற்றும் அப்பம் பிடுதல். இந்த இரண்டும் இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் வெளிப்பட்ட அடையாளங்கள். நட்பு என்பது கபடற்றதாகவும், ஐக்கியத்தை வலிமைப்படுத்தும் ஒன்றாகவும் அமைதல் வேண்டும். திருச்சபை என்பது தங்களின் சுயவிருப்பங்களை நிறைவேற்றும் இடமாக பார்க்காமல், நட்பு பாராட்டி, அப்பம் பிடுதலில் வேறுபாடு காட்டாமல் அனைவரையும் சமமாகப் பார்த்து, பகிர்தலின் அவசியத்தில் உறுதி வெளிப்பட வேண்டும் என்பதற்காக திருத்தூதுவர்த் திருச்சபை மாதிரியாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே தொடக்கத் திருச்சபை உறவு மற்றும் உடைமைப் பரிமாற்றத்தில் வலிமையுடன் செயல்பட்டது.

சமத்துவச் சிந்தனை, இல்லார் இல்லை என்பதற்கான செயல்பாடு, காயம் ஏற்படாத நட்பு இவைகள் சீர்திருந்திய சபையின் அடையாளங்கள். இத்தகைய செயல்பாடுகளில் உறுதியாய்ப் பயணம் செய்யும் திருச்சபைகள் சீர்திருத்தும் திருச்சபைகளாகச் சமூகத்தில் அறியப்படும். ஏற்றத்தாழ்வு இல்லாமல் நட்புறவோடு ஒரே உணவை ஓர் இடத்தில் அமர்ந்து உண்டு மகிழ்ந்து வாழ்வதில் உறுதி வேண்டும். இயேசு நாதர் இத்தகைய உறவைச் சீடர்களுடன் பகிர்ந்து (இவர்களின் தொழில், இடம், கலாச்சாரம், கல்வி.... இவைகளைப் பார்க்காமல்) நட்பை வெளிப்படுத்தி, அப்பத்தைப் பாரபட்சமில்லாமல் பகிர்ந்து கொடுத்தார். இந்த நட்பிலிருந்து, அப்பம் பிட்டுப் பகிர்தலிலிருந்து திருச்சபை தவறியபோது மார்ட்டின் லூதர் உறுதித் தன்மையுடன் சீர்திருத்தம் திருச்சபைக்கு அவசியம் என்பதை உணர்ந்து

மாற்றங்களை அனுமதிக்க வேண்டும் என்ற புரட்சியை ஏற்படுத்தி சீர்திருத்தத்தைத் திருச்சபைக்குள் கொண்டு வந்தார். போலி நட்பு, ஐக்கியமில்லா அப்பம் பிடுதல் தற்காலத் திருச்சபைகளில் அதிகரித்து விட்டதோ என்ற ஐயம் எழுகிறது. இப்படிப்பட்ட போலிச் செயல்பாடுகளை அனுமதிக்கும் திருச்சபை சீர்திருத்தத் திருச்சபையாகவோ, சீர்திருந்தும் திருச்சபையாகவோ, அறியப்பட வாய்ப்புகள் தரப்படவில்லை. கொரோனா நுண்கிருமியின் காலம் திருச்சபை நட்புறவுடன் அப்பம் பிட்டு, பகிர்தலில் துரிதம் காட்ட வேண்டும். அதுவே சீர்திருத்தத் திருச்சபையின் அடையாளம்.

***3. இறைவேண்டலில் உறுதி*** (Affirm in Prayer) :

சீர்திருத்தத் திருச்சபையின் உயிர்த்துடிப்பாய் இருப்பது இறைவேண்டலாகும். தனிமையாக ஜெபிப்பது, கூட்டமாக ஜெபிப்பது, எப்படி? எதற்காக? எப்போது ஜெபிக்க வேண்டும்? என்பது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜெபம் கேட்கப்படும், கடவுள் பிரதிபலன் தருவார் என்ற உறுதியுடன் சீர்திருத்தும் திருச்சபை, சீர்திருத்தத்திற்கான இறைவேண்டலை வியாபாரமாக்கிப் பணம் சேர்க்கும் கருவியாகப் பயன்படுத்தி சீர்திருத்ததிற்கான நோக்கத்திலிருந்து பாதை மாறிப் பயணிக்கிறது. திருத்தூதுவர்த் திருச்சபையார் இறைவேண்டலில் உறுதியுடன் செயல்பட்ட காரணத்தால் அற்புதங்கள், அடையாளங்கள், பொதுவுடமைச் சிந்தனை, பாகுபாடில்லாமல் இல்லங்களில் அப்பம் பிடுதல் (திப 2:43-47), இத்தகைய மாற்றங்களை அல்லது சீர்திருத்தங்களைப் பார்த்தவர்கள் பயந்தார்கள்.

உறுதியான இறைவேண்டல் சீர்திருத்தத்தின் அடையாளம் மட்டுமன்றி சீர்படுத்தும் திருச்சபைகளின் அடிப்படை அவசியம். ஜெபிக்கிறவர்கள் தங்களைக் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகக் காத்துக் கொள்ள வேண்டும். பதில்கள் காலதாமதமாகலாம் (Delayed not denied). ஆனால் கணக்கில் கொள்ளப்பட்டு மறுக்கப்படாமல் பதில் கிடைக்கும். இயேசு கிறிஸ்துவும் சிலுவைப் பாடுகளுக்கு முன்னதாக ஜெபிப்பதற்காகக் கெத்சமனித் தோட்டத்திற்குச் சென்று சீடர்களுக்கு எப்படி ஜெபிக்க வேண்டும்? என்று கற்றுக் கொடுத்தார், அவரும் ஜெபித்தார். ஜெபத்திற்கான பதிலை உயிர்த்தெழுதலில் தான் பார்க்க முடிகிறது. இறைவேண்டலில் சீர்திருத்தம் பெற்ற திருச்சபை உறுதியுடன் இருக்க வேண்டும். நாம் நமக்காக ஜெபிக்க வேண்டிய இடம் என்பதாக எடுத்துக் கொண்டு, நமக்காக அறிமுகமில்லாதவர் ஜெபித்து நன்மைகளைக் கொண்டு வருவார் என்ற போலித் தன்மைகளை உடைத்து சீர்திருத்த விசுவாசிகளாய்

மாற்றத்திற்காக ஜெபிக்கும் ஜெபவீரர்களாய் இறைவேண்டலில் உறுதியுடன் வளர்ச்சியடைதல் வேண்டும். ஜெபத்தை ஆயுதமாய்ப் பயன்படுத்தி சீர்திருத்தச் சிந்தனைகளைப் புரட்டிப் போடும் தற்கால "எழுப்புதல்" மற்றும் செழுமை ஆன்மிகத்திற்கு இடம் தந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சீர்திருத்தம் மற்றும் சீர்திருத்தப் பார்வை கொண்ட திருச்சபை, திப 2:42-இல் சொல்லப்பட்டிருக்கும் திருத்தூதுவர்த் திருச்சபையின் உறுதித் தன்மைகளிலிருந்து பாதை விலகாமல் கற்பிப்பதில், நட்புறவில், அப்பம் பிடுதல் மற்றும் இறைவேண்டல்களிலும் உறுதியாகத் தரித்திருக்க வேண்டும். இத்தகைய உறுதிப்பாடு சபைக்குள்ளாக மக்களைக் கூட்டிச் சேர்த்து (திப 4:4) சபைக்குள் காணப்பட்ட கலப்படம் நிறைந்த கொள்கைகளை அடித்துப் போட்டு (திப 5:1-11) சபையிலிருந்து நற்செய்திக்கான வாசல் திறக்கப்பட்டது (திப 5:14). புளித்த மாவுக்கான ஒப்புமை என்பது (மத் 13:33-35) விசுவாசத்திற்கான அடையாளம். பெருக்கம் அடைதல், இலகுவாதல், சுவையாக்குதல், கெட்டுப் போகாமல் பயன்படும் விதத்தில் இறையரசின் தகவுகளாக அமைகிறது. எதிர்பார்ப்புகளைத் தாண்டி இஸ்ரயேல் மக்கள் விழாக்களைக் கொண்டாடும் போது (இச 26:5-9) பற்றுறுதி அறிக்கையை உறுதி செய்தனர். சீர்திருத்தும் மற்றும் சீர்திருந்தும் திருச்சபையார் பயிற்றுவிக்கப்படுவதிலும், உறவுடன் வாழ்வதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் உலகவாழ்வில் செயல்பட வேண்டியவர்கள். தற்காலத் திருச்சபைகள் இறைமகிமையில் நிறைந்து, இதயங்களை மகிழச் செய்து, இறைத்தகவுகளை வெளிப்படுத்த உதவி செய்யட்டும். சீர்திருத்தத்தின் உண்மைகளில் உறுதியடைந்து, சீர்திருத்தும் பணிகளில் பங்காளர்களாய்ப் பயணம் செய்வோம்.

அருள்திரு. முனைவர். **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

07-11-2021



# திருச்சபையில் சிறார்

## CHILDREN IN THE CHURCH

விப 2:1-10 | 3யோவா 1-15
திபா 47 | லூக் 18:15-17

... **"இந்தக் குழந்தையை நீ எடுத்துச் செல்; எனக்குப் பதிலாக நீ பாலூட்டி அதனை வளர்த்திடு, உனக்குக் கூலி கொடுப்பேன்...."** (விப 2:9).

குழந்தைச் செல்வங்கள் இல்லங்களில் இறைவன் அருளும் அருள்கொடை எனத் திருமறை விளம்புகிறது (திபா 127:4). குழந்தைகள் இறையரசுக்குரியோர் என ஆண்டவர் இயேசு கிறிஸ்து போதித்தார் (லூக் 18:16). குழந்தைகள் இயல்பாகவே இறைவனுக்குரிய குணநலன்களைத் தம்மகத்தே கொண்டவர்கள். எனவே தான், "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" எனக் குறிப்பிடுவர். இறையரசுக்குரியோராகிய இக்குழந்தைகளில் இருக்கும் இறைத்தன்மைகள் ஒளிரவும், அவைகளில் அவர்கள் வளரவும் அவர்கள் ஆலயத்தில் வளர்க்கப்பட வேண்டும். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆலயத்தோடு இணைந்து வளர்ந்தார் என்பது திருமறை நமக்கு விடுக்கும் செய்தியாகும் (லூக் 2:41,42). திருமறைப்பகுதிகள் சார்ந்து சிறாரின் சிறப்புகள் குறித்துத் தியானிப்போம்.

### ***1. வளர்க்கப்பட வேண்டியவர்கள்*** : (விப 7:2-9)

எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரயேலரின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள இயலாத எகிப்திய அரசன் பார்வோன் இஸ்ரயேலரில் பிறக்கும் ஆண்குழந்தைகளை எகிப்தின் நைல் நதியிலே போட்டுவிட வேண்டும் எனக் கட்டளையிட்டார் (விப 1:22). இச்சூழலில் லேவிக் குடும்பத்தில் குழந்தை மோசே பிறந்தான். எகிப்திய அரசன் பார்வோனின் மகள் அக்குழந்தையை அதன் தாயிடம் தந்து "எனக்குப் பதிலாக இந்தக் குழந்தையை நீ வளர்த்திடு" என்கிறாள். குழந்தைகள் கொல்லப்பட வேண்டியவர்கள் அல்லர்; அவர்கள் வளர்த்தப்பட் வேண்டியவர்கள் என்ற உண்மை இங்கே புலப்படுகிறது. தன் தந்தை குழந்தைகள் கொல்லப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைச் செயல்படுத்திய வேளை, அவரது மகள் அதற்கு முரணாக, குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டியவர்கள் என்பதை உணர்த்துகிறார். ஆபிரகாம் தமது ஒரே மகனைப் பலியிடத் துணிந்த வேளை ஆண்டவரின் தூதர், "பையன் மேல் கை வைக்காதே" எனத்

தடுத்து, அவன் வளர்த்தப்பட வேண்டியவன் என்ற உண்மையை உணர்த்துகிறார் (தொநூ 22:11). பெற்ற தந்தையாயினும் கொல்வதற்குரிய உரிமை இல்லை என்ற உண்மை இங்கே புலப்படுகிறது. அதே வேளை அவர்களை எப்படியும் வளர்த்திட முடியாது. அவர்களை இறையறிவில், ஆண்டவர் விரும்புகின்ற நிலையில் வளர்க்க வேண்டும். அதனைத்தான் பார்வோன் அரசரின் மகள், நீ இந்தப் பிள்ளையை எனக்குப் பதிலாக வளர்த்திடு என்பதிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடியும். ஆண்டவர் இறையாசியாக (திபா 127:4) நமது கரங்களில் தந்திருக்கும் குழந்தைகளையும் ஆண்டவர் விரும்புவது போன்று வளர்த்தெடுக்க வேண்டும். எனவே தான் இறையறிவை இல்லத்தில் ஊட்டி ஆலய நிழலில் வளர்ந்திட நம் பிள்ளைகளை அர்ப்பணிக்க வேண்டும்.

***2. இடறலுக்கு உட்படுத்தப்படக்கூடாதோர்*** : (லூக் 18:16)

குழந்தைகள் இயேசுவிடம் அழைத்து வரப்பட்டபோது சீடர்கள் அவர்களைத் தடுத்தனர். ஆனால் இயேசு கோபமாக அவர்களைக் கடிந்து கொண்டு சிறுபிள்ளைகள் என்னிடம் வருவதற்கு இடம் கொடுங்கள். அவர்களைத் தடை செய்யாதிருங்கள் என்று எச்சரித்தார். அதுமட்டுமல்ல, பிள்ளைகள் இயேசுவண்டை சேராமல் தடைசெய்கின்ற அல்லது வழி இடறச் செய்வோரின் கழுத்தில் இயந்திரக்கல் கட்டப்பட்டு கடலின் ஆழத்தில் தள்ளப்படுவர் என எச்சரிக்கிறார் (மத் 18:6). கடலின் ஆழத்தில் தள்ளப்படும் நபர் வரலாற்றையே இழந்து போவார் என்பது தான் உண்மை. இத்தனை கொடுமையான தண்டனையை இயேசு பிள்ளைகளின் பற்றுறுதி வாழ்வுக்குக் களங்கம் ஏற்படுத்துவோரைக் குறித்துக் குறிப்பிட்டுள்ளார். ஓய்வுநாள் பள்ளியும் பிள்ளைகளைப் பற்றுறுதியில் வளர்க்க வேண்டும். அதேவேளை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் உள்ளிட்டோர் நல்ல முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். கேட்டுக் கற்றுக் கொள்வதைவிட இன்று பிள்ளைகள் அதிகம் பார்த்தே கற்றுக் கொள்கிறார்கள். எனவே பிள்ளைகள் மிகுந்த கவனத்துடன் பற்றுறுதிப் பாதையில் வளர்க்கப்பட வேண்டும். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பன்னிரு வயது நிரம்பிய சிறுவராய் எருசலேம் திருக்கோவிலில் பற்றுறுதியில் தடுமாறிக் கொண்டிருந்த போதகர்களிடம் கேள்விகள் கேட்டு தெளிவு அருளினார்.

***3. முன்மாதிரியானோர்*** : (லூக் 18:16ஆ)

பிள்ளைகளைத் தடுத்தோரிடம் இயேசு கூறிய வார்த்தை இறையரசு அல்லது இறையாட்சி குழந்தைகளுக்கே உரியது என்பதாகும். ஆகவே குழந்தைகள் போல் மாறுவோர் மட்டுமே இறையாட்சிக்குட்பட முடியும் என்கிறார். அப்படியானால் இறையாட்சிக்குச்

சொந்தக்காரர்களாகிய குழந்தைகள் அந்நிலையிலேயே வளர, வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். இயேசு கிறிஸ்து தவறாது ஆலயத்தில் சென்று தாம் கற்றுக் கொண்ட இறை உண்மைகளுக்கு முரண்பாடான செயல்களைத் திருக்கோவிலில் கண்டு கொதித்தெழுகின்றார். ஒருமுறை இயேசுவின் சீடர்கள் இயேசுவை அணுகி, ‘விண்ணுலகில் மிகப் பெரியவர் யார்?’ என வினவினர். அவ்வேளை இயேசு ஒரு சிறு பிள்ளையை அழைத்து அப்பிள்ளையை அவர்கள் நடுவில் நிறுத்தி இப்பிள்ளையைப் போல் ஆகாவிட்டால் விண்ணரசில் நுழைய முடியாது என உறுதிபட தெரிவித்தார். ஆகவே இறையரசின் பங்காளிகளான இப்பிள்ளைகள் ஆலயத்தில் வளர வேண்டும். ஓய்வு நாள் பள்ளியில் நமது பிள்ளைகள் கற்றுக் கொள்ளத் தூண்டப்பட வேண்டும். சாமுவேல் எனும் சிறுவன் ஆலயத்தில் வளர்ந்து மேன்மை பெற்றார் (1சாமு 3:1). இயேசு கிறிஸ்துவும் சிறுவராக ஆலயம் சென்று போதகர்களுக்கே முன்மாதிரியானார் (லூக் 2:46,47). நம் பிள்ளைகளும் ஆலயத்தில் வளரவும், இறை அறிவில் வளர்க்கப்படவும் முயலுவோமாக.

அருள்திரு. A. **பிரைட் சாலோமன்**

14-11-2021

ஒன்றிப்பு ஞாயிறு

# விளக்குத் தண்டுகளின் மீதுள்ள விளக்கு

**LIGHT ON THE LAMP STANDS**

செக் 4:1-14 1கொரி 3:10-15
திபா 27 மத் 5:14-16

**“நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்...”** (மத் 5:14).

வட இந்தியத் திருச்சபை, தென்னிந்தியத் திருச்சபை, மார்த்தோமா ஆகிய திருச்சபைகள் ஒன்றிணைந்து திருச்சபைகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும், சான்று பகரவும், சேவையாற்றவும் 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ஆம் நாள் ஒரு கூட்டுமன்றத்தை ஏற்படுத்தினர். அக்கூட்டு மன்றம் ‘Communion of Churches in India (CCI) என அழைக்கப்படுகிறது. திருச்சபைகளில் இந்தக் கூட்டுறவை நினைவுபடுத்தி நவம்பர் மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை ஒன்றிப்பு ஞாயிறாக ஆசரிக்கிறோம்.

‘நானே உலகின் ஒளி’ (யோவான் 9:5) எனக் கூறிய இயேசு கிறிஸ்து, பாவ இருளினால் அழிவுக்குரியவர்களாக இருந்த மானுடத்தை மீட்டு ஒளிபெற்றவர்களாய் மாற்றுகின்றார் (யோவா 1:4,9). விளக்குத் தண்டின் மேல் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு சுற்றிலுமுள்ள இருளை அகற்றி, அப்பகுதியினை வெளிச்சமாக்குகிறது. கிறிஸ்தவ வாழ்வு நற்செயல்களால் ஒளிவீசுகிறதாகவும், எல்லோரையும் கிறிஸ்துவுடன் ஒன்றிணைக்கச் செயல்படுவதாகவும் அமைய வேண்டும். இந்தச் சிந்தனைகளின் அடிப்படையில் தியானத்தை அமைத்துக் கொள்வோம்.

### *1. ஒருங்கிணைக்கும் கடவுளின் ஆற்றல்* :

பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய மக்கள் தங்கள் வலுவின்மையையும், ஒருங்கிணைக்கப்படாத நிலையையும் எண்ணி வருந்தினர்; ஆலயம் கட்டப்படுவதற்கான தங்கள் ஆசை எவ்வாறு நிறைவேறும்? என ஏங்கினர். அச்சூழ்நிலையில் கடவுள் பிரதான ஆசாரியர் யோசுவாவையும், யூதாவின் ஆளுநர் செருபாபேலையும் ஆலயக் கட்டுமானப் பணியில் முன்னிறுத்துகிறார்.

ஆலயக் கட்டுமானத்துக்கு எதிராக இருந்த தடைகள் அனைத்தையும் கடவுள் அகற்றி ஒழுங்குபடுத்துவார் என்ற நம்பிக்கையின் வாக்குறுதி செருபாபேலுக்கு வழங்கப்பட்டது. உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல எனது ஆவியாலே ஆகும் (செக் 4:6) என்ற கடவுளின் செய்தி, பலமிழந்தோரைப் பலமுள்ளவராக மாற்றி அனைவரையும் ஒருங்கிணைக்கும் இறைச்செயலை வெளிப்படுத்தியது.

சிறையிருப்பில் சிதறிக் கிடந்த மக்களை கடவுளின் ஆற்றலால் ஒருங்கிணைக்கும் பாலமாகத் திருக்கோவில் உருப்பெற்றது. இறைஇல்லங்கள் இறைமக்களை ஒருங்கிணைக்கும் உயரிய இடமாக இயங்கவே கடவுள் எதிர்பார்க்கிறார்.

விளக்கைப் பிரகாசமாக எரியச் செய்யும் ஒலிவ எண்ணெய் இரு குழாய்கள் வழியாக ஏழு அகல்களுக்கும் பாய்கிறது. அதனால் விளக்கு அணைந்து விடாமல் தொடர்ச்சியாக எரிந்து ஒளி வீசுகிறது. கடவுள் தம் ஆவியின் அருளைத் தமது பணிவிடைக்காரர்களாகிய யோசுவா, செருபாபேல் வழியாக மக்களுக்கு அனுப்புகின்றார். ஆகவே, செருபாபேலுக்கு முன் பர்வதங்கள் உடைந்து சமபூமியாக மாறும் என்றும், தலையாய கல்லை அவர் கொண்டு வருவார் என்றும் கூறப்படுகிறது (செக் 4:7). இந்தத் தலையாய கல் கட்டுமான வேலை நிறைவின் அடையாளமாக இரு சுவர்களின் மூலைகளை ஒன்றிணைக்கும் கல்லாக அமைகிறது. இந்தச் செருபாபேல், மானிடர் அனைவரையும் தம் மீட்பின் செயலால் ஒருங்கிணைக்கும் இயேசு கிறிஸ்துவின் வழிமரபினர் வரிசையில் வருகின்றார் (லூக் 3:27). கடவுளின் கரத்தில் அவரது பணிக்காக நம்மை ஒப்படைக்கும் போது, இறையருளால் நம்மை ஆற்றல்படுத்துகிறார், ஒருங்கிணைத்து தமது திருத்திட்டம் நிறைவேறப் பயன்படுத்துகிறார்; விளக்குத் தண்டின் மீது அமைக்கப்பட்ட விளக்குகளாக ஒளிவீசச் செய்கிறார்.

## *2. ஒழுங்கமைக்கும் கடவுளின் செயல் :*

“நாங்கள் கடவுளின் உடன் உழைப்பாளர்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம்” (1கொரி 3:9அ).

கற்களும், முட்களும் நிறைந்த நிலம் விவசாயத்துக்கு ஏற்றதல்ல. அவற்றை அகற்றிவிட்டு நிலத்தை நன்றாக உழுது பண்படுத்த வேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட அந்நிலத்தில் விதைக்கப்படும் விதைகள் நன்றாக முளைத்து, செழிப்பாக வளர்ந்து நல்ல பயனைத்தரும். நமது உள்ளங்களைப் பயன்தரும் தோட்டமாகப் பண்படுத்துபவர் கடவுளே; ஏனெனில் அவரே படைத்தவர். நான் பவுலைச் சார்ந்துள்ளேன், நான் அப்பொல்லோவைச் சார்ந்துள்ளேன் எனக் கூறுவோர் மனிதப்போக்கில் நடந்து பிரிவினைக்கு வித்திடுவோர் ஆவர். விதைப்பவரும், நடுகிறவரும், நீர்பாய்ச்சுகிறவரும் கடவுளின் பணியாளர்களாய் இருக்கலாம்; விளையச் செய்யும் கடவுளே சிறப்புக்குரியவர் (1கொரி 3:3-8). ஏனெனில் அவரே பண்படுத்துதலையும், விதைப்பையும் நீர் பாய்ச்சுதலையும் ஒருங்கிணைக்கிறார். கடவுளின் செயல்பாட்டுக்கு இடமளிக்காத மானிட முயற்சிகளும்,செயல்களும் விளைச்சல் என்னும் பயனை எட்டவியலாது; அது பிரிவினைகளுக்கும், வீழ்ச்சிக்கும் நடத்துவதாக அமையும். தூய பவுலார் கடவுள் தமக்கு வழங்கிய அருளினால் கிறிஸ்துவாகிய அடித்தளத்தைத் தாம் சென்ற

இடங்களில் மககள் தங்கள் வாழ்க்கையில் அமைத்துக் கொள்ள உதவி செய்தார். மேலும், தொடர்ச்சியான விசுவாச வாழ்க்கைக் கட்டுமானத்தை அவரவர் மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்துகிறார் (1கொரி 3:9-12). அமைக்கப்பட்ட அடித்தளம் கடந்தகால பாவங்களால் கடவுளுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த பகைமையை விலக்கி நல்லுறவை ஏற்படுத்துவதாகவும், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் மரணம் வாழ்வின் முடிவல்ல என்னும் நிலைவாழ்வின் நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.

இந்த அடித்தளம் வேறெந்தத் தீமைகளாலும் பாதிப்படையாதபடி பாதுகாத்து, தகுந்த பொருட்களால் தொடர் கட்டுமானத்தைச் செய்ய வேண்டும். அவை அன்பு, மன்னிப்பு, பகிர்வு, நீதி, நீடிய பொறுமை என்னும் கிறிஸ்துவின் தன்மைகளை வெளிப்படுத்துவதாய் அமைய வேண்டும். இந்தக் கட்டுமானம் கிறிஸ்துவுடன் நம்மை ஒன்றிணைப்பதாகவும், பிறரும் இந்த ஒருமைப்பாட்டில் இணைய வழி ஏற்படுத்துவதாகவும் அமையும்.

### *3. ஒளிவிளங்கும் நற்பண்புகள்* :

"இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க!" (மத் 5:16).

விளக்கின் பயன்பாடு அதன் ஒளியை வெளிப்படுத்தும் தன்மையைப் பொறுத்தே அமையும். ஒளிராத விளக்கும், ஒளிர்ந்தும் மூடப்பட்ட விளக்கும் பயனற்றவைகளாகும். ஒளி இருளை அகற்றி, நாம் தடுமாற்றமில்லாமல் செயல்படத் துணைபுரிகிறது. வீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளக்குகள், வழிகாட்டியாய்ச் செயல்படுகிறது (எ.கா. கலங்கரை விளக்கம்). ஒளி, எச்சரிக்கையையும், தகவலையும் வழங்குவதாய்ச் செயல்படுகிறது. (எ.கா. போக்குவரத்து சைகை விளக்குகள்).

'நானே உலகின் ஒளி' என மொழிந்த கிறிஸ்துவின் தன்மைகளைப் பிரதிபலிக்கிறவர்களாக நாம் வாழ வேண்டும். விளக்குத் தாங்கியின் (தண்டின்) மீதுள்ள விளக்கு சுற்றிலும் இருப்பவர்களுக்கு ஒளி கொடுப்பது போல், கிறிஸ்துவின் மக்கள் நற்பண்புகள் வழியாக வெளிப்படுத்தும் நற்செயல்கள் பிறரைக் கிறிஸ்துவுடன் ஒருங்கிணைக்கும்.

அனைத்து மனிதர்களையும் ஒளிரவைக்கும் உண்மையான ஒளியாக இயேசு உலகில் வந்தார் (யோவான் 1:9). ஒளி தனக்காக செயல்படாமல் பிறருக்காகச் செயல்படுகிறது. அதுபோல விசுவாசிகளாகிய நாம் பிறர்நலன் பேணி அவர்களை ஒளிர்விக்கும் விளக்குகளாய் வாழ வேண்டும். ஒளிரும் விளக்கு மூடப்பட்டால், அதனால் எவருக்கும் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே, நமது நற்செயல்களாகிய வெளிச்சம் பரவிச் செல்ல இடையூறு ஏற்படுத்தும் தீமைகளைக் கண்டறிந்து, அவைகளைக் களைந்து விளக்குத்தண்டின் மீதுள்ள விளக்குகளாய் பிரகாசிப்போம்.

நகரின் பிரபலமான, செல்வந்தர்கள் மட்டுமே உணவருந்தும் உணவகம் அது. ஒரு நாள் பெரியவர் ஒருவர் தனது மகளுடன் அங்கு உணவருந்த வந்தார். உணவு பரிமாறியவர் என்ன வேண்டும்? என்று கேட்க, 'ஒரு தோசை மட்டும்' என்றார் பெரியவர். உங்களுக்கு... என இழுக்க, என் மகள் +2 தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்றிருக்கிறாள். ஏற்கனவே அவளிடம் கூறியிருந்தபடி முதலிடம் பெற்றதால் உங்கள் உணவகத்தில் சிற்றுண்டி வாங்கிக் கொடுக்க அழைத்து வந்திருக்கிறேன்; ஒரு தோசைக்குரிய பணம் தான் என்னிடம் இருக்கிறது என்றார். முதலாளியிடம் சென்று, பரிமாறியவர் தந்தையையும், மகளையும் காண்பித்து, அந்தப் பிள்ளை +2 தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்றிருக்கிறாள். ஆகவே அவளுக்குத் தோசை வாங்கிக் கொடுக்கிறார், அவளது தகப்பனாருக்கு எனது பணத்தில் தோசை வழங்குகிறேன், எனது இந்த மாதச் சம்பளத்தில் பிடித்தம் செய்யுங்கள் என்றார். உடனே முதலாளி நானே அவர்களுக்கு உணவு வழங்குகிறேன் எனக் கூறி தந்தைக்கும், மகளுக்கும் இலவசமாக உணவு பரிமாறவும், அம்மாவுக்கு உணவுப் பொட்டலம் கொடுத்தனுப்பவும் ஏற்பாடு செய்தார். அங்கிருந்த அனைவருக்கும் உணவு இலவசம் என அறிவித்தார். அவளது தொடர் கல்விக்காகப் பண உதவியும் வழங்கி அனுப்பி வைத்தார். வருடங்கள் வேகமாகக் கடந்தன. ஒரு நாள் அந்த உணவகத்துக்கு, அம்மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள கலெக்டர் உணவு சாப்பிட வருவதாகத் தகவல். கலெக்டர் வந்திறங்கினார், நேராகச் சென்று முதலாளியின் காலிலும், பரிமாறுபவர் காலிலும் விழுந்து வணங்கினார். அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். கலெக்டர் தொடர்ந்தார். இது என் பெற்றோர். என்னையும், அப்பாவையும் நீங்கள் மறந்திருக்கலாம். சில வருடங்களுக்கு முன் உங்கள் உணவகத்தில் உணவு சாப்பிட வந்தோம். அப்பொழுது நான் +2 தேர்ச்சி பெற்றிருந்தேன். சொல்லி முடிப்பதற்குள் சுதாரித்துக் கொண்ட முதலாளிக்கும், பரிமாறுபவருக்கும் பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது. அன்று நீங்கள் காட்டிய அன்பும் செய்த உதவியும் என்னை உற்சாகப்படுத்தியது. எளியவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது. முழு முயற்சியுடன் படித்து கலெக்டராகியுள்ளேன்; இன்று இங்கிருக்கும் அனைவருக்கும் நான் உணவளிக்கிறேன் என்று கலெக்டர் கூறினார்.

விளக்குத் தண்டின் மீதுள்ள விளக்காய் நாம் ஒளிவீசும் போது பிறர் ஒளி பெறுவர். அவ்வொளி அவர்களுக்குள் செயல்பட்டு, தொடர்ந்து மற்றவர்களை ஒளிபெறச் செய்து கொண்டேயிருக்கும்.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

21-11-2021



# பெண் குழந்தையைப் பாதுகாத்தல்

## PROTECTING THE GIRL CHILD

யோபு 42:10-17 திப 16:16-18
திபா 45:8-14 மத் 15:21-28

**“அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்”** (மத் 15:28)

கடவுளின் பார்வையில் குழந்தைகள் அனைவரும் சமமானவர்களே. ஆண் குழந்தை, பெண் குழந்தை என வேறுபாடு பார்ப்பது இச்சமூகமே. அதிலும் பெண் குழந்தைகளைப் பாதுகாத்தல் என்ற தலைப்பினைப் படித்த மாத்திரத்திலே, பெண் குழந்தைகளுக்கு ஏதோ பாதுகாப்பற்ற நிலை உள்ளது என்ற செய்தியினை அறிவிப்பது போன்று உள்ளது. நடைமுறையில் இது உண்மை தான் என ஏற்றுக் கொள்ளும் வகையில் பல்வேறு துயர, வேதனையான சம்பவங்கள் அவ்வப்போது நிறைவேறும் அவல நிலைகளை அறிகின்றோம்.

பொதுவாக, திருமறை சார்ந்து ஆண், பெண் வேறுபாடு இல்லை என்று திருச்சபை பேசினாலும், பெண்கள் என்று கூறும்போது இரண்டாம் நிலையில் கருதும் நிலைமை இல்லாமல் இல்லை. ஏனெனில் இந்த வேறுபாடு கலாச்சாரம், சமூகம், சமய வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக உள்ளது. எனினும் திருச்சபை, சமூகத்தில் உள்ள அனைத்து மக்கள் மீதும் கரிசனை கொள்ள வேண்டும் என்ற நல் எண்ணத்தினை மனதிற்கொண்டு நமது பங்களிப்பினை கடவுளின் வார்த்தையின் துணையோடு இணைந்து சிந்திப்போம்.

### *1. குடும்ப வாழ்வில் பெண் குழந்தைகள் :*

குடும்பம் ஓர் கதம்பம். அதில் அனைத்துத் தரப்பினரும் அடங்கியுள்ளனர். ஆனால் குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை என்று பார்க்கும் போது அவரது வாழ்வு, வளரும் நாள்கள், குடும்பம் கட்டப்படுவதற்கு அடிப்படையாக உள்ளது. குடும்பம் எனும் அமைப்பில் பெண் குழந்தைகளின் பங்களிப்பு மிகப் போற்றுதற்குரியது. ஆனால் பெண் குழந்தைகளைக் குடும்பத்தின் பாரமாகக் கருதும் போங்கு முற்றிலும் தவறானது. இதிலிருந்து நாம் விடுதலை எண்ணம் உடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டுள்ளோம். கிறிஸ்தவக் குடும்பங்களில் கடவுளால் அருளப்படும் பெண் குழந்தைகளை எடைபோடும் நிலை வருத்தத்திற்குரியது. ஏனெனில் பெண் குழந்தைகள் என்றவுடன் அதிக செலவான பாரமானவைகளாக எண்ணும் போங்கு உள்ளது.

எனினும் கடவுளின் நோக்கம் பெண் குழந்தைகளின் வழி வெளிப்பட்ட பல நல்ல எடுத்துக்காட்டுகளை நாம் நினைவிற்கொள்வோம். தொநூ 24:45,46 ஆகிய வசனங்களில் ரெபேக்கா பெரியவளாக இருந்தபோது அவர் செய்ய வேண்டியவை சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சிறுபிள்ளையாய் இருந்தபோது பிறரை உபசரித்தல், கடின உழைப்பு, பெருந்தன்மை, சுயநலமின்மை ஆகிய பண்புகள் அவரை இஸ்ரயேல் சந்ததிக்குத் தாயாக உயர்வடையச் செய்தது. விப 2:7-8 வரையுள்ள பகுதியில், மிரியாமைப் பற்றிய குறிப்பு உள்ளது. அதில் அவரது பாசம், பரிதவிப்பு, பராமரிப்பு மற்றும் பணிவிடை செய்யும் பண்பு அவரிடம் இருந்த படியால் தனது உடன் பிறந்த சகோதரர் இஸ்ரயேல் மக்களின் தலைவராக உயர்வடையக் காரணமாயிருந்தார்.

ஒருவர் ஒரே நாளில் நல்லவராகவோ, கெட்டவராகவோ மாறுவதில்லை. குடும்பத்தின் நல்ல பழக்கவழக்கங்கள், கிறிஸ்தவ நம்பிக்கைகள் இவைகளால் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பெற்றோர் குழந்தைகளுக்குப் பொருள் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதால் பாதுகாப்பு கிடைத்துவிடும் என்று கருதிவிட முடியாது. எனவே பெண்கள் குடும்பத்தில் ஆகாரத்தை மட்டுமல்ல, வாழ்வு தரும் உணவாகிய ஆண்டவரைக் கொடுக்க வேண்டும். உணவைச் சமைத்துக் கொடுக்கிறவராக மட்டுமல்ல, நம்மைப் படைத்தவரையும் தர வேண்டும். உலக மீட்பரை, உலகின் ஒளியை உலகத்திற்கு எடுத்துச் செல்ல, சொல்ல உதவிட வேண்டும். ஆண்டவருக்கு மாட்சியான காரியங்களைச் செய்ய ஊக்குவிக்க, உற்சாகப்படுத்த பொறுப்புடையவர்களாய் இருத்தல் அவசியமானது.

## *2. திருச்சபை வாழ்வில் பெண் குழந்தைகள்* :

திருச்சபை ஆண்டவரின் உடல். இதில் சிறிதும், பெரிதுமான அவயவங்களாக பெண்களின்ப் பங்களிப்பு மிகுதியாக உள்ளது. ஆனால் நிர்வாகம் சார்ந்த பொறுப்புகளில் பெண்களுக்கு அதிக அங்கத்துவம் அளிப்பதில்லை. எனினும் திருச்சபை அளவில் எந்தப் பொறுப்பினைக் கொடுத்தாலும் அவர்கள் செய்யத் திராணியுடையவர்களே.

திருச்சபையின் நாற்றங்காலான திருமறைப்பள்ளியில் பயிலும் பிள்ளைகள் திருமறை வார்த்தைகளை அறிந்து, அவர்களது வாழ்வு தூய்மையானதாக, நீதியுடையதாக, பற்றுறுதிமிக்க பிள்ளைகளாக வழி நடத்தக் கடமைப்பட்டுள்ளோம். திருமறைப்பள்ளி, போட்டிக்கும், பரிசுக்கும் உரிய ஓர் அமைப்பு அல்ல. அனுதின வாழ்வில் குடும்பம், சபை, சமூகம், இவைகளில் வரும் சவால்களைச் சந்திக்கும் ஆற்றல் உடையவர்களாக, கடவுளின் அரசையும் அவரது நீதியையும் தேடுகின்ற பிள்ளைகளாக உருவாக்க வேண்டும். பிலிப் 4:8-இல் உள்ளபடி உண்மை, ஒழுக்கம், நீதி,

கற்பு, அன்பு, நற்கீர்த்தி, புண்ணியம், புகழ் இவைகளையே சிந்திக்கவும் நாடவும் வெளிப்படுத்தவும் திருச்சபை வழி எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

எடுத்துக்காட்டாக, அந்நியச் சூழலில் வளர்க்கப்பட்ட பெண் குழந்தை நாமான் வீட்டிற்குச் சென்றபோது நற்காரியத்தினைச் செய்ய கருவியாய் அமைந்தாள் (2அர 5:1-3). திருச்சபையானது உப்பாக, ஒளியாகச் செயல்பட கடவுள் நம் கரங்களில் தந்துள்ள குழந்தைகளுக்கு வழிகாட்டக் கடமைப்பட்டுள்ளோம். திருச்சபை வாழ்வில் பெண் குழந்தைகளுக்கு எதிராக, கலாச்சாரம் என்ற போர்வையில் தவறுகளைச் செய்யாதபடி அவைகளைத் தாண்டிச் செயல்பட ஊக்குவிப்போம்.

### *3. சமூக வாழ்வில் பெண் குழந்தைகள் :*

சமூகம் பெண் குழந்தைகளை விளம்பரப் பொருளாகப் பார்க்கிறது. ஆனால் நல்லதொரு குடும்பம், திருச்சபை இவைகளின் வழி சமூகத்தில் வாழும் பெண் குழந்தை எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதனை பிலிப் 2:15-இல் "நெறிகெட்ட சீரழிந்த தலைமுறையினரிடையே குற்றமும் கபடுமற்றவர்களாய்க் கடவுளின் மாசற்ற குழந்தைகளாகத் திகழ" எதிர்பார்க்கப்படுகின்றனர். தற்காலச் சூழலில் சமூக வாழ்வு, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், ஆடம்பரம் மற்றும் இணயத்தள ஆபாசங்கள் இவைகளினால் பெண் குழந்தைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். எனினும் சமூகத்தின் தீய அலைகளால் அடித்துச் செல்லாதபடி கடவுளின் வார்த்தைக்கு அடங்கி நடக்கும் நல்லநடத்தைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. சொல், செயல், சிந்தனைகளில் தூய்மை, நடை உடை பாவனைகளில் தூய்மை மற்றும் ஆவி, ஆன்மா, உடல் இவைகளில் தூய்மையாய் இருக்க வேண்டும். பொய் பேசுவது, பரிகாசம் செய்வது, கோள் சொல்வது, கெட்ட வார்த்தைகள் பேசுவது இவைகளை அறவே தவிர்க்க வேண்டும்

சமூக வாழ்வில் பெண்கள் வழி, நலமான சந்ததி உருவாகும். அது தூயவரான கடவுளுக்கு மாட்சியாக அமையும். எனவே சமூகம் சீர்படுவதும், தாழ்வதும் ஒரே நாளில் அல்ல; படிப்படியாகச் சமூகம் வாழ்வுபெற பெண் குழந்தைகளின் வாழ்வு அடிப்படையானது என்று குடும்பமாக, திருச்சபையாக, சமூகமாகச் செயல்படுவோம். இதற்கு இன்றைய திருமறை ஆதார வசனமான கானானிய பெண்ணின் விசுவாச விண்ணப்பத்தின்படி நம்மைச் சூழ்ந்திருக்கும் பல ஆரோக்கியமற்ற நிலைமைகள் குணமாக ஆண்டவர் அருள் செய்வாராக!

பேரா. முனைவர் J. ***பெலிசியா செல்லையா***
(பேராயரம்மா & பேராயப் பெண்கள் சங்கத் தலைவி)

# திருவருகைக் காலம்
## ADVENT SEASON

திருவருகைக் காலம் இயேசுவின் வருகைக்கு நம்மைத் தகுந்த முறையில் தகுதிப்படுத்தும் காலம் ஆகும். திருவருகைக் காலத்தை "Advent" (அட்வெந்து) என்னும் ஆங்கிலச் சொல்லால் அழைப்பர் "Advent" என்ற சொல் "Adventus" என்ற இலத்தீன் மூலத்திலிருந்து வந்தது. இதற்கு "வருதல்" என்பது பொருள். அட்வெந்துஸ், எப்பிபானியா, நாடாலே ஆகிய சொற்கள் அனைத்தும் ஒரே பொருளையே தருகின்றன. இக்காலத்தில் திருச்சபை தம் பற்றாளர்களை இயேசுவின் இறுதி வருகைக்குப் பொறுப்புடன் ஆயத்தம் செய்ய வேண்டும். அதாவது கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழாவின் அடிப்படையில் இயேசுவின் முதல் வருகையை நினைவுகூருகின்ற அதே சமயம் உலக நிறைவில் இடம் பெறும் இரண்டாம் வருகைக்குப் பற்றாளர்களை ஆயத்தம் செய்ய வேண்டியதும் அவசியம்.

திருவருகைக் காலத்தை தொடக்கக் காலத்தில் "ஆகமன காலம்" என்று அழைப்பர். அதாவது இறைவரின் வருகைக்கு மனதை, ஆன்மாவை தகுதியுள்ளதாக்கும் காலம் என்பது இதன் பொருள். தொடக்கத்தில் அட்வெந்து என்பது விருந்தைக் குறிக்க எழுந்த சொல்லாக இருந்த போதிலும், நாளடைவில் இறைவருகை விழாவுக்கு முந்தைய நாள்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்படலாயிற்று.

மிகப்பழங்காலத்தில் காலிக்கன் பழக்கவழக்கத்தின்படி (Gallican custom) திருமுழுக்கு விருந்துக்கு முன் வருகிற மூன்று வாரங்கள் அட்வெந்து கொண்டாடப்பட்டது. பின்னர் இது நாற்பது நாளாகத் திருத்தி அமைக்கப்பட்டது. நாற்பது நாள்கள் போன்றே கிறிஸ்துப் பிறப்புக்கு ஆயத்தமாக அட்வெந்தும் 40 நாள்கள் கொண்டாடப்பட்டது.

கி.பி. 380 இல் நடந்த சரகோசா மாமன்றம் எப்பிபானிக்கு முன்பாக வரும் மூன்று வாரம் அட்வெந்து நோன்பு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என முடிவு செய்தது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தூர்ஸ் பேராயம் (Diocese of Tours) மூன்று வாரங்களுக்கு வாரத்திற்கு மூன்று நாள்கள் நோன்பு மேற்கொள்ள வேண்டும் என்று பணித்தது. இந்தப் பழக்கத்தை கி.பி. 581-இல் நடந்த மாகோன் மாநாடு பிரான்ஸ் நாட்டிலுள்ள எல்லாப் பேராயங்களிலும் நடைமுறைப்படுத்தியது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இப்பழக்கம் இங்கிலாந்திலும் பரவியது.

இன்றைய சூழலில், இயேசு கிறிஸ்து தினமும் நம்மிடையே வருகிறார் என்கிற நம்பிக்கையை வலுப்படுத்தும் ஆன்மிக அனுபவமாக இன்று திருச்சபைகளில் இது பொருள் வளர்ச்சி பெற்றுள்ளது. இயேசு வருகிறார் என்பதில் வரலாற்றின் நிறைவுக்கான தேடலும், வளர்ந்து வருகிற மீட்பு முழுநிறைவு பெறுகிறது என்கிற நம்பிக்கையும் மறைந்துள்ளது.

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

# நற்செய்தியைக் கொண்டாடுதல் (எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு)

## CELEBRATING THE GOOD NEWS (MEETING OF MARY WITH ELIZABETH)

விப 2:1-10 திப 9:10-18

திபா 117 லூக் 1:46-56

**"ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்"** (லூக் 1:49).

உலகில் இரண்டு செய்திகள் உலா வருகின்றன. அவை துர்ச்செய்தி, நற்செய்தி என்பனவாகும். துர்ச்செய்தி என்பது இழப்பு, எதிர்பார்த்தவை நிறைவேறாது அடையும் ஏமாற்றம், தோல்வி போன்றவையாகும். நற்செய்தி என்பது எதிர்பார்ததும் எதிர்பாராமலும் கிடைக்கப்பெறும் நல்ல செய்தியாகும்.

வெற்றி, பரிசு, வேலை, பிள்ளைச் செல்வம், திருமணம் போன்றவை நல்ல செய்தியாகும். நற்செய்தி நினைவு கூரப்படவும், கொண்டாடப்படவும் வேண்டும். லூக் 15:22-24-இல் குறிப்பிட்டுள்ள, என் மகன் காணாமற்போயிருந்தான், மீண்டும் கிடைத்துள்ளான் என்ற செய்தி தந்தைக்கு நற்செய்தியாக, மகிழ்வின் கொண்டாட்டமாக வெளிப்படுகிறது. எப்படித் தந்தையும், தனயனும் சந்தித்த நிகழ்வால் வீட்டில் மகிழ்வொலியும், களிப்போசையும் நிரம்பியது போன்று விழாக்காலங்களில் நமது இல்லங்களும் மகிழ்ச்சியினால் நிரம்ப வேண்டும். அப்படியெனில் நாம் நம்மை அதற்குத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமல்லவா? அதற்குரிய நற்செய்தியின் படிநிலைகள் என்ன? என்பதைத் தியானிப்போம்.

### *1. அழிவிலிருந்து தப்புவிக்கும் நற்செய்தி*: (விப 2:1-10)

மோசேயின் பிறப்பு சார்ந்த சூழல் விளக்கப்படுகிறது (விப 1:8) யோசேப்பை முன் பின் அறிந்திராத அரசர் எகிப்திலே வருகிறார். அவர் இஸ்ரயேலரின் அபரிமிதமான வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார். ஆகவே அவருக்குள் எழுந்த எரிச்சலால் இஸ்ரயேலரையெல்லாம் அழித்துவிடத் தீர்மானிக்கிறார். அந்த அடிப்படையிலே லேவிகுலத்தில் பிறந்த எபிரேயப் பிள்ளையாகிய மோசேக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இவருடைய குலம் லேவி. இந்தக்

குடும்பத்தில் பிறந்த பிள்ளைக்கு ஏற்படும் ஆபத்தில் ஆண்டவரின் திட்டமிடுதல் நமது அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய பிறப்பிலும் ஆண்டவருக்கொரு தீர்மானம் உண்டு. அந்தத் தீர்மானத்தை எந்த அதிகாரத்தாலும் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு முன் உதாரணமே மோசேயின் பிறப்பு. ஆண்பிள்ளை கொல்லப்படவேண்டும் என்பது பார்வோனின் கட்டளை. ஆனால் பார்வோனின் மகள் கூறுவது என்ன? இந்தப் பிள்ளை எனக்காக வளர்க்கப்பட வேண்டும். இது தான் கடவுளின் செயல். அழிக்கப்பட வேண்டிய குழந்தை ஆளுமைத் திறனோடு வளர்ந்தது. எந்த அரண்மனையிலிருந்து அழிக்கப்படவேண்டுமென்று கட்ளை பிறப்பிக்கப் பெற்றதோ, அந்த அரண்மனையில் ஆளுமைத் திறனோடு அத்தனை கலைகளையும் அறிந்துகொண்ட ஆற்றலோடு மோசே வளர்க்கப்பட்டது சிறப்பு. நற்செய்தி என்பது அழிவுக்குரிய நிலையிலிருந்து வியப்புக்குரியதாக மாற்றுவதுதான். நாமும் நம்மை குறைத்து மதிப்பிடாமல் கடவுளின் திட்டத்திற்கு ஒப்படைத்து நற்செய்திக்கு ஏற்ற சிறப்புக்குரிய பண்புகளோடு வாழ்வதுதான் ஏற்புடையதாகும்.

### *2. அறியா நிலையிலிருந்து அறியும் நிலைக்குக் கொணரும் நற்செய்தி* : (திப 9:10-18)

சவுலின் தமஸ்குச் சாலையின் சந்திப்பால் ஏற்படும் மாற்றத்தையே நாம் அறிகிறோம். அறியா நிலை என்பது ஆபத்தானது மட்டுமன்று, அழிவுக்குரியதுமாகும். இந்நிலைக்கு இழுத்துச் செல்வன எவை? (1யோவா 2:16) உலகத்திற்குரியவைகளான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வ செருக்கு மட்டுமன்று (1பேது. 1:5), பிசாசின் தந்திர வலை, இவைகளே மனிதரின் இயல்பான நிலையிலிருந்து விலக்கி விலங்கியல்புகளின் நிலைக்கு இழுத்துச் செல்கின்றன. சவுலின் கல்வி, செல்வம், உரோமைக் குடியுரிமை என்ற அங்கீகாரம் அவரை ஆணவ நிலைக்குள் தள்ளிவிட்டது. இதனால் அவரில் கொடூரமனமும் கொலை வெறித்தன்மையும், பிறரைப் பயமுறுத்தும் தீய குணமும் இணைந்து விட்டன (திப 9:1). ஆகவே தான், ஆண்களையும், பெண்களையும் இழுத்துச் செல்லும் ஆணவ அதிகாரம் பெற்றவராக நடந்து கொள்கிறார் (9:2).

இது சவுலின் அறியாமையை வெளிப்படுத்துகிற நிகழ்வு. ஆகவே உணர்ச்சிகளை அடக்கி ஆள வேண்டியவரோ, அதை விடுத்து உடலுக்குக் கேடுண்டாக்கிக் கொள்கிறார். இந்நிலையில் தான், இறைத் தொடுதலாய் தமஸ்குவில் ஏற்பட்ட நிகழ்வு அறியும் நிலைக்கு நேராகத் திருப்பியது.

பார்வையினை இழந்தார், பாதையில் தடுமாற்றம் அடைந்தார், பரிதாப நிலையில் தள்ளப்பட்டார். அவருக்குள் ஏற்பட்ட மாற்றமே அவரை அவர் அறிந்துகொள்ள காரணியாகிறது (9:18). அதைத் தொடர்ந்துள்ள இறைவாக்கில் அனனியா செயல்படும் விதங்கள், சவுலை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு அறிவுக்குரிய வழிகாட்டுதலாக அமைகின்றன. இறையாற்றலில் அனனியாவின் தொடுதலால் சவுலின் கண்களிலிருந்து மீன் செதிள்கள் கீழே விழுகின்றன. செதிள்கள் என்பது பயன்படாதவை (waste). அப்படியெனில் சவுலிடமிருந்த தேவையற்றவைகள் அவரை விட்டு அகற்றப்பட்ட போது அறியும் நிலையை ஏற்றுக்கொள்கிறார். அதுவே அவருக்கு நற்செய்தியாகிறது. மட்டுமன்று, அவரே நற்செய்தியை அறிவிக்கும் பாத்திரமாகப் பயன்படுத்தப்பட்டார் (திப 26:18). ஒருவருக்குள் ஏற்படும் அறியா நிலை, பிறரை அழிக்கும் எண்ணத்தை உருவாக்குகிறது. அது ஒரு ஆணவத்தின் நிலையே. இந்நிலை மாறி அறியும் நிலையாகிய இறையுறவின் தொடுதலில் ஒன்றிணையும் போது (9:2) தன்னில் ஒன்றுமில்லா வெறுமையை ஏற்றுக்கொள்ள முடிகிறது (கலா 3:20). பிறருக்கு அச்சமூட்டுகின்றவராக இருந்த பவுலார், ஆண்டவரின் கரத்தால் பயனுள்ள பாத்திரமாக மாற்றுருவாக்கத்துடன் பயன்பட்டது போல, நாமும் நம்மைச் சுய பரிசோதனை செய்வது ஏற்புடையது அல்லவா! அந்த நிலையே நமக்குள் நற்செய்தியின் கொண்டாட்டமாக அமைய வேண்டும்.

### ***3. அன்புறவின் சந்திப்பில் மலரும் நற்செய்தி*** : (லூக் 1:46-56)

மரியா, எலிசபெத்து சந்திப்பு ஆழமிகு உறவின் அடையாளமாகவும், அன்பின் அடையாளமாகவும் வெளிப்படுகிறது. இவர்கள் இருவரும் பெறுகின்ற இறைவாக்கு, இறைக்காட்சி தூய்மையின் சான்றாகவே அமைந்தது. இந்நிலையிலே சந்திப்பு தொடருகின்றது. எலிசபெத்து கருவுற்றுள்ளார் எனும் இறைவாக்குரையின் இந்தச் செய்தியால் புல்லரித்துப்போன மரியா, யூதேயா மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து செல்கிறார். யூதா மலைநாட்டிலுள்ள எபிரோன் என்னும் கிரியத்து அர்பாவைச் சுற்றியுள்ள மேய்ச்சல் நிலம் அவர்களுக்கு கிடைத்தது (யோசு 2:11) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆரோன் குடும்பத்துக்குரியது. இந்த எலிசபெத்து யாரெனில் ஆரோன் குலத்தைச் சார்ந்தவர் (லூக் 1:5). இப்போது எலிசபெத்து இருக்குமிடம் நாசரேத்திலிருந்து 130 கிலோ மீட்டர் அதாவது 81 மைல் தூரம் உள்ளது. இங்குப் பயணிக்கவேண்டுமெனில் 3 முதல் 5 நாள்கள் ஆகும். இந்நிலையில் தான் மரியா இறைவாக்கைக் கேட்டு, ஒப்படைத்த நிலையில் கடினமான சூழலிலும் எலிசபெத்தைப் பார்க்க விரைந்து செல்கிறார். இங்கு

மரியாவின் ஒப்படைப்பு சிறப்புக்குரியதாக அமைகிறது. அவ்வாறே எலிசபெத் வீட்டில் காலடி எடுத்து வைத்தவுடன் அவரை வாழ்த்தினார் எலிசபெத்தும் மரியாவுக்கு வாழ்த்து கூறுகின்றார் (லூக் 1:40-42). இருவரின் இந்தச் சந்திப்பில் வெளிப்பட்ட வாழ்த்துதல் உதட்டிலிருந்து வெளிப்பட்டதன்று; மாறாக உளம்நிறைந்து வெளிப்பட்ட வாழ்த்தாகும். இந்தச் சந்திப்பு சரித்திரமாகிறது, சாட்சியமாகிறது, சத்துவமாகிறது. வாழ்த்துக்களால் கருவிலிருக்கும் குழந்தைகளும் உணர்வுள்ளதாகின்றன. இது ஒரு உயிராற்றலின் உன்னத அனுபவமாகவும், உயிர் மூச்சாகவும் வெளிப்படுகிறது. இதை ஒரு தூய்மைப்படுத்தலின் அடையாளமாகவும் புரிந்துகொள்ளலாம். எப்படியெனில் சிம்சோன் (நீத 13:7) நசரேயர் என முன்குறிக்கப்பட்டவர், இறைவிருப்பத்தை, இறைத் திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக. ஆனால் அவரோ தவறிப் போகிறார். இந்தப் பின்புலத்தில், எலிசபெத்துவின் கருவில் வளரும் குழந்தையும் முன் குறிக்கப்பட்ட குழந்தை. அந்நிலையிலேயே எலிசபெத்தில் ஏற்படும் உணர்வுகளின் உன்னதம் பெண்களுக்குள் ஆசிபெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தை ஆசி பெற்றது என ஆவியின் நிறைவில் அறிக்கை செய்கிறார். என் ஆண்டவரின் தாயார் என்னிடத்தில் வந்திருப்பது எத்தனை பேருவகை தருகிறது என்கிறார். அவர்களின் வியப்பு இயேசுவின் பிறப்புக்கு முன்பே பெறும் சிறப்புக்குரிய மேன்மைத்துவ அங்கீகாரமாகிறது. அன்புறவின் சந்திப்பில் அகம்நிறைந்து வெளிப்படும் வாழ்த்துகள், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உள்ளத்துக்கு நிறைவையும் வழங்குகிறது.

முன் தூதரின் தாயாரான எலிசபெத்தும், உலக மீட்பரின் தாயாரான மரியாவும் ஒருவருக்கொருவர் வாழ்த்தும் வாழ்த்துகள் நமது விசுவாச வாழ்வுக்கு அணிகலனாக வழங்கப்பட்டுள்ள மணிமுடியே. இந்தப் பற்றுமையின் தடத்தினில், வாழ்வுச் சூழலில் அன்புறவின் அடையாளமாக மனிதத்தோடு வாழ்ந்து, கிறிஸ்து இயேசுவுக்குச் சான்றாளராகக் கனிகொடுப்போம். இறையரசின் தகவுகளில், இதய நிறைவுடன், இவ்வுலகில் ஒளிர்ந்து நற்செய்திக்குச் சான்றாகிடுவோம்.

அருள்திரு. **இரா. சாம் பிரின்ஸ்**

05-12-2021

**திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு & விவிலிய ஞாயிறு**

# இறைவாக்கு: தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே

## WORD OF GOD: INSPIRED TO INSPIRE

1அர 19:1-21 திவெ 10:1-11
திபா 119:33-40 லூக் 1:39-45

**"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்"** (லூக் 1:45).

கடவுளிடமிருந்து இறைமக்களுக்குச் சொல்லப்படுகின்ற செய்தியை இறைவாக்கு அல்லது கடவுளின் வார்த்தை (Word of God) என்கிறோம். இறைவாக்கு தரிசனத்தின் வழியாகவும், அடையாளங்கள் வாயிலாகவும் இறைவாக்கினர் அல்லது இறைத்தூதர்கள் மூலமாகவும் அறிவிக்கப்படுகிறது. இறைவாக்கினைக் குறித்து திருத்தூதரான பேதுரு குறிப்பிடும்போது "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள், கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்கு. அது ஒருபோதும் மனித விருப்பத்தால் உண்டானது அல்ல" (2பேதுரு 1:21) என்கிறார். "மழையானது இளம் பயிரின் மேல் பொழிவது போல என் உபதேசம் பொழியும். பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவதுபோல என் வசனம் இறங்கும்" (இச 32:2) என்று இறைவாக்கின் வல்லமையைக் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார். எபிரேயர் ஆக்கியோனும் இறைவார்த்தையின் மேன்மையையும் தகவையும் குறிப்பிட்டுள்ளார் (எபி 4:12).

உடலை உயிர் இயக்குவது போல நம்மைத் தூண்டி, இயங்க வைக்கும் சக்தி வாய்ந்த ஆற்றலாக இறைவாக்கு அமைகிறது. ஒளியானது கண்ணாடியில் ஊடுருவிச் செல்வது போல இறைவாக்கு நம் இதயத்தில் ஊடுருவிச் சென்று தூண்டிவிடுகிறது. மடிந்து போகின்ற மக்கள் மறுபடியும் வாழ நம்பிக்கை தருகிறது. பாதை தெரியாமல் தடுமாறும்போது வழிகாட்டுகிறது. பாவத்தில் விழுந்து கடவுளை விட்டு தூரம் போகும் போது கண்டித்து உணர்த்துகிறது. அறியாமை இருளில் அங்கலாய்த்து நிற்கும்போது ஞானமாய் வாழக் கற்றுக்கொடுக்கிறது. தோல்வியில் துவண்டு போய்த் துணிவை இழக்கும்போது துயரைத் துடைத்து ஆறுதலைத் தருகிறது.

அன்னை தெரசாவைக் கடவுளுக்காகப் பணிவிடை செய்ய தூண்டியதும் இறைவாக்கு தான். ஒருமுறை அன்னை தெரசா குஷ்வந்த் சிங் என்பவருக்குக் கொடுத்த பேட்டியில், தான் விவிலியத்தைத் தவிர வேறு எந்தப் புத்தகத்தையும் அதிகமாய் வாசிப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். கடவுளின் வார்த்தைதான் அவருடைய இருதயத்தைத் தூண்டி கடவுளுக்காகப் பணிவிடை செய்ய அதிகமாய்ப்

பயன்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. இருபுறமும் கருக்குள்ள பட்டயமாய், தேனிலும் மதுரமாய், வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அழியாத இறைவாக்கு நம்முடைய வாழ்வில் இறைவிருப்பம் நிறைவேற்ற நம்மைத் தூண்டுகிறது என்பதைத் திருமறை சார்ந்து தியானிப்போம்.

### *1. இறைவாக்கு: இன்னலில் துணிவு பெறத் தூண்டுகிறது:*

இறைவாக்கு இன்பத்தில் மகிழச் செய்யும் இனிமையானது மட்டுமல்ல; துன்பத்தில் துணிவு தந்து செயல்பட வைக்கும் ஆற்றல் கொண்டது. கடவுளின் வார்த்தையால் முழுமையாய் ஆட்கொள்ளப்பட்டவர்கள் யாரும் துன்பத்தில் துவண்டு போனது இல்லை. இறைவாக்கினால் தூண்டப்பட்டுத் துணிவுபெற்று மற்றவர்களையும் தூண்டுகிறவர்களாய் மாறுகிறார்கள். இன்னலில் (துன்பத்தில்) துணிவு பெறத் தூண்டுவது இறைவாக்கு. துணிந்தவனுக்குத் தோல்வி கூட வெற்றியின் படிக்கட்டு தான். ஆனால், பயந்தவனுக்குப் படிக்கட்டுகள் கூட தடைக் கற்களாக மாறிவிடும். துணிந்தவனுக்குக் கடலின் ஆழம் கூட ஒரு சாண் வயிறு தான். ஆனால் துணிவை இழந்தவனுக்கு மண்பானையின் ஆழம் கூட, கடலின் ஆழம் போலத் தோன்றும். துணிந்தவனுக்கு ஒரு நாள் மரணம். ஆனால் துணிவை இழந்தவனுக்கு நித்தம் நித்தம் மரணம்.

"யாவே என் கடவுள்" என்னும் பொருளை உடைய பெயருக்கு இலக்கணமாய், கடவுளில் ஆழமான நம்பிக்கை கொண்ட இறைவாக்கினர் எலியா. கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆகாப், அகசியா என்பவர்கள் வடநாடாகிய இஸ்ரயேலில் ஆண்டகாலத்தில் இறைவாக்கு உரைத்தவர். கிலேயாத்திலுள்ள திசுபே என்னும் ஊரைச் சார்ந்தவர் (1அர 17:1). இஸ்ரயேலில் இறைவாக்கு உரைத்த இரும்பு மனிதர் என்று போற்றப்படும் அளவிற்குத் துணிவோடு செயல்பட்டவர். இஸ்ரயேலை ஆட்சி செய்த ஆகாப், பாகாலைச் சேவித்து, பலிபீடத்தைக் கட்டி பலி செலுத்தியபோது நாட்டில் பஞ்சம் வரும் என்ற இறைவாக்கினை ஆகாப்பிடம் எச்சரித்துச் சொன்னவர் (1அர 17:1) கர்மேல் மலையில் ஆகாப் அரசனுக்கு முன்பாகச் சவால்விட்டு பாகால் இறைவாக்கினர்கள் 420 பேர் முன் தனிமனிதனாய் எதிர்க்கும் துணிவுடன் செயல்பட்டவர் (1அர 18:8-46).

அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல, பிரச்சனைகள் பல தொடர்ந்து வந்த போது, எலியா இவைாக்கினரும் ஒரு கட்டத்தில் தன்னுடைய துணிவை இழந்து போகின்றார். எலியா செய்த எல்லாவற்றையும், பாகால் தீர்க்கதரிசிகள் எல்லாரையும் கொன்று போட்ட செய்தியையும் ஆகாப் ஈசபேலிடத்தில் அறிவித்தபோது அவள் கோபம் கொண்டவளாக எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி அவரை எச்சரித்தாள். (1அர 19:2). இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட எலியா மரண பயத்தோடு தன் உயிரைக் காத்துக் கொள்வதற்காகப் பெயர்செபாவுக்குப் புறப்பட்டுப் போய் அங்கிருந்து வனாந்திரத்திலே ஒரு நாள் பிரயாணம் பண்ணி ஒரு

சூரைச் செடியின் கீழே உட்கார்ந்து, தான் சாக வேண்டும் என்று சொல்லி, "ஆண்டவரே நான் வாழ்ந்தது போதும். என் உயிரை எடுத்துக்கொள்ளும். நான் மூதாதையரை விட நல்லவன் அல்ல" (1அர 19:4) என்று சொல்லி சூரைச் செடியின் கீழே படுத்துக் கொண்ட போது அவரைத் துணிவு பெறத் தூண்டியது இறைவாக்கு மட்டும்தான்.

தூங்கிக் கொண்டிருந்த எலியாவைத் தட்டியெழுப்பிய தூதர் "எழுந்து சாப்பிடு" (1அர 19:5) என்று முதலில் சொன்ன போது சாப்பிட்டு விட்டு, மறுபடியும் படுத்துக் கொண்டார். இரண்டாம் முறை தட்டியெழுப்பி "எழுந்து சாப்பிடு. ஏனெனில், நீ நீண்ட பயணம் செய்ய வேண்டும்" (1அர 19:7) என்ற இறைவாக்கு கொடுக்கப்பட்ட போது, எழுந்து சாப்பிட்டு விட்டு 40 நாள் இரவு பகல் ஓரேபு என்னும் கடவுளுடைய மலையை அடைந்து, அங்கே ஒரு குகைக்குள் போய் தங்கினார். அங்கே கடவுளுடைய வார்த்தை அவருக்கு உண்டாகி "எலியா, நீ இங்கே என்ன செய்கிறாய்" என்று மறுபடியும் இறைவாக்கு அவரைத் தூண்டியபோது, துணிவு பெற்று தமஸ்கு வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய் ஆசகேலை சிரியாவின் அரசராகவும், யெகூவை இஸ்ரயேலின் அரசராகவும், சாப்பாத்தின் மகனாகிய எலிசாவை இறைவாக்கினராகவும் அபிஷேகம் பண்ணினார். இன்னலில் துணிவு இழந்த எலியாவைத் துணிவு பெறத் தூண்டிய இறைவாக்கு, நாம் துணிவை இழக்கும்போது, துணிவைத் தரும் ஆற்றல் கொண்டது.

## *2. இறைவாக்கு இணங்கி நடக்கத் தூண்டுகிறது:*

இறைவாக்கு என்னும் விதையானது இதயம் என்ற நிலத்தில் விதைக்கப்படும் போது, இறைவனுக்குப் பயந்து இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தூண்டுகின்றது (எசா 55:10,11). திருவெளிப்பாடு 10:1-11 வரை உள்ள வசனங்களில், பலமுள்ள தூதர் ஒருவர் வானத்திலிருந்து இறங்கி வருகிறதையும் அவர் கையில் திறக்கப்பட்ட புத்தகம் ஒன்று இருப்பதையும் யோவான் காண்கிறார். மேலும் தன் வலது பாதத்தைச் சமுத்திரத்திலும், தன் இடது பாதத்தைப் பூமியிலும் வைத்து, தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி இறைவாக்கு உரைத்தார் (வ 6,9). யோவான் அந்தப் புத்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கிப் புசித்த உடனே அவர் வாய்க்குத் தேனைப் போல மதுரமாய் இருந்தது. ஆனால் வயிற்றுக்குக் கசப்பாயிருந்தது. இறைவாக்கினைக் கேட்ட யோவான் அதற்கு இணங்கி நடந்தார் என்பதை இந்தப் பகுதி தெளிவாக வெளிப்படுத்துகிறது. இறைவாக்கால் தூண்டப்பட்டு உட்கொள்ளப்பட்ட சிறிய புத்தகத்தில், உள்வாங்கி சொல்ல வேண்டிய கடவுளின் வார்த்தையைக் கேட்கும்போது இனிமையாக இருந்தாலும் அதில் சொல்லப்பட்ட இறைவாக்கு நடைபெறப்போகும் அழிவைக் குறிப்பிடுவதால் கசப்பு நிறைந்த அனுபவமாக இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறார்.

Frank Morrison (1881-1950) என்பவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள மிகப்பெரிய வழக்கறிஞர். கிறிஸ்தவப் பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவப் போதனையின் வழியிலேயே வளர்க்கப்பட்டவர். ஆனால் அவர் தன் வாழ்வில் சட்டம் படித்து ஒரு பிரபலமான வழக்கறிஞராக மாறுகின்ற போது, இயேசு கிறிஸ்துவினுடைய இறப்பையும் உயிர்த்தெழுதலையும் குறித்து கேள்வி எழுப்பினார். சதுசேயர்களைப் போல உயிர்த்தெழுதல் இல்லை என்று நம்பியவர். ஆகவே இயேசு உயிர்த்தெழவில்லை. என்பதை நிரூபிப்பதற்காக "Who Moved the Stone?" (கல்லைப் புரட்டியது யார்?) என்ற புத்தகம் ஒன்றை எழுத ஆரம்பித்தார். தான் எழுத ஆரம்பித்த அந்தப் புத்தகத்திற்கு வலுவான ஆதாரங்கள் தேவை என்பதால் கடவுளின் வார்த்தைகள் நிறைந்த திருவிவிலியத்தைத் தெளிவாகப் படிக்க ஆரம்பித்தார். பல நாள்களாகத் திருமறையைப் படித்துப் புரிந்து கொள்ளும் போது, இறைவாக்கினால் தூண்டப்படுகின்றார். இயேசு உயிர்த்தெழவில்லை என்று நிரூபிப்பதற்காகப் புத்தகத்தை எழுதத் தொடங்கியவர், இறைவாக்கினால் தூண்டப்பட்டதன் நிமித்தமாக, கடைசியில் "Jesus died for me" (இயேசு எனக்காக மரித்தார்) என்று தன் புத்தகத்தை நிறைவு செய்தார். கடவுளின் வார்த்தையால் தூண்டப்பட்ட Frank Morrison இறைவாக்கிற்கு இணங்கி அநேகருக்குக் கிறிஸ்துவை மீட்பராகக் காண்பிக்கின்ற மனிதராக மாறினார். இறைவாக்கு ஒவ்வொருவரையும் இறைக் கட்டளைக்கு இணங்கி வாழத் தூண்டுவதாகவும், தூண்டப்பட்டவர்கள், மற்றவர்களையும் கடவுளின் வழியில் நடப்பதற்குத் தூண்டுவோராகவும் திகழ்வர் என்பதில் ஐயல்லை.

### *3. இறைவாக்கு இயேசுவைச் சுமக்கத் தூண்டியது* :

இயேசுவைக் கருவில் சுமக்க இறைவார்த்தையால் தூண்டப்பெற்றவர் மரியா. நிழல்களுக்கு நடுவில் நிஜங்களைத் தேடியவர். சிலரின் சுமைகளைச் சுமக்கும் உலகில் பலரின் பாவச் சுமைகளைச் சுமக்க வந்த இறைமகன் இயேசுவைச் சுமக்க இறைவாக்கினால் மரியா தூண்டப்பட்டார்.

பழைய ஏற்பாட்டில் தாவீதின் வம்சாவழியில் பிறக்கிறவர் "இறைமகன்" எனப்படுவார் (2சாமு 7:14) என்று சொல்லப்படுகிறது. இயேசு கிறிஸ்து மனிதராகப் பிறக்கும்போது, அவர் "தாவீதின் மகன்" என்று அழைக்கப்பட்டார் (மத் 1:20-21). நற்செய்தி நூல்களில் இயேசு கிறிஸ்துவை "இறைமகன்" என்று பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு திருமுழுக்குப் பெற்றபோது "இவர் என் அன்பார்ந்த மைந்தர்" என்ற சத்தம் விண்ணிலிருந்து உண்டாயிற்று (மாற்கு 1:11). தீய ஆவிகளும் இயேசுவைக் கண்டபோது "இறைமகன் நீரே என்று கத்தின" (மாற்கு 3:11). இயேசுவைக் கொன்றுவிட வகை தேடிய சமயத் தலைவர்களும் இயேசுவிடம், "கடவுளின் மகனாகிய மெசியா நீ தானோ" என்று கேட்ட போது "நான்

அவர்தான்'' என்ற இயேசு பதிலளித்தார் (மாற்கு 14:61-62). எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசு இவ்வுலகில் தோன்றும் முன்னே வானதூதர் மரியாவிடம் தரிசனமான போது இறைமகனைச் சுமக்க இறைவாக்கு உரைக்கப்பட்டதைப் பார்க்கின்றோம் (லூக் 1:31). கடவுளுடைய வார்த்தை மரியாவைத் தூண்டியபோது இறைமகனைச் சுமக்க தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை; உமது வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது'' என்று சொன்னார்.

பின்பு மரியா எலிசபெத்தைப் போய்ச் சந்தித்து வாழ்த்தினார். இந்த வாழ்த்துதலைக் கேட்டபோது எலிசபெத்தின் வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளியது. அப்பொழுது எலிசபெத் தூய ஆவியினால் நிரப்பப்பட்டு இறைவாக்கு உரைத்ததார் (லூக் 1:42-45).

சாது சுந்தர் சிங் (1889-1929) என்பவர் சீக்கிய மதத்திலிருந்து கடவுளின் வார்த்தையால் தூண்டப்பட்டு இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொண்டவர். தனக்காகச் சிலுவையைச் சுமந்த இயேசு கிறிஸ்துவை, தன் இதயத்தில் சுமந்து இறைப்பணி செய்தவர். ஒரு முறை கிராமம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது ஒரு கூட்டம் மக்கள் கூடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டார். அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கச் சென்ற போது, அங்கே ஓர் எருமை மாட்டைக் கட்டி வைத்து வாளால் அதன் உடம்பில் காயங்களை ஏற்படுத்தி, அது வலியால் துடிக்கத்துடிக்க, காயங்களில் மிளகுத்தூளைத் தூவிக் கொண்டிருந்தனர். ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று அங்கிருந்தவரிடம் கேட்டபோது, இப்படிச் செய்வதன் மூலம் எங்கள் பாவங்களை எருமையின் மேல் சுமத்தி நாங்கள் மீட்பு பெற எருமையைப் பலியாகக் கொடுக்கின்றோம் என்று சொன்னார். அப்போது சாதுசுந்தர்சிங் சொன்னார், "இயேசு கிறிஸ்து சிலுவையிலே நம் எல்லோருடைய பாவங்களையும் சுமந்து தமது இரத்தத்தினாலே மீட்பைத் தந்திருக்கின்றார்'' என்று இறைவாக்கு உரைத்தார். நமக்காகச் சிலுவை சுமந்த இயேசு கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு இயேசுவை நம் வாழ்வில் சுமக்கத் தூண்டப்பட்ட நாம் கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்தும்போது பிறரையும் கிறிஸ்துவைச் சுமக்கத் தூண்டும் கருவிகளாக மாறுகிறோம். இறைவாக்கானது இன்னலில் துணிவு பெறவும், இறைவார்த்தைக்கு இணங்கி நடக்கவும், இயேசுவைச் சுமக்கவும் நம்மைத் தூண்டி, அனைவரும் கிறிஸ்துவின் அன்பினைக் காண நம்மைக் கருவிகளாகப் பயன்படுத்தட்டும்.

அருள்திரு. C. **ஜெபக்குமார்**

12-12-2021

திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு

# பாவக் கட்டிலிருந்து விடுதலை

## DELIVERANCE FROM THE BONDAGE OF SIN

விப 14:1-14 உரோ 8:1-11
திபா 37:1-12 யோவா 8:31-38

**"ஏனெனில், கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வுதரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது"** (உரோ 8:2).

பள்ளிக்கூடம் சென்று இல்லம் திரும்பிக்கொண்டிருந்த சிறுவன் வழியில் வெள்ளரித்தோட்டம் ஒன்றைப் பார்த்து தோட்டக்காரரின் பார்வையில் படாமல் சிலவெள்ளரிக்காய்களை எடுத்துக்கொண்டு இல்லத்திற்கு வந்தான். திருடிக்கொண்டுவந்த வெள்ளரிக்காய்களை அம்மாவின் கரங்களில் கொடுத்தான். தாய் அந்தச் சிறுவனின் பார்வையில் படாமல் அந்தத் திருட்டு வெள்ளரிக்காய்களை வெளியே போட்டுவிட்டு பாகற்காயைச் சமைத்துக் கொடுத்தார். அதனைச் சாப்பிட்ட சிறுவன் அம்மா? ஏன் இது கசப்பாய் இருக்கிறது? என்று வினவ, அவர்களோ திருட்டுத்தனம் எப்போதும் கசப்பைத்தான் தரும் என்று கூறி, திருட்டான பாவக்கட்டிலிருந்து விடுதலைபெற வழிநடத்தினார்.

திருவிவிலியத்தின் தொடக்கம் முதல் நிறைவு வரை கடவுள் விடுதலைப்பணியைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதைப் படிக்கின்றோம். கடவுள் நேர்த்தியாய் இவ்வுலகினைப் படைத்து அதனை ஆளும்படியான பொறுப்பினையும் மனிதரிடம் அளித்தார். மனிதரின் கீழ்ப்படியாமையினால் பாவம் உலகில் உருவெடுத்து சீர்கெட்ட பூமியாக மாறியது (தொநூ 6:12). அதனால் நோவாவின் குடும்பம் மாத்திரமே அந்த அழிவினின்று காக்கப்பட்டது. மீண்டும் அவர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்பினபோது பாவம் தொடர்ந்தது. அதனால் கடவுள், அவர்கள் நல்வழி அடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்தார். இவை எல்லாவற்றினாலும் மனுக்குலம் பாவத்தினின்று விடுதலைபெற முடியாத போது, கடவுள் தம் அன்பின் மிகுதியால் தம் சொந்த மகனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். மனுக்குலத்தை பாவத்தினின்று விடுவிக்க கடவுள் எடுத்த முயற்சியே கிறிஸ்துவின் முதல் வருகை. இயேசு மீண்டும் பூமியை நீதித்தீர்ப்பு செய்ய வர இருக்கிறார். இச்சூழலில் இன்றும் மனிதர் பாவம், சாபம், வியாதி போன்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். திருமறைப்பகுதிகளிலிருந்து, நாம் எப்படிப் பாவக்கட்டிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ள முடியும்? என்பதைத் தியானிப்போம்.

***1. உன்னதராகிய இறைவனை நம்புங்கள்*** : (விப 14:13)

"மோசே மக்களை நோக்கி, அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள்! இன்று ஆண்டவர்தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை."

பாவத்தின் அடிமைத்தனம் பயங்கரமானது. பாவத்திலிருந்து விடுபடும்வரை மனிதனுக்குச் சமாதானம் இல்லை. பயம் ஆட்கொள்ளுகிறது. இந்தப் பாவத்திலிருந்து விடுதலை அளிப்பவர் உன்னதராகிய இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டுமே. இயேசுகிறிஸ்து இரத்தம் சிந்தி பாவ மன்னிப்பு அருளவே இவ்வுலகத்தில் மானிடரானார் (1திமொ 1:15). நாம் கடவுளின் அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறோம் (எபே 2:8). விப 14:1-14 வரையுள்ள பகுதியில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வீறுடன் புறப்பட்ட இஸ்ரயேலர்களைக் கடவுளுடைய ஆலோசனைப்படி மோசே வழி நடத்தினார். முன்னே கடல், பின்னே எகிப்தியர் தொடர்ந்து வரக்கண்ட இஸ்ரயேலர் பயந்தார்கள், அமைதியிழந்தார்கள். இந்தச் சூழலில், மோசே மக்களைநோக்கி, அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள்! இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார்; நீங்கள் அமைதியாயிருங்கள் என்றார் (விப 14:13-14). அவ்வாறே எகிப்தியருக்குப்போரிட ஆயுதங்கள் இருந்தன. ஆனால், இஸ்ரயேலருக்கோ ஆண்டவர் போர் செய்தார். எகிப்தியருக்குத் தேர்களின் பலம் இருந்தது. இஸ்ரயேலருக்கோ கடவுளாகிய ஆண்டவர் பலமாய் இருந்தார். இப்படி எகிப்தியரின் கையிலிருந்து இஸ்ரயேலரை விடுவித்த ஆண்டவர் இன்றும் நம்முடைய பாவக்கட்டுகளிலிருந்தும், இக்கட்டான சூழ்நிலைகளினின்றும் விடுவிக்க வல்லமையுள்ளவர். அந்த உன்னதராகிய இறைவனை நம்புவோம், விடுதலை பெறுவோம்.

***2. உண்மையை அறிபவர்களாயிருங்கள்*** : (யோவா 8:32)

"உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்றார்."

பாவக்கட்டிலிருந்து விடுதலை அடைவதற்கு உன்னதராகிய இறைவனிடம் நம்பிக்கை கொள்வதுடன் கிறிஸ்துவிலும் அவருடைய உபதேசத்திலும் நிலைத்திருக்க வேண்டும். அதுவே உண்மை அல்லது சத்தியத்தை அறிதல் ஆகும். யோவா 8:31-38 வரையுள்ள

திருமறைப்பகுதியில் பாவக்கட்டிலிருந்து விடுதலையடைவது பற்றி இயேசுகிறிஸ்து கூறும்போது, அந்த மெய்யான விடுதலை மனிதருக்குத் தானாகக் கிடைக்கும் ஒன்றல்ல, இறையருளால் அவர்களுக்குள் புதிதாக உருவாக்கப்படவேண்டிய ஒன்று. "மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்" என்று யோவா 8:36-இல் இயேசு கூறுகிறார். ஏனென்றால், இயேசு "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" என்கிறார் (யோவா 14:6). யூதர்கள் கடவுளின் மெய்வெளிப்பாடாகிய இயேசுகிறிஸ்துவைப் புறக்கணிப்பதின் மூலம் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தார்கள். ஆனால் அவர்களோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தாங்கள் ஆபிரகாமின் வழிமரபினர். யாருக்கும் அடிமையாகவில்லை என்றும் கூறினர் (யோவா 8:33). ஆபிரகாமின் உரிமைப் பெண்ணின் மகன் ஈசாக்கு வீட்டிலிருக்கிறான். அடிமைப் பெண்ணின் மகன் இஸ்மயேல் வெளியே துரத்துண்டான். யூதர்கள் தங்களை விடுதலை பெற்றவர்களாக எண்ணிக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் அடிமைகள். ஏனென்றால் என்றென்றும் நிலைத்திருக்கும் விடுதலையாளராகிய இயேசுகிறிஸ்துவை மெசியா என்று அறிந்து கொள்ளாததே ஆகும். தூயபவுலார் உரோ 8:2-இல் கூறும்போது, "ஏனெனில் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வுதரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்து விட்டது" என்று கூறுகிறார். எனவே இயேசு கிறிஸ்துவையும் அவரது உபதேசத்தையும் அறிந்து பாவக்கட்டிலிருந்து விடுதலைபெற்று வாழ்வோம்.

### *3. ஊனியல்புகளை விட்டுவிடுங்கள்* : (உரோ 8:5)

ஏனெனில், ஊனியல்புக்கேற்ப வாழ்வோரின் நாட்டமெல்லாம் அந்த இயல்புக்கு உரியவற்றின் மீதே இருக்கும். ஆனால் ஆவிக்குரிய இயல்புக் கேற்ப வாழ்வோரின் நாட்டம் ஆவிக்குரியவற்றின் மீதே இருக்கும்.

பவுலடியார் உரோமையருக்கு எழுதிய திருமுகம் 8:1-11 வரையுள்ள பகுதியில் ஆவிக்குள்ளான கிறிஸ்தவ வாழ்வையும், ஊனியல்புக்கேற்ப வாழ்வதையும் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆவியையும் கிறிஸ்துவையும் பிரிக்க முடியாது தந்தை, மைந்தன், தூயாவியார் இம்மூவரும் ஒன்றாயிருக்கின்றனர். கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய், பற்றுதி, நம்பிக்கை, ஈகை, கடவுளின் சித்தம் அறிதல், வலிமை இவைகளே ஆன்மிகக் குணாதிசயங்களாகும். ஆவியாரின் ஆளுகையில் விடுதலையுண்டு. திருச்சட்டம் கடவுளால் அருளப்பட்டிருந்தாலும் மாம்சத்தின் மூலமாகவே நிறைவேற்றப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் மாம்சத்தில் பாவம் குடிகொண்டு அதைப்

பலவீனப்படுத்தி அடிமைப்படுத்தியதால், ஆவிக்குள்ளான கிறிஸ்தவ வாழ்வு வாழ முடியவில்லை. எனவே கடவுள் தம் மகன் இயேசுகிறிஸ்துவைப் பாவத்திற்குப் பரிகாரியாக மாம்சத்தில் தோன்றப்பண்ணினார். இயேசுகிறிஸ்துவின் பிறப்பு எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து இம்மானுவேலராய் நம்மோடிருந்து, நம்மை ஆளுகிறார். தூயாவியாரால் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்படுகிறோம். அதனால் நாம் ஊனியல்புகளை விட முடிகிறது. இதையே பவுலடியார் கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் 5:16-24 வசனங்களில், தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள்; அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்து சிலுவையில் அறைந்து விட்டார்கள் என்று கூறுகிறார்.

1930-ஆம் ஆண்டில் புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஒருவர். ஐரி பறவை ஒன்றை காட்டில் கண்டெடுத்தார். அதை வீட்டில் கொண்டு வந்து வளர்த்தார். ஒவ்வொரு நாளும் இசைக்கலைஞரின் புல்லாங்குழல் இசையைக் கவனித்த ஐரிபறவை, சிறிதுகாலத்தில் அந்த இசையை மிமிக்ரி செய்து அதுபோலவே குரல் எழுப்பியது. காலம் கடந்தது. ஒருநாள் இசைக்கலைஞர் அந்த ஐரிபறவையை, தான் கண்டெடுத்த இடத்தில் விட்டார். இன்றும் ஐரிபறவைகளின் சந்ததி புல்லாங்குழல் இசையில் பாடுவதாகக் கண்டுபிடித்துள்ளார்கள். ஐரிபறவை இனம் புதுப்படைப்பானது. அதற்குக் காரணம், புல்லாங்குழல் இசைக்கலைஞரோடு வாழ்ந்ததுவே ஆகும். நாமும் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போமானால் புதுப்படைப்பாகி விடுதலையோடு வாழ முடியும்.

இயேசு கிறிஸ்துவின் வருகைக்காலத்தைக் குறித்த இறைவாக்கைத் தியானிக்கும் நாம் பாவக்கட்டிலிருந்து விடுதலை பெற்று வாழ்வதற்கு, உன்னதராகிய இறைவனில் நம்பிக்கை வைத்து, உண்மையாகிய இயேசுவை அறிந்துகொள்கிறவர்களாயிருந்து, ஊனியல்புகளைவிட்டு, கடவுளுக்குள் வாழ்வோம்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**

19-12-2021

திருவருகைக்கால நான்காம் ஞாயிறு

## மாரனாத்தா - ஆண்டவரே வாரும்

**MARAN-ATHA - O LORD COME**

இச 18:15-22 1கொரி 16:13-24
திபா 28 யோவா 1:1-14

**"வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்"** (யோவா 1:14).

மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை திருமறையில் பதிவு செய்யப்பட்டுள்ள தீர்க்கதரிசன வரிசையில் முதன்மை இடத்தைப் பெற்றிருப்பதுடன் முக்கியமான செய்தியும் ஆகும். 'மாரனாத்தா' என்பது ஓர் அரமேய வார்த்தை. ஆங்கிலத்தில் Our Lord comes (or) comes back எனவும், தமிழில் ஆண்டவர் (மேசியா) வந்துள்ளார் (அல்லது) வருகிறார் எனவும் இருபொருள் கொண்டதுமாகும். திருமறையில் ஒரே ஒரு முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள (1கொரி 16:22) இவ்வார்த்தையைத் தொடக்ககால திருச்சபை விசுவாசிகள் தங்களது சொல்வழக்குகளில் மட்டுமல்லாது ஏடுகளிலும், கடிதங்களிலும், கல்லறைகளிலும் எழுதி வைத்துள்ளனர். அத்துடன் இதனை ஓர் ஆன்மிக அறிக்கையாகவும், எதிர்பார்ப்பு நிறைந்த இறைவேண்டலாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர். சபையின் உபத்திரவக் காலத்தில் விசுவாச உறுதியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்திய இச்சொல், இயேசு மறுபடியும் வருவார் எனும் எதிர்பார்ப்புடன் வாழவும், வளரவும், சாட்சி பகரவும் அதிக உதவியாயிருந்துள்ளது. ஆக, இவ்வருகையின் சிறப்புக் காலத்தில் இரண்டாம் வருகை குறித்த சிந்தனை விழாவின் கொண்டாட்டத்திற்கு அதிக பயன்களைச் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

### *1. "மெசியா வருகிறார்" இது திருமறையின் உறுதிமொழி* :

"உன் கடவுளாகிய ஆண்டவர் உன் சகோதரர் நடுவினின்று என்னைப் போல ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவார். நீ அவருக்குச் செவி கொடு" (இச 18:15).

இறைவன் ஒருவரே என்ற மாறாத உண்மையை, மோசே வழி இறைமக்கள் என்ற சிறப்பு உரிமை பெற்றுள்ள இஸ்ரயேலர்கள் அறிந்திருந்தும், அதனை மறந்து, மறுதலித்து இறை உறவில் தளர்ந்து ஆன்மிக வாழ்வின் வீழ்ச்சிநிலையை எய்தியிருந்த காலகட்டம் அது. இறைவனின் இருப்பு நிலையை மறந்து மாயையையும், மந்திரத்தையும்,

நாளையும், நட்சத்திரங்களையும் நம்பி ஏமாந்து சோர்ந்து போயினர். இந்நிலையில் இறைவனது உறுதிமொழியாய் இன்னொரு இறைவாக்கினர். அறிவிக்கப்பட்டதுடன், அவருக்குச் செவி கொடுக்கவும் அறிவுறுத்தப்பட்டார்கள். என் வார்த்தைகளை அவனுடைய வாயில் வைப்பேன். நான் கட்டளையிடுவது அனைத்தையும் அவன் அவர்களுக்குச் சொல்வான். என் பெயரால் அவன் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நான் வேரறுப்பேன் என எச்சரிக்கையும் விடுத்தார் (18:18-19).

நேற்று, இன்று, நாளை என என்றுமே மாறாத (எபி 13:8), பொய்கூறாத (தீத்து 1:3) இறைவனின் உடனிருப்பை உணராது, வாழ்வின் அடிப்படை தகர்ந்து, வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் இடமளித்த இறைமக்கள் இறைவார்த்தைக்கு மறுபடியும் கீழ்ப்படிந்து வாழ்வை மேம்படுத்திக் கொள்ள மெசியாவைக் குறித்த வாக்குறுதி இன்னொரு வாய்ப்பாக அமைந்தது. நாமும் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நமது வாழ்வை மேம்படுத்திக் கொள்வதே சிறப்பு.

### 2. "*மெசியா தோன்றினார்*" *இது திருச்சபையின் பற்றுறுதி*:

அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை. அவரிடம் வாழ்வு இருந்தது, அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாயிருந்தது. (யோவா 1:3,4) கிறிஸ்துவை (மேசியா) "வார்த்தை" (Logos) எனும் வார்த்தை (Word) என உருவகப்படுத்தியுள்ளார் யோவான் நற்செய்தியாளர். எபிரேயர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் 'வார்த்தை' மிகவும் முக்கியமானதாகும். எபிரேயர்கள் வார்த்தையை உயிராற்றலுடையதாகவும், இறைவெளிப்பாடும், செயல்பாடும் உடையதாகவும் பொருள் கொண்டனர். யோவானோ வார்த்தையைக் கடவுளாகவும், படைக்கப்பட்டவராய் அல்லாது படைப்பின் காரணராகவும், தந்தையாகிய இறைவனைத் தெளிவாக வெளிப்படுத்துகிறவராகவும், அனைத்து வெளிப்பாடுகளின் அடையாளமாகவும் காட்டுகிறார். அவர் தமக்குரியவர்களிடம் வந்தார், அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற அப்பட்டமான உண்மையை (1:11) எடுத்துரைத்தது மட்டுமன்றி, அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார் (1:12). வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் (1:14) எனச் சாட்சியும் பகர்ந்துள்ளார்.

ஆக, தொடக்ககால திருச்சபையார் மெசியா தோன்றினார் என்பதில் திடனாயிருந்தனர். அவர் இருந்தவர், இருக்கிறவர், வருகிறவருமான கடவுள் (திவெ 1:4) என்பதில் உறுதியாயிருந்தனர். இதனையே நாமும் அனுபவமாக்கிக் கொள்வதே சிறப்பு.

### 3. "*மெசியா வருகிறார்*" *இது இறைமக்களின் எதிர்நோக்கு*:

(1கொரி 16:22)

கர்த்தர் வருகிறார் "மாரனாத்தா" (ஆண்டவரே வருக) திருமறையில் ஒரே ஒரு முறை மட்டுமே காணப்படும் இவ்வார்த்தை வருகையின் காலத்தில் மிகச் சிறந்த செய்தியை இறைமக்களுக்கு வெளிப்படுத்துகின்றது. பவுலடியார் கொரிந்து சபைக்கு அனுப்பிய தனது முதல் கடிதத்தின் இறுதி வரிகளில் உறுதியான சில அறிவுரைகளையும், உண்மையான தனது வாழ்த்துக்களையும் பதிவு செய்துள்ளார்.

விழிப்பாயிருங்கள், நம்பிக்கையில் நிலைத்திருங்கள். துணிவுடன் நடந்து கொள்ளுங்கள், வலிமையுடன் செயல்படுங்கள் அனைத்தையும் அன்போடு செய்யுங்கள் (16:13-14). ஏனெனில் மேசியா வருகிறார். அவரது வருகையை எதிர்கொள்ள ஆழமான விசுவாசமும், அதிக விழிப்பும் தேவை எனத் திருச்சபைக்கு அறிவுறுத்துகிறார். அருள்நாதர் இயேசு, நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன் எனத் தமது சீடர்களிடம் உறுதி கூறினார் (யோவா 14:3). அந்த நாளையும் வேளையையும் பற்றி தந்தை ஒருவருக்குத்தவிர வேறு எவருக்கும் தெரியாது என வெளிப்படையாகக் கூறியதுடன் (மத்தேயு 24:36) இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்பைப் பெறுவார் (மாற்கு13:13) எனும் பேருண்மையையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

வானதூதர் அனைவரும் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சி மிகு அரியணையில் வீற்றிருப்பார். நேர்மையாளர்கள் நிலைவாழ்வைப் பெறுவார்கள் என்பது நிச்சயம் (மத் 25:31-46). ஏன் வருகை இன்னும் தாமதமாகிறது? எனக் கேட்டால், எனது மீட்புக்காகவே எனும் உண்மையை ஏற்றுக் கொள்வதே சிறப்பு (2பேது 3:9-10). மிக மிகக் குறுகிய காலமே இருக்கிறது, வரவிருக்கிறவர் வந்து விடுவார், காலம் தாழ்த்த மாட்டார் (எபி 10:37). ஆம், விரைவாகவே வருகிறேன் என்கிறார். ஆமென். ஆண்டவராகிய இயேசுவே, வாரும் (திவெ 22:20) எனும் ஆர்வ மனநிலையுடன் அர்த்தமுடன் வாழ்வோம்.

**"மாரனாத்தா"**

அருள்திரு. D. **ஜாண் ஜெபதாஸ்**

24-12-2021



## உலகில் அமைதி

**PEACE ON EARTH**

எசா 52:7-10 தீத்து 2:11-14
திபா 96 லூக் 1:67-79

**"இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளி தரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது"** (லூக் 1:78,79).

கிறிஸ்துப் பிறப்பு வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்து வாழ்த்துகையில் அமைதி உண்டாகட்டும் என்ற வார்த்தை அதிகமாகப் பயன்படுத்தப்படும். தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும், உலகினுக்கும் அமைதி அவசியம் என்பதாலும் கிறிஸ்து அமைதியின் அரசர் என்பதாலும் (எசாயா 9:6) இப்படி வாழ்த்துகின்றோம்.

திருமுழுக்கு யோவானின் பிறப்பை எண்ணி மகிழ்ந்து, நன்றியுணர்வுடன், தூய ஆவியார் துணைகொண்டு, பிறக்கப் போகும் குழந்தை இயேசுவை நினைந்து, இறைவாக்குப் பாடல் ஒன்றை யோவானின் தந்தை செக்கரியா பாடுகின்றார் (லூக் 1:67-79). இப்பாடலினூடாய் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்வது (லூக் 1:78) விடியலாய் வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் நோக்கம் என்பதனை உணர்ந்து உரைக்கின்றார் வயது முதிர்ந்த இக்குரு. பாடல் முழுவதிலும் அமைதிக்கான வழியினைச் செயல்படுத்தும் செயல்திட்டம் விரவிக்கிடக்கிறது.

### *1. பகை அழிந்து அமைதி* :

"நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியில் இருந்தும் நம்மை மீட்பார்" (லூக் 1:71).

செக்கரியா சுட்டுகின்ற இப்பகையும் வெறுப்பும் அரசியல் ஆதிக்கத்தால் எழுபவை (உரோமை அரசாங்கம்) அல்லது அலகையின் ஆதிக்கத்தால் எழுபவை (எபே 6:10-17) எனலாம். எவ்வகையிலும் பகையும் வெறுப்பும் உலகில் அமைதிக்கு எதிரானவை.

கிழக்கிலிருந்து வந்த ஞானியர் "யூதர்களின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்" (மத் 2:2) என்றபோது அதிகார போதையால்

ஏரோதின் உள்ளத்தில் வெறுப்பு எழுந்தது. அது பகையாக வடிவம் கொண்டது. இதனால் அவனும் அவனைச் சார்ந்தோரும் அமைதி இழந்தனர் (மத் 2:3). சமுதாயமும் அமைதி இழந்து ஆறுதல் இன்றி அழுதது (மத் 3:16-18). ஏரோது வெறுப்புக்கும், பகைமைக்கும் உருவமானார். பின்பு ஞானியர் குழந்தையை வணங்கித் திரும்புகையில் வெறுப்புக்கும், பகைமைக்கும் உரிய வழியில் செல்லவேண்டாம் என்று ஆண்டவரால் எச்சரிக்கப்பட்டு பகைமையும், வெறுப்பும் சந்திக்காத மாற்று வழியில் நாடு திரும்ப வழிநடத்தப்பட்டனர் (மத் 2:12).

கிறிஸ்துப் பிறப்பு பகை, வெறுப்பு போன்றவைகளை விடுத்து அன்பு, உறவு என்பவைகளை முன்வைக்கிறது. "ஆண்டவர் நம் மூதாதையருக்கு இரக்கம் காட்டி, தமது தூய உடன்படிக்கையையும், நம் தந்தையாகிய ஆபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையையும் நிறைவேற்ற நினைவுகூர்ந்தார்" (லூக் 1:72,73) என்பதிலிருந்து இவ்வுலகோடு இறைவன் உறவைப் புதுப்பித்திருக்கிறார் என்பதனைப் புரிந்துகொள்ளலாம்.

கிறிஸ்துப்பிறப்பில் விண்தூதர், மண்ணோர், மேய்ப்பர், ஞானியர், கால்நடைகள் மற்றும் இயற்கை என வேறுபட்ட தளங்களில் இயங்குவோரையும், இயங்குபவற்றையும் கிறிஸ்து தமது அன்பால் ஈர்த்து, உறவால் பிணைத்து, சமத்துவம் தந்து அமைதிக்கு அடித்தளமிட்டார்.

## *2. பாவம் மன்னித்து அமைதி* :

"...ஏனெனில் பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய்" (லூக் 1:17).

ஆதிப்பெற்றோர் ஆதாம்-ஏவாள் பாவமற்றவர்களாகப் படைக்கப்பட்டனர். கீழ்ப்படியாமை வழி பாவத்தில் விழுந்து அவர்கள் உலகில் பாவம் நுழைய வழிவகுத்தனர் (உரோ 5:12). "எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்" (உரோ 3:23) என்று சொல்லும் அளவுக்குப் பாவம் இவ்வுலகினை ஆக்கிரமித்தது.

பாவத்துக்கு உரிய பலன் என்பது சாவு (உரோ 6:23), சாபமாய், நோவாய் இவ்வுலகில் பரவியிருக்கிறது (தொநூ 3:16-19). பெருவெள்ளத்தால் பூமி முழுவதும் மூழ்க அடிகோலியிருக்கிறது (தொநூ 6:8). படைப்புகள் அனைத்தும் பேறுகால வேதனையுற்றுப் பரிதவிக்கத் துணைபோயிருக்கிறது (உரோ 8:22). நாடுகளை இழி நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது (நீதி 14:34). கொள்ளை நோய்களுக்கும், பஞ்சங்களுக்கும்

வித்திட்டிருக்கிறது (2சாமு 24:13). ஒற்றை வரியில் சொன்னால் பாவம் உலகின் அமைதியினை உடைத்திருக்கிறது.

இந்த உடைவினின்று உலகை மீட்க கிறிஸ்து பிறந்தார். “பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு உலகில் வந்தார்” (1திமொ 1:15), ...அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார் (மத் 1:21), “...அஞ்சாதீர் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்” (லூக் 2:10,11). இப்பிறப்பு மனித முயற்சியினாலும், தேடலினாலும் நிகழவில்லை; மாறாகக் கடவுளின் இரக்கத்தாலும், பரிவுள்ளத்தாலும் நிகழ்ந்திருக்கிறது (லூக் 1:79).

பாவமன்னிப்பால் வரும் மீட்பின் அனுபவத்தைப் பெற மனம் திரும்புதல் அவசியமாகிறது (லூக் 24:47). இதனூடாக அமைதியை அடிப்படைத் தகவாகக் கொண்ட இறையரசைக் காணலாம் (மத் 3:2; உரோ 14:17).

### *3. பண்பு காத்து அமைதி* :

“இவ்வாறு நாம் பகைவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு தூய்மையோடும், நேர்மையோடும் வாழ்நாளெல்லம் அச்சமின்றி அவர் திருமுன் பணிசெய்யுமாறு வழிவகுத்தார்” (லூக் 1:74,75)

தூய்மையும், நேர்மையும் மனிதத்தின் கரத்தை மதிப்பிடக்கூடியவை. தூய்மை என்பது தன்மை (attitude), நேர்மை என்பது நடத்தை (action). இது வேரையும் கனியையும் போன்றது. கிறிஸ்துவில் இருந்தும் வெளிப்பட்டது.

நீதியும் நேர்மையுமுடைய அரசரின் வருகையினூடாய் நாடு எப்படிப் பயன் அடையும்? என்பதனை எசாயா சுட்டும்போது “ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும். அக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும். கன்றும், சிங்கக் குட்டியும் கொழுத்த காளையும் கூடி வாழும்...” (எசா 11:1-9) எனத் தொடர்கிறார். நற்பண்புகள் மலரும்போது முரண்பாடுகள் அகன்று உலகம் அமைதி காணும் என்பதனையும் இப்பகுதி தெளிவுபடுத்துகிறது.

அமைதியின் அரசர் இயேசு. இவ்வரசரின் பிறப்பு அல்லது இவ்வமைதியின் பிறப்பு தூய்மையும் நேர்மையும் உடையவர்களின் பங்களிப்புகளால் நிறைவடைந்தது எனலாம். மரியாவிடம் கபிரியேல்

கடந்துவந்து “இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்” (லூக் 1:30). என்றபோது “இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே! என்றாள்” (லூக் 1:34). இது மரியாளின் தூய்மையான மனச்சான்றைப் பறைசாற்றுகிறது. யோசேப்பு ஒரு நேர்மையாளர் என்கிறது விவிலியம் (மத் 1:19). தூய்மையும், நேர்மையும் முன்நின்று அமைதியின் அரசரை இவ்வுலகினுக்குத் தந்திருக்கிறது.

கிறிஸ்தவ நல்லொழுக்கம், அமைதி, அன்பு இவைகளை முன்னிலைப்படுத்தி பகைமை, வாக்குவாதம், பிளவுகள் தவிர்த்தல் ஆகியவற்றை வலியுறுத்தும் தீத்துவின் திருமுகம் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தைச் சுட்டுகையில், “அவர் நம்மை எல்லா நெறிகேடுகளிலிருந்தும் மீட்டு நற்செயல்களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாகத் தூய்மைப்படுத்த தம்மையே ஒப்படைத்தார்” என்கிறார் (தீத்து 2:14).

“மனித உள்ளங்களில் போர்கள் தோன்றுவதனால், மனித உள்ளங்களில் தான் அமைதிக்கான அரண்கள் அமைக்கப்பெறல் வேண்டும்” என்பது யுனெஸ்கோவின் முகவுரை வாசகம். இது மனித மனங்களில் விதைக்கப்படும் நற்பண்புகளால்தான் சாத்தியமாகும்.

உலகில் அதிகமாகப் பரவிக்கிடப்பது அமைதியின்மைக்கான மேகங்கள்தாம். தொழில்நுட்ப வளர்ச்சி, இராணுவ வலிமை, ஆயுதப்பெருக்கம், சூழியல் சீர்கேடுகள், சாதி, மொழி, இன மற்றும் நிறப்பாகுபாடுகள் வழி இம்மேகங்கள் எங்கும் நிலவுகின்றன. இச்சூழலில் மானுடம் மிக அதிகமாக விரும்புவதும் நாடுவதும் அமைதியைத்தான். இறைவனின் விருப்பமும் இதுவே. வெண்புறாக்கள் எங்கும் வட்டமடித்து வெள்ளைப் பூக்கள் இதயங்களில் மலர ‘அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்’ (மத் 5:9) என்ற ஆண்டவரின் வார்த்தையை உள்வாங்கி உலகில் அமைதிக்கான பாதை அமைப்போம்.

அருள்திரு. T. **சுதீர்**

| 25-12-2021 | *கிறிஸ்துப் பிறப்பு பெருவிழா* |
|---|---|

# கிறிஸ்துப்பிறப்பு : ஒரு புதிய விடியல்

**CHRISTMAS : A NEW DAWN**

எசா 9:1-7 கலா 4:1-7

திபா 98 லூக் 2:1-14

**"இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர்....பிறந்திருக்கிறார்"** (லூக் 2:11).

மனுக்குலமாக இன்று முரண்பாடுகளின் நடுவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முரண்பாடு என்பது மாறுபட்ட ஆனால் ஒன்றொடொன்று தொடர்புடைய கூறுபாடுகளை உள்ளடக்கியது. (Paradox involves contradiction but interrelated elements). இயேசு கிறிஸ்து ஒரு முரண்பாடாக (Jesus Christ as Paradox) பிறந்ததினால், கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சி பல முரண்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்தது. இயேசுவின் வாழ்வு இரு சாத்தியமற்றவைகளைக் கொண்டது; கன்னியின் கரு (Virgin's womb), காலியான கல்லறை (empty tomb). எதிர்பார்ப்புகளில் முரண்பாடு, மனிதர்களின் உணர்வுகளில்-செயல்பாடுகளில் முரண்பாடு - ராமாவிலே புலம்பல்-ராகேலின் ஓயாத அழுகை-பச்சிளங்குழந்தைகளின் மரண ஓலங்கள், முரண்பாடான அரசியல், சமூக-பொருளாதாரச் சூழல், மரபின்படி இயேசுவின் பிறப்பு இரவில் நடைபெற்றது. இரவு நேரத்தில் இடம் தேடும் மரியாள்-யோசேப்பு குடும்பம், இடமில்லை என்று மறுத்த விடுதிக்காப்பாளர், இயேசு பாலகனைப் பெற்று குழந்தையைத் தீவனத் தொட்டியில் கிடத்திய நிகழ்ச்சி, மேய்ப்பர்கள், வானறிஞர்கள் தலை மகனைச் சந்தித்த நிகழ்ச்சி, ஏன்? இயேசுவின் உயிர்த்தெழுதலும் இரவிலேயே நடைபெற்றது. விடிந்தபோது புதிய அனுபவங்கள்-புதிய சான்றுகள்-புதிய எதிர்பார்ப்புகள் - புதிய அறைகூவல்கள். ஆம்! கிறிஸ்துவின் பிறப்பு ஒரு புதிய விடியல்! மனுக்குலம் இன்று புதிய விடியலுக்காகக் காத்திருக்கிறது. தெளிவற்றவர்களாக, நிச்சயமற்றவர்களாக, பயத்துடனும், ஏன்? கண்ணீருடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு விடியலை நோக்கிக் காத்திருப்பது ஒரு புதிய அனுபவம். மூன்று திருமறைப் பகுதிகளும் புதிய விடியல்களை விளக்குகின்றன.

### *1. உயிர்ப்பிக்கும் விடியல் :* (Enlivening Dawn)

இறைவாக்கினர் எசாயாவின் இறைவாக்கு நூல் 7-9 வரையுள்ள பகுதி இம்மானுவேலின் நூல் என்று அழைக்கப்படுகிறது. நான்கு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளைப் பற்றி எழுதுகிறார் (அசீரியா, சிரியா, இஸ்ரயேல், யூதா). கோவில் தாக்கப்படுகிறது. ஆகாசுவும் மக்களும் அலைக்கழிக்கப்படுகிறார்கள். அரசியல் அடக்குமுறைகள் மக்களுக்கு அமைதியற்ற நிலையை உருவாக்கிவிட்டது. தூய்மையற்ற கூட்டணிகளும் சமரசங்களும் ஏற்படுத்தப்பட்ட சூழலில், கடவுள் எசாயாவை அனுப்புகிறார். விளிம்பு நிலையில் அரசியலினால் ஓரந்தள்ளப்பட்ட மக்களுக்கு எசாயா சொல்கிறார், காரிருளில் வாழும் உங்களுக்குப் புது விடியல் வருகிறது. அந்த விடியல் ஒரு குழந்தை வழியாக வரும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறார். கன்னிகை என்பது திருமணமாகாத ஓர் இளம் பெண்ணைக் குறிக்கும் சொல் இப்பகுதியில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று எசாயா சொல்கிறார். தாவீதின் அரியணையில் அமருவார் என்பது இயேசுவைக் குறிக்கும் திருமொழியா? என்ற கேள்வி எழாமலில்லை. எசாயா, 800 ஆண்டுகளுக்குப் பின் பிறக்கப் போகும் குழந்தையைப் பற்றி சொல்கிறார் என்பது அரசியல் போர்ச்சூழலில், அது நம்பிக்கையின் செய்தியாக அமையாது. இயேசு, அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. தாவீதின் அரியணையில் அமரவில்லை. எனவே எசாயா சொல்லும் ஆண்மகவு இயேசு அல்ல, ஆனால் பிந்திய காலத்தில் நற்செய்தியாளர்கள் எசாயாவின் இப்பகுதியை இயேசுவின் வாழ்வுடன் பொருத்திக் காட்டுகிறார்கள் என்கின்றனர் திருமறை அறிஞர்கள். ஆனால் ஒரு குழந்தையின் பிறப்பு, ஒரு புதிய விடியலை ஏற்படுத்தி உங்களை உயிர்ப்பிக்கும் என்பது எசாயாவின் செய்தி. விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட, உள்நாட்டுப் போர்களினால் புலம் பெயர்ந்த (migrants), இடம் விட்டு இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு புதிய விடியல் காத்திருக்கிறது. அந்த விடியலுக்குக் காரணமாக ஒரு குழந்தை பிறந்து வியத்தகு ஆலோசகராக, வலிமைமிகு இறைவராக, அமைதியின் அரசராக, நீதி, நேர்மையுடன் உறுதியான ஆட்சியைத் தருவார் என்றும், அந்த ஆளுகை உங்களை உயிர்ப்பிக்கும் விடியலாக அமையும் என்று எசாயா சொல்கிறார். விளிம்பு நிலை மக்கள் புது விடியல் வழியாக ஒளியைக் காண்பார்கள். இன்றும் அரசு அதிகாரங்களினால், அரசு வன்முறைகளினால், திட்டங்களினால், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட இருளில் வாழும் மக்கள் விடியலைக் காண்பார்கள். அது அவர்களை உயிர்ப்பிக்கும் விடியலாக அமையும்.

**2. *விரிவாக்கும் விடியல் :*** (Enlengthening Dawn)

லூக்கா நற்செய்தியாளர் இன்னொரு அரசியல் ஒடுக்குதல் சூழலைக் குறிப்பிடுகிறார். அகஸ்து ராயனின் ஆணைகள் மக்களைத் துரத்திக் கொண்டிருந்த காலம். குடிமக்கள் திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு சட்டம் போன்றவை மக்களை ஒடுக்கிய சூழல். மரியாள் - யோசேப்பு குடும்பம் பெத்லகேமுக்கு வருகிறார்கள். பெத்லகேமுக்கு வராமல் போனால் இயேசு குடியுரிமையைக் கூட இழந்திருக்கலாம். குழந்தை பெத்லகேமில் பிறக்கிறது. ஓர் அரசருக்கு ஒரு தீவனத் தொட்டியில் பிறந்த குழந்தையைக் கண்டு பிடிப்பது கடினமன்று. புது விடியல் குடும்பத்தில் தொடங்குகிறது. குழந்தையின் பிறப்பு ஒடுக்கப்பட்ட மேய்ப்பர்களுக்கு விடியலை ஏற்படுத்தியது. மேய்ப்பர்கள் நாடோடிகள், குலத்தொழிலைச் செய்கிறவர்கள் (the most oppressed). உரோமை அதிகாரம் அனைவரையும் அடிமைப்படுத்திய சூழலில், ஏரோது அரசன் மக்களை ஒடுக்கி, குறிப்பாக மேய்ப்பர்கள் அடையாளமற்றவர்களாகப் பல படிநிலைகளில் ஓரந்தள்ளப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்குப் புதிய விடியல். அது மட்டுமல்ல, புது விடியல் விரிவாக்கம் பெறுகிறது. இருளில் வாழும் அனைவருக்கும் விடியல். தூதர்கள் தேடிச் சென்று விடியலை விரிவாக்குகிறார்கள். ஆடை மறுக்கப்பட்ட, தெருக்களில் நடக்க அனுமதி மறுக்கப்பட்ட, பல்வகை வரிகள் சுமத்தப்பட்ட மக்களுக்குப் புதுவிடியல் வந்ததால் இன்று ஆலயங்களில் அமர்ந்திருக்கிறோம். இந்த ஆண்டு கிறிஸ்துப் பிறப்பு விரிவாக்கும் விடியலாக அமைய, இருளில் வாழும் அனைவருக்கும் நற்செய்தியாக அமைய, கடவுள் நம்மை அழைக்கிறார்.

**3. *உணர்வூட்டும் விடியல் :*** (Enlightening Dawn)

கலாத்தியத் திருச்சபையில் சட்டவாதம் (legalism) ஆன்மிகப் பின்வாங்குதலுக்குக் காரணமாக அமைந்தது. திருமறைக்கு வெளியே சட்டங்களை ஏற்படுத்தினார்கள். சட்டங்கள் மக்களை ஏமாற்றவும், அழிவிற்கும், மனச்சோர்புக்கும் வழி வகுத்தன. எனவே பவுல், சட்டங்கள் வாழ்வு வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்கிறார். சட்டங்களுக்கு அடிமைப்படுகிற அடிமைகள் அல்ல, கடவுளின் உரிமைக் குடிமக்கள் என்ற உணர்வூட்டும் விடியல். எனவே உரிமை பெற்றவர்களுக்குப் புதிய விடியல். ஒரு காலத்தில் கடவுளை அறியாத அடிமைகள். வலிமையற்ற பஞ்ச பூதங்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்தீர்கள். கடவுள் அல்லாதவைகளுக்கு அடிமைகளாக இருந்தீர்கள். இப்போது கடவுளை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, மீண்டும் சட்டங்களுக்காக

வழக்குமன்றங்களுக்குத் திருச்சபைகளை எடுத்துச் சொல்லாதீர்கள். வழக்கு மன்றங்களுக்குச் செல்லும் வரை, நீங்கள் சட்டத்திற்கு அடிமைகள்; விடியல் இல்லை. இந்தக் கிறிஸ்துப்பிறப்பு, உணர்வூட்டும் புது விடியலுக்கு அறைகூவல் தருகிறது.

பேராயர் டெஸ்மான்ட் டுட்டு வானவில் ஒரு முரண்பாடு (Rainbow is a Paradox) என்கிறார். பல நிறங்கள் வானவில்லில் இருப்பதைப் போல முரண்பாடுகளில் பல நிறங்களைக் கொண்ட இறையருள் வெளிப்படுகிறது. புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட அமைதி, தண்ணீரைப் போல ஓடும் நீதி, நீரோடையைப் போன்ற நேர்மை, பறவைகளுக்கும் மலர்களுக்கும் கிடைக்கின்ற பராமரிப்பை விட அதிகமான பராமரிப்பு, இனி அழிவு அல்ல, புது விடியல் என்னும் எதிர்நோக்கை இந்தக் கிறிஸ்துப் பிறப்பு விழா நமக்குத் தந்து நம்மை வழிநடத்தட்டும்.

அருள்திருமதி. முனைவர். ***ஐவி பீட்டர்சிங்***

26-12-2021

**கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு**

# குடும்பம் என்னும் நலமருளும் இடம்

**FAMILY AS HEALING SPACE**

தொநூ 33:1-11 எபே 6:1-9
திபா 91 லூக் 15:11-24

**"நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்; என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்"** (திபா 91:16).

குடும்பப் பெருவிழாவைத் தென்னிந்தியத் திருச்சபை சிறப்பிக்கிறது. ஏனென்றால் நல்ல குடும்பங்கள்தாம் நல்லதொரு சமூகத்தையும் திருச்சபையையும் உருவாக்க முடியும். கிறிஸ்தவக் குடும்பங்கள் எப்படி இருக்க வேண்டும்? பெற்றோரின் கடமைகள், பிள்ளைகளின் பொறுப்புகள், கணவன் மனைவிக்கிடையே உள்ள கூட்டொருமை எப்படி இருக்க வேண்டுமென விவிலியம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. குடும்பம் நலமருளும் இடம் எனப் பன்னெடுங்காலமாகப் போற்றப்படுகிறது. அறம் சார்ந்த குடும்பம் எப்போதும் நலமருளும் இடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் சொல்லுக்கும் செயலுக்கும் பொருந்தாத நெறிமுறைகள் இன்றைய குடும்பங்களில் நடைமுறைகளாக மாறிப்போயின. ஒருவேளை இன்றைக்கு நடைமுறைக்கு ஒத்துவராத, முரண்பட்ட, குடும்பத்திற்கு ஒவ்வாத நடைமுறையைச் சித்திரிக்கும் உதாரணங்கள் எங்கும் விரவிக் கிடக்கின்றன. இணையதளச் செயல்பாடுகள், தவறான சமயப் பிரச்சாரங்கள், திரைப்படங்கள், சின்னதிரைத் தொடர்கள், தொலைக்காட்சியில் தோன்றும் பல கிறிஸ்தவ நிகழ்ச்சிகள், போதை மருந்து, ஊதாரித்தனங்கள், நடிகர் நடிகைகளின் காலடியே தஞ்சமெனக் கிடக்கும் இன்றைய சமுதாயம் போன்றவை இன்றைய நலமருளும் குடும்பங்களைச் சிதைக்கின்றன. இந்நிலையில், எத்தகைய வழியில் உண்மையாகவே நம்முடைய கிறிஸ்தவக் குடும்பங்களை நலமருளுமிடமாக மாற்ற முடியும் என்பதனைத் திருமறை வழியாகத் தியானிப்போம்.

## *1. சகோரத்துவத்தின் வழியாகக் குடும்பத்தில் நலமருளுதல்* :

...உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பதுபோல் இருக்கிறது. ஏனெனில், நீர் எனக்குக் கனிவு காட்டியுள்ளீர். (தொநூ 33:10).

சகோதரத்துவம் மானிட உறவின் அச்சாரம். குடும்பத்தில் மட்டுமல்ல, சமூகத்திலும் திருச்சபையிலும் சகோதரத்துவத்தை உருவாக்குவது கட்டாயமாகும். ஏசா யாக்கோபின் சகோதர உறவில் ஏற்பட்ட விரிசல் நமக்கு நன்றாகத் தெரியும். இதனால் நலமருள வேண்டிய குடும்பத்தில் சண்டையும் சச்சரவுகளும் வாடிக்கையாகிவிட்டன. ஏசா, யாக்கோபைக் கொலை செய்யக் கூடிய சூழலுக்குத் தள்ளப்பட்டார். இந்நிலையில் யாக்கோபு தன் அண்ணன் ஏசாவிற்குப் பயந்து வாழ்கின்றார். யாக்கோபைக் கொலை செய்ய வேண்டும் என்கின்ற ஏசாவின் திட்டத்தை, தாய் ரெபேக்கா அறிந்தார். எனவே தன் மகனை காப்பாற்ற அவரை லாபானிடம் அனுப்பினார். யாக்கோபு சகோதரப் பாசம், தாய் தந்தைப் பாசம் இழந்தவராய்த் தன் மாமனார் இல்லத்தில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கடினமாக உழைக்கின்றார். அங்கும் தன் மாமனாரால் ஏற்பட்ட பல ஏமாற்றங்களை உணர்ந்து சகோதரத்துவம்தான் குடும்பத்தில் நலம் அருளும் என உணர்ந்து தன் சகோதரரைச் சந்திக்கத் துணிகின்றார்.

பல ஆண்டுகள் கழித்து தன் சகோதரர் ஏசாவைச் சந்திக்க வரும்போது பல பரிவாரங்களுடன் ஏசா வருவதைக் கண்ட யாக்கோபு முதல் வரிசையில் வேலைக்காரிகளின் குடும்பங்களையும், இரண்டாம் வரிசையில் லேயாளின் குடும்பத்தினரையும், இறுதியில் ராகேலையும் யோசேப்பையும் நிறுத்தினார். எல்லாருக்கும் முன்பாக, தான் நின்று கொண்டு ஏழு முறை தரையில் விழுந்து ஏசாவை வணங்கினார். ஏசா உணர்ச்சிவசப்பட்டவராய் ஓடி யாக்கோபுக்கு எதிர்கொண்டு போய் அவரை அரவணைத்து இறுகக் கட்டித் தழுவி முத்தமிட்டார். இருவரும் மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தினர். சகோதரத்துவத்தின் உச்சக்கட்டமாக யாக்கோபு சொன்னது, “உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பது போல் இருக்கிறது.” (தொநூ 33:10). இருவரும் சகோதரத்துவத்தின் வழியாகக் குடும்பத்தில் நலத்தினை உருவாக்கினர். குடும்பத்தில் கனிவும் சகோதரத்துவமும் நிரம்பி வழியும் போது அங்கு இயேசு கிறிஸ்து பிரசன்னமாகின்றார். எனவே இன்றைய நவீன குடும்பங்களில் சகோதரத்துவத்தின் வழியாக நலமருளுதல் இன்றியமையாததாகும்.

### ***2. பெற்றோர்-பிள்ளைகள் வழியாகக் குடும்பத்தில் நலமருளுதல்*** : (எபே 6:1-4)

எபேசியர் திருமுகத்தின் இரண்டாம் பகுதியில் தூய பவுலார் முன் வைப்பது என்னவென்றால், திருச்சபை மக்கள் கிறிஸ்துவுடன் கொண்டுள்ள உறவைத் தங்கள் வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். பொதுவாக சமூக அன்பு வாழ்வும், குடும்ப அன்புறவும் நலமருளும் இடமாக அமைய

வேண்டுமென விரும்புகின்றார். எபே 6:1-4 வரை படிக்கும் போது பிள்ளைகள் பெற்றோர் வழியாகக் குடும்பத்தில் உருவாகும் நலத்தினைக் குறிப்பிடுகின்றார். இந்தப் பகுதியில் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென வலியுறுத்துகிறார். ஏனென்றால் ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது என்பதனை ஆழமாகப் பதிவு செய்கின்றார். மேலும் மோசே வழியாகக் கொடுக்கப்பட்ட பத்துக் கற்பனைகளில் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்கின்ற கட்டாயப் பிரமாணத்தை இங்கு நினைவுபடுத்துகின்றார். இன்று பெற்றோரிடம் பிள்ளைகள், பேசுவதையே அவமானமாகக் கருதுகின்றனர். அன்புப் பிள்ளைகளே! நீங்கள் தூர இடங்களில் இருந்தாலும், ஊரில் இருந்தாலும், ஏன்? உங்கள் வீட்டிலிருந்தாலும் உங்கள் பெற்றோருடன் அவ்வப்போது சிறிது நேரத்தைச் செலவிடுங்கள். அது அவர்களுக்கு நலமருளுவதாக அமையும்.

அதேநேரத்தில், பெற்றோரும் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் தவறான வார்த்தைகளால் அவர்களைத் திட்டாமல் வளர்த்தெடுக்க வேண்டும். ஆண்டவர் அருளிய பிள்ளைகளைக் கிறிஸ்தவக் கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமை. குழந்தைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் பெற்றோராகி விட முடியாது. அவர்களைப் பொறுப்புடன் வளர்த்து, அவர்களை நன்மதிப்புடன் உருவாக்க வேண்டும் என்கின்ற ஆர்வமுடைய பெற்றோர்களாயிருத்தல் வேண்டும். குடும்பத்தில் தான் முதல் முதலில் எல்லாக் கலைகளையும் பிள்ளைகள் கற்றுக்கொள்கின்றனர். பெற்றோர்கள் அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல் வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே நற்பண்புகள் தழைத்தோங்கும்போது குடும்பம் என்பது நலமருளும் இடமாகவே அமையும். அப்போது நம் குடும்பங்கள் இறையரசின் முன்சுவையாக இப்பூமியில் மலரும்.

### *3. உறவுகள் வழியாகக் குடும்பத்தில் நலமருளுதல்* :

(லூக் 15:11-24)

லூக்கா நற்செய்தி நூலில் இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்தார் என்னும் கருத்து முதன்மைச் செய்தியாகக் காணப்படுகிறது. இகழ்ந்து ஒதுக்கப்பட்ட பலர் சிறப்பிடம் பெறுகின்றனர். அவ்விதமாக “காணாமற்போன மகன்” உவமை வழியாகக் குடும்பத்தில் நலமருளுதலை இயேசு குறிப்பிடுகின்றார். குடும்ப உறவுகள் நாளுக்கு நாள் உடைந்து கொண்டே செல்கின்றன. கணவன் மனைவிக்கிடையே கண்ணுக்குத் தெரியாத ஏராளமான சீனப் பெருஞ்சுவர் போன்ற பிரச்சனைகள், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே மனத்தாங்கல்

ஏற்படுகின்றன. உறவின் விரிசல்கள் குடும்பத்தில் உள்ள நலத்தினைக் கெடுக்கின்றன. இந்த உவமையில், புதிய உறவுகள் வழியாகக் குடும்பத்தில் நலம் ஏற்படுவதைக் காணலாம். இளையமகன் உவமையில் தந்தையின் கட்டுப்பாட்டின் கீழ் வாழ விரும்பாத மகன் தன் உரிமைச் சொத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறான். இளைய மகன் தன் தந்தையிடம் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணம் சிறிதளவுமே இல்லாமல், நன்முறையில் இருந்த உறவுகளை உடைத்து, தான் விரும்பியவாறு சென்றுவிட்டார். இதனால் தன் உரிமைச் சொத்து, நன்மதிப்பு, நன்னடத்தை, நற்பெயர் எல்லாவற்றையும் இழந்தார். பன்றி யூதர்களுக்கு மிகவும் அருவருப்பான விலங்கு (லேவி 11:7). குடும்ப உறவை முறித்தவர், இப்போது பன்றியின் உணவுகூட கிடைக்கப்பெறாமல் தவித்தார். கடைசியில் தன் குடும்பம் நலமருளும் மருந்தாலயம் என்பதனைப் புரிந்து கொள்ளுகிறார். தன் வீட்டுக்குத் திரும்பி உறவை வலுப்படுத்த விரும்புகிறார். யூத மரபின்படி தன் உரிமைச் சொத்தைப் பெற்று, அவற்றை அழித்தால் மீண்டும் மகனுக்குரிய உரிமை கிடைக்காது. எனவே தந்தையின் உறவைப்பெற்று, தந்தை வீட்டில் வாழ்ந்து, உணவு உடை இரண்டையும் பெற விரும்புகிறார்.

மகன் தன்னிடம் திரும்பி வருவது உண்மையான மனமாற்றம் என்பதனை உணர்ந்த தந்தை, தன் குடும்பத்துக்குள் சேர்த்துக் கொள்ள விரும்பி, தன் வேலைக்காரர்களிடம் அதற்கான வேலைகளைச் செய்யப் பணிக்கிறார். இவ்விடம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், வேலைக்காரர்களாக அடிமைகள் காணப்பட்டனர். ஆனால் அடிமைகளுக்கு யூத மரபில் எந்த உரிமையும் கிடையாது. இந்த வேலைக்காரர்கள் அந்தக் குடும்பத்தில் புதிய உறவு முறையில் சங்கமிக்கின்றனர். அதாவது காணாமற்போன மகன் வந்தவுடன் முதல்தரமான ஆடையை அவனுக்கு உடுத்தினர், கைக்கு மோதிரமும் காலுக்கு மிதியடியும் அணிவித்தார்கள் (லூக் 15:22). இவைகள் மூத்த மகன் செய்ய வேண்டியது. ஆனால் அவர் விலகிச் சென்றதால், இளையமகன் குடும்ப உறவில் அடிமைகள் புது உறவுகளாக மாறினர். இங்குக் காணாமற்போன மகன் வழியாகவும், அடிமைகள் வழியாகவும் குடும்பத்தில் நலமருளுதல் ஏற்பட்டது.

### *குடும்பம் நலமருளும் இடமாக மாறப் பின்பற்ற வேண்டிய சில நெறிமுறைகள்* :

✵ நமது குடும்பத்தில் இயேசு கிறிஸ்துவை முதன்மையான இடத்தில் வைத்திருங்கள். அவரை முழுமனதுடன் பின்பற்றுங்கள். அவர் நம் குடும்பத்திற்கு நலமருள்வார்.

✵ குடும்பத்தில் தினமும் காலை - மாலை என இருமுறை கிறிஸ்தவப் பாமாலையில் உள்ள ஞானக் - கீர்த்தனைப் பாடல்களைப் பாடி, திருவசனங்களைப் படித்து, குடும்பமாக எல்லோரும் இறைவேண்டல் செய்யுங்கள். அப்படிச் செய்வது நம் குடும்பம் ஆசி பெறுவதற்கான வழியாகும்.

✵ நம்முடைய திருச்சபையை நேசியுங்கள். குடும்பமாகச் சேர்ந்து திருச்சபைத் தொழுகையில் கலந்து கொள்ளுங்கள். திருப்பணி- அருட்பணி- சமூகப் பணி இவற்றிற்கு நமக்குக் கிடைக்கும் வருமானத்தில் திறந்த மனதுடன் காணிக்கை மற்றும் நன்கொடைகள் செலுத்துங்கள். அது நம் குடும்பங்களுக்கு நிறைவைத் தரும்.

✵ நம்முடைய குடும்பங்களில் ஏற்படும் துன்பங்களில் ஒருவருக்கொருவர் ஆறுதலாகவும் உதவியாகவும் செயல்படுங்கள். இன்பத்தில் மனமகிழ்ச்சியுடன் பங்கு கொள்ளுங்கள்.

✵ ஒருவரை ஒருவர் மதியுங்கள், உலகில் குடும்பம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுங்கள்.

✵ பல்வேறு விதமான வேலைகள், பொறுப்புகள், பணம் சம்பாதித்தல், பொருள் ஈட்டுதல், சமூக மற்றும் இறைப்பணி மத்தியிலும் நமது குடும்பங்களுடன் சேர்ந்திருக்க நேரத்தை ஒதுக்குங்கள். ஒரு நாள் ஒரு வேளையாவது குடும்பத்துடன் சேர்ந்திருந்து உணவருந்துங்கள். வெளியில் தூர இடங்களில் இருப்பவர்கள் தற்போதுள்ள தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி, குடும்பத்துடன் இணைந்திருங்கள். தூர இடங்களில் பணி செய்வது என்பது குடும்பத்தை விட்டுத் தூரமாகச் செல்வதல்ல, மாறாக தினமும் மனம் திறந்து குடும்பத்துடன் பேசுவதே நலமருளும் இடமாக அமைய உதவும்.

அருள்திரு. அறிவர் K. **பிறின்ஸ்குமார்**

31-12-2021



## ஆண்டவரிடம் வாருங்கள், பேருவகை கொள்ளுங்கள்

**COME TO THE LORD AND REJOICE**

எசா 1:1-20 திப 16:19-34

திபா 89:1-18 லூக் 19:1-10

**"ஆண்டவரின் பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன்; நீர் உண்மையுள்ளவர் எனத் தலைமுறைதோறும் என் நாவால் அறிவிப்பேன்"** (திபா 89:1).

2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் நாள் கேரளாவை இரண்டு விபத்துகள் புரட்டிப்போட்டன. ஒன்று மூணாறில் ஏற்பட்ட நிலச்சரிவு, மற்றொன்று கோழிக்கோடு விமான நிலையத்தில் ஏற்பட்ட விமான விபத்து. இரண்டு நிகழ்வுகளிலும் பலர் உயிரிழந்தனர். பலர் அதிர்ஷ்டவசமாகத் தப்பித்தனர். விமான விபத்தில் தப்பித்த ஒருவரது பெயர் ராம்ஷாட். அவர் தன் மகள் மற்றும் கருவுற்ற மனைவியுடன் பயணித்தார். விபத்தில் அதிர்ஷ்டவசமாக மூன்றுபேரும் தப்பித்துக் கொண்டனர். அவர் பத்திரிக்கையாளர்களிடம் கூறியபோது, "கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார். கடவுளுக்கு நன்றி என்று குறிப்பிட்டார்" "(God saved my life and I am thankful to Him). அவரைப் பேட்டிகண்ட தொலைக்காட்சி அவரது பெயருக்கு அருகில் "Ramshad : One of the Survivers" என்று குறிப்பிட்டது. (ராம்ஷாட் : தப்பித்தவர்களில் ஒருவர்). இன்று ஆண்டு நிறைவில் நிற்கும் நாமும் கூட இந்த ராம்ஷாட் போன்றவர்கள் தாம். ஒட்டுமொத்த உலகையும் தாக்கிய கொரோனா வைரசிற்குத் தப்பியவர்கள் நாம் எனலாம். அதுமட்டுமல்ல வேறு எத்தனையோ பேரழிவுகள், போர்கள், வன்முறைகள் எல்லாவற்றிலிருந்தும் நாம் காப்பாற்றப்பட்டுள்ளோம். எனவே இந்த நேரத்தில் கடவுளண்டை வந்து அவர் செய்த நன்மைகளை எண்ணிப்பார்க்கவும், கடவுளின் வார்த்தையால் புது நம்பிக்கை பெறவும் கடவுள் நம்மை அழைக்கின்றார். கடவுளிடம் நாம் எவ்வாறு வரவேண்டும் என்பதை இரண்டு சிந்தனைகள் வாயிலாக மனத்தில் இருத்துவோம்.

### *1. நன்றியறிதலுடன் கடவுளிடம் வாருங்கள்* :

(Coming to the Lord with Thanksgiving)

"படைகளின் ஆண்டவர் நம்மில் சிலரையேனும் எஞ்சியிருக்கச் செய்யாவிடில்..." (எசா 1:9)

எசாயா என்ற பெயருக்கு கடவுள் மீட்கிறார் (God Saves) என்று பொருள். எசா 1:2-6 வரை உள்ள வசனங்களில் கடவுள் தம் மக்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றார். 7-8 வரையுள்ள வசனங்களில்

எதிரிகள் எருசலேமை அழித்ததைக் குறித்துக் குறிப்பிடுகின்றார். 7-ஆம் வசனத்தை சற்று உன்னிப்பாக கவனித்தால் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சில பதங்கள் எருசலேம் மக்களின் பாவத்தால் நாட்டில் ஏற்பட்ட பேரழிவைக் குறிப்பிடுகின்றன. அவையாவன

- பாழடைந்து கிடக்கிறது (ruined)
- நெருப்புக்கு இரையாயின (burned)
- விழுங்குகிறார்கள் (seized and emptied)
- கைவிடப்பட்டாள் (left)

அதேவேளை 9ஆம் வசனத்தில் "சிலரையேனும் எஞ்சியிருக்கச் செய்யாவிடில்" என்று கடவுள் தம் மக்கள் மீது கொண்டுள்ள கருணை, அன்பு, இரக்கம் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது.

"சாரீட்" (Sarid) என்று எபிரேயப் பதம் ஆங்கிலத்தில் Remnant என்று சொல்லப்படுகின்றது. Remnant என்பதற்கு 'A Small Surving Group' என்று பொருள். காப்பாற்றப்பட்ட அல்லது உயிர்பிழைத்த ஒரு சிறு குழு என்று புரிந்து கொள்ளலாம்.

"எஞ்சியிருக்கச் செய்யாவிடில் சோதோமைப்போல் நாம் ஆகியிருப்போம். கொமோராவுக்கு ஒத்தவர்களாயிருப்போம்" என்று எசாயா கூறுவது மக்களின் அழிவைக் குறிப்பிடுகிறன்றது. சோதோம் கொமோரா என்பவை அக்கிரமத்தினால் அழிக்கப்பட்ட இரண்டு நகரங்கள் (தொநூ 19:1-25). திருமறையில் அவை பாவத்திற்கு எதிராக, கடவுளின் தண்டனைக்கு எடுத்துக்காட்டாகப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (எரே 50:40; எசே 16:46-63; மத் 11:23,24)

இந்த ஆண்டின் தொடக்கம் முதல் இறுதிவரை கடவுள் நம்மைப் பாதுகாத்து, நமக்குத் துணைநின்று, இன்றளவும் நம்மை உயிர்வாழச் செய்துள்ளார். எனவே எஞ்சியிருக்க உதவிய கடவுளண்டை நன்றியறிதலுடன் வருவோம்.

### 2. நல்லெதிர்நோக்குடன் கடவுளிடம் வாருங்கள் :
(Comming to the Lord with Hope)

"இயேசு யார் என்று அவர் பார்க்கவிரும்பினார்" (லூக் 19:3).

சக்கேயு உடலளவில் குறைபாடுகளுடனும், சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவரும், பாவி என்று முத்திரை குத்தப்பட்டவருமாகக் காணப்பட்டவர். ஆனால் அவரிடம் காணப்பட்ட நல்லெதிர்நோக்கு இயேசுவைப் பார்க்க வேண்டும் என்பது தான். இயேசுவைப் பார்க்க வேண்டும் என்ற நல்லெதிர்நோக்கு அவரது எதிர்காலத்தைப் புதிதாக மாற்றியமைத்தது.

எரிகோ நகர் சாபமிடப்பட்ட ஒரு நகர். ஆனால் இயேசு அதில் நுழைந்து தம் உடனிருப்பால் அதை மதிப்புறச் செய்கிறார். சகேயுவின் வாழ்க்கையும் எரிகோ பட்டணமும் சற்று ஒத்துப்போவதைக் காணலாம். சகேயுவின் வாழ்க்கையையும் இயேசு தமது உடனிருப்பால் மதிப்புறச் செய்கின்றார்.

கடவுள் மனிதர் பார்க்கிறபடி பார்பபவரல்லர். மனிதர் வெளித் தோற்றத்தைப் பார்ப்பர். ஆண்டவரோ இருதயத்தைப் பார்க்கிறவர். அந்தவகையில் சக்கேயுவை சமூகம் குள்ளமானவரென்றும், பாவியென்றும் கண்டது. ஆனால் இயேசுவோ அவருக்குள் இருந்த நல்லெதிர்நோக்கைக் கண்டார். எனவே தம்மண்டை சீக்கிரம் வர அழைத்தார். சகேயு இயேசுவண்டை வந்தபோது “மகிழ்ச்சியோடு” (லூக் 19:6) அவரை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார்.

புதிய ஆண்டிற்குள் நுழைகின்ற நமக்கும் இயேசுவண்டை வரவேண்டும், இயேசுவைப் பார்க்க வேண்டும், இயேசுவின் செயல்களை உணர வேண்டும் என்னும் எதிர்நோக்கு வேண்டும், அத்தகைய நல்லெதிர்நோக்குடன் ஆண்டவரிடம் வருகின்றபோது மகிழ்வையும், மாற்றத்தையும் நாம் பெறமுடியும்.

நன்றியறிதலோடும் நல்லெதிர்நோக்குடனும் ஆண்டவரண்டை வருவோம். வாழ்வில் மகிழ்ச்சியையும், புதிய ஆண்டில் புதிய மாற்றங்களையும் கண்டு பேருவகை கொள்ள கடவுள் நமக்கு உதவி செய்வாராக!

திரு. Y. **சுஜின் ராஜ்**

# புதிய மாத நன்றித் தொழுகை அருளுரைகள்

01-02-2021



# நிந்தயை நீக்கும் ஆண்டவர்

எசா 25:6-9

**“.... என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார்; தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றி விடுவார்; ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார் ”** (எசா 25:8).

எசாயா 25 முதல் 27 வரையுள்ள அதிகாரங்களில் 3 விதமான பாடல்களைக் குறித்துக் கற்றுக் கொள்ளலாம். திருமறைப்பகுதியில் முதல் பாடலாகிய நன்றியின் பாடல் அடங்கியுள்ளது. முதல் பாடலாகிய நன்றிப் பாடல் எசாயா 25:1 தொடங்கி 9 இல் முடிவடைகிறது. கொடிய நகரத்தில் துன்பப்படுத்தப்பட்ட மக்கள் இறைவனின் பேரருளால் விடுதலை பெற்றதை நினைத்துப் பாடப்படுகின்ற மகிழ்ச்சியின் பாடல் (The song of joy in the midst of tribulation). அடிமைப்படுத்திய நகரம் எதுவென்று திருமறையில் சொல்லப்படவில்லை. இதனைக் குறித்து அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை சொல்லுகின்றனர். ரூம் மார்ட்டி என்பவர் கி.மு. 111 முதல் 107 வரையிலான காலகட்டத்தில் ஜாண் ஹீர்கானாஸின் மகன்கள் அழித்த பட்டணம் தான் இந்த நகரம் என்று கூறுகிறார். செயின் என்பவர் கி.மு. 332 இல் அலெஸ்சாண்டர் தீருவை அழித்தார். இந்தப் பட்டணமே எசாயா சுட்டிக் காட்டும் பட்டணம் எனச் சொல்லப்படுகிறது. எப்படியாயினும் நிந்தையை அனுபவித்த இப்பட்டணத்தின் மக்கள் வெற்றியினைச் சுதந்தரமாக்கிக் கொள்கின்றனர். வெற்றியின் நிறைவில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்படி விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த விருந்தில் பங்களிப்பு தருவோர் இனி நிந்தையை அனுபவிப்பதில்லை என எசாயா சுட்டிக் காட்டுகிறார். எசாயா சுட்டிக் காட்டும் விருந்தை இயேசுநாதர் ஏற்படுத்திய விருந்திற்கு அடையாளமாகக் கருதலாம். மானிட வாழ்வில் அடிமைத்தனத்தின் வழியாகத் தரப்பட்ட நிந்தைகளைக் கடவுள் தகர்த்தெறிகிறார் என்பது இப்பாடலின் ஒட்டுமொத்த பொருளாக அமைந்துள்ளது. இயேசு நாதர் உருவாக்கிய விருந்து என்பது நிந்தையை நீக்கும் மருந்தாய்ச் சொல்லப்படுகிறது. நிந்தையின் வலி எவ்வளவு கொடியது என்பதைத் திருப்பாடல் 42:10 இல் கற்றுக் கொள்ளலாம். கடவுள் எத்தகையை நிந்தைகளை மானிட வாழ்விலிருந்து நீக்குவார் என்பதனை சிந்தனை வசனத்தை மையப்படுத்தி ஒரு சில உண்மைகளைக் காண்போம்.

## 1. மானிடரின் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்

(He will swallow up death for ever ) : (எசா 25:8)

இல்லம் ஒன்றில் நாய் ஒன்றினை மிகவும் பாசமாக வளர்த்தனர். நாயும் இல்லத்தினரோடு மிகவும் பாசமாகவும், நன்றியுணர்வுடனும் நடந்து கொண்டது. ஒரு நாள் அதிகாலையில் இல்லத்தின் தந்தை, இல்லத்தை விட்டு வெளியே வரும் போது நாய் தந்தையின் உடையைக் கவ்வி தொடர்ந்து நடக்க விடாமல் தடை செய்தது. கருநாகப் பாம்பு ஒன்றினைக் கண்ட நாய், தன் எஜமானைப் பாம்பிடமிருந்து காப்பாற்ற இவ்வாறு செய்தது. ஆனால் தகப்பனாரோ தடையைத் தாண்டி முன்னோக்கி நடந்தார். கருநாகம் தந்தையைப் பார்த்து படம் எடுத்தது. இதனைக் கண்ட நன்றியுள்ள நாய் ஓடி வந்து கருநாகத்தோடு நீண்ட நேரம் சண்டை போட்டு, இறுதியில் கருநாகத்தால் தீண்டப்பட்டு நாய் மரித்துப் போனது. செல்லமாக, பாசமாக வளர்த்த நாய் தனது கண்களுக்கு முன்பாக மரித்துப் போனதைத் தாங்க முடியாமல் விம்மி, விம்மி அழுதார். நாயின் வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படியாத தகப்பனார் செல்லமாக, பாசமாக வளர்த்த நாயினை இழந்தார். நாய் தனது எஜமானைக் காப்பாற்ற தனது ஜீவனை கொடுத்தது.

மரணம் என்பது மனித வாழ்வினுடைய இறுதியாக இந்த உலகில் அறிமுகப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் மரணம் என்பது இயற்கையான ஒன்று என்பதினைத் திருமறை கற்றுத் தருகிறது. எபிரேயர் 9:27 இல் ஒரு மனிதனுடைய வாழ்வில் இரண்டு விதமான மரணங்கள் நடைபெறுவது உண்டு.

1. சரீர மரணம் (Physical death)
2. ஆவிக்குரிய மரணம் (Spiritual death)

சரீர மரணம் என்பது உடன் வாழ் மனிதனை உருக்குலைய வைக்கும் ஒரு நிந்தையான நிகழ்வு. இதனை யோவா 11:32,33 ஆகிய வசனங்களில் கற்றுக் கொள்ளலாம். இத்தகைய இடத்திலும் மரணத்தை வெல்லும் இறையாற்றல் வெளிப்படுகிறது என்பதினைக் கண்டு கொள்ளலாம்.

ஆவிக்குரிய மரணம் என்பது மனிதன் பாவத்தால் வீழ்ந்து போகின்ற நிலையை வெளிப்படுத்துகிறது. (உரோ 5:12). கடவுள் ஆதாமைப் பார்த்து விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தால் சாகவே சாவாய் என்று கூறினார் (தொநூ 2:17). ஆதாம் கீழ்ப்படியாமையின் மூலம் பாவத்துக்கு உள்ளாகி அவனுடைய ஆத்துமா சாவைச் சந்திக்கிறது. உடனே அவனுடைய சரீரம் செத்துப்போனதாகத் திருமறையில்

சொல்லப்படவில்லை. மாறாக, அவனுடைய ஆத்துமா இறைவனை விட்டு தொலைந்து போய் விட்டது என்பதினைப் புரிந்து கொள்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம். (உரோ 6:23) இத்தகைய மரணத்தை, ஆண்டவர் ஜெயமாக விழுங்கினார் (1கொரி 15:54).

## *2. மானிடரின் கண்ணீரைத் துடைப்பார் :*

(The Lord God will wipe away the tears from all faces) (எசா 25:8)

கண்ணீர் என்பது மனிதன் தன் வாழ்வில் அனுபவிக்கும் நிந்தையின் உச்சக்கட்ட நிலையாகும். வேதனைகள் பெருகுகின்ற போது கண்ணீர் பெருகுகிறது. விம்மிக் கொண்டும், அழுது கொண்டும் இருக்கும் ஒரு சூழ்நிலையில், நம் கண்ணீர்க் கதையை எங்கேயாவது போய்க் கொட்டினால் பரிகாரம் கிடைப்பதில்லை. சில வேளைகளில் அதனால் விபரீதங்களும் நிகழ்ந்து விடும். அப்படிக் கொட்டி வாழ்வில் ஏமாந்தவர்கள் அநேகர். நொறுக்கப்பட்டவர்கள் ஏராளம். இங்கே ஒரு பெண் “நான் ஆண்டவருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன்” என்கிறாள். அவள் பெயர் தான் அன்னா. இந்த அன்னா எப்பிராயீம் மலைத் தேசத்தில் வசித்த எல்க்கானாவின் 2 மனைவிகளுள் ஒருத்தி. இன்னொருத்தி பெயர் பெனின்னா. ‘அன்னா’ என்றால் ‘ஆண்டவரின் அருள்’ என்று பொருள். அன்னாவுக்குப் பிள்ளைகள் இல்லை. பெனின்னாவுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள். இதினிமித்தம் பெனின்னாவோ அன்னாவை நிந்தித்து வந்தாள். இந்த நிந்தனை தாங்காது, அவள் கடவுளின் சமுகத்தில் தன் இருதயப் பாரத்தோடும், துக்கத்தோடும், “படைகளின் ஆண்டவரே, கடவுள் உமது அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுப்பேன்” என்று பொருத்தனை செய்து ஜெபித்தாள். இந்த அன்னா, தன்னுடைய நிந்தனையைத் தாங்கமுடியாதபடி மனக்கிலேசத்தில் இருக்கையில், மனிதர் தயவை நாடாது, ஆண்டவரிடத்தில் போய் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். பிறகு அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

சில நாள் சென்றபின், அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, ஆண்டவரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு ‘சாமுவேல்’ என்று பெயரிட்டாள். அன்னாளின் கண்ணீர், ஜெபம், அவள் வாழ்க்கையில் குறைவையும், நிந்தனையையும், கவலையையும் போக்கிற்று.

இஸ்ரயேல் மக்கள் எகிப்து தேசத்தில் நிந்தை அனுபவித்த போது அவர்கள் விடும் கண்ணீரை நான் கண்டேன் (விப 3:17). அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கும் படியாக மோசே என்ற இறைப்பற்றாளரை எழுப்பி விடுதலை வழங்கும் பணிவிடையைச் செய்கிறார்.

இதிலிருந்து நாம் கண்டு கொள்வது என்னவென்றால் நிந்தனையின் உச்சக்கட்டத்தில் கடவுளை நோக்கி கண்ணீரோடு விண்ணப்பம் செய்யும் போது, கடவுள் மானிடரின் கண்ணீரைத் துடைத்து அவர்களை விடுவிக்கிறார்.

### *3. மானிடரின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார் :* (He will take away the disgrace of His people from all the earth (எசா 25:8)

மானிடர்களில் யார் தங்களை நிந்தனைக்குள்ளே தள்ளுகின்ற பாவத்தை உணர்ந்து கடவுளண்டைக்கு வருகிறார்களோ, அவர்களுடைய நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார் என எசாயா இறைவாக்கு உரைக்கிறார்.

விடுதலைப்பயணம் 14 ஆம் அதிகாரத்தைப் படிக்கும் போது எகிப்தில் அடிமைகளாய் இருந்து பணி செய்த இஸ்ரயேலரை மோசே எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடமிருந்து விடுவித்து கானானுக்கு நேராய் வழிநடத்திக் கொண்டிருக்கும் போது, பார்வோனுடைய சகல குதிரைகளோடும், சேனைகளோடும் அவர்களைத் தொடர்ந்து போய், சமுத்திரத்தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற பிககிரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளையமிறங்கியிருக்கிற அவர்களைத் துரத்தினார். எகிப்தியரைப் பார்க்க இஸ்ரயேலர் மிகவும் பயந்தார்கள். அதே நேரத்தில் ஆண்டவரை நோக்கி கூப்பிட்டார்கள் என விப 14:10-இல் கூறப்பட்டுள்ளது. தங்களது கடினமான மனநிலையைப் புரிந்து கொண்டு, நிந்தனையின் நடுவில் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகின்றனர். தம் மக்களாகிய இஸ்ரயேலரின் விண்ணப்பத்தைக் கேட்ட ஆண்டவர் அவர்களுக்கு உதவி செய்கிறார்.

விப 14:28,30-இன்படி தண்ணீர் திரும்பிவந்து, இரதங்களையும், குதிரைவீரரையும், அவர்கள் பின்னாகச் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக் கொண்டது. அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை. இவ்விதமாய் ஆண்டவர் அந்நாளிலே இஸ்ரயேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சிக்கிறார். கடற்கரையிலே எகிப்தியர் செத்துக் கிடக்கிறதை இஸ்ரயேலர்

காண்கின்றனர். நிந்தையின் நடுவில் இறைவன் உடனிருந்தார் என்பதினை எசாயா பாடியதைப் போன்று விப. 15 ஆம் அதிகாரத்தில் நிந்தனையின் நடுவில் இறைவன் உடனிருந்து நிந்தையை நீக்கிவிட்டார் என்பதினைக் கண்ட மோசேயும், இஸ்ரயேல் புத்திரரும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுகின்றனர்.

பார்வோனின் இரதங்களையும் அவன் படைகளையும் சமுத்திரத்திலே தள்ளி விட்டார். ஆழி அவர்களை மூடிக் கொண்டது என ஆண்டவரைப் புகழ்ந்து பாடுகின்றனர்.

பல நேரங்களில் ஆண்டவரை விட்டு, அவரின் வார்த்தையை விட்டுத் தூரம் போன இஸ்ரயேலர், நிந்தை நெருங்கி வந்த போது, தங்கள் கடினமான மனநிலையை உணர்ந்து ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்ட போது நிந்தையை இஸ்ரயேலரை விட்டு நீக்கி விட்டார் எனத்திருமறை நமக்குக் கற்றுத் தருகிறது.

நம்முடைய பொல்லாத வழிகளினிமித்தம் நிந்தை நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறதா? நிந்தைக்கான காரணத்தை உணர்ந்து இறைவனை நோக்கிக் கூப்பிடுவோம். நிந்தையை நீக்கும் ஆண்டவர், நம்முடைய நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி இறையாட்சியின் மகிழ்வினால் நிரப்புவாராக!

திருமதி. **பெபின் தங்கராஜ்**

01-03-2021

புதிய மாத நன்றித் தொழுகை

## உயர்த்தும் உன்னதர்

இச 28:1-14

**"...உலகிலுள்ள மக்களினங்கள் அனைத்திற்கும் மேலாக உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னை உயர்த்துவார்"** (இச 28:1).

தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்தில் ஓர் ஏழைப் படகோட்டியின் மகனாகப் பிறந்து, வறுமையின் காரணமாக சிறுவயதிலிருந்தே கல்வி கற்றவர். கடுமையான முயற்சியாலும், தளராத நம்பிக்கையாலும் உலகத்தில் சாதனை படைத்து Dr.A.P.J அப்துல்கலாம் உச்சத்தை அடைந்தார். இந்த உலகத்தில் சாதனை படைத்த பெரும்பான்மையானவர்கள் சாதாரண மனிதர்களே. திபா 113:7-இல் ஆண்டவருடைய கருணையைக் குறித்துக் காணலாம். ஏழைகளைத் தூசியிலிருந்து அவர் தூக்கி விடுகின்றார், வறியவரைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகின்றார் என்பதைக் காணமுடியும். கடவுள் தரும் உயர்வை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதைப் புரிய வேண்டும். ஆண்டவர் கடைநிலையிலுள்ளோரை மையத்திற்குக் கொண்டு வருவார். ஒதுக்கப்பட்டோரை ஓர் இனமாக மாற்றுவார். அவர் நெறிந்த நாணலை முறியாமலும், மங்கி எரிகின்ற திரியை அணையாமலும் செய்ய வல்லவர். இணைச் சட்டநூல் என்பது எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து வந்த இஸ்ரயேல் மக்கள் பாலைநிலத்தில் நெடும்பயணம் செய்து கானான் நாட்டிற்குள் நுழைவதற்கு முன் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் கடவுள் மோசே வழியாக வழங்கிய பேருண்மை அறிவுரையின் தொகுப்பாகும். கீழ்ப்படிதலின் ஆசியாக இடம்பெறும் உடன்படிக்கையின் பகுதியாகும். இஸ்ரயேல் மக்களின் எதிர்கால வாழ்வைக் குறித்துச் சொல்லப்படும் நிலையைக் காணமுடியும். கடவுள் தரும் உயர்வு என்பது நிபந்தனையுடன் கூடியது என்பதைப் புரிய வேண்டும். ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் எப்படிப்பட்ட உயர்வைத் தருவார் என்பதைத் தியானிப்போம்.

### *1. வாழ்விடத்தை ஆசீர்வதித்து உயர்த்தும் உன்னதர்* :

(இச 28:3)

இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்தின் நுகத்தை 430 ஆண்டுகள் அனுபவித்தார்கள். உரிமைகள் இழந்தவர்களாய் எதிர்காலத்தைப் பறிகொடுத்தவர்களாய், நாதியற்ற கூட்டமாய்

வாழ்ந்திருந்த இஸ்ரயேல் மக்கள் கால்நடை மேய்க்கிறவர்களாய் இருந்த படியால் தொநூ 46:34இல் எகிப்தியரின் பார்வையில் அருவருப்பானவர்களாக எண்ணப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது. மனிதனுக்கு நிலமும் அவனுடைய குடிமதிப்பும் அவனுக்கான அடையாளத்தை வழங்குகிறது. எகிப்தில் இஸ்ரயேல் மக்களுக்கு அடிமை என்ற அடையாளம் மட்டுமே காணப்பட்டது. கடவுள் தம்முடைய ஓங்கிய புயத்தால் மோசே என்ற மாமனிதர் வழியாய், தேங்கி நின்ற வரலாற்றை இயக்கமுற்பட்டார். நாற்பது ஆண்டு பாலைவனப் பயணத்தின் போது கடவுளுடைய குரலுக்குச் செவிகொடுத்து அவர் விதித்த கட்டளையைக் கடைப்பிடித்தால் எப்படி உயர்த்துவார் என்றால், இச 28:3இல் நீ நகரிலும் ஆசீர் பெற்றிருப்பாய் என்கின்றார். பாலும் தேனும் ஓடும் கானானை இலவசமாகக் கடவுள் உங்களுக்கு வழங்குவார். இறைவன் வழங்கும் நாட்டில் வாழ்விடங்களை அமைத்து ஆசீர்வாதமான வாழ்க்கை வாழ உங்களை உயர்த்துவார். அனாதையைப் போல அந்நியமண்ணில் அடிமையாய் அலைந்து திரிந்த உங்களை அமைதியோடு வாழவைப்பார் என்று எதிர்கால நிலையை வெளிப்படுத்துகிறார். அடையாளம் இழந்த இனம் இனி அடையாளப்படுத்தப்படும். திபா 127:1-இல் ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில், அதனைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும். திபா. 147:13 இல் அவர் உன் வாயில்களின் தாழ்களை வலுப்படுத்துகின்றார். உன்னிடமுள்ள உன் பிள்ளைக்கு ஆசி வழங்குகின்றார். நம்முடைய ஆண்டவர் நம்முடைய வாழ்விடத்தை ஆசீர்வதித்து உயர்த்துகின்ற உன்னதராக இருக்கின்றார்.

## *2. வாழ்வின் பயணங்களை ஆசீர்வதித்து உயர்த்தும் உன்னதர்* : (இச 28:6)

வாழ்க்கை என்பது நீண்ட பயணம் என்பார்கள். இஸ்ரயேல் மக்களுடைய பயணம் என்பது பற்றுறுதியின் பயணமாக இருந்தாலும் சோர்வும், தடுமாற்றமும், தடங்கல்களும், களைப்பும், ஐயப்பாடுகளும் நிறைந்த நிலையையே மேற்கொண்டு வந்தனர். மோசே பாலைவனப் பயணத்தில் சொல்லும் கடவுளுடைய வார்த்தை இச 28:6-இல், நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், செல்கையிலும் ஆசி பெறுவாய். காரணம், படைத்தவர் இந்தப் பயணத்தில் உன்னோடு இருக்கின்றார். எகிப்தில் இதுவரை வழிதெரியாத பயணம் மேற்கொண்டார்கள். மனிதர்களால் அடைக்கப்பட்ட பயணம். இனி மேற்கொள்ளும் பயணம் என்பது ஆண்டவரை முன்னிறுத்திய பயணம், இடறல்களைத் தகர்த்தெறியும் பயணம், உறவுகளால் இணைக்கப்பட்ட பயணம். இந்த உலகத்தில் மேற்கொள்ளப்படும் பயணம் பாதிப்புகளைப்

பலநிலைகளில் தந்திருக்கின்றது. இச 28:7-இல் உனக்கு எதிராக எழும் உன் பகைவர்கள் உனக்கு முன் முறியடிக்கப்படும்படி ஆண்டவர் அவர்களை உன்னிடம் ஒப்படைப்பார். அவர்கள் ஒருவழியாய் உனக்கு எதிராக வருவார்கள். ஆனால் ஏழுவழியாய் உன் கண்களுக்கு முன்னே ஓடிப்போவார்கள் என்கிறார். கடவுள் நம்முடைய பயணங்களில் நமக்கு ஆசீர்வாதம் வழங்குவார். திபா 121:7,8-இல் தீங்கு நிறைந்த சூழலில் நம் போக்கையும் வரத்தையும் அவர் பாதுகாக்கின்றவராக இருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் இறைவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டால் அணையாத விளக்காகப் பயணத்திற்குத் துணையாக இருந்து நம்மை உயர்த்துகின்றவராக இருக்கிறார்.

### *3. வாழ்வின் பணிகளை ஆசீர்வதித்து உயர்த்தும் உன்னதர்* : (இச 28:8)

இஸ்ரயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்தில் பணிச் சுமையின் தாக்கத்தால் அதிக மனவேதனைகளை எல்லாம் அனுபவித்தார்கள். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறாதவர்களாய்க் கடுமையான வேலைகளால் ஒடுக்கப்பட்டார்கள். விப 1:13,14-இல் எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலைவாங்கினர். கடினமான சாந்து செங்கல் வேலையாலும் அனைத்து வயல்வெளி வேலையாலும் அவர்கள் வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தனர். வாழ்க்கையே கசந்து போகும் நிலையிலே காணப்பட்ட மக்களைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகின்ற வார்த்தை இச 28:8 இல் "உன் களஞ்சியங்களிலும் நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் நீ ஆசி பெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார். உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டில் நீ ஆசி பெற்றிடுவாய்" என்றார். வறுமையின் உச்சத்தில் வெறும் வயிற்றில் வாழ்ந்தவர்களுக்கு இனி நிறைவான வாழ்வு இறைவனால் வழங்கப்படும் என்பதை வெளிப்படுத்துகின்றார். பிறருடைய உடைமையில் பணிசெய்கிறவர்களாக அல்ல; இனிச் சொந்த உடைமையில் பணிசெய்ய வைப்பார். உழைப்புக்கு ஏற்ற பலனை அனுபவிப்பீர்கள். பிறருடைய இல்லாமையை அகற்ற கடவுள் உங்களைக் கருவிகளாகப் பயன்படுத்துவார் என்பதையும் புரிய வேண்டும். திபா 128:2-இல் உமது உழைப்பின் பலனை நீர் உண்பீர், நீர் நற்பேறும் நலமும் பெறுவீர் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்தப் புதிய மாதத்தில் கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் நம்முடைய வாழ்விடத்தை, வாழ்வின் பயணத்தை, வாழ்வின் பணிகளை அவர் ஆசீர்வதித்து நம்மை உயர்த்தும் உன்னதராக இருப்பார்.

அருள்திரு. D. **டார்வின் வினோ**

01-04-2021



# மகிழ்விக்கும் மகிபர்

எசா 60:11-22

**"... நானோ உன்னை என்றென்றும் பெருமைப்படுத்துவேன். தலைமுறைதோறும் மகிழ்ச்சிக்கு உரியவனாக்குவேன்"** (எசா 60:15).

2019-ஆம் ஆண்டுக்கான உலக மகிழ்ச்சி அறிக்கையை ஐ.நா. வெளியிட்டுள்ளது. உலகின் 156 நாடுகள் இடம்பெற்றிருந்த மகிழ்ச்சிப் பட்டியலில், இந்தியா 140-ஆவது இடத்தைத்தான் பிடித்திருக்கிறது. 2018-ஆவது ஆண்டில், 133-ஆவது இடத்தில் இருந்த இந்தியா ஏழு இடங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டது. நமது அண்டைய நாடுகளான பாகிஸ்தான் 67-ஆவது இடமும், வங்கதேசம் 125-ஆவது இடமும், சீனா 93-ஆவது இடமும் பெற்றுள்ளன. இந்த அறிக்கை ஒவ்வொரு நாட்டின் குடிமக்களின் வருமானம், சுதந்திரம், நம்பிக்கை, ஆரோக்கியமான ஆயுட்காலம், சமூக ஆதரவு, பெருந்தன்மை ஆகிய ஆறு அம்சங்களை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. உலகின் மகிழ்ச்சியான நாடுகளில் முதல் இடத்தை பின்லாந்தும், டென்மார்க், நார்வே, ஐஸ்லாந்து, நெதர்லாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும் பிடித்திருக்கின்றன. இந்த நாடுகள் எல்லாம் மக்கள் அதிகம் அறியாத குட்டி நாடுகளாகவே உள்ளன. ஆனால் மக்கள் அறிந்த வளரும் நாடுகள் மகிழ்ச்சிப் பட்டியலில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? மக்களின் தவறான வாழ்வு என்று புரிந்து கொள்ளலாம்.

ஏப்ரல் மாதம் என்றாலே கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் கொடுக்கக்கூடிய மாதம். கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்பிக்கையிழந்த மக்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. எசாயா 60-ஆவது பிரிவில் எருசலேம் மக்களின் மீட்பு, மேன்மை, மகிழ்ச்சி பற்றி சொல்லப்பட்டுள்ளது. 'ஆண்டவரின் நகர்', 'ஆண்டவரின் இல்லம்' என்று அழைக்கப்பட்ட எருசலேம் கைவிடப்பட்டு மண்மேடாகக் காணப்பட்டது. இறைவாக்கினர் எசாயா வழியாகக் கடவுள், எருசலேம் விடுவிக்கப்பட்டு, மேன்மையும், மகிழ்ச்சியும் பெறும் என்று வாக்குரைக்கின்றார். ஆண்டவரே "மகிழ்விக்கும் மகிபர்" என்பதை இப்பகுதி வழி தியானிப்போம்.

### *1. இடிந்த சுவரைக் கட்டும் மகிபர்* :

எசா 60:10-11-இல் "உடைந்த உன் மதில் சுவரை அன்னிய நாட்டவரால் கட்டி.....இதன் வாயில்கள் எப்போதும் திறந்திருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. எருசலேமின் மதிற்சுவர் இடிந்த மண்மேடுபோல் காட்சியளித்தது. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி வந்த மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. இச்சூழலில் ஆண்டவர் தமது மாட்சியை எருசலேம் மீது ஒளிரச் செய்து, மேன்மைப் பெறச் செய்வார் என்று வாக்குரைக்கின்றார். அன்னிய நாட்டு மன்னர்கள் செல்வங்களைக் கொண்டு வந்து உனக்குப் பணிவிடை செய்வார்கள் என்று நம்பிக்கை ஊட்டுகின்றார்.

2020-ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் டிரம்ப் இஸ்ரயேலின் தலைநகர் எருசலேம் என்று அறிவித்தார். இஸ்ரயேலின் தலைநகரமாக எருசலேம் இருக்கும் போது அனைத்து நாட்டின் தூதரகங்களும் கட்டப்படும். நம் வாழ்வில் இடிந்துபோன தருணங்களும், வலிகளும் உண்டு. கடவுள் நம் வாழ்வையும் கட்டி மகிழ்விக்கும் மகிபராய்ச் செயல்படுவார்.

### *2. இழிவில் மேன்மைப்படுத்தும் மகிபர்* : (எசா 60:13)

"லெபனோனின் மேன்மை உன்னை வந்து சேரும்." மேன்மை என்றால் 'சிறப்பு', 'உயர்வு' என்று பொருள். லெபனோன் என்றால் 'வெண்மையான மலை' என்று பொருள். லெபனோன் பனியால் மூடப்பட்டிருக்கும். இங்குள்ள திராட்சையும், கேதுரு மரங்களும் பெயர் பெற்றவை. செழிப்பான இடம். ஆடு மாடுகளின் மேய்ச்சலுக்குச் சிறந்த இடம். லெபனோன் வலிமைக்கும் அழகுக்கும் அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது. சாலமோன் வாழ்ந்த அரண்மனை லெபனோனின் காட்டையொத்த வீடு எனப் பேசப்படுமளவுக்குச் சிறப்பானது அக்காடு. எருசலேமுக்கு லெபனோனின் மேன்மை வந்துசேரும் என்று கூறுகின்றார்.

எசா 60:14-இல் "உன்னை ஒடுக்கியவரின் புதல்வர் உன்னிடம் தலைவணங்கி வருவர். உன்னை அவமதித்தவர் அனைவரும் உன் காலடியில் பணிந்து வீழ்வர்." எசா 60:15-இல் "...நானோ உன்னை என்றென்றும் பெருமைப்படுத்துவேன்" என்று ஆண்டவர் வாக்குரைக்கின்றார். பல நேரங்களில் நாம் நம் குடும்பத்தால், நண்பர்களால், உறவினர்களால், பணிசெய்கின்ற இடத்தில் இழிநிலை அடைந்திருக்கலாம். ஆனால் ஆண்டவர் நம் இழிநிலையை மாற்றி மேன்மை பெறச் செய்து மகிழ்விப்பார்.

### *3. இல்லத்தை அழகுபடுத்தும் மகிபர்* :

எசா 60:13-இல் "...என் திருத்தூயகத்தைச் சுற்றியுள்ள இடத்தை அழகுப்படுத்துவேன். தேவதாரு, புன்னை, ஊசியிலை மரம் ஆகியவை

கொண்டு வரப்படும்'' என்று சொல்லப்பட்டுள்ளது. இல்லம் என்பது இறையில்லம். திருப்பாடல்கள் 84, 122 இறையில்லம் மகிழ்ச்சி தரும் என்பதை வலியுறுத்துகின்றன. எருசலேம் இறையில்லம் இஸ்ரயேல் மக்களின் வாழ்வோடு தொடர்புடையது. அடிமைத்தனத்திலிருந்து வந்த மக்கள் "எருசலேம் இறையில்லத்தைக் கட்டிய பின்புதான் தங்கள் இல்லத்தைக் கட்டினார்கள்.'' இன்றைக்கு நம்மில் பலர் மகிழ்ச்சி இன்றி வாழ்வதற்குக் காரணம் இறையில்லத்தை மறப்பதாகும்.

ஆண்டவர் மக்களின் வாழ்வோடு தொடர்புடைய கடவுளின் இல்லத்தை அழகுப்படுத்துவேன் என்று கூறுகின்றார். மான்கள் நீரோடையை வாஞ்சிப்பதுபோல நாமும் இறையில்லத்தை வாஞ்சிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, சாவு, உயிர்ப்பு நம்பிக்கையிழந்து, மகிழ்ச்சியையிழந்து கண்ணீரோடும், வேதனையோடும், வலியோடும் காணப்பட்ட மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. மகிழ்விக்கும் மகிபர் இந்த மாதத்தில் நிறைவான மகிழ்ச்சியைத் தந்து வழிநடத்துவாராக.

திரு. ***மு. ஜெஸ்லின் ஸ்டீபன்***

01-05-2021



# வலிமை தரும் வல்லவர்

எசா 40:12-31

**"அவர் சோர்வுற்றவருக்கு வலிமை அளிக்கின்றார்; வலிமையிழந்தவரிடம் ஊக்கம் பெருகச் செய்கின்றார்"** (எசா. 40:29).

வலிமை வாய்ந்த வல்லவர் உலகத்தைப் படைத்தார். எல்லா அதிகாரங்களுக்கும் உரியவராக இருந்து வானங்களையும், பூமியையும், மனுமக்களையும் ஆளுகை செய்கிறார். வாழ்வு என்பது போராட்டச் சாலையில் புகுவதற்கும், பந்தையச் சாலையில் ஓடுவதற்கும் ஒப்பானது. இந்த வாழ்வில் உழைக்க, நடக்க, ஓட, போராட அன்றாடம் வலிமை தேவை. வாழ்வுக்குரிய வலிமையைத் தந்து வழி நடத்தப் போகின்ற வல்லவரைக் குறித்து இப்புதிய மாதத்தில் சிந்திப்போம்.

***1. மனித வலிமை*** : (திபா 33:16)

மனித வாழ்வு நிலையற்றது. ஆகையால் மனிதர் நிலையற்றவர்கள், நிர்ப்பந்தமானவர்கள், வலிமையற்றவர்கள். பெரியவர்களை வல்லவர்கள் என்றழைப்பது உண்டு. ஆனால் மனிதர் தம் சுயவலிமையினால் தங்களை வலுப்படுத்த நினைக்கின்றனர். ஆனால் வல்லவரின் வலிமைக்கு முன்பாக மனிதவலிமைகள் நிலைநிற்பதில்லை. விடுதலை பெற்று வீறுடன் புறப்பட்ட இஸ்ரயேலர், எகிப்தியர் தூரத்தில் பின்னாக வரக் கண்டு பயந்தனர். எகிப்தின் வலிமை மிக்க படையைக் கண்டு பயந்த இஸ்ரயேலருக்கு முன்பாக, வலிமை பெற்ற எகிப்தின் படையணிகள் செங்கடலில் அமிழ்ந்து போயின. பழங்கால இஸ்ரயேலில் தலை முழுவதும் அடர்த்தியான முடி, வலிமைக்கும், வீரத்திற்கும் அடையாளம். இதனைப் பெற்ற இஸ்ரயேலின் நீதித்தலைவர்களில் ஒருவரான சிம்சோன் தன் சுயவலிமை என நினைத்து கடவுளால் கொடுக்கப்பட்ட வலிமையைத் தவறாகப் பயன்படுத்தி வீழ்ச்சியடைந்தார். ரெகபெயாம் தலைமையில் யூதர்கள் தங்கள் ஒற்றுமையை வலிமையாக்கிக் கொள்ள கரவலிமையினால் நாட்டை ஒன்றாக்க முயன்றபோது, வல்லவர் செமாயாவைக் கொண்டு அவர்களை எச்சரித்தார். கடவுளால் நடத்தப்படுவனவற்றை மனிதரின் கை வலிமையால் மாற்ற முடியாதென்று புரிந்து கொண்டவர்களாகத் திரும்பிச் சென்றனர் (2குறி 11:1-4). சவுல் தன் சுயவலிமையினால் ஆண்டவரின் மக்களைக் கொலைசெய்ய சென்றபோது ஆண்டவரால் சந்திக்கப்பட்டு, தன் வலிமையின்மையை உணர்ந்தார். உலகின் கரங்கள் வலிமையற்றவை. கடவுள் வலிமைப்படுத்துவதைப்

போன்று, உலகின் மக்களால் வலிமைப்படுத்த முடியாது. எந்தவொரு அரசரும் தன் படையின் மிகுதியால் காக்கப்படார். சவுரியவானும் தன் வலிமையின் மிகுதியால் தப்பான். எனவே மனித வலிமைகள் வீழ்ச்சிகளையே தரும். ஆகவே சுயவலிமைகளை விட்டு விடுவோம். ஆண்டவரின் வலிமையை நாடி அவரிடம் அடைக்கலம் புகுவோம்.

***2. வல்லவரின் வலிமை:*** (எசா 40:29)

இஸ்ரயேலர் வாழ்வில், போர்களினாலும், சிறைகளினாலும், உடைக்கப்பட்ட அனுபவத்தோடு சோர்ந்து போயிருந்தபோது வலிமை தரும் வல்லவர் உண்டென இறைவாக்கினர் நம்பிக்கையூட்டுகிறார். இளைத்துப் போகும் இளைஞர் ஓடினாலும், இளைப்படைவதில்லை. இடறிவிழும் வாலிபர் நடந்தாலும் சோர்ந்து போகார் எனக் கடவுள் வழங்கும் அனுபவங்களைச் சுட்டிக் காட்டுகிறார். வலிமை பெறுவோர் புதுச் சிறகுகளால் தம்மை அலங்கரித்துக் கொண்டு, எழுந்து பறக்கும் கழுகைப் போல் இருப்பார் என்கிறார். நமது சோர்வுகளிலும், வலிமையின்மையிலும், தடுமாற்றங்களிலும் கடவுள் நம்மோடு இருந்து வலிமை தருகிறார். நமது சுயவலிமையினால் எதையும் செய்ய முடியாது என்ற சூழ்நிலை வரும் போது அவரது உடனிருப்பு நமக்கு வலிமை தருகிறது. சுயவலிமைக்கு இடம் கொடுத்து வீழ்ச்சியடைந்ததை எண்ணி, உன்னதரைப் பார்த்து இந்த ஒரு விசை மாத்திரம் என்னை வலிமைப்படுத்தும் என சிம்சோன் வேண்டிக் கொண்டபோது, கடவுள் வலிமை கொடுக்க, பெலிஸ்தியரை அழித்துப் போட்டார். மோசேயின் கைகள் தளர்ந்தபோது அதனை வலிமையுற்றதாக மாற்றினார். யாக்கோபு ஏசாவைச் சந்திக்கப் பயந்து யாப்போக்கு ஆற்றண்டையில் இரவு முழுவதும் போராட கடவுள் மன வலிமை கொடுக்க, தன் சகோதரரோடு ஒப்புரவானார். அஞ்சி நடுங்கிய பேதுரு, தூய ஆவியாரின் வலிமையைப் பெற்றபோது மிகத் துணிச்சலுடன் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். எல்லாச் சூழ்நிலைகளைச் சந்திக்கவும், அனைத்து மக்களையும், சக்திகளையும் சந்திக்கவும் வலிமை பெற்றார். அனைத்து ஆற்றலும் பொருந்திய கடவுள், சிதறிக் கிடந்த இஸ்ரயேலரைக் கூட்டிச் சேர்த்து வலிமையாக்கினார். அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ரூஸ் வெல்ட், சிறுவனாக இருந்தபோது இளம் பிள்ளைவாதத்தினால் கால்கள் செயல் இழந்து நடையை இழந்தார். உடலில் வலிமை இழந்தாலும் மனவலிமையுடன் அயராது உழைத்து அதிபரானார். உருளும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே சாதிக்கும் வலிமையை பெற்று விளங்கினார். சோர்வுற்றுப் போயிருந்த பவுலுக்கு ஆண்டவர் என் வல்லமை பூரணமாக விளங்குமென்றார். வலிமை தரும் வல்லவரை தரிசித்து புதிய மாதத்தின் ஆசி பெறுவோம்.

சுவி. T.S. **ஏசையன்**

01-06-2021



# பேரன்பு காட்டும் பரமன்

விப 20:1-17

**"...என் மீது அன்பு கூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்"** (விப 20:6).

தொழில் நுட்பமும், தொலைத் தொடர்பும் வளர்ந்து விட்ட இன்றைய சூழ்நிலையில் மனித அன்பானது மங்கிப் போய்விட்டது. கூடி வாழும் மனிதர்கள், சகமனிதரை தங்களுடைய சுயத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி அவர்களை முழுமையாக அன்பு செய்யாத நிலையை எல்லா இடங்களிலும் பார்க்கிறோம். அன்பைப்பற்றிய ஒரு தெளிவில்லாத காலகட்டத்தில் நாம் வைக்கப்பட்டுள்ளோம். திருமறைப்பகுதியில் கடவுளின் கட்டளைகள் வழியாகப் பரமனின் பேரன்பை வெளிப்படுத்துகிறார் (விப 20:1-17).

மோசே வழியாகக் கடவுள் அளித்த பத்துக்கட்டளைகள் ஒழுக்க நெறிசார்ந்தவை. இவைகள் கடவுளை அடைவதற்கும், நம்மோடு வாழும் மக்களிடம் அற, ஒழுக்க நிலைகளில் இணைந்து வாழவும் கட்டளைகள் கொடுக்கப்பட்டன. அறத்துடன் கலந்த இந்தக் கட்டளைகள் கடவுளுக்கும், மனிதருக்கும் இடையேயான உறவு சரியாக இருக்க வேண்டும் என உணர்த்துகின்றன. இறைமக்கள் தங்கள் முன் வைக்கப்பட்ட கற்பனைகளைக் கைக்கொண்டால் மட்டுமே இறைவனின் பேரன்பை உணரமுடியும்.

## *1. தனி மனித வாழ்வில் பேரன்பு காட்டும் கடவுள்* :

(விப 20:3)

**"என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது."**

மனித வாழ்வை நெறிப்படுத்த சட்டங்கள் தேவை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்க்கையில் "யாவே"யுடன் ஏற்படுத்திக் கொண்ட உறவிலிருந்து விலகி, தங்களுக்கென்று ஒரு வரையறையை வகுத்துக் கொண்டார்கள். தங்கள் அன்றாட வாழ்வில் மாற்றம், சமூக உறவுகளில் மாற்றம், சமயக் கோட்பாடுகளில், வழிபாடுகளில் பின்மாற்றம் அடைந்தார்கள். தங்களுக்கு என "பாகல்" தெய்வங்களை உருவாக்கி வழிபட்டனர். இந்நிலையில் மோசே வழியாக இறைவன் பத்துக் கட்டளைகளைக் கொடுக்கின்றார்.

கடவுள் ஒருவரே படைப்பாளர். அவருக்கே முதன்மை இடம் கொடுக்க வேண்டும். வேறு எந்தப் படைப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காதிருங்கள். ஆனால் இன்றைய தனி மனித வாழ்வில் பணம், பதவி, கல்வி, பாரம்பரியம், பொய்ப்போதனைகள், சுரண்டல்கள் ஆகியவற்றிற்கு முதலிடம் கொடுக்கிறோம். ஆனால் சக்கேயுவின் தனி மனித வாழ்வில் நிகழ்ந்த மாற்றத்தின் மூலம் கடவுளின் ஆசியைப் பெற்றுக் கொள்கின்றார் (லூக் 19:1-10). இத்தகைய திறந்த மனத்துடனும், அன்பு நிறைந்த உள்ளத்துடனும் வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

### ***2. குடும்ப வாழ்வில் பேரன்பு காட்டும் கடவுள்*** : (விப 20:12)

இஸ்ரயேல் மக்கள், தங்கள் விடுதலைக்குப்பின் கானான் நாட்டில் குடியேறும் போது 10 கட்டளைகளைக் கடவுளின் மூலம் பெற்றுக் கொள்கின்றனர். இந்தக் கட்டளைகள் அனைத்தும் அவர்களின் நல்வாழ்விற்காக வழங்கப்பட்டவை. அதில் முக்கியமான மற்றும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகின்ற கட்டளை **“உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன்தந்தையையும், உன் தாயையும் மதித்து நட”** (விப 20:12).

சில மாதங்களுக்கு முன் ஒரு நாளிதழில் வந்த செய்தி. ஒரு பெற்றோர் தங்களுடைய மகன், மருமகளால் வஞ்சிக்கப்பட்டு, சுமார் ரூ. 50 லட்சம் பெறுமானமுள்ள வீட்டையும், நிலத்தையும் எழுதிக் கொடுத்த சில நாள்களிலே அவர்கள் அனாதைகளாக்கப்பட்டார்கள். இதையறிந்த மாவட்ட ஆட்சியாளர், மீண்டும் பெற்றோரின் பெயரில் வீட்டையும், நிலத்தையும் எழுதி கொடுக்க வழிசெய்தார். ஏன் இப்படிப்பட்ட நிகழ்வுகள் குடும்பங்களில் நடைபெறுகின்றன? “மூத்தவன் மேல் தளத்தில் கொண்டாட்டம், இளையவன் கீழ் வீட்டில் பித்தலாட்டம், பெற்றோர் அனாதை இல்லத்தில் திண்டாட்டம்.”

திருமறை நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? பெற்றோரை மதித்து நடக்க வேண்டும் (தொநூ 45:17-25). யோசேப்பு தனக்கிருந்த அதிகாரம், ஆடம்பரமிக்க வாழ்வை முதுமையில் வாடிக் கொண்டிருக்கும் தன் தகப்பனோடும் தன் குடும்பத்தினரோடும் சேர்ந்து வாழ்வதற்கான தடைகளாக எண்ணாமல் தன் தகப்பனாரின் ஆசீர்வாதமாகவே எண்ணினார். எனவே குடும்ப வாழ்வில் பெற்றோர்களின் மனம் நிறைவாக நடந்து கொள்ளும் எந்தப் பிள்ளைகளும் இறைவனால் கைவிடப்பட மாட்டார்கள், வாழ்வில் உயர்வு பெறுவர் என்பதற்கு யோசேப்பின் வாழ்க்கை நமக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது.

## *3. உடன்படிக்கைச் சமுதாயத்தை உருவாக்கும் பேரன்புள்ள கடவுள்* : (விப 20:17)

**“பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே.”**

கடவுளின் பெயரால் மனிதரிடையே நலமான உறவுகளை உருவாக்கி, உடன்படிக்கைச் சமுதாயத்தை உருக்குலையாமல் பாதுகாப்பதே கடவுள் கொடுத்த 10 கட்டளைகளின் நோக்கம். அனைத்து மனிதருக்கும் உள்ள மாண்புதான் உடன்படிக்கைச் சமுதாயத்தின் அடித்தளம். அந்த மாண்புக்கு ஊறு நேரிடுகின்ற பொழுது அதை மீட்டுக் கொடுப்பது அனைவரது கடமை. குறிப்பாக, மனித உரிமைகளை இழந்து, மனிதம் சிதைந்து நிற்கும் ஏழை எளியோர் ஒடுக்கப்படுதல், அநீதிகள், பாலியல் வன்முறைகள், கொலை, கொள்ளை, பிறர் உடமைகளை அபகரித்தல், சுரண்டல், சீர்கெட்ட வாழ்வு, குடும்ப உறவுகளில் விரிசல், சாதி, சமயவெறி, மொழிவெறி, இனவெறி என உடன்படிக்கையின் சமுதாயத்தில் தீமைகள் பரந்து கிடக்கின்றன.

இஸ்ரயேலர், உடன்படிக்கை வாயிலாக, தங்களைக் கடவுளின் உரிமைச் சொத்தாய், ஒரு குலத்தின், இனத்தின், நாட்டின் பிரதிநிதிகளாகக் கருதி வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த சமூகத்தில் குடும்பப் பற்றும், சமூக உணர்வும், ஒற்றுமையும் மேலோங்கி நின்றன. இந்தக் கூட்டொருமையின் காரணமாக சமூகத்தினின்று பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்குத் தனி மனிதர் சமூகத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனர்.

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அரசியல் அடக்கு முறைகளாலும், ஆதிக்கச் சக்திகளாலும், ஏழை எளியோர், சமாரியர், பெண்கள், நோயாளிகள் போன்றோருக்கு நீதியையும், நம்பிக்கையையும் தருவதாக மலைப் பொழிவில் (மத் 5:3-12) குறிப்பிடுகின்றார். இறைமக்கள் வாழ்வில் கனிவு, நீதி, இரக்கம், தூய்மை, அமைதி, பொறுமை போன்ற தகவுகளாலான புதிய உடன்படிக்யின் சமூகம் உருவாக்கவும் தம்மை அர்ப்பணித்தார். இவ்வுலக வாழ்வில் இயேசுகிறிஸ்து ஒருவரே பேரன்புமிக்கவர். நாம் ஒரே மக்களினமாக மாற கடவுளின் கற்பனைகளைக் கடைப்பிடித்து, தனிமனித வாழ்வில், குடும்ப வாழ்வில், சமுதாய வாழ்வில் அறநெறிகளோடு வாழ்ந்து பேரன்பு கொண்ட கடவுளிடம் அன்பு செலுத்தி வாழ இந்தப் புதிய மாதத்தில் கடவுள் நமக்கு அருள்புரிவாராக.

அருள்திரு. A. **ஆல்வின் ஜெயக்குமார்**

# துன்பத்தை அகற்றும் தூயவர்

எசா 51:17-23

**"...இதோ உன்னை மதிமயக்கும் கிண்ணத்தை உன் கையினின்றும் அகற்றிவிட்டேன்; என் சினக்கிண்ணத்தினின்று நீ இனிக் குடிக்கவேமாட்டாய்"**

(எசா 51:22).

பாபிலோனுக்குச் சிறையாகச் சென்றவர்கள் ஏறக்குறைய 50 ஆண்டுகாலமாக நெபுகத்னேசராலும் அவருக்குப் பின் வந்த அரசர்களாலும் அதிகமாக ஒடுக்கப்பட்டார்கள். பாபிலோனிலுள்ள யூதர்கள் தாங்கள் விடுதலை பெற்று எப்பொழுது திரும்ப எருசலேம் செல்லக்கூடும் என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு விடுதலை வீரன் தோன்றித் தங்களை எருசலேம் அழைத்துச் செல்வார் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்கள். இஸ்ரயேல் மக்கள் சிறையிருப்பின் இறுதிக் காலத்தில் அங்கிருந்தார்கள். யூத மக்களுக்கு எசாயா வழியாக அவர்களின் துன்பமான வாழ்வை மாற்றுவேன் எனக் குறிப்பிடுகிறார். எசா 51:22 'இதோ உன்னை மதிமயக்கும் கிண்ணத்தை உன் கையினின்றும் அகற்றிவிட்டேன் என்சினக் கிண்ணத்தினின்று நீ இனிக் குடிக்கமாட்டாய்" மறுபடியும் புது வாழ்வு பெறும் மக்களுக்கக் கடவுள் எப்படிப்பட்டவராக இருக்கின்றார் என்பதை தியானிப்போம்.

***1. துணையற்றவருக்குத் துணை நிற்கும் தூயவர்***: (எசா 51:18)

அமெரிக்காவின் தென்பகுதியில் மஞ்சள் காய்ச்சல் என்ற கொள்ளை நோய் வெகுவாக பரவியது. ஒரு வீட்டில் தகப்பனார் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தார். அவருடைய மனைவியும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள். தொற்றுநோயைக் கண்டு பயந்து பக்கத்து வீட்டுக்காரர்கள், உறவினர்கள் கூட அவர்களைப் பார்க்க அருகில் வரவில்லை. தாய் தன் சிறு மகனை அழைத்து "மகனே, நான் உன்னைவிட்டுப் போகிறேன். நான் போன பின்பு இயேசு சுவாமி உனக்குத் துணையாக வருவார்" என்று சொல்லிவிட்டு தாய் மரித்துப்போனாள். அவளுடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அழுதபடி உட்கார்ந்தான். அவனை அழைத்துச் செல்ல எவரும் விரும்பவில்லை. ஒரு பெரியவர் சிறுவனின் அருகில் வந்து யாருக்காகக் காத்திருக்கிறாய்?

உனக்கு துணை யார்? எனக்கேட்டார். அம்மா சொன்ன வார்த்தைகள் அந்த சிறுவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. இயேசு சுவாமி எனக்கு துணையாக வருவார். அவருடைய வருகைக்காக காத்திருக்கிறேன் என்றான். இதைக் கேட்ட பெரியவர் இருதயத்தில் தொடப்பட்டார். கண்களில் நீர்வழிய இயேசு தான் என்னை அனுப்பினார் என்று கூறி தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். துணையற்ற சிறுவனுக்குத் துணையாக இருந்தார் பெரியவர்.

கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதில் யூதாவின் மக்களுள் பலர் பாபிலோனில் அடிமைகளாக நசுக்கப்பட்ட போது அநேக தாய்மார்கள் பெற்றெடுத்த புதல்வர்களை இழந்து, சிறுமையுற்றவராகவும், துணையற்றவராகவும் வாழ்ந்தனர். எசா 51:18 ..."அவன் வளர்த்துவிட்ட ஆண் மக்களுள் அவளுக்குக் கைகொடுப்பார் யாருமில்லை! இப்படிப்பட்ட துணையற்ற நேரத்தில் இறைவாக்கினர்மூலம் தம் மக்களுக்குத் துணை நிற்பதாகக் கூறுகிறார். இன்று சமூகத்தில், ஆதரவற்று, ஓரம்கட்டப்பட்டு ஒடுக்கப்பட்ட ஏழை, எளிய மக்களோடு கடவுள் துணைநிற்கிறார்.

### *2. நம்பிக்கை தரும் தூயவர்* : (எசா 51:22)

ஒவ்வொரு மனிதருடைய வாழ்விலும் துன்பங்கள் உண்டு. 2020ஆம் ஆண்டு Corid-19 கொள்ளை நோய் கொரோனா ஆதிக்கம் செலுத்தியது. உலக வல்லரசு நாடுகளையே நடுங்கச் செய்தது. இதன் விளைவாக மனித வாழ்க்கைக்குள்ளும், குடும்பங்களிலும், சமூகத்திலும் பெரும் துன்பமாக மாறி இருக்கிறது. எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையில் முழுமை இல்லாச் சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறோம். கடன் சுமை, வேலையில்லாத்திண்டாட்டம், விலைவாசி உயர்வு, பொருளாதார வீழ்ச்சி, குடும்பங்களில் உறவுகள் புரிந்து கொள்ளாமை, குடும்ப உறவுகளில் நம்பிக்கையற்ற நிலை. புயலில் சிக்கிய படகில் பயணம் செய்த கிறிஸ்துவின் சீடர்களின் நிலை போல் துன்பத்தில் நம்பிக்கையின்மை காணப்படலாம். ஒருவித அச்சம் ஏற்படலாம். ஆனால் கடவுள் நம்மோடு பயணம் செய்யும் போது பெரும் காற்றையும், கடலையும் கட்டுப்படுத்த இறைவனால் முடியும் என்கிற முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். கடவுளிடம் வைத்த நம்பிக்கையை சோதித்தறியவே யோபு, வீடு, பொருள், உடல்நலம், உறவுகள் அனைத்தையும் இழக்க நேரிட்டது. இருப்பினும் இறைவன்மேல் கொண்ட நம்பிக்கையில் சற்றேனும் விலகாமல் துன்பத்திலும் இறைப்பெலனோடு வெற்றி கண்டார். இருமடங்கு இறைஆசியும் பெற்றார் (யோபு 42:12). துன்பத்திலும் யோபுவின் வாழ்வில் கடவுளின் உடன் இருத்தல் புதிய நம்பிக்கை தந்தது.

**3. புது வாழ்வு அருளும் தூயவர் :** (எசா 51:22)

பாபிலோனில் அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட யூதாவின் மக்கள் சிறையிருப்பதற்குப் பிந்தைய காலத்தில் இறைவாக்கினரிடம் ஆவியாரின் அருட்பொழிவு இந்நாள் மட்டும் தம்முடைய மக்களது வாழ்வில் அனுபவித்து வந்த அடிமைத்தனவாழ்வில் இருந்து மீட்டு புது வாழ்வு கொடுப்பதாக வாக்குக்கொடுக்கிறார். எசா 51:22 "இதோ உன்னை மதிமயக்கும் கிண்ணத்தை உன் கையினின்றும் அகற்றிவிட்டேன்." இனி துன்பம் உன்னை அணுகுவதில்லை எனக்குறிப்பிடுகிறார். நம் வாழ்வில் துன்பம் தான் வாழ்வின் இறுதி என்றால் வாழ்வுக்கு அர்த்தமேயில்லை. மாறாகத் துன்பத்திற்குப் பின்பும் வாழ்வு உண்டு என்பதே இயேசு நமக்கு கற்றுத்தரும் பாடம். இந்தப் புதிய மாதத்தில் நம்முடைய எத்துன்பச் சூழலிலும் துணைநிற்கும் தூயவர் நம்முடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் இம்மாதத்தைத் தொடங்குவோம். யூதா மக்களோடு புது வாழ்வு அருளிய தூயவர் நம்முடைய வாழ்விலும் துன்பம் அகற்றி புது வாழ்வு அருள்வாராக.

அருள்திரு. A. **ஆல்வின் ஜெயகுமார்**

# அதிகாலையும் ஆசியும்

நீமொ 8:1-22

**"...என்னை ஆவலோடு தேடுகின்றவர்கள் என்னைக் கண்டுபிடிப்பார்கள்"**
(நீமொ 8:17).

அதிகாலையில் எழுந்து ஆண்டவரைத் தேடுவதும், அவருக்கு முதலிடம் கொடுத்து நமது பணிகளை ஆரம்பிப்பதும் என்றுமே ஆசீர்வாதம் தருவதாகும்.

இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப்பவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் மனிதராக இந்த உலகத்தில் வாழ்ந்த போது, அதிகாலையில் எழுந்து, இறைவேண்டல் ஏறெடுத்து தமது பணிகளை ஆரம்பிப்பது வழக்கம் (மாற் 1:35).

'அதிகாலை' என்பது எப்படியிருக்கும் என்பதையும் திருமறை சொல்லுகிறது. அதாவது (i) இருட்டோடே இருப்பதுதான் அதிகாலை; (ii) சூரிய உதயத்திற்கு முன் இருப்பதே அதிகாலை.

அதிகாலையிலே ஆண்டவரைத் தேடுவதற்கும் இன்னும் சற்று விரிவாக 'அதிகாலை' என்பதைக் குறித்தும் இந்த 'அதிகாலை' நமக்கு தரும் ஆசியையும் குறித்தும் தியானிப்போம்.

### *1. அதிகாலை என்பது என்ன?* :

விஞ்ஞானிகள் 'அதிகாலை' என்பதற்குத் தரும் விளக்கங்களுள் ஒன்று இது, "சூரியன் உதயமாவதற்கு முன்பு, வானம் பொன் நிறமாக காட்சியளிக்கும்; வானம் இப்படித் தங்க நிறமாகக் காட்சி அளிக்கும் நேரமே அதிகாலை நேரம்" என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்.

வானம் தங்க நிறமாகக் காட்சி அளிக்கும் நேரம், ஒரு நாளின் ஆரம்பம் நிச்சயமாகவே 'தங்க நேரம்' தான். இந்தத் 'தங்கநேரத்தை' ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதையே ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்தத் தங்கநேரத்தை, தூங்கப் பயன்படுத்தவில்லை; தங்கநேரத்தை, தந்தையை நோக்கி ஜெபிக்கும் நேரமாகப் பயன்படுத்தினார் (மாற் 1:35).

அதிகாலை என்னும் தங்கநேரத்தை நன்றாகப் பயன்படுத்தும் பிற உயிரினங்கள், பறவைகளும், மிருகங்களும் தான். சூரியன் உதயமாவதற்குரிய அறிகுறிகள் தெரிந்ததுமே, பறவைகளும், மிருகங்களும் தூக்கத்தை விட்டு எழுந்து, தொனி எழுப்பி ஆண்டவரைத் துதித்து தங்கள் கடமைகளைச் செய்யப் போய் விடுகின்றன.

தங்கநேரமாகிய அதிகாலையில் நாம் ஆண்டவரைத் தேட வேண்டும். எப்படித் தேட வேண்டும்? (திபா 143:8). ஒரு நாளின் முழுமையான ஆசீர்வாதத்திற்காக ஆண்டவரை நாம் தேட வேண்டும்.

## *2. அதிகாலை தரும் ஆசி என்ன?:*

அதிகாலை நமக்குப் பல ஆசிகளைத் தருகிறது. மிகப் பழமையான, ஆங்கில மொழியில் அமைந்த பழமொழி ஒன்று அதிகாலையினால் வரும் ஆசியை இப்படியாகச் சொல்லுகிறது, “முன் உறங்கி, முன் எழுவது அல்லது அதிகாலையில் எழுவது, மனிதனை நலமும், செல்வமும், அறிவும் உள்ளவன் ஆக்கும்” (Early to bed and early to rise, makes a man healthy, wealthy and wise).

இது மிக உண்மையான பழமொழி. நீமொ 8இல் ஞானத்தைக் குறித்து வாசிக்கிறோம். அந்த ஞானத்தை ஒரு மனிதன் கண்டு கொள்ள அதிகாலை நேரமே உகந்தது என்று (நீமொ 8:17) கூறுகிறது.

ஏனென்றால் அதிகாலை நேரம் மூளை சுறுசுறுப்பாக, புத்துணர்ச்சியோடு இயங்கும் நேரம். இந்த நேரத்திலே மனிதர் தூக்கத்திலே மயங்காமல், இயங்கினால் ‘ஞானத்தைக்’ கண்டடைவர். ‘ஞானம்’ கொடுக்கும் ஆசியையும் மனிதர் பெற்றுக் கொள்வர். ஞானம் கொடுக்கும் ஆசி என்ன? (நீமொ 8:18-21)

ஆகவே தங்கநேரமாகிய அதிகாலை நேரத்தை, தூங்குவதற்கல்ல, ஆண்டவரோடு தங்குவதற்காகவும், ஆண்டவரைத் துதிப்பதற்காகவும் பயன்படுத்துவோமாக.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

01-09-2021

புதிய மாத நன்றித் தொழுகை

# விடுவிக்கும் விடுதலையாளர்

எசாயா. 46:1-9

**"உங்கள் முதுமை வரைக்கும் நான் அப்படியே இருப்பேன்; நரைவயது வரைக்கும் நான் உங்களைச் சுமப்பேன்; உங்களை உருவாக்கிய நானே உங்களைத் தாங்குவேன்; நானே உங்களைச் சுமப்பேன்; நானே விடுவிப்பேன்"** (எசா 46:4)

கடவுள் ஒருவரே நம் மீது கருணை காட்டுகிறவர். நாம் பிறப்பதற்கு முன்பே நம்மை அறிந்திருக்கிறவர் எசாயா 44:24-இன்படி நம் தாயின் வயிற்றில் நம்மை உருவாக்கினவர் அவர், நம் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டுள்ளார். நம்முடைய ஒவ்வொரு அசைவையும் கவனிக்கிறார். அவரிடமிருந்து வெகுதூரம் அலைந்தாலும் கூட உண்மையாகவே நம்முடன் இருக்கிறார். "தாங்கிப் பிடிக்க நீ இருந்தால் தள்ளாடும் முதுமை கூட இளமை தான் என ஒரு கவிஞன் கூறுகிறார்." எசா 46: 4-இல் "நான்" என்கிற வார்த்தை 5 முறை சொல்லப்பட்டுள்ளது. இதன் காரணம் என்ன? தம்முடைய மக்களுக்கு இரக்கத்தின் வாக்குறுதிகளை அளிக்கின்றார். அவர் மனித வாழ்வில் விடுவிக்கும் விடுதலையாளராய் இருக்கிறார்.

## *1. ஏற்றம் தந்து ஏந்துகின்ற ஆண்டவர்* : (எசா 46:4)

ஏணிப்படிகள் பலவாயினும் ஏந்துகின்ற ஒரு துணை இருந்தால் ஏற்றத்தைப் படிப்படியாய்க் காணலாம் என்பது ஒரு கவிஞனின் வரிகள்." மீட்பு வரலாற்றில் எப்போதெல்லாம் மக்கள் துயரத்தால் வாடினார்களோ அப்போதெல்லாம் கடவுள் தாயாய், தந்தையாய் வழிகாட்டும் தெய்வமாய்க் தேற்றுகிறார். பாபிலோனில் அல்லலுறும் மக்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகக் கடவுள் கூறுகிறார், "இஸ்ரயேலே நான் உன்னை மறக்கவில்லை. நான் உன்னை ஏந்துவேன்" என்கிறார். துன்பமில்லாத வாழ்க்கையே இல்லை. ஏனென்றால் நாம் அனைவரும் நமது விருப்பு வெறுப்புகளின்படி வாழக் கற்றுக் கொண்டு விட்டோம். இதையும் கடவுள் ஏற்றுக் கொண்டு நீ இதை விரும்புகிறாயா? உன் விருப்பப்படி ஆகக் கடவது என்று கொடுக்கிறார். நமது சுயநல எண்ணங்களால் நாம் நமது பொறுப்புணர்வை இழந்து விடுகிறோம். ஆனாலும் வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும் நம்மைக் கொண்டு செல்வதாகவும், கவனித்துக் கொள்வதாகவும் அவர் வாக்குறுதியளித்துள்ளார். வாழ்வின் ஒவ்வொரு நாளும் அவர் நம்முடன் இருக்கிறார். முதுமையின் பலவீனத்திலும், நம்

தலைமுடி நரைத்தும், முழங்கால்கள் பலவீனமடைந்து, கைகள் நடுங்கத் தொடங்கும் போதும், தோல் சுருங்கும்போதும் நம் மனம் குழப்பமடைந்து மறந்து போகும் போதும் அவர் நம்மை கவனித்துக் கொள்கிறார். ஏனெனில் அவர் நம் தந்தை நாம் அவருடைய மக்கள். திபா 91:12 -இன் படியும் நாம் இடறாத படிக்கு அவர் நம்மை ஏந்திக் கொண்டு போவார்.

### *2. சுமைகளை அகற்றி, சுமக்கின்ற ஆண்டவர்* :

இஸ்ரயேலர், பாபிலோனில் சிறைபிடிக்கப்பட்டதால் பாபிலோனியர், கடவுள் இஸ்ரயேலரைக் கைவிட்டுவிட்டார் எனக் கருதி எள்ளி நகையாடினர். ஆனால் எசாயா, இஸ்ரயேலின் கடவுள் தம் மக்களைச் சுமக்கிறார் என்கிறார். விப 1:11 இல் இஸ்ரயேல் மக்களைச் சுமை சுமைக்கிற வேலையால் ஒடுக்கினர். மத் 11:30 இல் இயேசு சொன்னார், என்நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. சுமை என்ற வார்த்தை சுகமானால், சுமக்கின்ற நம் பெயரும் சுவடுகளில் பதிக்கப்படும். தாய் தன் குழந்தையை கருவறையில் சுமக்கிறாள். தகப்பன் தன் பிள்ளையை தோளில் சுமக்கிறான். பிள்ளைகள் தன் பெற்றோரை வாழ்வின் இறுதி வரை சுமக்க வேண்டும். நீ திருமறையை இன்று சுமந்தால், அது எதிர்காலத்தில் உன்னைச் சுமக்கும் என்பார்கள். சுமைகள் என்பது கருவறை முதல் வாழ்வின் இறுதி வரை வந்து செல்லக் கூடியது தான். ஆனால் அதற்காக கருவறையில் சுமையைத் தாங்கிக் கொண்டு இருப்பது இல்லை. சுமையை அகற்றுகின்றவர், சுகத்தையும் தருகின்றார். இப்புதிய மாதத்தில் சுமைகளை அகற்றி சுமக்கின்றவராக இருப்பார்.

### *3. தடைகளை நீக்கித் தப்புவிக்கின்ற ஆண்டவர்* :

'நடைகள் நேர்மையானால் தடைகள் கூட நம்மைத் தடம் பதிக்க வைக்கும்'

இஸ்ரயேலருக்குத் தடையாக இருந்த செங்கடல், 40 வருட பாலைவன வாழ்வு இவைகளிலிருந்து கடவுள் தப்புவித்தார். யோபு 42:2 இல் ஆண்டவர் செய்ய நினைத்தது தடைபடாது. மீக்கா 2:13 இல் தடைகளை நீக்கிப் போடுகிறவர், நமக்கு முன்பாக நடந்து போகிறார். மனித வாழ்வில் இன்றும் பல தடைகள். நோய், வறுமை, கடன், வேலையில்லாமை போன்றவை வரலாம். இவை வரும்போது நாம் சோர்ந்து போகிறோம். இவ்வேளையில் எசா 66:13 -இன் படி ஆண்டவர் நம்மைத் தேற்றுகிறார். எண் 23:10 இன்படி அவர் பொய் சொல்லுகிற ஆண்டவர் அல்ல. இப்புதிய மாதத்தில் ஏற்றம் தந்து சுமைகளை அகற்றி, தடைகளை தாண்டக்கூடிய பெலனைத் தருவார். நம்பிக்கையுடன் செயல்படுவோம்.

அருள்திரு. S. **போவாஸ்**

01-10-2021

புதிய மாத நன்றித் தொழுகை

# வலக்கரத்தால் தாங்கும் வல்லவர்

எசாயா. 41:1-10

**".... என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்"** (எசா 41:10).

யூதர்கள் பாபிலோன் நாட்டுக்குச் சிறைப்பட்டுபோனது. வந்த அச்சுறுத்தல்களைக் கண்டு மனம் நொந்து போயினர். அப்போது கடவுள், "பக்கத்துணையாக இருப்பேன்" என்று இறைவாக்கினர் வழியாக உரைக்கிறார். சிறைப்பட்டுபோன மக்களுக்கு, எல்லாவற்றையும் - உரிமைகளையும், உடமைகளையும், உறவுகளையும் - இழந்த மக்களுக்கு, அடுத்தது என்ன நடக்குமோ என்ற அச்சம் நிறைந்த மக்களுக்கு, கொடுங்கோல் கொடுமைகளை அனுபவித்த மக்களுக்கு, நம்பிக்கையின் ஒளி இழந்த மக்களுக்கு, வாழ்க்கையே வெறுமையாய் மாறின மக்களுக்கு எசாயா 41:10 உரைக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையில் கவலை மிகுந்த சூழலில் உட்புகும்போது, எதையும் சரியாகப் பார்க்க முடியாது. எதையும் சரியாக அறிந்து கொள்ள முடியாது. எதுவும் நம் கட்டுப்பாட்டில் இருக்காது. ஆயினும் கவலைகளை அகற்றுவேன் என்று கடவுள் கூறாமல், கவலை நம்மை வருத்தப்பட வைக்கும் போது நானும் உங்களுடன் இருப்பேன், கவலைகளில் பங்கு பெறுவேன் என்று வாக்கு கொடுக்கிறார். "ஆண்டவரே, உம் வலக்கை வலிமையால் மாண்புற்றது; ஆண்டவரே, உமது வலக்கை பகைவரைச் சிதறடிக்கின்றது" (விப 15:6). "ஆண்டவரே ......... உமது வலக்கரத்தால் என்னைத் தாங்கிக் கொண்டீர்" (திப 18:35; 63:8). இது நமக்குப் பெரிய நம்பிக்கையைத் தருகிறது. ஆண்டவர் தமது வலது கரத்தால் எவற்றைச் செயல்படுத்துகிறார்?

### *1. வலக்கரத்தால் தப்புவித்து மீட்கிறார்* : (திப 17:7)

ஒரு மருத்துவமனைக்கு எத்தனையோ நோயாளிகள் தினமும் வருவார்கள். சிலர் தலைவலி, சிலர் வயிற்றுவலி, சிலர் காய்ச்சல், சிலர் பிற நோய்களோடு வருவர். இப்படிப்பட்ட சூழலில் நச்சுப் பாம்பு கடித்து விட்டது என்று ஒருவரை தூக்கிக் கொண்டு வருகிறார்களெனில், யாருக்கு உடனடியாகச் சிகிச்சையளிக்க வேண்டுமோ அவருக்குச் சிகிச்சை தர மருத்துவர்கள் போய் விடுவர். மனிதப் பார்வையில் உதவுதல் என்பது தேவை, அவசரம் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஆனால் இறைவனின் பார்வையில் பாரபட்சமில்லை. அவர், வேதனையிலிருக்கும் எல்லோரையும் கண்ணோக்குகிறார். சில சூழல்களில் கடவுளிடமிருந்து பதில் வருவதற்கு தாமதமாகலாம். ஆனால் அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடுபவர் அல்லர்; மாறாக, தம் வலக்கரத்தால் நம்மைத் தாங்குகின்றார்.

நமது இறைவேண்டல்களுக்குக் கடவுளிடமிருந்து மறுமொழி கிடைக்க காலதாமதம் ஆகிறதென்றால், அவர் நமக்காக ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். எனவே உறுதியாக அவர் கரத்தைப் பற்றிக்கொள்வோம். நிச்சயமாக, நம்மைத் தம் கரத்தால் தாங்குவார். "நான் துன்பத்தில் நடந்தாலும், என் உயிரைக் காக்கின்றீர்; என் எதிரிகளின் சினத்துக்கு எதிராக உமது கையை நீட்டுகின்றீர்; உமது வலக்கையால் என்னைக் காப்பாற்றுகின்றீர். நீர் வாக்களித்த அனைத்தையும் எனக்கெனச் செய்து முடிப்பீர்" (திபா 138:7,8). இவ்விதமான மிகச் சிறந்த வலக்கரத்தையுடைய ஆண்டவரின் கரங்கள் நம்மேல் வரும்படி அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோம். நிச்சயமாக, அற்புதமான விதத்திலே தம்முடைய வலது கரத்தை நீட்டி, நம் வழிகளையெல்லாம் வாய்க்கப்பண்ணுவார்.

***2. வலக்கரத்தால் தாங்கி நடத்துகிறார்*** : (எசா 41:10)

பொதுவாகக் கரம் கொடுத்துத் தாங்குவது என்பது வீழ்ந்து போகும் தருணத்தில் உதவி செய்வது ஆகும். மட்டுமல்ல, இது ஒரு உடன்படிக்கை என்றும் பொருள் கொள்ளலாம். திருமணத்தில் வலக்கரம் கொடுத்து இணைக்கப்படுதல், கையைக் குலுக்குதல் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். மேலும், மனம் நொந்து போகும் துன்பச் சூழலால் இருக்கும் ஒருவரை நமது வலது கரம் கொண்டு தோளில் தொடுவது, நமது உடனிருப்பு, மற்றும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றலைத் தரும். அதுபோல, வலக்கரத்தாலே தாங்குவது என்பது, நல்லதே நடக்கும், நானும் உங்கள் உடன் இருப்பேன் என்பதை உணர்த்துகிறது. மேலும் நீதியின் வலக்கரம் என்பது கலகங்களின் மத்தியிலும் நான் நன்மையை உங்களுக்கு செய்வேன் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

ஓர் அழகிய துடுக்கான சிறுபெண் ஒரு ஞாயிறன்று ஆலயத்தில் தனியாகப் படிக்கட்டில் இறங்கிக் கொண்டிருந்தாள். இரண்டு வயதிற்கு மிகாத அச்சிறுமி, ஒவ்வொரு படியாக இறங்கி, ஆலயத்தின் கீழ்த் தளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். கீழ்த் தளத்திற்கு செல்ல வேண்டுமென்பதே அவளுடைய தீர்மானம். அதை நிறைவேற்றியும் விட்டாள். இக்குழந்தை பயப்படவேயில்லை. ஏனெனில், குழந்தையின் தாயின் கண்கள் அக்குழந்தையைக் கவனித்துக் கொண்டேயிருக்கின்றன

என்பதும், அத்தாயின் கரங்கள் எப்பொழுதும் உதவும்படி ஆயத்தமாயிருக்கின்றன என்பதும் அக்குழந்தைக்குத் தெரியும். இந்தக் காட்சி, நம்முடைய கடவுளாகிய ஆண்டவர், அவருடைய பிள்ளைகள் இந்த நிலையற்ற உலகில் வாழ்வதற்கு உதவும்படி எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறாரென்பதை நமக்கு நினைவுப்படுத்துகிறது. பயம் உள்ள குழந்தைகள், தங்கள் பெற்றோருடைய பெலத்தால் நிலைப்படுத்தப்படுகின்றனர். அதுபோலவே கடவுளின் ஆற்றலால் இறைமக்கள் நிலைநிறுத்தப்படுவர் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. "வானம் ஒரே மாதிரி இருந்தாலும் வானிலை ஒரே மாதிரி இருப்பதில்லை. வாழ்க்கையும் அப்படித்தான். வானிலை போன்ற வாழ்க்கை, மாற்றம் மிகுந்த சூழ்நிலைகளைக் கொண்டுவரினும், வானம் போன்று எங்கும் நிறைந்த ஆண்டவர் ஒருபோதும் மாறுவதில்லை. வாழ்வின் சூழ்நிலைகளும், நேரமும் மாறலாம். ஆனால் கடவுள் மாறாதவர்" அவருடைய வலக்கரம் நம் வாழ்க்கையிலே, குடும்பத்திலே உடனிருந்து நம்மைக் கரம் பிடித்து நடத்தும். வாழ்வில் எதிர்வரும் இருளின் அனுபவங்கள் நம்மை ஐயம் கொள்ளச் செய்கின்றபோது, ஒவ்வொரு நாளும் இறைவேண்டலினாலும், திருமறை வாசிப்பினாலும், ஆண்டவரைப் பற்றிக் கொண்டு நம் வாழ்வைக் கட்டுவோம் கட்டுவோம். அப்பொழுது ஆண்டவரும் தம்முடைய வார்த்தையின்படி எல்லாச் சூழ்நிலைகளிலும் தம்முடைய நீதியின் வலக்கரத்தினால் நம்மைக் கரம் பிடித்துத் தாங்குவார் கனப்படுத்துவார்.

திரு. T. **சுதன் ராபர்ட்**

# இருமடங்கு நன்மைகள் தரும் ஆண்டவர்

செக் 9:11-17

**இருமடங்கு நன்மைகள் நான் உங்களுக்குத் தருவேன் என்று நான் இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்** (செக் 9:12).

மதுரை மாநகரத்திலுள்ள மணிநகரம் என்ற கிராமத்தில் ஏழைப் பெற்றோருக்கு மகளாகப் பிறந்த பூரணசுந்தரி, குழந்தைப் பருவத்தில் தவழ்ந்து ஓடி விளையாடிய சிறுமி, ஐந்து வயதில் பார்வை நரம்பு பாதிக்கப்பட்டு பார்வை இழப்பு ஏற்பட்டது. அந்த ஏழைப் பெற்றோர் தங்கள் மகளுக்குப் பார்வை பாதிக்கப்பட்டு விட்டது எனச் சோர்ந்துவிடாமல், மகளுடன் சேர்ந்து சவாலான வாழ்க்கையை எதிர்கொண்டனர். வாழ்வின் போராட்டத்தில் இறைநம்பிக்கையுடன் மகளுக்குத் தன்னைம்பிக்கை யூட்டினர். தன்னம்பிக்கை பெற்ற சிறுமி, பள்ளிப்படிப்பை நிறைவுசெய்து, ஆங்கிலத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பையும் நிறைவுசெய்தார். 2016 ஆம் ஆண்டிலிருந்து இருபதுக்கு மேற்பட்ட போட்டித் தேர்வுகளைத் தொடர்ச்சியாக எழுதி, அவற்றில் தோல்வி அடைந்தாலும், ஒரு நாள் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையை மட்டும் அவள் இழக்கவில்லை. இந்நிலையில் 2018-இல் வங்கிப் பணிக்கான போட்டித் தேர்வில் வெற்றி பெற்று, அரசு ஊரக வளர்ச்சி வங்கியில் எழுத்தராகப் பணிபுரிந்தும், அரசுப் பணி கிடைத்துவிட்டது என நின்றுவிடாமல் தொடர்ந்து ஐ.ஏ.எஸ். தேர்வில் கவனம் செலுத்தினார். 2019 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ் தேர்வில் 286-வது இடம் பிடித்து பூரணசுந்தரி சாதனை படைத்து உள்ளார். இலட்சியத்தை அடைய நம்பிக்கையுடன் போராடினால் வெற்றி நிச்சயம் என்பதற்கு பூரணசுந்தரியின் வாழ்வு மானிடத்திற்கு எதிர்நோக்கு நிறைந்த தன்னம்பிக்கையூட்டுவதாக அமைகின்றது. பல சோதனைகளில் இறைநம்பிக்கையுடன் வாழ்ந்தால் தன்னம்பிக்கையுடன் பல உயர்வுகளை அடையலாம்.

செக்கரியா என்ற சொல்லுக்கு "ஆண்டவர் நினைவுகூர்கின்றார்" என்பது பொருள். செக்கரியா இறைவாக்கினர் நம்பிக்கையிழந்து பல்வேறு துன்பங்களில் வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரயேல் மக்களுக்குப் புதிய எதிர்நோக்கையும் தன்னம்பிக்கையையும் கொடுத்து இருமடங்கு

நன்மைகள் கடவுள் அருளுவார் என்னும் நம்பிக்கையை ஊட்டுகிறார். மேய்ப்பன் தன் மந்தைகளை ஒருங்கிணைத்துப் பாதுகாப்பதுபோல், கடவுளை நம்பும் மக்கள் அனைவரையும் மீட்டு இருமடங்கு நன்மைகள் கொடுத்து, மணிமுடியில் பொறிக்கப்பட்ட கற்களைப்போல் ஒளிரச்செய்வார் (செக் 9:16). இருமடங்கு நன்மைகள் பெறுவதற்கு நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் திருமறை வழி அறிந்து கொள்வோம்.

### *1. இறைஉடன்படிக்கையில் நிலைத்திருத்தல்* : (செக் 9:11)

உடன்படிக்கை என்னும் சொல்லுக்கு எபிரேய மொழியில் "பெரித்" என்பதாகும். கடவுளோடு கொண்டுள்ள தங்களின் உறவைச் சித்திரிப்பதற்கு இச்சொல்லை இஸ்ரயேல் மக்கள் பயன்படுத்தினர். கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் பல்வேறு உடன்படிக்கைளைச் செய்துகொண்டார். ஆனால் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கையை மீறி வாழ்ந்தபடியால், பல்வேறு இன்னல்களையும், இடர்பாடுகளையும் எதிர்கொண்டு, வலுவிழந்து காணப்பட்ட சூழலில், கடவுள் இறைவாக்கினர் வழியாக உரைப்பது, இஸ்ரயேல் மக்கள் மீண்டும் என்னிடம் திரும்பி வந்து என் உடன்படிக்கையில் நிலைத்திருக்கும்போது நானும் அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அவர்களை மீட்டு இருமடங்கு நன்மைகள் அருளுவேன் என்று இறைவாக்கினர் செக்கரியா வழியாக கடவுள் உரைக்கின்றார் (செக் 9:11). நாம் கடவுளோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மறந்து, நம்மை உலகவாழ்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றவர்களாகக் காண்பிக்கிறோம். உலக இன்னலிலிருந்து நம்மை மீட்கும் கடவுளோடு உடன்படிக்கையைப் புதுப்பித்து வாழும்போது கடவுள் நமக்கு இருமடங்கு நன்மைகளை அருளுவார். யோபு தனது வாழ்வில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டாலும் கடவுளோடு செய்துகொண்ட உடன்படிக்கையில் நிலைத்து நின்றார் (யோபு 2:9-10).

### *2. இறைப்பற்றுறுதியில் பயணித்தல்* : (செக் 9:12)

இறைநம்பிக்கை என்பது பழைய ஏற்பாட்டைப் பொறுத்தமட்டில் கடவுளை முழுமையாக நம்புவதில் அடங்கியிருக்கின்றது. தொடக்கக் கால இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வில் எல்லாச் செயல்களுக்கும் கடவுளையே தேடினர். கடவுளின் அனுமதியைப் பெற்றே அனைத்தையும் செய்தனர். இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் சிறு, சிறு தடுமாற்றங்களும், துன்பங்களும் ஏற்படும்போது, கடவுளின் நம்பிக்கையை விட்டகன்று, மனிதர்களையும் வேற்றுத்தெய்வங்களையும் நம்பினர். பாலை நிலத்தில் வழிநடத்திய ஆண்டவரை மறந்தனர். ஆண்டவரை மறந்து

வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து, வாழ்வில் தடுமாறினபோது, இறைவாக்கினர் செக்கரியா வழியாக கடவுள் நம்பிக்கையூட்டுகின்றார். கடவுளை நம்பும்போது, அவர் மீட்டு, புதுவாழ்வுக்கு நேராக வழிநடத்தி இருமடங்கு நன்மைகள் மானிட வாழ்வில் அருளுவார்.

யோபு தனது வாழ்வில் ஏற்பட்ட அனைத்து இழப்புகளிலும், மனைவி, நண்பர்கள் வழியாக நிந்திக்கப்பட்டும் தமது பற்றுறுதியில் தடுமாறாமல் கடவுளின் வழியில் வாழ்ந்தார். எனவே, தாம் இழந்த அனைத்து ஆசிகளையும் இருமடங்காகப் பெற்று இன்றும் அவரை எல்லா மானுட மக்களுக்கும் முன்மாதிரியாக, கடவுளே சான்று பகர்ந்துள்ளார் (யோபு 42:10).

நாம் கடவுளோடு செய்து கொண்ட உடன்படிக்கையை, இப்புதிய மாதத்தில் புதுப்பித்து, நம்பிக்கையில் நிலைத்து, கிறிஸ்துவைப் பின்பற்றி, அவருக்குச் சான்றாய் வாழ்ந்து கனிகொடுக்கும்போது, இருமடங்கு நன்மைகள் அருளுவார்.

திரு. M. **ஐசக் வினோ**

01-12-2021



## இருளை ஒளியாக்கும் ஆண்டவர்

எசா 42:14-17

**"...அவர்கள் முன் இருளை ஒளியாக்குவேன்"** (எசா 42:16).

கறுப்பின மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது தென்னாப்பிரிக்கா. 1962-இல் டச்சுக்காரர்கள் தென்னாப்பிரிக்காவுக்குள் நுழைந்தார்கள். பிறகு ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் எனப் பலரும் வளங்களைச் சுரண்டி, அங்கு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த கறுப்பின மக்களை அடிமையாக நடத்தினர். மேலும் அவர்களை ஒடுக்கும் விதமாகச் சட்டங்களும் இயற்றப்பட்டன. நிலங்கள் அபகரிக்கப்பட்டன. 1950-இல் இனத்தை அடிப்படையாக் கொண்டு மக்கள்தொகை வகைப்படுத்தப்பட்டது. கறுப்பர்கள், வெள்ளையர்கள் எனப் பிரிப்பதற்கு சட்டமியற்றப்பட்டது. 1960-இல் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து தென்னாப்பிரிக்காவைத் தவிர்க்கும் அளவுக்கு அரசியலில் நெருக்கடியான சூழல் உருவானது. மண்டேலாவின் தொடர் போராட்டங்கள் ஒடுக்குதல் என்னும் இருளில் வாழ்ந்த மக்களுக்கு ஒளியேற்றுவதாகக் காணப்பட்டது. 1994-இல் அவர் அதிபரானதும் கறுப்பின மக்கள் வாழ்விலிருந்த அடிமைத்தனங்கள் அகன்று வாழ்வில் ஒளிரத் தொடங்கினார்கள்.

### *1. அறியாத பாதையில் ஒளியாகும் ஆண்டவர்* :

"பார்வையற்றோரை அவர்கள் அறியாத பாதையில் நடத்திச் செல்வேன். அவர்கள் பழகாத சாலைகளில் வழிநடத்துவேன்" (எசா 42:16a). எசாயா நூல் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. இப்பகுதி இரண்டாவது பிரிவுக்குட்பட்டது. எருசலேம் மக்கள் பாபிலோனியச் சிறையிருப்பின்போது வாழ்வில் நம்பிக்கையிழந்து "பார்வையற்ற மனிதர்கள் அறியாத சாலையில் தடுமாற்றம் அடைவதுபோல்" தடுமாற்றம் அடைந்தனர். எசாயா இறைவாக்கினர் "ஆண்டவர் ஒளியாகி வழிகாட்டுவார்" என்ற பற்றுறுதியை ஊட்டுகிறார். யோவான் 1-வது பிரிவில் மனுக்குலத்தின் ஒளியாக இயேசுவின் பிறப்பு சொல்லப்பட்டுள்ளது. லூக் 1:78-79-இல் "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும்..... விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது" என்று நற்செய்தியாளர் கூறுகின்றார்.

செபுலோன், நப்தலி நாட்டைக் குறித்து எசாயா இறைவாக்கினர் சொல்லும்போது “காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்” (எசா 9:1-2) என்று கூறுகின்றார். நம் முன்னோர்கள் அறியாமையினால் இருளில் மூழ்கியிருக்கும்போது அருட்பணியர் வழியாக “இயேசு” என்னும் ஒளியைப் பெற்றோம்.

### 2. கரடுமுரடான பாதையில் ஒளியாகும் ஆண்டவர் :

“.... கரடுமுரடான இடங்களைச் சமதளமாக்குவேன்” (எசா 42:16). கரடுமுரடான என்றால் “மேடுபள்ளங்கள் நிறைந்த” “சமதளமாக இல்லாத” என்று பொருள். இஸ்ரயேல் மக்களின் வாழ்வு பாபிலோனிய அடிமைத்தனத்தில் “கரடுமுரடு” போல் காணப்பட்டது. கரடுமுரடான வழியில் பயணிப்பதும், வாகனங்களை இயக்குவதும் மிகக்கடினம். வாழ்வில் ஏற்படும் துன்பங்களும், வேதனைகளும், வலிகளும் கரடுமுரடான பாதைக்குச் சமமானது. லூக்கா நற்செய்தியாளர் “.... நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும்......விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது” (லூக் 1:78-79) என்று கூறுகிறார்.

இருளாகிய அடிமைத்தனத்திலும், துன்பத்திலும் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற கடவுள் இறைவாக்கினர் வழியாக மக்களின் மீட்பு பற்றிக் கூறுகிறார். “....நான் அவர்களைக் கைநெகிழ மாட்டேன்” (எசா 42:16) என்று நம்பிக்கை ஊட்டுகிறார். இஸ்ரயேல் மக்களின் துன்பங்கள், வேதனைகள் எல்லாவற்றையும் மன்னித்து நெடுஞ்சாலை ஒன்றைச் சீராக்கி....கரடுமுரடானவை சமதளமாக்கப்படும் என்று (எசா 40:1-4) கூறுகிறார்.

இருள்போன்ற பல துன்பங்களை நாம் கடந்த மாதங்களில் சந்தித்திருக்கலாம். இருள் நீக்கும் பகலவனாய் ஒளிச் சுடராய் ஒளிரும் ஆண்டவரின் பிறப்பு மனுக்குலத்திற்கு ஒளி கொடுத்ததுபோல, நம் வாழ்விலும் இருள் நீக்கி ஒளிவீச அருள்புரிவாராக!

திரு. **மு. ஜெஸ்லின் ஸ்டீபன்**

# தவக்காலம்
# புதன் & வெள்ளி அருளுரைகள்

19-02-2021



# எபேசுத் திருச்சபை

திவெ 2:1-7

**"ஆகையால் நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்து விட்டாய் என்பதை நினைத்துப் பார்; மனம்மாறு"** (திவெ 2:5).

தவக்காலம் மனமாற்றத்திற்கான காலம். தவக்கால வெள்ளிக்கிழமைகளில் திருவெளிப்பாட்டு நூலில் சொல்லப்பட்டிருக்கும் ஏழுதிருச்சபைகளின் வழியாக மனமாற்றத்திற்கான செய்தியைத் தியானிக்கிறோம். இதில் முதலாவது சொல்லப்படும் திருச்சபை எபேசு. இந்தத் திருச்சபை 'அன்புக்கு நேரான மனமாற்றத்தை' நமக்குப் போதிக்கிறது.

எபேசு என்பது ஆசியாவிலுள்ள முக்கியமான நகரம். இது வியாபாரத்திற்கும், அர்த்திமியாள் என்ற கோவிலுக்கும் பிரசித்திபெற்றது. பவுல் முதலில் இப்பட்டணத்தில் நற்செய்தியைப் பிரசங்கித்தார் (திப 18:19-21). தனது மூன்றாம் நற்செய்திப் பயணத்தில் ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் பணி செய்து திருச்சபையை உருவாக்கினார். பவுலைத் தொடர்ந்து கி.பி 52-க்கு பின் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா நற்செய்தி அறிவித்தனர். இவர்கள் வழியாகக் கிறிஸ்தவம் அதிகம் வளர்ந்தது. என்றாலும் யோவானால் இத்திருச்சபை எச்சரிக்கப்பட்டு, அன்புக்கு நேரான மனமாற்றத்திற்கு அழைக்கப்படுகிறது. காரணம் என்னவெனில்;

## *1. கொள்கை மிகுந்த திருச்சபை* :

எபேசுத் திருச்சபை, அதன் வெளியே இருந்தும், உள்ளே இருந்தும் எழுந்த பிரச்சனைகளில் திருச்சபையின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருந்தது. யூத மக்களிடமிருந்தும் உரோமை அரசிடமிருந்தும், பிற இன மக்களிடமிருந்தும் கிறிஸ்தவத்திற்கு எதிராகப் பிரச்சனைகள் வந்த போது தன் நிலையில் உறுதியாக இருந்தது.

மட்டுல்ல, நற்செய்தியின் தூய்மையைக் கடைப்பிடிப்பதில் கவனமாயிருந்தது. தங்களைத் திருத்தூதர்கள் என்று போலியாக அழைத்து, திருச்சபைக்குள் நுழைய முயன்றவர்களைத் தடுத்தது. நிக்கொலாயரின் செயல்களை வெறுத்தது. மேலும் இறைவாக்கு உரைத்தவர்களின் ஆவியையும், பரிசோதித்து அறிந்தனர். ஆக திருச்சபை தனது கொள்கைகளைக் காப்பதில், கடைப்பிடிப்பதில் உறுதியாக இருந்தது.

### *2. அன்பு குறைந்த திருச்சபை :*

கொள்கைகளைக் காப்பதில் கவனமாயிருந்த திருச்சபை, தொடக்கக் காலத்தில் தங்களுக்கு எதிரான கொள்கைகளை நிராகரிக்கும் முயற்சியை, நேர்மையான வைராக்கியத்தாலும், அன்பினாலும் செய்தது. அதன்பின் இந்த முயற்சி கோபமாகவும், வன்முறையாகவும் கசப்பான சண்டையிலும் முடிந்தது.

இதினிமித்தம் இவர்கள் கிறிஸ்துவின் அன்பை முற்றிலும் இழந்தனர். தங்கள் நம்பிக்கையில் தளர்ச்சியுற்றனர். ஆதியில் தங்களிடம் காணப்பட்ட, கடவுளுடைய வழிகளை உண்மையாய்ப் பின்பற்றுதல், விசுவாசம், ஒழுக்கம், இறைமக்கள் மீது அன்பு, கீழ்ப்படிதல், பிறருக்கு உதவுதல், தூய ஆவியாரின் அனுபவம் ஆகியவை குறைந்து போயின.

தங்களுக்குள்ளாகச் சண்டையிடுகிறவர்களாக, ஒருவரையொருவர் துன்புறுத்துகிறவர்களாக மாறினர். ஆகவே கடவுள் அவர்களை ஆதியிலிருந்த அன்புக்கு மனந்திரும்படியாக அழைக்கின்றார்.

### *3. அன்பின் சங்கமமே திருச்சபை :*

திருச்சபை என்றால் அன்பின் சங்கமம். இது கிறிஸ்துவினால் கிடைத்த வரம். அன்பு இல்லையென்றால் அது திருச்சபை இல்லை. அது இலைகள் நிறைந்த கனியற்ற மரம். அது சத்தமிடுகிற வெண்கலம், ஓசையிடுகிற கைத்தாளம். அன்பு இல்லையென்றால் ஒன்றும் இல்லை.

செயல்கள் இல்லாத விசுவாசத்தால் பயனில்லை. அதுபோல அன்பு இல்லாத கொள்கையினால் பயனில்லை. எனவே கடவுளுடைய வார்த்தை யோவானுக்கு உண்டாகி ஆதியிலிருந்த அன்புக்கு மனந்திரும்ப எச்சரிக்கின்றார்.

நமது திருச்சபை இன்று பிரிவினைத் திருச்சபையா? அல்லது அன்புத் திருச்சபையா? பகை, பிரிவினை, சண்டை இவைகள் அன்பு குறைந்ததின் அடையாளம். இந்தத் தவக்காலத்தில் அன்புக்கு நேராய் மனமாற்றம் அடைவோம்.

அருள்திரு. P. **வினோ**

24-02-2021



# விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்

மாற் 14:32-42

**"...சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்"**
(மாற் 14:38).

விழிப்பாயிருப்பது என்பது உயிரோட்டமுடையவராக, தயாராக, எதையும் எதிர்கொள்ளக்கூடிய மனம் படைத்தவராக இருப்பதற்கான அடையாளம். அலுவல்களில், குடும்ப வாழ்வில், உறவுகளில், உலக வாழ்வில், ஆரோக்கிய வாழ்வில், ஆன்மிக வாழ்வில் எச்சரிக்கையாக விழிப்போடு செயல்பட வேண்டும்.

விழிப்பாயிருப்பது என்பது எதிர்காலத்தை நினைத்து ஏங்கிக் கொண்டிராமல், கடந்த காலத்தை நினைத்து கண்ணீர் விட்டுக் கொண்டிராமல் நிகழ்காலத்தில் கவனத்தைச் செலுத்தி வாழ்வதாகும் நிகழ்காலத்தில் நினைவைச் செலுத்தி வாழ்கிறவர்களால் மட்டுமே வாழ்வை முழுமையாக வாழ முடியும். நடந்து முடிந்ததைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் பழைமைவாதிகள். நடக்கப் போவதைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் கனவுவாதிகள். நிகழ்காலத்தில் கவனம் செலுத்தி வாழ்பவர்கள் விழிப்படைந்த ஞானிகள். இவர்கள் தாம், வாழ்வில் நடக்கும் அநீதிகளையும், தீமைகளையும் கேள்விக்குட்படுத்தி புதிய சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என ஆர்வம் கொண்டவர்கள்.

விழிப்புணர்வு ஒவ்வொரு மனிதரையும் செயல்பாட்டிற்கு இட்டுச்செல்லும், இயக்குவிக்கும். விழித்துக் கொண்ட மனிதர்களால் மட்டுமே பிழைத்துக் கொள்ளமுடியும். விழித்திருத்தல் என்பது விசுவாசம் நிறைந்த ஈடுபபட்டின் அடையாளம். விழித்திருத்தல் ஒரு தெய்வீகக் குணம். விழித்திருப்பவர்களால் தான் வெற்றியை எளிதாக அடைய முடியும்.

விழிப்பாயிருத்தல் என்பது தொடக்ககால திருச்சபையின் ஆணித்தரமான போதனையாக இருந்தது. "இறுதிக் காலம் இதுவே என அறிந்து கொள்ளுங்கள். உறக்கத்தினின்று விழித்தெழும் நேரம் ஏற்கெனவே வந்துவிட்டது (உரோ 13:11). "விழிப்பாயிருங்கள், நம்பிக்கையில் நிலைத்திருங்கள், துணிவுடன் நடந்து கொள்ளுங்கள். வலிமையுடன் செயல்படுங்கள் (1கொரி 16:13; 1தெச 5:6). என்று புனித பவுலடியார்

அறிவுறுத்துகிறார். கெத்சமனியில் உறங்கிய பேதுருவும் தன் திருமுகத்தில் "அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள்" (1பேதுரு 5:8) என்கிறார். புனித யோவான் ஒரு படி மேலே சென்று, "விழிப்பாயிருப்போர் பேறுபெற்றோர்" என திவெ 16:15-இல் குறிப்பிடுகிறார். ஆண்டவர் நமதுத் தகுதிக்கம் அருள் காலமாகிய இத்தவக்காலத்திலும் இனி வருங்காலத்திலும் விழித்திருந்து வெல்ல வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. எனினும் நாம் விழித்திருந்து உலகையும் அலகையையும் வெல்ல வேண்டிய சிந்தனைகளை நமது வாழ்வின் அனுபவமாக்க முயல்வோம்.

## *1. உலகினால் வரும் சோதனையை வெல்ல விழித்திருந்து இறைவேண்டல் செய்யுங்கள்* :

நாம் வாழும் உலகம் ஒரு சோதனைக்களம். சோதனை உலக வாழ்க்கையில் எவ்விடத்திலுமிருந்தும் வரும். சோதனை என்பது உலக வாழ்க்கையில் ஓர் இயற்கை நியதியாக காணப்படுவதால் தான் ஆண்டவர் இயேசு யோவான் 16:33இல் கூறினார், "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றிகொண்டு விட்டேன்" என்றார். உலகு என்று சொல்லும் போது இங்கே உலகத்தில் வாழும் மனிதர்களையும் அவர்களால் உண்டாகும் தீமையையும் குறிக்கும். நாம் உலகத்தில் உலகத்தாராகிய சக மனிதர்களோடு வாழ்ந்தாலும் "உலகத்தரால்ல," ஆண்டவரின் மக்கள் எனப் புரிந்து கொள்ளவேண்டும். ஆண்டவர் இயேசுவின் மன்றாட்டில் யோவா 17:16இல் குறிப்பிட்டுள்ள படி, இயேசு தம்மை "நான் உலகத்தானல்லாதது போல" தம் அடியவர்களையும் "அவர்களும் உலகத்தாரல்ல" என்றும் கூறி, 18,19ஆம் வசனங்களில் நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்கள் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன் என்று மன்றாடுவதைப் பார்க்கிறோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் உலகின் சோதனை ஏராளம் சோதித்தது. அவர் சோதிக்கப்பட்டார். ஆனால் எச்சோதனையிலும் வீழ்ந்து விடவில்லை. எல்லாவிதமான உலகினால் வந்த சோதனைகளைச் சாதனையாக மாற்றினார்.

இன்றைய உலகில் வாழும் உலக மனிதர்கள், உலகினால் சந்திக்கின்ற சோதனையினால் வீழ்ந்து போகிறார்கள். காரணம் விழிப்பின்மையும், விழிப்பாயிருந்து இறைவேண்டல் செய்யாதமையும்தான். 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் துறைமுகத்திலிருந்து "டைட்டானிக்" என்ற 46.000டன் எடையுள்ள பயணிகள் சொகுசுக் கப்பல் நியூயார்க் நோக்கி புறப்பட்டது. இதில் 1316

பயணிகளும், 891 ஊழியர்களும் உலகத்தையே மறந்து களியாட்டங்களிலும், பொழுதுபோக்கு விளையாட்டுகளிலும் தீவிரமாக ஈடுபட்டு இருந்தனர். பயணித்த நான்காம் நாள், ஏப்ரல் 14ஆம் தேதி கடலில் சில பனிப்பாறைகள் மிதப்பதை மாலுமிகள் கவனித்தனர். அப்பாறைகள் சிறிதாக இருந்ததால் யாரும் கவலைப்படவில்லை. இரவு 11.40 மணி அளவில் மலைபோன்ற பனிப்பாறை தென்பட்டது. ராட்சத வாள்போன்று தோற்றமளித்த அந்தக் கூரிய பனிப்பாறை கப்பலின் பக்கவாட்டில் மோதி 300 அடி நீளப்பகுதியை அறுத்துவிட்டுச் சென்றது. கப்பல் படிப்படியாக மூழ்க ஆரம்பித்தது. உயிர்காக்கும் 16 படகுகளில் பெண்களும் குழந்தைகளும் ஏற்றப்பட்டுக் காற்றப்பட்டனர். நள்ளிரவு 2.20 மணிக்கு கப்பல் முழுவதுமாக மூழ்கியது. இரண்டே மணி நேரத்தில் 13,000 அடிக்குக் கீழே மூழ்கி மாண்டு போனார்கள். இதில் 705 பேர் மட்டுமே காப்பாற்ற பட்டனர். இவ்விபத்துக்குக் காரணம் மாலுமிகளின் விழிப்பிணர்வின்மை. பணியாளர்கள் எச்சரிக்கையின்மை. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 26:38). விழித்திருந்து இறைவேண்டல் செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும்.

### *2. அலகையினால் (பிசாசினால்) வரும் சோதனையை வெல்ல விழித்திருந்து இறைவேண்டல் செய்யுங்கள்* :

அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிராளியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித் திரிகிறது என 1பேது 5:8இல் பேதுரு அடிகளார் குறிப்பிடுகிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து கெத்சமனித் தோட்டத்தில், தாம் சந்திக்கப்போகும் பாடுகளுக்கு முன்பாக வியாகுலப்படவும் தொடங்கினார். உடனிருந்த சீடர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரிடத்தில் நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள் என்று கூறினார் (மாற்கு 14:32-34). ஆனால் இவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி சீமோனே, நித்திரை பண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா? என்று கடிந்துரைக்கப்பட்டவர் (மாற் 14:37), தனது முதலாம் கடிதத்தில் அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள் என்று அறிவுறுத்துகிறார்.

உலகின் தொடக்க முதலே அலகையினால் சோதனை உண்டானது. அலைகையினால் சோதிக்கப்பட்டவர்களையும் அலகையினால் சோதிக்கப்பட இறைவர் அனுமதித்தவர்களையும் திருமறையில் காணலாம். அலகையினால் உண்டான சோதனையினால்

அலக்கழிக்கப்பட்டு இன்னல் அடைந்தவர்களும் உண்டு. அலைகையானவன் யாரை விழுங்கலாமென்று வகைதேடி கொண்டிருப்பது, அன்று மட்டுமல்ல, இன்றும் கூட தனக்கு இரையாக்கிக் கொள்ளப் பார்க்கிறான்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து அலகையினால் சோதிக்கப்பட்டவர். ஆனால் அலகையை வென்றவர். ஆண்டவர் இயேசுவும் அலகையினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியாராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் (மத் 4:1). சோதனைக்காரன் அவரிடம் அடுத்தடுத்து கேள்விக்கணைகளைத் தொடுக்கிறான். “இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி செய்யும். நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும். மறுபடியும் அலகையானவன் அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய்” உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, நீர் சாஷ்டங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்ன போது, அப்பாலே போ சாத்தானே, என்று அலகையானவனுக்கும் மறுப்பு தெரிவித்து அவரை விட்டு விலகிப்போகும்படியும் செய்தார். இத்தவக்காலத்தில் நம்மையும் சோதிக்கும் படியாக சோதனைக்காரனாகிய அலகையானவன் நம்மைச் சூழ்ந்து நிற்கையில் பலவிதமான சோதனைகளை நாம் சந்திக்கும் போது விழித்திருந்து இறைவேண்டல் புரிவோம். உலகினாலும் அலகையினாலும் வரும் சோதனைகளை வெல்வோம். கிறிஸ்துவின் பாடுகளுடனான பாதையில் பயணித்து சோதனையை வெல்ல ஆண்டவர் அருள்புரிவாராக.

அருள்திரு. N. **யோபுதாஸ்**

26-02-2021



# பெர்காம் திருச்சபை

திவெ 2:12-17

**".... நீ என் பெயர் மீது உறுதியான பற்றுக் கொண்டுள்ளாய்"** (திவெ 2:13).

**நகரின் பின்னணியம்**

பெர்காம் என்றால் 'கல்யாணம்' மற்றும் 'உயரமான கோபுரம்' எனப் பொருள்படும். இது எபேசுப் பட்டணத்தின் வடகிழக்கில் சுமார் 50 மைல் தூரத்தில் உள்ளது. உரோமையர் ஆட்சியில் இது ஆசியாவின் தலைநகராய் இருந்தது. இன்றுள்ள லண்டன், பாரீஸ், பெர்லின் ஆகிய பட்டணங்கள் போல அன்றுள்ள பெர்காம் மிகப் பிரபலமான பட்டணமாய் இருந்தது. அன்றிருந்த நூலகங்களில் மிகப் பெரிய நூலகம் பெர்காமில் இருந்தது. கைகளினால் எழுதப்பட்ட அந்நாட்களிலும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் இந்நூலகத்தில் இருந்தன. தோல் சுருள் அக்காலத்தில் எழுத உபயோகிக்கப்பட்ட பொருள். இது முதலில் பெர்காமில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இது விக்கிரக ஆலயங்களுக்கும் பிரசித்தி பெற்றதாயிருந்தது. 'அஸ்குலாபியஸ்' என்ற வேற்றுத் தெய்வம் 'ஆரோக்கியத்தின் கடவுள்' என்று போற்றப்பட்டு வந்தது.

இக்கடவுளின் சின்னம் சர்ப்பம். வியாதியுள்ளவர்கள் இக்கோவிலுக்குள் போய் ஒரு நாள் இரவு தங்குவார்கள். இக்கோவிலுக்குள் விஷமற்ற சர்ப்பங்கள் ஏராளம் இருந்தன. வியாதியஸ்தர்கள் இங்கு படுத்திருக்கும் போது, இப்பாம்புகள் ஊர்ந்து சென்று யார் யாரைத் தொடுகின்றனவோ அவர்கள் எல்லோருக்கும் சுகம் கிடைக்கும் என்று நம்பினர்.

சர். வில்லியம்ஸ் ராம்சே என்பவர் பெர்காம் நகரம் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் நகரம் என்று புகழ்ந்திருக்கிறார். பன்முகக் கலாச்சாரத்தினை உள்ளடக்கிய நகரம். செலுக்கியர்களின் ஆட்சியின் போது 400 ஆண்டுகளாக பெர்காம் தலைநகரமாக இருந்தது. உலகின் பிரபலமான உரோமானிய மருத்துவர்கள், அறுவை சிகிட்சை நிபுணர்கள், மற்றும் தத்துவ ஞானிகளின் பிறப்பிடமாகவும் பெர்காம் இருந்தது. உரோமை அரசர்களான அகஸ்டஸ், டிராஜனுக்கான கோவில்கள் கட்டப்பட்டு, பூசாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இப்பட்டணத்தில் ஜீயஸ், அத்தேனே, ஜூப்பிட்டர், வீனஸ், அப்பல்லோ ஆகிய தேவதைகளின் கோவில்கள் இருந்தன. கோவில்களில் உரோமைச் சக்ரவர்த்தியின் சிலைகளை மக்கள் வணங்கக்

கட்டாயப்படுத்தப்பட்டனர். உரோமை நிர்வாகத்தினர் ஒவ்வொரு தெருவுக்கும் ஒருவரை நியமித்து அத்தெருவில் வசிப்போர்அரசர்களின் கோவிலுக்குச் சென்று வழிபடுகிறார்களா? என்பதைக் கண்காணித்து உரோமை நிர்வாகத்தினரிடம் தெரிவிக்க வேண்டும். துருக்கி நாட்டில் உள்ள இன்றைய இஸ்மீர் பகுதியில் உள்ளது பெர்காம்.

***1. பற்றுறுதி*** : (திவெ 2:13)

விசுவாசிகளைத் துன்புறுத்தும் சக்திகளின் தலைமையகமான சாத்தானின் சிம்மாசனம் என்பது மக்களைத் துன்புறுத்தும் உரோமை அரசர்களின் அரியணைகளாக இருந்திருக்கக்கூடும். திருவெளிப்பாட்டு நூலில் 42 முறை அரியணை பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதில் 40 முறை கடவுளின் அரியணை என்றும் இரண்டு முறை சாத்தானின் அரியணை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசர்களை வழிபடும்படி மக்கள் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டனர். மனிதர்களை வணங்குகின்ற செயல்பாடு சாத்தானால் மட்டுமே தூண்டப்படும் அருவருப்பான செயலாயிருந்தது. திப 17:16-இல் ஏதேன்சில் சிலைகள் நிறைந்திருப்பதைக் கண்டு மனம் கலங்குகிறார் பவுல். கிரேக்கர்களின் தலைநகரம் ஏதேன்சு. அங்கு அரசர்களின் சிலையை வழிபட்டது போல் பெர்காமில் அரசர்களையும் வழிபட்டு வந்தனர். இப்படிப்பட்ட சூழலில் பெர்காம் சபையாரின் பற்றுறுதி மிக முக்கியமானதாக இங்கே பார்க்கப்படுகிறது. அந்திப்பா உங்கள் நடுவிலே கொலை செய்யப்பட்ட காலத்தில் கூட நீ என்மீது கொண்டிருந்த நம்பிக்கையை விட்டு விலகவில்லை.

அந்திப்பாவின் சாட்சியுள்ள வாழ்க்கை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. காரணம் பல கடவுளரின் பலிபீடங்கள் நிறைந்துள்ள பெர்காமில் கிறிஸ்தவ நெறியைப் பின்பற்றி சாட்சியாக வாழ்வதும் கடினமானது. கிரேக்க மொழியில் அந்திப்பா என்றால் ‘எதிர்த்து நில்’ என்று அர்த்தம். இவர் யோவானின் சீடராவார். அந்திப்பாவின் பற்றுறுதி உரோம அரசுக்கு எரிச்சலூட்டியது. இதனால் இவர் குற்றம் சாட்டப்பட்டு உரோம அரசுக்கு முன் நிறுத்தப்படுகிறார். இறுதியாக பித்தளைக் கலனில் உட்காரவைத்து எரியூட்டிக் கொல்லப்படுகிறார். இறுதிவரை பற்றுறுதியில் நிலைத்திருந்தார். பிலிப் 2:10-11 “இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்.”

இங்கிலாந்தில் மேரி அரசி ஆண்ட சமயம் அது. சீர்திருத்தவாதிகள் ஒவ்வொருவராகப் பிடிக்கப்பட்டு மகா கொடிய மரண தண்டனை விதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். 1534-ஆம் ஆண்டு போப்புவின் சட்டதிட்டங்களை எதிர்த்த நிக்கோலஸ் ரிட்லி, மேரி அரசியால் பிடிக்கப்பட்டார். இவர் ஹென்றி என்ற அரசனின் அமைச்சரவையில் தலைமைக் குருவாகப் பணியாற்றியவர். இவருடன் இணைந்து லாட்டிமர்

என்பவரும் சிறைபிடிக்கப்பட்டு இருந்தார். 1555 ஆம் ஆண்டு இருவரும் தீயில் எரிக்கப்பட அழைத்துச் செல்லப்பட்டனர். முன்சென்ற ரிட்லி திரும்பிப் பார்த்து லாட்டிமரைக் கட்டிப்பிடித்து "என் சகோதரனே, நீ சற்றும் தயங்காதே. நாம் தீயின் கொடுமையைத் தாங்க ஆண்டவர் நமக்குச் சக்தியைத் தருவார். இருவரும் கம்பத்தில் கட்டப்பட்டனர். ரிட்லி தன் கைகளை உயர்த்தி, "பரமபிதாவே, மரணபரியந்தம் உமக்குச் சாட்சியாக இருக்க என்னை அழைத்ததற்காக என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிக்கிறேன். சத்தியத்தை எதிர்ப்பவர்கள் கையிலிருந்து இங்கிலாந்தைத் தப்புவியும்" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே தீயில் எரிக்கப்பட்டார். இயேசு கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் பற்றுறுதியில் உறுதியாயிருக்கிறோமா என ஆராய்ந்து பார்ப்போம்.

***2. தவறான போதனைகள் :*** (திவெ 2:14)

பிலயாம் மற்றும் நிக்கொலாயரின் போதனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகத் தங்கள் நம்பிக்கையில் சமரசம் செய்தனர். சமரசத்தின் ஆபத்தும் இஸ்ரயேல் தேசத்தின் இணையான அனுபவமும் இங்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (எண் 31:16;25:15).

Nicolaitans என்ற வார்த்தை கிரேக்க மொழி வார்த்தையாகும். "Nikan" என்றால் to conquer, "Laos" என்றால் the people என்று பொருள் நிக்கொலாய் என்றால் "மக்களை வெற்றி கொள்" என்பதாகும். இவர்கள் Gnostic என்னப்படும் அறிவுக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள். தவறான போதனைகள் மக்களைக் குழப்பமடையச் செய்தன. இவைகளை ஆண்டவர் வெறுக்கிறார். இன்றும் தவறான போதனைகளுக்குப் பஞ்சமில்லை. நேர்மையான, இறையரசைப் பறைசாற்றும் போதனைகளுக்குச் செவி கொடுப்போம். சீர்திருத்தும் பணிகளில் ஆண்டவர் சரியான நபர்களைத் தேர்வு செய்கிறார். திருச்சபையில் ஏற்படும் கொள்கைக் குழப்பங்களும் ஏற்றத்தாழ்வுகளும் மனிதரின் ஆன்மிக வாழ்வைத் தடை செய்கின்றன. 1484 ஆம் ஆண்டின் முதலாம் நாளில் ஆஸ்திரிய நாட்டில் உள்ள ஆல்ப்ஸ் மலைகளுக்கு இடையில் அமைந்த ஒரு மேய்ப்பனின் குடிசையில் பிறந்தார் சுவிங்லி. இளமையிலே மிகவும் துடிப்பும் வேகமும் விவேகமும் உடையவராகவும், ஒழுக்கம் தவறாதவராகவும் காணப்பட்டார் இவர். 13-ஆம் வயதிலேயே ஆலயங்களில் காணப்படக்கூடிய அதிகார வர்க்கத்தையும் அறிவீனங்களையும் கண்டு மனம் நொந்தார். ஆடம்பரங்களினாலும், சடங்காசாரங்களினாலும் புனிதப் பொருட்களில் உண்டாகும் கவர்ச்சியினாலும் ஆலயம் நிறைந்திருப்பதைக் கண்டு மிகவும் வேதனை அடைந்தார். எபிரேய, கிரேக்க மொழிகளைக் கற்றுக் கொண்டு ஆராயும்போது திருமறையை வாசிக்கும்படியாகத் தூண்டப்படவே பேருண்மைகளைக் கண்டுகொண்டார். குருமார்களின் குருட்டுப் பக்தியும் ஆடம்பரமும் இவரை ஆழ்ந்து சிந்திக்க வைத்தன.

அந்நாட்களில் காணப்பட்ட பாவமன்னிப்புச் சீட்டு பற்றிய தவறான கொள்கைகளை எதிர்க்க இவர் மனம் ஆவல் கொண்டது. இதனால் இவர் எதிரியாகக் கருதப்பட்டார். பல துன்பங்களை ஏற்றுக் கொண்டார். இருப்பினும் இவரால் சுவிட்சர்லாந்தில் புரட்சி ஏற்பட்டது. சீர்திருத்தம் படிப்படியாக முன்னேறியது. அபாயக் குரலுடன் விரோதிகள் இவரைத் தொடர்ந்து எதிர்க்கவே, இவரோ கிறிஸ்துவையே தன் ஆதாரமாகக் கொண்டு மாபெரும் சீர்திருத்தத்தை அங்கு ஏற்படச் செய்தார். புரட்டு உபதேசங்களைக் கண்டு நாம் என்ன செய்கிறோம்? சுவிங்லி சொல்கிறார், "கடவுளின் வார்த்தை ஒன்றைத்தவிர நியாயம் தீர்க்கும் சட்டமாக வேறெதையும் நான் அடையாளம் காட்டுவதற்கு இல்லை."

### *3. அழைப்பும் பரிசும்* : (திவெ 2:16)

மனம் மாறு என்ற வார்த்தை 12 முறை திருவெளிப்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. புரட்டு உபதேசத்திற்கு எதிரான உண்மையான உபதேசத்தை இது குறிக்கிறது. அதுதான் ஆண்டவருடைய வார்த்தை. இருபுறமும் கூர்மையான வாள். "கேட்க செவி உடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும். மறைத்து வைக்கப்பட்டுள்ள மன்னாவை வெற்றி பெறுவோருக்கு அளிப்பேன்; வெள்ளைக் கல் ஒன்றையும் அவர்களுக்குக் கொடுப்பேன். அதில் ஒரு புதிய பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். அதைப் பெறுவோரேயன்றி வேறு யாரும் அப்பெயரை அறியார்" (திவெ 2:17).

மூன்று விதமான பரிசுகள் அறிவிக்கப்படுகிறன்றன. மன்னா, வெள்ளைக்கல், புதிய பெயர். மன்னா என்பது இஸ்ரயேல் மக்களுக்கு 40 ஆண்டுகளாகக் கடவுளால் தரப்பட்ட உணவு. வெள்ளைக்கல் என்பது, கிரேக்க வரலாற்று ஆசிரியரான புளூடார்க் என்பவர் சொல்கிறார், உரோமைப் போர்ப் படை 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நகரத்தைப் பிடிக்கப் புறப்பட்டுச் செல்லும். பிடித்த பின்பு ஒவ்வொரு நாளும் காலையில் வெவ்வேறான நிறம் உடைய கற்களை குலுக்குவார்கள். எந்தப் பிரிவு வெள்ளைக்கல் எடுக்கிறதோ அவர்கள் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவது வழக்கம். ஆக, வெள்ளைக்கல் விடுதலையைக் குறிக்கிறது. புதிய பெயர் என்பது புது அடையாளத்தை வெளிப்படுத்துகின்ற ஒன்று. ஆபிராம் என அழைக்கப்பட்டவருக்கு ஆபிரகாம் எனப் புதிய அடையாளத்தைக் கடவுள் கொடுத்தார். இதன் பொருள் எண்ணற்ற நாடுகளுக்குத் தந்தையாவாய் (தொநூ 17:4,5). மனம் மாறுகிறவர்களுக்குப் புதிய அடையாளங்களைக் கொடுக்க ஆண்டவர் ஆயத்தமாக உள்ளார்.

திரு. G. **சுஜின் டேனியல்**

03-03-2021

தவக்கால மூன்றாம் புதன்

## ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்

லூக் 21:7-19

**"..... நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்"** (லூக் 21:8).

ஏமாறுகிறவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பது பொதுவான சொலவடை. திருமறையில் கூறப்பட்டுள்ள மானிட வரலாற்றின் தொடக்கம் ஒரு ஏமாற்றத்தின் வரலாற்றுடன் தொடங்குகின்றது (தொநூ 3:4). ஏமாற்றம் பல விளைவுகளை மனிதனின் வாழ்க்கையில் கொண்டு வருகின்றது. எனவே ஏமாறாமல் பார்த்துக் கொள்வது எல்லா மனிதருக்கும் பெரிய சவாலாக உள்ளது. இந்தத் தவக்காலம் இறைமக்களாகிய நம்மை ஏமாறாமல் பார்த்துக் கொள்ள அறைகூவல் தருகின்றது.

இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு, சிலுவைப் பாடுகளை ஏற்பதற்கு முன் சீடர்களுடன் உரையாடிய உரையாடல்களுள் ஒரு பகுதியை லூக் 21:7-19 வரை உள்ள வசனங்களில் லூக்கா நற்செய்தியாளர் பதிவு செய்துள்ளார். தமது மரணத்திற்குப் பின் சீடர்கள் பல புரட்டு உபதேசங்களைப் பின்பற்றி, துன்பங்கள் வரும்போது பின்மாறிப்போனால் ஏமாற்றப்படுவர் என்பதை முன்னறிந்த இயேசு, தம் சீடர்களைப் பார்த்து "ஏமாறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்துகின்றனர். இயேசு கிறிஸ்து கூறியவாறு ஏமாறால் பார்த்துக்கொள்ள இறைமக்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதை இரண்டு சிந்தனைகள் வாயிலாகத் தியானிப்போம்.

### *1. தெளிந்த மனத்துடன் வாழுங்கள்* : (லூக் 21:8-10)

லூக்கா 21:8ஆம் வசனத்திற்கு இணையான பகுதியை மத் 24:24 மற்றும் மாற்கு 13:22 ஆகியவற்றில் காணமுடியும். அந்தப் பகுதிகளில் இயேசு மூன்று கேள்விகளுக்குப் பதில் தருகின்றார். அந்த மூன்று கேள்விகள்: (1) ஏமாற்றுபவர் யார்? (2) ஏமாற்றப்படுபவர் யார்? (3) எவ்வாறு ஏமாற்றப்படுவர்? என்பனவாகும்.

ஏமாற்றுபவர் : போலி மெசியாக்கள், போலி இறைவாக்கினர்கள்
ஏமாற்றப்படுபவர் : தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்
எவ்வாறு ஏமாற்றப்படுவர்? : பெரும் அடையாளங்கள்,
அருஞ்செயல்கள் (மத் 24:22, உரோ 13:22) வாயிலாக.

போலி மெசியாக்கள் மற்றும் போலி இறைவாக்கினர்கள் வழியாகப் புரட்டு உபதேசங்கள் கற்பிக்கப்படும். அப்போது தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய சீடர்கள் ஏமாறாமல் பார்த்துக் கொள்ள தெளிந்த மனத்துடன் இருக்க வேண்டும் என்று எண்ணி இந்த வார்த்தைகளைச் சீடர்களுடன் இயேசு பேசுகின்றார். லூக் 21:8,9 ஆகிய வசனங்களில் இயேசு இரண்டு முக்கியமான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றார். இப்பகுதியில் மறைநூல் அறிஞர்களையும் புரட்டு உபதேசங்கள் செய்பவர்களையும் பின்பற்றாமலும் பல துர்ச்செய்திகளைக் கேள்விப்படும்போது பயப்படாமலும் இருக்க வேண்டும் என்பதை இயேசு சீடர்களுக்குக் கற்பிக்கின்றார். எனவே ஏமாறாமல் இருக்க தெளிந்த மனநிலை அவசியம்.

இன்று நாம் வாழும் சமூகத்தில் இறைமக்களை அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் விளம்பரங்கள் போன்றவற்றை முன்னிறுத்தி ஏமாற்றும் கூட்டங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. இப்படி ஏமாற்றுவோரை நாம் எதிர்த்து நிற்க தெளிந்த மனது அவசியமாகின்றது. இயேசு தெளிந்த மனத்துடன் இருந்ததால், சிலுவைப் பாடுகளை ஏற்று மீட்பை உலகிற்கு வழங்கினார். அவருடைய சிலுவைப் பாடுகளைத் தியானிக்கும் நாமும் தெளிந்த மனதுடையவர்களாக வாழ்ந்து ஏமாறாமல் பார்த்துக் கொள்வோம்.

### ***2. திட மனத்துடன் வாழுங்கள்*** : (லூக் 21:11-19)

சிலுவைப் பாடுகளை முன்னறிந்த இயேசு சிலுவை மரணத்திற்குப் பின் சீடர்கள் பல துன்பங்களையும் சகிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். இந்தச் சூழலில் சீடர்கள் பின்வாங்காமல் திடமனத்துடன் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த வசனங்களைத் தம் சீடர்களிடம் கூறுகின்றார்.

லூக் 21:11-19 வரை இயற்கை சீற்றங்களால் வரும் அழிவு மற்றும் பேரிடர் குறித்தும், சீடர்கள் துன்பங்கள் பலவற்றிற்கும் உள்ளாவார்கள் என்பதைக் குறித்தும் இயேசு தம் சீடர்களிடம் கூறுகின்றார். இயேசுவின் பெயரினிமித்தம் குடும்பத்தாராலும் நண்பர்களாலும் காட்டிக் கொடுக்கப்படுவர் (லூக் 21:16,17) என்பதை அறிந்த இயேசு அத்தகைய தருணம் வந்தாலும் சீடர்கள் திடமனத்துடன் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார்.

அதேவேளையில் துன்பத்தைத் திடமனத்துடன் எதிர்கொள்ள தமது துணையைத் தருவதாக சீடர்களுக்கு வாக்குரைக்கின்றார். “ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன், உங்கள் தலைமயிரில்

ஒன்றாகிலும் அழியாது" (லூக் 21:15,16) போன்ற அவரது வார்த்தைகள் சீடர்களைத் திடமனத்துடன் வாழத் தூண்டுபவைகளாக இருக்கின்றன.

திடமனத்துடன் வாழவேண்டுமென்று விரும்பும் இயேசு நம் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்றார். கொடும் சிலுவை மரணத்தையும் திடமனத்துடன் எதிர்கொண்டார். அதனால் அவர் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றி ஏமாறாமல் பார்த்துக் கொண்டார்.

இறைமக்களாகிய நாமும் இயேசு கிறிஸ்துவை மாதிரியாக ஏற்று, தெளிந்த மனத்துடனும், திடமனத்துடனும், வாழ்ந்து துன்பங்களை எதிர்கொண்டு கடவுளின் திட்டத்தை இவ்வுலகில் நிறைவேற்றும் கருவிகளாக மாறுவோம். பல்வேறு நூதனமான போதனைகளால் கவரப்படாதிருங்கள் (எபி 13:9) என்ற எபிரேயர் ஆக்கியோனின் வார்த்தைகளை உணர்ந்தவர்களாக ஏமாறாமல் பார்த்துக் கொள்ள கடவுள், கிறிஸ்து வழியாக நமக்கு உதவி செய்வாராக!

திரு. Y. **சுஜின் ராஜ்**

05-03-2021



# தியத்திரா திருச்சபை

திவெ 2:18-29

**"உன் செயல்களை நான் அறிவேன்"** (திவெ 2:19).

திருவெளிப்பாட்டு நூலில் கூறப்பட்டுள்ள ஏழு சபைகளில் தியத்திரா நான்காவது திருச்சபை. இது சிறிய திருச்சபை, குறைந்த முக்கியத்துவத்தை உடையது. ஆனால் நீண்ட கடிதத்தைப் பெற்றுக் கொண்டது. அதைத்தான் திவெ 2:18-29 வரையிலான திருமறைப் பகுதியில் பார்க்கிறோம். இக்கடிதத்தின் வழியாக கடவுளின் எச்சரிப்பும், மனமாற்றத்திற்கான அழைப்பும் கொடுக்கப்படுகிறது. இக்கடிதத்தின் மைய நோக்கம் என்ன? என்ன மாற்றத்தை கடவுள் இந்தச் சபையிடம் எதிர்பார்த்தார்? இந்த எச்சரிப்பின் கடிதத்தைப் பெற இவர்கள் செய்த செயல்கள்தாம் என்ன? என்பதைப் புரிந்த கொள்ள இந்நகரின் கட்டமைப்பை அறிந்துகொள்வது அவசியமானது.

***தியத்திரா நகர்*** :

இது சிறிய ஆசியாவில் உரோமைப் பேரரசின் தலைநகராயிருந்த பெர்காமுக்கான நுழைவாயில். இது எபேசு, சிமிர்னா போன்று துறைமுகப்பட்டணம் அல்ல, பெர்காம் போன்று மலைநாடும் அல்ல. மாறாக நீண்ட பள்ளத்தாக்கில் இந்நகர் அமைந்திருந்தது. மத்தியதரைக் கடலிலிருந்து வெகு தொலைவில் அமைந்திருந்தாலும், பெர்காம் - சர்தை நகர்களை இணைக்கும் அன்றைய வணிகத்திற்கான மிக முக்கியமான சாலையில் அமையப் பெற்றிருந்தது. பெரிய நகராய் இல்லாதிருந்தாலும், இது மிகச் செழிப்பான நகரம். அதேசமயம் அதிக வணிகர்கள் மற்றும் உற்பத்தி மையங்களைக் கொண்டிருந்த நகரம். இங்கு ஏராளமான வர்த்தகக் குழுக்கள் இருந்தன. அவை ஆரம்பகால தொழிற்சங்கங்களுக்குச் சமமானவை. எனவே தியத்திரா என்பது "தொழிற்கூடங்களின் நகரம்" என்றே அழைக்கப்பட்டது. மற்ற சபைகளைப் போன்று இவர்களுக்குச் சமயத் துன்புறுத்தல் இல்லை. அதேசமயம், வர்த்தகக் குழுக்களால் துன்புறுத்தல் இருந்தது. இந்நகரில் யூதர்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே வாழ்ந்து வந்தனர். இந்தச் சிறு நகரம் தலைநகர் பெர்காமிற்கு நுழைவு வாயிலாக இருந்ததால், அதைத் தாக்கவரும் எதிரிகளின் தாக்குதலுக்கு அநேகமுறை உள்ளாக்கப்பட்டு, பலமுறை மறுகட்டமைப்புக்கு உட்படுத்தப்பட்டது. எப்பொழுதும் படைகள் அணிவகுத்து நிற்க வேண்டிய அபாய நிலையில் இருந்து வந்தது இந்நகரம்.

இது கி.மு. 190 முதல் உரோமை ஆக்கிரமிப்பு நகரமாக மாறியது. மூன்று நூற்றாண்டுகள் இது உரோமை ஆட்சியின் கீழ் இருந்தது. இக்காலகட்டத்தில் சிறிய நகரான இது பெரிய அளவில் வணிகத்தில் செழித்தது. இந்நகரில் gulids என்றழைக்கப்படும் ஒரே தொழில் செய்வோர் இணைந்து இருக்கும் வர்த்தகக் குழுக்களும், (இன்றைய தொழிற்சங்கம் போன்று) சமூக வாழ்வியலும் அதிக அளவில் காணப்பட்டன. இன்று மேற்குத் துருக்கியில் "Akhisar" என்னும் பெயரில் இந்நகரம் அறியப்படுகிறது. இன்றும் ஜவுளி வியாபாரம் தான் அங்கு பிரதானத் தொழில். இத்தகைய சிறப்பு மிக்க பட்டணத்தில் அமையப் பெற்றிருந்த தியத்திரா சபையின் சிறப்புகளையும், எச்சரிக்கை பெற காரணங்களையும் சிந்திப்போம்.

### *1. திருப்தியான வாழ்வை வாழ்ந்தவர்கள்* :

இது வர்த்தகப் பட்டணமானதால் குயவர்கள், தோல் பதனிடுவோர், நெசவாளர்கள், துணி சாயமிடுவோர் அதிக அளவில் வாழ்ந்தனர். குறிப்பாக, அங்கு ஆடைகளில் பயன்படுத்தப்பட்ட அரியவகை "ஊதா சாயம்" உலக புகழ் பெற்றதும், அதிக பண மதிப்பைக் கொண்டதுமாய் இருந்தது. பவுலாரின் நற்செய்திப் பயணத்தின்போது கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஐரோப்பா கண்டத்தின் முதல் கிறிஸ்தவராக மனமாற்றம் பெற்று, குடும்பமாக ஞானஸ்நானம் பெற்ற லீதியாளின் சொந்த ஊர் தியத்திரா. இதைத்தான் திப 16:14,15 விளக்குகிறது. இவள் ஒரு பெண்மணி அதேசமயம் தன் வியாபாரத்தினிமித்தம் பிலிப்பிப் பட்டணத்தில் தங்கியிருந்தார். அங்கு இருந்த போதுதான் பவுலுடனான சந்திப்பும், மனமாற்றமும் ஏற்பட்டது. இந்த நிகழ்வு அன்று தியத்திராவின் வணிக உலகில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாய்ப்பையையும், உரிமையையும், சுதந்திரத்தையும் எடுத்துக் காட்டுகிறது. அதேசமயம் லீதியாள் தன் சொந்த நகரத்திலும், வியாபாரத்தினிமித்தம் தங்கியிருந்த இடத்திலும் நற்பெயர் பெற்றிருந்தார். எனவே தான் திப 16:15-இல் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர். இதற்கு முன் அதிக அளவில் அறிமுகமில்லாத பவுலை தன் வீட்டிற்கு மனப்பூர்வமாய் அழைத்து திருச்சபை உருவாகக் காரணமாய் விளங்கினார். இவர் மூலம் நற்செய்தியாம் கிறிஸ்து தியத்திரா நகரத்திலும் நிச்சயமாய்ப் பறைசாற்றப்பட்டிருக்க வேண்டும். "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதற்கு இணங்க இக்கடிதத்தில் திவெ 2:19-இல் "உன் செயல்களை நான் அறிவேன். அன்பு, நம்பிக்கை, திருத்தொண்டு, மனவுறுதி ஆகியவை எனக்குத் தெரியும். நீ இப்பொழுது செய்து வரும் செயல்கள் முதலில் செய்தவற்றை விட மிகுதியானவை என்பதும் தெரியும்" என்று கிறிஸ்துவே அவர்களைக் குறித்து நற்சாட்சி சொல்வதைப் பார்க்க முடிகிறது.

பல்வகை வர்த்தகம், தொழில் போட்டிகள், ஆடம்பர வாழ்க்கை அனைத்தும் தங்களைச் சுற்றி இருந்தபோதிலும் கிறிஸ்துவின் பிரதானக் கட்டளையான “அன்பு” இங்கு அளவுக்கு அதிகம் இருந்தது. அன்பின் தன்மையை Amy Carmichael அம்மையார் சொல்லும்போது “You can give without loving, but you cannot love without giving” என்கிறார். அன்போடு மட்டும் நின்றுவிடாமல் அதோடு கூடவே பற்றுறுதி, பொறுமை, ஊழியம், நற்கிரியை முதலியவை கடவுளே மெச்சும் அளவிற்கு இந்தச் சபையில் மிகுதியாய் இருந்தது. பணம், செல்வம், அதிக நட்பு, புதிய மனிதர்களின் பழக்கவழக்கம் போன்றவற்றில் மட்டுமல்ல, நற்செயல்கள் மற்றும் கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றி நடப்பதிலும் இவர்கள் திருப்தியான வாழ்வை வாழ்ந்தார்கள். இன்றைய உலகின் மனிதர்கள் சிறு முன்னேற்றம் ஏற்பட்டு, கையிலும் பையிலும் பணம் பெருகி விட்டால் போதும், பெற்றவர்கள் கூட பிள்ளைகளால் அனாதைகளாக்கப்படும் அவலநிலையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். “பணம் பத்தும் செய்யும்” என்பதற்குச் சான்றாக இன்று பணத்தின் பின்னால் ஓடி, நல்ல குணத்தையும், மனிதத்தையும் மனிதர்களில் அநேகர் இழந்து நிற்கின்றனர். இத்தகையோருக்கு இந்தத் தியத்திரா சபை நல்ல எடுத்துக்காட்டு. அவர்கள் தங்கள் வாழ்வில் திருப்தியைச் சம்பாதிப்பதிலும், வணிகத்திலும் மட்டுமல்ல கடவுளின் திட்டத்தையும், கட்டளைகளையும் நிறைவேற்றுவதிலும் கருத்தாயிருந்தனர்.

### *2. திருந்தி வாழ அழைப்பைப் பெற்றவர்கள்* :

இத்தகைய சிறப்புமிக்க வாழ்வைக் கொண்டிருந்த சபைக்கு மனமாறுதலுக்கான அழைப்பு கொடுக்கப்படுகிறது. அவர்களின் நற்செயல்களைப் புகழ்ந்த கிறிஸ்து, அவர்களின் தீச்செயலைக் கடுமையாகக் கண்டிக்கிறார். ஆயினும் உன்னிடம் நான் காணும் குறை ஒன்று உண்டு. இசபேல் என்னும் பெண்ணை நீ கண்டிக்காமல் விட்டு வைத்திருக்கிறாய். தான் ஒரு இறைவாக்கினர் எனக் கூறிக் கொள்ளும் அவள் என் பணியாளர்களை நெறிபிறழச் செய்து அவர்கள் பரத்தமையில் ஈடுபடவும் சிலைகளுக்குப் படைக்கப்பட்டதை உண்ணவும் போதித்து வருகிறாள் (திவெ 2:20) என்று இங்கு இசபேலை உருவமாகப் பயன்படுத்துகிறார். இந்த இசபேல் வழியாகத்தான் பாகால் வழிபாடு இஸ்ரயேலுக்குள் வந்தது. இவள் ஏத்பாகால் என்கிற சீதோனிய ராஜாவின் மகள். இஸ்ரயேலின் ராஜாவான ஆகாப் இவளை மணமுடித்ததின் மூலம் இஸ்ரயேல், கடவுளை விட்டு விலகி, பொல்லாத செயல்களை நடப்பித்து, அனேக தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து கடவுளின் கடும் கோபத்துக்கு ஆளானது. இவை அனைத்திற்கும் காரணம் இசபேல். இவளைத் தியத்திரா சபைக்கு உருவகப்படுத்துகிறார். இதற்குக் காரணம் அதைப் போன்ற செயல்கள் இங்கும் இருந்திருக்க வேண்டும்! ஆம் இருந்தது!

இது வணிக நகரமானதால் பல்வேறு வகை வணிகம் செய்வோர் கூடி வாழ்ந்தனர். ஒவ்வொரு தொழில் செய்வோரும் அவரவர் தொழில் சார்ந்த வணிகக் குழுக்களில் இடம் பெற்றிருந்தனர். அவரவர் தொழிலுக்கு ஏற்ப கடவுள்களும் அவர்களுக்கு இருந்தன. அந்த வணிகர் குழுக்களில் கிறிஸ்தவர்களும் இடம் பெற்றிருந்தனர். வணிகம் சார்ந்து இது தவிர்க்க முடியாதது. அதேசமயம் இவர்கள் செய்த தவறு என்னவெனில் வணிகக் குழுக்கள் தங்கள் தொழிலுக்காக அந்தக் கடவுள்களுக்கு ஆராதனை செய்வதை, இவர்களும் பின்பற்றினர். அந்த விக்கிரகங்களுக்குப் பலியாகப் படைக்கப்படும் உணவுகளை இவர்களும் புசித்தார்கள். இதைத் தான் இங்கு "விபசாரத்திற்கு" ஒப்பிட்டு ஆண்டவர் எச்சரிக்கிறார். காரணம் இவர்கள் கிறிஸ்துவுக்கும், அதே சமயம் பிற கடவுளுக்கும் சேவை. செய்தார்கள். விக்கிரக விருந்துக்குச் சென்று விட்டு, பின்னர் ஆண்டவரின் பந்திக்கும் வந்தனர். இது கடவுளின் கடும் கோபத்திற்குக் காரணமாய் அமைந்தது. மறுபுறம் இது தொழில் நகரமானதால் பல்வேறு வாழ்க்கை முறை, கலாச்சாரம் கொண்ட வணிகர்கள், வியாபாரிகள் இந்நகருக்கு வந்து சென்றனர். எனவே இங்கு வேசித்தனங்களும் அதிகம் காணப்பட்டன. குறி கேட்கும் மேடையும், குறி கேட்பதும் வழக்கமாக இருந்தது.

இவைகளில் இருந்து விடுபட்டு திருந்தி வாழ வேண்டும். இல்லையேல், கடவுளின் கடும் சினத்திற்கு ஆளாக நேரிடும் என்ற எச்சரிப்பின் தொனியை இக்கடிதத்தின் வழி கிறிஸ்து கொடுக்கிறார். திவெ 2:23,27 ஆகிய வசனங்களில் மிக கடுமையாகக் கடிந்து கொள்கிறார். இந்த எச்சரிப்பு இஸ்ரயேலின் எகிப்திய அடிமைத்தனத்தின் போது எகிப்தியர்கள் சந்தித்த "தலைப்பிள்ளைச் சங்காரத்தை" நிச்சயம் அவர்களுக்கு நினைப்பூட்டியிருக்க வேண்டும். இங்கு கடிந்து பேசும் கிறிஸ்து திவெ 2:26 இல் "என் தந்தையிடமிருந்து நான் அதிகாரம் பெற்றிருப்பதுபோல, வெற்றி பெறுவோருக்கும், என் செயல்களை இறுதி வரை செய்வோருக்கும் வேற்றினத்தார் மீது அதிகாரம் அளிப்பேன்" என்று முடிவுபரியந்தம் அவர்கள் நிலைத்து நிற்க அறிவுறுத்துகிறார். அப்படி நிலைத்து நின்றால் "விடிவெள்ளியையும் அவர்களுக்குக் கொடுப்பேன்" (திவெ 2:28) என்கிறார். இந்த விடிவெள்ளி யாரை? எதைக் குறிக்கிறது? என்பதை திவெ 22:16 விவரிக்கிறது.

தாவீதின் குலக்கொழுந்தம், வழித்தோன்றலும், நானே! ஒளிபடைத்த விடிவெள்ளியும் நானே! அந்த விடிவெள்ளி "கிறிஸ்துவே." தம்மையே தரும் தியாக நிலையைத் தான் இந்த எச்சரிப்புக் கடிதத்தின் நிறைவில் கிறிஸ்து தருகிறார். இது உலகின் மீது அவர் கொண்டிருந்த நிகரில்லா அன்பையும், தாய் உள்ளத்தையும், இரக்கக் குணத்தையுமே காட்டுகிறது. சிலுவையில் தம்மையே தியாகம் செய்தது மானிட வாழ்வில் விடியலைக் கொண்டு வரவே அந்த வாய்ப்பு தியத்திரா திருச்சபைக்கும் கொடுக்கப்பட்டது. இன்று நமக்கும் தரப்படுகிறது. எனவே அதை நமதாக்கிக் கொள்ள நம்மையே அவருக்கென்று தத்தம் செய்து முடிவு பரியந்தம் இவ்வுலகில் கிறிஸ்துவுக்காய் நிலைத்து நிற்போம்.

திரு. A. **ஜெனில்தாஸ்**

# என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா

லூக் 21:29-33

**"விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா"** (லூக் 21:33).

எருசலேம் நகரம் கி.பி. 70-இல் உரோமைப் படையினரால் சூழப்பட்டு, மக்கள் உரோமைப் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு எருசலேம் ஆலயம் இடிக்கப்பட்டது. தாவீது என்பவரால் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டபோது, அங்கு வாழ்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் இறந்தனர். எஞ்சியோர் பெருந்துன்பங்களுக்கு ஆளாயினர். குறிப்பாக, சமூகத்திலும், பொருளாதாரத்திலும், மதம் சார்ந்தும் மக்கள் ஒடுக்கப்பட்டு, நடைபெறுகின்ற அழிவுகள் குறித்து அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தனர். எனவே, "மனுக்குலம் பீதியால் தத்தளிக்கும் சூழலிலும் இறை பக்தி கொண்டோர்க்கு நம்பிக்கையின் ஒளி வீசும் வண்ணம், என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா என்று ஆறுதலும் உற்சாகமும் நம்பிக்கையும் அளிக்கும் வார்த்தை உரைக்கப்படுகிறது."

கொரோனா தொற்று வியாதி - இதன் விளைவாக வேலை இழப்பு, வறுமை, பொருளாதார நெருக்கடி, பசி, பட்டினி, தற்கொலை, களவு, ஏமாற்று, தந்திர வியாபாரம், அரசியல் குழப்பங்கள், மதச்சண்டைகள், சிறுபான்மை இன மக்கள் மீது தாக்குதல்கள், வன்கொடுமைகள், உழைப்புச் சுரண்டல், அத்துமீறல்கள், ஊழல், வழிபாடுகளும் ஊழியங்களும் தடைசெய்யப்படுதல்...என்று அடுக்கடுக்காகப் பின்விளைவுகள் நம்மை வருத்தப்படுத்துகின்ற சூழலில் "என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா" என்பது இயேசுவின் வார்த்தைகளின் வலிமையை, நம்பிக்கையைப் பறைசாற்றுகின்றது. மட்டுமல்ல, இது இயேசுவின் அதிகாரத்தை வெளிப்படுத்துகின்றது. இதன் அடிப்படையில் "என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா" எனும் திருவசனம் கற்றுத்தரும் உண்மைகளைத் தியானிப்போம்.

### *1. ஆண்டவரின் வார்த்தைகள் பொய்த்துப் போகா* :

எதிர்ப்புகள் வலுக்கும்போது வாக்கு மாறுவதும், நெருக்கடிக்கு இணங்கி, வாக்குத் தவறுவதும், கொடுத்த வாக்குறுதியைக் காற்றிலே பறக்க விடுவதும் மானிட இயல்பு. உலகமும் அதன் நியதிகளும் மாறலாம். மனிதர்

கூறும் வார்த்தைகள் பலிதம் ஆகாமல் போகலாம். மனித வாக்குகள் பொய்த்துப் போவதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஒவ்வொரு வருடத் துவக்கத்திலும் ‘இவ்வாண்டு வளமையின் ஆண்டாக இருக்கும், செழுமை எங்கும் தழைத்தோங்கும் என்று கடவுள் பேசுகிறார்’ என்று பல போலி வார்த்தைகள் சொல்லப்பட்டு அவை பொய்த்துப் போகின்றன. நம்பின மக்களுக்கும் ஏமாந்து போய் விடுகிறார்கள். ஆயினும் ஆபத்துகள், நெருக்கடிகள், கஷ்டமான சூழல்கள் வாழ்வில் வரும்போது, ஆண்டவரின் வார்த்தைகள் நம்மைவிட்டு அகலா. அவை நம்மைப் பலப்படுத்தும், நம்பிக்கையூட்டும். ஆகவே ஆண்டவரது வார்த்தைகள் ஒருபோதும் பொய்த்துப் போகா என்பதை “என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா” என்ற கருத்து நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

பிரேசில் நாட்டில் அமைந்துள்ள Santa Filomena நகரத்தில் வாழும் 90 சதவிகித மக்களும் விவசாயிகள். சரியான வருமானமின்றி வறுமையில் வாழ்ந்து வந்த இவர்கள், எப்படி இந்த மாதத் தேவைகளைச் சந்திப்பது என்று கலங்கியிருந்த தருணத்தில் வானத்திலிருந்து ஓர் அற்புதம் கடந்த 01-09-2020 அன்று நிகழ்ந்தது. Edimar da Costa Rodrigues (வயது 20) என்ற மாணவர், திடீரென வானம் புகை மூட்டத்தால் சூழ்ந்துள்ளதைக் கவனித்துள்ளார். சிறிது நேரத்தில் அவரது நண்பர்கள் அவருக்கு வாட்ஸ் அப்பில் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்கள். அந்தச் செய்தியில் வானிலிருந்து பாறைகள் விழுவதாக அவர்கள் தெரிவிக்க, வெளியே சென்ற Rodrigues க்கு 164 கிராம் எடையுள்ள ஒரு கல் கிடைத்துள்ளது. அவரைப்போலவே மக்கள் ஆங்காங்கு விழுந்துள்ள கற்களைச் சேகரித்துள்ளார்கள். அதிக பட்சமாக அவருக்கு 40 கிலோ எடையுள்ள ஒரு கல் கிடைத்துள்ளது. அந்தக் கற்கள் சாதாரணமானவை அல்ல. அவை அபூர்வ விண்கற்கள். அதுவும் பூமி உருவாவதற்கு முன்பே சூரியக்குடும்பத்தில் காணப்பட்ட ஒருவகை கற்கள் அவை. ஆகவே, அவற்றை ஆயிரக்கணக்கான பவுண்டுகள் கொடுத்து வாங்கினர் பலர். இந்த மாத மளிகைப் பாக்கியைக் கொடுப்பது எப்படி? என்று கலங்கியிருந்த ஏழை மக்கள், ஒரே நாளில் பணக்காரர்களாகி விட்டனர். Rodrigues, தனக்குக் கிடைத்த கல்லை 1,000 பவுண்டுகளுக்கு விற்பனை செய்துள்ளார். மற்றொருவர் தனக்குக் கிடைத்த 2.8 கிலோகிராம் எடையுள்ள கல்லை 15,000 பவுண்டுகளுக்கு விற்பனை செய்துள்ளார். இதில் இன்னொரு விஷயம் என்னவென்றால், அந்த நகரத்திலுள்ள தேவாலயம் ஒன்றின் அருகில் பல பெரிய விண்கற்கள் கிடைத்துள்ளதால், இது கடவுள் அனுப்பிய பரிசு என மக்கள் கருதுகிறார்கள்.

இப்படித்தான், கடவுளின் வார்த்தைகள் பொய்த்துப் போகாமல், நமது பிரயாசங்களில் நம்மை வலுப்படுத்தும். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவே விடேன் (யோவா 14:18) என்ற வாக்கு போலவே, வறுமையில் உழன்ற மக்கள் வாழ்வு பெற்றனர். ஆண்டவரின் வார்த்தை பொய்த்துப் போகவில்லை. இன்று, அரசியல் கெடுபிடிகளும், மதப் பிரச்சினைகளும், கிறிஸ்தவர்களுக்கு எதிரான போராட்டங்களும் நம்மை விளிம்பு நிலைக்குக் கொண்டு செல்கின்றன. போராட்டங்களின் மத்தியில் எப்படி வாழ்வோம்? என்ற கவலை நம்மை நெருக்கும்போது, ஆண்டவரின் வார்த்தை நம்முடன் இருக்கும் என்பதை நினைவில் கொள்வோம்.

## *2. ஆண்டவரின் வார்த்தைக்கு அழிவில்லை* :

பசும்புல் காய்ந்து போகிறது. பூ வாடிப்போகிறது. நம் கடவுளின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கிறது (எசா 40:8). எல்லாமே ஒரு காலத்தில் அழிந்து போகும். எதுவும் இந்த உலகில் நிலைத்து நிற்பது இல்லை. காரணம் அவை இயல்பிலேயே அழிவுறக்கூடியவை. ஆனால் இறை வார்த்தைகளுக்கு அழிவு இல்லை. அவை கடவுளைப் போன்று முடிவிலாதவை. ஏனெனில், யோவான் 1:1-இன் படி, வாக்கு கடவுளாயும் இருந்தார். ஆகவே, இயேசுவின் வார்த்தைகளுக்கு ஒருபோதும் அழிவு இல்லை.

மொழி மாற்றங்களின் மத்தியிலும், அரசியல் மாற்றங்களின் மத்தியிலும், மொழி பெயர்ப்பதற்கு வந்த எதிர்ப்புகளின் மத்தியிலும் கடவுளுடைய வார்த்தை இன்றளவும் நிலைத்திருக்கிறது. காலங்கள் போகப்போக மொழிகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. வார்த்தைகள் அல்லது சொற்றொடர்களின் அர்த்தமே அடியோடு மாறிவிடுகின்றன. பழங்கால மொழிகளிலும் இப்படித்தான் நடந்திருக்கிறது. மொழிகளில் ஏற்படுகிற மாற்றம் ஆண்டவரின் வார்த்தைகளின் (பைபிள்) மொழி பெயர்ப்புகளையும் பாதிக்கிறது. உலகத்தில் நடந்த சில அரசியல் மாற்றங்கள், அந்தந்த சமயத்தில் மக்கள் பேசிய மொழியை மாற்றியிருக்கின்றன. பல வருடங்களாக, அதிகாரம் படைத்த தலைவர்கள் நிறையபேர், பைபிளைப் படிக்காதபடி மக்களைத் தடுத்திருக்கிறார்கள். ஆயினும், ஆண்டவருடைய வார்த்தைகளை எவராலும், எதனாலும் அழிக்க முடியவில்லை.

மேற்கு வெர்ஜினியாவில் உள்ளது கிரான்ட்வியூ என்ற நகரம். இங்குள்ள ட்ரீம்ஸ் வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயத்தில் 03-03-2019 அன்று இரவு, மின்கசிவு காரணமாகப் பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. இரவுநேரம் என்பதால் செய்தி அங்கிருந்த தீயணைப்புத் துறையினருக்குத் தாமதமாகக்

கிடைத்தது. அப்படியிருந்தும் அவர்கள் தீயை அணைக்க விரைந்து வந்தனர். அவர்கள் தீவிபத்து நடந்த இடத்திற்கு வருவதற்குள் தீயானது ஆலயம் முழுவதும் பரவி எரிந்து கொண்டிருந்தது. உடனே அவர்கள் தீயை அணைக்கக் கடுமையாகப் போராடினார்கள். ஆனாலும் அவர்களால் தீயைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. நீண்ட நேரப் போராட்டத்திற்கு பின்பு தான் அவர்களால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. தீயின் தீவிரம் ஓரளவுக்குத் தணிந்ததும் அவர்கள் ஆலயத்திற்குள்ளே சென்று தீயை அணைக்க முயன்றனர். அப்பொழுது அவர்கள் கண்ட காட்சி அவர்களை ஆச்சரியப்பட வைத்தது. ஆலயமே தீயில் எரிந்து கொண்டிருந்தபோது அங்கே வைக்கப்பட்டிருந்த திருவிவிலிய நூற்களைத் தீயின் நாவுகள் தீண்டாமல் அவை அப்படியே இருந்தன. இந்நிகழ்வு இயேசு சொன்ன, “விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். ஆனால், என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா” (லூக் 21:33) என்பதை நினைவுபடுத்துவதாக இருக்கின்றது. உண்மையாகவே இயேசுவின் வார்த்தைகளுக்கு அழிவே இல்லை.

ஒன்றுமில்லாமையில் இருந்தும் ஒழுங்கின்மையில் இருந்தும் நிறைவுக்குக் கொண்டு வரக்கூடிய ஆற்றல் கடவுளுடைய வார்த்தைக்கு உண்டு. அண்ட சராசரங்கள் அனைத்தின் மீதும் கடவுளுடைய வார்த்தைகளுக்கு அதிகாரம் உண்டு. கடவுளின் வார்த்தைகள் ஒருபோதும் பொய்க்கா. பலன் கொடுக்காமல் போகா. நூறு மடங்கு பலன் உறுதியாக நிறைவாக கொடுக்க வல்லவை. அப்படிப்பட்ட பொய்த்துப் போகா, அழியாத்தன்மை கொண்ட வார்த்தைகளுக்கு நாம் செவி கொடுத்து அதன்படி நடக்கின்றோமா? என்பதை இத்தவக்காலத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டியதும் கூடுமானவரை ஆண்டவரின் வார்த்தைகளில் உறுதிப்படுவதும் இன்றியமையாதவை.

திரு. G. **சந்தோஷ்**

12-03-2021



## சர்தைத் திருச்சபை

திவெ 3:1-6

**"...விழிப்பாயிரு, உன்னில் எஞ்சியிருப்பதை உறுதிப்படுத்து"** (திவெ 3:2).

சர்தைச் சபை கி.பி. 1517-இல் செயல்பட்டது. சர்தைச் சபை மறுமலர்ச்சி சபை என்று கூறப்பட்டது. "சர்தை" என்றால் மீதியாயிருப்பது, தப்பிக் கொள்வது, சந்தோஷத்தின் அதிபதி என்று பொருள்படுகிறது. சர்தைப் பட்டணம் தியத்திராவுக்குத் தென்கிழக்கில் 30 மைல் தூரத்திலுள்ளது. இப்பட்டணத்தின் வழியாக 5 முக்கியத் தேசிய நெடுஞ்சாலைகள் சென்றன. இது நல்ல வியாபார ஸ்தலமாக இருந்தது. முற்காலத்தில் லீதியா ராஜ்யத்திற்கு இது தலைநகராக இருந்தது. பேக்டோலஸ் எனும் ஆறு இவ்வழியாகச் சென்றது. எனவே இயற்கையாகவே சர்தை வளம் பெற்ற நகராகத் திகழ இது காரணமானது. யோவானின் நற்செய்திப் பணியின் மூலம் மீட்கப்பட்டவர்கள் சர்தைப் பட்டணத்தார். மீட்பின் சந்தோஷத்தைப் பெற்ற சர்தைச் சபையின் கிரியைகளைக் கடிந்து கொள்கிறார் ஆண்டவர். ஆன்மிக ஆடை அழுக்கு படிந்துள்ளது என்று குறிப்பிடுகிறார். எனவே வாழ்வில் ஆன்மிக அழகு தூய்மையடைந்திட உயிரோட்டமான இறையுறவில் வளர எச்சரித்து, புதிய பாதையில் பயணிக்க ஆண்டவர் விரும்புகிறார். இந்தத் தவக்காலத்தில் ஆண்டவர் விடுக்கும் எச்சரிப்பு என்ன? புத்தாக்கம் பெற்ற வாழ்வுக்குச் சர்தை சபைவழியாக நாம் புரிந்து கொள்ள வேண்டியதும், நாம் மாற்றம் கொள்ள வேண்டியதும் என்ன என்று திருமறை வழி ஈண்டு தியானிப்போம்.

### *1. பற்றுறுதியில் புத்தாக்கம்* : (திவெ 3:1)

சர்தைச் சபையினர் உலகுசார்ந்தவைகளில் அதிக நாட்டம் கொண்டோராக ஆன்மிகக் காரியங்களில் ஈடுபாடற்றவர்களாயிருந்தனர். இறையியலாளர்கள் குறிப்பிடும்போது மத் 21:19-இல் சொல்லப்பட்ட மாய்மால மரமாகிய அத்திமரத்துடன் ஒப்பிடுகிறார்கள். பகட்டு அத்திமரமாகக் காட்சி தந்தது போல், சர்தைச் சபையினர் கிறிஸ்துவை ஏற்று கொண்ட விசுவாசிகள் என்று பெயர் பெற்றும், ஆவிக்குரிய நிலையில் உயிரற்றுக் காணப்பட்டனர். திருப்தியற்ற நிலைகள்

காணப்பட்டன. ஆனால் இயேசுகிறிஸ்து, சத்தியமானதை நினைவு கூர்ந்து மனந்திரும்ப வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். அன்று சர்தைச் சபைக்கு விடுக்கப்பட்ட எச்சரிப்பு, இன்றையசூழலில் நமக்குத் தரப்படுகிறது. கிறிஸ்துவில் பற்றுறுதியற்ற தன்மைகளில் பகட்டு வாழ்வுடையவர்களாய் இருக்கிறோமென்றால், மறுமலர்ச்சிக்குரிய வாழ்வாய் மாற்றம் பெற வேண்டும். கிறிஸ்துவோடு நம்மை இணைத்து, பற்றுதியில் புத்தாக்கம் பெற வேண்டும்.

***2. தூய்மையில் புத்தாக்கம்*** : (திவெ 3:4)

அநேகர் தங்கள் வாழ்வின் தூய்மையற்ற நிலையில் விழுந்து போன சமயத்திலும், சிலர் தங்களைத் தூய்மையாகக் காத்துக்கொண்டனர். ஆண்டவர் சர்தைச் சபையில் உள்ள எல்லா மக்களும் தூய்மையான வாழ்வில் புத்தாக்கம் பெறவேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார். திவெ 3:3-இல் நீ கற்றதையும் கேட்டதையும் நினைவில் கொள் என்கிறார். சர்தைப் பட்டணத்தில் கிரேக்கர்கள் வாழ்ந்தார்கள். கறைபட்ட அழுக்கான ஆடைகளுடன் கிரேக்கக் கடவுளிடம் செல்லுதல் அவமரியாதையாகக் கருதப்பட்டது. தூய்மை என்பது வெளிப்பிரகாரமானதாகக் கிரேக்கர்களுக்கு இருந்தது. ஆனால் கிறிஸ்து வெளிப்படுத்தும் தூய்மை என்பது உள்ளான செயல் ஆகும். மத் 5:8-இல் இதயத்தில் தூய்மையுள்ளோரே இறைவனைச் சந்திக்க இயலும் எனக்குறிப்பிடுகிறார். ஆகவே வெளித்தூய்மை அல்ல, அகத்தூய்மை நமக்குத் தேவை என்பதை சர்தைச் சபையினர் வழியாக நமக்கு எடுத்துச் சொல்கிறார். இன்றைய நிலையில் நமது வாழ்வைத் திரும்பிப் பார்ப்போம். இந்தத் தவக்காலத்தில் மறுமலர்ச்சியின் தீபங்களாய் தூய்மையாக வாழ்வோம்.

இந்தத் தவக்காலத்தில், ஆண்டவர் மீதுள்ள நமது பற்றுறுதியில் ஆழப்பட்டு, நமது வாழ்வில் காணப்படும் அசுத்தங்களை அகற்றி புத்தாக்கம் பெற்று புதுப்படைப்பாவோம்.

சுவி. J. **பிரபின் செல்வமணி**

17-03-2021



## உண்மையை எடுத்துரைப்பதே என் பணி

யோவா 18:33-38

**"...உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன்"** (யோவா 18:37).

உண்மை என்னவென்று அறிவதே ஒவ்வொரு சமயத்தின் தேடல் (Search for Truth is the ultimate goal of every religion). அந்த உண்மை என்னவென்று ஒவ்வொரு சமயமும் அவரவர் வழிகளில் தேடினாலும், 'தேடல் ஒன்றே'. இங்கே நமக்கு ஆதாரமாகக் கொடுக்கப்பட்ட திருமறைப்பகுதியில் (18:33-38), இயேசு பிலாத்துவிடம் 'உண்மையை எடுத்துரைப்பதே என் பணி' (18:37) என்கிறார். அதன் பொருள், 'நான் உண்மையை அறிவேன், அதனை எடுத்துரைப்பதே என் பணி' என்பதாகும். இயேசு சொல்லும் உண்மை என்ன?

யோவான் நற்செய்தி நூலில் 'உண்மை' என்ற 'கருப்பொருளை' அதிகம் நாம் வாசிக்க முடிகின்றது. அதனை யோவான் 1:14-இல் 'அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன்' என்றும், 4:23,24-இல் கடவுளை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும் என்று இயேசு சமாரிய பெண்ணிடம் கூறுவதும் (யோவா 4:24), 5:33-இல் முழுக்கு முனிவர் யோவான் உண்மைக்குச் சான்று பகர்ந்தார் என்று யூதர்களிடம் சொன்னதும், 8:32-இல் 'உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்' என்றுரைத்ததும் (அதன் அர்த்தம், அவரது போதனை விடுதலை தரும் உண்மை), 8:40-இல் இயேசு தம்மை 'உண்மையை எடுத்துரைப்பவர்' என்று அடையாளப்படுத்துவதும் 14:6-இல் தம் சீடர்களிடம் 'நானே உண்மை' என்று விளம்புவதும் நமக்கு உண்மையின் சிறப்புகளை விவரிக்கின்றது. இந்தச் சிறப்புமிக்க 'உண்மை' சொல்லித்தரும் செய்திகளைச் சற்றே அறியலாம்.

### *1. உண்மையின் வெளிப்பாடே இயேசு கிறிஸ்து* :

கிரேக்க மொழியில் 'அலேத்தேயா' என்ற வார்த்தையின் அர்த்தமே 'உண்மை'. அதன் பொருள் 'உண்மையின் சரியான கண்ணோட்டம்' என்பதாகும். எபிரேய இலக்கியத்தில் 'e'meth, 'e'munah' ஆகிய வார்த்தைகள் "கடவுளின் உண்மையைக்" குறிக்கின்றன (God's faithfulness). இந்த நம்பகத்தன்மை அல்லது உண்மை இஸ்ரயேலரின்

வரலாற்றில் முழுமையாக வெளிப்பட்டது. குறிப்பாக யோவான் நற்செய்தி நூலின்படி அதன் முழுமையான வெளிப்பாடாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, வார்த்தை, பணி மற்றும் பிறருக்காக தம் உயிரை கொடுத்த தியாகச் செயல்களிலிருந்து அறிய முடிகின்றது (யோவா 1:14; 14:6). ஆம்! இயேசு கிறிஸ்துவே இஸ்ரயேலர்கள் மற்றும் அனைத்துப் படைப்புகளையும் மீட்க, கடவுள் சொன்னதின்படியே நம்மத்தியில் வந்து, வாழ்ந்து, மரித்து, உயிரோடு எழுந்தார். இயேசு கிறிஸ்துவில் தந்தையாகிய கடவுளின் உண்மை வெளிப்பட்டது.

யூதர்களின் வரலாற்றில் ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்தது போலவே, அவர் சந்ததியைப் பலுகி பெருகச் செய்து, தாம் உண்மையுள்ளவர் என்பதை நிரூபித்த ஆண்டவர், தீர்க்கதரிசியின் மூலம் தம் மைந்தரை அனுப்புவேன் என்று முன்னறிவித்ததின்படியே இயேசு கிறிஸ்துவை அனுப்பி தம் உண்மையினை வெளிப்படுத்தினார். மேலும் திருப்பாடல் 31:5-லும், எசா 65:16-லும் கடவுளை 'உண்மையின் கடவுள்' என்று நாம் வாசித்து அறிகின்றோம். அதோடு நற்செய்தி நூற்கள் இயேசு கிறிஸ்துவை 'கடவுளின் மைந்தர்' என்று தெளிவுப்படுத்துகின்றது. அவர் தம்மைக் 'கடவுளின் மைந்தர்' என்று சொன்னதினாலே தான், யூத மதத் தலைவர்கள் உரோமையர்களின் துணையுடன் கொலையும் செய்தனர் (யோவா 19:7).

அன்று யூதர்கள் 'கடவுளின் உண்மையினைப்' புறந்தள்ளினர். நாம் என்ன தீர்மானிக்கப் போகிறோம்? 'உண்மையான கடவுளின்' வெளிப்பாடே இயேசு.

### *2. உண்மைக்காய்த் துன்பமேற்றவர் இயேசு கிறிஸ்து* :

இந்தத் திருமறைப்பகுதியில் இயேசுவுக்கு எதிரான முக்கியக் குற்றச்சாட்டு, அவர் தம்மையே அரசராக ஆக்கிக் கொள்கிறார் என்பதே! லூக்கா பதிவு செய்துள்ள மூன்று குற்றச்சாட்டுகளுள் (லூக் 23:2) இது முக்கியமானது. உரோமைப் பேரரசுக்கு எதிரான பெரும் குற்றம், துரோகம் ஆகும். இதுவே அவரது கொலைக்குக் காரணமாக அவரது சிலுவையின்மேல் எழுதி வைக்கப்பட்ட குற்றச்சாட்டு.

### இயேசுவின் அரசு:

குற்றத்தை உறுதி செய்யும் நோக்கில்தான், பிலாத்து இயேசுவிடம் "நீ யூதரின் அரசனா?" என வினவுகிறார். பிலாத்து நினைக்கும் முறையிலான அரசர் அல்லர் இயேசு. அவரிடம் ஆயுதங்கள், படைகள் இல்லை; பணமும் இல்லை. அவர் உரோமை அரசுக்குப் போட்டி அரசர் அல்லர். அவரது அரசு வேறுபட்டது. அது இவ்வுலகுசாராதது (18:36); அது

இறை உலகு சார்ந்தது; இறை ஆட்சியின் பண்புகள் கொண்டது; அது அன்பு, நீதி, அமைதி, மகிழ்ச்சி, உண்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. அது வாழ்வின் அரசு. இத்தகைய அரசுக்கு இயேசுவே தலைவர். இப்பொருளில் அவர் ஓர் அரசரே. ஆம்! உண்மையை நிலைநாட்டி, மக்களுக்கு வாழ்வு வழங்கும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே தம் பணி (18:37) என்று இயேசு அழுத்தமாகச் சொல்லுகிறார்.

இவ்விதமாக, கடவுள் உண்மையுள்ளவர் என்று வெளிப்படுத்தி, அவர் மைந்தராகிய நான் 'உண்மையை எடுத்துரைப்பேன்' என்று எதிர்ப்புகளின் மத்தியிலும் அநீதிகளைக் கண்டித்தார்; சமயத்தலைவர்களே என்றாலும், கடவுளின் நியாயத்தீர்ப்புக்குத் தப்ப முடியாது என எச்சரித்தார்; கடவுளின் உண்மை வார்த்தையினைத் துணிவுடன் போதித்தார்; அனைவரிடமும் அன்பு காட்டினார். இவ்விதம் 'உண்மைக்காய்ச்' சான்று பகர்ந்த இயேசு, அந்த உண்மைக்காய்த் துன்புற்றார். இன்றும் 'உண்மையுள்ளவர்' வாழ்விலே அவர் செயல்படுகிறார்.

கடவுள் உண்மையுள்ளவர்; அவர் வார்த்தை மாறாதது; தம் மைந்தர் வழியாக நம்மைச் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றார். கடவுளின் மைந்தர் 'உண்மைக் கடவுளைத்' தம் வாழ்வில் வெளிப்படுத்தினார்; அதற்காகவே அவர் துன்புற்றார், மரித்தார், இன்றும் வாழ்கின்றார். நாம் உண்மைக் கடவுளின் மைந்தரை ஏற்றுக் கொண்டு, உண்மையை எல்லா நிலையிலும் எடுத்துரைக்கத் தீர்மானிப்போம்.

அருள்திரு. **வின்சிலோ G. ஷேபர்**

19-03-2021

**தவக்கால ஐந்தாம் வெள்ளி**

# இலவோதிக்கேயா திருச்சபை

திவெ 3:14-22

**“நான் யார் மீது அன்பு செலுத்துகிறேனோ அவர்களைக் கடிந்து தண்டித்துத் திருத்துகிறேன். ஆகவே நீ ஆர்வம் கொண்டு மனம் மாறு”** (திவெ 3:19).

இலவோதிக்கேயா நகர் இரண்டாம் அந்தியோகுவினால் கட்டப்பட்டு அவருடய மனைவியாகிய இலவோதிசு என்பவரின் நினைவாக அவருடைய பெயரே அதற்கிடப்பட்டது. இது நியாண்டர் ஆற்றின் பள்ளத்தாக்கில் 8500 அடி உயரத்தில் அமைந்துள்ள நகரமாகும். உலக வரலாற்றில் முதன் முதலில் வங்கி செயல்பட்ட இடமாகவும், வாணிபம் மற்றும் பொருளாதாரத்திலும் வளர்ச்சியடைந்த நகரமாகவும் இது விளங்கியது. கண் மருத்துவத்திற்கு சிறந்த நகரம். இலவோதிக்கேயா உரோமை ஆளுகைக்குட்பட்டதாயிருந்தாலும் எந்த உதவியையும் யாரிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை. கி.பி. 61இல் மிகப்பெரிய நிலநடுக்கத்தால் இந்நகரம் மிகவும் பாதிக்கப்பட்டாலும் தனது வளத்தைக் கொண்டு தன்னைத்தானே புனரமைத்துக் கொண்டது. திருவெளிப்பாட்டு நூலில் மற்ற ஆறு சபைகளும் ஆண்டவரின் பாராட்டைப் பெற்ற போதிலும், இலவோதிக்கேயா சபை மட்டும் எந்தப் பாராட்டையும் பெறவில்லை. நிலநடுக்கத்திற்குப் பிறகு நகரம் மீண்டு விட்டது. ஆனால் சபை பின்மாற்றம் அடைந்தது. இலவோதிக்கேயா திருச்சபை பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றதாயிருந்தாலும் ஆன்மிகத்தில் வெறுமையாய்க் காணப்பட்டது.

### *1. சுட்டிக்காட்டப்படும் குறைகள்* :

இலவோதிக்கேயா திருச்சபையின் வெதுவெதுப்பான தன்மை குறையாகக் கூறப்பட்டுள்ளது. கடும் குளிரும் அதுபோல கடும் வெப்பமும் பொதுவாக விரும்பப்படமாட்டாது. மாறாகக் குளிர் நேரங்களில் கொஞ்சம் வெப்பமும், வெப்ப நேரங்களில் கொஞ்சம் குளிராயும் இருந்தால் நலமாக இருக்குமே என்று எல்லாரும் எதிர்பார்ப்பது உண்டு. ஆனால் இத்தன்மை கிறிஸ்தவ வாழ்வுக்கு ஏற்புடையது அல்ல. உன் செயல்களை நான் அறிவேன். நீ குளிர்ச்சியாகவும் இல்லை, சூடாகவும் இல்லை. குளிர்ச்சியாகவோ சூடாகவோ இருந்திருந்தால் எத்துணை நலமாய் இருந்திருக்கும் (திவெ 3:15). எதையும் கண்டுகொள்ளாமல்

தன்னலத்தோடு வாழும் வாழ்க்கையைத்தான் வெதுவெதுப்பான வாழ்க்கை என்று திருமறை கூறுகிறது. மகிழ்வாரோடு மகிழுங்கள்; அழுவாரோடு அழுங்கள் (உரோ 12:15) என்கிறார் பவுலார். மனித வாழ்வானது அனைவரோடும் இணைந்து செயல்படுவது அவசியமானதாக இருக்கிறது. நாபாலின் வெதுவெதுப்பான வாழ்வு மற்றவர்களுக்கு உதவ மனமில்லாதிருக்கச் செய்தது (1சாமு 25).

இலவோதிக்கேயாவின் மற்றொரு குறை என்னவெனில், தன்னிலை அறியாமல் மேன்மையான எண்ணம் கொண்டிருந்தது (திவெ 3:17). நம்மை நாம் அறிய வேண்டும். இப்பண்பு மிக இன்றியமையாதது. ஆனால் இலவோதிக்கேயா இதை விரும்பவில்லை. இயேசு கிறிஸ்து இத்தன்மையைக் குறித்து மத் 23:27இல் கூறுகிறார். இச்சூழல்தான் இச்சபைக்கும் ஏற்பட்டது. இலவோதிக்கேயா தன்னை அறியாத சபையாக இருந்ததை ஆண்டவர் வெளிப்படுத்தினார். திருமறையில் சக்கேயு என்ற ஆயக்காரர் தன்னிலையை உணர்ந்தவராக இயேசுவைக் காண ஆவலாய் இருந்தார் (லூக் 19).

### *2. கட்டி எழுப்பப்பட ஆலோசனைகள்* :

திறமையுள்ள தலைமை இல்லையேல், நாடு வீழ்ச்சியுறும்; அறிவுரை கூறுவார் பலர் இருப்பின், அதற்குப் பாதுகாப்பு உண்டு (நீமொ 11:14). இலவோதிக்கேயா திருச்சபை அனலுமின்றி குளிருமின்றித் தன்னை அறியா நிலையைக் கண்ட ஆண்டவர், குறைகளைக் களைந்து, கட்டி எழுப்பப்பட ஆலோசனை கூறுகிறார். கண்களின் பார்வை தெளிவில்லாததால் மருந்திட அறிவுரை கூறுகிறார் (திவெ 3:18). இது வெளிப்புறமான பார்வையை அல்ல, அகப்பார்வையைக் குறிக்கிறது. திபா 19:8இல் ஆண்டவரின் கட்டளைகள் கண்களை ஒளிர்விக்கின்றன எனக் கூறப்பட்டுள்ளது. எனவே ஆண்டவரின் கட்டளைகளைப் பின்பற்றுவதே ஒளிமயமான வாழ்வுக்கு வழி வகுக்கும். கடவுள் தாம் அன்பு செய்கிறவர்களைக் கண்டித்துத் திருத்துகிறார். எனவே அவருக்கு நம் வாழ்வில் இடம் அளிக்க வேண்டும்.

தவக்காலம் நம்மைச் சீர்படுத்தும் காலம். இக்காலத்தில் நம் நிலை அறிந்து, குறைகளைக் களைந்து மனமாற்றத்துடன் ஆண்டவரிடம் திரும்ப வேண்டும். இதுவே இக்காலத்தில் ஆண்டவர் நமக்குத் தரும் அழைப்பும் வாய்ப்புமாகும்.

அருள்திரு. A. **கிறிஸ்துதாஸ் ஆக்னஸ் பிரின்ஸ்**

24-03-2021

தவக்கால ஆறாம் புதன்

# இறைவிருப்பப்படியே நிகழட்டும்

மத் 26:36-39

**"... என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்"** (மத். 26:39)

இறைவிருப்பம் என்ன என்பதும், இறைவிருப்பத்தை எப்படி தெரிந்துகொள்வது என்பதும் பற்றியும் பல கேள்விகள் நம் மனதில் எழுவதுண்டு. சிலர் தங்களுடைய வாழ்வில் உயர்வுகளை அடைகின்றபோதோ அல்லது சில தாங்க முடியாத இழப்புகளை குடும்பங்களில் சந்திக்கும் போதோ, வேதனையின் உச்சத்தில், இப்படி நடப்பது இறைவிருப்பமாக இருக்கும் என்பார்கள். கிபி 160 களில் சிமிர்னா பகுதியில் உள்ள திருச்சபைகளுக்குப் பேராயராக இருந்தவர் பேராயர் போலிகார்ப். இவர் புனித யோவானின் சீடராக இருந்தார். தன்னுடைய 86வது வயதில், கிறிஸ்துவை மறுதலி, இல்லாவிட்டால் உன்னை நெருப்பிலிட்டுக் கொலை செய்வோம் என்று கூறிய போது அவருடைய பதில், 86 ஆண்டுகள் நான் அவருக்குப் பணி செய்திருக்கிறேன். எனக்கு அவர் எந்தத் தீங்கும் செய்ததில்லை. பின்பு எப்படி நான் என்னுடைய மீட்பரை மறுதலிப்பேன் என்றார். இறைவிருப்பம் நிகழ, தன் உயிரை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. மத். 26:36-39 வரையுள்ள பகுதியில் கெத்சமனி இறைவேண்டல் பற்றி சமநோக்கு நற்செய்தி நூற்கள் என்று அழைக்கப்படுகின்ற மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்றிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மத் 26:36-39 வரை மூன்று உண்மைகளை நாம் உணர முடியும். முதலாவது, கிறிஸ்து முன்கூட்டியே அறிந்துகொண்ட, தமக்கு நிகழ இருக்கிற மரணத்தை குறித்த விழிப்பு, இரண்டாவது கெத்சமனி நிகழ்வு என்பது இயேசுவுக்கும் தீயோனுக்கும் இடையே உள்ள ஒரு சோதனைக்களம், மூன்றாவது, இறைவேண்டல் ஏறெடுக்க கெத்சமனித் தோட்டம் வந்த இயேசுவிடம் காணப்பட்ட ஒரு வித்தியாசமான நிலை. இவைகள் மத்தியில் இறைவிருப்பம் நிகழ, யாருடைய பங்களிப்பு எல்லாம் தேவை? என்பதைத் தியானிப்போம்.

## *1. இறைவரின் திருவிருப்பு:*

சமநோக்கு நற்செய்தியாளர்கள் நிகழவிருக்கிற மரணத்தைக் குறித்து, கிறிஸ்துவிடம் முன்கூட்டியே காணப்பட்ட விழிப்புணர்வை மத் 26:1-5; மாற்கு 14:1-2; லூக்கா 22:1-2 ஆகிய பகுதிகளில் கெத்சமனி

நிகழ்வின் தொடக்கமாக, தலைமைக் குருக்கள் மற்றும் மக்களின் மூப்பர்கள் கூடி இயேசுவைச் சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலை செய்ய வேண்டும் என்று அவர்கள் ஆலோசித்ததை அமைத்திருக்கிறார்கள். அதன் பின்பு இயேசு பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் இல்லத்தில் பெண் ஒருவரால் உடல் மீது நறுமணத் தைலம் ஊற்றப்பட்டு அடக்கத்திற்கு ஆயத்தம் செய்யப்படுகிறார். தொடர்ந்து. யூதாசு இஸ்காரியோத்து தலைமைக் குருவைத் தொடர்பு கொண்டு இயேசுவைக் காட்டிக் கொடுத்து அவரைக் கைது செய்ய ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறார். அதன் பின்பு பஸ்கா விருந்து நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்லா நிகழ்வுகளுமே இயேசுவுக்கு தம்முடைய மரணம் மிக அருகில் இருக்கிறது என்கிற அறிவை கொடுக்கின்றதாய் அமைந்திருக்கிறது. மத் 26:18இல் இயேசு, தமது நேரம் நெருங்கி வந்து விட்டது என்கிறார். லூக்கா 22:15-16இல் நான் துன்பங்கள் படுமுன்னே உங்களோடு இந்தப் பஸ்கா விருந்தை உண்பதற்கு மிக மிக ஆவலாய் இருந்தேன் என்கிறார். மத் 26:21இல் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்றும், அந்த நபர் யூதாசு (மத் 26:25) என்றும் கூறுகிறார். “ஆயரை வெட்டுவேன், அப்பொழுது மந்தையிலுள்ள ஆடுகள் சிதறடிக்கப்படும்” (மத் 26:31) என்று மறைநூலில் எழுதியுள்ளதை ஞாபகப்படுத்தி, அன்றிரவு தாம் துன்புறுத்தப்படப் போவதாகக் கூறுகிறார். இவைகள் எல்லாம் இயேசு தம்முடைய மரணம் எப்படி நிகழப் போகிறது என்கிறதை நன்கு தெரிந்து வைத்திருந்தார் என்பதைக் காட்டுகிறது. சமநோக்கு நற்செய்தியாளர்களும், யோவான் நற்செய்தியாளரும் இயேசுவுக்குத் தம்முடைய மரணத்தைக் குறித்த அறிவு முன்னதாகவே இருந்தது என்பதைத் தெளிவாய்க் கூறியிருக்கின்றனர். மத் 16:21-28இல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பல்வேறு நிலைகளில் துன்பப்படவும், கொலை செய்யப்படவும், மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடர்களுக்கு அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார். அப்படிக் கூறும்போது, யாரெல்லாம் அதற்கு எதிராக நின்றார்களோ அவர்களை மிகக் கடுமையாகக் கடிந்தும் கொண்டார் (மத் 16:22-23). இறைவர், இயேசுவின் வாழ்வில் நடப்பதை முன்கூட்டியே வெளிப்படுத்திக் கொடுக்கிறார். ஆம்! இறைவிருப்பம் இது தான் என்று முன்கூட்டியே அறிந்த இயேசு அதை நிறைவேற்ற தம்மைத் தயார்படுத்திக் கொண்டார்.

## *2. தீயோனின் குறுக்கீடு* :

இயேசுவின் வாழ்விலும் தீயோனின் தாக்கம் இருந்தது. இயேசு அலகையினால் பாலை நிலத்தில் சோதிக்கப்பட்டதற்கும் (மத் 4), மத் 16:22-23இல் "ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது என்று பேதுரு கூறியதற்கும் இடையே இயேசுவின் வாழ்க்கையில் தீயோனின் குறுக்கீட்டை நாம் பார்க்க முடியாது." பேதுரு கூறியதை, சமநோக்கு நற்செய்தியாளர்கள் நேரடியாகவே தீயோன் கூறியதாகக் கூறியிருக்கிறார்கள். தீயோன்தான் பேதுருவை அப்படி பேசவைத்தான் என்பதை நாம் இயேசுவின் பதில்களிலிருந்து உணரமுடியும். இயேசு பேதுருவைப் பார்த்து, "என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்" என்று கூறுகிறார். அதனைத் தொடர்ந்து கெத்சமனியில் நடைபெறுகின்ற நிகழ்வுகளைக் கவனிக்கும் போது, லூக்கா நற்செய்தியாளர் சாத்தானின் செயல்கள் குறித்து புதிவு செய்துள்ளார். லூக்கா 22:3-4இல் தலைமைக் குருக்களுக்கும் மறைநூல் அறிஞருக்கும் இயேசுவைக் காட்டிக் கொடுக்க முன் வந்த யூதாசு எனப்படும் இஸ்காரியோத்துக்குள் சாத்தான் புகுந்தான் என்று கூறுகிறார். யோவான் நற்செய்தியாளரும் 13:27இல் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான் என்கிறார். பஸ்கா விருந்தின் போது இயேசு பேதுருவைப் பார்த்து (லூக்கா 22:31; 1,32) சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைப்போல் உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். நான், உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து என்று இயேசு கூறுகிறார். கெத்சமனி நிகழ்வில் நேரடியாகச் சாத்தானின் பங்களிப்பு இல்லை. ஆனால் அதே வேளையில் அநேக விவிலிய அறிஞர்கள் சாத்தானின் குறுக்கீடு இந்த நேரத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்கிறார்கள். R.S. பர்பார் மற்றும் E. பெஸ்ட் போன்ற இறையியலாளர்கள், மாற்கு நற்செய்தி நூலின் சிலுவைப் பாடுகளை, கிறிஸ்து மற்றும் சாத்தான், வெளிச்சம் மற்றும் இருள், நன்மை மற்றும் தீமைக்கும் இடையே நடந்த உச்சகட்ட போராட்டம் என்கிறார்கள். குறிப்பாக, இந்தக் கெத்சமனிப் போராட்டத்தை, மாற்கு நற்செய்தியாளர் இயேசுவுக்கும் சாத்தானுக்கும் இடையே ஏற்பட்ட கருத்துப் போராட்டம் என்கிறார். ஆம்! தீயோனின் பங்களிப்பு என்பது இறை விருப்பம் எவருடைய வாழ்விலும் நடந்து விடக் கூடாது என்பதைச் செயல்படுத்துகிறதாக அமைகிறது. ஆனால் இயேசு இறைவிருப்பம் நிறைவேறச் சாத்தானின் தந்திரமான செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

### *3. இயேசுவின் தற்கையளிப்பு* :

இயேசுவும் பதினொரு சீடர்களும் கெத்சமனித் தோட்டத்திற்குள் நுழைகிறார்கள். எட்டுப் பேரை விட்டு விட்டு மூன்று பேரைத் தம்முடன் இறைவேண்டல் ஏறெடுக்க அழைத்துச் செல்கிறார். போகின்ற வழியில் அந்த மூன்று பேரின் முன்னிலையில், இயேசுவிடம் ஒரு மாற்றம் வருகிறது. மத்தேயு நற்செய்தியாளர் (26:37) கூறும் போது இயேசு துயரமும், மனகலக்கமும் அடையத் தொடங்கினார் என்கிறார். பெனோட் என்ற இறையியலாளர் "ademonein" என்ற கிரேக்க வார்த்தையை ஆங்கிலத்தில் "distress" என்று மொழிபெயர்த்து "இது ஏதோ ஒரு வரப் போகின்ற நிகழ்வினால் பயமுறுத்தப்பட்டு,யாருடைய உதவியும் இல்லாமல் இருக்கின்ற ஒரு மனிதனால் மட்டும் கூறப்படுகின்ற வார்த்தை" என்கிறார். லைட்பூட் என்ற இறையியலாளர் இதை "குழப்பமான, அமைதியற்ற, மனநிலை பாதிக்கப்பட்ட, வேதனை, வெட்கம் மற்றும் மனமுடைந்த நிலை" என்கிறார். இந்த வசனத்தில் காணப்படுகின்ற துயரம் மற்றும் மனக்கசப்பு என்கிற இரண்டு வார்த்தைகளும் கெத்சமனித் தோட்ட இரகசியத்தைப் புரிந்து கொள்ள போதுமானது. இது இயேசுவின் மனஓட்டத்திற்கு அப்பாற்பட்டதும், எண்ணிபார்த்திராத ஒரு சூழலும் கூட. இந்தத் திடீர் மாற்றம் இயேசுவின் அடுத்த கட்ட நகர்வுகளில் சில மாற்றங்களை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, சீடர்களுடன் இறைவேண்டல் ஏறெடுக்க வந்தவர், "விழித்திருங்கள்" என்று கூறி தனிமையில் செல்கிறார். அதற்குக் காரணம் என்ன என்று ஆராயும் போது, மாற்கு 14:34இல் "எனது உள்ளம் சாவுவருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது" என்கிறார். இறைவிருப்பம் நிறைவேற்றப்பட இயேசு தம்மையே மாற்றி, சுயம் சார்ந்த தற்கையளிப்பை வெளிப்படுத்தி மன்றாடுகிறார்.

மகாராஷ்டிர மாநிலம் கோத்சிலோவி மாவட்டத்தில் மாடியா மக்கள் மத்தியில் முன்ஷி தேவ் ஊழியம் செய்து வந்தார். இவர் இறைப்பணியை ஆரம்பிக்கும் முன்பதாக நக்சல் குழுவில் இணைந்து அந்தக் கிராமத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்களைத் துன்புறுத்தி வந்தார். சில ஆண்டுகள் கழித்து, அந்தக் குழுவைச் சார்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அக்குழுவில் முழுவீச்சில் பணியாற்றி வந்தார். இக்குழுவில் அந்தப் பகுதியில் இறைப்பணி செய்து வந்த சகோ. டேவிட் ஜேக்கப் என்னும் தமிழகத்தைச் சார்ந்த இறைப்பணியாளர் வழியாக இயேசுவை ஏற்றுக் கொண்டனர். இதனால் மாடியா இன மக்கள் இவரை ஊரை விட்டு வெளியேற்றினர். பின்னர் இவர் அந்த ஊரில் காணப்பட்ட, தனக்குச் சொந்தமான நிலத்தில் கோவிலைக் கட்டி இறைப்பணியைத் தொடங்கினார். அநேக மக்கள் இயேசுவிடம் வர ஆரம்பித்தனர்.

தொடர்ச்சியாக மிரட்டல்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தும் மனந்தளராமல் இறைப்பணியைத் தொடர்ந்து வந்தார். இச்சூழலில் இரண்டு முறை நக்சல்வாதிகள் அவரைத் தனியாக அழைத்து ஊழியத்தை விட்டு விட்டு தன் சொந்த இனமான மாடியாவின் முறைப்படி வாழ வேண்டும் என்று மிரட்டிக் கட்டாயப்படுத்தினர். ஆனால் இவர் இறைவிருப்பப்படியே நிகழட்டும் என்று கூறி நம்பிக்கையில் உறுதியாய் இருந்து தனது இறைப்பணியை விடாது செய்து வந்தார். இந்நிலையில் 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் நாள் அன்று மூன்றாவது முறையாக அவரைத் தனியாகக் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தனர். இறைவிருப்பம் நிறைவேற, தன்னைத் தியாகம் செய்தார். இங்கே இந்தக் கெத்சமனி நிகழ்விலும் இயேசுவும் முகங்குப்புற விழுந்து “என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்” என்று கூறி இறைவரிடம் வேண்டுகிறார். நாமும் நம் வாழ்வில் இறைவிருப்பம் நிகழ, சுயநலத்தை விட்டு நம்மையே அவருக்குக்கையளிப்போம். நம் வாழ்விலும் எல்லாமும் இறைவிருப்பப்படியே நிகழட்டும்.

திரு. M. ***ஜெபு ஜெயசிங்***

26-03-2021

# சிமிர்னா & பிலதெல்பியா

திவெ 2:8-11; 3:7-13

**“உனக்கு வரவிருக்கின்ற துன்பத்தைப் பற்றி அஞ்சாதே…”** (திவெ 2:10).

திருவெளிப்பாட்டு நூலில் கூறப்பட்டுள்ள திருச்சபைகளில் பிலதெல்பியா மற்றம் சிமிர்னா திருச்சபைகளும் அடங்கும். இந்த இரு திருச்சபைகளைக் குறித்தும் யோவான் தன்னுடைய திருவெளிப்பாட்டு நூலில் கூறியுள்ளார். சிமிர்னா மற்றும் பிலதெல்பியா திருச்சபைகள் பற்றுறுதியில் தனித்தன்மையுடன் வாழ்ந்து வந்தன. இந்தப் பற்றுறுதிச் சமூகத்துக்குக் கடவுள் தரும் நம்பிக்கையின் வார்த்தை ஆசீர்வாதமானதாகும். இவ்விரு திருச்சபைகளின் செயல்கள் எல்லாத் திருச்சபைகளுக்கும் முன்மாதிரியாக உள்ளன.

## *1. சிமிர்னா: சோதனையைச் சகிக்க ஆயத்தப்பட்ட திருச்சபை* : (திவெ 2:10)

சிமிர்னா திருச்சபை மக்களின் வாழ்வு மற்ற திருச்சபைகளைப் போல குறைகளோடு காணப்படவில்லை. ஏழ்மை நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த அவர்களை, வறுமை நம்பிக்கையில் செல்வந்தர்களாக்கியது. அந்த நம்பிக்கை சோதனையைத் தாங்கும் பெலனை அந்த மக்களுக்குக் கொடுத்தது. சோதனையைச் சகிக்கிற மக்களே ஜீவ கிரீடத்தைப் பெறுவார்கள். கடைசி மட்டும் உண்மையாக இருந்தால் ஜீவ கிரீடத்தைக் கொடுப்பேன் என்று யோவான் மூலம் ஆண்டவர் சிமிர்னா திருச்சபை மக்களுக்குச் சொல்கிறார்.

யாக் 1:12-இல் யாக்கோபு கூறும் போது சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர் என்கிறார்.

1. யோசேப்பு சோதனைகளைப் பல நிலைகளில் உறுதியோடு எதிர்கொண்டு கடைசி வரை உண்மையாய்க் காணப்பட்டபடியினால் எகிப்தில் அதிகாரியாக அமர்த்தப்பட்டார்.

2. இயேசு தம்முடைய சீடர்களிடம் கூறும் போது, “உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள்” என்று சோதனைக் காலங்களில் எச்ரிக்கையாய் இருக்கச் சொல்லுகிறார் (யோவா 16:33).

## *2. பிலதெல்பியா: இறைவார்த்தையைக் கடைப்பிடித்து வாழ்ந்த திருச்சபை* :

“நீ என் வாக்கைக் கடைப்பிடித்தாய். என் பெயரை மறுதலிக்கவில்லை” (திவெ 3:8).

கிறிஸ்தவ வாழ்க்கையில் இறை வார்த்தைக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. நம்முடைய வாழ்க்கைப் பாதைக்கு வெளிச்சத்தைக் காட்டுவது இறை வார்த்தையே (திபா 119:105). பிலதெல்பியா திருச்சபையைக் குறித்து கூறும் போது, சிறிதளவு வலிமைதான் உன்னிடம் இருக்கிறது. ஆகிலும் இறை வாக்கைக் கடைப்பிடித்தாய். என் பெயரை மறுதலிக்கவில்லை என்றார். பிலதெல்பியா திருச்சபை விசுவாசிகள் எண்ணிக்கையிலும் வலிமையிலும் குறைவாக இருந்தாலும், திருமறை அறிவினாலும் இறை வேண்டுதலினாலும் வலிமைப்படுத்தப்பட்டனர். மத் 4:4இல், மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல கடவுளுடைய வாய்ச்சொல்லால் வாழ்வு பெறுவர் என்கிறார் இயேசு. கடவுளுடைய வார்த்தைகளின் முக்கியத்துவத்தை இஸ்ரயேல் மக்களும் உணர்ந்திருந்தனர். இச 6:6-9 வரை அதன் முக்கியத்துவத்தை உணர இஸ்ரயேல் மக்கள் நினைப்பூட்டப்பட்டனர். இறைவாக்கைக் கடைப்பிடித்தால் சோதனைக் காலத்தில் நாம் சோதனையில் விழாதபடி ஆண்டவர் காப்பாற்றுவார் என்பதை யோவான் சொல்லுகிறார் (திவெ 3:10).

நாமும் வாழும் உலகில் பல சோதனைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் இருக்கிறோம். நோய்கள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றின் வாயிலாக சோதனைகள் நமக்கும் வருகின்றன. ஆனாலும் எல்லாவற்றிலும் நம்பிக்கையை இழக்காமல் உண்மையாய் இறுதிவரை நிலைத்துநின்றால் அழியா வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அருள்திரு. S. **ஜாண் பிராங்கிளின்ராஜ்**

# சிலுவைத் திருமொழிகள்

# விடுதலையின் தொடக்கம்

லூக் 23:32-34

**"தந்தையே, இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது இன்னதென்று இவர்களுக்குத் தெரியவில்லை"** (லூக் 23:34).

நோபல் பரிசு பெற்ற ஆப்பிரிக்காவைச் சார்ந்த பேராயர் டெஸ்மாண்ட் டுட்டு (Desmond Tutu) என்பவரின் கூற்று "மன்னிப்பு இல்லாமல் எதிர்காலம் இல்லை" (There is no future without forgiveness). ஒருவர் நம்மிடம் வந்து மன்னிப்பு கேட்கும்போது மன்னிப்பு வழங்கக் கடினமாக இருக்கும். ஆனால் துன்பப்படுகிற அதே சமயத்தில், தம்மைத் துன்படுத்தினவர்களுக்காக மன்னிப்பு வேண்டுவது எத்துணை விந்தை! கொல்கொதா, மனிதர் தம்மால் முடிந்த அளவு படுமோசமாக நடந்துகொண்ட இடமாகவும், அப்படிச் செய்த மனிதருக்கு வேண்டிய நலனைக் கடவுள் செய்து நிறைவேற்றின இடமாகவும் காணப்படுகிறது. இயேசு நாதர் ஒருமுறை சொல்லும்போது, உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும் என்றார் (லூக் 6:45). இங்கே சிலுவையில் இயேசு மரிக்கும்போது, அவருடைய மன்னிப்பின் வார்த்தையை நாம் கேட்கிறோம். இது அவருடைய இதயத்தைக் காட்டுகிறது. இந்த மன்னிப்பின் வார்த்தையிலிருந்து இரண்டு உண்மைகளை நாம் தியானிப்போம்.

### *1. தகுதியற்றவர்களுக்குத் தரப்பட்ட மன்னிப்பு* :

இயேசு கிறிஸ்து இரண்டு கள்வர்கள் நடுவில் சிலுவையிலே அறையப்பட்டவராக, சிலுவையண்டை தம்மைக் காயப்படுத்திய, சபித்த, இழிவுபடுத்திய, துன்பப்படுத்திய, சிலுவையில் அறைந்த போர்ச் சேவகர்களைக் காண்கிறார். அவர் தம்மை கொலைத் தண்டனைக்குத் தீர்ப்பளித்த மற்றும் அதற்குக் காரணமாயிருந்த அன்னா, காய்பா, சனகரீம் சங்கம், பிலாத்து, ஏரோது என இவர்கள் எல்லாரையும் நினைத்திருக்கக் கூடும். இன்னும் திருப்பணியில் தம்மோடு இணைந்து பணியாற்றும்படியாகத் தாம் தெரிந்து கொண்ட, அன்பு செலுத்திய சீடர்கள் தம்மை விட்டுப் போனதையும், என்ன வந்தாலும் நான் உம்மோடு இருப்பேன், உம்மை விட்டுப் பிரியேன் என்று வாக்குரைத்த, தம்மிடத்தில் அன்பாயிருந்த சீடர் பேதுரு, தம்மை அறியேன் என்று மறுதலித்தும், சபித்து சத்தியம் செய்ததையும், தம்மைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று

கூக்குரலிட்ட அதிகார வர்க்கம் எனச் சுயநலத்தோடு நடந்து கொண்ட அத்தனை மக்களையும் நினைவிற் கொண்டு இந்த மன்னிப்பின் வார்த்தையை இயேசு கூறுகிறார். இது கோபத்தின் வெளிப்பாடு அல்ல; மாறாக உடல் துன்பத்தின் உச்ச நிலையிலும் இறையன்பு நிறைந்தவராக, தந்தையே இவர்களுக்கு மன்னியும் என்கிறார். இந்த மன்னிப்புக்குத் தகுதியற்றவர்கள்தாம் எனினும் அவர்களும் மன்னிப்பு பெற, வாழ்வு பெற மன்னிப்பை வேண்டுகிறார். இந்த வார்த்தை, தம்மைச் சுற்றி இருந்த கூட்டத்தார் கேட்பதற்கு மட்டும் சொல்லப்பட்டதன்று; மாறாக இன்றும் நாம் அதைக் கேட்டு உணர்வடையவே சொல்லப்பட்டது. இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்து கொலை செய்ய ஒப்புக்கொடுத்த அனைவரும் மன்னிப்புக்குத் தகுதியற்றவர்கள். நாம் கடவுளுக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது மன்னிப்புக்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறோம். ஆனாலும் கடவுள் நம்மை மன்னிப்பதுபோல, நாமும் மன்னிக்க வேண்டும். கிறிஸ்து நமக்கு மன்னித்ததைப் போல நாமும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும் (எபே 4:31,32).

### ***2. தந்தையாகிய கடவுளிடமிருந்து வரும் மன்னிப்பு*** :

இயேசு தாமே அவர்களை மன்னித்திருக்கலாம் ஆனால் அவர் விண்ணகத் தந்தையிடம் ஏன் மன்னிப்புக்காக வேண்டுதல் செய்ய வேண்டும்? ஏனெனில் மன்னிப்பு தந்தையாகிய கடவுளிடம் இருந்து வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மன்னிப்பு என்பது இறைப்பண்பு. சாதாரணமாக மனிதரால் மன்னித்து மறப்பது என்பது முடியாத ஒன்று. மன்னித்து, வாழவைப்பது தெய்வீகப் பண்பு. இறைமகனுக்கு விரோதமாகச் செய்யப்படும் தீமை, தந்தையாம் கடவுளுக்கு எதிராகச் செய்யப்படுவதாகும். அதேபோன்று பிறருக்கு விரோதமாய்ச் செய்யப்படும் தீமை, கடவுளுக்கு விரோதமாகச் செய்யப்படும் தீமையாகும். இயேசு நாதர் சொன்ன ஓர் உவமையில், மனம் திருந்தி வந்த இளையமகன் தந்தையைப் பார்த்துச் சொல்லுகிறார், கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் (லூக் 15:21). நாம் நமது குடும்ப உறவுகளுக்கும், அடுத்திருப்போருக்கும், படைப்புக்கும் விரோதமாகப் பாவம் செய்தால் அந்த நபரிடத்தில் மட்டும் மன்னிப்பு கேட்பது அல்ல; விண்ணகத் தந்தையிடம் நாம் மன்னிப்பு பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் மன்னிப்பு தந்தையாகிய கடவுளிடமிருந்து வருகிறது.

இயேசு நாதருடைய போதனைகள் அன்பு நிறைந்ததாக, மன்னிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே காணப்படுகின்றன. இயேசு தம்மைச் சுற்றி நின்ற சீடர்களைப் பார்த்து உங்கள் பகைவர்களிடம் அன்பு

கூருங்கள் என்றார் (மத் 5:44). சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்றுக் கொடுக்கும் போது, எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்றார் (மத் 6:12). ஒரு முறை பேதுரு இயேசுவிடம் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று கேட்ட போது, இயேசு ஏழு எழுபது முறை மன்னிக்க வேண்டும் என்று பதிலளித்தார் (மத் 18:21,22). இப்படி அழகிய போதனைகளை வழங்கிய ஆண்டவர், தாம் போதித்த போதனையையே சிலுவையில் சாதனையாகக் காட்டுகின்றார். பகைவர்களை மன்னியுங்கள் என்றவர், இங்கே மன்னிப்புக்குத் தகுதியற்ற பகைவருக்காக விண்ணகத் தந்தையிடம் மன்றாடுகின்றார். இயேசு வாழ்ந்து காட்டினார். நாமும் நமக்கு விரோதமாகக் குற்றம் செய்வோரை மன்னிப்போம். தந்தையாகிய கடவுளிடம் இருந்து மன்னிப்பைப் பெற்று வாழ்வு பெறுவோம்.

திரு. J. **பிளசிங் சாமுவேல்**

# விண்ணக வாழ்வை நோக்கிய பயணம்

லூக் 23:38-43

**அதற்கு இயேசு அவனிடம், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்** (லூக் 23:43).

இயேசு நாதர் சிலுவையில் மொழிந்த இரண்டாம் திருமொழியாகிய "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்ற திருமொழியை லூக்கா நற்செய்தி ஆசிரியர் மட்டுமே பதிவு செய்துள்ளார். இயேசு நாதர் அறையப்பட்ட சிலுவையைச் சுற்றிலும் பல கிண்டல்கள், கேலிகள், எள்ளி நகையாடல்கள் மலிந்து கிடந்தன. "பிறரை விடுவித்தான்; இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும்" எனக் கேலி செய்யும் ஒரு வகை மக்கள் கூட்டம். இயேசுவிடம் வந்து புளித்த திராட்சை ரசத்தைக் கொடுத்து, "நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்" என எள்ளி நகையாடிய படைவீரரின் கூட்டத்தார் என இத்தகைய மக்கள் கூட்டம் இயேசுநாதரைச் சூழ்ந்து நிற்க, "நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று பழித்துரைத்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இரு குற்றவாளிகளில் ஒருவன் மறுபக்கம் என கிண்டல்களும், கேலிகளும் மிகுந்த சூழல்கள் நடுவில் இரு கள்வர்கள் மத்தியில் இயேசுநாதர் சிலுவையில் தொங்கினார்.

ஒரு குற்றவாளி பேரின்ப வீட்டைப் பெறும் நற்பேறு அடைந்த நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது. அதனைச் சற்று விளக்கமாகக் காண்போம்.

### *1. தன்னிலை உணர்ந்தவர்* : (லூக் 23:40,41)

சிலுவையில் இயேசுவின் இருபக்கமும் தொங்கிய கள்வர்களில் ஒருவர் ஆண்டவரின் மெசியா பட்டத்தைப் பழித்துரைக்கின்றார். மற்றொரு கள்வரோ துன்பத்தில் தன்னிலை உணர்கின்றார். கள்வர் என மொழிப் பெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொல்லான Kakourgos என்ற சொல்லை 'போராளி' என்றும் மொழிபெயர்க்கலாம். தங்கள் கொள்கை நிறைவேறுதலுக்காக ஆயுதமேந்திப் போராடின மக்கள்தான் போராளிகள். பல வேளைகளில் இவர்களின் போராட்டம் தேவையற்ற உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தியது. இங்கு இவர் ஆண்டவரின் பாடுகளில் தனது போராட்டத்தின் பயனற்ற தன்மையை உணருகின்றார். எனவே மற்ற குற்றவாளியைக் கடிந்துகொண்டு, கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத் தானே உள்ளாகி இருக்கிறாய்? நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம்

பெறுகிறோம்? எனத் தன்னை, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசு நாதர் முன் உணருகிறார். தம் குற்றப் பழிகளை மூடி மறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது. அவற்றை ஒப்புக் கொண்டு விட்டு விடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவார் (நீதி 28:13) என்ற உண்மையின்படி இரக்கம் பெற்றவராகிறார்.

***2. மனம் மாறியவர்*** :

துன்பத்தில் தன்னிலையிழக்காத இயேசுவைக் கண்டு மனம் மாறுதல் பெற்று மற்றொரு கள்வனை நோக்கி "கடவுளுக்குப் பயப்படுகிறதில்லையா?" என்று கேட்கிறார். லூக் 23:27,35,48 ஆகிய வசனங்கள் வழியாக லூக்கா நற்செய்தியாளர் ஓர் உண்மையினை வித்தியாசமாகக் காண்பிக்கிறார். அதாவது மற்ற சமநோக்கு நற்செய்தி நூல்களில் மக்கள் தலைவர்களை விட்டுப் பிரிந்து நிற்பதாகக் காணப்படுகிறது. ஆனால் லூக்கா நற்செய்தி நூலில் மட்டும் மக்களில் ஒருபகுதியினர் நடந்த கொடுமையினை உணர்ந்து விலகி நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது. யூதமுறைப்படி மாரடித்துக் கொள்வது என்பது பாவமன்னிப்பை வேண்டுவதாகும். ஆனால் இங்கு இந்நிகழ்வோடு மக்கள் தங்களுக்கிருந்த தொடர்பினை நினைத்து வருந்தியிருக்கக் கூடும் எனவும் எடுத்துக் கொள்ளலாம். இயேசு நாதர் தமது துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் விதம், அருளும் மன்னிப்பு, இவை மக்களை மனம்மாற வைக்கிறது. தமது இயல்புத் தன்மையான ஓநாய்களைக் கொன்று ஆடுகளை காப்பாற்றலாம் என்பது இயலாத காரியம். ஆனால் ஓநாய்களுக்குள் ஆடுகள் போன்று அனுப்பப்பட்டு ஓநாய்களை ஆடுகளைப் போன்று புல் தின்னும் நிலைக்கு மாற்றம் செய்வதே இயேசுவின் பணியின் சிறப்பு என்பதைப் புரிந்து கொள்கிறார். ஆக ஆட்டுக்காக கண்ணீர் விடும் ஓநாய் அல்ல; மாறாக, ஆட்டின் தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஓநாய். அந்த வகையில் இக்கள்வரும் தனது மனநிலையிலிருந்து இயேசு நாதரின் பாதைக்கு மாற்றம் அடைகிறார்; மனம்மாறுகிறார்.

***3. பரதீசைப் பெற்றுக்கொண்டவர்*** :

பரதீசு என்பது ஒரு பாரசீகச் சொல். பரதீசு என்றால் பொருள் 'நந்தவனம்' 'பெரிய தோட்டம்' என்பதாகும். இது ஏதேன் தோட்டத்திற்கு ஒப்பானது. திருவிவிலியம் பொது மொழிபெயர்ப்பில் இது 'பேரின்ப வீடு' என்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் கிறிஸ்து வழியாக அதி தூய்மை அடைவார்கள் என்ற உண்மைக்கு ஆண்டவர் கூறிய 'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்' என்ற உறுதியான வார்த்தை சான்றளிக்கிறது. மேலும் பேரின்ப வீட்டில் ஏற்றத்தாழ்வில்லை என்பதற்குச் சான்றாக, நீர் இன்று 'என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்' என்பதை உறுதியாகக் கூறுகிறார். கள்வன் தன்னிலை உணர்ந்து, ஆண்டவர் வழிக்கு மனம்மாறி பேரின்ப வீட்டைப் பெற்று மகிழ்ச்சியடைந்த செயல் நமக்கும் மாதிரியாக அமையட்டும்.

திருமதி. Y. **ஹெர்லின் சஜிதா நெல்சன்**

# வேற்றுமைகளைக் கடந்த புதுஉறவு

யோவா 19:25-27

**"இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா, இவரே உன் மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம், இவரே உம் தாய் என்றார்"** (யோவா 19:26-27).

ஓர் அடர்ந்த காட்டுப்பாதை வழியாய் சாதுசுந்தர்சிங் நடந்து சென்று கொண்டிருந்தார். வழியில் பச்சை மரங்கள் தீப்பற்றி எரிவதைப் பார்த்த சுந்தர், அருகில் சென்று கவனித்தார். தீ எரிந்து கொண்டிருந்த இடத்தில் ஒரு பறவைக் கூடு தொங்கிக் கொண்டிருப்பதையும், சில பறவைக் குஞ்சுகள் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதையும் பார்த்தார். இவ்வேளையில் வெளியே உணவுதேடி சென்றிருந்த தாய்ப் பறவை விரைந்து வந்து குஞ்சுகளின் அண்டை அமர்ந்து தனது இறக்கைகளால் கூட்டை மூடிக்கொண்டது. தீ எரிந்து பறவைக் கூட்டின் மீது பற்றியது. சில மணித்துளிகளுக்குப் பிறகு தீ அணையவே, ஒரு குச்சியால் சுந்தர் கூட்டினைக் கீழே தள்ளிப் போட்டார். அருகில் சென்று பார்த்தபோது தாய்ப்பறவை இறக்கைகள் கருகி உயிர்துறந்திருந்தது. அந்தப் பறவையை அகற்றிப் பார்த்த போது, பறவைக்குஞ்சுகள் விளையாடிக் கொண்டு இருந்ததைக் கண்டார். பறவைக்குஞ்சுகளின் வாழ்விற்காய்த் தன் உயிரை உரமாய்த் தந்து நல்உறவுக்கு உதாரணமான பறவையை நினைத்து அவ்விடம் விட்டுச் சென்றார் சுந்தர்சிங்.

ஆம்! இயேசுகிறிஸ்து சிலுவையில் தனது மரண நேரத்திலும் தாய்-மகன் உறவுக்கு உதாரணமாய் மொழிந்த வார்த்தைதான் மூன்றாம் சிலுவைத் திருமொழி.

மானிட வரலாற்றிலும், வாழ்விலும் மிகவும் சிறப்பு பெற்ற வார்த்தை தான் இந்த மூன்றாம் திருமொழி. பிள்ளைகளை இழப்பது என்பது குணப்படுத்த இயலாத வலி. இது எவராலும் பொறுக்க இயலாத ஒன்று. ஒரு தாய் கருவுறும் போது, தாயின் சுவாசத்திலேயே குழந்தை உயிர் வாழ்கின்றது. அந்தச் சுவாசம் என்பது தொடக்கத்தில் தூய ஆவியார் மனிதர் மேல் ஊதிய சுவாசமே. இன்றைக்கு அது தலைமுறை தலைமுறையாகப் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் தொடர்ந்து வந்து கொண்டே உள்ளது. தாயின் வயிற்றுக்குள், தாயின் சுவாசத்தின் உதவியால் உயிர் வாழுகின்ற குழந்தை, உலகில் பிறக்கின்ற பொழுது தானாகவே

சுவாசிக்கத் தொடங்கி விடுகிறது. எனினும் தாய்-தந்தைப் பாசம் என்பது எவராலும் பிரிக்க இயலாத ஒன்று. எவ்வித சூழலிலும் உளவியல் பூர்வமாயும், உணர்வு ரீதியாகவும், தான் பெற்றெடுத்த குழந்தைக்கு ஏற்படும் துன்பத்தைத் தாயால் பொறுக்க முடியாது. தன் தாய் அடையும் தவிப்பை உண்மையான அன்புடைய குழந்தையால் சகித்துக் கொள்ள முடியாது. ஏனெனில் இது தொப்புள் கொடி உறவின் உச்சகட்ட உறவுப்பிணைப்பு.

சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசுநாதர் தமது சிலுவையின் அருகே துவண்டு போன நிலையில் நின்று கொண்டு இருக்கும் தம் தாயைக் கவனித்தார். தனது வேதனையின் உச்சகட்ட நேரத்திலும் தாயின் மீது தாம் வைத்திருந்த அன்பு, கரிசனை, பராமரிக்க வேண்டிய கடமையுணர்வை நினைக்கின்றார். தனது துன்ப நிலையைப் பார்த்துக்கொண்டு நிற்கிற தாயின் மனம் புண்பட்டுக் கலங்கிவிடக் கூடாது என்பதை அறிந்த இயேசுகிறிஸ்து கரிசனையுடனான பணியை மிகக் கருத்துடன் நிறைவேற்றிட முன்வருகிறார். Arther. J. Brow என்பவர் யோவா 19:25ஆம் திருமொழிக்கு விளக்கம் தரும்போது, "அம்மாவின் இதயம் என்பது தலையில் முள்முடி, கை கால்களில் ஆணி, உடலில் சொட்டும் இரத்தம், இவற்றை பார்த்த அம்மாதான் முதலில் சாக நினைப்பார்கள். ஆனால் மரியா விசுவாசத் தன்மையுடன் இவை அனைத்தையும் ஏற்றுக் கொண்டார் என்று கூறுகிறார். தன் தாய்க்கு ஆதரவாய் எவரும் இருக்கமாட்டார்கள் என்பதை அறிந்துதான் தமக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய சீடரைத் தம் தாய்க்கு ஆதரவாய்க் கொடுத்து தம்மால் தாய்க்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பி முழுமையாக்குகிறார்.

***1. இவரே உம் மகன்*** : (யோவா 19:26)

தான் பெற்றெடுத்த மகனின் வேதனையை நேரடியாய்ப் பார்த்து மனம் உடைந்து போன நிலையில் நின்று கொண்டிருந்த தம் தாயைப் பார்த்து, தம் சீடர் யோவானைக் காட்டி, "இவரே உம் மகன்" என்று கூறி, வாழ்வுக்கு வேண்டிய உறவுமுறை என்பது குறுகிய எல்லைக்குள் அடங்கியது அல்ல, அது உலகளாவிய சிந்தனை உடையதாய் இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார். மகன் என்ற உறவுக் கொண்டாட்டம் என்பது 'உன்னைப் போல உனக்கு அடுத்திருப்பவரிடமும் அன்பு காட்டு' (மத் 5:43) என்னும் இயேசுநாதரின் போதனை மொழியை முன்னிறுத்தி, உன் வீட்டில் உள்ளவர் மட்டும் அல்ல; இவ்வுலகில் உள்ள அனைவரும் உம் குழந்தைகள் என்று பார்க்க வேண்டும் என்பதை மரியாவுக்கு யோவானை ஓர் அடையாளமாய்க் காட்டி, அறிவுரை கூறினார். இறைச் சாயலில் படைக்கப்பட்ட மானிடர் அனைவரும் இறைவனின் குழந்தைகள் என்பதை நினைப்பூட்டியதுடன், 'அம்மா'

என்பவர் அனைவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், அனைவரிடமும் அன்பு காட்ட வேண்டும். மகன் என்ற பாச உறவு என்பது இவ்வுலகில் உள்ள அனைவருக்கும் பரிமாறப்பட வேண்டும். அப்போது தான் கரிசனையுடன் கூடிய குடும்பங்கள் இவ்வுலகில் உருவாக்கம் பெறும். இன்று அன்பு இல்லங்களில், குழந்தைகள் பலர் பெற்றோரின் உறவும் பராமரிப்பும் இன்றித் தவித்துக் கொண்டு உள்ளனர். அவர்களைப் பேணிப் பாதுகாக்கும் பெண் பணியாளர்கள் பலர், தங்கள் குழந்தைகளாகவே பாவித்து நடத்துவது மட்டுமல்லாமல் தங்களது உயிரையே தந்து, இந்தக் குழந்தைகளைப் பாதுகாக்கும் பணியை மிகவும் துணிவுடன் செய்கின்றனர். இதனால் அம்மா-பிள்ளை என்ற உறவு குடும்பம், வீடு என்ற குறுகிய எல்லையைக் கடந்து உலகளாவிய தன்மையுடன் அனைவரையும் குழந்தைகளாய்ப் பார்க்கும் நிலை உருவாகின்றது.

இயேசு சிலுவையில் நின்று கொண்டு தம் தாய் மரியாவுக்கு, தம்மை மட்டுமல்ல, இவ்வுலகில் உள்ள அனைவரையும் பிள்ளைகளாய்ப் பார்க்கவும், பழகவும், பணியைப் பகிர்ந்து செய்யவும் கூறினார். ஒருமுறை இயேசு தமது பணிவிடையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் வேளையில் "உமது தாயும் சகோதரர்களும், சகோதரிகளும் உம்மைப் பார்க்க வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் " என்று கூறப்பட்டபோது, இயேசு கூறியது "என் தாயும் என் சகோதரர்களும் யார்? என்று கேட்டு, தம்மைச் சுற்றிலும் அமர்ந்து இருந்தவர்களைப் பார்த்து, இதோ என் தாயும் சகோதரிகளும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதர சகோதரிகளும் தாயும் ஆவர்" என்று கூறினார் (மாற் 3:31-35).

சிலுவையில் தொங்கியவராய் இயேசு இன்று நம்மிடம் கூறுவது, இவ்வுலகில் உள்ள அனைவரையும் நமது உடன்பிறப்புகளாய்ப் பார்க்க வேண்டும் என்பதுடன் சகோதரத்துவ உறவைப் பேணும்படி கூறுகின்றார். அன்பு, இந்த உலகில் வாழ்வுக்கு உரமாகும் உறவாய்க் காட்சி தரும். இன்றைய முகக்கவசக் கலாச்சாரமும், தனிமைப்படுத்தும் தன்மைகளும் பெருகிவரும் சூழலில், அனைவரையும் கரிசனையுடன் பார்க்கவும், பழகவும், உதவிட முன்வரவும் ஆயத்தப்படுத்துவது மிக அவசியம். திருச்சபை என்பது இணைந்து வாழும் பாச உறவுப் பிணைப்புகளால் பின்னப்பட்டுக் காட்சி தர வேண்டும்.

***2. இவரே உம் தாய்*** : (யோவா 19:27)

ஆதரவற்ற நிலையில் தம் தாயைத் தம்மிடம் மிகவும் அன்பாய் இருந்த சீடரிடம் இயேசு ஒப்படைத்தது, இருதயத்தையே உருக்கும் நிகழ்வாக அமைகின்றது. தம்மால் தாங்க முடியாத துன்பம் அனுபவிக்கும் வேளையிலும், தம் தாயின் திக்கற்ற நிலை பற்றியே அவர் மிகுந்த

சிந்தனையாய் உள்ளார். தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சிலுவையின் பக்கம் வரை துணிவுடன் பின்சென்ற யோவானிடம் இயேசு தம் தாயை ஒப்படைக்கிறார். ஏனெனில் இந்த யோவான் எந்தச் சூழலிலும் மாறாத தன்மையுடைய நம்பிக்கைக்குரிய நபராய் செயல்படுவதைச் சிலுவையில் நின்று உறுதிபட புரிந்து கொண்டார். "இவரே உம் தாய்" என்று கூறி தம் அன்னையை, யோவானின் தாய் என்று குறிப்பிட்டுக் கூறி, தாய்மையின் மாண்பைப் பேணுகிறார். 'அம்மா' பற்றி Gina Glorar என்பவர், தான் எழுதிய 'The church is our mother' என்ற நூலில் கூறும் போது, mother creates, cares, teaches, accepts, sacrifices, heals and celebrates with us. அதாவது தாய் என்பவர் உருவாக்குகிறார், பராமரிக்கிறார், போதிக்கின்றார், ஏற்றுக்கொள்கின்றார், தியாகம் ஏற்கின்றார், குணமாக்குகின்றார் மற்றும் நம்முடன் இணைந்து வாழ்வைக் கொண்டாடுகின்றார் என்று கூறுகின்றார்.

பெண்களைத் தாயாகவும், கடவுளின் படைப்புப்பணியை முன்நின்று நிறைவேற்றும் படைப்பாளரின் பிரதிநிதியாகவும் பார்க்கக் கூறி, தாய் என்பவர் உலகம் அனைத்திற்கும் தாய் என்கிற புதிய பார்வையை முன்வைக்கிறார்.

கிறிஸ்தவ இறையியல் கூறுவது, "The church is our mother." அதாவது ஆதரவற்றவர்கள் அனைவருக்கும் தாய், திருச்சபை என்று கூறுகின்றார். திருச்சபை என்பது அனைவரையும் ஏற்றுக்கொள்வது, ஏற்றத்தாழ்வை வேரறுப்பது, பகிர்ந்து, பங்கிட்டு வாழத்தூண்டுவது, சமத்துவம் பேணவும், நீதி நியாயத்தை நிலைநாட்டவும், விடுதலை வாழ்வு பெற்று மன நிறைவு பெறவும் உதவுவது. "இவரே உம் தாய்" என்று இயேசு கூறி பெண்கள் தாம் இன்று நடமாடும் திருச்சபையின் வடிவங்கள் என்று ஆணித்தரமாய்க் கூறுகிறார்.

இன்று இந்த உலகில் வாழும் அனைத்துப் பெண்களும் அம்மாவாகப் பார்க்கப்பட்டு மதிப்புடன் பராமரிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் அகற்றப்பட்டு பாலினச் சமத்துவம் மலர வேண்டும்.

பெண்களை, திருச்சபையாக ஏற்றுக்கொள்ளத் தயங்குபவர்கள், கடவுளைத் தந்தையாய் ஏற்றுக் கொள்ள இயலாது. உடனடியாய் (At once) யோவான் மரியாவைத் தாயாய் ஏற்று ஆதரவு அளித்தது போல, இன்றைய திருச்சபை தாய்மையோடு அனைவரையும் அரவணைக்க வேண்டும். நாமும் நடமாடும் இறைஇல்லங்களாய் வாழ்ந்து காட்டிட முன்வருவோம் (1கொரி 3:17).

திரு. S.S. **ஆல்பின் டேவிட்ராஜ்**

# விடுதலைக்கான முழக்கம்

மத் 27:45-50

**மூன்று மணியளவில் இயேசு, "ஏலி, ஏலி லெமா சபக்தானி?" அதாவது, "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று உரத்த குரலில் கத்தினார்** (மத் 27:46).

நான்காம் திருமொழியாக இயேசுநாதரால் மொழியப்பட்ட இவ்வாக்கு மத்தேயு, மாற்கு நற்செய்தி நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்தேயு நற்செய்தியைப் பொறுத்தமட்டில் இது, முதலாம் வாக்கு. மாற்கு நற்செய்தியில் இது இயேசுவால் சிலுவையில் மொழியப்பட்ட ஒரே வாக்கு. மேலும் இவ்வாக்கு மத்தேயு நற்செய்தியில் எபிரேய மொழியிலும் மாற்கு நற்செய்தியில் அரமேய மொழியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (மாற் 15:34). பிரபலமான அரசியல் தலைவர் ஒருவர் இந்த நான்காம் சிலுவைத் திருமொழியை வைத்து இயேசுநாதர் கடவுளா? அவர் கடவுளாக இருந்தால் கைவிடப்படுவாரா? என்றும் இயேசுநாதர் கூப்பிட்ட அந்தக் கடவுள் யார்? போன்ற பல கேள்விகளைத் தொடுத்திருந்தார். தொடக்க காலத் திருச்சபை மக்களிடையேயும் இயேசுநாதர் மனிதரா? அல்லது கடவுளா? என்று புரிந்து கொள்வதில் பல்வேறு வாதங்கள் காலங்காலமாக இருந்து வந்துள்ளன. திருச்சபைத் தந்தை புனித அத்தனேசியஸ் என்பவர் கூறும்போது "கடவுள் மனிதனை மீட்கிறவர், இயேசு மனிதனை மீட்கிறார் எனவே இயேசுநாதர் கடவுள்" என்கிறார். இயேசுநாதர் முழுமையான தெய்வத் தன்மையையும், முழுமையான மனிதத் தன்மையையும் கொண்டிருந்தார். எனவே அவர் முழுமையான தெய்வ மனிதர் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். நான்காம் சிலுவைத் திருமொழி வழியாக நாம் புரிந்துகொள்ள வேண்டியவைகளைப் பார்ப்போம்.

## *1. உரிமையின் குரல்* :

என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? "என் இறைவா" இச்சொற்கள் கடவுளுக்கும் இயேசுவுக்கும் இடையே இருந்த நெருக்கத்தையும், உரிமையையும் காட்டுகின்றன. பொதுவாக எல்லா நேரங்களிலும் இயேசு நாதர் கடவுளை 'தந்தையே' அல்லது 'பிதாவே' என்று அழைத்தார். அவருக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த உறவு 'தந்தை - மைந்தன்' உறவு. அந்த உறவு, உரிமை எவ்விதத்திலும் பாதிக்கப்படாதபடி இருந்தார். மாற்கு 15:33; மத்தேயு 27:45 இல் "நண்பகல்

பன்னிரெண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று'' என்ற குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது வழக்கத்திற்கு மாறான ஓர் இருள். இந்த இருள் ஏன்? என்பதற்கு இறையியலாளர்கள் கொடுக்கும் விளக்கம் யாதெனில் ''ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர் மேல் சுமத்தினார்'' (எசா 53:6) என்ற வாக்கின்படி, ஒட்டுமொத்த உலகின் பாவமும் அவர்மீது சுமத்தப்பட்டது. கடவுள் தமது மகனை உலக மக்களின் மீட்புக்காக ஒப்புக்கொடுத்தார். எனவே, பாவத்தினால் கடவுளின் முகம் அவருக்கு மறைக்கப்படுகிறது. அந்த பிரிவைத் தாங்க இயலாது உரிமையோடு ''என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று உரிமைக் குரல் கொடுத்தார்.

### *2. வேதனையின் குரல்* :

திருமறையில் இயேசு கிறிஸ்துவுக்கு 'மானிட மகன்' எனப் பெயர்சூட்டி நற்செய்தியாளர்களும், மற்ற புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்களும் அழைப்பதைக் காணமுடிகிறது. மானிடமகன் என்பதற்கு மக்கள் பிதிநிதி என்று பொருள். ஆக, என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்ற வாக்கு கைவிடப்பட்ட நிலையில் வேதனையோடு இருக்கின்ற துன்புறும் மானுடத்தின் ஒட்டுமொத்த குரலாக இறைவன் இயேசு வெளிப்படுத்துகிறார். இத்துன்புறும் பணியாளனின் வேதனையின் குரலை, திருப்பாடல்கள் ஆசிரியர் திருப்பாடல்கள் 22:1 இல் பதிவு செய்துள்ளார். ''என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்னைக் காப்பாற்றாமலும், நான் தேம்பிச் சொல்வதைக் கேளாமலும் ஏன் வெகு தொலைவில் இருக்கின்றீர்?'' ஆனால் இந்த வேதனையில் குரல் நம்பிக்கையின்மையினால் எழுப்பப்பட்டது அல்ல. ஏனெனில் திருப்பாடல் 22-ஐ படிக்கும் போது தொடக்கத்தில் வேதனை குரலாக வெளிப்பட்டது. பின்னர் நம்பிக்கையின் குரலாகத் தொனிக்கிறது. தொடர்ந்து நம்பிக்கையின் வாசகங்களும் வெளிப்படுகின்றன. இயேசுநாதர் மானிட மகனாக வெளிப்படுத்தும் என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்? என்ற வார்த்தை வேதனையின் குரலாக இருந்தாலும் அதிலிருந்து வெளிப்படும் நம்பிக்கையையும் காண முடிகிறது. ஏனெனில், உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் தொடக்கம். அந்த வகையில் இயேசுநாதரும் சிலுவைச் சாவுக்குப் பின்னர் மூன்றாம் நாளில் எழுப்பப்பட்டார் என்பது துன்பத்தின், வேதனையின் தொடர்ச்சியான நல் நம்பிக்கையைக் காட்டுகிறது.

## 2. வேண்டலின் குரல் :

என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்ற வார்த்தை வேணடுதலின் குரலாகத் தொனிக்கிறது. இயேசுநாதர் தமது பல்வேறு சூழல்களில், நெருக்கடியான நேரங்களில் இறைவனிடம் வேண்டுதல் செய்தார். ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைப் பல ஆயிர மக்களுக்கு உணவாகப் பெருகச் செய்யும்போது வானத்தை நோக்கி மன்றாடினார் (மத் 14:19); படப்போகும் பாடுகளைக் குறித்து கலங்கிக் கொண்டிருந்த வேளையில் கெத்சமனித் தோட்டத்தில் சென்று மன்றாடினார் (மத் 26:39). மனித துன்பத்தின் உச்சகட்டமாகிய எல்லாராலும் கைவிடப்படுதல் என்ற நிலையிலேயும் இறைவனிடம் என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என உரிமையோடு மன்றாடினார். அந்த வகையில் இது ஓர் இறைவேண்டலின் குரலாகத் தொனிக்கிறது. திருத்தூதுவர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறும் போது கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்! கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி....சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குத் தம்மையேத் தாழ்த்திக் கொண்டார் (பிலி 2:5-11) என இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் உண்மையை நமக்கு சுருக்கமாக அதே வேளையில் அழுத்தமாகக் கூறுகிறார். இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய முழுமையான ஒப்படைப்பு “இயேசு கிறிஸ்து ஆண்டவர்” என எல்லா நாவுமே அறிக்கையிடச் செய்தது. நமது மானுட வாழ்வில் துன்பம், கைவிடப்படல்கள் போன்ற கடினங்கள் வந்தாலும் இயேசுநாதரைப் போன்று அமைதியாக இறைவேண்டல் செய்கின்ற ஒப்படைப்புள்ள பற்றுறுதி மிகுந்த வாழ்வை கடவுள் நமக்கும் தருவாராக.

திருமதி. Y. **ஹெர்லின் சஜிதா நெல்சன்**

# விடுதலைக்கான வேட்கை

யோவா 19:28,29

**"இதன்பின் அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, தாகமாய் இருக்கிறது என்றார்."** (யோவா 19:28)

இயேசு கிறிஸ்து வெகு நேரமாக வதைக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு சிலுவையில் ஏற்றப்பட்டிருக்கின்ற போது, சித்திரவதையும், பல பாடுகளும் சிலுவையின் பாதையில் சுமந்தார். மனிதனின் அடிப்படை தேவைகளில் தண்ணீர் மிகவும் அவசியமான ஒன்று. தண்ணிர் இன்றி உயிரினங்கள் வாழ முடியாதென்பதே உண்மை. யோவான் எழுதிய நற்செய்தி நூலில் தண்ணீர் ஆழமான செய்தியை கொடுக்கிறது. கண்ணீரோடு ஆண்டவர் செயலாற்றுகையில் இயேசுவின் மானிட இயல் கடந்த தெய்வீக தன்மையை வெளிப்படுத்துகிறது. ஆனால் சிலுவையில் ஆண்டவர் இயேசுவின் தாகம் அவரின் மானிடத்தண்மையை வெளிப்படுத்துகிறது. இங்கு இயேசு தாகம் நிறைந்தவராக இந்த ஐந்தாம் வார்த்தை வெளிப்படுத்துகின்றார்.

## *1. மானிடத் தன்மையை வெளிப்படுத்தும் வார்த்தை* :

இயேசு கிறிஸ்து உடல் முழுவதும் பாதிக்கப்பட்டு, தண்ணீர் பற்றாக்குறை, பாதிக்கப்பட்டு உடல் சோர்புற்ற நிலையில் தாகமாயிருக்கிறேன் என்று எடுத்துரைக்கின்றார். உடலில் அவர் பெற்று கொண்ட வறட்சியை இவ்வார்த்தையில் உறுதிப்படுத்துகிறார். தாகமாயிருக்கிறவர்களேஎன்று பலரை அழைத்து தாகம் தீர்க்கும் திருப்பணியை திருப்தியாக நிறைவேற்றி இப்போது தாகமாயிருக்கிறேன் என்று எடுத்துரைக்கிறார். உடலில் தடைக்கல் வந்து விட்டது. பசியோடிருந்தார், களைப்போடிருந்தார், வியர்வையால் நனைந்தார், இரத்தம் சிந்தினார் இது இயேசுவுக்கு தாகம் ஏற்படுத்தியது, எனவே வார்த்தையாக தாகமாயிருக்கிறேன் என்றார். தனக்கென்று சுயம் சார்ந்து எதையும் பெற்றுக் கொள்ளாமல், மனித உணர்வுகளில் தம்மையும் இணைத்து, சரீர வேதனையால் தாகமாயிருக்கிறேன் என்று எடுத்துரைக்கிறார்.

## *2. பாடுகளை ஏற்கும் வார்த்தை* :

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பல்வேறு பாடுகளை அனுபவித்தவர்கள் காணப்பட்டார்கள். நோய்களால், பிசாசின் அடிமைத்தனங்களால், கைம்பெண்கள், ஆதரவற்றோர், பாடுகளை

அனுபவித்து வந்தனர். இயேசு கிறிஸ்து நம் வாழ்வை வளமாக்கவும், நலமாக்கவும், மனிதத்தைப் புனிதப்படுத்தவும் விண்ணைத் துறந்து மண்ணில் பிறந்து இறையரசை இம்மண்ணில் நிறுவ நிறைவாளராக வளர்ச்சிப் பாதையில் வழி நடத்த வந்த இயேசு கிறிஸ்து தாகமாயிருக்கிறேன் என்று எடுத்துரைக்கிறார். இது மனிதத்திற்கும் மனிதன் வாழுகின்ற உலகிற்கும் அவரால் கொடுக்கப்படுகின்ற அறைகூவல். தூய பவுலடிகளார் இறையழைப்பை தன்னுடைய பயணப்பாதையில் பெற்றுக் கொண்டார். அவர் மூலமாக இயேசு கிறிஸ்துவின் திருப்பணி என்பது இவ்வுலகத்தில் விரிவாக்கம் பெற்றது. “நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்” என்று கேட்டதின் உண்மை யாதெனில் இயேசுவின் தாகத்தைத் தீர்க்கின்றவராக பாடுகளின் வழியாக தன்னை அர்ப்பணித்தார். அதனால் இயேசு கிறிஸ்துவின் திருச்சபை வளர்ந்து பெருகியது. இந்த மேம்பாட்டை ஏற்படுத்தவே இயேசு தாகமாயிருக்கிறேன் என்று கூறி பாடுகளை ஏற்றார்.

### *3. பாதிக்கப்பட்டோருக்கான வார்த்தை* :

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பல்வேறு பாதிப்புக்குள்ளானவர்கள் காணப்பட்டார்கள். எங்கெல்லாம் மனிதர் நீதியை மறுக்கின்றனரோ, மறைக்கின்றனரோ, மறந்து போகின்றனரோ, அங்கெல்லாம் இயேசுவின் தாகமாயிருக்கிறேன் என்ற திருமொழி ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ஏசாயா இறைவாக்குரைப்பவர் கடவுளின் அழைப்பை ஏற்று நான் போகிறேன், உமது பணியை நிறைவேற்றுவேன் என்று அர்ப்பணிக்கிறார். விடுதலைப் பணிக்கென்று மோசேயைக் கடவுள் அழைத்த போது நான் திக்கு வாயும் மந்த நாவும் உடையவன் என்று மறுத்த போது கடவுள் மோசேயை உறுதிப்படுத்தி அழைத்து சென்றதையும் நாம் இங்கு புரிந்து கொள்ள வேண்டும். எங்கெல்லாம் மக்கள் கஷ்டத்திலும், நஷ்டத்திலும், கண்ணீரிலும், கவலையிலும், இடையூறுகளிலும், இன்னல்களிலும், கட்டுகளிலும், அடிமைத்தனத்திலும் வாழுகின்றனரோ அங்கு அவர்களை விடுதலை வாழ்க்கைக்கு அழைக்கின்றர். எங்கெல்லாம் சமத்துவம், சத்தியம், நீதி, நியாயம், நேர்மை, உண்மை, மறுக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் திருப்பணியாற்ற இயேசுவின் இவ்வார்த்தை நம்மை அழைக்கின்றது. இவ்வார்த்தை தந்தையை அழைத்த வார்த்தைக்கு அடுத்து வருகிறது. எனவே தாகம் என்பது மனிதத்தின் உணர்வு. அந்த உணர்வுக்கு உதவுவது மனித உறவு. ஆகவே இயேசுவின் தாகத்தை தீர்க்கின்றவர்களாக வாழ்ந்து இயேசுவின் தாகத்தைத் தீர்ப்போம்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**

ஆறாம் திருமொழி

# விடிவுகாண ஒரு முடிவு

யோவா 19:29-30

**...இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்"** (யோவா 19:30).

அருள்நாதர் இயேசு சிலுவையில் மொழிந்த ஆறாம் வார்த்தை 'முடிந்தது' அல்லது 'நிறைவேறிற்று' என்பதாகும். அவர் எதை நிறைவு செய்தார்? என்பதை நாம் தியானிப்போம். பாவத்தின் விளைவுகளால் உலகில் பெருக்கெடுத்த பெரும் துன்பங்களை அகற்ற உதயமானவர் இயேசு கிறிஸ்து. கலாத்தியர் 4:4,5 ஆகிய வசனங்களில் "....காலம் நிறைவேறின போது ... தம்முடைய குமாரனை அனுப்பினார்" எனப் படிக்கின்றோம். ஆம் பாவத்தின் முடிவுகாலம், மக்களை மீட்கும் காலம் வந்து விட்டதாக உணரமுடிகின்றது.

யோவான் 4:34-இல் "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு" என்கிறார் இயேசு. இயேசு கிறிஸ்து தம் வேலையை நிறைவு செய்வதே தம் தலையாய கடமை என உணர்ந்து தந்தையின் திருவுள வேலையை நிறைவேற்ற சிலுவையினூடாய்ப் பாடுகளை ஏற்கின்றார். நம்மை மீட்பதும் நிலையான வாழ்வு தருவதுமே அவரின் பணி. அதைச் செய்து முடிப்பதைத் தம் விருப்பமாகக் கொண்டு, இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் (லூக் 19:10) என்றார். நாம் இழந்து தவிக்கும் இறைச்சாயலை மீட்கவும், நம்மை விடுவிக்கவும் வந்த பணியை வெற்றியாய் முடித்து வெற்றி சிறந்தவராய் சிலுவையில் முழங்கும் ஆறாம் வார்த்தை" 'எல்லாம் நிறைவேறிற்று' என்பதாகும். எவைகளை நிறைவேற்றி நம்மை மீட்டார் என்பதைத் தியானிப்போம்.

## *1. பாவத்திலிருந்து விடுவிக்கும் பணியை நிறைவேற்றினார் :*

உலக மக்களின் பாவ விளைவுகளால் ஏற்படும் சீரழிவுகள் ஏராளம். இறைவனால் படைக்கப்பட்ட மனிதர் பாவத்தில் வீழ்ந்த போதே அவர்களை மீட்கும் பணியைத் தந்தையின் சித்தப்படி இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொள்கின்றார். அவரின் பிறப்பு, பணி வாழ்வு, இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகிய நிகழ்வுகள் பாவக் கழுவாயாக, நம் பாவ

மன்னிப்புக்காகவும், கடவுளோடு நாம் ஒப்புரவாக்கப்படவும் செயல்படுத்தப்பட்டன. யோவான் 14:7-இல் பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன், நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் என அருள்நாதர் இயேசு கூறுகின்றார். யோவான் நற்செய்தி நூலில் இயேசுவின் முதலாம் அற்புதம் என்னும் நிகழ்வில் என் வேளை இன்னும் வரவில்லை என்றவர், இங்கு என் வேளை வந்தது. நீர் எனக்குத் தந்த கிரியையைச் செய்து முடித்தேன் என்கிறார். அவர் நம் பாவங்கள் நீங்கும்படியாகச் சிலுவையில் தொங்கினவராய்ப் பாவப் பலியாகத் தம் பணியை நிறைவு செய்கின்றார். லேவியர் 17:11-இல் கடவுள் மோசேயிடம் மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. ஆம் அன்று மிருகங்களின் இரத்தம் பாவக் கழுவாயாக இருந்தது. இன்று இயேசுவின் இரத்தம் நம் சகல பாவங்களையும் கழுவித் தூய்மையாக்குகின்றது. அவர் பிதாவின் சித்தம் செய்து நம் அனைவருக்காகவும் பலியானார். அந்த மாபெரும் பணியைச் செய்து வெற்றி பெற்றவராகச் சொல்கின்றார், “எல்லாம் நிறைவேறிற்று”.

### *2. திருச்சட்டத்தின் நிறைவானார்* :

இஸ்ரயேலரின் வாழ்வுக்குச் சில சட்டங்கள் தரப்பட்டன. அவை கடவுளால் மோசேயிடம் கொடுக்கப்பட்டு அதன்படியான வாழ்வு வாழ மக்களைப் பயிற்றுவிக்க அனுப்புகின்றார். அவற்றை ஏற்று வாழ்வதே சிறப்பு என்கின்றார். அந்தத் திருச்சட்டம் நாளடைவில் வெறும் சடங்காகவே பார்க்கப்பட்டது. எனவே அந்தச் சட்டத்தை நிறைவடைய வைப்பதற்காகவே தந்தை தம் அன்பான குமாரன் இயேசுவை நமக்குத் தந்தருளினார். திருச்சட்டத்தை அழிப்பதற்கல்ல, அதை நிறைவேற்றவே வந்தேன் என்கிறார் இயேசு கிறிஸ்து (மத் 5:17).

திருச்சட்ட அறிஞர் இயேசுவிடம் வந்து திருச்சட்ட நூலில் பிரதான கற்பனை எது எனக் கேள்வி எழுப்பும் போது துணிவுடன் பதில் தருகின்றார் (மத் 22:36,37). உன்னை நீ அன்பு செய்வதுபோலப் பிறரையும் அன்பு செய்வாயாக என்பதை இயேசு தம் வாழ்வில் நிறைவாக்கினார். இஸ்ரயேல் மக்கள் சடங்காகக் கடைப்பிடித்தவற்றை இயேசு தம் வாழ்வின் வழியாகவும், பணியின் வழியாகவும் நிறைவு செய்தார்.

சிலுவையில் “நிறைவேறிற்று” என்று முழங்கின அந்த வார்த்தையின் வழியாக, நீங்கள் அனைவரும் மீட்கப்பட்டீர்கள் என உரைத்தார். இயேசு திருச்சட்டத்தின் நிறைவானார். அவரின் தியாகத்தால் நாம் பெற்ற மீட்பினைப் பேணிக்காக்க உறுதியேற்போம்.

திரு. G.R. **ஜெபசிங்**

# விண்ணக வாழ்வுக்கான நுழைவாயில்

லூக் 23:44-49

**"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்"** (லூக் 23:46).

லூக்கா நற்செய்தியாளர் சிலுவையில் இயேசு "இறைவா" என்று கூறியபின் மாபெரும் குரலெழுப்பி உயிர் துறந்தார் என்று கூறுகிறார் (மத் 1:55, மாற் 14:37). தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்புவிக்கிறேன் என்ற இறைவேண்டலாக இதனைப் புரிந்து கொண்டு முழுக்க முழுக்க தந்தையைச் சார்ந்து, தளராத நம்பிக்கையோடு வாழ்ந்த வாழ்வு எனக் காட்டுகிறார்.

மரணம் மனிதன் அஞ்சுவது, விரும்பாதது. காரணம் மரணத்திற்குப் பின் என்ன? என்பது குறித்து அறிய இயலாமை. மரணத்தோடு அனைத்தும் முடிகிறதே என்ற தவிப்பு அச்சத்தைத் தருகிறது.

மருத்துவர் ஒருவர் தனது பணியில் மனிதர்கள் மரிக்கும் போது கடைசியாகக் கூறியவற்றைப் பதிவிட்டிருந்தார். அதில் சிலவற்றைக் காண்போம். வயதான அம்மா ஒருவர் தனது மரண வேளையில் 'நெருப்பு, நெருப்பு எல்லாப் பக்கமும் நெருப்பு' என்று கூறியவாறு மரித்தார்களாம். அடுத்ததாக, வாலிபர் ஒருவர் மரிக்கும்போது, 'எனக்கு உதவுங்கள். அவர்கள் என்னைக் கொடுமைப்படுத்துகிறார்கள்' என்று சத்தமிட்டு வாழ்வை முடித்தாராம். இன்னொரு அம்மா, 'நான் மிகவும் பிரகாசமான ஒளியைப் பார்க்கிறேன்' என்று கூறி மகிழ்ச்சியோடு மரணத்தைச் சந்தித்தாராம். மற்றொருவர் 'இதோ உண்மையான இறைத்தூதர்கள் எனது அறைக்கு வருகிறார்கள்' என்று கூறி மலர்ந்த முகத்தோடு மரித்தாராம். இவைகளிலிருந்து நாம் புரிந்து கொள்ளுவது என்ன? மரணத்திற்குப்பின் ஒரு வாழ்வு உண்டு, அது நித்திய வாழ்வு, இறைவனோடு வாழும் வாழ்வு. "கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பும்" (சஉ 12:7) என்று திருமறை கூறுகின்றது. மட்டுமல்ல, "தன் சாவுநாளைத் தள்ளிப் போடவும் எவனாலும் இயலாது. சாவெனும் போரினின்று நம்மால் விலக முடியாது; பணம் கொடுத்தும் தப்ப முடியாது" (சஉ 8:8). மரணம், மனிதர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வருவது நிச்சயம். அதை மகிழ்ச்சியோடு எதிர் கொள்ளுகிறோமா? என்பதே கேள்வி.

### *1. முழுமையின் அடையாளம்* :

இறைமகன் இயேசு சிலுவையில் முதலாவது “தந்தையே” (பிதாவே) என்று தொடங்கி,“தந்தையே” என்று முடிக்கிறார். தந்தையின் பணியை நிறைவேற்றி முடித்தார். வாழ்வு முழுமைபெற்றபோது தமது உயிரை அந்தத் தந்தையிடம் ஒப்புவித்து தமது வாழ்வை, பணியை முழுமைப்படுத்துகிறார். இவ்வசனம் திபா 31:5-இல் வருகிறது. தந்தையே, உம் கையில் எனது உயிரை அளிக்கிறேன் என்பதன் எதிரொலியாகவே இருக்கிறது. இத்திருப்பாடலின் தொடக்கம், ஆண்டவரே உம்மிடம் நான், அடைக்கலம் புகுந்துள்ளேன். நான் ஒருபோதும் வெட்கமடைய விடாதேயும் (திபா 31:1) என்பதாகும். யூதர்களின் பாரம்பரிய மன்றாட்டே திபா 31. உடலில், நாம் பெற்றிருக்கும் “உயிர்” (ஜீவன்) ஆண்டவரின் அருட்கொடை. அதை ஆண்டவரிடமே திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் நமது வாழ்வு முழுமை அடையும். புனித ஸ்தேவான் “தந்தையே உம்முடைய கைகளில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்று கூறி இரத்தசாட்சியானார்.

பிறந்தோம், வாழ்ந்தோம், வீழ்ந்தோம் என்பதல்ல. கொடுக்கப்பட்ட வாழ்வை இறைவனுக்காய், இறையரசுக்காய், இப்படி வாழ்ந்தேன் என்ற வெற்றி வாழ்க்கையை ஆண்டவர் எதிர்பார்க்கிறார். அப்படி இறைவன் விரும்பும் வாழ்வு வாழ்ந்தால் மட்டுமே, இயேசு கிறிஸ்துபோல் நமது உயிரை கடவுளிடம் ஒப்படைத்து வாழ்வை முழுமையாக்க முடியும்.

### *2. உறவின் தொடக்கம்* :

இயேசுகிறிஸ்து தமது உயிரைத் தந்தையாம் கடவுளிடம் ஒப்படைத்தபோது மிக முக்கியமான ஒன்று நடைபெறுகிறது (மத் 27:50,57). கோவிலின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாய்க் கிழிந்தது. தூயத் திருப் பீடத்தையும், மாதூயப் பீடத்தையும் பிரிக்கும் இத்திரைச் சீலை, தலைமைக் குரு பாவமீட்பு பலிக்கான இரத்தத்தோடு இறைவனைச் சந்திக்கும் இடம். பாவப்பலியின் இரத்தத்தோடு மட்டுமே செல்லக்கூடிய இடம். ஆனால் சிலுவையில் இறைமகன் இயேசுகிறிஸ்துவின் ஏழாம் திருமொழி வாயிலாக அவரைப் போலவே நாமும் “தந்தையே” என்று அழைக்க, நேரடியாக அவரிடம் செல்ல தடையான திரைச்சீலையைக் கிழித்து புது உறவுக்கு வழிஏற்படுத்தினார், புதிய உறவைத் தொடங்கி வைத்தார். இதை, பவுல், இயேசு கிறிஸ்து தந்தையை அழைத்த விதம் ஒரு சிறப்பான நெருக்கத்தை வெளிப்படுத்துகிறது போல், நமக்கும் அதே உரிமை, அதாவது இயேசுகிறிஸ்துவை நம்பி, கடவுளின் பிள்ளைகளாகும் பேறுபெற்ற

அனைவருக்கும் அருளப்பட்டுள்ளது (உரோ 8:14-16; கலா 4:6-7 ) என்கிறார். ஆம் இந்த வாக்கு, புது உறவை உருவாக்கும் வாக்கு.

***3. வாழ்வின் நம்பிக்கை*** :

இறைவன் உலகத்தின் முடிவுமட்டும் நம்முடன் இருப்பவர் மட்டுமல்ல. நித்திய நித்தியமாய் நம்முடன் இருப்பவர் என்ற புது நம்பிக்கையை நமக்கு அருளும் வாக்கு இந்த ஏழாம் திருமொழியாகும். வில்லியம் வேட்ஸ் வொர்த் (William Words Worth) என்ற ஆங்கிலக் கவிஞர் கூறுகிறார், "Death is the birth of every christian" அதாவது "கிறிஸ்தவனுக்கு மரணம், மறுமைக்கான பிறப்பு. " ஆம், இயேசு இறுதியாக சிலுவையில் மொழிந்த வாக்கு, மனிதருக்கு ஒரு நம்பிக்கையை அருளுகிறது. அது என்ன நம்பிக்கை? வாழ்வு உலகத்தோடு முற்றுப் பெற்றுவிடுவதில்லை; அது தொடரும். உலகத்திலிருந்து இறைவனோடு தொடங்கும், பாடுகளில்லாத, வெயிலாவது, உஷ்ணமாவது தொடாத ஒரு சுகவாழ்வு நமக்கு உண்டு. அது இறைவனோடு வாழ்கின்ற வாழ்வு என்ற நம்பிக்கையை இவ்வாக்கு நமக்குத் தருகிறது.

எவ்வளவு காலம் வாழ்ந்தோம்? என்பதல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே கேள்வி? இறைமகன் இயேசுகிறிஸ்துபோல் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி வாழ்வை வெற்றியாய் முடித்து, முழுமையின் அடையாளமாக, தம் தந்தையிடம், "தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று வெற்றி முழக்கமிட்ட கிறிஸ்துவைப் போல் நமது வாழ்வையும் தந்தையின் கையில் ஒப்படைக்க, ஆண்டவர் இயேசு கிறிஸ்து அழைக்கிறார். "இறைவா எனது வாழ்விலும், சாவிலும், நல்ல நேரங்களிலும், இருப்பிலும், இல்லாமையிலும் என்னை உம் கையில் தருகிறேன். உமது பாதுகாப்பை நம்பி" (I commit myself to you, O God, In my living and in my dying, in the good times and in the bad, whatever I am and have. I place in your hands. O God, for your safe keeping) என்கிறார் ஹேமில்டன். ஆம் எல்லாவேளையிலும் ஆண்டவரின் கரத்தில் நம் வாழ்வை நம்பிக்கையோடு ஒப்படைத்து வாழ்வோம்.

திரு. G. ***சுதாகர் சிங்***

# விழாக்கால அருளுரைகள்

# குழந்தைகள் : இறையாட்சியின் முன்னுதாரணங்கள்

| | |
|---|---|
| 2அர 5:1-14 | எபே 6:1-4 |
| திபா 127 | யோவா 6:1-15 |

**“பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்”** (திபா 127:3).

குழந்தைப் பருவம் ஆற்றல்மிக்கது என்றால் அது மிகையாகாது. நலமான சமூகம் ஒன்று மலர வேண்டுமானால், அது நலமான குழந்தைகளால் மட்டுமே முடியும். இத்தகையை ஆற்றல்மிக்க குழந்தைப்பருவத்தைச் சரியாகக் கையாளத் தெரியாததால் இன்று குரங்கு கையில் கிடைத்த பூமாலையாக, நம் குழந்தைகள் நம் சொந்தக் கரங்களாலே நசுக்கப்படுகின்றனர். அன்றாடம் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கையும், கொடுமைகளும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. உலகிலுள்ள மொத்த குழந்தைகளில் 82 விழுக்காடு இந்தியா போன்ற வளரும் நாடுகளில்தான் உள்ளனர். சுமார் 440 மில்லியன் 18 வயதுக்குட்ப்பட்ட குழந்தைகள் இந்தியாவில் உள்ளனர். இத்தோடு ஏறத்தாழ 27 மில்லியன் குழந்தைகள் ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் பிறந்து, இந்த எண்ணிக்கையோடு சேர்ந்து கொண்டிருக்கின்றனர். ஒரு நாளைக்கு 75 ஆயிரம் குழந்தைகள் வீதம் பெற்றெடுக்கும் இந்தியா, 2030 ஆம் ஆண்டுக்குள் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாறிவிடும் என ஐக்கிய நாடுகள் சபை கணித்துள்ளது. குழந்தைகளின் எண்ணிக்கை ஒருபுறமிருந்தாலும், முன்பு இல்லாத அளவுக்குப் பல வகைகளில் குழந்தைகள் மீதான வன்முறைகளும் அநீதிகளும் பெருகிவருவது நமக்குக் கவலையைத் தருகின்றது.

ஒரு நாட்டின் எதிர்காலம் அங்குள்ள குழந்தைகளின் நலனைப் பொறுத்துத் தான் அமையும் என்பர். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் திருத்தந்தை இரண்டாம் ஜாண்பால், ஐ.நா. சபையில் ஆற்றிய உரையில், “இந்த உலகில் தங்களின் நலமான எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுகின்ற நாடுகளோ, அரசியல் அமைப்போ எதுவாக இருந்தாலும் அவை குழந்தைகளை விட்டு விட்டு அவற்றைச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்” என்றார். ஆனால் இந்திய நாட்டில் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் கட்டுக்கடங்காமல்

போவதைப் பார்க்கின்ற போது “குழந்தைகள் வருங்கால இந்தியாவின் தூண்கள்” என்கிற பேச்செல்லாம் நகைப்பைத்தான் தருகிறது.

திருமறையில், குழந்தைப்பேறு இஸ்ரயேல் சமுதாயத்தில் வரவேற்கப்பட்ட பெருமைக்குரிய பேறாகக் கருதப்பட்டது (தொநூ 20:6; ரூத் 4:11-12). யூதச் சமூகத்தில், குழந்தை இல்லாதோர் நடத்தப்பட்ட விதத்திலிருந்து, குழந்தை பெறுவது கடவுளின் ஆசியாகக் கருதப்பட்டது (தொநூ 21:6-8; 1சாமு 1:22; லூக் 1:25) என்பதை அறியலாம். குழந்தைகள் கடவுளால் ஆசீர்வதிக்கப்படும்போது மக்கள் சமூகமே ஆசீர்வதிக்கப் படுவதாகக் கருதினர் (திபா 115:14, 14:13, 128:3). மனிதச் சமுதாயத்திற்கு மணிமகுடம் போன்றவர்கள் குழந்தைகள் (நீமொ 17:6). ஆண்டவராகிய இயேசு குழந்தைகளை இறையரசின் சொந்தக்காரர்கள் (மாற் 10:14,15) எனவும் இறையரசின் முன்னுதாரணங்கள் (மத் 18:3) எனவும் இறை ஞானத்தின் வெளிப்பாடுகள் (லூக் 10:23) எனவும் பெருமைப்படுத்தியுள்ளார். இந்தக் குழந்தைகள் எப்படிப்பட்டவர்கள் எனத் தியானிப்போம்.

### *1. மகிழ்ச்சியைச் சுமந்து வருபவர்கள்* :

சிரிய நாட்டுப் படைத்தலைவர் நாமான். நாமான் என்ற பெயரின் பொருள் “இன்பம்” என்பதாகும். இஸ்ரயேலரை விட சிரிய நாடு இக்காலக் கட்டத்தில் வலிமையானதாக இருந்தது. சிரிய அரசருக்கு இஸ்ரயேலரின் அரசர் பயப்படுகின்ற ஒரு அரசியல் நிலை (5:7-8). இச்சூழலில் பல இஸ்ரயேலர்களை சிரிய அரசர் அடிமைகளாகக் கொண்டு சென்று வேலை வாங்கினார். அதில் ஒரு சிறு பெண் தான், நாமான் வீட்டில் பணிவிடை செய்து வந்தார். இந்த நிகழ்வில் நாமான், எலிசா, கேயாசி ஆகியோரின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்தச் சிறு பெண்ணின் பெயரோ பதிவு செய்யப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. சிரியப் படைத்தலைவர் நாமான், அரசர் பெனாதாத்திடம் உயர்ந்த மதிப்பு பெற்றிருந்தார். அதற்குக் காரணம், சிரிய நாட்டுக்காக நாமான் தொடுத்த போர்களில் வெற்றியைக் கொண்டு வந்ததேயாகும். வலிமைமிக்க போர் வீரரான நாமானோ ஒரு தொழுநோயாளி. தொழுநோயை நினைத்து நினைத்து அவர் மகிழ்ச்சியற்றவராகவே தினம் தினம் வாழ்ந்து வருகிறார். இவர் கொண்டு வரும் வெற்றியால் அரசர், அமைச்சர்கள், நாட்டுமக்கள் எல்லோரும் நாமானைப் போற்றிப் புகழ்ந்தாலும் உண்மை மகிழ்ச்சி அவரில் இல்லாததைக் கண்ட, உணர்ந்த இந்த அடிமைச் சிறுபெண், உதவும் பண்பு கொண்ட சிறுபெண், கடவுள் நம்பிக்கை கொண்ட சிறுபெண் நாமானின் மனைவியிடம், சமாரியாவிலிருக்கும் தீர்க்கரிடம் சென்றால் இவரது தொழுநோய் நீங்கும் என்று சொன்னாள். இந்தச் அடிமைச் சிறுபெண்ணின்

சொல்லை நம்பிய நாமானின் மனைவி அந்த செய்தியை நாமானிடம் சொல்ல, நாமான் அரசரின் கடிதத்தின்படி எலியாவிடம் சென்று யோர்தானில் ஏழுமுறை மூழ்கி தொழுநோயிலிருந்து முழுமையான விடுதலை பெற்றுக் கொள்கிறார். தொழுநோயிலிருந்து விடுதலை பெற்ற நாமானின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இந்த மகிழ்ச்சிக்குக் காரணமாக, கருவியாகச் செயல்பட்டது நாமான் வீட்டுச் சிறுபெண்ணே என்றால் அதை எவரும் மறுக்கவே முடியாது.

- ❋ லூக் 1:14 இல் யோவான் என்கிற குழந்தையின் பிறப்பால் பலரும் மகிழ்வர் என எழுதப்பட்டுள்ளது.
- ❋ நீமொ 10:1 "ஞானமுள்ள பிள்ளைகள் தம் தந்தையை மகிழ்விப்பர்."
- ❋ நீமொ 15:20 "ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விப்பான்."
- ❋ லூக் 2:10 இயேசு என்கிற குழந்தையின் பிறப்பால் இந்த உலகிற்கே பெரும் மகிழ்வு ஏற்பட்டது, குழந்தைகள் மகிழ்ச்சியைச் சுமந்து வருபவர்கள்.

### *2. மாதிரியைச் சுமந்து வருபவர்கள்* :

சிரிய படைத் தலைவர் நாமான் வீட்டில் பணிவிடை செய்து வரும் இந்தச் சிறிய பெண், இஸ்ரயேல் நாட்டைச் சார்ந்தவர். இவர் இப்போது நாமான் வீட்டில் அடிமையாக வாழ்ந்து, நாமான் வீட்டில் பணிவிடைகளைச் செய்து வருகின்றார். இப்பெண்ணை அடிமையாகப் பிடித்து வந்து, நாமான் வீட்டில் வேலை செய்ய வைத்தது சிரிய அரசர் பெனாதாத்தும், படைத் தலைவர் நாமானுமேயாவர். இதையெல்லாம் நன்கு உணர்ந்திருந்தாலும் இப்பெண் நாமானைப் பழிவாங்க எண்ணாது, அவருடைய தொழுநோய் நீங்க ஆலோசனை வழங்குகிறார். ஒருவேளை நாமானின் தொழுநோய் நீங்கினால், அவர் என்னை விடுவிப்பார். எனவே அவரின் தொழுநோய் நீங்க ஆலோசனை சொல்லுவோம் என்று இச்சிறுபெண் எண்ணவில்லை. மாறாக, பலனை எதிர்பாராமல் பணி செய்கிறார். நாமான் வீட்டுச் சிறுபெண் "பலனை எதிர்பாராமல் பணி செய்ததற்கு" மாதிரியாகச் செயல்பட்டாள்.

இயேசு கலிலேயாக் கடலைக் கடந்து மறுகரைக்குச் சென்று ஒரு மலையின் மேல் தம் சீடர்களோடு அமர்ந்து நிமிர்ந்து பார்த்தபோது, பெருந்திரளான மக்கள் வருவதைக் கண்டு, சீடர் பிலிப்புவிடம் "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்" என்று கேட்டார். பிலிப்புவோ, "இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே" என்றார். அப்போது அந்திரேயா "இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை

அப்பங்களும், இரண்டு மீன்களும் உள்ளன. ஆனால் இத்தனை பேருக்கு இவை எப்படி போதும்?'' என்றார். இயேசு "மக்களை அமரச் செய்யுங்கள்'' என்று சொல்லி அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். இவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அனைவரும் வயிறாரச் சாப்பிட்டனர். பின்னர் மீதியான உணவுகளைப் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினர். சாப்பிட்ட ஆண்களின் எண்ணிக்கை மட்டும் ஐயாயிரம் (யோவா 6:1-5). இந்த நிகழ்வில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் வயிறாரச் சாப்பிட காரணமானது, ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பகிர்ந்த சிறுவனே என்றால் அது மிகையாகாது. இந்தச் சிறுவன் தனதுஉணவைப் பகிர்ந்தான், இயேசு அதை அனைவருக்கும் கொடுத்தார். இந்தச் சிறுவன் பகிர்தல் என்னும் மாபெரும் நற்பண்பின் மாதிரியாகச் செயல்பட்டார்.

16-10-2013 அன்று வெளிவந்த தி இந்து நாளிதழில் வந்த செய்தி: நாகர்கோவில் டி.வி.டி மேல்நிலைப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்த பாரத் என்ற ஏழை மாணவனின் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிட்சைக்காக, அந்தப் பள்ளிக் குழந்தைகள் அனைவரும் சேர்ந்து 1,27,791/- ரூபாய் சேமித்துக் கொடுத்து உதவி செய்துள்ளனர். இப்பள்ளிக் குழந்தைகள் பகிர்தலுக்கும், உதவி செய்தலுக்கும் மாதிரியாகச் செயல்பட்டுள்ளனர்.

### *3. மாற்றத்தைச் சுமந்து வருபவர்கள்* :

நாமான் பெயருக்கு ஏற்ப "பழகுவதற்கு இனியவர்'', "அருளுடையவர்'' என்ற பண்புகளைக் கொண்டிருந்தாலும், அவர் தம் பதவிக்கு ஏற்ப, பெருஞ்செயல்களிலேயே நம்பிக்கை கொண்டிருந்தார். தம் பதவிக்குரியத் தோரணை, ஆடம்பரம், அரசரிடமிருந்து கடிதம் பெறுதல், பரிசுப் பொருள்களையும், அன்பளிப்புகளையும் எடுத்துச் செல்லுதல், நேரடியாக இஸ்ரயேல் அரசரைப் பார்த்துக் கடிதம் கொடுத்தல், தீர்க்கர் தம் தொழுநோய் பகுதிகளின் மீது கையை அசைத்து குணமாக்குவார் என எதிர்பார்த்தல், இஸ்ரயேலின் ஆறுகளைவிட தமஸ்குவின் ஆறுகள் பெரியவைகள் அல்லவா என்று எண்ணுதல் போன்றச் செயல்பாடுகள் அனைத்துமே இஸ்ரயேலின் கடவுளுக்கும், கடவுள் நம்பிக்கைக்கும் எதிரானவைகளாகவே அமைந்திருந்தன. ஆனால் யோர்தானில் மூழ்கி தொழுநோய் நீங்கி, அவரது உடல் சிறுபிள்ளையின் உடல் போல் மாறியதும் எலிசா இறைவாக்கினரிடம் வந்து "இஸ்ரயேலைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கடவுள் இல்லையென இப்போது உறுதியாக அறிந்து கொண்டேன்'' (2அர 5:15). எனச் சான்று பகர்ந்தார். நாமானின் இந்த மாற்றத்திற்குக் காரணம், அவரது வீட்டுப் பணியாளரான சிறு பெண் என்றால் அதுமிகையாகாது.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லையில் வரிசிஸ்தான் என்ற இடத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மலைகள் நடுவே அமைந்துள்ள “ஸ்வாட் பள்ளத்தாக்கில்” அமைந்துள்ள “மிங்கோரா” என்னும் இடத்தில் ஒரு தனியார் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்தும் ஜியாவுதின் யூசுப்சாய் என்பவரின் மகள் தான் மலாலா யூசுப்சாய். இவர் 1997 ஜூலை 12 அன்று பிறந்தார். ஆப்கானிஸ்தானைப் பிறப்பிடமாகக் கொண்ட தாலிபான்கள் பாகிஸ்தான் எல்லைக்கு இடம் பெயர்ந்த போது அங்கும் இவர்கள் ஷரியத் சட்டம் என்ற பெயரில் பெண் குழந்தைகளை வெறுத்து ஒதுக்கியதோடு பெண் கல்வியை மறுத்தனர். 400க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்களைக் குண்டு வைத்து அழித்து 50 ஆயிரத்துக்கும் மேலான பெண் குழந்தைகளின் கல்வியை நாசமாக்கினர். 2008இல் ஸ்வாட் பள்ளத்தாக்கில் குஷால் பள்ளியில் 6-ஆம் வகுப்பு படித்த மாணவி மலாலாவால் தாலிபான்களின் கட்டளையை ஏற்க முடியவில்லை. தாலிபான்களின் உத்தரவையும் மீறி மலாலா பள்ளிக் கூடம் சென்றார். பொது இடங்களில் தாலிபான்களின் உத்தரவை எதிர்த்து குரல் எழுப்பினார், பத்திரிக்கைகளில் செய்தி வெளியிட்டார். ஊர் ஊராகச் சென்று பெண் குழந்தைகளின் கல்விக்காகப் போராடினார். இதன்விளைவாக 2012 அக்டோபர் 9 அன்று மலாலாவைத் தாலிபான் தீவிரவாதிகள் சுட்டனர். உயிருக்குப் போராடிய மலாலாவை, இலண்டன் கொண்டு சென்று சிகிட்சை கொடுத்தனர். அவர் பிழைத்துக் கொண்டார். இதன் பயனாக, தற்போது பெண் குழந்தைகள் கல்வி அறிவைத் தடையின்றி அனுபவித்து வருகின்றனர். மலாலாவுக்கு நோபல் பரிசும் கொடுக்கப்பட்டது. இந்த மாபெரும் மாற்றத்திற்குக் காரணம் ஒரு பெண் குழந்தையே.

குழந்தைகள் மாற்றத்தைக் கொண்டு வருபவர்கள். இயேசு கிறிஸ்து இந்த மண்ணுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வந்தார். அதுமட்டுமல்ல, அவர் மாதிரி வாழ்வு வாழ்ந்தார். அவர் தம் பணியின் வழியாக, போதனை வழியாக மாபெரும் மாற்றங்களையும் கொண்டு வந்தார். நாமும் இயேசுவைப் போலவும், குழந்தைகளைப் போலவும் மகிழ்ச்சியை மற்றவர்களுக்குக் கொடுப்போராய், மாதிரி வாழ்வைக் காட்டுவோராய், மாபெரும் மாற்றங்களை நிகழ்த்துவோராய்ச் செயல்படுவோம்.

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

# முன்மாதிரியாய் விளங்கும் இளையோர்

| | |
|---|---|
| தானி 1:8-16 | 1திமொ 4:7-12 |
| திபா 119:9-16 | யோவா 13:1-15 |

**“நீ இளைஞனாயிருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு”** (1திமொ 4:12).

2009 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கேரளாவிலுள்ள திருச்சூரில் நடைபெற்ற நிகழ்வு இது. திருச்சூரில் கோபிநாத் என்ற நடுத்தர வயதுடைய ஒருவர் இருந்தார். அவருக்குச் சிறிய வயதில் இரண்டு குழந்தைகள் இருந்தனர். மிகவும் வறிய குடும்பம் வேறு. திடீரென ஒருநாள் அவருடைய இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து போயின. அதனால் மிகவும் ஆபத்தான சூழலுக்குத் தள்ளப்பட்டார். அவரிடம் மருத்துவ சிகிச்சை செய்து கொள்வதற்குப் போதிய பணம் இல்லை. அவருடைய உறவினர்களும் அவருக்குச் சிறுநீரகத்தைத் தர முடியாத நிலை. ஏனென்றால் அவர்களும் அதே நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட அருள்பணியாளர் டேவிஸ் சிரமெல், கோபிநாத் என்ற அந்த மனிதருக்குத் தன்னுடைய ஒரு சிறுநீரகத்தைத் தானமாகத் தர முன்வந்தார். 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் நடைபெற்ற இந்த அறுவைச் சிகிச்சையின் போது அருள்பணியாளர் டேவிஸ் சிரமெல் அவருடைய உடலிலிருந்து ஒரு சிறுநீரகம் எடுக்கப்பட்டு, அது கோபிநாத்தின் உடலில் பொருத்தப்பட்டது. விரைவில் இறந்து போய் விடுவார் என்று சொல்லப்பட்ட கோபிநாத், அருள்பணியாளர் டேவிஸ் சிரமெலின் சிறுநீரகம் பொருத்தப்பட்டு இன்றைக்கும் உயிரோடு வாழ்ந்து வருகிறார். இந்த நிகழ்ச்சிக்குப் பின் டேவிஸ் சிரமெல் என்ற அந்த அருள்பணியாளர் இவ்வாறு கூறினார், “நாம் இயேசுவின் போதனையைக் கேட்பதோடு நின்று விடுகின்றோம். இதனை வாழ்வாக்க முயலுவதில்லை. ஆனால் நான் ஆண்டவர் இயேசுவைப் போன்று என்னுடைய வாழ்வைப் பிறருக்குத் தர முன்வந்தேன். அதன் பொருட்டுத் தான் நான் என்னுடைய சிறுநீரகத்தில் ஒன்றைக் கோபிநாத்திற்குத் தந்தேன்.”

அருள்பணியாளர் டேவிஸ் சிரமெல் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக உள்ளார். அவரைப்போல நாமும் ஆண்டவர் இயேசுவின் போதனைகளைக் கேட்போராக மட்டுமல்ல, அதனை வாழ்வாக்கி முன்மாதிரியாய் விளங்க ஆண்டவர் நம்மை அழைக்கிறார். எவைகளில் முன்மாதிரியாய் விளங்க வேண்டும் எனத் திருமறைப் பகுதிகள் சார்ந்து தியானிப்போம்.

### *1. மாசற்ற வாழ்வில் முன்மாதிரியாய் விளங்க வேண்டும் :*

(தானி 1:8)

"அரசனது சிறப்புணவினாலும் அவன் பருகி வந்த திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார்......"

"தானியேல்" என்ற சொல்லுக்கு "ஆண்டவர் என் நியாயாதிபதி" என்பது பொருள். யோயாக்கீம் யூதாவில் அரசராக இருந்த போது பாபிலோன் அரசர் நெபுகத்னேசர் எருசலேமைக் கைப்பற்றினார். அப்போது அரசகுலத்தவரான தானியேலையும் அவர் நண்பர்கள் மூவரையும் பாபிலோனுக்குக் கைது செய்து கொண்டு சென்றனர். தானியேலும் அவர் நண்பர்களும் அழகுமிக்க, எல்லா ஞானத்திலும் தேர்ச்சி பெற்று அறிவிலும், உணர்விலும் கல்வியிலும் சிறப்பு பெற்றவர்களாயும், அரசரின் அரண்மனையில் பணியாற்றும் திறமை பெற்றவர்களாயும் இருந்தனர் (தானி 1:4). இதனை அறிந்த நெபுகத்னேசர் தானியேலுக்கும் அவர் நண்பர்களுக்கும் அரசர் உண்ணும் சிறப்புணவையும் திராட்சை இரசத்தையும் கொடுக்க ஒழுங்கு செய்தார். இதையறிந்த தானியேல் அரசரது சிறப்புணவும், திராட்சை இரசமும் தம்மைத் தீட்டுப்படுத்திவிடும் என்று எண்ணி சாதாரண மரக்கறிகளையும் தண்ணீரையுமே உணவாக உட்கொள்ள அனுமதி கேட்டார்.

இங்கே தானியேல் மாசற்ற வாழ்விற்கு முன் மாதிரியாக விளங்கியதை அறிய முடிகிறது. யாக்கோபுவுக்கு ராகேல் பெற்ற முதற் பிள்ளை தான் யோசேப்பு. யாக்கோபு தன் குமாரர் எல்லாரிலும் மேலாக இவரை நேசித்தார். இதனால் யோசேப்பின் மீது பொறாமை கொண்ட மற்ற சகோதரர்கள் யோசேப்பைப் பகைத்தனர்; இஸ்மயேலருக்கு விற்றனர். அவர்கள் யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோய் போத்திபார் என்பவரிடம் விற்றனர். அங்கே போத்திபாரின் மனைவி யோசேப்பிடம் "என்னோடு படு" என்றாள் (தொநூ 39:7). யோசேப்போ அதற்கு இணங்க மறுத்ததோடு, இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யமாட்டேன் (தொநூ 39:9) என்றார். மீண்டும் அவள்

யோசேப்பின் மேலாடையைப் பற்றி இழுத்து, 'என்னோடு படு' என்றாள். உடனே அவர் அவள் கையில் தம் மேலாடையை விட்டுவிட்டு வெளியே தப்பியோடினார். இங்கே யோசேப்பு மாசற்ற வாழ்விற்கு முன்மாதிரியாக விளங்கியதை அறிய முடிகிறது.

எனவே தான், இளம் அருள்பணியாளர் திமொத்தியைப் பார்த்து தூய பவுலார், "நீ இளைஞனாய் இருப்பதால்......முன்மாதிரியாய் விளங்க வேண்டும்" என்றார்.

இன்றைய உலகம் மாசு நிறைந்த உலகம். மாசு நிறைந்த உலகத்தில் வாழும் இளையோர் மாசற்ற வாழ்வில் முன்மாதிரியாய் விளங்க ஆண்டவர் அழைக்கிறார்.

## 2. *மன்றாட்டு வாழ்வில் முன்மாதிரியாய் விளங்க வேண்டும்* : (தானி 6:10)

"அவர் வீட்டு மேலறையில் பலகணிகள் எருசலேமை நோக்கித் திறந்திருந்தன. தமது வழக்கப்படி நாள்தோறும் மூன்று வேளையும் தம் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடி அவருக்கு நன்றி செலுத்துவார்"

தாரியு என்ற அரசரின் ஆட்சிக் காலத்தில், தன் நாடு முழுவதும் வரி வசூலிப்பதற்கென்று நூற்றிருபது தண்டல்காரர்களை நியமித்தார். இத்தண்டல்காரர்களைக் கண்காணிக்க மூன்று மேற்பார்வையாளர் களையும் தாரியு அரசர் ஏற்படுத்தினார். இவ்மூவரிடமும் தண்டல்காரர்கள் கணக்குக் கொடுக்க வேண்டும். இம்மூவருள் தானியேலும் ஒருவர். அவர் மற்ற மேற்பார்வையாளர்களை விட மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். காரணம் அவரிடம் வியத்தகு ஆவி இருந்தது. தன் அரசின் முழுப் பொறுப்பையும் தானியேலிடம் கொடுக்கலாம் என அரசர் எண்ணிக் கொண்டிருந்தார். இதையறிந்த மற்ற மேற்பார்வையாளர்களும் தண்டல்காரர்களும் தானியேல் மீது குற்றம் சாட்ட வகை தேடினர். ஆனால் தானியேல் மீது எந்தக் குற்றங்களையும் சாட்ட முடியாததால்,தானியேலுக்கு எதிராக சூழ்ச்சி செய்து, அரசரிடம் சென்று அரசே "தங்களிடமின்றி வேறெந்தத் தெய்வத்திடமோ மனிதரிடமோ யாதொரு விண்ணப்பமும் செய்கிற எந்த மனிதனும் சிங்கக் குகைக்குள் தள்ளப்படுவான் என்று நீர் சட்டம் இயற்ற வேண்டும்" என்றனர். அவ்வாறே தாரியு செய்தார். எனினும் தானியேல் எப்போதும் போல மன்றாடி வந்தார். அவரைச் சிங்கக் குகையில் தள்ளினர். சிங்கங்களோ தானியேலுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை.

இங்கே தானியேல் மன்றாட்டு வாழ்விற்கு முன்மாதிரியாய் விளங்கியதாக நம் திருமறை சான்று பகர்கின்றது.

தொய்ந்து போகாமல் மன்றாட வேண்டும் (லூக் 18:1-8)

தொடர்ந்து மன்றாட வேண்டும் (லூக் 11:5-8)

தாழ்மையுடன் மன்றாட வேண்டும் (லூக் 18:10-14

நம்பிக்கையுடன் மன்றாட வேண்டும் (மாற் 11:24)

பிறரை மன்னித்து மன்றாட வேண்டும் (மாற் 11:25)

ஒருமனதுடன் மன்றாட வேண்டும் (மத் 18:19)

உள்ளறைக்குச் சென்று மன்றாட வேண்டும் (மத் 6:6)

என்றெல்லாம் திருமறை நமக்குச் சொல்லியுள்ளது. இளையோர் மன்றாட்டு வாழ்வில் முன்மாதிரியாய் விளங்க வேண்டும்.

### 3. *மனத்தாழ்மை வாழ்வில் முன்மாதிரியாய் விளங்க வேண்டும்* : (யோவா 13:15)

“நான் செய்தது போல நீங்களும் செய்யும்படி நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்.”

யோவான் 13 ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து சீடர்களின் காலடிகளைக் கழுவுகிறார். அதைத் தொடர்ந்து அவர் சீடர்களிடம் சொல்லுகிறார், “நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்.” இந்த நிகழ்வின் வழி ஆண்டவர் நமக்குச் சொல்லும் மாபெரும் செய்தி, மனத்தாழ்மை என்னும் மாபெரும் செயலுக்கு முன்மாதிரியாய் விளங்க வேண்டும் என்பதாகும். எனவே தான் மீக்கா இறைவாக்கினர் சொல்லுகிறார் “......உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதைத் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார் (6:8).” தாழ்ச்சி என்பது வீழ்ச்சி அல்ல, அது மகிழ்ச்சியின் திறவுகோல்.

“தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்” என்பது தமிழ்ப் பழமொழி. “ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த்துங்கள். அவர் உங்களை உயர்த்துவார்” (யாக் 4:10).

கடந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்தக் கல்வியாளர்களில் ஒருவர், ஆப்பிரிக்கா நாட்டைச் சார்ந்த சம்மி மோரிஸ். சம்மி மோரிஸின் திறமையைப் பார்த்த அமெரிக்காவிலிருக்கும் டெய்லர் பல்கலைக்கழகம் அவரைத் தங்கள் பல்கலைக்கழகத்தில் வந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டது. சம்மி மோரிஸ், அவர்களின்

அழைப்பை ஏற்று அங்குச் சென்று ஆசிரியப் பணி செய்யப் புறப்பட்டார். அவர் பல்கலைகழகத்திற்கு உள்ளே சென்ற போது, அந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகி, சம்மி மோரிஸிடம் “நீங்கள் இங்குத் தங்குவதற்கு என்ன மாதிரியான அறை வேண்டும்?” என்று கேட்டார். அதற்கு அவரோ “யாருமே தங்க விரும்பாத ஒரு சாதாரண அறை போதும்” என்றார். இவ்வார்த்தையைக் கேட்ட அப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. உலகம் போற்றும் ஒரு கல்வியாளர், இப்படி எளிமையாகவும் தாழ்ச்சியானவராகவும் இருக்கிறாரே என்று சொல்லி, அவருக்கு மிகச் சிறந்த ஓர் அறையை ஏற்பாடு செய்ததோடு, இப்படிப்பட்ட ஒரு மனிதர் தான் நிர்வாகத்திற்குத் தேவை என்று சொல்லி பல்கலைக்கழகத்தின் மிகவும் முக்கியமான பொறுப்பில் அவரை அமர்த்தினார்.

விவேகானந்தர் ஒருமுறை இவ்வாறு குறிப்பிட்டார். “தன்னைவிட உயர்ந்தது எதுவுமில்லை என்று ஆணவம் ஆர்ப்பரிக்கும்; தனக்கென்று எதுவுமில்லை என்று அடக்கம் எளிமைகொள்ளும். ஆணவம் நெருப்பைப் போல் மேல் நோக்கி ஆகாயம் அளக்கும். அடக்கம் மலை அருவி போல் கீழ் நோக்கி நிலம் பார்க்கும். ஆணவம் நிமிர்ந்து நின்று அடிவாங்கும்; அடக்கம் தாழ்ந்து பணிந்து வெற்றி பெறும். ஆணவம் தன்னலப் பாழ்மண்டபம். அடக்கம் பொது நலத்தின் தேவாலயம். ” இளையோர் மனத்தாழ்மையின் முன்மாதிரியாய் விளங்க ஆண்டவர் அழைக்கிறார். நமக்கெல்லாம் முன்மாதிரியாய் விளங்குபவர் இயேசு. இயேசு ஓர் இளைஞர் என்று நிரூபிக்க ஆதாரங்கள் தேவையில்லை. முப்பத்திமூன்று வயதில் சிலுவைச் சாவை ஏற்று நமக்கெல்லாம் முன்மாதிரியை வெளிக்காட்டியுள்ளார். அவரைப் போல

-மாசற்ற வாழ்வில்
-மன்றாட்டு வாழ்வில்
-மனத்தாழ்மை வாழ்வில் முன்மாதிரிகளாய் விளங்கி இறையாசி பெறுவோம்.

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

# பெயிபா

உரோ 16:1-16

**"நம் சகோதரியாகிய பெயிபாவைக் குறித்து நற்சான்று அளிக்க விரும்புகிறேன்"** (உரோ 16:1).

இறைப்பணியில் ஆண்களைப் போன்று பெண்களும் சிறப்பான பணிவிடைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டாலும் சமூகமும் திருச்சபையும் பெண்களை அடையாளப்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறது. பெண்களை ஆணாதிக்கச் சமூகமானது இரண்டாம் நிலையில் வைத்துத்தான் பார்க்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பெண்களின் அருட்பணி ஓரளவு அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. பார்வோன் எகிப்தில் பிறந்த எபிரேய ஆண் குழந்தைகளைக் கொலை செய்த சூழலில், மோசேயின் தாய், மோசேயின் சகோதரி மிரியாம், பார்வோனின் குமாரத்தி, மருத்துவப் பெண்களாகிய சிப்ரா, பூவா எபிரெய ஆகியோர் ஆண் குழந்தைகளைக் காப்பாற்ற எடுக்கும் முயற்சி மிகச் சிறப்பானது. சிறப்புக்குரிய தீர்க்கதரிசியாகிய தெபோரா இஸ்ரயேலின் பாதைகள் பாழாகிப் போனதைக் கண்டதும், பாலாக்குடன் போர் முனைக்குச் சென்று பகைவர்களை அழித்து 40 ஆண்டுகள் இஸ்ரயேலரைச் சிறப்புடன் வழிநடத்தினார். இறைப்பணியில் இயேசுவோடு பெண்கள் ஈடுபட்டிருந்தனர் (லூக்கா 8:1-3). ஆஸ்திகளால் ஊழியம் செய்த பெண்களும் அடையாளப்படுத்தப் படுகின்றனர். உரோ 16-ஆம் அதிகாரம் 1-16 வரையுள்ள வசனங்களில் தூய பவுலார் கெங்கிரேயா சபையின் ஊழியக்காரராகிய பெயிபாவையும், மற்ற பெண்களின் பணிகளையும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

1. பிரிஸ்கா, 2. மரியா, 3. யூனியா, 4. திரிபேனா, 5. திரிபோசா, 6. பெர்சி, 7. யூலியா, 8, நேரேயுன் சகோதரி, ஒலிம்பா). இச்சிறப்பான நாளில் பெயிபாவைக் குறித்து நாம் சிந்திப்போம்.

## *1. பெயிபாவை அடையாளப்படுத்துகிறார்* :

கொரிந்து நகரிலிருந்து கிழக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள துறைமுகம் தான் கெங்கிரேயா. இது சரோனிக் அல்லது எகினா வளைகுடாவில் அமைந்துள்ளது. கெங்கிரேயா நகர் குறித்து தூசிடைடஸ்,

பலுசானியா, ஸ்திராபோ ஆகியோரின் நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. திப 16:1,2-இல் கூறியிருக்கிறபடி இங்கு ஒரு திருச்சபை இருந்திருக்கிறது. இத்திருச்சபையின் ஊழியக்காரியாக இருந்தவர் தான் பெயிபா. பெயிபா என்றால் பிரகாசம், ஜொலித்தல் (மின்னுதல்) என்று பொருள். ஆண் இறைப்பணியாளரைப் போன்று பெயிபாவும் இறைப்பணியில் தடங்கள் பதித்திருக்கிறார். பவுல் பெயிபாவை "ஊழியக்காரி" "சகோதரி" என்னும் சொற்களைப் பயன்படுத்தி அவரை அடையாளப்படுத்துகின்றார்.

பெயிபா "நடமாடும் நிருபம்." உரோமையருக்குப் பவுல் எழுதிய மடலில் இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல், இவற்றின் மூலம், வீழ்ந்து போன மனுக்குலம் விசுவாசத்தால் எப்படி மீட்பை அடைய முடியும்? என்பதைக் குறிப்பிடுகிறது. இந்நிருத்தைக் கால்நடையாக நடந்து ரோமாபுரிக்கு கொண்டு சேர்த்தவர் பெயிபா. ஆகவேதான் பெயிபாவை உயர்வாக ஊழியத்தில் அடையாளப்படுத்துகின்றனர்.

அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக் குழுவில் முதன்மை அருட்பணியாளராகப் பணியாற்றிய "Yoke Fellow" என்ற பட்டத்தைப் பெற்ற அருள்திரு. Dr. எலியாஸ் அவர்களின் துணைவியார் திருமதி. அன்னபாய் எலியாஸ் அவர்கள் போதகரோடு இணைந்து கல்வராயன் மலையில் ஆசிரியப் பணியையும், இறைப்பணியையும் மிகவும் சிறப்பாகச் செய்து வந்தார்கள். அவர்களின் அர்ப்பணமுள்ள இறைப்பணியை அங்கீகரித்து அடையாளப்படுத்தும்படி 1987-இல் முன்னாள் கன்னியாகுமரிப் பேராயர் Rt.Rev.G. கிறிஸ்துதாஸ் அவர்கள் அவருக்குக் "கிருபைபெற்றவள்" என்ற விருதை பேராயத்தின் சார்பில் வழங்கி அவர்களைக் கௌரவித்தார்.

### *2. பவுலார் பெயிபாவை அர்ப்பணிக்கின்றார்* :

திருச்சபைப் பணியில் பெயிபாவுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய இறைமக்களிடம் ஒப்படைக்கின்றார். பெயிபாவுக்குத் தேவையான பண உதவி, மனித உதவி, பிரயாணத் தேவைகள் எதுவாக இருந்தாலும் அதைச் செய்ய கெங்கிரேயா திருச்சபையாரிடம் தூய பவுல் கூறுகின்றார். அக்காலம் நீரோ மன்னன் இறைப்பணியாளர்களையும், இறைமக்களையும் கொடுமைப்படுத்திய காலம். துன்பத்தைக் கண்டு துவண்டுவிடாதபடி சபையின் வளர்ச்சிக்காய்ப் பாடுபட்டார். "பெண்கள் திருச்சபையின் முதுகெலும்பு" என்பதற்குச் சாட்சியாய் இறைப்பணி செய்தார். திருச்சபைக்கு வரும் ஊழியர்களை ஏற்றுக் கொண்டு விருந்தோம்பல் பணியைச் சிறப்பாகச் செய்தார் (திப 16:2b). ஆகவேதான் தூய பவுலார், "அவள் அனேகருக்கும் எனக்கும் ஆதரவாய் இருந்தாள்" என்று பெயிபாவைக் குறித்து சாட்சி கூறுகின்றார்.

திப 9:36-இல் யோப்பா பட்டணத்தில் தொற்கா என்னும் ஒரு சீடர் இருந்தார். அவர் கைவிடப்பட்ட கெம்பெண்களுக்கு அங்கிகளையும், வஸ்திரங்களையும் செய்து கொடுத்து இறைப்பணி செய்தார். அவர் மரித்தபோது அவர் உயிரோடு எழும்ப வேண்டுமென மக்கள் விரும்பினர். ஆகவே பேதுருவை அழைத்து அவருடைய நற்பணியைக் கூற, பேதுரு அவரை உயிரோடு எழுப்புகின்றார். ஆதித் திருச்சபையில் இறைப்பணியில் பெண்கள் நற்கிரியைகளைச் செய்து வந்தனர். திப 16:2-இல் எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்கு தேவைப்படுகிறதோஅதிலே அவளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவளை அவர்களிடம் ஒப்புக் கொடுத்தார். துன்பக் காலத்தில் இறைப்பணியாளர்களுக்குப் பாதுகாப்பு மிக மிகத் தேவை என்பதைத் தூய பவுலார் அறிந்திருந்தார். பெண்களாகிய நாம் ஆதரவற்ற பெண்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். இன்றைக்கு பல பேராயங்களில் பெண்கள் அருள்பொழிவு மறுக்கப்படுகிறது. ஆனால் தூய பவுலார் பெயிபாவை மனதார ஏற்றுக் கொள்ள அறிவுரை கூறுகின்றார்.

### *3. பெயிபாவின் ஊழியத்தை அங்கீகரிக்கின்றார்* :

(திப 16:1)

பெயிபாவின் பணிவிடையைச் சுட்டிக்காட்டி பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கும் கனத்தைக் கொடுக்கக் கூறுகின்றார். "பரிசுத்தவாட்டி" என்ற ஒரு அழகான அடைமொழியைக் கொடுக்கிறார். நீங்கள் தூயவராயிருங்கள்; ஏனெனில் நான் தூயவர் என மறைநூலில் எழுதப்பட்டிருக்கிறது (1பேது 1:16). இறைப்பணியில் தூய்மை என்ற ஆடையால் இறைப்பணியாளர்களும், இறைமக்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். பெயிபாவின் இறைப்பணியிலும், வாழ்விலும் தூய்மையைக் காண, தூய பவுலார் தூயோரை ஏற்றுக் கொள்வது போல ஏற்றுக் கொள்ள அறிவுரை கூறுகின்றார். நம்முடைய இறைப்பணியை ஆண்டவரும் நம்மைச் சார்ந்த உடன் பணியாளர்களும், இறைமக்களும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமெனில் தூய்மை மிக மிக முக்கியம்.

இன்று கடவுள் நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றார். பெயிபாவைப் போன்று அருட்பணிக்கு நம்மை அழைக்கிறார். அருட்பணியாளருக்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்களுடைய தேவையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஏழை எளிய மக்களை ஜெபத்தாலும், கொடையாலும் தாங்க வேண்டும்.

அருள்திருமதி. **சார்லட் சௌந்தரராஜன்**

# கடவுள் தேடும் மனிதர்

எசே 22:23-31 லூக் 15:1-7

**“... இந்த நாட்டு மக்களை அழிக்காதபடி தடுப்பவன் ஒருவனை அவர்களிடையே தேடினேன். ஆயினும் யாரும் கிட்டவில்லை”** (எசே 22:30).

மனிதரில் ஒருவரும் ஒருக்காலும் கண்டிராதவராக இருந்த அனைத்து ஆற்றலும் பொருந்திய கடவுள் மனிதராக மண்ணில் வந்ததே மனிதரைத் தேடுவதற்காகத்தான். அந்தவகையில் மனிதரை இன்றும் அவர் தேடிக் கொண்டிருக்கிறார் என்பதே எசேக்கியேல் இறைவாக்கினரின் குரலாக நாம் காணமுடிகிறது.

படைப்பாளராம் கடவுள் அன்று ஏதேனில் முதல் மனிதரைத் தேடி வந்தபோது அவர்கள் தோட்டத்தின் வாசலிலே (திறப்பிலே) நிற்காமல் தோட்டத்தின் மரங்களுக்குள்ளே ஓடி ஒளித்துக் கொண்டனர் (தொநூ 3:8). இன்றும் பலர் கடவுளைத் தேடாமலும், கடவுள் தேடும்போது முன்னில்லாமலும் தங்கள் அறைகளிலும், வீடுகளிலும், திரையரங்கிலும், அலுவலகங்களிலும், அதிகாரங்களிலும், ஆடம்பரங்களுக்குள்ளும் ஒளிந்து வாழ்கின்றனர். அதே நேரத்தில் கடவுளைக் காணவேண்டும் என்ற ஏக்கத்துடன் ஒரு கூட்டம் மக்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்வதும், பல பிராயச்சித்தங்களைச் செய்தால் கண்டுவிடலாம் என்றும் அலைமோதி நிற்கிறது. இப்படிப்பட்ட சூழலில் மீண்டும் நமது செவிகளைக் கூர்மையாக்கிக் கவனித்துக் கேட்டால் எசேக்கியேலிடம் தம் மனக் குமுறலை வெளிப்படுத்திய கடவுளின் சத்தம் நமது காதுகளிலும் தொனிக்கும்.

கடவுளின் பெருமூச்சுடன் கூடிய இந்தக் குரல் நமக்குத் தரும் அழைப்பு என்ன என்பதை நாம் யாவரும் சிந்தனை செய்து நம்மை அவருக்குத் தருவதே ஏற்புடையதாக இருக்கும்.

## கடவுள் ஏன் ஒரு மனிதரைத் தேடுகிறார்?

உலக வரலாற்றில் வாழ்ந்த சிலர், இந்த உலகை வலிமைமிக்கதாக மாற்றிட எனக்கு சில ஆயுதங்கள் தேவை என்றனர். வேறு சிலர், சில ஆயிரங்கள் தேவை என்றனர். ஒருவர், என் எண்ணத்திற்கு ஏற்றார்போல் செயல்படும் நூறு இளைஞர்கள் தேவை என்றார். ஆனால் ஆண்டவரோ ஒரு மனிதரைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

ஒரு நாள் காலையில் தன் வீட்டிற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் சில முட்களைப் போட்டு விட்டு அருகிலிருந்த பாறையில் அமர்ந்து கொண்ட முல்லாவிடம், அவ்வழியிலே வந்த அவரது நண்பர், என்ன முல்லா, எதையோ ஆழ்ந்து சிந்திப்பது போல இருக்கிறீர்? என்று கேட்டதற்கு "நான் ஒரு மனிதரைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தார் முல்லா. வெளியே சென்று திரும்பி ஊருக்குள் வந்த முல்லாவின் நண்பர், என்ன முல்லா, மதியம் வரை ஆகிவிட்டது இன்னுமா நீர் தேடும் மனிதர் வரவில்லை? என்று வினவினார். புன்முறுவலோடு ஆமாம் என்றார் முல்லா. இன்னும் சில மணி நேரமாகியது. பல மக்கள் அந்தப் பாதை வழியாக நடந்து சென்றாலும் யாரும் அந்த முள்ளை அகற்றாமல் சென்றது அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் முல்லா ஒரு மனிதருக்காகக் காத்திருக்கும் செய்தியைக் கேள்விப்பட்ட அந்நாட்டின் அரசர் பாதுஷா அவர்கள், முல்லா இருந்த இடத்திற்கு வந்து முல்லாவிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே அருகில் வருகிறார். முல்லா நீங்கள் தேடும் மனிதர் எந்த ஊரைச் சார்ந்தவர்? நம் நாட்டவரா? அல்லது அயல் நாட்டவரா? எங்கிருந்து வருபவர்? எப்போது வருவேன் என்று நேரத்தை துல்லியமாகச் சொல்லவில்லையா? என்ற கேள்விகளோடு முல்லாவின் அருகில் வந்தார். பாதுஷா அவர்கள் அந்தப் பாதையில் கிடந்த முட்களை எடுத்து ஓரத்தில் போட்டார். அடுத்த கணமே துள்ளிக் குதித்த முல்லா, நான் தேடிக் காத்திருந்த மனிதரைக் கண்டுபிடித்து விட்டேன் என்று சத்தமிட்டார். யார் அவர்? என எல்லோரும் சிந்திக்கையில், பாறையிலிருந்து இறங்கி வந்த முல்லா, அரசரிடம், பாதுஷா அவர்களே, இந்த முட்களை இந்தப் பாதையில் வைத்தவன் நான்தான். காலை முதல் இதுவரை நூற்றுக்கணக்கானோர் இந்தப் பாதையைக் கடந்து சென்றுவிட்டனர். ஆனால் ஒருவரும் இதை அகற்ற முயலவில்லை. நீர் இதை எடுக்க வேண்டியது கூட இல்லை. உம் வீரர்களுக்குப் பணித்திருந்தால் அவர்களே அதைச் செய்திருப்பர். ஆனால் நீர் அப்படிச் செய்யாமல், நீரே குனிந்து மிகப் பொறுமையாக இதைச் செய்தீர். நான் தேடின மனிதர் நீர் தான் என்றார்.

கடவுளும் ஒரு மனிதரைத் தான் தேடுகிறார். அவர் ஏன் நானாக இருக்கக் கூடாது? எனும் உள்ளுணர்வோடு கடவுள் எத்தகையை மனிதரைத் தேடுகிறார் என்று தொடர்ந்து சிந்திப்போம்.

### *1. திறப்பிலே நிற்கிற ஒரு மனிதரைத் தேடும் கடவுள்* :

(எசே 22:30)

கி.மு. 597-இல் பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்த மக்களுக்கு நடுவில்தான் எசேக்கியேலின் திருப்பணி ஆரம்பமாகியது. கடவுளுக்கு எதிராக மக்கள் செய்த துரோகத்தினால் அடிமையாக்கப்பட்ட நிலையிலும்

மக்கள் உணர்வடையாது தீமையை மிகுதியாகச் செய்த நேரத்தில் தான் கடவுள் எசேக்கியேல் வழி இந்த மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறார்.

ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் உலகில் பாவம் வந்தது. அப்படியே ஒரு மனிதனின் (இயேசு கிறிஸ்துவின்) கீழ்ப்படிதலால் உலகின் பாவம் மன்னிக்கப்பட்டது. ஆகையால் கடவுள் ஒரு மனிதரைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

இன்றைய உலகில் ஏற்படும் அனைத்துப் பேரழிவுகளுக்கும் காரணம் மனிதரின் மித மிஞ்சிய போங்கும், தன்னலமுமேயாகும். இதன் விளைவாக உலகம் சந்திக்கும் அழிவைத் தடுக்க திறப்பிலே நிற்கிற ஒரு மனிதர்தான் ஆண்டவருக்குத் தேவை. நாம் வாழும் இந்த நாட்டில் நித்தமும் நம் கண்முன்னே ஆயிரக்கணக்கான மக்கள் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களைக்குறித்த ஆத்துமப் பாரத்துடன் திறப்பில் நின்று மன்றாடுவோரே திருச்சபையின் இன்றைய அவசரத் தேவை. தொநூ 18:20-32 வரையுள்ள பகுதியில் தன்னை விட்டுப் பிரிந்து சென்றவர் வாழும் பகுதி, கடவுளின் சினத்தால் அழிக்கப்படப் போகிற செய்தியைக் கேள்விப்பட்டதும் அத்தேசம் அழிக்கப்படக்கூடாதபடி திறப்பிலே நிற்கிறார் பற்றுறுதியாளர்களின் தந்தையாம் ஆபிரகாம். “தீயவனோடு நீதிமானையும் அழிப்பது ஏற்றதன்று; நீதிமானையும் தீயவனையும் சமமாக நடத்துவது உமக்கு உகந்ததன்று. அனைத்துலகிற்கும் நீதி வழங்குபவர் நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டாமோ” என்று தொடர்ந்து ஆறு முறை மன்றாடிக் கெஞ்சினதைக் காணமுடிகிறது. அது போன்றே கடவுளின் கருணையால் எகிப்தினின்று விடுதலை பெற்று வந்த இஸ்ரயேல் கடவுளின் சினத்திற்குள்ளான போது “இப்போது என்னை விட்டு விடு. அவர்கள் மேல் என் கோபக்கனல் மூண்டிருப்பதால் நான் அவர்களை அழித்தொழிக்கப் போகிறேன். உன்னையோ பேரினமாக்குவேன்” (விப 32:10) என்று ஆண்டவர் மோசேயோடு சொன்னபோது, தனக்கு நல்ல வாழ்வும் வசதியும் அமைதியும் கிடைக்கப் போகிறது என்று எண்ணாமல், அந்த மக்களை அழிக்காதபடி திறப்பிலே நின்று மோசே கெஞ்சி மன்றாடுவதை விப 32:12,13 தெளிவுபடுத்துகிறது.

இந்நாட்களில் திருச்சபையின் இறைமக்களாய், ஆண்கள் சங்க அங்கங்களாய்த் திறப்பிலே நிற்க வேண்டிய நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். நம்மைத் திறனாய்வு செய்வோம். நாம் தூங்கி விட்டால் எதிரி களையை விதைத்து விளைநிலமான நமது நாட்டின் ஆத்தும அறுவடையைச் சேதப்படுத்தி விடுவான். மிகவும் கருத்துடன் திறப்பிலே நிற்போம்.

## *2. சுவரை அடைக்கிற ஒரு மனிதரைத் தேடும் கடவுள்* :

(எசே 22:30)

நாடு அழியாதபடி திறப்பிலே நிற்கிற மனிதரை மட்டும் தேடுவதோடு நிறுத்தியிருந்தால் ஆத்தும ஆதாயப்பணி மிக எளிதாக இருந்திருக்கும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சிலுவையில் அடிக்கப்பட்டிருக்கமாட்டார். அவர் ஒரு படி மேலே சென்று சுவரை அடைக்கத்தகுந்த ஒரு மனிதரையும் தேடுவதால் நம் ஒவ்வொருவருக்கும் கூடுதல் பணிப் பொறுப்பு இருக்கிறது. அது என்னவெனில் மற்றவர்களின் பாரத்திற்காக, பாவத்திற்காக வருந்துவோராக நிற்பதல்லாமல் பங்கேற்பவராக நாம் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கிறார்.

சுவரை அடைத்தல் என்பது சாதாரணமான சாந்து, செங்கல் இவைகளைக் கொண்டு அடைப்பதல்ல. பதிலாளாதல், பிணைப்படுதல், நம்முடன் ஏற்றல் என்று பொருளாகும். இந்தத் திருப்பணிக்கு நம் மீட்பரே நமக்கு முன்மாதிரியாகக் காணப்படுகிறார். கலாத்தியர் திருமுக ஆக்கியோனின் கூற்றுப்படி, “இவரே நம் தந்தையாம் கடவுளின் திருவுளத்திற்கேற்ப இன்றைய பொல்லாத காலத்தினின்று நம்மை விடுவிக்குமாறு நம்முடைய பாவங்களின் பொருட்டுத் தம்மையே ஒப்புவித்தார்” (கலா 1:4). “மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்” என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார் (கலா 3:13).

திருப்பாடகரும் அரசருமான தாவீது ஒரு சூழலில் இழைத்த தவற்றினால் நாட்டு மக்களைக் கடவுள் வாதித்தார். அந்நேரத்தில் தன் நலனைக் கருத்தில் கொள்ளாமல், அரசர் தாவீது “பாவம் செய்தவன் நானல்லவோ? தீச்செயல் புரிந்தவன் நானல்லவோ?.... இப்போது உம் கை என்னையும் தந்தையின் வீட்டாரையும் வதைப்பதாக” என்று சுவரை அடைக்கிறவராக இருந்தார். அப்போது தூதர் பட்டயம் ஓங்கியதை நிறுத்தினதாக 2சாமு. 24ஆம் அத்தியாயம் தெளிவுபடுத்துகிறது.

திருமறையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல இறைவாக்கினர் அவர்களது நாட்களில் நாடு அழியாதபடிக்கு மக்களின் அக்கிரமங்களுக்காய்ச் சுவரை அடைக்கிறவர்களாகவே, அதாவது தாங்கள் துன்பம் அனுபவிப்பவர்களாகவே இருந்ததைத் திருமறை சான்று பகர்கிறது (எரே 14:7, நெகே 1:6).

“ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஓர் அருட்பணியாளர். ஒவ்வொரு கிறிஸ்தவரல்லாதவரும் அருட்பணிக்களம் ” (Every Christian is missionary, Every non- Christian is mission field) என்ற கூற்றின் உண்மைப் பொருளை

உணரும் எவரும் சும்மாயிருக்கமாட்டார்கள். இன்று நமது நிலை என்ன? சிந்திப்போம்.

சிறுவன் ஒருவன் தன் பாட்டி வீட்டிற்குச் செல்லும் வழியில் இருந்த அணைக்கட்டு ஒன்றிலிருந்து சிறிய துவாரம் வழியாக நீர் கசிந்து வருவதைக் கண்டான். அது ஒரு மாலை வேளை. ஊருக்குள் சென்று எவரையாவது அழைத்து வந்து சரி செய்வதற்கான சூழலும் சிறுவனுக்குத் தெரியவில்லை. நமக்கென்ன என்று நிர்விசாரமாக செல்லும் எண்ணமும் வராததால் தன்னுடைய வலது கையின் நடு விரலை அந்த அணையிலிருந்து நீர்க்கசிவு ஏற்பட்ட துவாரத்தில் வைத்தான். நீர்க்கசிவு நின்றது, கையை எடுத்தான். மீண்டும் தண்ணீர் வந்தது. இப்படியே விட்டால் அணைக்கு ஆபத்து, கிராமத்திற்கும் அழிவு என்று எண்ணி அந்த இரவு முழுவதும் அப்படியே கையைத் துவாரத்தில் வைத்துக் கொண்டே நின்றான். இரவில் கடுங்குளிர் சிறுவனை வாட்டியது. ஆனாலும் தன் நலனை எண்ணாது துவாரத்தினுள் கை வைத்தபடியே நின்று காலையில் இரத்தம் உறைந்துபோய் அந்தச் சுவரில் சாய்ந்து நின்றபடியே மரித்துப் போனான். காலையில் அவ்வழி வந்த மக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டனர். சிறுவனின் தியாகச் செயலால் கிராமம் பேரழிவுக்குத் தப்பியது. அணைக்கட்டும் உடைவது தடுக்கப்பட்டது.

திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவும் அழைப்புப் பெற்ற, இறைமக்களாகிய நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? இருள் சூழும் காலம் வருமுன்னே நொறுங்குண்ட மனத்தினராய் திறப்பிலே நிற்போம். சுவரை அடைக்கிறவர்களாகச் செயல்பட நம்மையே ஒப்படைப்போமாக.

அருள்திரு. P. **ஜேக்கப் பீற்றர்**

# ஒன்றித்த இறைவேண்டல்

திப 2:42-47

**"அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது"** (திப 2:42).

ஒன்றித்த இறைவேண்டலின் ஆழங்களைப் புரிந்து கொள்ள இறை மக்களின் இறைவேண்டலுக்கான பங்களிப்பையும் இறைவேண்டலின் இயல்புநிலையையும் உணர்தல் அவசியம். யூதர் இறைவேண்டலின் முதல் நிலையில் கடவுளின் மகத்துவங்களை, இரக்கத்தை, செயல்களை பாடல் வழியே போற்றி வந்தார்கள். "கடவுள் தூயவர்" என்ற தொனியும், தொடர் நிலையில், மானுடரின் தேவைகளை விண்ணப்பமாகவும், நீதிக்கான அழுகையாகவும், மன்னிப்புக்கான மன்றாட்டாகவும், துன்புறும் மக்களுக்கான வேண்டுதலாகவும், நிறைவாக, இன்ப துன்பத்தில் உதவிய கடவுளுக்கு நன்றி மன்றாட்டுகளைளயும் ஏறெடுத்தனர். இவ்வகையில் திருப்பாடல் 51, ஒரு மன்னிப்பின் இறைவேண்டலாய் உள்ளது. மேலும் திருமறையில் திருப்பாடல்கள் நூல் இஸ்ரயேலின் இறைவேண்டல் தொகுப்பாக அமையப் பெற்றுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் இறைவேண்டல்கள், அவர் தந்தையாம் கடவுளை முன்னிறுத்தி நம்பிக்கைக்குரிய இறைமகனாய்ச் செயல்பட்டார் எனவும், தந்தையாம் கடவுள் மைந்தராம் இயேசு கிறிஸ்துவில் ஒன்றித்து மாட்சி கண்டார் எனவும் அறிவிக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு நிகழ்வும் (மத் 1:9-11). தோற்றமாறுதல் நிகழ்வும் இதற்குச் சான்றுகள். இறைவேண்டல் குறிப்புகளில் 'abba' (தந்தை) என்ற அரமேயச் சொல் மாற்கு நூல் ஆசிரியரால் சிறப்பாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற் 14:36). இறைவேண்டலில் இணைந்திருந்த தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் தூய ஆவியின் அருட்கொடையைப் பெறும் வேளையில் 'abba' என்ற அதே சொல்லைப் பயன்படுத்த உந்தப்பட்டனர். இறைவேண்டலில் ஒன்றித்து இணைந்திருக்க ஒன்றித்த இதயம், சிந்தை, உள்ளம், ஆவி தேவை.

***1. ஒன்றித்த இதயம்*** : (திப 2:42)

"இறைவேண்டலில் ஒன்றித்த இதயத்தின் வெளிப்பாடு நட்புறவில் நிலைத்திருத்தல்" என்பதாகும். இதயம் ஒன்றித்த நட்புறவு நண்பர்களிடையே மட்டும் ஏற்படும் உறவு அன்று; மாறாக அது பெற்றோரில் வெளிப்படும் அன்பின் அடையாளம். இது இறைவேண்டலுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. அன்பான தாயின் இறைவேண்டல் தன் மைந்தன் எத்தகைய குற்றம் இழைத்தாலும் அவை அனைத்தையும் விட்டு, மீட்புக்கு நேரே அந்த மைந்தனை இட்டுச் செல்லும் பலம் உடையது.

இயேசுவின் தாயாகிய மரியா சிமியோனின் உரையைக் கேட்டார், "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:35). இது எத்தகைய சொல் எனத் தனது இதயத்தில் வியப்புற்று இறைவேண்டல் செய்தார். சிலுவைப் பாடுகள் ஏற்கும் இயேசு கிறிஸ்துவின் துன்புறும் காட்சி காணும் வேளையிலும் (யோவா 19:25), மரியாவின் இதயத்தின் வேண்டுதல் தொடர்ந்தது. இயேசு கிறிஸ்துவும் மரியாவின் இதயத்தின் வேண்டுதல் அறிந்து "அம்மா" (யோவா 19:26) என்ற அன்பின் சொல்லால் மரியாவை ஆற்றுகிறார், ஆதரவு தருகிறார்.

***2. ஒன்றித்த சிந்தை*** : (திப 2:42)

"ஒன்றித்த சிந்தையின் வெளிப்பாடு திருத்தூதுவர் கற்பித்தவற்றில் நிலைத்திருத்தல்" என்பதாகும். கற்றல் என்பது அனைத்து வயதினருக்கும் ஏற்புடையது. ஆயினும் கற்றவற்றை மனனம் செய்தலில் வேறுபாடு உண்டு. இயேசு கிறிஸ்துவை அவருடைய சீடர்கள் நல் ஆசிரியராய்க் கண்டனர். இயேசுவின் சொற்பொழிவைக் கேட்கக் கூடிய மக்கள் மத்தியில் சிறுவர், பெரியவர் என அனைத்து வயதினரும் வந்தனர். இங்கு இயேசுவில் கற்றவற்றை திருத்தூதுவர்கள் பேதுருவும், பவுலும் அறிவித்து ஒன்றித்த சிந்தையுடன் நிலைத்திருங்கள் என ஆலோசனை தருகின்றனர்.

பவுல் அடிகள் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் ஒருவருக்கொருவர் அமைதி காத்து ஒன்றித்த சிந்தையுடன் "தங்கள் உள்ளத்தில் கடவுளோடு பேசட்டும்" (1கொரி 15:28) என இறைவேண்டல் குறித்து புதிய ஆலோசனை தருகிறார்.

***3. ஒன்றித்த உள்ளம்*** : (திப. 2:42)

"ஒன்றித்த உள்ளத்தின் வெளிப்பாடு இறைவேண்டலில் உறுதியாய்த் தரித்திருத்தல்" என்பதாகும். "உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்" (மத் 18:20). ஒன்றித்த உள்ளம், மனம் உடையோராய் இறைவேண்டல் புரியும் மக்கள்

மத்தியில் இருக்கிறேன் என நம் ஆண்டவர் அறிவித்தார். திருப்பாடலாசிரியர் தமது இறைவேண்டலில் "... என் தலைவராகிய ஆண்டவரே! என் கண்கள் உம்மை நோக்கியே இருக்கின்றன" (திபா 141:8) என்கிறார். இங்கு உள்ளம் ஒன்றித்த இறைவேண்டல் என்பது குழுக்களாய் இணைவது மட்டுமல்ல, மனித மனம் இறைவேண்டலில் ஒன்றிணையும் போது மனிதரது உயிர் அழிவினின்று காக்கப்படும் என்ற சிந்தை வலுப்பெறுகிறது.

***4. ஒன்றித்த ஆவி*** : (திப 2:42)

ஒன்றித்த ஆவியின் வெளிப்பாடு "அப்பம் பிடுதலில்" வெளிப்பட்டது. தொடக்கக் கால கிறிஸ்தவர்கள் கூடும் கூடுகையில் 'அப்பம் பிடுதல்' மையமான செயலாய் இருந்தது. இங்கு இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலை நினைவுகூர்ந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டுப் பகிர்ந்தனர் (திப 2:46). இயேசு கிறிஸ்து தம் சீடருக்குத் திபேரியா கடல் அருகே தந்த திருக்காட்சியில், "உணவருந்த வாருங்கள்" என்று அழைக்க, சீடரும் "நீர் யார்?" எனக் கேட்கத் துணியாமல் அருகே வந்து அப்பத்தையும், மீனையும் இயேசுவிடம் பெற்றுக் கொண்டனர் (யோவா 21:12-13). மத்தேயு நற்செய்தி நூலில் இயேசு தம் சீடருக்குக் கட்டளை கொடுக்கும் போது "...நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத் 28:19) என உரைக்கிறார்.

நாமும் ஒன்றித்த இதயம், சிந்தை, உள்ளம், ஆவி உடையோராய் இறைவேண்டலில் இணைந்திடுவோம்.

அருள்திரு. **ஜோசப் C.G. ஸெனித்**

# தூய்மையாக்கும் வார்த்தை

இச 30:11-20 யோவா 15:1-11

**"நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்."** (யோவா 15:3)

அமெரிக்கா நாணயங்கள் அனைத்திலும் "In God we Trust" நாங்கள் கடவுளில் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்னும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருக்கும். 1866ஆம் ஆண்டு வெளிவந்த நாணயங்கள் இரண்டில் மட்டும் இந்த வார்தைகள் இடம் பெறாமல் தவறுதலாக வெளிவந்து விட்டது. இந்த இரு ஆபூர்வ நாணயங்களும் 18000 டாலருக்கு மக்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்டன. ஏனெனில் நம்பிக்கையுள்ள வார்த்தைகள் இல்லாத நாணயம் அவமானத்தைத் தரும் எனக் கருதப்பட்டது. இந்த நாணயங்களை அரசு பெற்று மாற்றுருவாக்கம் செய்தது. மாற்றுருவாக்கம் செய்யப்பட்ட நாணயங்கள் மதிப்பைப் பெற்றன. அதுபோல மாற்றுருவாக்கம் ஒவ்வொருவருக்கும் அவசியம். மாற்றுருவாக்கத்திற்கு அர்ப்பணிக்கும் அனைவரும் அதன் மதிப்பைப் பெறுவர். மாற்றுருவாக்கத்துக்கு உதவும் காரணிகளைத் திருமறையின் வழியாகத் தியானித்து அறிவோம்.

## *1. வார்த்தைகளால் மாற்றுருவாக்கம்* :

இறைவார்த்தை ஆயுதங்களை விட ஆற்றல் நிறைந்தவை. எந்த மனிதனையும் முழு மனிதனாக மாற்றும் திறன் அவற்றுக்கு உண்டு.

இஸ்ரயேல் முன் காலத்தில் மெய்யான திராட்சையாய் இருந்தது. அது கெட்டுப் போனது (எரே 2:2). இயேசுகிறிஸ்து மெய்யான திராட்சையானார். இந்த மெய்யான திராட்சையில் நாம் அங்கங்களாகும் போது நிலைவாழ்வு பெறலாம் எனப் போதித்தார். மைந்தனாகிய இயேசுவின் வழி செயல்படும் தந்தை திராட்சையின் உரிமையாளர். எப்படி செடியைச் சுத்தப்படுத்தி கிளை கழித்து அதிக பலன் தரச்செய்கிறாரோ, அதுபோல வார்த்தையாகிய கிறிஸ்து தமது வார்த்தையால் மனிதரைச் சுத்தப்படுத்துகிறார். கனி இல்லாத செயல்களை அகற்றுகிறார். சுத்தமாக்கப்படுகிறவர்கள் மாற்றுருவாக்கம் பெறுகின்றனர். இயேசு நாதர் தமது சீடர்களுக்கு வார்த்தைகளால் போதித்தார். கிறிஸ்துவின் போதனைகளால் அவர்கள் தூய்மையாக்கப்பட்டனர். வார்த்தைகளின் பிறப்பிடம் உதடுகள். எசாயா தமது வாழ்வை ஆராய்ந்து, ஐயோ நான்

அசுத்த உதடுள்ள மனிதன் என மாற்றுருவாக்கத்துக்கு முறையிட்ட போது மாற்றுருவாக்கம் பெற்றார். இறைவார்த்தையாகிய திருமறை அழகிய வாழ்வருளும். நூலகம் அதில் நிறைந்துள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றும் நமை அனுதினமும் பண்படுத்தி, மாற்றுருவாக்கப் பாதையில் நடத்துகின்றது. திருமறையாகிய நூலகத்தின் வார்த்தைகள் நம்மைப் புதுப்பிக்க அனுதினமும் வாசிப்போம், சுவாசிப்போம்.

## *2. வாழ்வின் நெறிகளால் மாற்றுருவாக்கம்* :

ஒருமுறை திருச்சட்டத்தைப் பின்பற்றும் வாலிபன் ஒருவன் இயேசுவிடம் வந்தான். “நிலை வாழ்வைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்?” எனக் கேட்டான். இயேசு அவனிடம் பிரதான சட்டம் எது? என கேட்டார். அவனோ, கடவுளிடம் அன்பு கூருவது என்றான். இயேசு அவனிடம் நீ இறையரசுக்குத் தூரமானவன் அல்ல என்றார்.

வாசிப்பே மனிதனின் வாழ்வை நெறிப்படுத்துகிறது. மோசேயின் திருச்சட்டங்கள் மனித, வாழ்வுக்கு வழி காட்டி, கிறிஸ்துவாகிய ஒளியைக் காட்டுகின்றது. இவ்வாலிபன் மோசேயின் திருச்சட்டங்களைக் கற்றுத் தேர்ந்தவன், வாசித்துப் புரிந்து கொண்டவன். ஆனால் மேசியாவாகிய கிறிஸ்துவை அடையாளம் கண்டு அவரைப் பின்பற்ற முடியவில்லை. வாசித்தல் நம் அறிவுப் பெருக்கத்துக்கு மாத்திரமல்ல, நம் இதயத்துக்கும் வாழ்வுக்கும் பொருத்தப்பாட்டை ஏற்படுத்துவதாய் இருக்க வேண்டும்.

யோபு கடவுளின் நெறிகளை, ஆணைகளை, வாய்மொழிகளைவிட்டு நான் விலகவில்லை. அரும் பொருளைவிட அதிகமாகப் போற்றினேன் என்கிறார். அரும் பொருளாகக் கடவுளை போற்றுவோர் கடவுளின் ஆசியைப் பெறுவர் இயேசு நாதர், நாம் பேறு பெற்றவர்களின் வரிசையில் இருக்க வேண்டும் என விரும்புகிறார். இதற்கு அவரது வார்த்தைகளைக் கேட்பதும் படிப்பதும் மட்டும் போதாது. ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளும் வேண்டும். அதற்காக ஆண்டவர் வகுத்த நெறிமுறைகளை நாம் மத் 5:1-11 வரை காண்கிறோம். தேசப் பிதா மகாத்மா காந்தி, பல பெரியோர்களை மாற்றியது மலைப்பொழிவு என்பது வரலாற்று உண்மை. மலைப்பொழிவின் தகவுகளை நாம் நமதாக்கிக்கொள்ள வேண்டும் என்கிறார். அனுபவமே செயலாக்கம் தரும். கிறிஸ்து தந்தையிடம் தாம் பார்த்தவை, கேட்டவை, அனுபவித்தவை இவைகளையே நமக்கு வார்த்தைகளாக்கி நெறிகளாக்கித் தந்துள்ளார். இவைகளை கவனத்தோடு பின்பற்றுவதஙறகு நம்மை அர்ப்பணிப்போம். வாழ்வு வளம் பெறும், வளங்கள் கனிகளாக மாறும். கனிகள் சான்றுகளாகும்.

இறைவா, எங்கள் வாழ்வில் கனிமலர அருள்தாரும். அவைகளால் பிறர் மனம் மகிழ அருள்புரியும், ஆமேன்.

திரு. **ஞா. பெர்லிங்டன்**

# நினைந்து, நிலைத்து வாழுங்கள்

திபா 132:13-18

**"ஆண்டவர் சீயோனைத் தேர்ந்தெடுத்தார்; அதையே தம் உறைவிடமாக்க விரும்பினார்"** (திபா 132:13)

திருச்சபை என்பது கற்களாலும், கைவினைகளாலும் உருவான வெறுமையான கட்டிடம் அல்ல; மாறாக, கடவுளால் அழைக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட மக்களாலான கூட்டமைப்பு. இத்தகைய சிறப்பு மிக்க திருச்சபையின் நாளை ஆண்டவருக்கு நன்றி கூறும் நன்னாளாகக் கொண்டாடுகிறோம்.

திருச்சபைகள் நூறு, இருநூறு ஆண்டுகள் வரலாற்று சிறப்புடையது என்பதற்காக ஆண்டுகளின் எண்ணிக்கையினால் மாத்திரமே சிறந்த இடத்தை அடைந்துவிட முடியாது. மாறாக, திருச்சபையின் செயல்பாடுகள் மற்றும் நல் எண்ணங்களின் பிரதிபலிப்புகளும், அதனால் ஏற்படும் வளர்ச்சியும், சமுதாயத் தாக்கங்களுமே திருச்சபையின் சிறப்புகளைத் தீர்மானிக்கின்றன. Charles. R. Swindoll என்கிற இறையியலாளர் சொல்லும்போது, "Church is not a ferry boat to take effortless passengers to the shores of heaven. But church is a lifeboat for the rescue of shipwrecked and perishing souls" என்கிறார். எனவே வழக்கமான பாரம்பரிய சபை நாள் கொண்டாட்டங்களோடு மட்டும் நின்று விடாமல், நம் கொண்டாட்டத்தை அர்த்தமுள்ளதாக்க திருமறை கற்றுத் தரும் பாடங்களையும், அழைப்பையும் சிந்திப்போம்.

## *1. கடந்த காலத்தை நினைத்துப் பார்ப்பதற்கு* :

பலவித ஆயத்தங்களோடும், மகிழ்ச்சியோடும் ஆலயத்தில் இணைந்திருக்கும் இந்நாளில், ஆலயம் என்பது கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டு, அவரை வழிபடத் தரப்பட்டுள்ள தூய இடம் என்கிற அடிப்படை புரிதல் மிக அவசியமானது. இந்த இடம் கடவுளால் நம் முன்னோர்களுக்கு வாக்குத்தத்தத்தின் இடமாக அருளப்பட்டு, அவர்களின் கடின உழைப்பு, உதாரத்துவமான காணிக்கைகள், இறைப் பக்தி, இறை பயம் உறுதியான ஜெபம், விடாமுயற்சி போன்றவற்றால் பல தடைகளையும், சவால்களையும், இன்னல்களையும் தாண்டி தலைமுறைகளின் ஆசிக்கென்று தரப்பட்டுள்ள இடம் என்பதை நினைத்து

கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டிய நாள் இது. இதைத்தான் திருப்பாடலாசிரியர் 132:13 இல் "ஆண்டவர் சீயோனைத் தெரிந்தெடுத்தார்; அதையே தம் உறைவிடமாக்க விரும்பினார்" என்று கடவுளின் விருப்பத்தைப் பிரதிபலிக்கிறார்.

கனவு ஆண்டாய்க் கருதப்பட்ட 2020 ஆம் ஆண்டில் கொரோனா கொள்ளை நோய்க்குப் பலர் தங்கள் இன்னுயிரை மாய்த்த போதிலும், கடவுள் நம்மைத் தயவாய் நினைத்தருளி இன்று நம்மை இந்தத் தூய இடத்தில் கூடி வரச் செய்திருக்கிறார். இதையெல்லாம் நன்றியோடு நினைத்து கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டிய நாளே சபைநாள். எனவேதான் தூய பவுலார் எபேசுத் திருச்சபையாருக்கு எழுதிய கடிதத்தில் எபேசியர் 2:20-இல் திருத்தூதர், இறைவாக்கினர் என்பவர்களுடைய அடித்தளத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் என்று நினைவுபடுத்தி அவர்கள் கிறிஸ்துவில் தொடர்ந்து வளரவும், முன்னேறவும் வழிவகுக்கின்றார். பவுலாரின் இந்த வார்த்தை நிச்சயமாகவே எபேசுத் திருச்சபையாரைக் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய உலகில் கைப்பேசியும், வலைத்தளமும் பயன்படுத்தாதவர்கள் இல்லையென்று சொல்லுமளவிற்கு அன்றாட வாழ்வோடு ஒன்றிவிட்டன இவ்விரண்டும். சிறுவர் முதல் பெரியவர் வரை பல்வேறு password அமைத்து, அதை நினைவில் வைத்து எல்லாம் பாதுகாப்புடன் இருக்கிறது என்ற நிறைவைப் பெறுகிறார்கள். அதேசமயம் இவ்வுலகில் ஜீவனோடு நம்மை வைத்திருக்கும் கடவுளிடமும் "இறைவேண்டல்" என்கிற password-ஐ நினைவுகூர்ந்து, அதை அனுதினமும் பயன்படுத்தி, பாதுகாப்பான வாழ்வைப் பெற முயல்வது மிக அவசியமானது. இறைவேண்டலின் மகத்துவத்தைக் குறித்து Martin Luther சொல்லும்போது, "prayer is a strong wall and fortress of the church; it is a good Christian weapon" என்கிறார்.

### *2. நிகழ்காலத்தில் நிலைத்து நிற்பதற்கு* :

முன்னோர் அமைத்துத் தந்த பாதையில் இத்தனை காலம் பயணித்து, அவர்கள் செயல்படுத்திய செயல்களை அவர்களைப் போன்றோ அல்லது அதைவிட சிறப்பாகவோ திருச்சபையில் செய்து நிறைவேற்ற வேண்டுமெனில், கன்மலையாம் கிறிஸ்துவின் மீது திருச்சபை கட்டப்பட்டுள்ளது என்கிற உறுதி நிலை நம்மில் காணப்பட வேண்டும். இதைத்தான் T.S. Eliot - " The true church can never fail. For it is based upon

a rock” என்கிறார். கன்மலையாகிய கிறிஸ்து, போராட்டம் மிகுந்த இவ்வுலகில் நம்மை நிலைத்து நிற்கச் செய்து, தாகத்தோடு இருப்பவர்களின் ஆத்துமத் தாகம் தீர்க்கிறார். ஆலயம் கடவுள் விரும்பி வாசம் செய்யும் இடம் என்பதை, திருப்பாடல் 132:14 “இது என்றென்றும் நான் இளைப்பாறும் இடம்; இதை நான் விரும்பினதால் இதையே என் உறைவிடமாக்குவேன்” என்று கோடிட்டுக் காட்டுகிறது.

- இந்த இடம் வாக்குவாதத்தின் இடம் அல்ல; வாக்குத்தத்தத்தின் இடம்.
- இது பங்கு போடும் இடம் அல்ல; கிறிஸ்துவுக்காகப் பக்குவப்படும் இடம்.
- இது வாழ்வு அலங்கோலமாகும் இடம் அல்ல; ஆசீர்வாதத்தால் அலங்கரிக்கப்படும் இடம்.
- இது அவமானத்தைத் தரும் இடம் அல்ல; கடவுளின் வெகுமானத்தைப் பெறும் இடம்.

இன்னும் எத்தனை காலம்தான் முன்னோர் அமைத்துத் தந்ததை அனுபவித்துக் கொண்டு “பாரம்பரியம்” என்கிற போர்வைக்குள் ஒளித்துக் கொண்டிருக்கப் போகிறோம்? இன்று நாம் நம் முன்னோர் புகழ்பாடி கொண்டிருப்பதைப் போன்று நம் வருங்காலச் சந்ததியார், இன்றைய செயல்களை வரலாறாய்ப் போற்றி மகிழ நாம் அவர்களுக்காய்ச் செய்யப் போகும் நன்மைகள் தான் என்ன? என்பதைச் சிந்தித்துச் செயல்படுத்துவோம். இறைவன் தங்கும் ஆலயம் எவ்வளவு அருமையும், மேன்மையுமானது, அது எவ்வளவு உறுதித் தன்மை உடையது என்பதை அறிந்து, புரிந்து கிறிஸ்துவின் திருச்சபையாய் மாறுவோம். நல்ல பல திட்டங்களை, பிறருக்கு வாழ்வு தரும் செயல்களை முன்னெடுத்துச் செல்வோம்.

தூய பவுல் பிலிப்பியருக்குக் கடிதம் எழுதும் போது, பிலிப்பியர் 4:9 இல் “நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் கடவுள் உங்களோடிருப்பார்” எனக் கூறி தன்னில் கிறிஸ்துவை வெளிப்படுத்தி, அவரில் நிலைத்து நிற்க ஆலோசனை வழங்குகிறார். நாமும் வீண் பெருமைகளைத் திருச்சபையில் பறைசாற்றாமல் கிறிஸ்துவின் புகழ்பாடி அவரில் நிலைத்திருப்போம். கிறிஸ்து தங்குமிடமாய்த் திருச்சபை மாறும்போது திருப்தியான வாழ்வு நம்மில் வெளிப்படும். சவால்கள் நிறைந்த நிகழ்காலத்தில் கிறிஸ்துவை வாழ்வில் காட்டி நிலையில்லா இவ்வுலகில் சாட்சிகளாய் நிலைத்திருப்போம்.

### ***3. எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கு*** :

இன்றைய தலைமுறையினர் தொழில்நுட்பம் மற்றும் அறிவியலில் முன்னேறிக் கொண்டிருந்தாலும், மறுபுறம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முடிவுகளை எடுப்பதில் தடுமாறிக் கொண்டிருப்பது வேதனையானது. கடந்த 2020-ஆம் ஆண்டு நீட் தேர்வை எதிர்கொள்ளும் பயத்தில் தற்கொலை மட்டுமே முடிவு என மூன்று மாணவர்கள் வாழ்வை முடித்துக் கொண்டனர். இத்தகைய சூழலில் திருச்சபையின் பங்களிப்பு மிக முக்கியமானது. எதிர்கால நம்பிக்கையை ஏற்படுத்தி, மனத்தெளிவோடு இவ்வுலகின் சவால்களை எதிர்கொள்ளும், துணிவைச் சமூகத்திற்கு திருச்சபைகள் ஏற்படுத்த வேண்டும். தேவையில் இருப்போர் சந்திக்கப்பட வேண்டும் என்பதே திருச்சபைக்குத் திருமறை தரும் ஆலோசனை. பொருளாதார அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படுவது மட்டுமல்ல, மனநிலை மற்றும் வாழ்வியல் ரீதியான தேவைகளைச் சந்திப்பதும் திருச்சபையின் கடமையாகும்.

இன்று Mobile phone, Online games, Internet போன்றவற்றிற்கு அடிமைப்பட்டு, வாழ்வின் அத்தனை தேடலுக்கும் google ஒன்றே போதும் என்ற மனநிலை இன்று உருவாகி விட்டது. புத்தக வாசிப்பு, குடும்பமாக இணைந்து செலவிடும் நேரம் குறைந்து அலைபேசியின் அரவணைப்பு போதும் என்கிற நிலை இன்றைய சமுதாயத்தின் அவலம். இந்நிலை மாற்றம் பெற திருமறைத் தேடலை, குழந்தைகளுக்கு சிறு பருவம் முதலே ஏற்படுத்துவதில் திருச்சபைகள் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலம் இதுவே. காலத்தின் மாற்றங்கள் முக்கியமானவைகள் தான், அதேசமயம் அந்த மாற்றங்கள் மனிதனை இயந்திரமாக மாற்றி விடக் கூடாது. இனி வரும் காலங்கள் திருச்சபைகளுக்கு மிகுந்த சவால் நிறைந்தவை என்பதில் எந்த ஐயமுமில்லை. அதை எதிர்கொள்ள தூய ஆவியாரின் துணை மிக அவசியமானது. D.L. Moody- “Church attendance is a vital to a disciple as a transfusion of rich, healthy blood to a sick man” என்கிறார். நாளைய திருச்சபைகள் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துபவையாகச் செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொரு சபைநாளிலும் திருச்சபைகள் எதிர்காலத்தை மனதில் கொண்டு, திட்டங்களைச் செயல்படுத்தி, ஆக்கப்பூர்வமான செயல்களை முன்னெடுப்பது சிறந்தது. கிறிஸ்து சிலுவையில் சிந்திய உதிரத்தால் உருவான திருச்சபையின் பங்காளிகளான நாம், இந்தச் சமூகத்திற்கும், எதிர்காலத் தலைமுறைக்கும் பயன்தரும் வாழ்வை வெளிப்படுத்துவோம்.

திரு. **ஆ. ஜெனில்தாஸ்**

# பணிதலும் பகிர்தலும்
## WORSHIPPING AND SHARING

நீமொ 3:1-12 மத் 5:21-26

**“உன் செல்வத்தைக் கொண்டு அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு”** (நீமொ 3:9).

இஸ்ரயேல் மக்களுக்கு நிலங்களைக் கொடுத்த கடவுள், நிலங்கள் விளைச்சலைத் தரும்போதும், தானியங்களைச் சேகரிக்கும் பொழுதும் விழாக்களைக் கொண்டாடக் கேட்டுக் கொள்கிறார். “வயலில் நீ விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும்போது, “அறுவடைவிழா” வும், ஆண்டுதொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை ஒன்று சேர்க்கையில் “சேகரிப்பு விழா” வும் எடுக்க வேண்டும்” (விப 23:16) என்கிறார். இதனடிப்படையில் ஆண்டிற்கு இரண்டு முறை, விளைச்சலைத் தரும் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் நல்லெண்ணத்தோடு சங்கவிழாக்கள் இன்றும் திருச்சபைகளில் கொண்டாடப்படுகின்றன. சில வருடங்களுக்கு முன்பாக இவ்விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மக்கள் தங்களுடைய விளைநிலங்களில் கிடைத்த பலனை ஆலயத்திற்குக் கொண்டு வந்து இறைவனுக்குப் படைத்து, பகிர்ந்தளித்தனர். சங்க விழாக்களில் திருச்சபையே விழாக்கோலம் பூண்டது. அகம் மகிழ்ந்து கொண்டாடப் பட வேண்டிய இவ்விழாவானது இன்று அநேக வேளையில் அங்கத்துவத்தைப் புதுப்பிக்க மாத்திரம் தேவை என்கிற நிலையில் கருதுவோரும் உண்டு. வழிபாடுகளில் கலந்து கொள்ளாமல் எனக்கு நியமிக்கப்பட்ட தொகையைச் செலுத்தினால் போதுமானது என்று எண்ணுவாரும் உண்டு. நமது அங்கத்துவத்தைத் தக்கவைக்கும் நிலையைத் தாண்டி, விழாவைக் கொண்டாட வேண்டும், இறைவனுக்கு நன்றி செலுத்திட வேண்டும் என்கிற நிலையில் கொண்டாடுவது சிறப்பானதாக அமையும்.

தமிழ் மொழியின் வரலாற்றை நாம் திரும்பிப் பார்க்கும் பொழுது, தமிழ் மொழியை வளர்க்க சங்கம் அமைத்தனர் என அறிகிறோம். தமிழ் அகராதி ஒன்று ‘சங்கம்’ என்ற சொல்லுக்கு இவ்வாறாக அர்த்தம் தருகிறது. “ஒரு குழு தன் நலனை அல்லது ஒரு துறையின் நலனை மேம்படுத்த ஒன்றாகச் சேர்ந்து ஏற்படுத்தும் கூட்டமைப்பு.” ஒன்றாகச் சேர்ந்து இருப்பதையும், நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுவதையும்

சங்கம் வலியுறுத்துகிறது. இக்கருத்துக்களோடு இணைந்து, வளங்களால் நம்மை நிறைத்த இறைவனுக்கு நன்றி செலுத்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு நாம் சங்க விழாவைக் கொண்டாடும்பொழுது அது அர்த்தமள்ள கொண்டாட்டமாக அமையும்.

### *1. இணைந்து வாருங்கள்* :

கூடி வருதலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் சங்க விழாவில் நாம் இணைந்து வருவது மிகவும் அவசியம். நம்முடைய இல்லத்தில் ஒரு திருமணம் அல்லது சிறப்பு நிகழ்வு என்றால் எப்படி குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் கூடி வருவது மகிழ்ச்சியைத் தருமோ அதே போன்று சங்க விழாவில் கூடி வருதலும் நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். திருப்பாடல் 133:1 இல் திருப்பாடகர் "சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது!" என்று குறிப்பிடுகிறார்.

தொடக்க நாட்களில் சிறப்பு வழிபாடுகளின் வாயிலாக வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்ட சங்க விழாக்கள், மக்களின் பங்களிப்பு குறையவே ஞாயிறு தொழுகையுடன் இணைத்துக் கொண்டாடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று, நாம் இணைந்து வருகின்ற போது இறைவன் நம் நடுவில் இருப்பார். "ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ, அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்" என்று மத் 18:20-இல் இயேசு கூறுகிறார். இணைந்து வருகின்ற போது இசைந்த உள்ளம் தேவை என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியம். மத் 5:23,24-இல் குறிப்பிடும்போது "ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்தங்கள்" என்கிறார். எருசலேம் ஆலயத்திற்கு ஆண்டிற்கு ஒருமுறை விழாக்கள்தோறும் பல இடங்களில் இருந்தும் யூதர்கள் வருவது உண்டு. அப்படி அவர்கள் வந்து இறைச் சமுகத்தில் பலி செலுத்த ஆயத்தப்படும்போது ஒருவேளை அவர்கள் சகோதர சகோதரிகளோடு மனத்தாங்கல் இருந்தால், அந்த இடத்தில் தானே, பலிப் பொருளை வைத்துவிட்டு, தன்னுடைய சகோதர சகோதரிகளிடத்தில் ஒப்புரவாகி வரச் சொல்கிறார். ஒருவேளை அவர்கள் தூரமான இடத்தில் இருக்கலாம்

என்றாலும், முதலில் அவர்களிடம் நல்மனம் பொருந்தி, அதன் பிற்பாடு இறைவனிடத்தில் வர அறிவுறுத்துகிறார். இறை உறவை ஏற்படுத்தவதற்கு முன் சக மனிதரோடு நல்லுறவை ஏற்படுத்துவதின் அவசியத்தை எடுத்துரைக்கிறார்.

ஆல்வின் ஸ்ரெய்ட் என்னும் எழுபத்தி மூன்று வயது முதியவர் தன்னுடைய சகோதரரான ஹென்றி பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டார் என்பதை அறிந்து, அவருடைய மரணத்திற்கு முன்பாக அவரைக் காண வேண்டுமென்று இருநுற்றைம்பது மைல் கடந்து அவரைச் சந்திக்கப் புறப்பட்டார், ஆல்வினுக்குக் கால்களில் பிரச்சனை மற்றும் கண்பார்வை குறைவு இருந்ததால் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை. எனவே அவர் மகிழுந்து (Car) பயன்படுத்த முடியாத நிலை. இருப்பினும் தான் விவசாயத்திற்குப் பயன்படுத்திய சிறிய, மிகவும் வேகம் குறைந்த வாகனத்தைப் பயன்படுத்தினார். அந்த வாகனம் பாதி வழியில் மோசம் அடைய, தொடர்ந்து அதே போன்று வேறு வாகனத்தை வாங்கி, மீண்டும் தன்னுடைய பயணத்தைத் தொடர்கிறார். வழியில் பல்வேறு சவால்களைக் கடந்து, தன் சகோதரர் இருக்கும் ஊருக்கு வருகிறார். சகோதரரைச் சந்திப்பதற்கு முந்தின நாள் ஆல்வின் அந்த ஊரின் போதகரைச் சந்தித்து, தான் ஹென்றியின் சகோதரன் என்பதைத் தெரியப்படுத்துகிறார். போதகருக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. ஏனென்றால் ஹென்றி, தனக்கு ஒரு சகோதரன் இருப்பதாக இதுவரை யாரிடமும் தெரிவித்தது கிடையாது. சகோதரன் பேரில் அவ்வளவு கோபம். போதகர் ஆல்வினிடம், ஹென்றி இதுவரை தனக்கு ஒரு சகோதரன் இருப்பதை என்னிடத்தில் கூறியது இல்லை எனக் கூறியதும், ஆல்வின் அவர்களுக்குள் ஏற்பட்ட பிரிவினையையும், தற்போது சமாதானம் செய்ய வந்திருப்பதையும் கூறுகிறார். அடுத்த நாள் ஆல்வின், ஹென்றியின் இல்லத்திற்கு வருகிறார். தன்னைச் சந்திக்க இவ்வளவு தூரம் ஆல்வின் வந்திருப்பதைக் கண்டு ஹென்றி அவரோடு சமாதானம் செய்கிறார். வயது, உடல் பெலவீனம், தூரம், இழப்புகள், இன்னும் பல சவால்களைச் சந்தித்தாலும், தன்னுடைய சகோதரனோடு சமாதானம் செய்ய வேண்டும் என்ற ஒரே எண்ணத்தைக் கொண்டிருந்தார்.

இன்று பல கருத்து வேறுபாடுகளால் பிரிந்த நிற்கும் திருச்சபை, இறைவன் நமக்குத் தந்த நன்மைகளை எண்ணி அவருக்கு நன்றி செலுத்த வரும்பொழுது, நம் முன்பாக இருக்கும் சவால்களைக் கடந்து, சகோதர சகோதரிகளுடனும், உறவினருடனும், நண்பருடனும், அயலகத்தாருடனும் இணைந்து, இசைந்த உள்ளத்தோடு வந்து இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும், கொண்டாட வேண்டும் என்பதனை உணர்ந்து செயல்படுவோம்.

## *2. இறைவனை வணங்குங்கள்* :

இன்று விழாக்கள் என்றால் கொண்டாட்டங்களே அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. கொண்டாட்டங்கள் தேவை என்றாலும் நாம் இப்படிப்பட்ட அறுவடைப் பண்டிகைகளில் இறைவனை வணங்குவது அதை விட முக்கியம் என்பதனை உணர வேண்டும். "உன் நிலத்தின் முதற்கனிகளில் முதன்மையானவற்றை உன் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்துக்குக் கொண்டு செல்வாய்" (விப 23:19), "உன் செல்வத்தைக் கொண்டு அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்லனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு" (நீமொ. 3:9) போன்ற வசனங்கள் இறைவழிபாட்டின் கடமைகளை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. நமக்கு நன்மை அருளிய இறைவனுக்கு, நம்முடைய விளைநிலங்களையும், கால்நடைகளையும், உழைப்பின் பயனையும் ஆசீர்வதித்தவருக்கு நன்றி செலுத்திட அழைக்கப்படுகிறோம். மாற்கு 12:30-இல் இயேசு கிறிஸ்து கூறும்போது "உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக" என்கிறார். இறைவனை எப்பொழுது வணங்கினாலும் முழுமையான நிலையில் வணங்க அழைப்பு பெறுகிறோம். முழுமை வரும்போது அத்தோடு முதன்மையும் வரும். "ஆபேலும் தன் மந்தையிலிருந்து கொழுத்த தலையீறுகளைக் கொண்டு வந்தான்" (தொநூ 4:4). முழுமையான உள்ளம் என்பது ஏனோதானோவென்று அல்ல; நிதானமாய், பொறுமையாய்த் தெரிவு செய்து, சிறப்பானதை இறைவனுக்குக் கொடுப்பது. ஆபேல் ஏதோ ஓர் ஆட்டுக்குட்டியைக் கொண்டு வரவில்லை. தன்னுடைய மந்தையிலே கொழுப்பானதும், பழுதற்றதும், தலையீற்றானதுமான முதன்மையான ஆட்டுக்குட்டியைத் தெரிவு செய்து இறைவனுக்குப் படைக்கிறார். மாற்கு 14-ஆம் அத்தியாயத்தில் இயேசுவின் தலையில் நறுமணத் தைலம் ஊற்றிய பெண், விலையுயர்ந்த, கலப்பற்ற தைலத்தை அவர் தலையில் ஊற்றுகிறார். அரைகுறையான, தெளிவற்ற உள்ளத்தோடு அல்ல; முழுமையான நிலையில், முதன்மையானதை இறைவனுக்குக் கொடுத்து அவரை நாம் வணங்கும்போது நம்முடைய செயலில் இறைவன் பிரியப்படுகிறார்.

## *3. இறைவனுக்காய் வாழுங்கள்* :

சங்கங்கள் 'நலனை' அல்லது 'வளர்ச்சியை' மையப்படுத்திச் செயல்பட வேண்டும். அத்தகைய நிலையில் திருச்சபையின் சங்கமானது இறையரசின் விரிவாக்கத்தை மையப்படுத்திச் செயல்பட வேண்டும். இறையரசு வளர வேண்டுமெனில் நாம் இறைவனுக்காய் வாழ்ந்து

இறைவிருப்பத்தை நிறைவேற்றிட அழைப்பு பெறுகிறோம். திருச்சபையிலும், நம்மைச் சுற்றிலும் தேவைகள் ஏற்படும்போது அதற்கேற்ற நிலையில் நம்மை ஆயத்தப்படுத்தி நாம் இணைந்து செயல்படுவது சிறப்பானதாக அமையும்.

எருசலேம் அலங்கம் இடிக்கப்பட்ட நிலையை அறிந்த நெகேமியா அதை எப்படியாவது கட்டி விட வேண்டும் என்கிற எண்ணம் கொள்கிறார். அதற்காக பல முயற்சிகளை எடுக்கிறார். அரசரிடத்தில் அனுமதி பெற்று, பொருட்களைச் சேகரித்து எருசலேம் வரும் நெகேமியா, எருசலேமில் இருக்கும் மக்களைக் கூட்டி இணைக்கிறார். கடும் எதிர்ப்புகளையும், ஏளனங்களையும் தாண்டி தன்னுடைய குழுவின் உதவியோடு இரவு பகல் பாராது, கையில் கருவிகளை ஏந்தி இறைவனுக்காக அலங்கத்தை ஐம்பத்திரண்டு நாட்களில் கட்டி முடிக்கிறார். ஒரு குழுவாக, ஒரு சங்கமாக இணையப்பெற்று, இறைவனுக்காக வாழ்ந்து காட்டினார். இச்சங்க விழாவில் சங்கமாக இணையும் நாமும் இறைவனுக்காய் வாழ அழைக்கப்படுகிறோம்.

சங்க விழா தொழுகை தோறும் “சங்கம் கூடி ஏழைக்கென்று” என்ற பாடலைப் பாடும் நாம் எத்தகைய நிலையில் செயல்படுகிறோம்? என்று நம்மை நாம் நிதானித்து அறிவது நல்லது. மத். 25:40 நமக்கு தெளிவுபடுத்துகின்ற உண்மை, “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்” என ஆண்டவர் உரைப்பார். நம்முடைய வாழ்வு சிறியவருக்கும், எளியவருக்கும், ஆதரவற்றவருக்கும், சமுதாயத்தால் ஓரங்கட்டப்பட்டவருக்கும் பயனுள்ளதாக அமையும்போது நாம் இறைவனுக்காய் வாழ்கிறோம் என்பதைக் கருத்தில் கொள்வோம்.

1534 ஆம் ஆண்டு உரோமைக் கத்தோலிக்க ஆயர் இக்னேஷியஸ் லயோலாவால் ஆறு நபர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சங்கம் தான் ‘இயேசு சங்கம்’ (Society of Jesus). இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் அத்துணைபேரும் மிகுந்த கட்டுப்பாடுகளுடன் வாழ, ஒருமித்த கருத்துடன் உறுதி பூண்டனர். கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த இச்சங்கத்தினர், கல்வி மற்றும் அருட்பணியில் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டனர். உலகளவில் பல நாடுகளில் இச்சங்கமானது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம் பகுதியில் இறைப்பணியை நிறைவேற்றிய தூய பிரான்சிஸ் சேவியர் இச்சங்கத்தைச் சார்ந்தவராவார். இச்சங்கத்தினர் கொண்டிருந்த நோக்கம் ‘கடவுளின் பெரிய மாட்சிக்காக’ (for the greater glory of God) என்பதாகும். அவர்களுடைய நோக்கத்திற்கிணங்க

இறைவனின் மாட்சிக்காக வாழ்ந்தார்கள். நாமும் இறைவனுக்காக வாழ அழைப்புப் பெறுகிறோம். L.M.S., C.M.S. போன்ற பல சங்கங்களால் இணைக்கப்பட்டு, வாழ்வு பெற்று, வளர்ச்சி பெற்று இறைவனைத் தேடுகிற நாம், நம்மைச் சுற்றி இருப்பவர்களைக் கண்ணோக்கிப் பார்ப்போம். "இலவசமாய் நீர் பெற்றுக் கொண்டீரே இலவசமாய் நீர் கொடுத்திடும்" என்று நாம் சங்க வழிபாட்டில் பயன்படுத்தும் பாடலை நம் நினைவில் நிறுத்தி. நாம் பெற்ற நல் வாழ்வினை நம்மைச் சுற்றி இருப்பவர்களும், நம் வருங்காலச் சந்ததியினரும் பெற்றுக்கொள்ள நம்முடைய உடல் உழைப்பால், அறிவால், செல்வத்தால் நம்மால் இயன்றதைக் கொடுப்போம். வாழ்வு பெறச் செய்வோம்.

"கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்" (எபே 5:2) என்று பவுலடியார் எபேசுத் திருச்சபையிடம் கூறிய வண்ணமே நமக்கும் அழைப்பு தரப்படுகிறது. கிறிஸ்து தம்மைப் பலியாக, காணிக்கையாக கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து நம்மிடத்தில் அன்பு செலுத்தியது போல் நாமும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி நம்மைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து, பிறரிடம் அன்பு செலுத்திட அழைக்கப்படுகிறோம். கடவுளோடும் மனிதரோடும் இணைவோம், கடவுளைப் பணிவோம், பிறருக்குப் பகிர்ந்து கொடுப்போம்.

திரு. A. **கிளாட்சன் ரூபராஜ்**

# ஆண்டவரின் அருள்கொடை

விப 23:14-19

**“வயலில் நீ விதைத்து உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும்போது, அறுவடை விழாவும், ஆண்டுத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பலனை ஒன்று சேர்க்கையில் சேகரிப்பு விழாவும் எடுக்க வேண்டும். ”** (விப 23:16)

பண்படுத்தப்பட்ட நிலத்தில் கண்ணீரோடு விதை விதைத்து உறக்கமின்றி, ஓய்வில்லாமல் நாளும் உழைத்து வளர்த்தெடுத்த பயிர்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆண்டவரின் அருட்கொடை தான் நல்ல அறுவடை. அறுவடை விழா என்பது படைப்பாளராம் கடவுள் நமக்குத் தந்திருக்கின்ற படைப்புகளின் பலனை நன்றியுணர்வோடு கடவுளுக்குப் படைத்து, பசியால் வாடும் சக மனிதர்களுக்கும் பகிர்ந்து மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் கொண்டாடும் விழா. உலகத்தின் பல நாடுகளில் அறுவடை விழாவுக்குச் சமமான விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. கானா (Ghana) நாட்டில் அறுவடை விழாவை “யாம்” YAM (ஒரு வகை கிழங்கு அறுவடை) விழாவாகக் கொண்டாடுகின்றார்கள். அமெரிக்காவிலும், கனடாவிலும் அறுவடை விழாவை நன்றி செலுத்தும் (Thanksgiving) நாளாகக் கொண்டாடுகின்றார்கள். இந்தியாவில், தமிழ் நாட்டில் பொங்கல், பஞ்சாபில் Baisakhi, மகாராஷ்டிரா மற்றும் உத்திரப்பிரதேசத்தில் Makar Sankranthi, அஸ்ஸாமில் Bihu, கேரளாவில் Onam போன்று அனைத்து மாநிலங்களிலும் அறுவடைத் திருநாள் கொண்டாடப்படுகின்றது.

‘quatsir’ என்ற எபிரேய வார்த்தையும் ‘Therismos’ என்ற கிரேக்க வார்த்தையும் திருமறையில் அறுவடையைக் குறிக்கும்படி பயன்படுத்தப்படுகின்ற வார்த்தைகள்.

**இஸ்ரயேலரின் முக்கியமான மூன்று விழாக்கள்:** புளிப்பில்லாத அப்ப விழா, அறுவடை விழா, கூடாரவிழா. யூதர்கள் வருடத்திற்கு மூன்று முறை எருசலேம் சென்று பாஸ்கா, அறுவடை, கூடார விழாவைக் கொண்டாடினர். இங்கே அவர்கள் கடந்த காலத்தில் ஆண்டவர் தங்களுக்கு என்ன செய்தார் என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்தும், நிகழ்கால வாழ்வில் தேவையான கடவுளின் நல்லாசிகளை மனதில் கொண்டும் விழாவைக் கொண்டாடினர். அறுவடை விழாவில் விளைநிலங்களில் விளையும் தானியங்களைக், கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதமாகக் காணிக்கையாகப் படைத்தனர்.

மோசேயும் ஆரோனும் பார்வோன் மன்னனைச் சந்தித்து இஸ்ரயேல் மக்களின் கடவுளுக்குப் பாலைநிலத்தில் போய் விழாவைக் கொண்டாட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். கடவுளின் வழிநடத்துதலால் மக்களை அடிமைத்தனத்தினின்று விடுவித்து பாலும், தேனும் ஓடும் கானான் நாட்டிற்குச் செல்லும் பயணப்பாதையில் சீனாய் மலையில் இருந்தபோது ஆண்டவர் மோசேயிடம் விழாக்களைக் கொண்டாட வரைமுறைகளை வழங்குகின்றார் (விப 23:14-19), (விப 23:16). எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறிய பிறகே இந்த அறுவடைவிழா ஆரம்பமாகிறது. அலைந்து திரிந்த காலத்தில் அவர்கள் பயிர் செய்ய இயலாது என்பதே அதன் காரணம். அறுவடை விழா உணர்த்துகின்றவற்றைத் திருமறை சார்ந்து தியானிப்போம்.

***1. பரமனுக்குக் கொடுத்துக் கொண்டாடி மகிழும் விழா*** :

நாம் வாழுகின்ற உலகினைப் படைத்தவர் கடவுள், உயிர்களைப் படைத்தவர் கடவுள், பயிர்களைப் படைத்தவர் கடவுள், விளைச்சலைத் தருகின்றவர் கடவுள், அவரின்றி எதுவும் இல்லை. படைத்தவருக்கு நாம் எப்போதும் முதலிடம் கொடுக்க வேண்டும். முதற்பலன் விழா இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளையாகும் (இச 26:1,2). அதாவது விளைச்சலின் முதற்பலனைக் கடவுளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே. எபிரெயத்தில் 'ஹபிக்கூம்' அல்லது 'பிக்கூரிம்' என்றழைக்கப்படும் முதற்கனி அல்லது முதற்பலன் விழா, முதல் அறுப்பில், முதற்பலனைக் காணிக்கையாகப் படைக்க வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டாடப்பட்டது. யூதமக்கள் அறுவடை செய்யும்போது அறுவடையின் முதல் விளைச்சலான பலனை, கடவுளுக்குக் கொடுத்து மகிழ்ந்தனர்.

அறுவடைக்காலத்தில் நல்ல விளைச்சல் நல்கிய ஆண்டவருக்கு 'நன்றி செலுத்தினர்' (திபா 67:6). இவ்விழாவின் போது அறுவடையின் 'முதற்கனியாகிய கதிர்க்கட்டை' இறைவனுக்குக் காணிக்கையாக அளித்தனர் (லேவி 23:10). இதனால்தான் அறுவடைவிழா "முதற்கனியின் நாள்" என்று அழைக்கப்பட்டது (எண் 28:26). "ஆண்டவர் மோசேயிடம் கூறியது: இஸ்ரயேல் மக்களிடம் நீ சொல்ல வேண்டியது: நான் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டில் நீங்கள் வந்து அறுவடை செய்யும் போது அறுவடையின் முதல் விளைச்சலான ஒரு கதிர்க் கட்டினைக் குருவிடம் கொண்டு வர வேண்டும். உங்கள் சார்பாக ஏற்கத்தக்கதாக, குரு அந்தத் தானியக் கதிர்க்கட்டினை, ஓய்வு நாளுக்குப் பின்வரும் அடுத்த நாளில் ஆண்டவரின் திருமுன் ஆரத்திப் பலியாக்குவார்" (லேவி 23:9,10,11). அதுமட்டுமல்லாமல் ஏப்ரல் மாதத்தில் வாற்கோதுமையையும் மக்கள்

அறுவடை செய்தனர் (ரூத் 1:22). அப்போது அவர்கள் எல்லோரும் மகிழ்ந்திருந்தனர். இம்மகிழ்ச்சியில் அவர்கள் படைப்பின் கடவுளை மறந்து விடவில்லை. இதன் தொடர்ச்சியாகவே மிருகங்களின் தலைப்பேற்றையும், மனிதர்கள் தம் தலைப்பேற்றையும் குறிப்பாக, ஆண் குழந்தைகளையும் (விப 13:2) கடவுளுக்குக் காணிக்கையாக அளிக்கும் வழக்கம் உருவானது. "முதன் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும் காணிக்கையாகச் செலுத்தத் தாமதிக்க வேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுப்பாயாக" (விப 26:29).

முற்காலத்தில் எந்த ஒரு தோட்டம் அமைத்து, பயிர்களை நட்டாலும் அதில் கிடைக்கின்ற முதற்பலனைக் கடவுளுக்குக் கொடுக்கின்ற வழக்கம் இருந்தது. உதாரணமாக, வாழைத் தோட்டம் அமைக்கும் போதே முதற் கனியை ஆலயத்திற்கு என்று பொருத்தனை செய்வார்கள். அதைப் பெற்றோர், பிள்ளைகள் தண்ணீர் விட்டுப் பராமரிப்பார்கள். எப்பொழுது வாழையிலே முதற்குலை வரும் என்ற ஆவலோடு காத்திருப்பார்கள். காத்திருந்து முதற்குலையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கடவுளுடைய ஆலயத்திலே படைத்து நன்றி செலுத்துவார்கள். இதைப் போன்று எல்லா மிருகஜீவன்கள், விளைநிலங்களின் முதற்பலன்களையும் கடவுளுக்குப் பொருத்தனையாகப் படைக்கின்ற வழக்கம் முன்னோரிடத்தில் அதிகமாக இருந்தது. இந்த வழக்கங்களை மறந்து போகாமல் கடவுள் தருகின்ற விளைநிலங்களின் முதற்பலனைக் கடவுளுக்குக் கொடுத்து அறுவடையைக் கொண்டாடி மகிழ அழைக்கப்படுகின்றோம்.

### *2. ஏழையர்க்குக் கொடுத்துக் கொண்டாடி மகிழும் விழா* :

பகிர்தல் என்பது ஓர் அற்புதமான மனித நேயப் பண்பு. மனதில் மறைந்திருக்கும் அன்பின் வெளிப்பாடு பகிர்தலில் தான் வெளிப்படுகின்றது. பகிர்தல் என்பது வெறும் பொருள் சார்ந்த ஒன்றல்ல, அது நம் மனம் சார்ந்தது. ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்த சிறுவனின் பகிர்வு ஐயாயிரம் பேருக்கும் அதிகமானோரின் பசி தீர்த்தது (யோவா 6:1-15). பட்டினியின் விளிம்பில் இருக்கின்ற மக்களுக்கு நாம் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அறுவடை விழாவின் மிக முக்கியமான குறிக்கோள் பகிர்ந்து கொடுப்பதாகும் (லேவி 23:22).

அறுவடை நாட்களில் சில தானியக் கதிர்களை ஏழைகளும், விதவைகளும், அனாதைகளும், அந்நியர்களும், சேகரித்துக் கொள்ளும்படியாக நிலத்தில் விட்டு வைக்க வேண்டும் என்பது சட்டமாயிருந்தது. அறுவடை செய்யும் போது ஏழைகள் விடப்பட்ட கதிர்களை, சிந்திக்கிடக்கும் கதிர்களைப் பொறுக்குவது கீழை நாடுகளில் வழக்கமான ஒன்றாகும். இதைப்போன்றே திராட்சைப்பழங்களைக்

கொய்யும் போது, கொத்தாய் இன்றித் தனியாய் இருக்கும் பழங்களைக் கொய்யாமலும், பழங்களைக் கொய்யும்போது கீழே விழகின்ற பழங்களை எடுக்காமலும் ஏழைகளுக்கு விட்டுவிட வேண்டும். இது ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு கொடுத்த ஒரு கட்டளை.

பகிர வேண்டும் என்கின்ற மனது நமக்குள்ளே இருக்கும் போது தான் வாய்ப்புகள் எப்போதும் நமது கண்களுக்கு முன்னால் தெரியும். அன்னை தெரசாவின் வீட்டிற்கு அருகே ஏழைக் குடும்பம் ஒன்று வசித்த வந்தது. அவர்கள் சாப்பிட்டு பல நாள்கள் ஆகியிருந்தன. இளகிய மனம் கொண்ட அன்னை தெரசா, அவர்களுடைய வறுமையை அறிந்தபோது மனம் வருந்தி, கொஞ்சம் அரிசியை எடுத்துக் கொண்டு அந்த வீட்டுக்கு விரைந்தார். அந்த வீட்டுப் பெண்மணியிடம் அரிசியைக் கொடுத்து பசியாற்றிக் கொள்ளச் சொன்னார். அந்தப் பெண்மணியின் கண்களில் ஆனந்த மின்னல். அடுத்த வினாடியே அந்த அரிசியில் பாதியை இன்னொரு பையில் அள்ளிக் கொண்டு வெளியே ஓடினார். அன்னை தெரசா கேட்டார், இத்தனை அவசரமாய் எங்கே போனீர்கள்? அந்தப் பெண்மணி மூச்சிரைத்துக் கொண்டே சொன்னார், "பக்கத்தில் இன்னொரு வீடு இருக்கிறது. அவர்களும் சாப்பிட்டு அநேக நாளாயிற்று. அவர்களும் சாப்பிடட்டுமே" என்று அந்த அரிசியைக் கொண்டு போய்க் கொடுத்தேன் என்றார். அன்னை தெரசா நெகிழ்ந்தார், அந்தப் பெண்மணியின் இளகிய மனதைக் கண்டு வியந்தார். நாமும் அன்னை தெரசா போன்று வாய்ப்புகளைக் கண்டறிந்து பயன்படுத்தப் பயன்படுத்த நமக்குள் பகிர்தல் பண்பு வேர்விட்டு வளரும். கொடுக்கக் கொடுக்க நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். மேலும் மனித நேயத்தோடு வாழப் பழகுகிறோம். ஆகவே நாமும் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்களிடத்திலும் பகிர்வை வளர்ப்போம்.

ஆண்டவரின் அருட்கொடையான அறுவடை விழாவில் முதற்பலன்களை ஆண்டவருக்குக் கொடுப்போம், இயலாதவர்களுக்கு இருப்பதைப் பகிர்ந்து கொடுப்போம். மத்தேயு 25:40-இல் "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு இணங்க ஆண்டவரின் அருட்கொடையாம் அறுவடை விழாவில் முதற்பலனைக் கடவுளுக்குக் காணிக்கையாகப் படைத்து, அநேகருக்கு ஆசீர்வாதமாகப் பகிர்ந்து வாழ்வோம்.

திரு. P.C. ***பெரின் போப்பி***

# சிறப்புநாள் அருளுரைகள்

25-04-2021

**வேதமாணிக்கம்-ரிங்கல்தௌபே நாள்**

# சுவிசேஷகர்

| | |
|---|---|
| எசா 52:7-10 | திப 26:9-22 |
| திபா 96 | லூக் 10:1-12 |

**"நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும் நலம் தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி, 'உன் கடவுள் அரசாளுகின்றார்' என்று கூறவும் வருவோனின் பாதங்கள் மலைகள் மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன! "** (எசா 52:7).

கடவுளால் அனுப்பிய ஒருவர் இருந்தார்; அவர் பெயர் யோவான் (யோவா 1:6) எனப் படிக்கிறோம். மேசியாவாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்க வந்த திருமுழுக்கு யோவான் தன்னைத் தாழ்த்தி, தன்னையே ஒறுத்து, வெறுத்து வனாந்தரத்தில் நற்செய்தியைப் பறைசாற்றியது போல, தன்னைத் தாழ்த்தி, தன் சுயத்தை வெறுத்து, தன்னுடலை நோய்க்கு ஒப்புக் கொடுத்து, அவாந்தரமும் கடுவெளியுமாக இருந்த மயிலாடி மண்ணிலே நற்செய்தியை அறிவித்தவர் தென்திருவிதாங்கூர் திருத்தூதர் வில்லியம் தொபியாஸ் ரிங்கல்தௌபே அவர்கள். அன்னார் 1806-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் தேதி ஆரல்வாய்மொழி கணவாயைக் கடந்து திருவிதாங்கூருக்கு வந்தார். அந்தச் சிறப்பு நாளை ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் நாளாக பல்லாண்டுகளாகக் கொண்டாடி வருகிறோம்.

கால்பந்து விளையாட்டிற்குப் 'பாதங்கள்' மிக மிக முக்கியமானவை. ஆகவே சிறந்த கால்பந்து வீரர்களுக்கு 'தங்கப்பாதம்' என்று விருதையும் கொடுக்கிறார்கள். பிரேசில் நாட்டின் ரொனால்டோ போன்ற வீரர்கள், அவர்களுடைய பாதங்களைக் கனப்படுத்தும் 'தங்கப்பாதம்' விருதைப் பெற்றிருக்கிறார்கள்.

பாதங்களை அதிகமாக நடக்கப் பயன்படுத்தும் போது நம்முடைய நரம்புகள் தூண்டப்பட்டு, நாம் ஆரோக்கியமாக இருக்க முடிகிறது. இதற்கு Reflexology என்று பெயரும் வைத்திருக்கிறார்கள். ஒரு காலத்திலே காலணியே அணியாமல் நடந்தார்கள். அப்போது பாதங்களிலுள்ள நரம்புகள் எல்லாம் தூண்டப்பட்டு ஆரோக்கியமாக இருந்தார்கள். இன்று Acupuncture காலணி என்று அணிந்து, அதன் மூலம் பாதங்களின் நரம்புகளைத் தூண்டி, தங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

'பாதங்கள்' எப்படியாயினும் நடப்பதற்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது தான் திருமறை மூலமாக அழுத்திச் சொல்லப்படுகிறது. 'பாதங்களை' நடப்பதற்கென்றே பயன்படுத்தவில்லை யென்றால் Peripheral Arterial Disease என்னும் 'இரத்தக் குழாய் அடைப்பு நோய்' ஏற்பட்டு விடும் என்று அமெரிக்காவின் Virginia University ஆராய்ச்சியாளர் Dr.T. Stone Burner கூறுகிறார்.

எசா 52:7இல் நற்செய்தி அறிவிப்பவரின் பாதங்கள் அழகாயிருக்கின்றன என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் இந்தப் 'பாதங்கள்' நீதி 6:18b இல் சொல்லப்பட்டுள்ளபடி 'தீங்கிழைக்க விரைந்தோடும் கால்', நன்மை செய்வதற்காக விரைந்தோடுகிற கால்களாக, பாதங்களாக இருக்கின்றன.

எபே. 6:15 -இல் கூறப்பட்டுள்ளபடி "அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாக" அணிந்திருக்கிற பாதங்களாக இருக்கிறபடியால், அவை அழகாயிருக்கின்றன. இதுமட்டுமல்ல ஆண்டவருக்காக இன்னும் 'நடக்க' 'ஓட' ஆயத்தமாயிருக்கிறபடியால் அந்தப் 'பாதங்கள்' அழகாயிருக்கின்றன. இந்நாளிலே, 'நற்செய்தி அறிவிப்பவரின் பாதங்கள்' எப்படி உழைக்கிறதென்பதையும், நாமும் எப்படி உழைத்தால் சுவிசேஷகர்களாக இருக்க முடியும் என்பதையும் தியானிப்போம்.

***1. சமாதானத்தைக் கூறி அறிவிக்க உழைக்கிறது*** :

ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஊழியத்திற்காக 70 பேரை தேர்ந்தெடுத்து அனுப்பும் போது அவர்களுக்குப் பல நடைமுறைகளைக் கடைப்பிடிக்க ஆலோசனை கூறுகிறார். இதிலே முக்கியமானதும், முதலாவதுமான ஆலோசனை என்னவென்றால், "...இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக! என முதலில் கூறுங்கள்". எல்லா மனிதரும் விரும்புவது 'சமாதானத்தைத்' தான். அதனால் தான் ஆண்டவர் முதலாவது சமாதானத்தைக் கூறுங்கள் என்கிறார். எந்தவொரு இடத்திலும் சுவிசேஷகரின் ஊழியம், 'சமாதானத்தை அறிவிப்பதில்' தான் ஆரம்பமாகிறது. சுவிசேஷகர் செல்லுகின்ற இடத்திலே அவருக்கு நேரிடுகிற உபத்திரவங்கள், துன்பங்கள் மூலமாக அவருக்குச் சமாதானக் குறைவு ஏற்படலாம். ஆனால் சுவிசேஷம் அறிவிப்பவரால் யாருக்கும் உபத்திரவம் ஏற்பட்டு சமாதானக் குறைவு ஏற்படக் கூடாது. இதுதான் எசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகிற மாதிரி சுவிசேஷகருடைய அடையாளம்.

சமாதானக் குறைவு மனிதரது உடல் நிலையையும் பாதிக்கிறது. சமாதானம் இல்லாதபடியால் Ulcer என்ற குடற்புண் ஏற்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றார்கள். சமாதானம் இல்லாதபடியால் நேரத்திற்கு

நேரம் உணவு உண்ணாமல் ஏதாவது ஒரு நேரம் உணவு உண்பார்கள். அப்படி உணவு உண்ணும் போதும் சந்தோஷமான மனநிலையில் இருக்க மாட்டார்கள். அதனால் உணவு செரிமானமாகாமல் குடற்புண்ணாக மாறுகிறது. இது போன்றவைகள் நேரிடாமல் இருக்க வேண்டுமென்றால் ஒரே வழி "சமாதானத்தோடு வாழ்வது" தான். இதற்காகவே நற்செய்திப் பணியாளருடைய முதல் வேலை சமாதானத்தை அறிவிப்பது. சமாதானத்தை ஏற்படுத்தி, சமாதானத்தை அறிவிக்கிறவர்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் மத். 5:9 இல் "கடவுளின் மக்கள்" என்று அடையாளப் பெயரிட்டார். ஒரு நற்செய்திப் பணியாளர் சமாதானம் ஏற்படுத்துகிறவராகவும், சமாதானத்தை அறிவிக்கிறவராகவும் இருந்தால், அவர் உள்ளத்திலே எப்போதும் ஒரு சந்தோஷம் இருக்கும். இதையே, "சதித்திட்டம் வகுப்போர் தம்மையே ஏமாற்றிக் கொள்வார்; பொது நலத்தை நாடுவோர் மகிழ்ச்சியாயிருப்பர் என நீதிமொழிகள் 12:29 இல் படிக்கிறோம்"

### *2. சமாதானத்தை நாடுவதற்கான மக்களின் பொறுப்பு* :

சுவிசேஷகரால் சமாதானம் அறிவிக்கப்படுகிறது. ஆனாலும் பல நேரங்களில் மனிதரால் சமாதானமாக வாழ முடியவில்லை. அப்படியானால் சமாதானமாக வாழ மனிதர் என்ன செய்ய வேண்டும்? "…. நல்ல நாள்களைக் காணவும் விரும்புவோர்…." (1பேது 3:10,11). எது நல்ல நாளென்று நாட்காட்டியில் பார்த்து 'நல்ல காரியங்களைச் செய்யத்' திட்டமிடுகிறார்கள். ஆனால் ஆண்டவர் படைத்த நாட்களெல்லாம் நல்ல நாள்கள். எந்த நாட்களையும் மோசமான நாட்களென்று படைக்கவில்லை. ஒரு பெண் அடுப்பிலே தோசை ஊற்றினபோது, வாசலில் யாரோ கூப்பிடுவது கேட்டுப் போனார். அங்கே நின்று தன்னையே மறந்து பல கதைகளையும் பேசுகிறார்.தோசை கரிந்து மணம் வீசத் தொடங்கியதும் தான், தோசை ஊற்றினது நினைவுக்கு வர ஓடி வருகிறார். ஓடி வந்து பார்க்கிறார். பிறகு சொல்லுகிறார், "இன்றைக்குச் சரியாக நாட்காட்டியில் 'கரிநாள்' என்று போட்டிருக்கிறார்கள். அது போலத் தான் நடந்து விட்டது" என்றார். இதே போல பல காரியங்கள் நமது கவனக்குறைவால் அல்லது சந்தர்ப்பவசத்தால் வாழ்க்கையில் நடக்கும் போது, அதை அந்தக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளாமல், "நமக்கு நாள் சரியில்லை; நேரம் சரியில்லை" என்று பழி போடுவது இன்றும் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

### *(அ) பவுலின் அறிவுரை :*

சமாதானத்தை அனுபவிக்க, சமாதானம் யாருக்கு அறிவிக்கப்பட்டதோ அவர்களுடைய பங்களிப்பும், பங்கேற்பும் இருக்க வேண்டும். அந்த பங்களிப்பும், பங்கேற்பும் எப்படியிருக்க வேண்டுமென்பதைத் தான் 1பேது 3:10,11 இல் பேதுரு,

(i) தீச்சொல்லினின்று....நாவையும் வஞ்சக மொழியினின்று வாயையும் விலக்கிக் காக்க வேண்டும்.

(ii) தீமையை விட்டு விலகி நன்மையைச் செய்ய வேண்டும் என்று இரண்டு வாழ்க்கை முறைகளைச் (Modus Vivendi) சொல்கிறார்.

செப்டம்பர் 8, 1954 SEATO PACT ஒப்பந்தத்தை Manila வில் கையெழுத்திட்ட நம் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, உலகத்திலே கபடப் பேச்சுகள், கபட எண்ணங்கள் (Double Thinking and Double Talk) பெருகி விட்டன என்றார். அவர் சொன்ன கபடப் பேச்சுகள் என்னவென்றால், People talking about peace in warlike tones..... "சமாதானத்தை கூட யுத்தத் தொனியில் பேசுகிறார்கள்...." என்றார். அதாவது சிலர் சொல்லுவார்கள் "நான் எல்லாருக்கும் ஒரு பயங்கரம்" (Terror). இதுதான் சமாதானத்தை யுத்தத் தொனியில் பேசுவது. பயங்காட்டி கபடச் சமாதானத்தை, மாயச் சமாதானத்தை ஏற்படுத்துவது தான் இந்த யுக்தி. இதுதான் உலகில் இன்று நடக்கிறது. உண்மையாகவே நமக்கும் சமாதானம், நம்மோடிருப்பவர்களுக்கும் சமாதானம் வேண்டுமென்றால், இப்படி Terror என்று error -ராக பேசுவதை நிறுத்த வேண்டும். சமாதானத்தைக் கூறி அறிவிக்கிற நற்செய்திப் பணியாளரும் கபடச் சமாதானத்தை நீக்கி உண்மைச் சமாதானத்தை ஏற்படுத்தவே அதிகமாக உழைக்கிறார். இதற்காகவே சுவிசேஷகர் ஓடுகிறார். எனவே தான் அவருடைய பாதங்கள் அழகாயிருக்கின்றன. நாமும் சமாதானத்தைக் கூறி அறிவிக்கிற நற்செய்திப் பணியாளர்களாயிருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

### *(ஆ) சுவிசேஷகரின் பாதங்கள்-நலம் தரும் செய்தியை அறிவிக்கின்றன :*

'சுவிசேஷம்' என்பதற்கு 'சுவையான விசேஷம்' என்பதும் 'நற்செய்தி' என்பதற்கு 'நலம் தரும் செய்தி' என்பதும் பொருளாகும். எல்லாருமே பெரும்பாலும் நலம் தரும் செய்திகளைத் தான் கேட்கவும், பார்க்கவும் விரும்புகிறார்கள். இஸ்ரேல் நாட்டிலே முதலாவது பெண் பிரதமராக Golda Meir பொறுப்பெடுத்த போது இஸ்ரேல் நாட்டை, எகிப்து மற்றும் சீரியா நாடுகள் முற்றுகை போட்டிருந்தன. இஸ்ரேல் நாடு முழுவதும் கலங்கிப் போயிருந்த போது, பிரதமர் Golda Meir-ரும் கலங்கிப் போய் இபபடியொரு கருத்தைச் சொன்னார், Let me tell you something that we Israelis have against Moses. He took us 40 years through the desert, in order to bring us to the one spot in the middle East, that has no oil. அதாவது, மோசேக்கு எதிராகச் சொல்லுவதற்கு எங்களுக்குச் சில காரியங்கள் உண்டு. 40 வருடங்கள் வனாந்தரத்தில் எங்களை நடத்தி, மத்திய கிழக்குப் பகுதியிலே இந்த இடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் இங்கே ஒரு எண்ணைய் (petrol) கூட இல்லை.

Golda Meir சொன்ன இந்த வார்த்தைகள் நிச்சயமாக ஒரு நற்செய்தி அன்று. ஆண்டவர் எங்களை மோசே மூலமாக petrol கிணறுகளே இல்லாத இடத்துக்குக் கொண்டு வந்து விட்டார். அதனால் நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்பது தான் இதன் அர்த்தம்.

ஒரு சுவிசேஷகர் இப்படிச் சொல்லுகிறவரல்லர். அவர் நல்வாழ்வை அறிவிப்பவர். வாழ்க்கையிலே கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அது நன்மைக்கேதுவான கஷ்டங்கள்; பலப்படுத்துவதற்கான பலவீனங்கள் என்று சொல்லுபவர் தான் சுவிசேஷகர்.

### *(இ) ஆண்டவர் சொன்ன விசேஷங்கள் :*

ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூட எதை 'விசேஷங்கள்' என்று சொன்னாரென்றால் தம்முடைய பாடுகளையும், மரணத்தையும் அதன்பின் நிகழ்ந்த உயிர்த்தெழுதலையும் தான் விசேஷங்கள் என்றார். இதைத்தான் லூக் 24:44-இல் வாசிக்கிறோம்.

எல்லாக் கஷ்டத்திலும் நன்மை உண்டு. கஷ்டமேயில்லாமல் நன்மை இல்லை என்று கஷ்டங்களை எல்லாம் நற்காரியங்களுக்குச் சுவையாகச் சொல்லுபவர் தான் சுவிசேஷகர் (நற்செய்தியாளர்). உதாரணமாக, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை 'சாரோனின் ரோஜா' (Rose of the Sharon) என்று அழைக்கிறோம். ஏன் தெரியுமா? அவ்வளவு முட்களை ஆண்டவர் சகித்து, ரோஜாவாக இருக்கிறார்.

இதை ஆங்கிலத்தில் சுவையான விசேஷமாக இப்படிச் சொல்லுகிறார்கள் - our Lord Jesus Christ bore many thorns in his life. So if you desire to blossom like a rose in the garden, you have to learn the art of adjusting with the thorns.

பல முட்களைச் சகித்து நாம் ரோஜாவாக மணம் வீச வேண்டுமென்பது தான் சுவையான விசேஷம். சுவையான விசேஷத்தை உண்மையோடும், அக்கறையோடும் சொல்லுபவரே சுவிசேஷகர் (நற்செய்தியாளர்). நாமும் நமது வாழ்க்கையின் மூலம் ஆண்டவரை மாட்சிப்படுத்த, நம்முடைய கஷ்டகாலங்களிலே ஆண்டவர் எவ்வளவு அனுகூலமான துணையாக இருந்தார் என்பதைச் சுவையான விசேஷமாக (நற்செய்தியாக) மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் (திபா 96:2).

### *3. நற்செய்தியை அறிவிப்பவரின் பாதங்கள் விடுதலையைப் பறைசாற்றுகின்றன :*

நற்செய்தியாளர் பகிரங்கமாகச் செய்ய வேண்டிய வேலை விடுதலையைப் பறைசாற்றும் வேலையாகும். அதாவது பாவத்தைக் கண்டித்து, உணர்த்தி, பாவத்திலிருந்து விடுதலை அடைய, மீட்படையத் தூண்டும் வேலை இது.

**தீயோனின் நற்செய்தி :**

விடுதலையைப் பறைசாற்ற வேண்டிய கட்டாயம் ஏன் நற்செய்தியாளருக்கு ஏற்பட்டிருக்கிறதென்றால், அது காலாகாலமாகப் பிரசங்கிக்கப்பட்டு வரும் நற்செய்தியாகும். சாத்தான் பிரசங்கித்த நற்செய்தி எது? தொநூ 3:4 "....நீங்கள் சாகவே மாட்டீர்கள்", என்ன பாவம் செய்தாலும் ஒன்றுமில்லை. நீங்கள் சாகவே சாவதில்லை. இன்றைக்கும் தீயோனின் நற்செய்தியான-"சாகவே மாட்டீர்கள்" என்பது அதிகமாகப் பரவி வருகிறது. ஆகவே விடுதலையைப் பறைசாற்ற வேண்டிய கட்டாயமான வேலை நற்செய்திப் பணியாளருக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

**விடுதலையைப் பறைசாற்றிய தாவீது :**

திபா 40:10 "உமது நீதியை நான் உள்ளத்தின் ஆழத்தில் மறைத்து வைக்கவில்லை; வாக்குப்பிறழாமையைப் பற்றியும் நீர் அருளும் மீட்பைப் பற்றியும்கூறியிருக்கின்றேன்; உம் பேரன்பையும் உண்மையையும் மாபெரும் சபைக்கு நான் ஒளிக்கவில்லை." தாவீது எழுதியிருக்கும் இந்த வசனத்தில் கவனிக்க வேண்டியது இரண்டு வார்த்தைகள்-மறைத்து வைக்கவில்லை, ஒளித்து வைக்கவில்லை.

எடுத்துக்காட்டாக, பிள்ளைகள் படிக்கிறபோது தங்களுக்கு அதிகம் பிடித்த பாடத்தை அதிகமாக வெளியில் எடுத்துப் படிப்பார்கள். கஷ்டமான பாடத்தைப் புத்தகப் பைக்குள் மறைத்து வைத்து விடுவார்கள். சில சமயம் ஒளித்து வைத்து விட்டு அந்தப் புத்தகத்தைக் காணவில்லை என்பார்கள். இதே போல சிலர் மக்களுக்கு மிகவும் பிடித்தமான 'சமாதானச் செய்தியையும்' 'ஆசீர்வாதச் செய்தியையும்' மட்டும் சொல்லுவார்கள். விடுதலையைப் பறைசாற்றும் செய்தியை ஒளித்து, மறைத்து வைத்து விடுவார்கள்.

ஒரு நற்செய்திப் பணியாளர் பாவத்தைக் குறித்துக் கண்டித்து, அதிலிருந்து விடுதலையடையும் செய்தியை மறைத்து வைக்காமல் பறைசாற்றுவார்.

**பவுலுக்கு நற்செய்திப் பணியைச் செய்ய ஆண்டவரின் அழைப்பு :**

(திப 26:15,17,18)

தூய பவுலுக்கு ஆண்டவரின் அழைப்பு எதற்கென்றால் ".... சாத்தானின் அதிகாரத்திலிருந்து கடவுளிடத்துக்குத் திரும்புமாறு அவர்கள் கண்களைத் திறக்க வேண்டும்...." இதிலே 'கண்களைத் திறத்தல்' என்பது பாவத்தைக் கண்டித்துணர்த்தி, விடுதலையைப் பறைசாற்றுவதைக் குறிக்கிறது. நற்செய்திப் பணியாளரின் வேலையைச் செய்ய அதிகமாக விரும்பும் நாம், அனுதினமும் நம்முடைய குற்றத்தை, பாவத்தை உணர்ந்து

கொள்ளும்படியாக ஆண்டவர் நம்முடைய கண்களைத் திறக்க மன்றாட வேண்டும். அப்படி நம்முடைய கண்கள் திறக்கப்பட்டவர்களாய், விடுதலையைப் பறைசாற்றி, அடுத்தவர்களின் கண்களைத் திறக்க ஆண்டவர் நம்மைப் பயன்படுத்துவாராக.

### *4. சுவிசேஷகரின் பாதங்கள் - ஆண்டவரின் அரசைக் குறித்துச் சொல்லுகின்றன* :

"உமது அரசு எல்லாக் காலங்களிலுமுள்ள அரசு; உமது ஆளுகை தலைமுறைத் தலைமுறையாக உள்ளது" (திபா 145:13). ஒரு நற்செய்திப் பணியாளரின் நான்காம் கட்ட அல்லது கடைசி கட்ட பணி ஆண்டவருடைய அரசின் நற்செய்தியை எச்சரிப்போடு அறிவித்து, ஆண்டவரின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்துவது தான். ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது, இறையரசு வரப்போகிறதென்பதையே அறிவித்தார் (மத் 4:23, மாற் 1:14). மாற் 1:15 இல் "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று போதித்தார். இறையரசின் நற்செய்தியை அறிவிக்கும் சுவிசேஷகர் ஆண்டவர் அறிவித்தது போல, இறையரசு வருவதற்கான அடையாளங்களை எல்லாம் சொல்லி அறிவிக்க வேண்டுமென்பது தான் ஆண்டவரின் விருப்பம்.

மத் 24:5 இல் ஆவிக்குரிய வாழ்க்கையைச் சீரழிக்கும் வகையில் 'கறைபடிந்த ஆன்மிகம்' (Corrupted Spirituality) ஏற்படும் என்பதை 'இறையரசு' வருவதற்கான அடையாளமாக ஆண்டவர் கூறினார். நற்செய்திப் பணியாளர் 'கறைபடிந்த ஆன்மிகத்தைக்' கண்டறிந்து அல்லது பகுத்தறிந்து, அதை மக்களுக்குச் சொல்ல வேண்டும். மத் 24:6 இல் இந்த உலகத்தில் ஏற்படப்போகிற 'அரசியல் மாற்றங்களை' (Geo - Power Politics) இறையரசு வருவதற்கான அடையாளங்களுள் ஒன்றாகக் கூறினார். நற்செய்திப் பணியாளர், உலகளவில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாகக் கவனித்து, அவைகளெல்லாம் எப்படி ஆண்டவரின் அரசு வருவதற்கான அடையாளம் என்று சொல்ல வேண்டும்.

உலக அளவிலே George Orwell என்றொரு புகழ்பெற்ற Novel எழுத்தாளர் இருந்தார். இவர் எழுதிய '1984' என்ற Novel இன்றைக்கும் சிறப்பாகப் பேசப்படுகிறது. இதிலே அவர் உலகளவிலே அரசியல் அளவில் நடக்கும் மாற்றங்களையெல்லாம் (Big Brother is watching you) மிக அழகாக எழுதினார். மிக நுட்பமாகக் கணித்து, இப்படித்தான் அரசியல் நிலைமை இருக்கப் போகிறது, இப்படித்தான் மக்கள் இருக்கப் போகிறார்கள் என்று எழுதினார்.

அவர் எழுதினது போலத் தான் இன்றைக்கு அநேக மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நற்செய்திப் பணியாளர் இவைகளைக் குறித்து மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்பது தான் ஆண்டவரின் எதிர்பார்ப்பு. மத் 24:7b “பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.” அதாவது இயற்கையில் நடக்கும் மாற்றங்களும் ஆண்டவரின் அரசு வருவதற்கான அடையாளங்களுள் ஒன்று. இதைக் குறித்தும் நற்செய்திப் பணியாளர் அறிவித்து, எச்சரித்து மக்களை ஆண்டவரின் அரசுக்கு ஆயத்தப்படுத்த வேண்டுமென்பது தான் ஆண்டவரின் விருப்பம்.

சுவிசேஷகர் (நற்செய்திப் பணியாளர்) யாரென்றால், ஆண்டவரைக் குறித்து ‘சுவையான விசேஷமாகச்’ சொல்லுபவர். நம் முதல் அருட்பணி நற்செய்தியாளர் ரிங்கல் தௌபே ஐயர் அவர்களாவார். அவரைப் பின்பற்றி நாமெல்லாரும் நற்செய்திப் பணியாளர்கள்தாம். நற்செய்தி சொல்லுகின்றவர்களுடைய நடைமுறைகள் என்ன என்பதை நான்கு கட்டங்களாகப் பார்த்தோம். ஆண்டவருக்காக வாழ்ந்து உழைக்கிற நற்செய்திப் பணியாளர்களாக நாம் இருப்போம்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

01-05-2021

உழைப்பாளர் நாள்

# கடவுளின் பணிவிடையில் பங்கேற்றல்

## PARTICIPATING IN GOD'S WORK

விப 36:1-13 | திப 9:36-43
திபா 104:23-35 | யோவா 4:34-38

**"அறுப்பவர் கூலி பெறுகிறார்."** (யோவா 4:36).

இன்று உழைப்பாளர் நாள். இது மே தினம், தொழிலாளர் தினம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. இது உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினம். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரம் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கு எழுந்தன. 1866-ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதியன்று சிகாகோ நகரில் தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை கேட்டு நடத்திய மகத்தான வேலை நிறுத்தப் போராட்டமே இன்று உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் போராட்டத்தில் பலர் உயிர்த்தியாகம் செய்தனர். இதில் வெற்றியும் கண்டனர்.

இந்தியாவில் சென்னை மாநகரில்தான் முதன் முதலில் தொழிலாளர் நாள் கொண்டாடப்பட்டது. 1923-ஆம் ஆண்டு மே 1-ஆம் நாள் பொதுவுடமைவாதியும், தலைசிறந்த சீர்திருத்தவாதியுமாகிய ம. சிங்காரவேலர் அவர்கள் தலைமையில் சென்னை உயர்நீதிமன்றம் அருகேயுள்ள கடற்கரையில் இவ்விழா கொண்டாடப்பட்டது. தற்போது ஆண்டு தோறும் தொழிலாளர் தினம் பல நிலைகளில் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் நாம் கடவுளின் பணிவிடையில் பங்கேற்றல் என்ற தலைப்பில் சிந்திப்பது சிறப்பு.

கடவுள் உழைப்பாளர். உழைப்பிற்கு முக்கியத்துவம் வழங்குகின்றவர் என்பதைத் தொடக்கநூல் நமக்கு தெளிவுபடுத்துகின்றது (தொநூ 1,2). "உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" என தூய பவுலார் தெசலோனிக்கருக்கு ஆலோசனை கூறினார் (2தெச 3:10). "அறுப்பவர் கூலி பெறுகிறார்" (யோவா 4:36) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். நாம் உழைப்பின் வழியாகக் கடவுளின் பணிவிடையில் பங்கேற்க வேண்டும். கடவுள் நமக்கு நல்ல பணி வாய்ப்புகளைத்

தந்திருக்கிறார். அதைச் செய்யும் போது அவருடைய பணிவிடையில் பங்கேற்கிறோம் என்பதைத் திருமறை தெளிவுபடுத்துகின்றது. அப்படியானால் கடவுள் தந்த பணிகளை எப்படிச் செய்ய வேண்டும்? என்பதைத் தியானிப்போம்.

### *1. கடமையுணர்வுடன் பணி செய்ய வேண்டும்* :

"....அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோவா 4:34).

இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம் பேசும் போது கடவுள் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பது என் உணவு என்றார். அது தனது கடமை என்பதைத் தெளிவுபடுத்தினார். அதாவது இயேசு கிறிஸ்து, தந்தை தம்மிடம் கொடுத்த பணியினைக் கடமையுணர்வோடு செய்து நிறைவேற்றினார். போதனை, தேவையிலிருப்போருக்கு உதவி செய்தல், ஆற்றல் குன்றியோருக்கு ஆற்றல் வழங்குதல், ஆற்றுப்படுத்தும் பணி, குணமாக்கும் பணி, கடவுளின் மீட்பின் திட்டம் மற்றும் தம்மையே தியாகம் செய்தல் போன்றவை வழியாகத் தமது கடமையுணர்வை வெளிப்படுத்தினார். இத்தகு கடமையுணர்வின் உச்சமே சிலுவையேற்கும் நிகழ்வு. இதைச் செய்து முடிப்பதுதான் என்னுடைய உணவு, என்னுடைய உயிர் மூச்சு என்றார். எனவே நாம் கடவுள் நமக்குக் கொடுத்த பணியினைக் கடமையுணர்வுடன் செய்து நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்து நிறைவேற்றும் போது கடவுளின் பணிவிடையில் பங்கேற்கிறோம். இதனை கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

மத் 25:14-30-இல் இயேசு கிறிஸ்து கூறிய உவமை ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. நெடும்பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து தமது உடமைகளை அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும், வேறொருவருக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்து விட்டு நெடும்பயணம் மேற்கொண்டார். ஐந்து தாலந்தைப் பெற்றவரும், இரண்டு தாலந்தைப் பெற்றவரும் தன் முதலாளி கொடுத்த பணியை கடமையுணர்வோடு செய்தனர். இதனால் அவர்கள் பெற்ற தாலந்தை இரண்டு மடங்காகப் பெருக்கினர். ஆனால் ஒரு தாலந்தைப் பெற்றவர் கடமை கண் போன்றது என்பதை உணராமல், கடமையுணர்வுடன் கருத்தாய்ச் செய்யாமல் தனது முதலாளியைக் குறை கூறினார். இதனால் தன் வாழ்வில் கிடைத்த ஆசியையும் இழந்தார், தன் வாழ்வையும் இழந்தார்.

கடவுள் நிலத்தைப் பண்படுத்தும், பாதுகாக்கும் பணியை நம்மிடம் தந்துள்ளார் (தொநூ 2:15). அப்பணியைக் கடமையுணர்வுடன் செய்து கடவுளின் பணிவிடையில் பங்கேற்று இறையாசியைப் பெறுவோம்.

## *2. காலம் தாழ்த்தாமல் பணி செய்ய வேண்டும்* :

"நான்கு மாதங்களுக்குப் பின் தான் அறுவடை என்னும் கூற்று உங்களிடையே உண்டே! நிமிர்ந்து வயல் வெளிகளைப் பாருங்கள், பயிர் முற்றி அறுவடைக்குத் தயாராய் உள்ளது." (யோவா 4:35).

காலம் பொன் போன்றது. பணம் தொலைந்தால் அல்லது நஷ்டப்பட்டால் திரும்பவும் சம்பாதிக்கலாம். ஆனால் நமக்குக் கிடைக்கின்ற காலத்தைப் பயன்படுத்தத் தவறினால் அதை மீண்டும் திரும்பப் பெற முடியாது. "காலமும் கடல் அலையும் எவருக்காகவும் காத்திருக்காது" "அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது," "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்பவை மூத்தோர் முதுமொழி. எனவே பணி செய்ய காலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். இயேசு கிறிஸ்து சீடர்களிடம் சொல்லும் போது அறுவடை நான்கு மாதங்கள் கழித்துதான் என்று கூறி சோம்பேறியாக இருக்கக் கூடாது. நாளை நாளை என்று நாட்களைக் கடத்தக் கூடாது. பயிர் முற்றி அறுவடைக்குத் தயாராக உள்ளது. விரைந்து செயல்பட வேண்டும் என்றார் (யோவா 4:35).

எகிப்து நாட்டின் சிறையிலிருந்த யோசேப்பு எகிப்தின் அரசர் பார்வோனின் கனவின் பொருளைக் கூற அரண்மனைக்கு அழைக்கப்பட்டார். கடவுளின் அருளால் கனவின் பொருளைக் கூறினார். அதில் எகிப்து முழுவதும் வளமான ஏழு ஆண்டுகள் வரவிருக்கின்றன. அதன்பின் ஏழாண்டுகள் பஞ்சம் நிலவும். அப்போது எகிப்து நாட்டின் அனைத்து வளமும் மறந்து போகுமளவிற்கு நாட்டைப் பஞ்சம் பாழாக்கும். நாட்டின் வளமை நினைவுக்கு வராத அளவு பஞ்சம் கடுமையாக இருக்கும். எனவே வளமான இந்த ஆண்டுகளிலே சற்றும் காலம் தாழ்த்தாமல் பணி செய்து தானியங்களைக் களஞ்சியங்களில் சேமித்து வைக்க வேண்டும் என்றார். இதனால் யோசேப்பு எகிப்தில் உயர்ந்த பொறுப்பில் அமர்த்தப்பட்டார். யோசேப்பு காலம் தாழ்த்தாமல் சுறுசுறுப்புடன் காலத்தைப் பயன்படுத்தி தானியங்களைக் களஞ்சியத்தில் சேமித்து வைத்தார். பஞ்ச காலத்தில் அது உதவியாக இருந்தது (தொநூ 41:14-15).

காலம் தாழ்த்தி சரியாகப் பணி செய்யாதவர்களைச் சோம்பேறிகளே என்றும், எறும்பைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்றும் நீதிமொழிகளின் ஆக்கியோன் குறிப்பிடுகின்றார். ஏனெனில் எறும்பு காலம் தாழ்த்தாமல் கோடை மற்றும் அறுவடைக் காலங்களில் உணவைச் சேகரித்து வைத்து மழைக்காலத்தில் மகிழ்ச்சியாக உண்ணும் (நீமொ 6:6-8).

நேற்று என்பது நமதல்ல. அது கடந்து போய் விட்டது. நாளை என்பது நமக்குத் தெரியாது. அது எதிர்காலம். இன்று என்பது நமக்குக்

கிடைத்த வாய்ப்பு. அதைப் பயன்படுத்த வேண்டும். இதைத்தான் அருள்திரு. சா. பரமானந்தம் ஐயர் அவர்கள் "காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயே" (கீர் 241) என்று பாடினார். எனவே காலம் தாழ்த்தாமல் பணி செய்து கடவுளின் பணிவிடையில் பங்கேற்று ஆசி பெறுவோம்.

உழைப்பாளர் நாளாகிய இன்று கடவுளின் பணிவிடையில் பங்கேற்று இறை ஆசி பெற கடவுள் நம்மை அழைக்கிறார். அப்படியெனில் நாம், கடவுள் நமக்குத் தந்த பணிகளைக் கடமையுணர்வுடன், காலம் தாழ்த்தாமல் செய்து இறையாசி பெற்றிட முயற்சிப்போம். "அறுப்பவர் கூலி பெறுகிறார்" (யோவா 4:36) என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். எனவே கடவுளின் பணிவிடைகளில் பங்கேற்று கடவுள் தரும் நற்பலனைப் பெற்று மகிழ்வோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெபசிங்**

# அருட்பணி : ஆத்தும அறுவடைப்பணி

எசா 6:1-8 2கொரி 11:16-29
திபா 82 லூாக் 10:1-12

**மேலும், "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?" ....அதற்கு, "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" என்றேன்** (எசா 6:8).

அருட்பணி மீட்புப் பணியாகும். அருட்பணியாளர் மீட்புப் பணியைச் செய்பவர் (திப 16:19). இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள். இவர்களது பணி மீட்பின் வழி நம்பிக்கையாளராக்குவதாகும். எனவே அருட்பணியின் நோக்கம் ஆத்தும மீட்பாகும்.

உசியா மன்னர் கி.மு. 792 முதல் 740 வரை 16 வயதில் துவங்கி 52 வருடங்கள் அரசாண்டார். தனது தந்தை அமட்சியாவைப் போல் பரமனின் பார்வைக்கு மிகவும் நேர்மையாய் நடந்து, கடவுளின் சித்தம் அறிந்து அதன்படி செயல்பட்டு வெற்றிகள் பல பெற்றார். பராக்கிரமசாலிகளான வம்சத்தலைவர்கள் 2600 பேரும், பராக்கிரமத்தோடு யுத்தம் செய்யும் 3,07,500 சேனைகளும் இருந்தன. புது வித போர்க் கருவிகளை எருசலேமில் உருவாக்கினார். இதனால் அவர் கீர்த்தி பெருகிற்று. பெருமையும் அகந்தையும் மன மேட்டிமையும் உண்டாக, தன்னைக் குறித்து எண்ணுவதற்கு மேலாகவே எண்ணி, கடவுளுக்கு விரோதமாகத் தூபப்பீடத்தின் மேல் தூபம் காட்ட ஆலயத்தில் பிரவேசித்தார் (2குறி 26:12-23). ஆண்டவரின் பலசாலியான ஆசாரியர்கள் 80 பேர் அவருக்குப் பின் சென்று தூபம் காட்டுவது, உமக்கு உகந்தது அல்ல எனத் தடுத்த போதும் தூபம் காட்ட தூபப்பீடத்தின் முன் நிற்க அவரது நெற்றியில் குஷ்டரோகம் தோன்றிற்று. ஆண்டவர் தன்னை அடித்தார் என வெளியே போகத் தீவிரப்படத் துரத்தினார்கள். மரித்த போது அரசர்கள் அடக்கம் செய்யுமிடத்தில் அடக்கம் செய்யாமல் அதற்கு வெளி நிலத்தில் அடக்கம் செய்தனர். இந்நிலையில் ஆலயத்தின் தூய்மை குறித்து கேள்வி எழுந்தபோது கடவுள் தமது மக்களை நல்வழிப்படுத்தவும், பக்தி வழியைக் காட்டவும் இறையில்லத்தில் தூய்மையை நிலைப்படுத்தவும் விடுக்கும் ஓர் அறைகூவல், யாரை நான் அனுப்புவேன்? யார் நமது பணிக்காகப் போவார்? இக்குரலின் வேதனையினை உணர்ந்த எசாயா தனது வாழ்வை அருட்பணிக்கு அர்ப்பணித்தார். அர்ப்பண வாழ்வின் நிலைகளை ஆராய்வோம். அர்ப்பணிப்புடன் அருட்பணி செய்வோம்.

***1. உணர்ந்திடு:*** (எசா 6:5)

"படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே."

ஆமோத்ஸின் குமாரனாகிய எசாயா தேவாலயத்திற்குள் பிரவேசித்த போது அவர் கண்ட காட்சியும், அவர் பெற்ற அனுபவமும் இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. தேவாலயம் தேவ பிரசன்னத்தால் நிறைந்திருந்த காட்சியைக் கண்டார். சேராபீன்கள் தங்கள் செட்டைகளால் மறைத்து கொண்டு பறந்து, "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர். பூமி அனைத்தும் அவரது மகிமையால் நிறைந்திருக்கிறது" என்றன. இறைப் பிரசன்னத்தின் தரிசனத்தின் வழி இறை உணர்வையும் பெற்றார். எனவே தானும், தன்னைச் சார்ந்தோரும் பாவிகள் என அறிக்கையிட்டார். உசியா தன் நிலை உணராது துணிவுடன் ஆண்டவருக்குத் தூபம் காட்ட தேவலாயத்தில் பிரவேசித்ததால் குஷ்டரோகியானார். குஷ்டரோகம் பாதித்தால் உணர்வு இராது. உணர்வற்ற வாழ்வில் தேவ சமூகத்திலிருந்தும் மூதாதையர் வரிசையின்றும் தள்ளப்பட்டு புறம்பே அடக்கம் செய்யப்பட்டார்.

இன்னும் தன்னைக் குறித்து எண்ணுவதற்கு மேலாக எண்ணி, அழிவைத் தேடும் சமுதாயத்திற்கு அருட்பணி வழி உணர்வு பெற உதவுவோம். மிரியாம் தன்னைக்குறித்து எண்ணுவதற்கு மிஞ்சி எண்ணியதால் வெண்குஷ்டம் சரீரத்தில் ஏற்பட்டது. இறைஇல்லம் செல்லும் நாம் நம்மைத் தாழ்த்துவோம். இறைப் பிரசன்னத்தை உணர்வோம், உயர்வடைவோம். அழிந்து போகும் ஆத்துமாவைக் குறித்த உணர்வைப் பெறுவோம், அருட்பணி செய்வோம்.

நெகேமியா (1:6,7) இஸ்ரயேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம். நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவம் செய்தோம். நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம். மோசே கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதே போனோம் என உணர்வடைந்தவராய் அறிக்கை செய்தார். மீதியான யூதர்களின் விடுதலை வாழ்விற்காக உணர்வுபெற்ற நெகேமியா போல் நாமும் நம் மக்களின் மீறுதல்களை உணர்வோம். அவர்களின் விடுதலையின் தேவையினை உணர்வோம். நம்மை நாமே அர்ப்பணிப்போம், அருட்பணி செய்வோம்.

***2. உடன்படு:*** (எசா 6:8)

ஏலியின் நாட்களை போல் ஒழுக்கக்கேடும், அந்நிய வழிபாடுகளும் நிறைந்து காணப்பட்ட நிலையிலும், உசியாவின் தான்தோன்றித்தனமான வாழ்வு, ஆசாரியர்களின் பணியைத் துச்சமாய் எண்ணி தேவாலயத்தில் தூபம் காட்டி ஆலயத்தின் தூய்மைத் தன்மையினைச் சிதைக்கவே, கடவுளின் ஆதங்கக்குரல் கேட்ட எசாயா

உணர்வு பெற்று, உடன்பட்டார். ஏலியின் காலத்தில் நடைபெற்றது போல் இன்று உலகில் பாவம் பெருகிற்று. போலியான சமய வெறி கொண்ட மக்கள், போலி பக்தி தரித்து ஆன்மிக வேடம் பூண்டு வாழ்ந்து வருகின்றனர். எசாயா தன் குறையை அறிக்கை செய்தபோது, சேராபீன்களில் ஒருவன் பறந்து தனது கரத்தில் பிடித்த குறட்டால் நெருப்புத் தழலை எடுத்து வந்து அவர்வாயைத் தொட்டு பாவம் நீக்கவே, அருட்பணிக்கு அர்ப்பணித்து உடன்பட்டார்.

தமஸ்கு ரோட்டில் சிலுவையில் மரித்து பின் உயிர்த்த இயேசுவைச் சந்தித்த சவுல் மனமாற்றம் பெற தனது சுயம் சார்ந்த வாழ்வை விட்டு இறைச் சித்தத்திற்கு உடன்பட்டார். மூன்று அருட்பணிப் பயணங்கள் வழி திருச்சபைகள் உருவாயின. யோனா தீர்க்கர் தனது வழியினின்று இறைப் பாதைக்கு உடன்பட்ட போது வலது, இடது கைக்கு வித்தியாசம் தெரியாத பலர் பேர் மீட்கப்பட்டனர். நாமும் அருட்பணியின் தேவைதனை உணர்ந்து இறைசித்தத்திற்குட்பட்டு உடன்படும் போது ஆத்தும ஆதாயம் நடைபெறும். இறையரசு வளரும்.

***3. உதவிடு:*** (எசா 6:8)

உசியா மன்னரின் கீர்த்தி எல்லை கடந்து பரவிட, பெருமிதமும் ஆணவமும் கொண்டு தன் நிலை மறந்து எல்லை கடந்து செயலைச் செய்ய, ஆண்டவரின் கடும் சாபத்திற்குட்பட்டார். தனக்கு உரிமையற்ற ஆசாரியப் பணிவிடையினை 80 பலசாலியான ஆசாரியர்கள் தடுத்த பின்னரும் தனக்குக் கேடுண்டாகும் மட்டும் மன மேட்டிமையுடன் ஆண்டவருக்குத் தூபம் காட்ட, அவரது நெற்றியிலே குஷ்டரோகம் தோன்ற, ஆலயத்தை விட்டு வெளியேறத் தீவிரம் கொண்டார். ஆண்டவரின் ஆலயத்திற்கும், பிதாக்களின் வரிசைக்கும் புறம்பே தள்ளப்பட்டார். ஆனால் எசாயா தேவாலயத்தில் சென்ற போது தனது நிலையையும், தன்னைச் சார்ந்தோர் நிலையினையும் உணர்ந்து தூய்மைப்படுத்தும்படி உடன்பட்டார். எனவே அருட்பணிக்கு உதவிட தன்னை, “இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்” என்றார். பக்தியற்றோர் நடுவில் எசாயா, தீர்க்கராக கடவுளால் பயன்படுத்தப்பட்டார்.

நல்ல சமாரியன் அன்று, தன்னலம்துறந்து உதவி செய்தார். “அந்தப்படியே நீயும் செய்” எனக் குறிப்பிடும் ஆண்டவரைப்போல் எதிர்பாராத நிலையில் உதவ முன் வருவோமானால் இறையரசு உருவாகும், வளரும். எனவே நாம் நம்மைக் குறித்தும் இறைவனைக் குறித்தும் அறிந்து அருட்பணியின் தேவையினை உணர்வோம், உடன்படுவோம், உதவி செய்வோம். இறையரசு விரிவாக்கம் பெறட்டும்.

அருள்திரு. V. **டேவிட் றாபி ஜேக்கப்**

# உண்மையான செல்வத்தைத் தேடுங்கள்

## SEARCH THE TRUE WEALTH

நீமொ 3:13-18

**"ஞானத்தைத் தேடி அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; மெய்யறிவை அடைந்தோர் நற்பேறு பெற்றோர்"** (நீமொ 3:13).

மிகவும் கொடிய சவால்கள் நிறைந்த 2019-2020 கல்வியாண்டினைக் கடந்து, புதிய 2021-2022 கல்வியாண்டை இன்று துவங்குகின்றோம். எதிர்பாராமல் எதிரே வந்த Covid - 19 கொள்ளை நோயினால் அனைத்துலகமும் அதின் அனைத்துத் துறைகளும் பாதிப்புகளைச் சந்தித்தன. இதில் கல்வித்துறையும் விதிவிலக்கல்ல. பள்ளி, கல்லூரிகளுக்குக் காலவரையற்ற விடுமுறை, தேர்வு எழுதாமலேயே வெற்றி, Online வகுப்புகளுக்கென்று புதிய Mobile phone என மாணவர் உலகம் ஒருபுறம் மகிழ்ச்சியில் திளைக்கத்தான் செய்தது. மறுமுனையில் கல்வி குறித்த தங்கள் கனவுகளை இழந்து வலியோடு உலகிற்கு விடைசொன்ன மாணாக்கர்களும் இருந்திருக்கின்றார்கள்.

கொடிய நோயின் நடுவிலும் மாணவ உலகம் பெற்ற நீண்ட நாள் விடுமுறையின் மகிழ்ச்சி உண்மையில் இதுவரை பெற்ற அறிவுத் திறன்களை மழுங்கடித்திருக்கிறதா? சோம்பேறிகளாக மாற்றியிருக்கின்றதா? என்ற கேள்விகளை எழுப்பிப் பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. இக்கேள்விகளோடு புதிய கல்வியாண்டில் நுழைய ஆயத்தமாகும் பிள்ளைகள் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து, புதிய கல்வியாண்டு, தடைகளற்ற கல்வி கற்கும் ஆண்டாக அமைய ஜெபிப்பதும், தொடர்ந்து நல்ல ஈடுபாட்டோடு கல்வி கற்க அர்ப்பணிப்பதும் அவசியமானது.

திருமறை, ஞானத்தைச் சம்பாதிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றது. இதற்கு அடிப்படையாக அமையும் திருமறைப்பகுதிக்கு (நீமொ 3:13-18) உண்மையான செல்வம் (True wealth) என்று தலையங்கம் கொடுக்கின்றது, NRSV ஆங்கிலத் திருமறை.

இயேசு நாதரின் இளமைப் பருவத்தைக் குறித்துக் கூறும் லூக்கா நற்செய்தியாளர் லூக் 2:52 இல் "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" என்று குறிப்பிடுகின்றார். இங்கே ஞானம் முதலிடம் பெறுவதை நாம் பார்க்க

முடியும். இயேசு நாதரின் திருமறை அறிஞர்களுடனான பேச்சும், கேள்விகளும் அவர் ஞானத்திற்குச் சான்றாகின்றன. நீதிமொழிகள் ஆக்கியோன் இதை மனத்தில் இருத்தியே கூறுகின்றார், நீமொ. 3:13 இல் "ஞானத்தைத் தேடி அடைந்தோர் நற்பேறு பெற்றோர்; மெய்யறிவை அடைந்தோர் நற்பேறு பெற்றோர்." எனவே ஞானத்தைச் சம்பாதிப்பது முக்கியம் என்ற உணர்வோடு, புதிய கல்வியாண்டுக்குள் நுழையும் நிலையில் சில ஆலோசனைகள் பெற முயல்வது அவசியமானது.

***1. ஞானம் விலையேறப்பெற்றது என்பதை உணருங்கள்*** :

"ஞானம் பவளத்தைவிட விலைமதிப்புள்ளது; உன் அரும்பொருள் எதுவும் அதற்கு நிகராகாது" (நீமொ 3:15).

அரசர் சாலமோனின் இளமைப் பருவம் இன்றும் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு ஒரு நல்ல மாதிரியே. தன்னிடம் விருப்பம் கேட்ட இறைவனிடம் இச்சிக்கப்படத்தக்க அல்லது அழிந்துபோகத்தக்க ஒன்றையும் கேளாமல், ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். சாலமோன் கற்றுத் தரும் பாடம்: உலகச் சம்பத்துக்களை விட ஞானம் விலைமதிப்புமிக்கது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் (United Arab Emirates) ஒரு பகுதியாக விளங்குவது 'உம் அல் குவைன்.' இங்கு 1768 - ஆம் ஆண்டு சிறப்பு வாய்ந்த கோட்டை ஒன்று கட்டமைக்கப்பட்டது. சில சீரமைப்புகளுக்குப் பின்னர் 2015 - ஆம் ஆண்டு இந்தக் கோட்டை அருங்காட்சியமாக மாற்றம் செய்யப்பட்டது. இது 'பலால் அல் முல்லா' அருங்காட்சியகம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த அருங்காட்சியகத்தில் சுமார் 7500 ஆண்டுகள் பழமையான முத்து ஒன்று பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதுவே உலகின் மிகவும் பழமை வாய்ந்த முத்து என்றும் அறியப்படுகின்றது. இந்த முத்தின் சிறப்பைக் குறித்துக் கூறும் போது, இரண்டை மையப்படுத்துகின்றார்கள்.

1. சாதாரணமாக முத்தின் ஆயுட்காலம் 100-300 ஆண்டுகள். சில முத்துகள் 500 ஆண்டுகள். அதன் பிறகு நிறம் மங்கி, பளபளப்பு குறைந்து, வெடிப்பு ஏற்படும். ஆனால் இந்த முத்திற்கு எந்தப் பாதிப்பும் இதுவரை இல்லை.

2. இந்த முத்திற்கு இன்றும் விலைமதிப்பு நிர்ணயம் செய்யப்படவில்லை. இது இதன் உயர்ந்த மதிப்பைக் குறிப்பிடுவதாக உள்ளது.

இந்த முத்தின் பெருமையை உலகறியச் செய்யும் விதத்தில் அமீரகத் தபால்துறை அந்த முத்தின் படத்துடன் கடந்த 2016-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் தேதி தபால் தலையை வெளியிட்டது என்பது கூடுதல் செய்தி (தினத்தந்தி, ஜனவரி, 5, 2019).

ஞானத்தின் மதிப்பைக் குறித்துக் கூறும் நீதிமொழிகள் ஆக்கியோன், அதை உலகத்தால் உயர்ந்ததாக எண்ணப்படும் முத்தைவிட விலையேறப்பெற்றது என்று ஒப்புமைப்படுத்திக் கூறுகின்றார். “ஞானம் பவளத்தை விட விலைமதிப்புள்ளது” (நீமொ 3:15).

7500 வருட பழமையான முத்திற்கே விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை என்றால் அதை விட மேலானது எனக் கூறப்படும் ஞானம் எவ்வளவு விலை மதிப்புள்ளது என்பதை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம்.

இன்றைய மாணவச் செல்வங்கள் இதை உணர்வது மிகவும் அவசியமானது. இன்று ஞானத்தைத் தேடிப் பெற்றுக் கொள்வதை விட இச்சிக்கத்தக்க உலகத்தின் செயல்களுக்குத் தங்களை அடிமையாக்கி விடுவது வேதனைக்குரிய செயல். படிப்பிற்குச் செலவிடும் நேரத்தை விட இணையத்தளத்திலும், Smart phone - களிலும் தங்கள் நேரத்தை வீணடிக்கும் நிலையே அதிகம். கட்டுப்பாடுகளின்றி பிள்ளைகள் கரங்களில் கல்விக்காக Smart phone - களைக் கொடுக்கும் நிலை தற்போது உருவாகி இருக்கின்றது. இந்நிலையில் நல்லதையும் கெட்டதையும் தரம் பிரித்து அறிய மாணவர்கள் முயல்வதும், திருச்சபையும், பெற்றோரும் அதற்குரிய சரியான வழிகாட்டுதல்களைக் கொடுப்பதும் இன்றைய உலகத்தின் கட்டாயம். எனவே, ஞானத்திற்கு வேறெதுவும் நிகரில்லை என உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

### 2. *விலையேறப் பெற்ற ஞானத்தைச் சொந்தமாக்க உழைத்திடுங்கள்* :

“சோம்பேறிகளே, எறும்பைப் பாருங்கள்; அதன் செயல்களைக் கவனித்து ஞானமுள்ளவராகுங்கள்” (நீமொ 6:6)

விலையேறப் பெற்ற எந்த ஒரு பொருளும் எளிதில் நம் கரங்களில் வந்து விடுவது இல்லை. நாம் அதை எளிதில் சொந்தமாக்கிக் கொள்ளவும் முடிவதில்லை. உதாரணமாக, முத்துகளை எடுக்க முத்துக்குளியல் மேற்கொள்பவர்கள் பழங்காலத்தில், மூச்சை அடக்கி, கடலுக்குள் மூழ்கி முத்தை எடுப்பார்கள். இங்குக் கடினமான உழைப்பும், முயற்சியும் தேவைப்படுகின்றது.

இங்கு உழைப்பிற்கு உதாரணமாக எறும்பு சுட்டிக் காட்டப்படுகின்றது. மாரி காலத்துக்கென்று உணவை அயராது உழைத்துச் சேமிக்கின்றது. உழைக்க மனமற்றிருப்பவர்களுக்கு, சோம்பேறிகளுக்கு அறிவுரையாக எறும்பு இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. ஓர் எறும்பு தன்னை விட 20 முதல் 30 மடங்கு அதிகமுள்ள பாரத்தைச் சுமந்து

செல்லும் என்பது சுவாரசியமான செய்தி. இந்தச் செய்தி அதன் கடினமான முயற்சியை அல்லது கடினமான உழைப்பை நமக்குச் சொல்லுகிறது. விலையுயர்ந்த எதுவும் நமக்கு எளிதில், எந்த உழைப்பும், முயற்சியும் இன்றி சொந்தமாவதில்லை என்ற அழுத்தமான உண்மையை மாணாக்கர்கள் புரிவது அவசியம்.

ஒரு சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவர் நம் நாட்டின் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். அவர் பல நிலைகளில் உயர்வுகளை அடுக்கடுக்காகச் சொந்தமாக்கி, நாட்டின் முதல் குடிமகன் என்ற உயர்வான அந்தஸ்துக்கு வந்தார். இத்துணை உயர்வுக்குப் பின்னால் அவருடைய முயற்சியும், அயராத உழைப்பும் இருந்தது. தன்னுடைய பள்ளிப் பருவத்தில் ஒரு Paper Boy - ஆக வீடு வீடாகவும், இரயில் நிலையங்களிலும் செய்தித் தாள்களைப் போட்டு அத்தோடு இணைந்த கல்வியும் கற்று வாழ்வில் உயர்வைச் சந்தித்தார் என்பது அவர் வாழ்க்கைக் குறிப்பு நமக்குச் சொல்லும் சான்று. “நீ முயன்றால் நட்சத்திரங்களையும் பறிக்கலாம்” என்பதே அப்துல் கலாம் அவர்களின் அழுத்தம் நிறைந்த அறிவுரை. எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும், உழைப்பிலும், “கொஞ்சத்தில் உண்மை” என்ற நிலையோடு செய்தால் அதற்குரிய நல்ல பலனைக் கடவுள் தருவார். எனவே விலைமதிப்புள்ளதைப் பெற்றுக்கொள்ள நேர்மையாய் உழைத்திடுங்கள்.

### *3. விலையேறப்பெற்றவர்களாய் உயர்த்தப்படுவீர்கள்* :

“ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும், முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்” (தானி 12:3).

ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு நேராய் நேர்மையான உழைப்பை வெளிப்படுத்தும்போது, கடவுள் கரங்களிலிருந்து உயர்வைப் பெற்றுக் கொள்ள இயலும். கடவுள் சதாகாலங்களிலும் பிரகாசிக்கச் செய்கின்றார் என்றே வசனம் கூறுகின்றது. இந்த இறையாசிக்கு மிகவும் இன்றியமையாதது உண்மையும், உழைப்பும் மட்டுமல்ல கடவுளுக்குக் கீழ்ப்படிந்திருப்பதே. ஏனென்றால் ஞானத்தின் பிறப்பிடம் கடவுளே. “ஏனெனில் ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும், விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே” (நீமொ 2:6).

எனவே கல்வி கற்கும் துரிதமான பயணத்தில் கடவுளை விட்டு விடாதிருங்கள். நாம் விலையுயர்ந்த ஞானத்தைச் சொந்தமாக்கவும், விலையுயர்ந்தவர்களாய் இறைவனுக்கு இவ்வுலகில் சான்று பகரவும் இறைத்துணை அவசியம். இதைப் பவுலடியார்களின் வார்த்தையும்

தெளிவுபடுத்துகின்றது. "நான் நட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; கடவுளே விளையச் செய்தார்" (1கொரி 3:6).

கடவுள் வாய்க்கப்பண்ணினாலொழிய நம்மால் எதையும் சாதிக்க முடியாது என்ற புரிதல் சிறுவயது முதல் பிள்ளைகளுக்குள் உருவாவது அவசியமானது. எனவே எல்லா நிலையிலும் அடக்கத்தை வெளிப்படுத்தி ஆசியைப் பெற்றுக்கொள்ள வாழ்வை ஆயத்தம் செய்ய வேண்டும்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று கூறுவார்கள். ஆசி பெற இவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்று அறிவுரை சொல்லப்படுவதுண்டு. திருமறையில் சிறுவன் சாமுவேல் பணிவை எல்லா நிலையிலும் வெளிப்படுத்தி ஆசி பெறுகின்றார். தன்னுடைய தாய் தந்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவர்கள் எடுத்த முடிவுக்கு நேராய்த் தன்னை அர்ப்பணித்து சீலோவிலே தங்கியிருந்தார். தன்னுடைய குருவாகிய, பார்வை மங்கிய ஏலிக்கு முன்பாகக் கட்டுப்பட்டு இருந்தார். "ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று இறைவனுக்கு முன் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். தன்னை எல்லா நிலையிலும் தாழ்த்தி வாழ்ந்த சாமுவேல் பிற்காலத்தில் அரசர்களை, அதுவும் இஸ்ரயேலின் மிகப் பெரிய அரசர்களான சவுலையும், தாவீதையும் அரசராகத் திருநிலைப்படுத்தும் அளவுக்கு உயர்த்தப்பட்டார். சாமுவேலின் பணிவுமிக்க நல்ல வாழ்வு கடவுள் கரங்களிலிருந்து விலையுயர்ந்த ஆசிகளைப் பெற அடிப்படையாக அமைந்தது.

புதிய கல்வியாண்டுக்குள் நுழையும் பிள்ளைகள் மிகுந்த அர்ப்பணத்தோடும், பணிவோடும் கல்வி கற்க ஆரம்பிக்கும் போது கடவுள் நிச்சயமாக உயர்வான நிலையை அடையத்தக்க நிலையில் வழிநடத்துவார். சவால்கள் நிறைந்த கல்வியாண்டாகவே இக்கல்வியாண்டு அமையும் என்பதில் ஐயமில்லை. புதிய உண்மைகளைக் கற்றுக் கொள்ளவும், புதுமைகளை ஏற்றுக் கொள்ளவும் மனதை ஆயத்தமாக்கி, அர்ப்பணிப்போடும், இறைவேண்டலோடும் புதிய கல்வியாண்டு ஆரம்பமாகட்டும். உயர்வுகள் சொந்தமாகக் கடவுள் உதவுவார்.

திரு. N.P. **அலெக்ஸ்**

# கலங்க வேண்டாம்

2குறி 15:1-7

**“நீங்களோ மனத்திடன் கொள்ளுங்கள்; தளர்ந்து போக வேண்டாம், ஏனெனில் உங்கள் செயல்களுக்கேற்ற கைம்மாறு கிடைக்கும்”** (2குறி 15:7).

நாம் வாழ்ந்த கொண்டிருக்கும் இவ்வுலகில் ஒவ்வொரு நாளும் பல முன்னேற்றங்களைக் காணமுடியும். இந்த முன்னேற்றங்களுக்கிடையில் போட்டிகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற நிலை காணப்படுகிறது. இன்றைய உலகில் மனிதன் உயர்வுகளைப் பெற வேண்டுமானால், தேர்வின் மூலம் வெற்றி பெற்றால் மட்டுமே உயர்வுகளைப் பெற முடியும். எந்தத் துறையை எடுத்தக் கொண்டாலும் சரி, அதில் தேர்வுகள் உண்டு. உதாரணமாக, மருத்துவத் துறையில் வெற்றி பெற வேண்டுமானால், மருத்துவத் தகுதித் தேர்வில் (NEET) வெற்றி பெற வேண்டும். தேர்வில் வெற்றி பெற்று சாதனை படைக்கவேண்டிய மாணவர்கள், இன்று மதிப்பெண்களைப் பெறத் தவறுகின்றபோது தற்கொலைக்கு நேராகச் செல்கின்றனர். எப்படி வெற்றி பெறுவது? எப்படி எதிர்கொள்வது? வினாத்தாள் எப்படியிருக்குமோ? படித்தது வருமோ? வராதோ? எனப் பல கலக்கங்கள். யூதாவின் அரசர் ஆசா, கலக்கத்தோடு காணப்பட்ட யூதா, பென்யமீன் மக்களுடைய வாழ்வில் ஆண்டவர் எவ்விதம் வெற்றி அருள்வார் என்று கூறுவது கலக்கத்தோடு காணப்படும் மாணவர்களுக்கு தீர்வு கொடுக்கிறது.

### *1. தேடுங்கள்* (Seek) : (2குறி 15:2)

“நீங்கள் ஆண்டவரை நாடினால், கண்டடைவீர்கள்...”

எரொபவாம் ஆட்சியின் இருபதாம் ஆண்டில், ஆசா யூதாவின் அரசர் ஆனார். ஆசா தன் மூதாதையரான தாவீதைப் போல் ஆண்டவர் திருமுன் நேர்மையுடன் நடந்தார். எத்தியோப்பியன் செராகு, யூதாவுக்கு எதிராகப் படையெடுத்து மாரேசா வரை வந்தான். ஆசா ஆண்டவரை நோக்கி மன்றாடவே யூதப் படைகளுக்கு முன்பாக எத்தியோப்பியர் வீழ்ச்சியுற்றனர் (2குறி 14:11).

ஆசா தன்னுடைய ஆட்சியில் எதிர்த்து வந்தவர்களைக் கண்டு கலங்கவில்லை. ஆண்டவரைத் தேடினார். வெற்றி பெற்றார். அதுமட்டுமல்ல ஆசா தன்னுடைய மக்களுக்கும் அறிவுரை கூறுகின்றார். நீங்கள்

ஆண்டவரைத் தேடினால் அவர் உங்களுக்கு நன்மையை அருளுவார் என்கிறார். ஒருவேளை உங்களுக்குள்ளும் எனக்கு ஞானம் இல்லையே? படித்தவைகள் எல்லாம் மறந்து போகின்றனவே என்று கவலைப்படாதீர்கள். தூய யாக்கோபு தன்னுடைய திருமுகத்தில் எழுதுகின்ற பொழுது "உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும். அப்பொழுது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பவர்" (யாக் 1:5) என்கிறார். எனவே கலக்கம் கொள்ளாமல் தைரியமாக ஆண்டவரைத் தேடுங்கள். அவர் உங்கள் வாழ்வில் வெற்றியைத் தருவார். ஆமோஸ் இறைவாக்கினர் சொல்லும் போது, "ஆண்டவரைத் தேடுங்கள்; நீங்கள் வாழ்வீர்கள்" (ஆமோஸ் 5:6) என்கிறார். ஆகவே காலங்கள் ஆண்டவரின் கரத்தில் இருக்கின்றன. காலத்தைப் பயனுள்ளதாக மாற்றி கலக்கம் இல்லாமல் முழுமனத்தோடு கடவுளைத் தேடுங்கள். யூதாவின் அரசர் ஆசாவின் வெற்றியைப் போலத் தேர்வில் வெற்றி நமதாகும்.

***2. அகற்றுங்கள்*** (Remove) : (2குறி 14:5)

"...எல்லாத் தொழுகை மேடுகளையும், தூபப்பீடங்களையும் அகற்றினான். அவனது ஆட்சியில் நாடு அமைதி கண்டது".

ரெகபெயாமின் மகன் அபியா கி.மு 913 லும், அவனது மகன் ஆசா கி.மு. 911 லும் யூதாவில் ஆட்சியில் அமர்ந்தனர். ஆசாவின் காலத்தில் இஸ்ரயேலில் நாதாபு (2 ஆண்டுகள்), பாசா (24 ஆண்டுகள்), ஏலா (1ஆண்டு) சிம்ரி (7நாள்), ஓம்ரி (12 ஆண்டுகள்) ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செய்தனர். அவர்கள் அனைவருமே வேற்றுத் தெய்வங்களின் சிலை வழிபாட்டை ஆதரித்தனர். அக்காலத்தில் இஸ்ரயேலில் பல்வேறு குழப்பங்கள் நிகழ்ந்தன. ஆட்சியைப் பிடிக்கும் போட்டியில் ஏலா, பாசாவின் குடும்பத்தினர், சிம்ரி, திபினி என்போர் கொல்லப்பட்டனர். யூதாவின் அரசர் ஆசா, மோசேயின் சமய நெறிகளைக் கடைப்பிடித்தால் கடவுளின் பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்பிச் செயல்பட்டார். எனவே விலை ஆடவர்களை நாட்டிலிருந்து துரத்தி விட்டு, தம் மூதாதையர் செய்து வைத்த சிலைகள் அனைத்தையும் அகற்றினார். நாடு அமைதி கண்டது.

தேர்வுக் காலத்தில் பல நிலைகளில் உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் தேவையில்லாதவைகளை அகற்ற வேண்டும். குறிப்பாக, அறிவியல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், பயன்படுத்தும் பொருட்கள் நம்மை அழிவுக்கு நேராக அழைத்துச் செல்கின்றன. கைப்பேசி, கணினி, வீடியோ கேம், முகநூல், வலைத்தளங்கள், etc... இவைகளைத் தவறாகவும், பல மணிக்கணக்கிலும் பயன்படுத்துவதால்

தேர்வில் தோல்வியைத் தழுவி, பின் தன்னை மாய்த்துக் கொள்ளும் அல்லது தற்கொலை செய்து கொள்ளும், அனேக மாணவ, மாணவிகளின் நிலை காணப்படுகிறது. தேர்வு நாட்களில் இவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் அவைகளை அகற்றினால் வெற்றி பெற முடியும். இன்று காலச் சூழ்நிலையின் மாற்றத்தின் மூலம் Online வகுப்புகளுக்காக விலையுயர்ந்த கைப்பேசியை வாங்கிக் கொண்டு தவறாக பயன்படுத்துகின்ற மாணவர்கள் அநேகர். திருப்பத்தூர் மாவட்டம், ஓமக்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர் மூர்த்தி. இவருடைய மகன் தினேஷ்குமார் என்பவர் அருகில் உள்ள அரசுப் பள்ளியில் 10-ஆம் வகுப்பு படித்து வருகின்றான். ஆன்லைன் வகுப்புகளுக்காகப் புத்தகம் வாங்குவதற்காகப் பள்ளிக்குச் சென்ற தினேஷ்குமார் அங்கு நண்பர்களுடன் பப்ஜி கேம் (PUBG) விளையாட செல்போன் கேட்க, நண்பர்கள் மறுக்க, வீட்டிற்கு வந்து பெற்றோரிடத்தில் செல்போன் வாங்கி கேட்டிருக்கிறான். ஏழைக் குடும்பம் என்பதால் பிறகு வாங்கித் தருகிறோம் என்றதற்கு, அதைக் கேட்காமல் பப்ஜி கேம் மோகத்தால் தற்கொலை செய்து கொண்டான் (04-08-020 தினந்தந்தி). பஞ்சாப் மாநிலத்தில் 17-வயது சிறுவன் தினமும் தன் தாயிடம் Online வகுப்புகள் இருப்பதாகக் கூறி பல மணி நேரங்கள் பப்ஜி கேம் விளையாடி சுமார் 16 லட்ச ரூபாய் வரை தன் தந்தை சேமித்த பணத்தைச் செலவிட்டுள்ளான் (04-07-2020). இத்தகைய தவறான, ஆண்டவருக்கு பிரியம் இல்லாத செயல்களை அகற்றிவிட்டு முழுமனத்தோடு ஆண்டவரைத் தேடுங்கள். தீய எண்ணங்கள், பயம் நிறைந்த வாழ்வை அகற்றி, தைரியமாய்த் தேர்வை எதிர்கொள்ளுங்கள். நன்மையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### ***3. திடன் கொள்ளுங்கள்*** (Take Courage) : (2குறி 15:7)

"நீங்களோ மனத்திடன் கொள்ளுங்கள்; தளர்ந்துபோக வேண்டாம். ஏனெனில், உங்கள் செயல்களுக்கேற்ற கைம்மாறு கிடைக்கும்."

யூதாவின் அரசர் ஆண்டவரைத் தேடினார். தன் மூதாதையர்கள் உருவாக்கியிருந்த சிலைகளை அகற்றினார். அதன் மூலம் எத்தியோப்பியரை வெற்றிகொண்டார். நாட்டில் அமைதி நிலவியது. அதோடு மாத்திரமல்ல தன் மக்களுக்கும் சொல்கிறார், "நீங்கள் தளர்ந்துபோக வேண்டாம். மனத்திடன் கொள்ளுங்கள். உங்கள் செயல்களுக்கேற்ற கைம்மாறு கிடைக்கும்" (2குறி 15:7) என்று நம்பிக்கையூட்டுகிறார்.

தேர்வை நன்றாக எதிர் கொள்ள முடியுமா? என்னால் முடியவில்லையே? பயம், திகில், கலக்கம் அதிகமாய்க் காணப்படுகிறதே என்று சோர்ந்து விடாதீர்கள். நீதிமொழிகள் 23:31-இல் "வெற்றி கிடைப்பது

ஆண்டவராலேயே என்று சாலமோன் ஞானி கூறுகிறார். தாவீது சொல்லும் போது'' "திடமனதாயிருந்து, ஆண்டவருக்குக் காத்திரு'' (திபா 27:14) என்கிறார். ஆசாவின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் காரணம் அவர் திடமனதாயிருந்து ஆண்டவரைத் தேடினதாகும். இன்று தேர்வுக்குச் செல்ல இருக்கும் உங்களையும் ஆண்டவர் ஆசீர்வதிக்க அவருக்குள் திடன் உள்ளவர்களாயிருந்து அவரைத் தேடுங்கள். 1706-ஆம் ஆண்டு தரங்கம்பாடிக்கு வந்த சீகன்பால்க் 1708-ஆம் ஆண்டு (2 ஆண்டுகளில்) தமிழ் கற்று தமிழ் அகராதியை எழுதி வெளியிட்டார். ஜெர்மனி தேசத்தைச் சேர்ந்த சீகன்பால்க் ஒரு தமிழ் தெரியாத நபர். அவரே 2 ஆண்டுகளில் கற்று தமிழ் அகராதி எழுதி வெளியிட முடியும் என்றால்? ஏன் உங்களால் முடியாது? கலங்காதீர்கள். ஆண்டவரைத் தேடுங்கள். வீணானவைகளை அகற்றுங்கள். கடவுள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். தேர்வை எதிர்கொள்ளும் அனைத்து ஆற்றல்களையும், ஆசீர்வாதத்தையும் ஆண்டவர் உங்களுக்கு அருள்வார். கலங்க வேண்டாம். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றியை ஆண்டவர் துணையோடு பெற்றுக் கொள்ள நம்பிக்கை கொள்ளுங்கள்.

திரு. R. **ரூபன்**

# அருள்பணிக்கான இறையனுப்புதல்

விப 3:1-10 2திமொ 5:1-5
திபா 68 : 1-11 லூக் 10:1-9

**"என் மக்களை....நடத்தி செல்வதற்காக நான் உன்னை...அனுப்புகிறேன்"** (விப 3:10).

அன்னப் பறவை ஒன்று, சேற்றிலே புரண்டு அழுக்கடைந்த அருவருப்பான தோற்றமுடைய பன்றி ஒன்றைப் பார்த்தது. அதன் மேல் பரிதாபப்பட்டு பன்றியைப் பார்த்து அருகிலுள்ள நதிக்கு அப்பால் ஓர் அழகான நகரம் இருக்கிறது. அங்குப் பசுமையான பூங்காக்களும், அழகான கட்டிடங்களும், சுத்தமான ரோடுகளும் இருக்கின்றன. நான் அங்கு மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகின்றேன். நீயும் அங்கு வருகின்றாயா? என்று கேட்டது.

"அதற்கு அந்த பன்றி எனக்கு உன்னோடு வர விருப்பம்தான். ஆனால் நீ வாழும் அந்த நதியிலே சேறும், சகதியும் உண்டா?" எனக் கேட்டது. அன்னப் பறவை சொன்னது. இல்லை, அங்கே சேறு, சகதி எதுவும் இருக்காது. பன்றி சொன்னது, அப்படியானால் என்னை மன்னித்து விடு. நான் உன்னோடு வர முடியாது. நான் இந்தச் சேற்றிலே இருந்து விடுகிறேன் என்றதாம். சீனப் பழமொழி ஒன்று இவ்விதமாய்ச் சொல்கிறது,

"சட்டி பிடித்த கரித்துணி பெட்டிக்குள் செல்வதில்லை. சாக்கடை அள்ளிய அகப்பை சமையலறைக்குள் நுழைவதில்லை."

பாவ வாழ்க்கை வாழும் ஒருவரை, அவர் வாழும் வாழ்க்கை அர்த்தமற்றது என உணரச் செய்து, தூய வாழ்வுக்கு அழைப்பு விடுப்பதே அருள்பணி. Mission என்கிற ஆங்கில சொல் Missio அல்லது (மிசியோ) Mittre (மிட்டரே) என்னும் இலத்தீன் வினைச் சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் "அனுப்புகிறேன்" என்பதாகும். கிறிஸ்தவ அருட்பணியின் அடிப்படை கடவுளின் அனுப்புதல் வேலையில் அமைந்திருக்கின்றது. லூக் 4:18,19-இல் இயேசு தமது நாசரேத்தூர் அறிக்கையில் ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவரின் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார் என அருள்பணியின் அர்த்தத்தை இயேசு குறிப்பிடுகின்றார்.

எனவே முதல் அருள்பணி (மிஷனறி இயக்கம்) ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தே துவங்குகின்றது. கடவுளின் அனுப்புதல் பணியிலேயே அவர் மக்கள் மேல் கொள்ளுகின்ற நம்பிக்கை விளங்குகின்றது. அவரது அறுப்புப் பணியில், பயன்படும் மக்களையும், பொருள்களையும் அதிகாரப்படுத்தி அர்ப்பணிப்புள்ள அருள்பணி செய்ய அனுப்புகின்றார். ஆண்டவரால் அனுப்பப்படுகின்ற அருள்பணியாளர்கள் ஆண்டவரின் தூதுவர்களாகவும் கருதப்படுகின்றார்கள். ஆண்டவரால் அனுப்பபடுகின்ற அருள்பணியாளர்களால் ஆக்கப்பணிகள் பல நிறைவேற்றப்படுகின்றன. அருள்பணி சமூகத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதைத் தியானிப்போம்.

### *1. அற்பமானவைகளை ஆற்றல் உள்ளவையாக்கும்*:

"இப்போதே போ; இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்" (விப 3:10).

இஸ்ரயேல் மக்கள் பலுகிப் பெருகி வருவதைக் கண்ட எகிப்திய அரசனாகிய பார்வோன், பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்து கொன்று விடுங்கள் (விப 1:22) என்று அறிவித்தான். எனவே மோசேயின் தாயும், மோசேயைக் காப்பாற்ற கோரைப் புல்லால் பேழை ஒன்றைச் செய்து, அதன் மீது நிலக்கீல் பூசி நைல்நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் ஒளித்து வைத்தாள். நதிக்கரையில் நீராட வந்த பார்வோனின் மகள் அக்குழந்தையை கண்டு, எடுத்துக்கொண்டு போய் தன் வீட்டிலே வைத்து வளர்த்தாள்.

நான் அவனை நீரிலிருந்து எடுத்தேன் எனக்கூறி அவனுக்கு மோசே என்று பேரிட்டாள். எந்தப் பார்வோனிடம் இருந்து தன் குழந்தையாகிய மோசேயைக் காப்பாற்ற நைல் நதியின் கரையில் கொண்டு மோசேயின் தாய் விட்டார்களோ அதே வீட்டிற்குள் மோசே வளர்ந்தார். எகிப்தியன் ஒருவன் தன் இனத்தானான எபிரேயன் ஒருவனை அடிப்பதைக் கண்டு அவனை அடித்துக் கொன்று மணலுக்குள் புதைத்து விட்டார். இச்செய்தியை பார்வோன் கேள்வியுற்றபோது மோசேயைக் கொல்லுவதற்குத் தேட, உயிருக்குப் பயந்து, மீதியான் நாட்டிற்கு ஓடிப் போனார்.

கொலைக்காரனான மோசே, (விப 2:12) கோபம் மிகுந்தவரான மோசே, நாவன்மை அற்றவர், திக்கு வாயும், குழறும் நாவும் கொண்டவர், (விப 4:10) தாலந்து இல்லாதவர், ஆனால் கடவுள் மோசேயை அருட்பணிக்காக அழைத்து அனுப்பிய போது ஆற்றலுள்ளவராக மாறினார். வியத்தகு ஆற்றல்களை மோசே பெற்றார். சாதாரண கோல்

பாம்பாக; மாறியது பாம்பு சாதாரண கோலாக மாறியது (விப 4:2). கையை மடிக்குள் இட்டபோது அது தொழுநோய் கண்டு உறைபனி நிறமாய் மாறியது. மீண்டும் மடிக்குள் இட்டபோது அது தன் உடம்பின் நிறமாகவே மாறிவிட்டது (விப 4:7)

எந்தப் பார்வோனைக் கண்டு பயந்து ஓடினாரோ, அதே பார்வோனுக்கு முன்பாகத் துணிந்து நின்றார். விப 7:1-இல் ஆண்டவர் மேசேயை நோக்கி "பார் நான் உன்னைப் பார்வோனுக்குக் கடவுளாக வைத்துள்ளேன்" என்றார். பார்வோனுக்கு முன்பாக கடவுள் மோசேயை அர்த்தமுள்ள அருட்பணியாளராகப் பயன்படுத்தினார். இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து வந்த விடுதலைப் பயணத்திலும், கடவுள் மோசேயை ஆற்றலுள்ள அருட்பணியாளராய்ப் பயன்படுத்தினார் (எபி 11:25). பாவத்தில் சிறிது காலம் இன்புறுவதைவிட, கடவுளுடைய மக்களோடு சேர்ந்து துன்புறுவதையே அவர் தேர்ந்து கொண்டார்.

ஒருகால கட்டத்தில் உயிருக்குப் பயந்துமீதியான் நாட்டிற்கு ஓடிபோன மோசே, தன் உயிரை இழக்கவும் துணிந்து மன ஆற்றலுள்ளவரானார். மீன் பிடிக்கும் தொழில் செய்து கொண்டிருந்த பேதுரு ஆண்டவர் இயேசுவால் அருள்பணிக்கு அழைத்து ஆற்றல்படுத்தப்பட்ட போது அருஞ்செயல்கள் பல செய்தார். பெந்தகோஸ்து நாளின் போது (திப 2:48) பேதுருவின் அருளுரையைக் கேட்டு 3000 பேர் திருமுழுக்கு பெற்றுக் கொண்டார்கள். அற்பமானவர்களும் அருட்பணிக்காய் அழைப்பு பெற்று அனுப்பப்படும் போது ஆற்றல் உள்ளவர்களாய் மாறுவர்.

### *2. ஆதரவற்றவைகளை அரவணைக்கச் செய்யும்* :

ஆதரவின்றித் தனியாய்விடப்பட்ட கைம்பெண் கடவுள் மேல் கொண்ட எதிர்நோக்குடன் அல்லும் பகலும் மன்றாட்டிலும் இறைவேண்டலிலும் நிலைத்திருப்பாராக (1திமொ 5:5).

திருத்தூதுவர் பவுலுடைய உடன் உழைப்பாளர் திமொத்தி இவர் லிஸ்திராவைச் சார்ந்தவர். இவர் தந்தை கிரேக்க மொழி பேசும் புற இனத்தார். தாய் யூதக் கிறிஸ்தவர். திருத்தூதுவர் பவுலின் மூலம் கிறிஸ்தவராகி பவுலின் இரண்டாம், மூன்றாம் நற்செய்திப் பயணங்களில் உடன் பணியாளராய் திமொத்தி செயல்பட்டவர். இந்தத் திமொத்திக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகத்தில் திருச்சபையாருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி பவுல் எழுதுகிறார். திருச்சபை என்பது ஒரு குடும்பம். ஒரு குடும்பத்தில் தந்தை, தாய், சகோதர சகோதரிகள் இருப்பது போலத் திருச்சபை என்னும் குடும்பத்தில் பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

தொடக்கக் கால திருச்சபையில் வயது முதிர்ந்த ஆண்கள், பெண்கள், இளம் ஆண்கள், இளம் பெண்கள் எனப் பலர் இருந்தார்கள். கைம்பெண்களும் இங்கே இருந்தார்கள். சிறுவர், சிறுமியர் இருந்தார்கள். சமுதாயத்தின் பல நிலைகளைச் சார்ந்த இவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதில் மட்டுமல்ல, என்ன உறவை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆலோசனைகளும் சொல்லபடுகின்றன. முதிர்வயதுள்ளவர்களுக்கு மகனாகவும், சம வயதுள்ளோருக்குச் சகோதரனாகவும் திமொத்தி மாற வேண்டும் என்று சொல்லப்படுகின்றது.

கைம்பெண்கள் போன்று வாழ்விழந்தோர், கவனிக்கப்பட வேண்டும். அவர்கள் மேல் கரிசனை வேண்டும். அவர்கள் பராமரிக்கப் பட வேண்டும். கணவனை இழந்த இளம் வயதுடைய பெண்கள் கைம்பெண்களாகக் கருதப்பட வேண்டாம். காரணம் அவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம். இங்கே பவுல் கைம்பெண்கள் மறுமணத்தை ஆதரித்து அவர்கள் மறுவாழ்வு பெற வேண்டும் என்கிறார். அருட்பணிக்காய் இறைவரால் அனுப்பப்படுகின்றவர்கள் ஆதரவற்றவர்களை அங்கீகரிக்க வேண்டியது அவசியம்.

துறவி ஒருவர் ஆலயம் ஒன்று கட்ட நிதி திரட்டப் புறப்பட்டார். கடவுள் அன்று இரவு அவர் கனவில் தோன்ற ‘எனக்கு இப்போது நீ ஆலயம் கட்ட வேண்டாம்.’ ஏழைகள், கைவிடப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் படும் அவல நிலையை பார். அவர்கள் உள்ளம் தான், நான் வாழ விரும்பும் உகந்த இடம் என்றார். துறவி ஆலயம் கட்டும் எண்ணத்தை விட்டு விட்டு ஆதரவற்றவர்களைத் தூக்கி விடப் புறப்பட்டார். நம் ஆண்டவர் இயேசு பரிவு, பாசம், நேசம், கனிவு, கருணை, காருண்யம் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தார். இறைப்பணிக்காய், அருட்பணிக்காய் அனுப்பப்படுவோர் ஆதரவற்றவர்களை அரவணைக்க வேண்டும். அருள்பணிக்காய் இறைவனால் அனுப்பப்படும் போது ஆதரவற்றவர்களையும் அரவணைக்க, வேண்டும் நான் உங்களை அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செய்யுங்கள் என்றார் இயேசு.

### 3. *அர்ப்பணமுள்ளவைகளை அமைதியின் கருவிகளாக்கும்*:

புறப்பட்டுப் போங்கள்; ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன் (லூக் 10:3).

ஆண்டவர் இயேசு தாம் அருட்பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் முதலில் 12 பேரை தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பினார் (மத் 10:5; மாற் 6:7; லூக் 9:1-6). இப்போது 72

பேரை அருள்பணிக்கு அனுப்புகின்றார். அவர் அனுப்பும் போது ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டியை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்புகின்றேன் என்றார். அருள்பணி என்பது எளிதான ஒன்று அல்ல. இதில் ஒன்றை இழந்தால் தான் இன்னொன்றைப் பெற முடியும். மலர் மடிந்தால் காய் பிறக்கும், விதை மடிந்தால் பயிர் முளைக்கும். இதை தான் இயேசு "கோதுமை மணி தரையில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" என்றார்.

அருள்பணியாளர் ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டியாக அனுப்பப்படுகின்றார். அருள்பணியாளருக்குப் பெருமை சிலுவை தான். கலா 6:14-இல் பவுல் சொல்கின்றார், நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையியை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்டமாட்டேன் என்கிறார். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டுவிட்டேன். இனி வாழ்வது நான் அல்ல. கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்கிறார் (கலா 2:19,20). துன்பத்தில் மகிழ்பவரே அருள்பணியாளர். அருட்பணியாளர் சமாதானத்தின் தூதுவர். இதைத் தான் தாயுமானவர் சொன்னார், "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால், இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே."

பசுவின் பால் முழுமையாகக் கன்றிற்கில்லை. பூவின் நறுமணம் முழுவதும் சோலைக்கில்லை. குளத்து நீர் முழுவதும் குளத்திற்கில்லை. மரத்தின் கனி முழுவதும் மரத்திற்கில்லை. யாழின் இசை முழுவதும் யாழிற்கில்லை. இவ்வாறு இயற்கையே பிறருக்காகப் பயன்படும் போது, நாம் மட்டும் நமக்காய் வாழ்ந்தால் என்ன பயன். தனக்காகவும், பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன். பிறருக்காகவே வாழ்பவர் அருட்பணியாளர். அன்னை தெரசா சொன்னார் "என்னை கூறு கூறாக வெட்டிப் போட்டாலும் அதிலிருந்து வெளிப்படுவது அன்பும், சமாதானமுமே.", சக்கேயு தன்னையே கொடுத்தார், இயேசு தந்தது புதுவாழ்வு. கல்வாரியில் தொங்கிய கள்வன் தன்னையே கொடுத்தார். இயேசு கொடுத்தது நித்திய வாழ்வு. இயேசு தன்னையே கொடுத்தார். அதன் வழியாய் நாம் பெற்றது மனுக்குல மீட்பு. அன்பு செய்யாமல் கொடுக்கலாம் ஆனால் கொடுக்காமல் அன்பு செய்ய முடியாது.

இறைவா! என்னை உமது அமைதியின் கருவியாக்கும்.
எங்கு பகைமை இருக்கிறதோ அங்கு அன்பையும்
எங்கு கசப்பு இருக்கிறதோ அங்கு மன்னிப்பையும்
எங்கு ஐயம் நிறைந்துள்ளதோ அங்கு விசுவாசத்தையும்
எங்கு அவநம்பிக்கை நிறைந்துள்ளதோ அங்கு நம்பிக்கையையும்

எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு அகமகிழ்வையும் விதைத்திட எமக்கு அருள் புரியும் என் இறைவா! ஆறுதல் பெறுவதை விட, ஆறுதல் அளிக்கவும், புரிந்து கொள்ளப்படுவதை விடப் பிறரை, புரிந்துகொள்ளவும், அன்பு செய்யப் படுவதைவிட பிறரை அன்பு செய்யவும் எமக்கு வரமருள்வாய். ஏனெனில் கொடுப்பதில் யாம் பெறுவோம். மன்னிப்பதில் யாம் மன்னிப்பைப் பெறுவோம். இழப்பதில், யாம் மறுமையில் வாழ்வடைவோம்.

அருள்திரு. C. **ஜோண்ஸ் ராஜன்**

2021-ஆம் ஆண்டு கருப்பொருள்

# அமைதியின் இறைவா,
# காயமுற்ற உலகை நலமாக்குவீராக
## GOD OF SHALOM, HEAL THE WOUNDED WORLD




வெளியீடு

**தொடர்புத்துறை**

கன்னியாகுமரிப் பேராயம்

C.S.I. PRINTING PRESS
Marthandam ✆04651 - 271329